உ

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

# திருவெம்பாவை
# திருப்பாவை திருமறை
# ஆறங்க மகாநாட்டு
# மலர்

வெளியீடு

(7729)
5693.
XXVIII B. IV (68)

திருப்பாவை திருவெம்பாவை கமிட்டி
20, பெரிய கடைத்தெரு
மாயூரம்

SECRETARY,
THIRUVEMBAVAI - THIRUPPAVAI
COMMITTEE, MAYURAM.

விலை ரூ. 2—8—0
டிஸம்பர் 1952

மதராஸ் லா ஜர்னல் பிரஸ், திருவிடைமருதூர்.

உ

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:


# திருவெம்பாவை திருப்பாவை திருமறை ஆறங்க மகாநாட்டு மலர்

வெளியீடு

திருப்பாவை திருவெம்பாவை கமிட்டி
20, பெரிய கடைத்தெரு
மாயூரம்

விலை-ரூ ௨-௮-0

மதராஸ் லா ஜர்னல் பிரஸ், திருவிடைமருதூர்.


சில்பி

"எங்கும் திருவருள் பெற்றின்புறுவர் எம்பாவாய்!—"

உ

# ஸமர்ப்பணம்

தெய்வ நெறி தழைத்தோங்கவும், அதனால் நம் தேச மக்கள் ஆண்டவன் அருள் பெற்றுய்யவும், பண்டை முறை வழிபாட்டிற்கு நாட்டு மக்களுக்கு திருவெம்பாவை - திருப்பாவை - திருமறை பொன் மொழிகள், உற்ற வழி காட்டுகின்றன. எனவே திருவெம்பாவை - திருப்பாவை - திருமறை வெளியீட்டு நன் மலரான இதனை, பண்டை மேலோரான- திருமாமறை மலர் பரவிப் போற்றிய ஸ்ரீ மாணிக்க வாசக சுவாமிகளுக்கும், திருமறை மலர் சூடிப் போற்றிய ஸ்ரீ ஆண்டாளுக்கும் அணிவிக்கின்றோம். இம்மலரே தெய்வமணம் வீசும் பொன்மலராகக் கைக்கொண்டு தொழுது அடியவர்கள் நலம் பெறுக.

"யாம் உய்ய ஆட் கொண்டருளும் பொன்மலர்கள் போற்றி!"

# பொருளடக்கம்


| கட்டுரை எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பிள்ளையார்சுழி | ... | 1 |
| 2. | ஆரம்ப விழா | ... | 4 |
| 3. | வரவேற்புரை<br>திரு M. L. M. மஹாலிங்கம் செட்டியார் | ... | 5 |
| 4. | திறப்புரை<br>திரு AL. AR. சொக்கையா செட்டியார் | ... | 9 |
| 5. | தலைமையுரை<br>ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் | ... | 21 |
| 6. | ஆசியுரை<br>ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் | ... | 23 |
| 7. | திருவாவடுதுறை ஆசிப் பேச்சு<br>திரு வீர. சிவசுப்ரமணியம் | ... | 25 |
| 8. | மகாநாட்டின் நோக்கங்கள்<br>K. பாலசுப்ரமணிய ஐயர் | ... | 34 |
| 9. | திருஞானசம்பந்தர்<br>திரு இராம. கோவிந்தசாமி பிள்ளை | ... | 36 |
| 10. | அப்பர் அருள்வாக்கு<br>திரு சுப்பராவ் | ... | 48 |
| 11. | சுந்தரர்<br>ஸ்ரீ வே. முத்துசாமி அய்யர் | ... | 54 |
| 12. | திருவெம்பாவை<br>ஸ்ரீ பி. ஸ்ரீநிவாஸன் | ... | 61 |
| 13. | ஒன்பது பத்தாம் திருமுறை<br>ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் | ... | 67 |
| 14. | திருப்பாவையின் விஷயங்கள்<br>இளையவல்லி ஸ்ரீநிவாஸகோபாலாசாரியார் | ... | 78 |
| 15. | திருப்பாவை முதல் பதிகம்<br>ஸ்ரீ R. சேஷாத்திரி அய்யங்கார் | ... | 87 |
| 16. | ஆண்டாள் சிறப்பு<br>ஸ்ரீ எஸ். டி. ஸ்ரீனிவாஸாசாரியார் | ... | 107 |
| 17. | வீர. சிவ. பேச்சு | ... | 117 |

18. திருமங்கைமன்னன் ... 118
ஸ்ரீ வே. கோபாலன்
19. ஸ்ரீ ஆசார்யாள் உபந்யாஸம் ... 130
20. மார்கழித் திங்கள் ... 132
ஸ்ரீ S. T. ஸ்ரீனிவாஸாசாரியார்
21. முதலாழ்வார்கள் வைபவம் ... 139
வித்வான் ஸ்ரீ S. வரதராஜய்யங்கார்
22. ஆண்டாளும் திருப்பாவையும் ... 143
குண்டலம். ஸ்ரீ ரெங்காசாரியார்
23. குலசேகர, தொண்ட, திருப்-சிறப்பு ... 150
திரு T. A. தாதாசாரியார்
24. வேதம் ... 177
ஸ்ரீ ஆசார்யாள் ஸ்ரீமுகம்
25. சிக்ஷா ... 209
தர்மக்ஞ-நரசிம்மாசாரியார்
26. வ்யாகரணம் ... 213
K. A. சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள்
27. சந்தஸ் ... 223
ஸ்ரீ ராமனுஜ தீக்ஷிதர்
28. நிருக்தம்
K. சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள்
29. வேதலக்ஷணம் ... 231
ஸ்ரீ ராமசாமி சர்மா
30. ஜ்யோதிஷம் ... 241
ஸ்ரீ வி. ரங்காசாரியார்
31. நாலாயிரத்தில் நால்வேத ஆறங்கக் குறிப்புகள் 246
ஸ்ரீநிவாஸாசாரியார்
32. ஸ்ரீ ஜகத்குரு ஆசார்யாள் உபந்யாஸம் ... 273
33. ஸ்ரீ ஜகத்குரு ஆசார்யாள் உபந்யாஸ ஸாரம் ... 273
34. திருமுருகாற்றுப்படை விளக்கம் ... 275
திரு ரத்னவேலுப் புலவர்
35. கல்பம் ... 281
ஸ்ரீ உ. வே. கோபால தேசிக தாதாசாரியார்
36. ஸ்ரீ ஜகத்குரு ஆசார்ய ஸ்வாமிகள் உபந்யாஸம் ... 291

37. மாணிக்கவாசகர் வரலாறும் எட்டாம்
திருமுறை சிறப்பும் ... 297
ஸ்ரீ நிவாசையர்
38. பதினோராந் திருமுறைச் சிறப்பு ... 304
ஸ்ரீ நிவாசையர்
39. திருமுறை—பிரபந்தங்களில்
வேத வேள்விப் பகுதிகள் ... 314
ஸ்ரீ நிவாசையர்
40. ஆசிச் செய்திகள் திரட்டு ... 320
ஸ்ரீ P. V. ராஜமன்னார் கடிதம் முதல்—
ஸ்ரீ சக்திவேல் பிள்ளை அவர்கள் வாழ்த்து வரை
41. தினமணி தலையங்கம் ... 324
42. மாயூரம் நிகழ்ச்சிகள் ... 326
43. ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் ஆசிச்செய்தி ... 328
44. குளித்தலை நிகழ்ச்சிகள் ... 334
45. இந்தோசைனா திருப்பாவை திருவெம்-
பாவை அரசாங்க விழா ... 336
ஸ்ரீ ஜகத்குரு ஆசார்யாள் உபந்யாஸம்
46. Tiruvembavai Tiruppavai Institu-
tion Discovered in Siam ... 339
47. Our Tiruvembavai Tiruppavai Seen
through christian lens ... 341
48. பாவை நோன்பு ... 343
ஸ்ரீ ஜகத்குரு ஆசார்யாள் ஸ்ரீமுகம்



உ

திருச்சிற்றம்பலம்



ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளிச் செய்த

# திருவெம்பாவை

ஆதியுமந்தமு மில்லா வருட்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்தியவாழ்த் [தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மே னின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தா ளென்னே யென்னே
ஈதே யெந்தோழி பரிசேலோ ரெம்பாவாய். (1)

பாசம் பரஞ்சோதிக் கென்பா யிரப்பகல்நாம்
பேசும்போ தெப்போ திப்போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீ சீ யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசுமிட மீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் றில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யா மாரேலோ ரெம்பாவாய்.

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந்
[தெதிரெழுந்தென்
அத்த னானந்த னமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீ ரீசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற்
[பொல்லாதோ
எத்தோநின் னன்புடைமை யெல்லோ மறியோமோ
சித்த மழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டு மெமக்கேலோ ரெம்பாவாய்

ஒண்ணித் திலநகையா யின்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ
எண்ணிக் கொடுள்ளவா சொல்லுகோம் எல்லோரும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப்போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோ நீயேவந்
தெண்ணிக் குறையிற் றுயிலேலோ
ரெம்பாவாய் (4)

மாலறியா நான்முகனுங் காணா மலையினை நாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே யறிவரியான்
கோலமு நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனே யென்
றோல மிடினு முணரா யுணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். (5)

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவ னென்றலு நாணாமே
போன திசைபகரா யின்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே யறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்தார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே யுருகா யுனக்கே யுறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ
ரெம்பாவாய். (6)

அன்னே யிவையுஞ் சிலவோ பலவமரர்
உன்னற் கரியா னொருவ னிருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னா வென்னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை யென்னரைய னின்னமுதென்
[றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறா யின்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளாகிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். (7)

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழி லியம்ப வியம்பும் வெண் சங்கெங்குங்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம்
[கேட்டிலையோ
வாழி யீதென்ன வுறக்கமோ வாய்திறவாய்
ஆழியா னன்புடைமை யாமாறு மிவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற வொருவனை
ஏழை பங்காளனையே பாடேலோ
ரெம்பாவாய். (8)

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோ மாங்கவர்க்கே
[பாங்காவோம்
அன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோ னல்குதியேல்
என்ன குறையு மிலேமேலோ ரெம்பாவாய்.

பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியு மெல்லாப் பொருண்முடிவே
பேதை யொருபாற் றிருமேனி யொன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலும்
ஓத வுலவா வொருதோழன் றொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவனூ ரேதவன்பே ராருற்றா ராரயலா
ரேதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். (10)

பொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்கா ணாரழல்போற்
செய்யா வெண்ணீருடி செல்வா சிறுமருங்குன்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ யாட்கொண் டருளும் விளையாட்டில்
உய்வார்க ளுய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பா யெமையேலோ
ரெம்பாவாய். (11)

ஆர்த்த பிறவித் துயர்கெட நாமார்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடுங்
கூத்த னிவ்வானுங் குவலயமு மெல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய வணிகுழன்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி யிருஞ்சுனை நீராடேலோ ரெம்பாவாய். (12)

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னு மரவத்தாற்
தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியு மெங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ
ரெம்பாவாய். (13)

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி யப்பொருளா மாபாடிச்
சோதித் திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதித் திறம்பாடி யந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய். (14)

ஓரொருகா லெம்பெருமா னென்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங்களிகூர
நீரொருகா லோவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தெமையாள் விண்ணோரைத்தான்
[பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறும்
ஆரொருவ ரிவ்வண்ண மாட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ
[ரெம்பாவாய். (15)

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை யாளுடையா
[ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலை குலவி நந்தம்மை யாளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமா னன்பர்க்கு
முன்னி யவணமக்கு முன்சுரக்கு மின்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ
[ரெம்பாவாய். (16)

செங்க ணவன் பாற் றிசைமுகன்பாற் றேவர்கள்பால்
எங்கு மிலாததோ ரின்பநம பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் மில்லங்க டோறு மெழுந்தருளிச்
செங்கமலப்பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்க ணரசை யடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ
ரெம்பாவாய். (17)

அண்ணா மலையா னடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை
வீறற்றாற்போற்
கண்ணா ரிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ரொளிமழுங்கித் தாரகைகட் டாமகலப்
பெண்ணாகி யாணா யலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ
[ரெம்பாவாய். (18)

உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் மச்சத்தால்
எங்கள் பெருமா னுனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ
ரெம்பாவாய். (19)

போற்றி யருளுகநின் னாதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின் னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றி யெல்லா வுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி யெல்லா வுயிர்க்கும் போகமாம்
[பூங்கழல்கள்
போற்றி யெல்லா வுயிர்க்கு மீறா மிணையடிகள்
போற்றிமா னான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும்
[பொன்மலர்கள்
போற்றியா மார்கழி நீ ராடேலோ ரெம்பாவாய்.

குறிப்பு:—வீதியில் சேர்ந்து செல்லும் பல பெண்கள் தம் தோழியரைத் துயிலெழுப்பி மார்கழி நீராட அழைத்துச் செல்லும் காட்சிகள் பல படியாகச் சித்தரித்துக் காட்டப் பெறுகின்றன. பாவை நோன்பு—மார்கழி நோன்பு - காத்தியாயனி விரதம் என்பதுமாம்.



5693

ஸ்ரீ



ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்த

# திருப்பாவை

—(௦)—

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர்! போதுமினோ நேரிழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோ பன்குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை யிளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாரா யணனே நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய். (1)

வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம்பாவைக்கு
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத் துயின்ற பரம னடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட் டெழுதோம் மலரிட்டு நாம்முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய். (2)

ஓங்கி யுலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந்நெ லூடு கயலுகள
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்க, குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய். (3)

ஆழி மழைக்கண்ணா! ஒன்று நீ கைகரவேல்
ஆழி யுள்புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி
ஊழி முதல்வ னுருவம்போல் மெய்கறுத்து
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். (4)

மாயனை மன்னு வடமதுரை மைந்தனை
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை
தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனை
தூயோமாய் வந்துநாம் தூமலர் தூவித்தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க
போயபிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய். (5)

புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன் கோயில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?
பிள்ளாய்! எழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி
வெள்ளத் தரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். (6)

கீசுகீ சென்றுஎங்கும் ஆனைச்சாத்தன் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ?
பேய்ப்பெண்ணே!
காசும் பிறப்பும் கலகலப்பக கைபேர்த்து
வாச நறுங்குழ லாய்ச்சியர் மத்தினால்
ஓசைப் படுத்த தயிரரவம் கேட்டிலையோ?
நாயகப் பெண்பிள்ளாய்! நாரா யணன்மூர்த்தி
கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ?
தேசமுடையாய்! திறவேலோ ரெம்பாவாய்! (7)

கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரைப் போகாமல் காத்து
[உன்னைக்
கூவுவான் வந்துநின்றோம் கோது கலமுடைய
பாவாய்! எழுந்திராய் பாடிப் பறைகொண்டு
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவா வென்றாராய்ந் தருளேலோ ரெம்பாவாய். (8)

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய
தூபம் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமான் மகளே! மணிக்கதவம் தாள்திறவாய்
மாமீர்! அவளை யெழுப்பீரோ? உன் மகள்தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ
மாமாயன் மாதவன் வைகுந்த னென்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய். (9)

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!
மாற்றமும் தாராரோ? வாசல் திறவாதார்
நாற்றத் துழாய்முடி நாராயணன் நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டு ஒருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கரணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?
ஆற்ற அனந்த லுடையாய்! அருங்கலமே!
தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய். (10)

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றமொன் றில்லாத கோவலர்தம்
[பொற்கொடியே!
புற்றர வல்குல் புனமயிலே! போதராய்
சுற்றத்துத் தோழிமா ரெல்லாரும் வந்துநின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாட
சிற்றாதே பேசாதே செல்வப் பெண்டாட்டி! நீ
எற்றுக்கு உறங்கும் பொருளேலோ
ரெம்பாவாய். (11)

கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்று பால்சோர
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்!
பனித்தலை வீழநின் வாசற் கடைபற்றி
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும் நீ வாய்திறவாய்
இனித்தா னெழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்!
அனைத்தில்லத் தாரும் அறிந்தேலோ
[ரெம்பாவாய். (12)

புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனை
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்
பிள்ளைக ளெல்லாரும் பாவைக் களம்புக்கார்
வெள்ளி யெழுந்து வியாழ முறங்கிற்று
புள்ளும் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய்!
குள்ளிக் குளிரக் குடைந்துநீ ராடாதே
பள்ளிக் கிடத்தியோ? பாவாய் நீ! நன்னாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய். (13)

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய்
[கூம்பினகாண்
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய் நாணாதாய்! நாவுடையாய்!
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய். (14)

எல்லே! இளங்கிளியே! இன்னம் உறங்குதியோ!
சில்லென் றழையேன்மின்! நங்கைமீர்!
[போதர்கின்றேன்
வல்லை உன் கட்டுரைகள் பண்டேஉன் வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானேதா னாயிடுக
ஒல்லைநீ போதாய் உனக்கென்ன வேறுடையை
எல்லாரும் போந்தாரோ? போந்தார்போந்
[தெண்ணிக்கொள்
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோ ரெம்பாவாய். (15)

நாயகனாய் நின்ற நந்தகோ பனுடைய
கோயில் காப்பானே! கொடித்தோன்றும் தோரண
வாயில் காப்பானே! மணிக்கதவம் தாள்திறவாய்
ஆயர் சிறுமிய ரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்
தூயோமாய் வந்தோம்! துயிலெழப் பாடுவான்
வாயால் முன்னம் முன்னம் மாற்றாதே அம்மா! நீ
நேயநிலைக் கதவம் நீக்கேலோ ரெம்பாவாய். (16)

அம்பரமே தண்ணீரே சோறே அறஞ்செய்யும்
எம்பெருமான்! நந்த கோபாலா! எழுந்திராய்!
கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே! குலவிளக்கே
எம்பெருமாட்டி யசோதாய்! அறிவுறாய்
அம்பரமூடறுத் தோங்கி உலக ளந்த
உம்பர் கோமானே! உறங்காது எழுந்திராய்
செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா!
உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய். (17)

உந்து மதகளிற்றன் ஓடாத தோள்வலியன்
நந்த கோபாலன் மருமகளே! நப்பின்னாய்!
கந்தம் கமழும் குழலீ! கடைதிறவாய்!
வந்தெங்கும் கோழி அழைத்தனகாண் மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்
பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர்பாட
செந்தா மரைக்கையால் சீரார்வளை யொலிப்ப
வந்துதிறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். (18)

குத்துவிளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறி
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா! வாய்திறவாய்
மைத்தடங் கண்ணினாய்! நீ உன் மணாளனை
எத்தனை போதும் துயிலெழவொட் டாய்காண்
எத்தனையேலும் பிரிவாற்ற கில்லாயால்
தத்துவ மன்று தகவேலோ ரெம்பாவாய். (19)

முப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே! துயிலெழாய்
செப்ப முடையாய்! திறலுடையாய்! செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயிலெழாய்
செப்பன்ன மென்முலை செவ்வாய் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்
உக்கமும் தட்டொளியும் தந்து உன்மணாளனை
இப்போதே எம்மை நீராட்டேலோ
[ரெம்பாவாய். (20)

ஏற்றகலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளல் பெரும்பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே! அறிவுறாய்
ஊற்ற முடையாய்! பெரியாய்! உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே! துயிலெழாய்
மாற்றார் உனக்கு வலிதொலைந்து உன்வாசற்கண்
ஆற்றாது வந்து உன் னடிபணியு மாப்போலே
போற்றி யாம்வந்தோம் புகழ்ந்தேலோ
[ரெம்பாவாய். (21)

அங்கண்மா ஞாலத் தரசர் அபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட் டிற்கீழே
சங்க மிருப்பார்போல் வந்துதலைப் பெய்தோம்
கிங்கிணிவாய்ச் செய்த தாமரைப்பூப் போலே
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ?
திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற்போல்
அங்க ணிரண்டும்கொண்டு எங்கள்மேல்
[நோக்குதியேல்
எங்கள்மேல் சாபம் இழிந்தேலோ ரெம்பாவாய். (22)

மாரி மலைமுழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர்பொங்க எப்பாடும் போந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு
போதருமாப் போலே நீ பூவைப் பூவண்ணா! உன்
கோயில் நின்றும் இங்ஙனே போந்தருளி கோப்புடைய
சீரிய சிங்காசனத்து இருந்து யாம்வந்த
காரியம் ஆராய்ந் தருளேலோ ரெம்பாவாய் (23)

அன்று இவ்வுலகம் அளந்தாய்! அடிபோற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய்!
[திறல்போற்றி
பொன்றச் சகடம் உதைத்தாய்! புகழ்போற்றி
கன்று குணிலா எறிந்தாய்! கழல்போற்றி
குன்று குடையா எடுத்தாய்! குணம்பொற்றி
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி
என்றென்றும் உன்சேவகமே ஏத்திப் பறை
[கொள்வான்
இன்றுயாம் வந்தோம் இரங்கேலோ
[ரெம்பாவாய். (24)

ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளர
தரிக்கிலானாகித் தான் தீங்குநினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே! உன்னை
அருத்தித்து வந்தோம் பறைதருதி யாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோ
ரெம்பாவாய். (25)

மாலே! மணிவண்ணா! மார்கழி நீராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை யெல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்து உன்பாஞ்ச சன்னியமே

போல்வன சங்கங்கள் போய்ப்பாடு டையனவே
சாலப் பெரும்பறையே பல்லாண் டிசைப்பாரே
கோல விளக்கே கொடியே விதானமே
ஆலி னிலையாய்! அருளேலோ ரெம்பாவாய். (26)

கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா! உன்தன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாக
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடை யுடுப்போம் அதன் பின்னே பாற்சோறு
மூட நெய்பெய்து முழங்கை வழிவார
கூடி யிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். (27,

கறவைகள் பின்சென்று கானம்சேர்ந் துண்போம்
அறிவொன்று மில்லாத ஆய்க்குலத்து உன் தன்னைப்
பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்
குறைவொன்று மில்லாத கோவிந்தா! உன் தன்னோடு
உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது
அறியாத பிள்ளை களோம் அன்பினால் உன் தன்னைச்
சிறுபே ரழைத்தனவும் சீறியருளாதே
இறைவா! நீதாராய் பறையேலோ
[ரெம்பாவாய். (28)

சிற்றஞ் சிறுகாலே வந்துஉன்னைச் சேவித்து உன்
பொற்றா மரையடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றம் மேய்த் துண்ணும் குலத்தில் பிறந்து நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது
இற்றைப் பறைகொள்வா னன்று
[காண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்
[தன்னோடு
உற்றோமே யாவோம் உனக்கே நாம்
[ஆட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்றேலோ
[ரெம்பாவாய். (29)

வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனை
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறைகொண்ட வாற்றை அணிபுதுவைப்
பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான்
[கோதை சொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கு இப்பரிசுரைப்பார் ஈரிரண்டுமால் வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவ
[ரெம்பாவாய். (30)

குறிப்பு :—வீதியில் சேர்ந்து செல்லும் பல பெண்கள் தம் தோழியரைத் துயிலெழுப்பி மார்கழி நீராட அழைத்துச் செல்லும் காட்சிகள் பலபடியாகச் சித்தரித்துக் காட்டப் பெறுகின்றன. பாவை நோன்பு—மார்கழி நோன்பு; காத்தியாயனி விரதம் என்பதுமாம்.



திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்க ஸ்வாமி கோயில் காருண்யாமிர்த தீர்த்தமும்
கோபுர முகப்பும்




திருவண்ணாமலை, அருணாசலேச்வரர் கோயில் ஸந்நிதி.

# பிள்ளையார் சுழி

நம் தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு ஊரிலும் சிவாலயமும் விஷ்ணுஆலயமும் நிறுவப்பட்டிருப்பதைக் காண்கிறோம். ஒவ்வொரு சிவாலயத்திலும் நாயன்மார்களுடைய திருமுறைகளும் ஒவ்வொரு விஷ்ணுஆலயத்திலும் ஆழ்வார்களுடைய திவ்யப் பிரபந்தங்களும், இரு ஆலயங்களிலும் ஆறு அங்கங்களோடு கூடிய ருக்வேதம், யஜுர்வேதம், சாமவேதம் முதலியவைகளும் பாராயணம் நடைபெற்று வருவதையும் பார்க்கிறோம். சிறப்பாக, மார்கழி மாதத்தில் மாணிக்கவாசகருடைய திருவெம்பாவையும் ஆண்டாளின் திருப்பாவையும் முறையே சிவாலயங்களிலும் விஷ்ணுஆலயங்களிலும் பாராயணம் செய்யப்பெற்று வருகின்றன. ஆனால் சென்ற ஐம்பது ஆண்டுகளாக நம் தமிழ்நாட்டு மக்கள் சிறு பிராய முதலே மேல் நாட்டாரின் மொழியையும் நாகரிகத்தையும் பயின்று கொண்டும் அரசியல் கிளர்ச்சிகளிலேயே விசேஷமாக ஈடுபட்டுக்கொண்டும் இருக்கும்படியாக நேர்ந்திருப்பதனால் தாய்நாட்டுத் தெய்வீக முறைகளை மறந்து மானிடப் பிறவிக்கு உண்மையான உபகாரத்தைச் செய்யும் அம்முறைகளின் கருத்தையறியாமல் அருள்வழியில் பெருநஷ்டத்தை அடைந்திருக்கிறோம். ஜாதி, மதம் முதலியவற்றின் பெயராலும் அறியாமையின் காரணமாகவும் சுயநலத்துக்காகவும் வேற்றுமைகளைப் பெருக்கி த்வேஷங்களை வேண்டுமென்றே சிலர் பரப்பி வருவதைக் காண்கிறோம். ஆதலால், இச்சமயத்தில் அத்திருமுறை முதலியவற்றின் பெருங்கருத்துக்களையும் அவைகளின் அடிப்படை உண்மைகளையும் அவைகளை வெளியிட்டோரின்

தூயவாழ்க்கையையும் நம்மக்களுக்குத் தெளிவாக எடுத்து உரைக்க வேண்டியது விஷயம் தெரிந்தவர்களின் கடமை. வழிபாடுகள் மாறுபட்டிருந்தாலும் அவைகளின் அடிப் படை ஒன்றே. மேற்சொல்லப்பட்ட திருமுறை திவ்யப் பிரபந்தம் நால்வேதம் ஆறங்கம் இவைகளிலெல்லாம் பொதுவாக ஒரே ஒற்றுமை உணர்ச்சி ஊடுருவிச் செல்கிறது என்னும் உண்மையை எல்லோருக்கும் நன்றாய் ப்ரகாசப்படுத்தவேண்டும் என்னும் நோக்கத் துடன் ஒரு மகாநாடு கூட்டவேண்டும என்று ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அபிப்பிராயப் பட்டார்கள்.

## செயல் குழு கூட்டம்

அப்படியே ஒரு மகாநாடு கூட்டவேண்டிய ஏற்பாடு களைச் செய்வதற்காக, தேவகோட்டை திரு M. L. M. மகா லிங்க செட்டியாரைத் தலைவராகவும், மாயூரம் ஸ்ரீ A. V. வெங்கட்டராம ஐயரைக் காரியதரிசியாகவும் கொண்டு மற்றும் தேவகோட்டை திரு A. R. N. நாராயணன் செட்டியார், திருவிடைமருதூர் திரு பிச்சையா தேசிகர், திரு கோவிந்தராஜ பிள்ளை, ஸ்ரீ கோபாலஸ்வாமி ஐயங்கார், ஸ்ரீ T. V. கிருஷ்ணஸ்வாமி ஐயர், ஆடுதுறை திரு ஆறுமுகம் செட்டியார், திரு நடராஜ செட்டியார் முதலிய 18 பேர்களடங்கிய வரவேற்புக்குழு ஒன்றும் ஏற்படுத்தப் பட்டது, சைவ, வைஷ்ணவ, வைதீக வித்துவான்களைக் கொண்டு திருமுறைகள், திவ்யப் பிரபந்தங்கள், நால்வேத ஆறங்கங்கள் இவைகளைக் குறித்து உபந்நியாசங்கள் செய்விக்க வேண்டுமென்னும் நோக்கத்துடன் அநேக வித்துவான்களுடன் கடிதப் போக்குவரத்துக்கள் வைத்துக் கொள்ளப் பட்டன. விக்ருதி௵ மார்கழி௴ 10௳ (25—12—1950) திங்கட்கிழமை ஆருத்ரா தரிசனத் தன்று ஆரம்பித்து மார்கழி௴ 17௳ (1—1—1951) முடிய இந்த எட்டுத் தினங்கள், பட்டினத்தடிகள் வழி பட்டு உய்ந்த ஸ்ரீ மகாலிங்க மூர்த்தியின் க்ஷேத்திரமான

திருவிடைமருதூரில் மகாதானத் தெருவிலிருக்கும் ரா. ந. மெ. சத்திரத்தில் இந்த மகாநாட்டை நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது. ஸ்ரீ சச்சிதானந்தஸ்வாமிகள் மகாநாட்டுத் தலைவராயும் தேவகோட்டை திரு AL.AR. சொக்கையா செட்டியார் மகாநாட்டைத் திறந்து வைப்பவராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

## செயல்முறை தொடக்கம்

தஞ்சாவூர் ஜில்லாவிலும் மற்றத் தமிழ் ஜில்லாக்களிலும் சுமார் 800 பேருக்குமேல் அழைப்புக் கடிதங்கள் அனுப்பப் பட்டன. அநேகவிடங்களில் சுவரொட்டி விளம்பரங்கள் மூலமாகவும் துண்டு விளம்பரங்கள் மூலமாகவும் மகாநாடு கூடும் விஷயம் விளம்பரப் படுத்தப் பட்டது. மகாதானத் தெரு . சத்திரத்திலும் ஸ்ரீ ஆசார்யாள் மடத்திலும் மகாநாட்டிற்கு வருபவர்களுக்கு ஆகார விஷயங்கட்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஒலிபெருக்கியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தமிழ், ஆங்கிலம் தினசரிப் பத்திரிகைகளிலும், வாரப்பத்திரிகைகளிலும் இந்த மகாநாடு சம்பந்தமான விளம்பரங்கள் வெளிவந்தன. *

திருவெம்பாவை திருப்பாவை திருமறை ஆறங்க மகாநாட்டு கேந்த்ர அமைத்தற் குழுவினர்.

* அநுபந்தம் பார்க்க.

# ஆரம்ப விழா


## முதல்நாள் நிகழ்ச்சி

### சுவடிகளுடன் வீதி வலம்

மார்கழிமீ 10உ (25—12—50) திங்கட்கிழமை ஆருத்ரா தரிசனத்தன்று காலை 7 மணிக்கு அலங்கரிக்கப்பட்ட யானையின்மீது திருமுறைகள் திவ்யப் பிரபந்தங்கள் நான்மறை ஆறங்கங்கள் இவைகளின் திரு ஏடுகள் வைக்கப்பட்டு ஸ்ரீ மகாலிங்கப் பெருமானின் தேரோடும் நான்கு வீதிகளிலும் பஜனைகளுடனும் நாதஸ்வரத்துடனும் வீதிவலமாக எடுத்து வரப்பட்டன. இதற்கான ஏடுகள் கும்பகோணம் ஸ்ரீ ஆசார்யாள் மடத்திலிருந்தும், தருமபுர ஆதீன மடத்திலிருந்தும், சென்னை அடையாறு புஸ்தக சாலையிலிருந்தும் கொண்டுவரப்பட்டிருந்தன. வீதிவலம் 9-மணிக்கு மகாநாடு நடக்குமிடத்திற்கு வந்துசேர்ந்தது. வீதிவலம் வந்துசேர்ந்ததும் தெய்வவணக்கத்துடன் இம்மகாநாடு ஆரம்பமாயிற்று. திருவிடைமருதூர் திரு. நடராஜ தேசிகரால் திருவெம்பாவை பாராயணம் நிகழ்ந்துகொண்டிருந்தது.

### ஸ்ரீ ஆசார்யாளின் விஜயம்

9-30 மணிக்கு ஸ்ரீ காமகோடி பீடாதிபதி அவர்கள் பூஜையை முடித்துக்கொண்டு மகாநாட்டிற்கு விஜயம் செய்தார்கள். மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீ சச்சிதானந்த ஸ்வாமிகள், வரவேற்புக்குழுத் தலைவர் திரு மகாலிங்கம் செட்டியார், மகாநாடு திறப்பாளர் திரு AL. AR. சொக்கையா செட்டியார் முதலியவர்களால் ஸ்ரீ ஆசார்



திருவிடைமருதூர், ஸ்ரீ மகாலிங்கஸ்வாமி கோயில் ஸ்ரீ அம்மன் ஸந்நிதி.

யாள் வரவேற்கப்பட்டு அவர்களுக்காக ஏற்படுத்தியிருந்த ஆசனத்தில் அமர்ந்தார்கள்.

* * *

ஸ்ரீ ஆசார்யாளின் ஆசிபெற்று அவர்கள் அனுமதியின்பேரில் வரவேற்புக் குழுவின் தலைவர் தேவகோட்டை திரு. M. L. M. மகாலிங்கம் செட்டியார் அவர்கள் எல்லோரையும் வரவேற்றுப் பேசினார்கள் :—

வரவேற்புக் குழுத்தலைவர்
திரு. M. L. M. மஹாலிங்கம் செட்டியாரவர்களின்

# வரவேற்புரை

ஸ்ரீ ஜகத்குரு ஆசார்ய ஸ்வாமிகளின் திவ்ய பாதாரவிந்தங்கட்கும், சிவஞானச் செல்வர்கட்கும், அறநெறிச் செல்வர்கட்கும், அடியேனுடைய தாழ்ந்த வணக்கங்கள்.

பேரறிஞர்களே, நம் பாரதநாடு பண்டைநாள் தொட்டு ஆன்மீகநெறியில் திளைத்துப் பிறநாடுகட்கும் வழிகாட்டியாக இலங்கி நிற்கின்றதென்பதை மறுப்பவர் எவரே? ஆதிசங்கரர், இராமானுஜர், மத்வர் போன்ற மதாசாரியார்களும், இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்த அடிகள் போன்ற ஞானவான்களும், தோன்றி வாழ்ந்ததும் இந்நாடே. அவர்களால் அருளப்பட்ட பாஷ்யங்களும், ஞானமார்க்கங்களும், ஆஸ்திகர்களாலும் பிறநாட்டவர்களாலும் பொன்னேபோற் போற்றப்பட்டு வருகின்றன. எனினும் சிலகாலமாக நாஸ்திகவாதங்களுள் மக்கள் தம் மனத்தைப் பறிகொடுத்து ஆஸ்திகத் தன்மையை இழந்து வருதலைக் கண்டு அறிஞர் பலர் வருந்தாநின்று ஆவன செய்ய முற்பட்டிருக்கின்றனர்.

ஸநாதனமாகிய நமது ஹிந்து தர்மத்தை எங்ஙனும் பரப்ப மடங்களும், மடாதிபதிகளும் செய்து வரும் முயற்சி நம் அனைவராலும் வரவேற்கத்தக்கதொன்றாம். அத்துறையுள் இம்மாநாடு இடைமருதீசன் திருவருளால் நடைபெற இருக்கின்றது. இது நாட்டு மக்கட்கு நல்வழி காட்டியாக நிலவவேண்டுமென முதற்கண் பிரார்த்திக் கின்றேன்.

அறிவுடைப்பெரியோர் பலர் இருக்க ஒன்றுக்கும் பற்றாத சிறியேனை இச்செயலில் பங்கெடுத்துக்கொள்ள ஸ்ரீ ஜகத்குரு பீடம் ஆணையிட்டதை மறுத்தற்கு அஞ்சி பெறற்கரிய பேறெனவே கருதி, சிரமேற்கொண்டு உங்கள் அனைவரையும் இம்மாநாட்டு வரவேற்புக் குழுத்தலைவன் என்ற முறையில் முழுமனதுடன் நல்வரவு கூறி வரவேற் கிறேன்.

பெரியோர்களே! நம் தண்டமிழ்நாட்டில் மிகப் பழங் காலத்திலிருந்து நின்று நிலவுவன சைவ, வைணவநெறி களேயாம். அவ்விரண்டு நெறிகளை நாயன்மார்களும் ஆழ்வாராதிகளும் கண்ணினைந்தாக்கின்ற இசைமயிற்காத்து வளர்த்துவந்தனர். புறவுலகில் சாதாரண மக்கட்கு இரண்டெனத்தோன்றினும் ஒன்று என்பதே முடிந்த முடிபாம். இவ்வுண்மையை அறிவுறுத்தும் நிலைமை யிலேயே சிதம்பரத்தலம் இலங்குகின்றது. "ஹரியும் சிவனும் ஒன்றே" என்ற பழமொழியும் இங்கு நினைவு கூர்தற்பாலது. இம்மாநாடு அக்கருத்தைத் தன்னகத்துக் கொண்டே "திருவெம்பாவை - திருப்பாவை - திருமறை- ஆறங்கமாநாடு" எனத் தொடங்கப்பெற்றுள்ளதென்பது அடியேன் கருத்து.

வாதவூரெங்கோன் வாசகம், தொல்லையிரும்பிறவிச் சூழும் தளை அகற்றி, அல்லல் அறுத்து, ஆனந்தம் ஆக்குவது; ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பது. கீழ்ப்பறவைச் சாதிகளும் வேட்டமுறுவதுடன் விலங்குகளும் மெய்ஞ்ஞான நாட்டமுறும் வண்ணம்

செய்வது, இத்தகைய சிறந்த மணிவாசகப் பெருந்தகை யாராது அருண்மொழி வாசகமாந் திருவாசகத்தில் திருவெம்பாவை இலக்குகிறது.

திருமகளே சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாகத் திருவவதாரம் செய்தார். நாரணனுக்குப் பூமாலைமட்டுமா சூடிக்கொடுத்தாள்! தெள்ளுதமிழ்ப் பாமாலையும் பாடிக் கொடுத்த பாவையல்லவோ? அத்தகைய நாய்ச்சியாரால் அருளிச்செய்யப்பட்டது திருப்பாவை.

பாவைநோன்பாகிய இது கன்னிப்பெண்களால் மார்கழி மாதமாகிய இம்மாதத்தில் நோற்கப்படுவது. இந்நோன்பால் தீதின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து நீங்காத செல்வம் என்றென்றும் நின்றுலவும் என்பது நம்மவர்கண்ட உண்மை. "மாதத்தில் நான் மார்கழி ஆவேன்" என்பது இறைவன் அருள்வாக்கு. இம்மாதம் எல்லாவற்றுனும் சிறந்து விளங்குவது. கன்னலும், செந்நெலும், கதலியும், மஞ்சளும் ஆம் இன்ன மங்கலப் பொருள்கள் விளைந்து வீடுசேரும் காலம் இது. இதை யடுத்தே போகிப் பண்டிகையும், பொங்கல் பண்டிகையும் நடைபெறுகின்றன. இன்னோரன்ன நலம் பல நிறைந்த இம்மாதத்தில் ஆதிரை நன்னாளில் இம்மாநாடு சிறப்புற நடைபெற வேண்டுமென்ற இறைவனது திருவுள்ளச் சம்மதத்தை நினைந்து நினைந்து பெருமகிழ்வு கொள்ளுகிறேன்.

அருள்பெருகு தனிக்கடலாம் சம்பந்தப்பிள்ளையும், அன்புசெறி பெருங்கடலாம் அப்பரடிகளும், தம்பிரான் தோழராம் சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளும் ஆகிய சமயாசாரியர்கள் அருளிய தேவாராதி திருமுறைகளின் பக்திச் சுவை செறிந்து இலங்கு பாக்களின் நயங்களைப் பன்முறை ஓதியுணர்ந்தார் அடையும் இன்பமே பேரின்பப்பேறும்.

ஆரியமொழியின் அருமை பெருமைகளை உணராத நம் நாட்டவரிற் பலர் அதனை வெறுக்கின்றனர். இரு

மொழிக்கும் கண்ணுதலார் முதற்கடவுள் என்பதை அறிந்த சிலரும் அக்கூட்டத்தினரிடையே நிலவுவது விந்தையினும் விந்தையே. அம்மொழியின் சிறப்பு இயல்புகளை நம் நாட்டவரினும் மேனாட்டார் நன்கு தெரிந்துள்ளனர் என்பது மிகைபடக் கூறலாகாது. அவரினும் ஜெர்மன் நாட்டவரே அம்மொழியால் எல்லையற்ற பயனடைந்துள்ளனர் என்பதை மறுப்பவர் எவரும் இலர். அம்மொழியின்கண் அமைந்த வேதாங்கங்களும் இம்மாநாட்டில் இடம் பெற்றிருப்பது முழுமுதற் கடவுளின் அருட் சம்மதமென்றே கருதுகிறேன். இன்னோரன்ன செயல்களால் நம் நாட்டில் ஆஸ்திகக் கொள்கைகள் மலிந்து மக்கள் இகபரத்திற்குரிய நல்வினைப் பயன்களை நுகர்ந்து வாழவேண்டுமென, பார்க்கும் இடம் எங்கணும் நீக்கமற நிறைந்து நிலவும் சர்வேசுவரனை மன மொழி மெய்களால் சிந்தித்து வந்தித்துப் போற்றுகிறேன்.

இம்மாநாட்டில் பெரும் பங்குகொண்டு கேள்விச் செல்வத்தை வாரி வழங்க இருக்கும் அறிவுடைப் பெருமக்களையும், அச்செல்வத்தை நாடி இங்குக் கூடி நிற்கும் நல்லன்பர்களையும் மன ஒருமையுடன் வரவேற்கிறேன்.

நாம் அனைவரும் மகாசந்நிதானத்தின் திருவருளுக்குப் பாத்திரர்களாகி நல்வாழ்வு வாழ்வோம்.

வாழ்க வையகம் — மன்னுக நல்லறம்

வணக்கம்.

* * *

வரவேற்பு இனிது முடிந்ததும் ஸ்ரீ ஆசாரியாள் ஆசியுடன் தேவகோட்டை திரு. AL. AR. சொக்கையா செட்டியார் அவர்கள் மகாநாட்டைத் திறந்து வைத்துப் பேசினார்கள்:—

மகாநாட்டுத் திறப்பாளர்

திரு. AL. AR. சொக்கையா செட்டியாரவர்களின்

# திறப்புரை

எரியலால் உருவமில்லை
ஏறலால் ஏறலில்லை
கரியலால் போர்வையில்லை
காண்டகு சோதி யார்க்குப்
பிரிவிலா அமரர் கூடிப்
பெருந்தகைப் பிரானென்றேத்தும்
அரியலால் தேவி யில்லை
ஐயன் ஐயாறனார்க்கே.

பேரன்புடைய பெரியோர்களே!

இம்மகாநாடு நடைபெறுவதற்குக் காரணர்களாக இருக்கின்ற ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் அவர்களுக்கு முதற்கண் எனது வணக்கத்தை உரியதாக்குகின்றேன்.

பெரியோர்களே!

உடல்கொண்டு தோன்றியிருக்கின்ற உயிர்த்தொகுதிகளுள், மனிதன் மாண்புடையவனாக மதிக்கப்பெறுகின்றான். அதற்குப் பலர் பலவாறாகக் காரணம் கூறுவர். அவையனைத்தும் ஏற்றுக்கொள்ளத் தக்கனவே என்றாலும் தெய்வக் கொள்கை உடையவனாக வாழுதற்குரிய சிறப்பு மனிதன் ஒருவனுக்கே உரிமையாதலின் அவனைச் சிறந்த பிறவியென ஆன்றோர் மதிக்கின்றனர்.

அறிவிற் சிறந்த பிறவி மனிதப் பிறவியாதலின் அது பாராட்டுதற்குரியது என்பதுயாரும் மறுக்க முடியாதது. ஆனால் அறிவுடைமை யொன்றே மனிதனைச் சிறந்தவனாக ஆக்கிவிடமாட்டாது. மனிதரில் ஒரு சிலரைவிடச் சிறந்த அறிவு படைத்த விலங்கு பறவைகளையும் கூட நாம் காண்கின்றோம். எனவே அறிவு ஒன்றே பெருமை தருவதென்று கருதுவதற்கு இடமில்லை.

மாண்பு நிலைகளை வரிசைப்படுத்துகின்ற முறையில் கல்வி, அறிவு, ஒழுக்கம் என்று தொடர்பு வைத்துப் பேசுவதும் வழக்கம். எல்லா உயிர்களிடத்திலும் இயற்கை யிலே ஒரு தகுதியில் அமைந்திருக்கின்றது அறிவு. கல்வி யினாலேதான்விளக்கமுடையதாக ஆகும் அறிவு. கல்வியால் பெறாத அறிவை ஆன்றோர்கள் அறிவெனக் கூறுவதில்லை. அதனை ஒட்பம் எனக்கூறி அவ்வளவாக மதிக்க மாட்டார்கள்.

ஆகவே கல்வியாற் பெறுகிற அறிவே சிறந்ததென் பது புலனாகும். ஒருவன் எவ்வளவு அறிவுடையவனாயிருந் தாலும் அவ்வறிவு அவனது ஒழுக்க நலங்கண்டன்றி மதிக்கப் பெறுவதில்லை. இதனாலேயே கல்விப்பயனாகிய அறிவும் அறிவுப் பயனாகிய ஒழுக்கமும் ஒன்றன்பின் ஒன்றாக வைத்துப் பேசப்பெறுகின்றன.

அவ்வொழுக்கம் உலகியல் பற்றியதும் இறையியல் பற்றியதுமென இருவகைப்படும். இவ்விரண்டினுள் இறையியல் பற்றிய ஒழுக்கமே சிறந்தது. சிறந்ததாகிய மனிதப் பிறவியைப் பெற்றவர் அதன் முடிந்த பயனாக வுள்ள இறையியலொழுக்கத்தில் வழுவாதவராக வாழுதல் வேண்டும். இது குறித்தே "கற்றதனால் ஆய பயனென் கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்" என்ற பொய்யாமொழி எழுந்தது.

கடவுள் நெறியிலிருந்து மக்களது ஒழுக்கம் மாறு படத் தொடங்கினால் நாடு வளம் குறைந்துவிடும். இந்த உண்மையை இப்பொழுதைய காலநிலையில் நாம் நன்றாக

அறிகின்றோம். செய்யும் முயற்சியில் நாம் வெற்றிபெற வேண்டுமானால் இறைவனை முன்வைத் தெண்ணுவதுதான் பொருந்துவதாகும். பல்லாண்டுகளாக அடிமை வாழ்க்கையுடையதாகக் கொண்டிருந்த நம்நாட்டை உரிமை வாழ்க்கையுடையதாக ஆக்கித்தந்த காந்தியடிகளது வாழ்க்கை இவ்வுண்மையை நன்கு தெளிவு படுத்திவிட்டது.

அரசியற் போரை உலகியலறிவோடு மட்டும் நடத்தி வந்த நாளில் துன்பத்தையன்றி இன்பமே காணாதிருந்த அவரது உள்ளம் அப்போரை இறையியலுள்ளத்தோடு நடத்தத் தொடங்கியதும் எதிர்பார்க்கவே முடியாத நல்லின்பத்தை யளித்து விட்டது நாம் அறிந்ததே.

நாட்டுக்கு இன்றியமையாத பொருள்களைப் பெறுவதற்கு இப்பொழுதேற்பட்டிருக்கிற துன்பங்களுக்கு எல்லையே இல்லை. இவ்வித முயற்சிகளில் பயனேதும் கிடைக்கவில்லை. கடவுளைக் கருதினாலன்றி உய்யும் வழியில்லை என்பதை மக்கள் இப்பொழுதாவது உணர வேண்டும். அவ்வாறு உணருவதற்கு இதுபோன்ற மகாநாடுகள் ஆங்காங்கே நடைபெறுதல் வேண்டும். இம்மகாநாடு ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் போதாரவில் நிகழுகின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளின் இதுபோன்ற உபகாரங்களுக்கு நாம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்த மகாநாட்டில் வேதம், வேதாங்கங்கள் திருவெம்பாவை, திருப்பாவை பற்றிய பொருள்கள் விளக்கப்பெற இருக்கின்றன. இம்மாதம் திருவெம்பாவை திருப்பாவைக்குரியது என்பதை நீங்கள் அறிவீர்கள். திருவெம்பாவையிலும் திருப்பாவையிலும் கூறப்பெற்றுள்ள கருத்துக்கள் வேதவேதாங்கங்களின் சாரமே என்பதை அறிஞர்கள் எடுத்துரைப்பார்கள். அத்துடன் பக்தி ததும்ப இசையோடு வித்வான்களும் பாடுவார்கள்.

பேரறிஞர்களின் தொடர்பு பெற்று நடைபெறும் இம் மகாநாட்டை அறிவால் முதிர்ந்த ஆன்றோர்கள் பலரிருக்கவும், என்பால் வைத்த அன்பினால் திறந்து வைக்கும்படி ஆக்ஞாபித்தார்கள், மகாநாட்டுச் செயலாளர்களுக்கும் கூடியுள்ள சான்றோர்களுக்கும் நன்றி கூறி இம்மகாநாட்டைத் திறந்து வைக்கிறேன்.

*திறப்பாளர் திரு. சொக்கையா செட்டியார் சொற்பொழிவு முடிந்ததும் ஸ்ரீ ஆசார்யாளின் பரமாக்ஞையின்படி தலைமை வகித்த -ஸ்ரீ. சச்சிதானந்த சுவாமிகள் தலைமைப் பிரசங்கத்தை நிகழ்த்தினார்கள் :*

* * *

மகாநாட்டுத் தலைவர்

ஸ்ரீ. சச்சிதானந்த சுவாமிகள் அவர்களின்

# தலைமையுரை

ஒள் நித்தில நகையாய், இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ,
எண்ணிக் கொடுள்ளவா சொல்லுகோம், அவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே!
விண்ணுக்கொரு மருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள் நெக்கு நின்றுருக யாம்மாட்டோம், நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்.

—(மாணிக்கவாசகர் திருவெம்பாவை. 4)



பகாசாட்டுத் [illegible]

ஸ்ரீ சச்சிதானந்த ஸ்வாமிகள்

*ஓங்கி யுலகளந்த உத்தமன் பேர்பாடி*
*நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்*
*தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து*
*ஓங்கு பெருஞ் செந்நெலூடு கயலுகள*
*பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப*
*தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி*
*வாங்க, குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்*
*நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்.*

—(ஆண்டாள் திருப்பாவை. 3)

நமது நாட்டிற்கு நயனமாம் நாயன்மார்களும் ஆழ்வார்களும் மக்களுக்கு உண்மை நெறியைக் காட்டும் கண்ணேயாவர். அவர்களுடைய திருமுறைகளும் பிரபந்தங்களும் கண்ணிற்கருமணியாம். மாணிக்கவாசகர் திருவெம்பாவையும் ஆண்டாளின் திருப்பாவையும் மணியாடு இருபாவைகள். அவ்விருவரும் உடல், பொருள், ஆவி மூன்றையும் வாழ்நாள் முழுவதும் ஆண்டவனுக்கே அர்ப்பணம் செய்த பொய்யில்லா அடியார்கள். அத்தகையோர் வாக்கு ஒரு நாளும் பொய்யாது, பொய்யாது. நாம் இன்று மழையின்றியும், உணவின்றியும் வாடுகின்றோம் சுற்றிலும் பொய்யிலே உழலுகின்றோம். கதிரவன் உதிக்கும்போது ஆற்றங்கரையில் நீராடாது படுக்கையில் படுத்துத் தூங்குகின்றோம், நமது சிறு பிராயத்தில் ஒவ்வொரு நாளும் விடியற்காலம் ஐந்து மணிக்கு ஆற்றங்கரையிலும் குளக்கரையிலும் நீராடும் கூட்டங்களை நிறையக் கண்டிருக்கிறோம். அக் காலத்தில் மழையும், நெல்லும், பாலும் குறைவு என்பதே கேட்டிலோம். இப்பொழுதோ விடியுமுன் ஆற்றங்கரைக்குப் போனால் யாரையுமே காணோம். மாணிக்கவாசகரோ, 'காலை துயிலாதே' என்கிறார்; 'அவலமாய்ப் போகாதே' என்கிறார். மாணிக்கவாசகர், ஆண்டாள், இவ்விருவருமே 'மார்கழி நீராடு' என்கிறார்கள். 'பரமனைப் பாடு' என்கிறார்கள். "மாதம் மும்மாரி பெய்யும், நெல் குறை

வின்றி விளையும், வள்ளற் பெரும் பசுக்கள் குடம் நிறைக்கும், செல்வம் நிறையும்" என்கிறாள் திருப்பாவை.

மாணிக்கவாசகர் தம் காலத்தில் ஈச்வர ஸந்நிதானங்களில் விடியற் காலத்தில் தாம் கண்ட காட்சிகளை மனமுருகப் பாடுகிறார்.

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
—(மாணிக்கவாசகர் திருப்பள்ளியெழுச்சி. 4)

**மாணிக்கவாசகர் கண்ட இக் காட்சிகள், நம் தமிழ் நாட்டிற்கு மீளுமாறு இறைவனை வேண்டவே இங்கு இன்று நாம் கூடியிருக்கின்றோம்.**

வீணையும் யாழும் மாத்திரமல்ல; அறுபத்துநான்கு கலைகளும் ஓங்கி வளர்ந்து ஈச்வரனுக்கு அர்ப்பணம் செய்யப்பட வேண்டும்.

தோத்திரங்களுள் ரத்னங்களாகிய திருவெம்பாவை திருப்பாவை பஜனையோடு நாயன்மார்கள் ஆழ்வார்கள் உள்ளிட்ட நம் நாட்டு எல்லா அடியார்களுடைய தோத்திரங்களையும் "அப்பாலும் அடி சார்ந்தார்" மெய்மறந்து பாடிய தோத்திரங்களையும் வாயாரக் கோஷித்து ஈசனருளருவியில் மூழ்கி நீராடுவோம்.

இருக்கு வேத பாராயண மாத்திரமல்ல அடியார்கள் ஆசைப்படுவது; நால் வேத மாத்திரமுமல்ல.

(1) வேதத்தின் மந்திர சக்தியை ரக்ஷிக்க வேலியாகி நின்று அக்ஷரங்களின் உற்பத்தியாகும் ஸ்தானம் முதலியவைகளைக் குறிக்கும் வேத மாதாவின் உயிர்நிலையாகும் சிக்ஷை என்னும் முதலங்கமும்,

(2) அடியார்களும் முனிவர்களுமாகிய பாணினி, பதஞ்ஜலி முதலிய பண்டைப் பெரியோர்களால் வகுக்கப்பட்ட சொல்லிலக்கணமாம் வேதத்தாயின் முகமாகிய வியாகரணமென்னும் இரண்டாவதங்கமும்,

(3) வேதத் தாயின் திருவடிகளாம் மந்திரங்களின் எழுத்துக் கணக்கை நிர்ணயிக்கும் சந்தம் என்னும் மூன்றுவது அங்கமும்,

(4) யாஸ்கர் முதலிய முனிவர்களால் இயற்றப்பட்டு வேதச் சொற்களின் பொருளை நிர்ணயிக்கும் வேத மாதாவின் திருச்செவியாம் நிருக்தமென்னும் நாலாவது அங்கமும்,

(5) வியக்த கணிதம் (Arithmetic), அவ்யக்த கணிதம் (Algebra), க்ஷேத்ர கணிதம் (Geometry), இவை உள்ளிட்ட வானசாஸ்திரமாம் வேதமாதாவின் கண்களெனப்படும் ஜ்யோதிஷமாகும் ஐந்தாவதங்கமும்,

(6) கருவுற்ற நாள் முதல் பிறவியின் இறுதிவரையிலும் ஜீவர்களாகிய நமது தூய்மை வளருமாறு செய்யப்படவேண்டிய கர்மானுஷ்டானங்கள் எல்லாவற்றின் முறையை விளக்குவதும் வேதமாதாவின் திருக்கரங்களாக உவமிக்கப் படுவதும், ஆபஸ்தம்பர், போதாயனர் முதலிய பல முனிவர்களால் தொகுக்கப்பட்டதுமான கல்ப ஸூத்திரங்களென்னும் ஆறுவதங்கமும், இவையெல்லாம் நாட்டில் நிலைநின்று ஈசனை வழிபடத் துணைசெய்து அவனது அருள்மழை பொழியக் காரணமாக வேண்டு மென்பதே பண்டைய மெய்யன்பர்கள் எல்லோருடைய அவா.

"இலங்கிய நான்மறை யனைத்தும் அங்கமாறும்,
ஏழிசையும் கேள்விகளும் எண்டிக் கெங்கும்
சிலம்பிய நன்பெருஞ் செல்வம்"

(திருமங்கையாழ்வார். பெரிய திருமொழி. 4—4—8.)

என்கிறுர் அழியாப் புகழ்பெற்ற திருமங்கை மன்னன்.

வேத மாதாவின் அங்கங்கள் ஆறு. உபாங்கங்கள் நான்கு. இவ்வுபாங்கங்களையே இங்கு இப் பாசுரத்தில் 'கேள்வி' என்கிற சொல்லால் குறிக்கிறுர். வேதம் **ஓதல்**, சாத்திரம் **கேட்டல்** என்பது பண்டைத் தமிழில் வழங்கும் மரபு.

1. இதிஹாஸ புராணங்கள், 2. மதி நுட்பத்தை அளிக்கும் நியாயசாஸ்திரம், 3. வேதப் பொருளை ஆராயும் மீமாம்ஸசாஸ்திரம், 4. மானவம், யாக்ஞ வல்கியம முதலிய தர்ம சாஸ்திரங்கள்—இந் நான்கும் வேதமாதாவின் உபாங்கங்களாகும்.

உபாங்கங்களோடு நாலு வேதங்களுக்கும் தனித்தனி உபவேதங்களும் உண்டு. இருக்கு வேதத்தின் உபவேதம் உடலுக்குப் புஷ்டியைத் தரும் ஆயுர்வேதம். ஆத்மாவுக்குப் புஷ்டியைத் தருவன இருக்கு வேத மந்திரங்கள். ஆதலால் இருக்குவேதம பௌஷ்டிகம் என்னும பெயரைப் பெற்றது. இதைக்கொண்டே சங்க காலத்து நூல்களிலும், நாயன்மார் ஆழ்வார்கள் இவர்கள் திருவாக்குகளிலும் இருக்குவேதம் பௌடிகம் அல்லது பௌழியம் என்னும் சொற்களால் குறிக்கப்படுகிறது. இன்றும் மலைநாடாம் கேரளநாட்டில் நம்பூரிஅந்தணர்கள் இருக்குவேத விதிகளைப் பௌழியம் என்ற சொல்லாலேயே வழங்குகிறார்கள். ஆபத்தினின்று மக்களைக் காப்பதற்கான தனுர்வேதம் யஜுர்வேதத்தின் உபவேதம். ஆடல், பாடல், கருவி இசைத்தல், சிலம்பம் முதலிய எல்லாக் கலைகளும் உள்ளிட்ட காந்தர்வவேதம் சாமவேதத்தின் உபவேதம. ராஜநீதி சாஸ்திரமாம் அர்த்த சாஸ்திரம் அதர்வண வேதத்தின் உபவேதம். இவ்வுபவேதங்களையெல்லாம் நம் நாட்டு முறைப்படி நம்மவர் கற்று இந்த விஷயங்களில் மற்ற நாடுகள் அடைந்திருக்கும் வளர்ச்சியையும் நம் தர்மநெறி வழுவாது தெரிந்துகொண்டு, தெரிந்துகொண்டவைகளையெல்லாம் காமத்திற்கும், துவேஷத்திற்கும் உபயோகப் படுத்தாமல் மக்கள் ஈசனருள் பெறுவதற்கு அடிகோலும் வழிகளில் செலுத்தி உலகின் நாடு நகரங்களை நரகங்களாக்காமல் பொன்னாட்டினும், விண்ணாட்டினும் மேலான அருள் நாடாக்குவோமாக.

ஆறங்கங்களைத் தவிர, மற்ற சாஸ்திரங்களையும், குறிப்பதற்காகவே,

"பதினெட்டோடு நான்குக் குணர்வுமாய்,
அங்கமாறும் சொன்னான்"

(திருஞான. இரண்டாம் திரு. பதி. திருவையாறு. 6)

என்று பரமனைப் பாடுகின்றது தேவாரம்.

இவ்வரிய பெரும் பணிக்கு நம் நாட்டிலுள்ள ஆஸ்திகர்கள் எல்லோரும் ஒன்றுபட வேண்டும். 'ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு'. ஒன்றான பொருளில் ஒன்றுபட்டால் உண்டு பெருவாழ்வு. மறைவழிச் செல்வோரும், சிவாகமம், விஷ்ணுவாகமம், சக்தியாகமம் முதலிய வழிகளில் செல்வோரும் ஓரே அரங்கில் ஒன்றுபட்டு நின்று தீயதெல்லாம் அழிய, வையகம் துயர்தீர, பரமனைப் பாடும் பணியில் ஈடுபடவேண்டும்.

'வேதவிழுப்பொருளை'யே நாராயண மூர்த்தியாகவும், பரமசிவனாகவும், சக்திஸ்வரூபமாகவும் அந்தந்த அடியார்களாகிய நாம் வழிபட்டு வருகிறோம். ஆழ்வார்களுக்கும் நாயன்மார்களுக்கும் ஒற்றுமையிடம் நால்வேதம் ஆறங்கங்களே. இத்தத் தத்துவம் நமக்குப் புதிதல்ல.

சிவபெருமானை 'நாரணன்காண்' என்கிறார் அப்பர் (அப்பர்-திரு. 6 திருக்காளத்தி 3). திருமாலை 'முக்கண்ணப்பா' என்கிறார் நம்மாழ்வார் (நம்மாழ்வார் திருவாய்மொழி 10-10-1). 'அரன் நாரணன் நாமம்......மேனி ஒன்று' என்கிறார் பொய்கையாழ்வார். (பொய்கை. முதல் திரு—5.) "பிறை தங்குசடையானை வலத்தே வைத்து" என்கின்றார் திருமங்கையாழ்வார் (பெரிய திரு. 3—4—9)

வலத்தில் சிவபெருமானும் இடது பாகத்தில் திருமாலும் சேர்ந்து ஒருருவாய் விளங்கும் தன்மையை விளக்குகிறார் இவ்வாழ்வார். 'அரியலால் தேவியில்லை' என்கிறார் திருநாவுக்கரசர். (4. திருமுறை—பதி. திருவையாறு 5).

திருமாலின் சொரூபமும் சக்தியின் சொரூபமும் வேறல்ல என்பது அப்பர் வாக்கு.

பரமாத்மாவின் மூர்த்திகளுள் தாம் ஒரு மூர்த்தியை வழிபடும்போது அம் மூர்த்தி மற்றெல்லா பரமாத்ம மூர்த்திகளை விட உயர்ந்ததென்று, பக்தி பிராதானமான சில இடங்களில் அப் பெரியார்கள் மூர்த்திகளை ஏற்றத் தாழ்வுடன் கூறியிருந்தாலும், அவர்களே, தத்துவத்தை விளக்கும் இடங்களில், இம் மும்மூர்த்திகளும் ஒரே பரம் பொருள் என்னும் உண்மையை அநுபவிக்காமல் இல்லை. எப்படி இருப்பினும் தத்தம் மூர்த்தி, வேதத்தின் ஒரே பொருள் என்பது பண்டை அடியார்கள் எல்லோரும் துணிந்த முடிவு.

வேதம் மக்களுக்கு உபகாரம் செய்வது உயர்ந்த கருத்துக்களை உணர்த்துவதால் மாத்திரம் அன்று. வேதத்தின் சொரூபமே மந்திரமயம். வேதத்தில் உள்ள அகரமுதல் க்ஷகரம் ஈறான ஐம்பது அக்ஷரங்களும் மகா சரஸ்வதி மந்திரத்தின் பீஜாக்ஷரங்கள். ஒரு மந்திரத்தை குருமுகமாக உபதேசம் செய்துகொண்டு அதைச் சித்தி பண்ணுவதைப் போலவே, விதிக்கப்பட்ட நியமங்களுடன், வேதாக்ஷரங்களைக் கொஞ்சமும் உச்சாரணம் தவறாமல், ஸ்வரத்துடன் ஜபம் செய்வதனால் இம்மைப் பயனும் மறுமைப் பயனும் மோக்ஷ சித்தியும் ஏற்படுகின்றன என்பது ஆறங்கங்களின் கருத்து.

பொதுவாக எந்த எழுத்தும் முகத்திற்குள் ஒவ்வொரு ஸ்தானத்தில் வாயுவின் சேர்க்கையால் உதிக்கிறது. சரீரத்தில் எல்லா இடங்களிலும் நாடிகள் ஓடிக்கொண்டே இருக்கின்றன. உடற் பயிற்சி செய்பவர்கள், தண்டால் முதலிய அப்யாஸங்களை எண்ணிறந்த தடவைகள் ஒரே விதமாய்ப் பயின்று கொண்டிருந்தால் அவ்விடத்திலுள்ள தசைகளுக்குப் பலம் ஏற்படுகிறது. அவ்விதமே யோகிகள் சுவாஸத்தை ஒரே நாடியில் செலுத்தி, திருப்பித் திருப்பி அதே அப்யாஸம் செய்துவந்தால் அந் நாடிக்கு ஒரு சக்தி ஏற்படுகிறது. மனிதனுக்குச் சந்தோஷம், கோபம், துக்கம், சிரிப்பு முதலிய மன உணர்ச்சிகளில், ஒவ்வொன்றும்

ஏற்படும்போது முறையே சிலசில தனி நாடிகள் பாதிக்கப் பட்டு கண்ணீர், துடிப்பு, கண்சிவப்பு, அழுகை முதலிய ஸ்தூலதேகத்தின் வெளிவிகாரங்களுக்குக் காரண மாகின்றன.

இதிலிருந்து மனஉணர்ச்சிக்கும் ஸ்தூலதேக விகாரங் களுக்கும் ஸம்பந்தம் இருக்கிறது. ஒருவனுக்குத் தாங்க முடியாத ஆனந்தமோ, தாங்கமுடியாத துக்கமோ திடீரென்று ஏற்படும்போதும், ஒரே விஷயத்தில் தீவிர மான கவனம் இருக்கும்போதும் சற்றுச் சுவாஸம் நின்று போய்ப் பிறகு பெருமூச்சாக வருகிறது.

இதற்கு மாறாக உபதேசமுறைப்படி தெளிவான அறிவுடன் சில குறிப்பிட்ட நாடிகளின் வழியாக சுவாஸத் தைக் கட்டுப்படுத்தினால் மனமே வசப்பட்டு, பேருணர்ச்சி உண்டாகும். சில முறைகளில் உலகசித்திகளும் (Occult Powers) உண்டாகும். எந்த நாடிகளை எப்படிக் கட்டுப் படுத்தினால் பேரானந்தம் முதலிய உள்ளுணர்ச்சிகளின் அநுபவம் ஏற்படும் என்பதை உபதேசிப்பதே ஹடயோக முறை. இதே பயன்களை உத்தேசித்து மந்திரயோக முறையும் உபதேசிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு மந்திரத்தை உச்சரிப்பதனால் அவ்வவ்வக்ஷரங் களின் உற்பத்தி ஸ்தானங்களில், ஸம்பந்தப்பட்ட நாடி களில் அசைவு ஏற்படுகிறது. அதே மந்திராக்ஷரங்களைத் திருப்பித் திருப்பி உச்சரிப்பதால், சரீரப்பயிற்சி செய்ப வனுக்கு அந்தந்தத் தசைகளுக்குப் பலம் ஏற்படுவது போலும், சுவாஸபந்தத்தினால் நாடிகள் கட்டுப்படுவது போலும், அந்தந்த நாடிகள் பலத்தை அடைந்து சுவாஸ பந்தனத்தினால் கட்டுப்பட்டு விடுகின்றன.

எந்தெந்த நாடிகளைக் கட்டுப்படுத்தினால் மூளையின் எந்தெந்த பாகத்தைச் சம்பந்தித்து அதற்கேற்ற பயன் களை அளிக்க வல்லனவோ, அந்தந்த நாடிகளில் அசைவைக் கொடுக்கும் எழுத்துக்கள் இன்னின்னவை என்பதை விளக்குவதே மந்திரசாஸ்திரம்.

உலகத்திற்கு உண்மையான க்ஷேமத்தை அளிக்கும் அக்ஷரங்கள் எவையோ, அவைகளும், உலகத்திற்கு க்ஷேமகரமான அவைகளின் தொகுப்புமுறையும் அடங்கினவையே வேதாகமங்கள்.

ஐம்ப தெழுத்தே அனைத்து வேதங்களும்
ஐம்ப தெழுத்தே அனைத் தாகமங்களும்
ஐம்ப தெழுத்தின் அடைவை அறிந்தான்
ஐம்ப தெழுத்தே ஐந்தெழுத் தாமே.

—என்கிறார் திருமூலர் தம் திருமந்திரத்தில்.

வேதம் மந்திராக்ஷர சொரூபமானதால் அவ்வெழுத்துக்கள் கொஞ்சங்கூடத் தவறாமல் உச்சரிக்கப்பட்டாலொழிய உத்தேசித்த பயன் கிட்டாமல் போய்விடும். ஆதலால் உலகப் பழக்கத்திலுள்ள மொழிகளில் எழுத்துக்கள் பேசிப் பேசிச் சிதைந்து உருமாறுவது போல் மாறாமல், வேதாக்ஷரங்களை ஒரேவிதமாக எக்காலத்தும் ரக்ஷிப்பதற்காகவே சிக்ஷா என்னும் விசேஷமான முதல் அங்கம் வேதத்திற்கு ஏற்பட்டிருக்கிறது.

வேதமே ஈசுவர சொரூபமென்று நாயன்மார்களும், ஆழ்வார்களும் அடிக்கடி தம் பதிகங்களில் உலகோருக்கு நினைவூட்டுகிறார்கள்.

சிட்சையில் ஓர் அற்புதமான உபமானம் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு தாய்ப்புலி தன் குட்டிகளைப் பற்களால் கடித்துத் தூக்கிக்கொண்டு போகும்போது, அக்குட்டிகளுக்கும் காயம் ஏற்படாமலும், குட்டிகள் பற்களினின்று நழுவிக் கீழே விழாமலும் பயந்து தன் பற்களை எப்படி உபயோகிக்குமோ, அவ்விதமே வேதம் ஓதுபவன் மிக ஜாக்கிரதையாக வேதாக்ஷரங்களை உச்சரிக்கவேண்டும். லிகிதபாடகன் என்றால் புஸ்தகத்தைப் பார்த்து வாசிப்பவன். அவ்விதம் வேதத்தை வாசிப்பவன் 'வெகு அதமன்' என்று சிட்சை சிட்சிக்கிறது. இதைக்கொண்டே பண்டைத் தமிழ்நிகண்டுகள் வேதத்தை 'எழுதாக்கிளவி' என்னும் பெயரால் குறிக்கின்றன.

வேதாக்ஷரங்களை ரக்ஷிக்க சிட்சையானது வெகு சூட்சுமமான முறையைக் கையாளுகிறது. த்வனி, ஸ்தானம், கரணம், பிரயத்தினம், காலம், ஸ்வரம், இம் மாதிரியான அநேக நியமங்கள் அக்ஷரங்களை உச்சரிப்ப தில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அக்ஷரங்களை வாயில் ஒலிக்கும் முன்னரே மூலாதாரம், நாபி, ஹ்ருதயம், சிரம், இவ்விடங்களில் சூட்சுமமாக ஒலிக்கின்றன. தொல் காப்பியம் எழுத்ததிகாரம் பிறப்பியல் 20-21-ம் சூத்தி ரங்களில் எழுத்துக்களுக்கு மாத்திரைகளைக் கூறுமிடத்து, எழுத்துக்கள் **புறத்தே** இசைக்கும்போது ஏற்படும் மாத்திரைகளை மாத்திரம் கூறி, **அகத்தே** மூலாதாரம் முதலிய இடங்களில் சூட்சும வாயுவினால் இசைக்கப்படும் போது ஏற்படும் மாத்திரைகளுக்கு இங்கு தமிழிலக்க ணத்தில் உபயோகமில்லையாதலால் அதை ஈண்டுச் சொல்லாது விடுத்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. அம் மாத்திரைகளுக்கு அந்தணர்களுடைய மறையிலேயே உபயோகம் எனவும் சொல்லப்பட்டிருக்கிறது.

எல்லா வெழுத்தும் வெளிப்படக் கிளந்து
சொல்லிய பள்ளி யெழுதரு வளியிற்
பிறப்பொடு விடுவழி யுறழ்ச்சி வாரத்
தகத்தெழு வளியிசை யரிறப நாடி
யளபிற் கோட லந்தணர் மறைத்தே.

(தொல். எழுத். பிறப். 20.)

அஃதிவ ணுவலா தெழுந்துபுறத் திசைக்கும்
மெய்தெரி வளியிசை யளபுநுவன் றிசினே.

( ,, ,, ,, 21.)

இவ்விதம் அதிநுட்பமான கருத்துக்களை வெளியிடும் ஆறங்கங்களினால் ரக்ஷிக்கப்பட்ட வேதத்தின் விழுப் பொருளை, உத்தராயணமாம் தேவர்களின் பகலுக்கு முன்னரான வைகறையாம் மார்கழி மாதத்தின், வைகறை யில் தியானித்து, நீராடிப் பாவையைப் பாடி மும்மாரியும் அருள்மாரியும் பொழிய, நாம் பெருவாழ்வு வாழ்வோ மாக.

பாவை என்னும் சொல் மார்கழி மாதத்தில் காலையில் கன்னிகைகளால் அநுஷ்டிக்கப்படும் நோன்போடு சம்பந்தப்படுத்தப்பட்டு தொன்றுதொட்டு வழங்கி வருகிறது.

ஸ்ரீமத் பாகவதத்தில் தசமஸ்கந்தத்தில் கோகுல பிருந்தாவன பாவைகளாம் கோபிகள் எல்லோரும் ஹேமந்தருதுவின் முதல்மாதமான இம்மாதத்தில் குளிரில் விடியுமுன் நீராடி, பாவையாம் காத்தியாயனி தேவியைப் பூஜித்து தங்களுக்கு உத்தமமான பதி கிடைக்க வேண்டுமென்று பிரார்த்தித்துச் சுத்தமான பொங்கல் நைவேத்தியம் செய்து விரதநிஷ்டர்களாக இருந்தார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

பாவை நோன்பிற்கு இதுவே மூலம். இந்த நோன்பு கேரளமாம் மலையாளதேசம் முழுவதும் மார்கழி மாதம் முழுவதும் அதிகாலையில் இன்றும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. ஸ்ரீ ஆண்டாளும் காத்தியாயனியின் உடன் பிறந்தானை கண்ணபிரானை இந்நோன்பினால் வழிபடுகிறாள். திரு. மாணிக்கவாசகரும் காத்தியாயனியின் பதியான ஈச்வரனை வழிபடுகிறார். ஜீவர்கள் அனைவரும் 'பதியாம்' பரம்பொருளை அடைந்து பேரின்ப அநுபவ விஷயத்தில் பாவையர்கள் நிலையில் இருக்கிறார்கள். இவ்வநுபவமே ஆழ்வார்களுடையவும், திரு. மாணிக்க வாசகருடையவும் திருவாக்குகளில் மிளிர்கின்றது.

மக்கள் அடையவேண்டிய பேறுகளில் இதுவே பெரும்பேறு.

'எங்கும் திருவருள் பெற்று
இன்புறுவோம் எம்பாவாய்!'

* * * *

தலைவர் பிரசங்கம் முடிந்ததும் மகாநாட்டுக்குக் கிடைத்த 'ஆசிச்செய்திகள்' படிக்கப்பட்டன. முதலில் தருமபுர ஆதீனத்தின் பிரதிநிதியாக வந்த தருமபுரம் மடத்து கீழ்த்திசைக் கல்லூரி உதவித் தலைமை ஆசிரியர் திரு. தண்டபாணி தேசிகர் தருமபுரம் ஆதீன ஆசியைப் படித்துக் கொடுத்தார்.

* * *

தருமபுரம் ஆதீனம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக

ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் அனுப்புவித்த

# ஆசியுரை

மலைகளிற் சிறந்தது இமயம். சமயங்களிற் சிறந்தது வைதிகசமயம். இது மிகப்புராதனமானது. இதற்கு இருமொழிகளிலும் உள்ள வேதசிவாகமங்களும் தேவார திவ்யப்பிரபந்தம் ஆகிய திருமுறைகளும் முதனூல்கள். இவைகள் இறைவன் திருவாக்குகளே என்பதற்கு "எனதுரை தனதுரையாக" என்னும் ஞானவாக்கே பிரமாணம். அவை ஞானிகளாலேயன்றி ஏனையோரால் பொருள் உண்மை அறிய இயலாதன. அறிந்து உய்ய வேண்டிய பக்குவர்களின் பரிபாகத்திற்கு ஏற்பப் பொருள் விளக்கமும் ஞானமணமும் நல்குவன.

சத்தியுஞ் சிவமுமாகிய மாதொருபாகனார் சங்கர நாராயணராகக் காட்சியளிக்கும் கோலம், நாயன்மாராலும் ஆழ்வாராலும் போற்றப்பெற்றதே. ஆதலின் சைவம் வைணவம் இரண்டுமே வைதிகசமயச் சிகரத்தைச் சேர்வதற் குரிய இருமார்க்கங்கள். "யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகியாங்கே மாதொரு பாகனார்தாம் வருவர்" என்பது அந்த இரண்டு பாதைகளையும் ஒன்றுபடுத்தி உயர்வளிக்கும் உயர் சித்திவாக்கு. "அறிந்தோ அறியாமலோ ஒருவன் செய்யும் வழிபாடு என்னையே சாரும்" என்கிறார் கீதாசாரியார். அன்புநெறிக்கு இவ்விரண்டுமே இன்றியமையாதன என்பதற்குப் பல தலங்களிலும் சேர்ந்தேயிருக்கும் சிவாலய விஷ்ணுவாலயங் களே இன்றும் சான்று பகர்கின்றன.

"தன்கடன் அடியேனையுந் தாங்குதல், என் கடன் பணிசெய்து கிடப்பதே'' என இறைவழிபாடாகிய செந்நெறிவளர்த்த நம்நாடு, மேனாட்டு விஞ்ஞான ஆராய்ச்சி என்னும் புயலில் அகப்பட்டு முறைதவறிக் குறையுற்றதன் பயன் பசியும், பிணியும், பகையும், அச்சமுமே. இதனைக் காந்திப் பெரியார் முன்னமே அறிந்து போதித்தாரெனினும், அப்போதனை அப்போது மக்களுக்குப் பயன் தரவில்லை. எதுவும் 'பருவத்தாலன்றிப் பழா' ஆதலின் சத்துவபோதனைகள், ஷண்மதஸ்தாபகாசாரியாளராகிய ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசாரியசுவாமிகளவர்களது கருணை வசந்தன் வர, இன்று மலரத் தொடங்கி இருக்கின்றன. தெய்வீக ஞான மணம் மேன்மேலும் வீசுகின்றது.

வைதிக சமயத்தவர் யாவரும் இம் மகாநாட்டிற் கலந்துகொண்டு ஆன்மலாபம் பெறுதற்குரிய வழியைப் பின்பற்றி ஒழுகுவார்களாக! உலகமெல்லாம் இன்புறுவதாக!! ஆலவாயண்ணல் அருளால் மகாநாடு இனிது நிறைவேறுவதாக!!!

"ஞால நின்புகழேமிக வேண்டுந்
தென்ஆலவாயில் உறையும் எம்மாதியே!"

---

"திரு அருள் நோக்கம்
அக இருள் போக்கும்"

# திருவாவடுதுறை
## ஆதீனத்திலிருந்து அனுப்பப்பட்ட
### திரு. வீர. சிவசுப்ரமணியம்
பேசியதாவது:

**ஆசாரிய சுவாமிகட்கு அஞ்சலி.**

திருவாவடுதுறை ஆதீன குருமகாசந்நிதானம் ஆசிர்வாதம் செய்து இம்மாநாட்டில் பங்கு பற்றுமாறு என்னை அனுப்பியிருக்கிறது.

குருமகாசந்நிதானத்தின் திருவடிகளுக்கும், இங்கே நம்முன் கொலு வீற்றிருந்து, அருள் பாலிக்கும் ஆசாரிய சுவாமிகளின் திருவடிகளுக்கும், தலைமை தாங்கி மாநாட்டை நடாத்தும் அடிகளாரின் திருவடிகளுக்கும் வணக்கம் செலுத்துகிறேன்.

உலகம் எங்கணும் அமைதி நிலைகுலைந்திருக்கும் இவ்வேளையில், எப்போது மூன்றாம் யுத்தம் தோன்றி விடுமோ என்ற கலக்கம் தலைதூக்கி இருக்கும் இந்நேரத்தில், ஆசாரிய சுவாமிகள் இம்மாதிரி மாநாடு நடாத்தத் திருவருள் பாலித்திருப்பதை அறிந்ததும் பூரிப்படைந்தேன். தோள்கள் உயர்ந்தன, பெருமிதம் கொண்டேன்.

திருவாசகத்தைப்பற்றிப் பேசத் தொடங்குகிறேன். "தென்னவன் பிரமராயன்" என்ற பட்டத்தோடு, பாண்டியன் பேரவையிலே முதல் அமைச்சராகத் திகழ்ந்தவர் திருவாதவூரர். திருப்பெருந்துறையிலே, குருந்தமரத்தடியிலே ஆண்டவன் உருவத்திருமேனி கொண்டு, வாதவூரரைத் 'தலையளித்து ஆட்கொண்டான்,'

தான் அழுந்தி அறிந்தவற்றைத் தேனினும் இனிய தீஞ்சுவைச் சொற்களால் மாணிக்கவாசகர் என்ற திருவாதவூரர் முழக்கஞ் செய்ததே திருவாசகம்.

"திருவாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்துக்கும் உருகார்" என்பது பழமொழி.

'அமெரிக்க நாட்டிலே பிறந்தார், ஆக்ச்போர்ட் பல்கலைக் கழகத்திலே (Oxford University) பயின்றார், கிறிஸ்தவ சமயப் பணியாற்றத் திருநெல்வேலியில் சாயர் புறத்தைச் சார்ந்தார், டாக்டர் ஜி. யூ. போப் என்பார். வந்தார், கண்டார் தமிழின் வளத்தை, சிறப்பைக் கண்ணாரக் கண்டார், சுவையை நெஞ்சார உண்டார், தன்னை இழந்தார்.

தமது குருநாதர் இயேசு பெருமான் சிலுவையில் அறையப்பட்டபோது, "பரமண்டலத்திலுள்ள பிதாவே, அறியாமையால் இவர்கள் செய்கின்ற பாபத்தை மன்னிப்பீராக" என்று கூறினார்.

இந்தக் காட்சியை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறார் வள்ளுவப் பெருந்தகையார். எப்படி?

"ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்
பொறுத்தார்க்குப் பொன்றும் துணையும்புகழ்."

ஆம். யூதர்கள் ஒறுத்தனர். அன்று இன்பம் அடைந்ததுபோல இருந்தனர். ஆனால் இன்று பிற நாட்டினரால் யூதர்கள் விரட்டப்படுகின்றனர். இயேசு பெருமானோ சால்போடு பொறுத்தார். புகழோடு இன்றும் நிலவுகிறார்.

ஆ! திருவள்ளுவப் பெருந்தகை எவ்வளவு குறிப்போடு கூறுகிறார் என வியந்தார் போப்பையர். 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' எனத் திருக்குறளை, பல நாட்டினர் பேசும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தனர்.

அவ்வாறே திருவாசகத்தையும் மொழி பெயர்த்தருளினார்.

"ஒரு பென்னி (penny) பெறும் நாடகமாயினும் ஒரு பவுண் (pound) பெறும் முன்னுரை எழுதுவேன்'' என்பார் அண்மையில் மறைந்த மாப்பெரும் பேரறிஞர் பெர்னாட்ஷா. அவ்வாறே போப்பையர் திருவாசகத்துக்கு ஓர் செம்மையான முன்னுரை தீட்டியிருக்கிறார். அதில் இந்நாட்டு ஈடும் எடுப்பும் இல்லாத கொள்கையை, நான் பிறந்த தமிழ்நாடு—நீங்கள் பிறந்த தமிழ்நாடு—ஆசாரிய சுவாமிகள் அருள்வீசும் தமிழ்நாடு—The choicest product of the Dravidian intellect (தென்னாட்டாரின் செழுமையான கோட்பாடு) என்று வியந்து ஓதுகிறார் போப்பையர்.

ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே இந்தத் தமிழ்நாட்டுச் சீர்மிகு கொள்கை இந்தப் பாரதகண்ட முழுவதும் பரவி யிருந்தது என்ற உண்மை சிந்துநதி தீரத்திலே மொகஞ்சதாரோ, ஹரப்பா முதலிய இடங்களில் அகழ்ந்தெடுக்கப்பெற்ற புதைபொருள்களும், பொருநையாற்றங்கரையிலுள்ள ஆதிச்சநல்லூர் பரம்பிலும் அகழ்ந்தெடுக்கப்பட்ட புதைபொருள்களும் மறுக்கமுடியாதபடி சான்று பகருகின்றது. *

---

* இந்தியாவின் சமய நாகரீகம் அன்றும் இன்றும் ஒன்றே. ஹரப்பா, மொகஞ்சதாரோ என்னும் சிந்து நாட்டுப் புதைந்த நகரங்களைத் தோண்டி உலகங்களுக்கு வெளிப்படுத்திய இந்தியன் ஆர்க்யலாஜிகல் டிபார்ட்மெண்ட் டைரக்டர் துரை அவர்கள் "மொகஞ்சதாரோ அண்ட் இந்தியன் சிவிலிசேஷன்" என்னும் ஆங்கில நூலில் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார். "Their (the ancient inhabitants of the Indus valley) religion is characteristically Indian, as hardly distinguishable from still living Hinduism or at least that aspect of it which is bound up with animism and the cults of Siva and Mother Goddess, still the two most potent forces in popular worship" விஷ்ணுவின் அதிஷ்டானமான சாலக்ராமமாக பாவிக்கக் கூடியதாகவும், சிவசக்தி சுவரூபமான சிவலிங்க ஸ்வரூபமாகவும் பாவிக்கக் கூடியதாகவும் உள்ள இரண்டு பொருள்களைக் கண்டெடுத்ததாக மார்ஷல் துரை தன் புத்தகத்தில் 59 வது

இந்திய சர்க்கார் அகழ் பொருள் ஆராய்ச்சித் துறைத் தலைவர் சர். ஜான் மார்ஷல் (Sir John Marshall, Head of the Archaeological Dept. Govt. of India) "It is thirty thousand years old and yet, it is still living. அது முப்பதாயிரம் ஆண்டுகளாகப் பழமையானாலும், இன்னும் உயிர்ப்போடு விளங்குகிறது" என மார்தட்டுகிறார் என்றால் நமது நாட்டின் கோட்பாட்டின் செம்மைதான் என்னே!

உலகெலாம் வளர்ந்து ஓதற்கு மொழி பெயர்த்துத் தந்ததற்காக டாக்டர் ஜி. யு. போப்பை இப்பொழுது நினைக்கிறேன் இல்லை.

ஆனால் "நான் இறந்ததும், எனது கல்லறையில் தாம்பிரவருணி ஆற்று மணலைப் போட்டு, அந்தத் தண்ணீரை ஊற்றி, மூடி, அதில் 'அமெரிக்காவில்

---

பக்கத்தில் விளக்கியிருக்கிறார். "சிவநாபம்" என்னும் சாளக்ராமத்தில் விஷ்ணுபக்தர்கள் விஷ்ணுவையும் சிவபக்தர்கள் சிவசக்தியையும் பூஜிக்கிறார்கள். [சாலக்ராமங்களில் அநேக மூர்த்தங்களில் சிவநாபம் என்ற ஒரு மூர்த்தமுண்டு] இந்த சாலக்ராமத்தையே Stein (ஸ்டின்) என்னும் புதைபொருள் ஆராய்ச்சியாளர் பெலுசிஸ்தானத்தில் கண்டு எடுத்ததாகத் தெரிகிறது.

நம் நாட்டில் மொழி தொடங்கிய காலம் முதலே திருமாலையும் சிவபெருமானையும் பெருமைப்படுத்தி வழிபட்டு உய்ந்து வந்துள்ளோமென்பதற்கு நம் தமிழ்நாட்டில் வழங்கும் நக்ஷத்திரங்களின் பெயரமைப்பே அத்தாக்ஷி. அசுவதி முதல் ரேவதி வரையிலுள்ள 27 நக்ஷத்திரங்களில் "திரு" என்னும் அருள் அடைமொழி "திருவாதிரை, திருவோணம்" இவ்விரு நக்ஷத்திரங்களுக்கே உள்ளது. யஜுர் வேதத்தில் 4 வது காண்டத்தில் 4 வது ப்ரச்னத்தில் 27 நக்ஷத்திரங்களுக்கும் உரித்தான தேவதைகள் கூறப்பட்டிருக்கின்றன. ஆதிரைக்கும், ஓணத்திற்கும் மாத்திரம் "அரன் நாரணன் நாமம்" என்னும் ஆழ்வார் பாடலில் ஒரே பரம்பொருளின் இரு மூர்த்தங்களான சிவபெருமானையும் திருமாலையும் முறையே தெய்வங்களாக கூறப்பட்டிருக்கிறது. இவ்வேத தத்துவத்தை ஒட்டியே நம் தமிழ் நாட்டில் இவ்விரு தெய்வீக நக்ஷத்திரங்களை "திரு" என்னும் அடைமொழியுடன் தொன்று தொட்டு வழங்கி வருகிறோம். சிவபெருமானையும் திருமாலையும் நாம் சமமாக வழிபட்டு வருவதற்கு இதுவே பெரும் அத்தாக்ஷி.

பிறந்தவன், ஆக்ஸ்போர்டில் பயின்றவன், திருநெல்வேலி யில் சாயர்புரத்தில் கிறிஸ்தவப்பணி புரிந்தவன்''; என எழுதவேண்டாம். ஆனால் '**தமிழ்மாணவன்**' என்று தனது கல்லறையில் பொறிக்கப்படல் வேண்டுமென இறுதி உறுதிப்பாடு (Last will) எழுதி அவ்வாறே இன்றும் அந்தக் கல்லறை காட்சி தருகிறதென்றால், என்னே போப்பையரின் **தமிழ்'வெறி'**.

நெஞ்சில் கைவைத்து நமது மொழிப் பற்று எங்கே எனத் தேடி உணர வேண்டாமா?

போப்பையரைக் கொள்ளை கொண்ட திருவாசகத்தின் மாண்பு என்னே?

இறைவனே, தில்லைக் கூத்தனே, மணிவாசகரிடம் நேரில்வந்து, விருப்ப, மணிவாசகர் சொல்லச் சொல்ல, கூத்தப்பெருமான் தனது கையாலேயே குறிப்பெடுத் தான், சிற்றம்பலமுடையான் என்று கைச்சாத்தும் இட்டான் என்றால் அதன் அருமைப்பாடு என்னே?

மாணிக்கவாசகரது மற்றொரு நூலாகிய திருக் கோவையாரைச் சொல்க எனக் கேட்கவந்த இறைவன் "பாவை பாடிய வாயால் கோவை பாடுக'' எனப் பிற ஒரு பாட்டுக்கும் இல்லாத ஏற்றம் பாவைக்கு உண்டு என விதந்தோதுவாரானால் பாவையின் ஏற்றந்தான் என்னே?

சமயாசாரியார்-மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர் அப்பர், சுந்தரர் ஆகிய நால்வரில் மாணிக்கவாசகப் பெருமானுக்கே இந்த மார்கழித் திங்களில் பத்துநாட்கள் திருவிழா நடைபெறுகிறது.

அந்தப் பத்து நாட்களிலும் திருஎம்பாவைதான் பாடவேண்டுமென்பது மரபு. அது இன்றும் நடை பெற்று வருகிறது.

இங்கே திருஎம்பாவையோடு தொடங்கித் திருப் பாவையில் நிற்கிறோம்.

நாயன்மார்களும், ஆழ்வார்களும் நாம் எல்லோரும் உய்ய, உலகத்து உயிரனைத்தும் உய்ய, அழகு ஒழுகும் தமிழினை எளிமையும் இனிமையும் சிறக்கப் பாடினார்கள்.

சிவநேயச் செல்வர் வேறு, திருமாலடியார் வேறு அல்ல.

இந்த நாட்டு அமைப்பே, சைவமும் வைணவமும் வேறு அல்ல, ஒன்றுக்கொன்று இணக்கம் எனக் காட்டுகிறது.

திருநீறும், திருமண்ணும், முடிசார்ந்த மன்னரும் முடிவில் ஒரு பிடி சாம்பராய் ஆவர் எனவும், வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம் எனவும் யாக்கை நிலையாமையை உணர்த்துகின்றன. அந்த உண்மையை உணரவே நாள்தோறும் திருநீறு அணிகிறோம். திருமண் தரிக்கிறோம்.

தில்லையில் கூத்தனைக் கும்பிடுகிறோம், உடனே கோவிந்தராஜனையும் கும்பிடுகிறோம்.

திரு அரங்கத்து அம்மானைச் சேவிக்கிறோம், திருவானைக்காவில் தொழுகிறோம்.

சீர் வைகுண்டம் சிரமிசைக் கொள்கிறோம், கைலாசப் புரம் கை குவிக்கிறோம்.

பள்ளிக்கொண்ட பெருமான் Static force. ஆடும் பிரான் Dynamic force. ஒன்று Negative எனும் ஆற்றல். மற்றையது Positive ஆகும் ஆற்றல். இரண்டும் இசைந்து இணங்கினால்தான் வாழ்வு, வளர்ச்சி, ஒளி.

அவ்வாறு இணங்க ஒருமைப் பாட்டுடன் வாழ்வு சிறக்கவே இந்த நேரத்தில் திருஎம்பாவை, திருப்பாவை ஒலி முழக்கம் செய்யப்படுகிறது.

ஒரு கல்வித்துறை அதிகாரி, "நாங்களெல்லாம் 'க, கா' என்று படித்தோம், ஆனால் இன்று, 'கா, க' என்கிறார்கள். அதாவது நாங்கள் கடவுளை நினைத்துக் காப்பிக் குடித்தோம். ஆனால் இப்பொழுது காப்பி குடித்தபின், கடவுளைப்பற்றி நினைக்கலாமா என்ற எண்ணம்" என்று காலத்தின் கோலத்தை நகைச்சுவையோடு விளக்கினார்.

பழங் காலத்திலே வைகறைப் போதிலே எழுந்தால் திருவெம்பாவை முழக்கமும், திருப்பாவை முழக்கமும் கேட்போம். இன்றோ காஷ்மீர் கருங் கம்பளிப் போர்வையைப் போட்டு மூடிக்கொண்டு, விடியவில்லையோ? எனக் கேட்கக் கேட்கிறோம்.

"மாநீ இதென்ன உறக்கமோ? வாய் திறவாய்" என முழக்கஞ் செய்கிறார் மணிவாசகனார்.

"உலகளந்த உத்தமனைப் பாடி ஆட அழைக்கிறாள்" ஆண்டாள்.

கோகினூரைப்பற்றிக் கேட்டிருக்கிறோம். பார்த்ததில்லை. கோகினூர் எங்கே? கடைகளில் காணும் போலி எங்கே?

சூடிக் கொடுத்த சுடர்க் கொடியின் தெய்வீகக் காதல் எங்கே? 'ரெயில்வே ஸ்டேஷன்' களில் விற்கும் 8-அணாக் 'காதல்' எங்கே?

மற்ற நாடுகளில் குண்டுமழை கொட்டிய காலத்தில், இந்த நாட்டில் எங்கெங்கு நோக்கினும் கும்பாபிஷேகம்.

இது தெய்வபக்தி நிறைந்த நாடு. அருளாளர் திகழும் நாடு. ஜீவன் முக்தர்கள் திரியும் நாடு.

கன்னியாகுமரி தொட்டு காஷ்மீரம் வரை எத்தனை மருத்துவச் சாலைகள், நோய்வாய்ப்பட்டு, கை கால்

இழந்து, மருந்து கிடைக்கவில்லையே என ஏங்கி, மருத்துவச் சாலைகளில் திண்டாடித் திகைக்காமல், இங்கே வீற்றிருந்து திருமுறை-திருவாய்மொழி, திரு எம்பாவை, திருப்பாவை, சுவையை மாந்தி, இறுமாந்து இருக்கும் வாய்ப்பை அமைத்த ஆண்டவனுக்கு அஞ்சலி செய்ய வேண்டாமா?

மாதேவன் வார்கழலை, மாதவன் பொன்னடியைப் போற்றுங்கள்; பரவிப் பணியுங்கள்.

எம்பெருமானை, எந்தை பிரானைச் சேவித்து, "அஞ்சல் நெஞ்சே! அஞ்சுவதுமில்லை, அஞ்சவருவதுமில்லை" என வீறுடன் விளங்குவோமாக.

ஆங்காங்குள்ள புலவர்மணிகளை ஒன்று சேர்த்து, கோத்து, அணி செய்து திகழும் பெரியவாள் திருவடிகளுக்கு நன்றியுணர்வோடு அஞ்சலி செய்வோமாக.

இம் மாநாட்டு முழக்கம் செழித்து, நாடெல்லாம் பரவி, நல்லுணர்வு தோன்றுமாக. நிலைபேறுடைய அமைதி உலகெங்கணும் என்றும் நின்று நிலவுமாக.

மூலை இருந்த என்னை முற்றத்தே கொடுவந்த திருவாவடுதுறை மகாசந்நிதானத்தின் திருவடிகளுக்கும், ஏற்று அருள் பாலித்த ஆசாரியாள் திருவடிகளுக்கும், வீற்றிருந்து செவிமடுத்து, முகமலர்ந்து, ஊக்குவித்த மெய்யடியார்களுக்கும், இத்தனைக்கும் ஊடாடி நின்று இயக்கிய திருவடிகளுக்கும் உளமார்ந்த, உரைசெழித்த, உடல்பணிந்த அஞ்சலி.

**'செய்ய திருத் தொண்டின் நெறி வாழி!'**

"ஜனம் நீதிபதி ராஜமன்னார்" முதல் பல பேரறிஞர்கள் மகாநாட்டுக்கு ஆசிச்செய்தி அனுப்பினர்.

P. V. ராஜமன்னார்,
ஸ்ரீ சி. ராஜகோபாலாசாரியார்,
ஸ்ரீ M. R. ஜெயகர்,
திரு R. ராமநாதன் செட்டியார்,
ஸ்ரீ M. அனந்தசயனம் அய்யங்கார்,
ஸ்ரீ C. P. ராமஸ்வாமி அய்யர்,
ஸ்ரீ உ. வே. V. V. ஸ்ரீநிவாச அய்யங்கார்,
டாக்டர் திரு A. லக்ஷ்மணஸ்வாமி முதலியார்,
திரு S. G. மணவாளராமானுஜம்,
திரு T. M. நாராயணசாமி பிள்ளை,
திரு T. K. சிதம்பரநாத முதலியார்,
ஸ்ரீ D. ராமஸ்வாமி அய்யங்கார்,
ஸ்ரீ N. ரகுநாத அய்யர்,
திரு T. K. சங்கரவடிவேலு,
ஸர்தார். திரு வேதரத்னம்,
திரு M. கந்தஸ்வாமி (மேட்டுப்பாளையம்),
ஸ்ரீ R. அளகிரி அய்யங்கார் (சேலம்),
திரு த. ச. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை
(திருவாவடுதுறை).
ஸ்ரீ S. A. சுந்தரேசன் (ஆனதாண்டவபுரம்),
திரு C. S. நஞ்சப்பா (சென்னிமலை)
ஹாதத்த பக்தஜன ஸபை, சென்னை.

---

* இவ்வாசிச் செய்திகள் இறுதியில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

ஆசிச் செய்திகள் முடிந்த பிறகு சென்னை, மயிலாப்பூர் ஸ்ரீ K. பாலஸுப்ரமணிய அய்யர் அவர்கள் மகாநாட்டின் நோக்கங்களைக் குறித்துச் சில வார்த்தைகள் பேசினார். அவர் பேசியதன் சாராம்சமாவது:—

* * *

## தர்ம ரக்ஷாமணி ஸ்ரீ K. பாலஸுப்ரமணிய ஐயர் கூறிய சில வார்த்தைகள்:—

### மகாநாட்டின் நோக்கங்கள்

"அந்தணர் வேள்வியு மருமறை முழங்கியுஞ்
செந்தமிழ்க் கீதமுஞ் சீரினால் வளர்தர
பந்தணை மெல்விரலாளொடு பயில் இடம்
மந்தம் வந்துலவு சீர் மழபாடியே:"

இந்தத் தேவாரத்தில் அப்பர் சுவாமிகள் திருமழபாடி க்ஷேத்திரத்தில் எப்பொழுதும் வேதபாராயணமும் யாகங்கள் செய்யும் அந்தணர்களின் வேத கோஷங்களும் தெய்வத் தமிழ்த்தோத்திரங்களும் நிறைந்திருந்தன என்று சொல்லுகிறார். அவ்வண்ணமே இப்பொழுது நம்நாடெங் கும் வேதகோஷமும் தேவாரம் திருவாசகம் திவ்யப் ப்ரபந்தம் முதலிய தமிழ்த் தோத்திரப்பாடல்களும் பரவ வேண்டும் என்னும் நோக்கத்துடனேயே ஸ்ரீ பரமா சார்யாளின் அனுக்கிரஹத்தை முன்னிட்டு இம்மகாநாடு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இம்மகாநாடு வெற்றிகரமாய் முடிவு பெற வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக்கொள்ளுகிறேன்.

ஸ்ரீ பாலஸுப்ரமண்ய அய்யர் பேசி முடிந்தபின், திருவிடைமருதூர் திரு. சிதம்பர தேசிகரால் திருவெம் பாவை முதல்பத்து பாராயணம் செய்யப் பட்டது. இத்துடன் 11 மணிக்குக் காலை நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

மறுபடி மாலை 3 மணிக்கு மகாநாடு ஆரம்ப மாயிற்று. திருவெம்பாவையின் முதல் பத்துப் பாட்டல்

களுக்குக் கருத்து விளக்கம் தருமபுரம் ஆதீனவித்வான் திரு. **தண்டபாணி தேசிகரால்** கூறப்பட்டது.

**3-30** முதல் 4 மணி வரையில் திருவெம்பாவை முதல் பத்துப் பாடல்கள் தருமபுரம் ஆதீனம் திரு **வேலாயுத ஓதுவார்** அவர்களால் பாராயணம் செய்யப் பட்டது. இத்துடன் மகாநாட்டின் மாலைக் கூட்டம் கலைந்தது.

சாயங்கால அனுஷ்டானங்களுக்குப் பிறகு 7 மணிக்கு மறுபடியும் மகாநாடு கூடியது.

7 மணி முதல் 8 மணி வரையில் திருவையாறு அரசர்கல்லூரி தலைமைத் தமிழாசிரியர் திரு. இராம. கோவிந்தசாமி பிள்ளை அவர்களால் திருஞானசம்பந்தரின் திருவாக்கின் (1 - 3 திருமுறைகளின்) சிறப்புச் சொல்லப்பட்டது.

---

# திருஞான சம்பந்தர் வாக்கின் சிறப்பு

சொற்பொழிவாளர்:
திரு. இராம. கோவிந்தசாமி பிள்ளை,
தலைமைத் தமிழ்ப் பேராசிரியர்
அரசர்கல்லூரி, திருவையாறு.

[1 - 3 - திருமுறை]

## விநாயகர் துதி.

"திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத் துப் பிள்ளையைப் பேணுவாம்.

## தேவாரம்.

கங்காளர் கயிலாய மலையாளர் கணப்பேராளர் மங்கை
பங்காளர் திரிசூலப் படையாளர் விடையாளர் பயிலுங்கோயில்
கொங்காளப் பொழினுழைந்து கூர்வாயா லிறகுலர்த்திக் [கூடதனிங்கி
செங்கானல் வெண்குருகு பைங்கானல் இரைதேரும் திருவையாறே

## ஆசார்ய சுவாமிகள்.

வருண நன்குறு மறையவர் புகழ்வானவனே சரணம்
கருணை யாருல கக்குருபரா காரணனே சரணம்
பொருண யந்தரு மறைபுகன் றருள் புண்ணியனே சரணம்
தருண சந்திரசேக ரேந்திர சரஸ்வதியே சரணம்.

## திருஞானசம்பந்தர்.

வேத நெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க
பூத பரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீத வளவயற் புகலித் திருஞானசம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

பொருவிடையேறும் புண்ணியமூர்த்தி கோயில் கொண்டருளும் திருவிடைமருதூரெனும் இத்திவ்ய திருப்பதியின்கண், பரம கருணாநிதியாகிய உலோகாசார்ய

சுவாமிகள் ஆக்ஞையால் சிகாழும் இம்மாநாட்டில் அவைத் தலைமை தாங்கியருளும் அடிகளார்க்கும், இவ்வவைக்கண் குழுமியுள்ள அனைவருக்கும் அடியேனுடைய வணக்க மூரித்தாகுக. உறுபெருந் தவத்தால் மறுவறு குரவராய் அறுபத்தெட்டாம் பட்டத்தமர்ந்தருள் சந்திரசேகரேந்திர சரஸ்வதியாகிய பரமாசார்ய சுவாமிகளின் பாதாரவிந்தங் களைப் பணிந்து, திருஞானசம்பந்தர் வாக்கின் சிறப்பு என்னும் பொருள்பற்றிச் சிற்றறிவிற் கெட்டியவரை சில கூறுவேன். நல்லன கொண்டு அல்லன விடுத்தருளுமாறு உங்கள் அனைவரையும் வேண்டிக்கொள்கிறேன்.

பெரியோர்களே! 'திருஞானசம்பந்தர் வாக்கின் சிறப்பு' என்பதற்கு, சீகாழி யென்னும் பெரும்பதியிற் றிருவவதாரம் புரிந்தருளிய திருஞான சம்பந்தப் பெருமா னுருடைய தெய்வ அருள்வாக்கின் மேன்மை எனப் பொருள் கோடல் வேண்டும். வாக்கு, அருள்வாக்கு, தெய்வ வாக்கு, உபதேச வாக்கு, மந்திர வாக்கு, ஞான வாக்கு, வேதவாக்கு எனப் பல அடை மொழிகளை (விசேடண பதத்தை) அவாவியுள்ளது, வாய்மொழி, வார்த்தை, சொல், கூற்று, வசனம், வாக்கு என்பன பரியாய நாமங்களாகும். . சிவபாத விருதயராகிய தன் தந்தையார், தடாகக் கரையிலிருத்திவிட்டு, நீராடு முறைப் படி நீராடிக் கொண்டிருக்கையில் சிவஞானக் குழவியாகிய பிள்ளையார் அழ அது பொறுதவராகிய திருத்தோணி யப்பர் அம்மையாரோடும் அணைந்தருளி சிவஞானப்பாலைத் தந்தருள அதுவுண்டஞான்று எழுந்த வாக்கே யீண்டு கொள்ளத்தகும்.

"சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினி லோங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந் தா ரந்நிலையில்."

என்ற பெரிய புராணச் செய்யுளைக் கொண்டு துணியக் கிடக்கின்றது. சிவஞான சம்பந்தராயினர்; பவஞானம் கெடுப்பான் வேண்டி; இப்பெருமானர்;

பிரமனூர் வேணுபுரம் புகலிபெரு வெங்குருநீர்ப்
பொருவில் திருத்தோணிபுரம் பூந்தராய் சிரபுரமுன்
வருபுறவஞ் சண்பைநகர் வளர்காழி கொச்சைவயம்
பரவுதிருக் கழுமலமாம் பன்னிரண்டு திருப்பெயர்த்தால்.

இப்பன்னிரண்டு திருப் பெயர்களையுடைய சீகாழி யெனும் புண்ணியப் பதியில், குருபத்தி, இலிங்க பத்தி, சங்கம பத்தியெனும் மூவகைப் பத்தியும் தழைப்புறுமாறு திருத்தோணியப்பரும், பிரமபுரீசரும், சட்டையப்பரும் குருஇலிங்க சங்கம வடிவங்களாக வெழுந்தருளிய இறைவனருட் பெருக்கால் ஏழாம் நூற்றாண்டு சுமார் ஆயிரத்து மூந்நூறாண்டுகட்கு முன் சிவபாதவிருதயர் பகவதியார் ஆகிய இவர்கள் செய் சிவபுண்ணிய மேலீட்டால் அவர் தமக்குப் புத்திரராக அவதரித்தருளினார் திருஞான சம்பந்தப் பெருமான்.

இப் பெருமானார்க்கு ஆளுடைய பிள்ளையார், பாலறுவாயர், பரசமய கோளரி, கவுணியர்கோன், முத்தமிழ் விரகர், தெய்வஞானக் கன்று, சண்பைஞான சம்பந்தன், அருமறை ஞானசம்பந்தன், சிவம் பெருக்கும் பிள்ளையார், திருமறையுஞ் செந்தமிழும் சிறக்கு நாயகன், புகலிப் பிள்ளையார், சிறிய பெருந்தகையார், ஞான போனகர், அருங்கலைக் கோன், இயலிசைத் தலைவனார், இரபுரச் செம்மலார். நிறைமறை வேந்தர், தோணிபுரத் தோன்றலார், வெங்குரு வாழ்வேந்தர், சிவஞானப் பிள்ளையார், வேதவாயர், மன்னிய சைவ நீதி மாமறைச் சிறுவர் எனப் பல திருப் பெயர்கள் உள,

சேக்கிழார் பெருமான்,

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர்மதிக் கொழுந்தை
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்குங்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.

எனப் போற்றுதலை நாம் போற்றிக் கொள்வோமாக.

"**பாலை நெய்தலாக்கியதும்**, பாம்பொழியப் பாடியதும்
காலனையன் றேவிக் கராங்கொண்ட—பாலன்
மரணந் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நந்தங்
கரணம்போ லல் லாமைகாண்."

என்பது திருக்களிற்றுப் படியார்.

திருநனிபள்ளி: இத்தலமே பாலை நெய்தலாக்கிய அற்புதப் பதிகம் பெற்றதாகும். இதுவே திருஞான சம்பந்தப் பெருமானார்க்கு அம்மான் அகமாகும். அகத்தியருக்குத் திருமணங் காட்டியருளியதுமாம்.

1. பாலை நெய்தலாக்கியது, என்பைப் பெண்ணாக்கியது, ஆண்பனையைப் பெண்பனை பாக்கியது, திருமறைக் காட்டில் மறைக்கதவம் பூட்டியது (மூடினது), திரு மருகலில் அரா விடம் போக்கித் திருமணம் முடித்தது, வையைப் புனலில் ஏடெதிர் ஏறச் செய்தது, கனலிலிட்ட வேடு பச்சென்றிருக்கப் பாடினது, திருவீழிமிழலையிற் படிக்காசு பெற்றது, ஆவடுதுறையில் ஆயிரம் பொன் பெற்றது, புத்தனார் தலைதத்தெனத் தத்தியது, கொடி மாடச் செங்குன்றூரில் அடியார்கள் தம் சுர நோய் தீர்த்தருளினை, பாண்டியன் சுரநோய் தீர்த்துக் கூன் நிமிர்த்து நின்ற சீர் நெடுமாறனாராக்கினது - முதலிய பத் தொன்பது (அற்புதங்கள்) சிறப்புக்களை யுடைத்தாகும் இப்பெருமானாருடைய தேவாரங்கள். இவற்றிற்கு அற் புதத் தேவாரங்கள் எனப் பெயர் குறிப்பார்கள்.

இச் சிறப்புக்களோடு கூடியவை முதன் மூன்று திரு முறைகளாகும். அற்புதம்-ஞானம், விம்மிதம், வியப்பு, ஆச்சரியம் எனப் பொருள்படும்.

இவ்வாறுடைய பிள்ளையார், ஈழநாடு, கொங்குநாடு, சோழநாடு, பாண்டியநாடு, துளுவநாடு, தொண்டைநாடு, மலைநாடு, நடுநாடு, வடநாடு, ஆகிய ஒன்பது நாடுகளிலு முள்ள தலங்களிற் சென்று 'மூர்த்தி தலம் தீர்த்தம் முறை யாய்த் தொடங்கினர்க்கு ஓர் வார்த்தை சொல்லச் சற்

குருவும் வாய்க்கு மெனலே' வாய்மையாக்குவான் வேண்டி, வணங்கிப் பாடி வதிந்துளார்க ளென்பது புலனாகின்றது.

ஆளுடையபிள்ளையார், ஆளுடையவரசு, ஆளுடைய நம்பி, (திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், திருநாவலூரர்) (சுந்தரர்) ஆகிய மூவரும் பாடியருளிய தலங்கள் நாற்பத்து நான்காகும் (44). திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் மாத்திரம் பாடியருளிய தலங்கள் ஐம்பத்திரண்டாகும் (52). ஞானசம்பந்தரும் சுந்தரரும் பாடியருளியவை பதின்மூன்றாகும் (13). திருஞானசம்பந்தர் மாத்திரம் பாடியருளியவை (தலங்கள்) நூற்றுப்பத்தாகும் (110). ஆகவே இருநூற்றுப்பத்தொன்பது திவ்ய தலங்கள் பாடியுள்ளார்களென்பது தெரிகின்றது. முதற்றிருமுறையில் நூற்று முப்பத்தாறு பதிகங்களும் இரண்டாந் திருமுறையில் நூற்றிருபத்தொரு பதிகங்களும் மூன்றாந் திருமுறையில் நூற்றிருபத்தாறு பதிகங்களும் ஆக முந்நூற்றெண்பத்து மூன்று பதிகங்களாகும். சம்பந்தர் தேவாரத்தின்கண்

(1) முதற்றிரு முறையில் பண்நட்டபாடை, தக்கராகம், பழந்தக்க ராகம், தக்கேசி, குறிஞ்சி, வியாழக் குறிஞ்சி, மேகராகக் குறிஞ்சி, யாழ்முரி (யாழ்மூரி) ஆகிய பண்களும்,

(2) இரண்டாந் திருமுறையில் பண் இந்தளம், சீகாமரம், காந்தாரம், பியந்தைக் காந்தாரம், நட்டராகம், செவ்வழி ஆகிய பண்களும்

(3) மூன்றாந்திருமுறையில் காந்தார பஞ்சமம், கொல்லி, கௌசிகம், பஞ்சமம், சாதாரி, பழம்பஞ்சுரம், புறநீர்மை, அந்தாளிக் குறிஞ்சி, கொல்லிக்கௌவாணம் (திருவிராகம் என்பது ஒன்று) ஆகிய பண்களுமாக அமைக்கப் பெற்றுள்ளன. இப் பண்களைத் தெரிந்து கொண்டாலன்றி இஃது இன்ன திருமுறையிலுள்ளதென்பது தெரியவாராது.

இத்திருஞான சம்பந்தர்:—வேதாகமங்களைப் பல படியாகச் சிறப்பித்துள்ளார்கள். அவற்றுட் சில வருமாறு.

அந்தணர் வேள்வியும் அருமறைத் துழனியுஞ்
செந்தமிழ்க் கீதமுஞ் சீரினால் வளர்தரப்
பந்தணை மெல்விர லாளொடும் பயில்விடம்
மந்தம் வந்துலவு சீர் மாமழபாடியே. (திருமழபாடி.)

"ஈறாய் முதலொன்றாயிரு பெண்ணாண் குண மூன்றாய்
மாறா மறை நான்காய் வரு பூதமவை யைந்தாய்
ஆறார் சுவை யேழோசையோ டெட்டுத் திசைதானாய்
வேறாய் உடனானிடம் வீழிம்மிழலையே. (திருவீழிமிழலை)

ஆகமத்தொடு மந்திரங்க ளமைந்த சங்கத பங்கமாப்
பாகதத்தொடிரைத்துரைத்த சனங்கள் வெட்குற பக்கமா
மாகதக்கிரிபோல் திரிந்து புரிந்து நின்றுணும் மாசுசேர்
ஆகதர்க் கெளி யேனலேன் திருவாலவாயர னிற்கவே.
(திருவாலவாய்)

என்பன வாதியனவாம்.

கணபதி முதலிய இறைவன் வழிபாட்டினை இயலுறப் பாடுவார்:

கணபதி:

பிடியத னுருவுமை கொள மிகுகரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே. (திருவலிவலம்)

சண்டேசுரர்:

பீரடைந்த பாலதாட்டப் பேணாதவன் றாதை
வேரடைந்து பாய்ந்ததாளை வேர்த்தடிந்தான் றனக்குத்
தாரடைந்த மாலை சூட்டித் தலைமை வகுத்த தென்னே
சீரடைந்த கோயில் மல்கு சேய்ஞலூர்மேயவனே.
(சேய்ஞலூர்)

கண்ணப்பர்:

வேயனைய தோளுமையோர் பாகமதுவாக விடையேறி சடைமேல்
தூயமதி சூடிசுடு காடில்நட மாடுமலை தன்னை வினவில்
வாய்கலச மாகவழி பாடுசெயும் வேடன்மல ராகுநயனம்
காய்கணையி னாலிடந் தீசனடி கூடுகாளத்திமலையே.
(திருக்காளத்தி)

இங்ஙனமாக வடியார்களையுஞ் சிறப்பித்தோதி யிருத்தலையும் பார்த்தல் வேண்டும்.

இனியிப் பெருமான், மூர்த்தி தலம் தீர்த்தமெனு மூன்றையுஞ் சிறப்பிக்கும் சிறப்பினையாய்வோமாக.

பேயடையா பிரிவெய்தும்
பிள்ளையினோடுள்ள நினைவு
ஆயினவே வரம் பெறுவர்
ஐயுற வேண்டாவொன்றும்
வேயன தோள் உமைபங்கன்
வெண்காட்டு முக்குளநீர்
தோய் வினையாரவர் தம்மைத்
தோயாவாந் தீவினையே.

(திருவெண்காடு)

தம் மீது ஆணையிட்டருளியது போன்று வேறெந்த ஆசாரியார்களும் கூறவில்லை யென்பது துணியல் வேண்டும். அங்ஙனமாக, காழிவரு கவுணியர் தம் குல தீபம் ஒளிவிடும் இடம் நான்காகும்.

அவையாவன :

கடல்வரை யோதமல்கு கழிகானல்பானல்
கமழ்காழியென்று கருதப்
படுபொருளாறு நாலும் உளதாக வைத்த
பதியான ஞானமுனிவன்
இடுபறை யொன்ற வத்தர் பியன்மேலிருந்தி
னிசையாலுரைத்த பனுவல்
நடுவிருளாடுமெந்தை நனிபள்ளி யுள்க
வினைகெடுதல் ஆணைநமதே (1)

(2-ம் திருமுறை)

தேனமர் பொழில் கொளாலை விளைசெந்நெல்
துன்னிவளர் செம்பொன் எங்குஞ்திகழ
நான்முக னாதியாய பிரமாபுரத்து
மறைஞான ஞானமுனிவன்
தானுறு கோளுநாளும் அடியாரை
வந்து நலியாத வண்ணமுரைசெய்
ஆனசொல்மாலை யோதும் அடியார்கள்
வானில் அரசாள்வர் ஆணைநமதே. (2)

(2-ம் திருமுறை)

கந்தமலி தண் பொழில்நல் மாடமிடை
காழிவளர் ஞான முணர்சம்
பந்தன் மலி செந்தமிழின் மாலை கொடு
வேதிகுடியாதிகழலே
சிந்தை செயவல்லவர்கள் நல்லவர்கள்
என்ன நிகழ் வெய்தியிமையோர்
அந்த வுலகெய்தி யரசாளுமது
வேசரதம் **ஆணைநமதே.** (3)

(3-ந் திருமுறை)

கானலங்கழனி யோதம் வந்துலவுங்
கழுமல நகருறைவார்மேல்
ஞானசம் பந்தன் நற்றமிழ் மாலை
நன்மையால் உரை செய்து நவில்வார்
ஊனசம்பந்தத் துறுபிணி நீங்கி
உள்ளமும் ஒருவழிக் கொண்டு
வானிடை வாழ்வர் மண்மிசைப்
பிறவார் மற்றிதற் **காணையுநமதே.** (4)

(3-ந் திருமுறை)

நமதாணை நமதாணை யென உறுதி கூறியன கொண்டு நாமறியக் கிடப்பன யாவையென வாய்வோமாயின், தாமும் சிவமும் ஒன்றாயிருந்துணர்ந்தவற்றினை யுரைக்கின்றாரென்பதே தெளியக் கிடக்கின்றது. பத்தர் சித்தர் எனக் கூட்டங்கள் யிருவகைப் படுப்பர். சிவகதி யெனச் செறிப்பார். பவநெறி போக்குவது தவநெறி யெனச் சாதிப்பார்.

முதற்றிருமுறையில் திருப்பிரமபுரம் முதலாகத் திருத்தருமபுரம் ஈறாகவும், 2-ந் திருமுறையில் திருப்பூந்தராய் முதல் (பண் இந்தளம் முதலாக) திருப்புகலி (பண் செவ்வழி) ஈறாகவும், 3ம் திருமுறையில் கோயில் முதலாக (பண் காந்தார பஞ்சம முதலாக) திருநல்லூர்ப் பெருமணம் (அந்தாளக் குறிஞ்சி) ஈறாகவும் அமைந்துள்ளன. திருஞானசம்பந்தப் பெருமானார், தமது

தேவாரத்தின்கண் சண்டேசுரர், கண்ணப்பர், நமிநந்தியடிகள், கோச்செங்கட்சோழ நாயனார், தண்டியடிகள், புகழ்த் துணையார், முருகநாயனார், சிறுத்தொண்டர், நீல நக்கர், மங்கையர்க்கரசியார், குலச்சிறையார், திருநீலகண்ட யாழ்ப் பாணர் ஆகிய பன்னிருவரையும் தமது தேவாரத் திருமுறைக்கண் வைத்துக் கூறியுள்ளார்கள். திருநாவுக்கரசு சுவாமிகளும், குங்குலியக் கலயரும், நின்ற சீர்நெடு மாறனார் (கூன்பாண்டியனார்) முதலியோர்களும் சுவாமிகளைக் கண்டின்புற்றோராவர்.

வேத சிரசெனப்படும் நூற்றெட்டுபநிடதங்களுள் ஒன்றாயிலங்குவது பஸ்மஜாபாலோபநிடதம். அதுவே திருநீற்றுப்பதிகம். பராபரையினைப் பற்றியருளியதாகும். "பராவணமாவது நீறு" என்பதே அதனை வலியுறுத் துவதாகும்.

பஞ்சாக்கரப் பதிகமும் திருவைந்தெழுத் துண்மை எனும் பதிகமும் ஆய்ந்தாய்ந்து பேதம் தெளியற் பாலதாகும். சொல்லலங்காரமாக ஏகபாதம், எழு கூற்றிருக்கை, சக்கரமாற்று, கோமூத்திரி, ஈரடிமேல் வைப்பு, நாலடிமேல் வைப்பு முதலியன பாடப் பெற்றுள்ளன. இவைகளைப் பொருளறிந்து படித்தின்புறற்பாலனவாகும்.

மந்தமலி சோலை மழபாடி நகர் நீடுபழை யாறை யதனுள்
பந்த முயர் வீடுரலபட்டீசர மேய படர்புன்சடையனை
அந்தண் மறையோரினிது வாழ்புகலி ஞானசம்பந்தன் அணியார்
செந்தமிழ்கள் கொண்டினிது செப்பவல தொண்டர் வினைநிற்ப
[திலவே

என்ற வொரு திருக் கடைக்காப்பினைக் கொண்டே நாயனாருடைய நற்றமிழ்ச் சிறப்பும் பயனும் கொள்ளக் கிடக்கின்றது.

வேதநெறி நிற்பவர்கள் நிலையினை திருச்சண்பை நகர் பதிகத்து.

எந்தமது சிந்தை பிரியாத பெருமானென இறைஞ்சி
[யிமையோர்
வந்துதுதி செய்ய வளர்தூப மொடு தீபமலி வாய்மையதனால்
அந்தியமர் சந்திபல அர்ச்சனைகள் செய்ய அமர்கின்ற
[அழகன்
கந்தமலி குந்தள நன்மாதினொடு மேவுபதி சண்பைநகரே.

என விரித்தோதுவது என்னை விடப்பைத் தருகின்றது.

இவர் தம் தேவாரத்தில் "வாழ்கவந்தணர் வானவ ரானினம்" என்பது பாசுரம் என நாமந்தரித்துரைக்கப் பெறுகின்றது. இதற்கு விளக்கம் சேக்கிழார் பெருமான் றான் தந்துளார்கள். வேறெவராலுமாகாது. மற்றவைகட்குப் பதிகம் எனப் பெயர் பாரிக்கப் பெறுகின்றது.

1. "மடையில் வாளை பாயமாதரார்"
2. எந்தை யீசனெம் பெருமான் ஏறமர்க்கடவுள் என்றேத்தி"
3. "இடரினும் தளரினும்".
4. "மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலை"
5. "சுண்ணவெண் சந்தனச் சாந்தும்"
6. "வாழ்கவந்தணர் வானவரானினம்"
7. "காரைகள் கூகைகள்"
8. "போகமார்த்த பூண்முலையாள்"
9. "மந்திரமாவது நீறு"
10. "வெந்த வெண்ணீறணிந்து விரிநூன்மார்பின்"

முதலியனவாய முதற் குறிப்புப் பதிகங்கள் (19) அற்புதச் சிறப்பினை வெளிப்படுப்பனவாம்.

"பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்திருப்பிலே யிருந்துவையை **யேட்டிலே தவழ்ந்த பேதை நெருப்பிலே நின்று**" எனத் திருஞான சம்பந்தர் வாக்கின் சிறப்பினை வரந்தருவார் எடுத்துப் பாடுகின்றனர்.

காழிநகர்ச் சிவபாதவிருதயர் தந்த கவுணியர்கோன்
அழுதுமையாள் கருதியூட்டும்
ஏழிசையின் அமுதுண்டு தாளம் வாங்கி
இலங்கியநித்திலச் சிவிகையிசையவேறி
வாழுமுயலகனகற்றிப் பந்தரேய்ந்து
வளர்கிழி பெற்றரவின் விடம் மருகல் தீர்த்து
வீழிநகர்க்காசெய்தி மறைக்கதவம் பிணித்து
மீனவன் மேனியின் வெப்பு விடுவித்தாரே.

ஆரெரியிட்டெடுத்தவே டவை முன்னேற்றி
ஆற்றிலிடும் ஏடெதிர் போய் அணைய வேற்றி
ஓரமணரொழியாமே கழுவிலேற்றி யோது
திருப்பதிகத்தா லோடமேற்றிக்
காருதவும் இடிபுத்தன் றலையிலேற்றிக்
காயாத பனையின் முது கனிக ளேற்றி
ஈரமிலா அங்கமுயிரெய்த வேற்றி
இலங்கு பெருமணத்தானை யெய்தினாரே.

என்பனவே வாக்கின் சிறப்பினைக் காட்டும் பாடல்களாகும்.

புனலில் ஏடெதிர் செல்லெனச் செல்லுமே
புத்தனார் தலைதத் தெனத்தத்துமே
கனலில் ஓடிடப் பச்சென்றிருக்குமே
கதவுமாமறைக் காட்டில் அடைக்குமே
பனையில் ஆண்பனை பெண்பனை யாக்குமே
பழைய வென்பு பொற்பாவைய தாக்குமே
சினவராவிடம் தீரெனத் தீர்க்குமே
செய்ய சம்பந்தர் செந்தமிழ்ப் பாடலே.

உமதாச்சார்ய சுவாமிகள்:

தருணமங்கலையுமது சிந்தை தழைந்த பாலமுதூறினால்
அருணகொங்கையிலது நிரம்பியருட் பெருங்கடலாகுமே
வருண னன்குறு கவுணியன் சிறுமதலையம் புயல் பருகியே
பொருளகயந்தரு கவிதையென்றொரு புனிதமாரி பொழிந்ததே.

என்றோதியுள்ளார்கள்,

அருட்பிரகாச வள்ளலார்: (அருட்பா)

சீரார்சண்பைக் கவுணியர்தந்
தெய்வ மரபிற் றிகழ் விளக்கே
தெவிட்டா துளத்திற் றித்திக்குந்
தேனே யழியாச் செல்வமே
காரார் மிடற்றுப் பவளமலைக்
கண்ணின் முளைத்த கற்பகமே
கரும்பே கனியே யென்னிரண்டு
கண்ணே கண்ணிற் கருமணியே!
ஓரார் பருவ மூன்றிலுமை யினிய
முலைப் பாலெடுத்தூட்ட
இன்பக் குதலை மொழிக்குருந்தே
என்னுருயிருக்கொரு துணையே
பேரார் ஞான சம்பந்தப்
பெருமானே நின்றிருப் புகழைப்
பேசுகின்றோர் மேன்மேலும் பெருஞ்
செல்வத்திற் பிறங்குவரே!

என்பதாகும்.

இதன்பின் 8 மணி முதல் 9 மணி வரையில் திருநாவுக்கரசரின் திருவாக்கின் (4-6 திருமுறைகளின்) சிறப்புப்பற்றி கும்பகோணம் நகர உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் ஸ்ரீ சுப்பராவ் அவர்களால் உபந்நியவசிக்கப் பட்டது.

# அப்பர் அருள்வாக்கு

சொற்பொழிவாளர்:

திரு. சுப்பராவ் அவர்கள்,

தமிழாசிரியர் கும்பகோணம் நகர உயர்நிலைப்பள்ளி

உலகெலாம் உணர்ந்தோதற்கரிய பெருமானின் புகழைப் பரப்பும் பெருநோக்குடன் கூட்டப்பட்டிருக்கும் இம்மகாநாட்டில் அடியேனுக்குச் சிறிது வாய்ப்பணி புரிய அருளியதுபற்றி எனது நன்றி.

இன்று தொடங்கி எட்டு நாட்கள் நடக்கவிருக்கும் இம்மகாநாடு ஒரு பெரும் ஞானவேள்வியாகும். இறைவனுக்குகந்த இவ்வேள்வி மற்றொரு வகையில் தமிழ்த் திருவிழாவுமாகும். நம் நாட்டின் சிறந்த மொழிகளெனப் போற்றப்படும் வடமொழி தென்மொழிகளிலுள்ள தலை சிறந்த நூல்களெல்லாம் இறைவன் பொருள்சேர் புகழைக் கூறுவனவெனலாம். ஆதலால் இவை, கவிதானுபவம் ஒன்றே தரவல்ல மேல்நாட்டு இலக்கியங்கள் போலல்லாது, ஆத்மானுபவமும் ஒருங்கே தரவல்லன. ஆனதுபற்றி மொழிக்குச் செய்யும் தொண்டு உண்மையில் கடவுள் தொண்டாய் முடிகிறது.

* * * *

சைவத் திருமுறைகள் பன்னிரண்டாகும். அவற்றுள் முதன்மூன்று திருஞானசம்பந்தர் திருவாக்காகும். அடுத்த மூன்று அப்பரது அருள்வாக்கு. ஏழாவது திருமுறை சுந்தரர் திருவாக்கு. மாணிக்கவாசகர் திருவாக்கு எட்டாவது திருமுறையாகும். திருமாளிகைத் தேவருள்ளிட்ட ஒருபதின்மர் பாடியது ஒன்பதாம் திருமுறை. திருமூலர் திருமந்திரம் பத்தாம் திருமுறை. திருவாலவாயுடையார் முதலியோர் பாடியது பதினோராம் திருமுறை. சேக்கிழார் பாடிய பெரியபுராணம் பன்னிரண்டாம் திரு



சிதம்பரம், ஸ்ரீ நடராஜர் கோயில் கோபுரமும் ஸந்நிதியும்.

முறையாகும். இப்பன்னிரண்டு திருமுறைகளும் ஓங்கார ஸ்வரூபமாய் விளங்குவன என்பர்.

திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மூவரும் இறைவனைப் பாடிய பாடல்களின் தொகுதியே தேவாரமாகும். இறைவனை வழிபட்டு, அவனருளைப் பெற்ற இப்பெரியோர்கள் அப்பெருமானுக்குச் சாற்றிய பாமாலைகள் நமக்குப் பெருநிதியாகும். இறைவனது தெரிவரு நன்னிலையைப் பற்றமாட்டாத எம்மனோர்க்கு, அவன் குணானுபவம் கிட்டுமாறு ஓர் வழிகாட்டியருளிய மகோபகாரிகள் என இவர்களைக் கூறலாகும்.

* * * •

நாவுக்கரசர் எனவும் 'வாகீசர்' எனவும் போற்றப் படுபவர் அப்பர் சுவாமிகள். முருகனின் அவதாரம் எனப் போற்றப்படும் ஞானசம்பந்தப் பெருமானால் 'அப்பரே' என அன்பாலழைக்கப்பட்டவர். ஆண்டில் சிறியவராயும் அறிவில் முதியவராயுமுள்ள சம்பந்தரால் அன்பாற் சூட்டப்பட்ட இப்பெயரே தவமுதியவரான நாவுக்கரசரது பெயர்களுள் சிறப்பாக விளங்கி வருகிறது. "என்னப்பன் என்னைப்பாடினான்" என இறைவனாலேயே புகழ்ந்து கொண்டாடப்பட்ட பாக்கிய முடையவர் அப்பர் சுவாமிகள்.

அவரது சரிதம் யாவரு மறிந்ததே. மகான்களின் வாக்கேயன்றி அவர் தம் வரலாறுகளும் கற்கப் பெரும் பயனளிப்பன. அவற்றின் மூலம் அவர்களது வாழ்க்கை லட்சியம், அவர்கள் அதை யடைந்த விதம், அவர்களுக் கிடையில் தோன்றிய இன்னல்கள், கலங்கா நெஞ்சுடன் அவற்றைக் கடந்தவிதம் முதலிய நமக்கு விளங்கும். சைவ சமயத்திலே தோன்றிய இப்பெரியார், இளமையிலேயே சிறந்த அறிவினராக விளங்கினார். யாக்கை செல்வம் ஆகிய வற்றின் நிலையிலாமையை நன்குணர்ந்து தம்பெரும்

பொருளை தான தருமங்களில் செலவழித்து விட்டார். நிலையாமைத் தத்துவத்தை நன்கு வற்புறுத்தும் சமண மதத்தில் பற்றுக்கொண்டு அதைத் தழுவினார். அங்கு தருமசேனர் என்ற பெயருடன் சமணர்களால் பெரிதும் போற்றப்பட்டுச் சிறப்புடன் வாழ்ந்து வந்தார்.

ஒரு சமயம் தமக்கு ஏற்பட்ட சூலைநோய் எவ்வாற்றாலும் தீர்க்க முடியாமற் போகவே தம் தமக்கையாரால் மீண்டும் வந்தாராக, அவ்வம்மையார் இறைவனைத் தொழுது இட்ட திருநீற்றினால் நீங்காத துன்பம் நீங்கப் பெற்றார். அது முதல், நோய் தந்து தம்மை ஆட்கொண்ட திருவருளை வியந்து சிவபெருமானைப் போற்றிப் புகழ்வாராயினர்.

பரமேச்வரன் உமையாளோடும் வீற்றிருக்கும் கைலை மலையைப் பெயர்த்தெடுக்க முயன்ற இராவணனுக்கும், அவன் தன்னைப் பாடியவளவில் அவனிழைத்த அபராதத்தைப் பாராட்டாது வாளீந்து அருளியதுபோல், இறைவன் தன் திறத்தும் தனது பிழைகளைப் பாராட்டாது ஆட்கொண்டருளிய திறத்தையே வியந்தவராய் அச்செய்கையைப் பதிகந்தோறும் பாடுகிறார் அப்பர்.

* * * *

ஞானசம்பந்தர் பெருமையை அப்பர் பலவிடத்தும் வற்புறுத்திக் கூறுகிறார். "அறியானை அந்தணர்...... புலியூரானைப் **பேசாத நாளெல்லாம் பிறவாநாளே"** என்பது அவர் சித்தாந்தம். அவர் பல கலைகளும் பயின்றவராதல் வேண்டுமென்பது அவர் தேவாரப்பாடல்களிலிருந்து விளங்கும். 64 கலைகளிலும் அவர் வல்லராயிருந்தாரென்றும் சமணர்கள் அவரை நீற்றறையிலிட்டபோதும் கல்லைக்கட்டி கடலிலிட்டபோதும், துன்பமின்றி மீண்டது அக்கலையறிவினாலேதான் என்றும் கூறுவாருமுளர். எக்காலத்தும், எத்தகைய இடுக்கண் சேரினும் சிறந்த

துணையாக ஒன்றை, கலை பல பயின்ற இப்பெரியார் கூறுவது, கூர்ந்து நோக்கத்தக்கது.

"கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயமே"

"பாம்பின் வாய்த் தேரைபோல பல பல நினைந்து உழலும் மனத்தை இறைவனிடத்தே செலுத்தி சாந்தி பெற முயலவேண்டும். இதற்கு இன்றியமையாதது நாம் இறைவன் திரு நாமத்தை இடைவிடாது உச்சரிக்க வேண்டிய அவசியத்தை,

"நற்றவா உனை நான் மறக்கினும்
சொல்லும் நா நமச்சிவாயவே"

என்ற அடிகளும் வற்புறுத்தும். தொட்டிலில் கிடந்துறங்கும் பச்சிளங்குழவி தாய்ப்பால் குடிக்கும் ஞாபகமாய், தன் நினைவின்றியே உதட்டை அடிக்கடி அசைப்பதுபோல் ஒருவன் தன்னை மறந்திருக்கும் நிலையிலும் கூட நாக்கு பழக்கத்தின் காரணமாய் இறைவன் திரு நாமத்தை உச்சரிக்குமாறு நேரவேண்டிய பழக்கம் எத்துணை அவசிய மென உணர்ந்தனர் அக்காலப் பெரியோர்கள்.

* * * *

உலகில் தோன்றிய மகான்கள் யாவரும் வாழ்க்கையைத் துன்பம் நிறைந்ததாகவே கூறியுள்ளனர். பிறவிப் பெருங்கடல், பிறவிப் பிணி, பிறவிப் பெருமயக்கு, என்றெல்லாம் கூறியுள்ளனர். தாயின் கர்ப்பத்திலிருந்து வெளி வரும்போது பெரும் அவஸ்தைப்பட்டே சீவன் பிறப்பெடுக்கிறது. வாழ்நாள் முடிவிலும் மரணாவஸ்தையாகிய பெரும் துன்பத்தை அடைகிறது. இவ்விரண்டு பேரிடர்களுக்கும் இடைப்பட்ட சின்னாள் வாழ்விலும் பல்பிணிகள் நிறைந்துள்ளன. ஏதோ சில சமயங்களில் இன்பம்போல் தோன்றும் சிலவும், ஆராயின், பெரும்பாலும் துன்ப நிவர்த்தி காரணமாகத் தோன்றிய இன்ப

மாகவோ, அல்லது துன்பத்தை முடிவாகவுள்ள இன்ப மாகவோ தான் உள்ளன. இப்படி இறப்பும் பிறப்புமாய் மாறி மாறி வரும் பிறவிகள் பலவற்றையும் அடைந்து கொண்டும், அவ்வப் பிறவிகளில் பலவித துன்பங்களை அனுபவித்துக் கொண்டும், நிரதிசயமான இன்பமொன்று அடைய வேண்டியதாயுள்ளது எனும் சிந்தையோ அதைப் பெற முயற்சியோ சிறிதளவும் கொள்ளாது—வாளுளை வீணாகக் கழிப்பாரை நோக்கி,

> "பெரு நோய்கள் மிக நலியப் பெயர்த்தும் செத்துப்
> பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே"

என இரங்குகிறார் அப்பர் சுவாமிகள்.

எடுத்த பிறவி பயனுடைத்தாக மிக எளியதொரு மார்க்கத்தைக் காட்டுகிறார் வாகீசர். இதுவும் செய்ய முடியாதெனில் வேறு கதியேது!

> "திருநாம மஞ்செழுத்தும் செப்பாராகிற்
> றீவண்ணர் திறமொருகாற் பேசாராகில்
> ஒரு காலுந் திருக்கோயில் சூழாராகில்
> உண்பதன் முன் மலர்பறித்திட் டுண்ணாராகில்
> அரு நோய்கள் கெட வெண்ணீறணியாராகில்
> அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்
> பெரு நோய்கள் மிக நலியப் பெயர்த்துஞ் செத்துப்
> பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின்றாரே."

ஒருவர் எந்நிலையிலிருந்தபோதிலும் எக்குலத்தைச் சார்ந்தவராயிருந்த போதிலும், எத்தொழில் புரிந்து வந்த போதிலும், இறைவன் திரு நாமத்தைக் கூறுவது, அவன் புகழைப்பாடுவது, அவன் திருக்கோயில் வலம் வருவது அவனைப் பூசித்துப் பின் புசிப்பது, முதலிய காரியங்களை அன்றாடம் செய்து வருதல் இன்றியமையாதது என்பதை மாறுபட்டதாய்க் காணப்படும் பல் வேறு சமயங்களில் தோன்றிய பெரியார் பலரும் ஒரு முகமாய் வற்புறுத்தி வருகின்றனர்.

ஒருவர் சக்திக்கு மீறியதும் பொருட் செலவினையுடையதுமானதும் அல்ல இது. சுத்தமான மனத்துடன் செய்யப்படும் இதன் பயன் அமோகமானதென அனுபவ வாயிலாக உணர்ந்தே மகான்கள் உபதேசித்துள்ளனர்.

* * * *

தேவாரம் முதலிய சைவநூல்களிலும் நாலாயிர முதலிய வைணவநூல்களிலும் இறைவனை மன் மொழி மெய்களால் வழிபடவேண்டியதன் அவசியம் பரக்கக் கூறப்பட்டுள்ளது. பாடல்களைப் பாடினர். இறைவனை ஒவ்வொரு வடிவில் வழிபட்டனரே தவிர, அவரனைவரும் ஒரு முழு முதற் கடவுளையே அவ்வடிவில் வழிபட்டனர். அவர்கள் பக்தி பூர்வமாய்ச் சூட்டிய பாமாலைகள் நமக்கு நல்லறிவும் நல்லுணர்ச்சியும் ஒருங்கே ஊட்டுவன. வேற்றுமை மனப்பான்மையை அகற்றி அவற்றை அந்த அந்த நிலையிலிருந்து கற்பதே முறை. சைவத் திருமுறைகளை ஓதுங்கால் சைவனாயிருந்து அநுபவிக்கவேண்டும். வைணவப் பிரபந்தங்களைக் கற்குங்கால் வைணவராயிருந்து கற்கவேண்டும், அப்போது தான் அவற்றை நன்கு அனுபவித்துணர முடியும்.

* * * *

மாதங்களுள் சிறந்தது இம்மார்கழி. தேவர்களுக்குப் பகற்காலமாம் உத்தராயணத்திற்கு முந்திய மாதமாகிய இது உஷத்காலமாகும் (விடியற்காலம்). இடைமருதூராம் இப்புண்ய பூமியில் திருவாதிரை நன்னாளில் பெரியவர்கள் ஆதரவின் கீழ் துவக்கப்பட்டிருக்கும் இம்மகாநாடு மக்களுக்கு ஆத்மிகத்துறையிலும் விழிப்பு ஏற்படச் செய்து அதன் மூலம் நாட்டில் அமைதியும் சுபிட்சமும் நிலைக்க இறைவன் அருள் புரிவானாக.

---

பிறகு 9 மணி முதல் 9-30 வரையில் ரெங்கனாதபுரம் திராவிடக் கவிமணி ஸ்ரீ வே. முத்துஸாமி அய்யர் அவர்களால் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாக்கின் சிறப்பு 7-ம திருமுறை என்பது பற்றி சொல்லப்பட்டது. இத்துடன மகாநாட்டின் முதல் நாள் நிகழ்ச்சிகள் முடிவு பெற்றன.

# ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாக்கின் சிறப்பு.

சொற்பொழிவாளர் :
திராவிடக் கவிமணி
ஸ்ரீ வே. முத்துசாமி அய்யர், ரங்கனுதபுரம்

## (7-ம் திருமுறை)

*செல்வநல் ஒற்றி யூரன் செய்யசங் கிலியா லார்த்து*
*மல்லலம் **பரவை** தன்கண் மாழ்குற அமிழ்த்து மேனும்*
*அல்லும்நண் பகலும் நீங்கா(து) அவன்மகிழ் அடியில் எய்தி*
*நல்லஇன்(பு) அடைந் திருப்பன் நம்பி **ஆரூரன்** தானே.*

(சிவப்பிரகாச சுவாமிகள், நால்வர் நான்மணிமாலை.)

சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் ஏழாந் திருமுறையில் அடங்கிய தேவாரப் பாடல்களை அருளிச் செய்தவர் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆவார். தேவார கர்த்தாக்கள் மூவரில் திருஞானசம்பந்தர் முதல் மூன்று திருமுறைகளை அருளியவர். இவர் பதிகங்கள் 16000த்தில் இப்போது கிடைத்துள்ளவை 384. திருநாவுக்கரசர் அருளிச் செய்த 49000 பதிகங்களில் இப்போதுள்ளவை 312. சுந்தரர் பாடிய பதிகம் 37000இல் இப்போது கிடைத்தவை 100தான். கிடைத்த மட்டில் அளவிற் குறைந்த பதிகம் பாடியவர் சுந்தரர் தான். இப்படி இருப்பினும், இவர் சில ஏதுக்களால் தனிச் சிறப்புக் குரியவராகிறார். இக்காரணங்களிற் சிலவும் இவர் திருவாக்கின் சிறப்பிற் சிலவும் இங்குக் கூறப்படும்.

இவர் பக்திசெய்த முறை நட்புமுறை. இவரைப் பரமேசுவரன் தனது **தோழன்** எனக் கொண்டதால் இவர் **"தம்பிரான் தோழர்"** எனப்படுவர். இவரும் இத்தோழமையை இனிதின் ஏற்று, **"ஏழிசையாய்"** என்னும் தேவாரத்தில் **"என்னுடைய தோழனுமாய்"** என்று பாராட்டுகிறார். தோழமையின் சிறப்பு சொல்ல ஒண்ணுப்

பெருமையது. ஸ்ரீ இராமாயணத்தில் இராமபிரான் குகனைத் தோழமை கொண்டதை அக்குகன் **'தோழமை என்றவர் சொல்லிய சொல் ஒரு சொல்லன்றோ?'** என்று வாயாரப் போற்றுகின்றான். உலகப் பழக்கத்திலும் ஒருவன் தன் உயிர்ப்பாங்கனுடன் நெருங்கிப் பழகி, தன் உள்ளத் துணர்ச்சிகளைச் சிறிதும் ஒளிக்காமல் விண்டுரைத்து, அளவளாவுவதுபோல் அவன் வேறு எவருடனும் நடந்து கொள்ளமாட்டான். இவ்வுண்மைக் கிணங்கவே, சுந்தரரும் ஆரூர்ப் பெருமானிடம் பொன் கேட்பார், பெண் கேட்பார், போகப் பொருள்கள் கேட்பார், நள்ளிரவில் பரவையார்பால் இருகால் இறைவனைத் தூதும் அனுப்புவர். இவர் தோழமையின் பெருமை இது.

சம்பந்தரோ இறைவனைத் தந்தையாகக் கொண்டு தாம் பிள்ளையாம் முறையிற் பழகினார். அப்பர் என்னுந் திருநாவுக்கரசரோ சிவபிரானைத் தலைவனாகக்கொண்டு, தொண்டராம் முறையிற் பழகினார், மாணிக்கவாசகரோ இறைவனை ஆசார்யமூர்த்தியாகக் கொண்டு, சீட முறையிற் பழகினார். எனினும் மானுட வாழ்க்கையில் பலவகை இன்ப துன்பங்களில் கலந்துழலும் நம்மனோர்க்கு சுந்தரர் மேற் கொண்ட நட்பு நெறியே நம் உள்ளத்தைப் பெரிதும் பிணிப்பதாகும். இந்த வாய்ப்பு, சுந்தரர்க்குக் கிடைத்த தற்கு முன்பு இவர் சிவகணத் தொருவராய், எம்பிரானுக்கு அணுக்கத்தொண்டு புரிந்துவந்த ஆலால சுந்தரராக இருந்தது காரணமாகும். நட்புரிமையால் இவர் ராஜசமும் இறுமாப்புந்தோன்றப் பாடிய இடங்கள் பல. [இத்தகைய பெருமிதம் தோன்றுவதற்கு இவர் இளமையில் நரசிங்க முனையரையர் என்னும் அரசருடைய அரண்மனையிலேயே பயின்று வந்ததும், தம் வாணாள்முழுதும் சேர அரசனாகிய சேரமான் பெருமாள் நாயனாருடன் நெருங்கிப் பழகியதும் காரணமாகலாம்]. இனி இவர் பாடல்களிற் சில பார்க்கலாம்.

1. குண்டையூர்க்கிழார் இவருக்கு அளித்த நெற் குவியலைப் பரவையார் திருமாளிகைக்கு அனுப்பவேணு மென்று இவர் பிரார்த்திக்கும் திருக்கோளிலித்தேவாரத்தில்

"பாதியோர் பெண்ணைவைத்தாய் படர்செஞ்சடைக் கங்கை
[வைத்தாய்;
மாதர்நல்லாள் வருத்தம் அது நீயும் அறிதியன்றே."

என்பர்.

2. திருவொற்றியூரில், சங்கிலியாரை மணத்தற்காக உரைத்த சூளுறவு தவறுமாறு, ஆரூரான்மேல் வைத்த அளவிற் காதலால் இவர் ஆரூருக்குப் புறப்பட்டார். இறைவன் மறக் கருணையால் அப்போது இவர் கண் ணிழந்து பல இடர்களுற்றார். தொடர்ந்து மேலே செல்லு கையில், இறைவனருளால் வழியில் ஊன்றுகோலும் ஒற்றைக் கண்ணும் பெற்றனர். திருவாரூர் வந்தும் மற்றைக் கண் ஒளிபெறுமலே இருக்க, அதற்கு மனம் புழுங்கி,

'மற்றைக் கண்தான் தாரா தொழிந்தால் வாழ்ந்துபோதீரே'

என்று நிஷ்டூரம் பேசிப் பாடியுள்ளார்.

இவையேயின்றி, இவர் வாழ்க்கையில் மற்றும் சில அற்புதங்களும் நிகழ்ந்துள.

1. இவருக்குத் தம் ஜாதியில் நிகழ இருந்த திருமணத்தை இறைவன் தடுத்தாட்கொண்டு, வேறு ஜாதியில் இரண்டு திருமணங்களை முன்னின்று நடத்தி வைத்திருக்கிறார். சுந்தரர்க்குக் காதல் பிறந்தது இந்த ஈரிடத்தும் அத் தலைவியர் தம் முதிர்ந்த ஒப்பற்ற சிவ பக்திச் சிறப்பினாலேதான் என்பது இங்குக் கருதத்தக்கது.

2. சேரமான்பெருமாள் நாயனார் என்னும் மலையாள தேசத் தரசர் இவருடன் நெருங்கிப் பழகுகிறார். தம் நகருக்கு (கொடுங்கோளூர்) இவரை அழைத்துச் சென்று

திரண்ட பொன்னணிகள், பட்டாடைகள் முதலியவற்றைப் பரிசாக அளித்து வழியனுப்ப, இறைவன் அவற்றை திருமுருகன் பூண்டியில் வழிப்பறி செய்து, தான் தந்ததாக மீளத் தருகிறான்.

3. சுந்தரர் வெள்ளை யானை மீதேறிச் சென்று கைலை சேர, சேரமானும் அவரருளால் தம் குதிரை மீதேறிச் சென்று கைலை சேர்ந்து இறைவனுக்கு ஆதியுலாப் பாடி அவன் திருவடி அடைகிறார்.

4. அவிநாசியில் முதலை உண்ட பாலனைச் சில வருஷம் சென்ற பிறகு, இவர் பதிகம்பாடி மீட்பிக்கிறார். சுந்தரர் அனுபவ உணர்ச்சியோடு இவ்வற்புதங்களைப் பாடுமிடங்களில் அவர் வாக்குகள் மிக அழகாகவும் உருக்கமாகவும் இருக்கும். இனி இவர் வாக்கின் திறத்தைத் தனித்து ஒரு சிறிது ஆராய்வோம்.

இவர் அருளிய பாடல்களின் தொகை அளவிற் சுருங்கியதென்பதை முன்னரே கண்டோம். ஆயினும் சிவனடியார் திருக்கூட்டத்திலும் தமிழன்பர் சபைகளிலும் இவர் வாக்கு பெருவழக்காய்ப் பயிலப்படுகிறது. அடியிற் குறிக்கும் பாடல்களின் ஆட்சிப் பெருமை சம்பந்தர், அப்பர், மணிவாசகர் வாக்குக்குக் குறைந்ததாகாது. உற்று நோக்கின் இவர் வாக்கின் அளவை நோக்க, இதற்கு வெகு ஜனப் பிரயோகம் அதிகம் என்றே சொல்லலாம்.

உதாரணம்:—

1. 'பித்தா! பிறைசூடீ! பெருமானே! அருளாளா!'

2. 'பொன்னார் மேனியனே புலித்தோலை யரைக்கசைத்து'

3. நற்றவா! உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே.

4. வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்.

5\. (i) 'கொடுக்கிலா தானைப் பாரியே என்று
கூறினும் கொடுப் பாரிலர்'

(ii) 'தம்மையே புகழ்ந் திச்சை பேசினும்
சார்வினுந் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்கள்!'[2]

இவை யன்றியும், இவர் பாடிய திருத்தொண்டத் தொகை என்பது அறுபத்து மூவர் சரிதத்திற்கு மூலமாகும். இது இல்லையேல் பெரிய புராணம் தோன்ற வழியில்லை. இச்சிறப்புள்ள இப்பதிகத்திற்கு ஆரூர்ப் பெருமான் 'தில்லைவாழந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' என்று அடி எடுத்துக் கொடுக்க அவ்வூர்ப் பூங்கோவில் தேவாச்ரய மண்டபத்தில் இவர் இதைத் திருவாய் மலர்ந்தனர். அடியார்கள் அனைவரையும் அவர் தம் தொண்டின் சிறப்புத் தோன்ற, சுருக்கமாக ஒரு பதிகத்தில் தொகுக்க வந்தவர், அடியார்களுக்கு அடைமொழி கூறும் பல இடங்களில் மிக அழகாகச் சொற்றொடர்களை அமைக்கிறார். இவற்றில் சில எடுத்துக் காட்டுவோம்.

1\. இயற்பகை நாயனாரை — 'இல்லையே என்னாத இயற்பகை' என்பர்—இல்லையே என்பது மனைவியையா! என்ற தொனிப் பொருள் தரும்.

2\. மெய்ப்பொருள் நாயனாரை 'வெல்லுமா மிகவல்ல' என்பர்; இந்நாயனார் பகைவனுடைய சூழ்ச்சியால் உயிர் துறந்தும் அன்பும் பொறையும் பாராட்டிய அருமையை வெல்லுமா மிகவல்ல என்பதால் விளக்குகிறார்.

3\. எழுத்து வாசனை இல்லாத வேட்டுவத் திண்ணராம் கண்ணப்பரை 'கலைமலிந்த சீர்நம்பி' என்பர் சிவக்கலை பற்றிய விரைவினால்.

**4.** புறக்கண் இல்லாத தண்டி அடிகளை 'நாட்டமிகு' தண்டி என்கிறார். அகக்கண்சிறப்பு நோக்கி இவை போல் இன்னும் எடுத்துக் காட்டலா மெனினும், சுந்தரருடைய திருத் தொண்டத் தொகையின் சொற் பொருள் ஆட்சியைச் சுட்டுதற்கு இவையே அமையும்.

இவர் அருளிச் செய்த இன்னும் இரண்டொரு தேவாரங்களின் சொற் பொருள் அழகுகளை மேலும் சொல்லி இவ்விஷயத்தை முடிப்போம்.

தோழமையைப் பற்றிச் சொல்லிய 'ஏழிசையாய்' என்னுந் தேவாரம் முன்னரே குறிக்கப்பட்டது.

"ஏழிசையாய் இசைப்பயனாய்
இன்ன முதாய் என்னுடைய
தோழனுமாய் யான் செய்யுந்
துரிசுகளுக்(கு) உடனாகி
மாழை ஒண்கண் பரவையைத் தந்(து)
ஆண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன்
என் ஆரூர் இறைவனையே."

இதில் இறைவன் ஏழிசையாக உள்ளான், இசைப் பயனாகவும் உள்ளான், இன்னமுதாகவும் உள்ளான் என்பதும், இத்தகைய பரமன், தனக்குத் தோழனாகி தான் "செய்யுந் துரிசுகளுக்கு" உடந்தையாக தனக்குப் பரவையை மணம் செய்வித்தா னென்பதும், இந்த எளிமையை நினைந்து நினைந்து "மதிஇல்லா ஏழையேன் பிரிந்திருக்கேன் என்னாரூர் இறைவனையே" என்ற உள்ளம் நெக்குருகிப் பாடும் மனப்பாங்கும் இப்பாசுரத்தின் கருத்துக்கு மெருகு ஏற்றி அழகுக்கு அழகு செய்கிறது.

"பொன்னும் மெய்ப்பொருளுந் தருவானை" என்ற பாசுரத்தில்,

'பொன்னுமெய்ப் பொருளும் தருவானைப்
போகமுந் திருவும் புணர்ப்பானைப்
பின்னை என் பிழையைப் பொறுப்பானைப்
பிழையெலாந் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையன் என்றறி வொண்ணு
எம்மானைஎளி வந்தபி ரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்(து) அணி
ஆரு ரானை மறக்கலு மாமே?'

இறைவன் பொருள் தருவான் என்றும் அது பொய்ப் பொருள் என்பதற்கு மெய்ப் பொருளுந் தருவான் என்றும், மக்களுக்குப் போகமுந் திருவும் புணர்ப்பான், அதாவது, நுகர்ச்சிப் பொருளையும் நுகரும் சக்தியையும் தருவான் என்றும், பிழையைப் பொறுப்பவனென்றும், பிழை எலாந்தவிரப் பணிப்பவன் என்றும், இவ்வாறாக இப்பாசுரத்தில் பல பான்மையில் இறைவன் திருவருள் விலாசத்தை விளக்குவதோடமையாது, 'அன்னம் வைகும் வயற் பழனத்து அணி ஆரூரானை மறக்கலுமாமே' என்று இறைவனிடம் ஆராமைப் பட்டு அவசமாகிறார். இந்தப் பாசுரத்தின் சொல்லழகும் பொருளழகும் நடையழகும் தொடை அழகும் முரண்பட்ட கருத்துக்கள் அமையும் அழகும் சுவைக்கச் சுவைக்கத் தெவிட்டா நலம் பயப்பன அன்றோ?

மேலே கூறிய சிலவற்றால் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பெருமையும் அவர் தம் திருவாக்கின் அருமையும் ஒருவாறு உரைக்கப் பெற்றன.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவருள் வாழ்க.

## இரண்டாவது நாள்: மார்கழி மாதம் 11உ (26—12—50) செவ்வாய்க்கிழமை.

இன்று காலை 8 மணிக்கு தெய்வ வணக்கத்துடன் ஸ்ரீ சச்சிதானந்த ஸ்வாமிகள் அவர்களின் தலைமையில் மகாநாடு கூடியது. 8 மணி முதல் 8-30 மணி வரையில் திருவெம்பாவை இரண்டாம்பத்துப் பாடல்களின் உட்கருத்து சொல்லப்பட்டது. 8-30 முதல் 9 மணி வரை திருவெம்பாவையின் இரண்டாம் பத்துப் பாடல்கள் பாராயணம் செய்யப்பட்டன. 9 முதல் 10 மணி வரையில் திருவெம்பாவை இசையுடன் போட்டிப் பரீக்ஷை நடைபெற்றது. இத்துடன் இன்றைய காலை நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

மறுபடியும் மாலை 3 மணிக்கு மகாநாடு ஆரம்பிக்கப்பட்டு 4-30 மணி வரையில் மாயூரம் கூறை நாடு முனிசிபல் உயர்நிலைப்பள்ளி தலைமைத் தமிழாசிரியர் திரு. ராமலிங்கம் பிள்ளை அவர்களால் மாணிக்க வாசகரின் திருவாசகத்தின் (8-ம் திருமுறையின்) சிறப்பைப் பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. 4-30 முதல் 5 மணி வரையில் திருவெம்பாவை இரண்டாம் பத்து இசையுடன் பாராயணம் செய்யப்பட்டது. இத்துடன் இன்றைய மாலை நிகழ்ச்சிகள் முடிவடைந்தன.

இரவு 7 மணிக்கு மறுபடியும் மகா நாடு கூடிற்று. 7 மணி முதல் 8 மணி வரை கும்பகோணம் நேடிவ் ஹைஸ்கூல் மாஜிதமிழாசிரியர் ஸ்ரீ P. ஸ்ரீநிவாஸ அய்யர் அவர்களால் திருவெம்பாவை இரண்டாம் பத்தின் சிறப்பு விளக்கப்பட்டது.

# திருவெம்பாவை - கருத்துரை

**சொற்பொழிவாளர்:**

**ஸ்ரீ பி. ஸ்ரீநிவாஸன்**

**ரெட்டியார்குளம் கீழ்கரை, கும்பகோணம்**

## (இரண்டாம் பத்தின் கருத்துரை)

இப் பதிகம் ஓர் இருபது திருப் பாடல்களைக் கொண்டுள்ளது.

இப் பாடல்கள், "சத்தியை வியந்தது" என்னும் தலைப்பிலே உள்ளவை.

திருவாசக உண்மை என்பதுள், "மலவிருளுற் றுறங்காமல் மன்னுபரிபாகரருள்—செலமுழுகவருகவெனச் செப்பல் திருவெம்பாவை" எனக் கூறப்பட்டிருப்பதால் இப் பதிக உண்மைப் பொருள் விளங்குகின்றது.

ஒவ்வொரு திருப் பாட்டின் இறுதியும், "எம்பாவை" என்று முடிவு பெற்றிருப்பதால் இப்பதிகம், "திருவெம்பாவை" எனப் பெயர் பெற்றுள்ளது.

ஸ்ரீ மாணிக்கவாசகர் இத் திருப்பதிகத்தைத் திருவண்ணாமலை திருப்பதியிலே மார்கழித் திங்களிலே அருளிச் செய்தனர் என்பர்.

கண்ணபிரான், 'மாதங்களுள் மார்கழியாகின்றவன் யானே' என்றருளியுளார். இம் மார்கழித் திங்கள் தேவர்களுக்கு 'வைகறைக் காலம்' என்று புகழ்ந்து பேசப்பட்டிருக்கிறது. சத்துவ குணம் தலையெடுத்து,

நற்பயனை அடைவதற்கேதுவான காலம் இதுவே என்பர் பெரியோர்.

இத்தகைய நற்பொழுதிலே கடவுளன்பு மிக்க மாதர் வைகறைத் துயிலெழுந்து, இல்லத்திடங்களைத் தூய்மை செய்து, தலைவாயிலிற் கோலங்களிட்டு, பூக்களைப் பரப்பிப் பொலிவுறச் செய்து, பொய்கைக்கு நீராடச் செல்கின்றார்கள்.

அங்ஙனம் செல்லலுற்ற அம் மாதர்கள், தம் தோழியாகிய ஒருத்தியைத் துயிலுணர்த்தி அழைப்பதாகத் தொடங்கப்பெற்று, பின்னர் அவர்கள் தம்முட் பேசிக் கொள்வது முதலாகிய முறைகள் பற்றி இயன்றுளது இப்பதிகம்.

இம்முறைபற்றி இப் பதிகத்தின் முதற் பத்துத் திருப் பாடல்களின் சிறப்புரைகளை அறிஞர் உரைக்கக் கேட்டின்புற்றிருக்கும் இவ்வவையினர் திருமுன்னே, 'இரண்டாம் பத்தின் சிறப்புரைகளைச் 'செப்புக' என ஸ்ரீ காமகோடி பீடம் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளின் கட்டளையைத் தலைவணங்கி யேற்று, அடியேன் சின்மதிக் கெட்டியவற்றைச் செப்ப முன் வந்து நிற்கின்றேன்.

'திருவாசகத் திருப் பாடல்களின் பொருள் தில்லைவாழ் நடராஜனே' என்பது பெரியார் துணிபு. சிறியேன் அதற்குச் சிறப்புரை கூறுவதற்கு ஏற்ற வல்லமை பெற்றிலேன். எனினும் குணங்கொண்டு குற்றங்களையும் சான்றவராகிய நீவிர் அடியேன் ஸ்ரீ ஆசாரிய ஸ்வாமிகளுடைய ஆக்ஞையைத் தாங்கியுள்ளவனென்பதைக் கருதி, என் பிதற்றல்களைப் பொறுமையுடன் கேட்டருள வேண்டுகின்றேன்.

11-ஆம் பாட்டு:—

இப் பாட்டு, மாதர்கள் பொய்கைக் கரை அடைந்து, நீராடியவாறே இறையை வேண்டுவதாக அமைந்துளது. இதன் சுருக்க வுரையாவது :

'ஐயனே, செய்யனே, வெண்ணீற்றுப் பொடிபூசி, செல்வா, மடந்தை மணாளனே! வழியடியார்களாகிய நாங்கள் வாழ்ந்தோம்; அழகாக ஆட்கொண்டருளும் (உனது) திருவிளையாடலினாலே பிழைப்பை அடைகின்றவர்கள் பிழைத்து உயர்கதி சேரும் வகையில் எல்லாம் பிழைப்பைப் பெற்றுள்ளோம்; இனி எங்களைச் சோர்வடையாமல் காத்தருளவேண்டும்' என்பது.

12-ஆம் பாட்டு:—

நீராட்டஞ் செய்பவருள் ஒருத்தி, மற்றொருத்தியை நோக்கிக் கூறுவதாக அமைந்துளது இப்பாட்டு.

(நம்மைப்) பிணித்த பிறவித் துன்பம் ஒழியும் வகை, தில்லைச் சிற்றம்பலவனாகிய ஆனந்தக் கூத்தன் படைத்தல் முதலிய தொழில்களை விளையாட்டாகப் புரிந்தருளும் அருமைப் பாட்டினைப் புகழ்ந்து பாடி, வளைகள் ஒலிக்கவும், மேகலைகளாகிய ஆடைகள் மிக் கொலிக்கவும், அழகிய கூந்தலின்மேல் வண்டுகள் ரீங்காரம் செய்யவும், நம்மை உடையானாகிய சிவபெருமான் பொற் பாதங்களை வணங்கிப் புகழ்ந்த வண்ணமாக (மலை)ச் சுனை நீரிலே ஆடுவோமாக.

13-ஆம் பாட்டு:—

பின்னும் மற்றொருத்தியைப் பார்த்துக் கூறும் செய்திகள் அடங்கியது இஃது.

"இந்தப் பொய்கை (மடு) குவளைப்பூ, செந்தாமரைப் பூ, நீர்ப் பறவைக் கூட்டம் (குருகினம்), அரவம் இவைகளை எய்தியிருப்பதாலும், தம் மலத்தைப் போக்குவார் வந்தடைதலாலும் எங்கள் பிராட்டியையும் எங்கோனையும் போன்று விளங்குகின்றது. இதனுள் இறங்கி, கை வளையல்களும் காற் சிலம்புகளும் ஒலிக்கவும் மார்பகங்கள் மகிழ்ச்சியாலே பொங்கவும் மூழ்கும் நீர்

மேலெழவும் தாமரைத் தடாகத்து நீரிலே பாய்ந்து ஆடுக'
இப்பாட்டிலே சிலேடையணி அமைந்துளது.

14-ஆம் பாட்டு:—

மாதர் குழுவை நோக்கி, ஒருத்தி கூறுவதாக அமைந்தது இது.

'காதிற்பொருந்திய தோடு ஆடும் வண்ணமாகவும் உடம்பிலே அணிந்து கொண்டுள்ள பொன் அணிகள் ஆடும் வண்ணமாகவும் கூந்தல் மாலை ஆடவும் வண்டுக் கூட்டம் ஒலிக்கவும் பொய்கைக் குளிர்நீரில் மூழ்குவோம்; சிற்றம்பலத்தைப் புகழ்ந்து பாடுவோம், வேதப் பொருளாவானைப் பாடி, அன்னான் அப்பொருளாய் நிற்கும் முறையையும் பாடுவோம், அவ்விறைவனது ஆற்றலையும் கொன்றை மாலையினையும் பாடுவோம், அக் கடவுள் அனைத் துலகுயிர்களுக்கும் ஆதியான முறையையும் அந்தமான முறையையும் பாடுவோம், நம்மை வேறுபடுத்திச் சிறப்பாக வளர்த்துக் காப்பாற்றிய அம்மையின் திருவடிச் சிறப்பினையும் பாடுவோம்.'

15-ஆம் பாட்டு:—

இது, ஒருத்தியைப் பார்த்து மற்ற மாதர்கள் கூறுவதாக அமைந்துள்ளது.

'நங்கை மீர், ஒவ்வொரு சமயமும் எம்பெருமான் என்று பலகாலும் கூறி, நம்பெருமானுடைய புகழினை வாய் ஓயாது கூறுகின்றாள்; ஆனந்தக் கண்ணீர் பெருக நிலத்தின் மிசை எழாது வணங்குகின்றாள்; பிறதெய்வம் தொழுகின்றிலள்; இங்ஙனம் இந்நங்கை இறை பித்தேறிட இவளை ஆண்டருளிய அவ்விறைவன் திருவடிகளையும் நாம் வாயாரப் பாடி நீராடுவோம்.'

16-ஆம் பாட்டு:—

இது, மாதர் மழையைப் பார்த்துக் கூறுவதாக அமைந்துளது.



மலையடிவாரமும் மலைமேல் ஏறும் பாதையும், கோபுரங்களும். (திருப்பதி)

இருந்து கொண்டே இருக்கும். உலகத்துச் சிற்றின்பங்களால் படியும் வண்டலாகிய எண்ணங்கள் சித்தத்திலே கிடந்து கசக்கும். இறைவனோ அந்தக் கசப்பைப் போக்கித் தித்திக்கிறவன்.

'தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே'

இறைவன் எல்லோருடைய உள்ளத்திலும் இருக்கிறான். ஆனால் அவர்களுக்கு அவன் புலப்படுவதில்லை. பெரிய வீடுகட்டி மின்சாரக்கம்பிகளும் விளக்குகளும் விசிறியும் போட்டாலும் பயன் இல்லை. பொத்தானை அமுக்கினால் விளக்கு எரியாது; விசிறி சுழலாது. மின்சார சக்தி வந்தாலொழிய, இணைப்புக் கொடுத்தாலொழிய எத்தனை காண்டில் பவர் உடைய விளக்கானாலுங்கூட எரியாது. இறைவன் நம் உள்ளத்தில் இருந்தாலும் அவனால் அடையும் ஆனந்தத்தை எல்லோரும் பெற இயலுவதில்லை. உள்ளத்தில் அன்பு என்ற மின்சாரத்தை இணைத்தால் ஆண்டவனுடைய அருளின்பத்தைப் பெறலாம். அன்பு வளர்கின்ற உள்ளத்திலே ஆனந்தப் பழமாக, இன்பப் பெருங்கனியாக நிற்கிறவன் எம்பெருமான்.

'அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே'

சச்சிதானந்தப் பரம் பொருளாய்க் குணங்குறியிலா வஸ்துவாய், பக்தர்கள் சித்தத்தில் தித்திக்கும் தேனாய் இருக்கின்றவன் யாவரும் காணச் சிதம்பரத்தில் உள்ள சிற்றம்பலத்தில் வெளிப்படையாக நடனஞ் செய்யும் திருக்கோலத்தைக் காட்டுகிறான். அம்பலத்தை ஆடுகின்ற அரங்கமாகக்கொண்டு யாவரும் காண வெளியிலே வளர்கின்ற தெய்விக நடனத்தை அவன் செய்தருளுகிறான்.

## 'அம்பலம் ஆடரங்காக வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாய்'

அப்படிப்பட்டவனை நாமாக நினைத்துத் துதிப்ப தென்பது இயலாத காரியம். அவனே நம் நாவிற்குத் தூண்டுகோலாக இருந்து விளம்பினால் விளம்பலாம். நாம் விளம்புமாறு அவன் விளம்ப வேண்டும். அப்போதுதான் நம் நாக்கு எழும்பும். 'ஒளி என்றும் எங்கும் வளர்ந்து கொண்டே இருக்கும் விளக்குப் போன்ற சித்துருவே, என்றும் அழிவில்லாமல் நித்தியமாய் நிற்கும் சத் உருவே, புலன்களால் உணரும் உணர்ச்சிகளை முற்றும் கடந்த ஒரு பேருணர்வாகிய ஆனந்தமே, தெளிவின் உருவாக வளர்கின்ற பளிங்குமலையைப் போன்ற குணங் குறியிலாப் பரிசுத்தப் பரம்பொருளே, அறிவுடைய சித்தத்தில் உள்ள பழைய மாயைக்கசப்பெல்லாம் போக, தித்திக்கும் தேனே, அன்பு வளர்கின்ற அடியவர் உள்ளத்திலே இன்பங் கொழிக்கப் பழுத்த பழமே, திருச்சிற்றம்பலத்தை நர்த்தன சபையாகக்கொண்டு யாரும் காணும்படி வெளியிலே அருள்வளர வளர்கின்ற தெய்விகத் திரு நடனம் செய்தருளும் நடராஜப் பெருமானே! உன்னை வேண்டிக் கொள்கிறேன், அப்பனே! உன் அடியானாகிய நாயேன் உன்னை எப்படியெல்லாம் துதித்துப் பாராட்டி விளம்பவேண்டும் என்பதை அறியேன். அதை நீதான் சொல்லவேண்டும். தொண்டனாகிய நான் விளம்புமாறு நீ விளம்பியருளவேண்டும்.

இந்த அழகிய வேண்டுகோளையே திருவிசைப்பாவின் முதற்பாட்டுச் சொல்கிறது :

> ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
> உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
> தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
> சித்தத்துள் தித்திக்கும் தேனே

அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

வேதத்தைப்பற்றிப் பல இடங்களில் பலவகைச் செய்திகளைத் திருவிசைப்பாவில் காணலாம். சிதம்பரத்தில் வேதத்தில் வல்லவராகிய அந்தணர் வேள்வி செய்து இறைவனை வணங்குகிறார்களாம்.

"அருமறை அறைந்து, பிற மதி வழிநின்
றொழிவிலா வேள்விப் பெரியவர்"

என்று திருமாளிகைத் தேவர் பாடுகிறார்.

"அந்தியில் மறைநான் காரணம் பொதிந்த
அரும்பெறன் மறைப்பொருள் மறையோர்
சிந்தையில் அரும்பு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம்பலமே"

என்பது கருவூர்த் தேவர் வாக்கு.

"சாத்திரள் மறை ஓர்ந்து ஓமகுண் டத்து
நறுநெயால் மறையவர் வளர்த்த
தீத்திரள் அரும்பு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே"

என்றும் அவர் பாடுகிறார்.


திருப்பல்லாண்டு என்பது இறைவனது திருவருளிலே ஈடுபட்ட அன்பர்கள் அவனுடைய அருள் வெள்ளத்தை உலகத்து உயிர் அனைத்தும் பெற்று வாழவேண்டுமென்று விரும்புவார்கள். அநாதிபரவஸ்துவாய் உருவம், குணம், பெயர் முதலியன இன்றி வாக்குக்கும் மனதிற்கும் எட்டாதவனாய் நின்ற கடவுள் ஜீவர்கள் உஜ்ஜீவிக்க வேண்டி அங்கங்கே ஆலயங்களில் எழுந்தருளி யிருக்கின்றான். கருணைப்பெருக்கினால் அவ்வாறு எழுந்தருளிப் பற்பலத்

திருவிளையாடலைச் செய்தருளுகிறான். இந்த நிலை என்றும் பல்லாண்டு பல்லாண்டாக வாழ வேண்டும் என்று போற்றுவதே திருப்பல்லாண்டாகும்.

'அவனுடைய பஞ்சகிருத்திய நடனத்தைத் தரிசித்து இன்புறுவதற்கு இடமாகிய சிதம்பரம் நீடூழி நிலைபெற்று வாழவேண்டும்' என்று திருப்பல்லாண்டு ஆரம்பமாகிறது. 'நம்முடைய உண்மை உறவினராகிய பக்தர்கள் வளரட்டும், வஞ்சகர்கள் நம்முடைய கூட்டத்தில் இல்லாமல் போகட்டும். பொன்னாலாகிய நடன மண்டபத்துக் குள்ளே புகுந்து உலகமெல்லாம் விளங்கவேண்டுமென்று இறைவன் திருவுள்ளம் கொண்டான். அன்னம் போன்ற நடையையுடைய அம்பிகையுடன் அடியேங்களுக்கு அருள் புரிகின்ற பெருமான். இந்தப் பிறவியில் இந்த அற்புத நடனத் திருக்கோலத்தைத் தரிசித்து விட்டபடியால் இனிமேல் பிறவி எமக்கு இல்லை. அவ்வாறு பின்னைப் பிறவிகளையெல்லாம் அறுக்கும் வழியைக் காட்டியருளினவனும், நாம் தன்னை மறந்தாலும் எங்களை மறவாத பித்தனும் ஆகிய இறைவனுக்குப் பல்லாண்டு கூறுவோம்' என்று பாடுகிறார் சேந்தனார்.

மன்னுக தில்லை; வளர்க நம் பத்தர்கள்;
வஞ்சகர் போய் அகலப்
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்ன நடைமட வாளுமை கோனடி
யோமுக்கு அருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே!

பத்தாம் திருமுறையாகிய திருமந்திரம் என்பது திருமூல நாயனார் என்ற சித்த புருஷரால் பாடப் பெற்றது. அது 3000 பாடல்களை உடையது. ஒரு வருஷம் யோகம் புரிந்து அதன் முடிவில் ஒரு பாட்டுப் பாடி, மறுபடியும்



திருவண்ணாமலை, ஸ்ரீ அருணாசலேசுவரர் உள் ஸந்நிதி.

ஒரு வருஷம் யோகத்திலிருந்து அதன் முடிவில் ஒரு பாட்டுப்பாடி, இப்படியே ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு பாட்டாகப் பாடியதாகச் சொல்வார்கள். ஒரு வருஷம் சிந்தித்துப் பாடவேண்டிய சிறப்பு அந்தப் பாடல்களுக்கு உண்டு. இந்த நூல் ஒன்பது தந்திரங்களை உடையது. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நால்வகை நெறிகளையும் விரித்துக் கூறுவது, மிகவும் நுட்பமான பல செய்திகளைச் சொல்வது. பல யந்திரங்களைப் பற்றிய பாடல்கள் பல உண்டு. அழகான உவமைகளால் பொருளை விளக்கும் பாடல்களை இதில் காணலாம்.

குருவினுடைய கடாட்சத்தால் மல நோய் போய் ஞானம் பிறக்கும். இந்த உண்மையை அழகான உபமானத்தால் திருமூலர் விளக்குகிறார். ஆத்மாவினிடம் மலம் இருக்கிறது. ஆத்மஞானத்தால் அந்த மலம் போய் விடும். ஆனால் குருவினுடைய கிருபை இல்லாமல் ஆத்ம ஞானம் உண்டாவது இல்லை. சூரியகாந்தக்கல் இருக்கிறது. ஓர் அறைக்குள் அதைக் கொண்டுபோய் அதன் முன் பஞ்சை வைத்தால் ஒன்றும் நிகழ்வதில்லை. சூரிய காந்தக் கல்லுக்குத் தனியே பஞ்சை எரிக்க முடியாது. ஆனால் அதே சூரிய காந்தக்கல் சூரியனுக்கு எதிரே இருக்குமானால் பஞ்சை எரித்துவிடுகிறது. ஆசாரியனுடைய அருளால் ஆத்மா மலத்தைச் சுட்டெரிப்பது அது போன்றதே.

இப்படி உபமானம் சொல்கிறார் திருமூலர்!

சூரிய காந்தமும் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தம் சூழ்பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோல்
ஆரியன் தோற்றமுன் அற்ற மலங்களே.

இப்படிப் பல பல பாடல்கள் திருமந்திரத்தில் உள்ளன.

---

## மூன்றும் நாள்: மார்கழி மாதம் 12௳ (27—12—50) புதன்கிழமை.

இன்று காலை 8 மணிக்கு தெய்வ வணக்கத்துடன் மகாநாடு ஸ்ரீ சச்சிதானந்த ஸ்வாமிகள் அவர்களின் தலைமையில் கூடிற்று. 8 மணி முதல் 8-30 மணிவரையில் மாணிக்க வாசகர் திருப்பள்ளி எழுச்சியின் கருத்துரை சொல்லப் பட்டது. 8-30 முதல் 9 மணி வரை திருவிடைமருதூர் திரு. நடராஜ தேசிகர் அவர்களால் திருப்பள்ளி எழுச்சி பாராயணம் செய்யப்பட்டது. 9 முதல் 10 மணி வரையில் திருவெம்பாவை இசையுடன் போட்டிப் பரீக்ஷை நடந்தது. காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிந்தன.

மறுபடியும் மாலை 3 மணிக்கு மகாநாடு ஆரம்பிக்கப் பட்டு 3-30 முதல் 4-30 மணி வரையில் திருவிடைமருதூர் ஆதீனம் உயர் நிலைப்பள்ளி தமிழாசிரியர் திரு மகாலிங்க தேசிகர் அவர்களால் திருப்பள்ளி எழுச்சியின் சிறப்பு கூறப்பட்டது. 4-30 முதல் 5 மணி வரையில் திருப்பள்ளி எழுச்சி இசையுடன் பாராயணம் செய்யப்பட்டது. இத்துடன் மாலைக்கூட்டம் கலைந்து மறுபடியும் 7 மணிக்கு கூடிற்று. சாயந்திரம் 7 மணி முதல் 8 மணி வரையில தேவகோட்டை திரு சக்திவேல் பிள்ளை அவர்கள் திருவால வாயுடையார், காரைக்கால் அம்மையார், நக்கீரர், பட்டினத்துப் பிள்ளை முதலியோரின் திருவாக்கின் (11வது திருமுறையின்) சிறப்பைப் பற்றி ஒரு சொற் பொழிவு ஆற்றினர். 8 மணி முதல் 9-30 மணி வரையில் தாம்பரம் சைவ சமய பிரசாரகர் திரு சமரபுரி முதலியார் பெரிய புராணத்தின் (12வது திருமுறையின்) சிறப்பை விளக்கிப் பேசினர். இத்துடன் மூன்றும் நாள் கூட்டம் முடிவு பெற்றது.

சுபதினத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரில் பெரியாழ்வாருடைய நந்தவனத்தில் துளஸிச் செடியின்கீழ் பூமியின் அம்சமாக அயோநிஜையாய் அவதரித்தாள்.

## இவளுக்குத் திருநாமம் மூன்று.

இவள் அவதரித்தது முதல் துளஸிக்கு மணம்போல் ஸ்ரீரங்கநாதனிடத்திலேயே விசேஷ பக்தியோடு ஈடுபட்டிருந்ததால் **"ஸ்ரீஆண்டாள்"** என்றும், இவள் தந்தையான பெரியாழ்வார் பகவானுக்காக தொடுத்துவைத்த மாலையை அவர் இல்லாத ஸமயத்தில் தான் சாத்திக்கொண்டு தன்னழகைக் கண்ணாடியில் பார்த்து நான் ஸர்வேஸ்வரனுக்கு யோக்யையாக இருக்கிறேனா என்று நினைத்துப் பிறகு அந்த மாலையைப் பகவானுக்குச் சாத்தும்படி செய்ததால் "சூடிக் கொடுத்த நாச்சியார்" என்றும், எல்லோரும் உஜ்ஜீவிக்கும் படியான உயர்ந்த திருமொழிகளை உதவியிருப்பதால் "கோதை" என்றும் திருநாமம் விளங்குகிறது.

## இவள் அருளிச் செய்த பிரபந்தங்கள் இரண்டு.

முதலாவது ப்ரபந்தம் **திருப்பாவை 30** பாசுரங்கள் அடங்கியது. இரண்டாவது பிரபந்தம் நாச்சியார் திருமொழி. இதில் **143** பாசுரங்கள் உள்ளன. இந்தத் திருப்பாவை நாலாயிர திவ்ய ப்ரபந்தத்தில் நாதமுனிகள் என்ற ஆசார்யனால் முதலாயிரத்தில் இரண்டாவது ப்ரபந்தமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

## திருப்பாவையின் கருத்து.

ஸதாசார்ய உபதேசத்தால் "ஸ்ரீமந் நாராயணனே சேஷி, இதர சேதநவர்க்கமெல்லாம் அவனுக்குத் தாஸனாக இருந்து கைங்கர்யங்களைச் செய்யவேண்டும்" என்ற ஞானத்தைப் பெற்று மனம் தெளிந்து அதனால் அவனுடைய ஆக்ஞாநுக்ஞா கைங்கர்யங்களைத் தன்னைச் சேர்ந்தவர்களையும் கூட்டிக்கொண்டு பக்தியோடு செய்து ஆத்மா உள்ள வரையிலும் அவனுக்குத் தாஸனாக இருப்ப

தால் அதற்கு உசிதமான யாவதாத்மபாவியான - திரும்பி வராமல் எப்பொழுதும் செய்யும்படியான - கைங்கர்யத்துக்கு ஆசைப்பட்டு அவன் திருவடிகளில் சரணாகதி பண்ணித் தன்னைச் சேர்ந்தவர்களோடு அந்த எம்பெருமானை அடைவதே.

## ஆழ்வார்களைக் காட்டில் ஸ்ரீ ஆண்டாளுக்கு ஏற்றம்.

ஸம்ஸாரத்தில் தோன்றின ஆழ்வார்கள் எம்பெருமானால் ஞானத்தைப் பெற்றுத் தம் குறைகளை விண்ணப்பம் செய்தார்கள். இவள் தானே ஸர்வேச்வரனை திருப்பள்ளி உணர்த்தி விண்ணப்பம் செய்தது கொண்டாடத்தக்கது. ஆழ்வார்கள் ஸ்த்ரீத்வத்தை ஏறிட்டுக் கொண்டு அந்த பகவானை அநுபவித்தார்கள். ஆண்டாள் ஸ்திரீயாகவே இருந்ததால் விசேஷ ராகத்தோடும் ரஸத்தோடும் பகவானை அனுபவித்தது, பள்ளமடையில் தண்ணீர் பாய்வது போல் இயற்கையாதலால் மிகவும் கொண்டாடத்தக்கது தானே.

## ஆண்டாள் காத்யாயநீ விரதம் என்ற நோன்பை நோற்றதற்குக் காரணம்.

முன்காலத்தில் ஸ்ரீ கண்ணன் தன்னோடு ஒத்த பருவமுடைய இடைப் பெண்களைக் குறும்பு செய்ததினால் கோபவிருத்தர்கள் கூடிப் பெண்களைக் கண்ணன் கண்ணுக்கு இலக்காகாதபடி மறைவாக வைக்க, நாட்டில் மழையில்லாமல் ஜனங்களுக்கும் பசுக்களுக்கும் கஷ்டம் நேரிட்டதனால் இடையர்கள் பெண்களை மழைக்காக (காத்யாயநீ விருதம்) நோன்பு நோற்கச் சொல்லி ஸ்ரீ கண்ணனையும் ஸகாயமாக இருக்கவேண்டி கண்ணன் கையில் இப் பெண்களை ஒப்புவித்தார்கள். ஸ்ரீ க்ருஷ்ணனும் "பெண்காள், நோன்புக்கு குளிக்கலாம் 'டி பின் ராத்திரியில் நம்மை எழுப்புங்கள்!" என்று தன் திருமாளிகை சென்று உறங்குவான் போல் யோகு செய்கின்ற பெருமானை தங்கள் தங்கள் வீட்டுக்குச்

சென்ற பெண்கள் ஸ்ரீ க்ருஷ்ண குணசேஷ்டிதங்களில் ஈடுபட்டிருப்பவர்களை விழித்துக் கொண்டிருப்பவர்கள் விடியற் காலத்தில் பத்துப் பத்துப் பேர்களாக எழுப்பி எல்லோரும் சேர்ந்து ஸ்ரீ கண்ணனை எழுப்பித் தங்கள் நோன்புக்கு ஸாதநமான பறை என்ற வியாஜத்தினால் அபீஷ்டத்தை பெற்றார்கள் என்ற விஷயத்தை அறிந்த ஆண்டாளும் "மானிடவர்க்கென்றுப் பேச்சுப்படில் வாழகில்லேன்" என்று அருளிச் செய்தபடி எம் பெருமானையே அடைய விரும்பி அவனை அடையும் வரையிலும் உயிர்தரிக்கவேண்டி கோபிகைகளின் செய்கைகளை அநுசரித்து காத்யாயநீ விருதம் என்ற நோன்பில் பிரவிருத்தித்தாள். அந்தக் கோபிகைகளின் செய்கை காலாந்தரமானதால் ஸ்ரீவில்லிபுத்தூரை திருஆய்ப்பாடியாகவும், வடபெருங் கோயிலை நந்தகோபர் திருமாளிகையாகவும், வடபத்ரசாயியான எம்பெருமானை ஸ்ரீ கண்ணனாகவும், தன்னைக் கோபிகளுள் ஒருத்தியாகவும், மற்றவர்களை ஸகிகளாகவும் ஸ்ரீ ஆண்டாள் பாவித்தாள்.

## மடலூராமல் நோன்பு நோற்றதன் காரணம்.

ராஜ மஹிஷி உஞ்சவிருத்தி செய்தால் ராஜாவுக்கு லஜ்ஜாவஹமன்றோ? எம்பெருமான் ஸ்ரீ ராமனைப்போல் குணஹானிக்குப் பயந்தவனுமல்லன். இவள் மடலூரினால் தானும் மடலூருவான் என்பதில் ஐயமில்லை. ஆகையால் தன் ஸ்ரூபத்துக்கும் ஸ்வபாவத்துக்கும் தகுதியான இந்த நோன்பில் ப்ரவிருத்தித்தாள்.

## நோன்பு நோற்பது பெரியோர்களுக்கு வழக்கமுண்டு.

இந்த நோன்பின் பெயர் காத்யாயநீ வ்ருதம். "மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்" என்று தானே மேல் அருளிச் செய்கிறாள். மேலும் பூர்வமீமாம்ஸையில் முதல் அத்தியாயத்தில் ஹோளகாதி கரணத்தில்

இந்த அநுஷ்டானம் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது மஞ்சள் நீரை ஒருவருக்கொருவர் மேலே தெளித்துக் கொண்டு விளையாடுவது. ஆனால் இவர் இஷ்டம் வேறானதால் இந்நோன்புக்கு மழை பெய்யுமா என்றால் வ்ரதானுஷ்டானத்தால் ஏற்பட்ட இவர்களின் உடம்பு இளைப்பைப் பார்த்து மழை தானே பொழியும் என்பதில் ஸந்தேஹமில்லை.

## மார்கழி மாதத்தில் இந் நோன்பு அநுஷ்டானத்துக்குக் காரணம்.

தேவர்களுக்கு இந்த மாதம் விடியற்காலமானதாலும் "மாதங்களுக்குள் நான் மார்கழி மாதமாக இருக்கிறேன்" என்ற பகவானின் வார்த்தையினாலும், இந்த மாதத்தின் விடியற்காலத்தில் குளிர்ந்த நீராடி ஸர்வேச்வரனை மிகவும் பக்தியோடு வந்தித்து வாயார வாழ்த்தி பூஜித்தால் அவன் நமக்குச் சகலாபீஷ்டத்தைக் கொடுப்பானாகையாலும், விடியற் காலம் தாமரைப் புஷ்பங்கள் மலரும் ஸமயமானதாலும், பகவானுடைய திருக்கண்தாமரைமலர்களை உணர்த்த இதுவே காலமென்று உணர்த்துகிறார்கள்.

## இந் நூலுக்குத் திருப்பாவை என்பதற்குக் காரணம்.

இந் நோன்பின் விஷயங்களை இந்த நூலில் வெளியிடுவதால் இந்த நூலுக்கு அந்தப் பெயர் வழங்குகிறது.

## பாசுரங்களின் கருத்து.

(1) கோபிகைகள் ஸ்ரீக்ருஷ்ணனைப் பார்க்க முடியாமல் மறைத்து வைத்த காலம்போய் அவனை ஸேவிக்கவும் பாடவும் திருநாமங்களைச் சொல்லி வந்திக்கவும் வாயார வாழ்த்தவும் நல்லகாலம் வந்து நேர்பட்டதே என்று காலத்தைக் கொண்டாடி அவன் நாராயணனாகையால் ஸர்வ

சேஷியானதாலும் நம் இருப்பு அவனதீனமாக இருப்பதாலும் நம்மை ரக்ஷிக்கவல்லவனாகையாலும், வேறொருவனையும் ஆச்ரயிக்காமல் அவனையே ஆச்ரயித்த நமக்கே ஒரு க்ஷணமும் பிரியாததான தன் கைங்கர்யங்களைக் கொடுத்து ரக்ஷிப்பான் என்று பகவத் ஸ்வரூபத்தையும் பகவானைச் சரணாகதி பண்ணின பாகவதர்களுடைய ஏத்தமும் சொன்னார்கள்.

(2) இந்த பூமியிலேயே ஸ்ரீக்ருஷ்ணனை அநுபவிக்கக் கூடிய பாக்யவதிகளே, நம் நோன்பு முடியும் வரையிலும் சாஸ்திரத்தில் விதித்த கார்யங்களைச் செய்தும் நிஷித்த கர்மாக்களை விட்டும், சக்தி உள்ளவரையிலும் அவனை ஸ்தோத்ரம் செய்தால் உஜ்ஜீவிக்கலாம், நமக்கு இஷ்ட ஸித்தியும் உண்டாகும்.

(3) உலக விஷயங்களில் வைராக்ய பூர்வமாக பகவானை த்யாநம் செய்தால் சாச்வதமான பலம் வருவதோடு, நடுவில் வரக்கூடிய மழையினால் உண்டாகும் நெல், பசு முதலிய ஸம்பத்துக்களின் ஸமிர்த்தியும் உண்டாகும்.

(4) இத் திருவாய்ப்பாடியிலுள்ள இடையர்களின் இஷ்டத்துக்கு உசிதமாக எல்லா நாடுகளிலும் மழை பொழியவேண்டும் என்று பர்ஜந்ய தேவதையை பிரார்த்திக்கிற வியாஜத்தினால் ஸ்ரீ க்ருஷ்ணனைக் குறித்து தங்கள் இஷ்டத்தை வேண்டுகிறார்கள்.

(5) நம்முடைய சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும், கைங்கர்யங்களைச் செய்து ஸ்தோத்ரம் செய்தால் நமக்கு ஸஜாதீயனாக அவதரித்து மிகவும் ஸுலபனாக இருக்கும் கண்ணன் நம் பாபங்களைப் போக்கி அருள் புரிவான்.

(6) ஆறுவது பாசுரம் முதல் 15-வது பாசுரம்முடிய பத்துப் பாசுரங்களால் விடியற்காலத்துக்குரிய அடையாளங்களைச் சொல்லி ஸகிகளை எழுப்புகிறார்கள். 15-வது எல்லே என்கிற பாசுரத்தில் ஒரு பாகவதர் விஷயத்தில் இல்லாத பழியைச் சொன்னால் அந்தப் பரமபாகவதர் பதில்

சொன்னால் பாகவதாபசாரம் வரும் என்று இல்லாத பழியை ஏறிட்டுக்கொண்டு சாந்தமாக இருக்கிறார் என்று பாகவதர்களின் லக்ஷணத்தை வெளியிட்டாள்.

(16) ஸ்ரீ நந்தகோபர் திருமாளிகையில் வாசல் காப்பானை எழுப்பி "எங்கள் நோன்புக்கு ஸ்ரீ கண்ணன் நேத்தே பறை என்ற வாத்தியம் கொடுப்பதாக சொல்லிப் போந்தான். அவனைப் பரிசுத்தமாகத் திருப்பள்ளி உணர்த்த ஸ்தோத்ரம் செய்வதற்காக வந்தோம். முதல் முதலாகத் தடுக்காதே'' என்று விஞ்ஞாபனம் செய்து 17ல் ஸ்ரீநந்த கோபரையும் யசோதா பிராட்டியையும் பலராமனையும் ஸ்ரீக்ருஷ்ணனையும் எழுப்பி 18, 19, 20-ல் நப்பின்னைப் பிராட்டியை எழுப்பி உன் மணவாளனான ஸ்ரீ க்ருஷ்ணனைக் கொடுத்து எங்கள் அபீஷ்டத்தை பூர்த்திசெய்விக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்ளுகிறார்கள்.

(21) சத்ருக்கள் தங்கள் கர்வம்போய் உன் சரணாரவிந்தங்களில் படுகாடு கிடப்பதுபோல் நாங்களும் உனக்கு தாஸர்களாக வந்திருக்கிறோம், க்ருபை செய்யவேண்டும் என்று ஸ்ரீ கிருஷ்ணனைப் பிரார்த்திக்கிறார்கள்.

(22) நானே உலகத்தை ஒரு நாயகமாக ஆள்கின்றவன் என்ற அபிமானம்போய் மன்னர்கள் உன் திருப்பள்ளிக் கட்டிலின் கீழ் கிடப்பவர்கள் போல் நாங்களும் அஹங்காரம் போய் உன் திருவடிகளின் கீழ் வந்திருக்கிறோம். உன் தாமரைக் கண்களால் கடாக்ஷித்தால் எங்கள் பாபம் போகும் என்று விண்ணப்பம் செய்கிறார்கள்.

(23) ஸிம்மம் குஹையினின்றும் வெளிவருமாப்போல் நீயும் உன் திருப்பள்ளிக் கட்டிலிலிருந்து ஸபா மண்டபத்திற்கு எழுந்தருளி எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருள வேண்டுமென்கிறார்கள்.

(24) ஸ்ரீ க்ருஷ்ணன் கோபிகைகள் கேட்டுக்கொண்டபடியே ஸிம்மாஸநத்திற்கு எழுந்தருளும்பொழுது கண்ணனுடைய நடையழகில் ஈடுபட்டு மயங்கி, வந்த காரியத்தை மறந்து, கண்ணன் திருவடிகளை மங்களாசாஸநம் செய்து,

அடியோங்களுக்கு க்ருபை செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்கிறார்கள்.

(25) க்ஷத்திரிய ஸ்த்ரீயிடம் அவதரித்து வைச்ய ஸ்த்ரீயிடம் வளருகிற ஆச்சரியத்தையும் கம்ஸனைக் கொன்ற சேஷ்டிதங்களையும் ஸ்தோத்திரம் செய்து எங்களுக்கு இஷ்டமான உன் திவ்யரூபகுணானுபவங்களைக் கொடுத்து எங்கள் துக்கத்தைப் போக்கடித்து நித்யமான கைங்கர்ய ஸம்பத்தைக் கொடுக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறார்கள்.

(26) இந்த நோன்பு பெரியோர்கள் செய்வது வழக்கமுண்டு. ஆகையால் அதற்கு வேண்டிய சங்கம் முதலிய ஸாதனங்களை எங்களுக்குக் கொடுத்தருள வேண்டுமென்று பிரார்த்திக்கிறார்கள்.

(27) இந் நோன்பின் மூலமாக உன் விஷயமான ஞானம் எங்களுக்கு ஏற்பட்டிருப்பதால் ஸாக்ஷாத் தசையில் வரும் ஆநந்தத்தை இங்கேயே அடையவேண்டு மென்றும் நீ உடுத்துக் களைந்த ஆடையும் நீ அமுது செய்த ப்ரஸாதமும் வேண்டுமென்றும் பிரார்த்திக்கிறார்கள்.

(28) முதல் பாட்டில் "நாராயணனே நமக்கே பறை தருவான்" என்று நிச்சயித்தபடி அவனையே சரணாகதி செய்கிறார்கள். தங்களுக்குத் தத்வஞானம் இல்லை என்றும் நல்ல காரியங்களைச் செய்யவில்லை என்றும், மாடு மேய்க்கும் தொழிலைத் தவிர வேறு ஒன்றும் எங்களுக்குத் தெரியாது என்றும், இந்தக் கோபகுலத்தில் நீ அவதரித்து இவ்வளவு சுலபனாக இருக்கிறாய் என்ற ஸுக்ருதத்தை தவிர எங்களிடம் வேறு கைமுதலில்லை என்றும், நீ எவ்வளவு உயர்ந்தவனோ அவ்வளவு தாழ்மையை உடையவர் நாங்கள் என்றாலும் உனக்கும் எங்களுக்கும் உள்ள ஸம்பந்தம் ஒருக்காலும் விடாது, இடைப் பெண்களானதால் புத்தியில்லாமல் சிறுபேரால் அழைத்தாலும் அதை க்ஷமித்து எங்கள் அபீஷ்டத்தை கொடுக்கவேண்டுமென்றும் பிரார்த்திக்கிறார்கள்.

(29) திருப்பாவையின் கருத்தை உள்ளபடி வெளியிடும் பாசுரம் இது. 'ஹே க்ருஷ்ணா, உன்னை நாங்கள் வேண்டிக்கொள்வது என்னவென்றால் இதர விஷயங்களில் ஆசையைப் போக்கடித்தும் உன் திருவடிகளிலேயே கைங்கர்யம் செய்யும்படியும் செய்யவேண்டும். இவ்வுலகில் ஸர்வேச்வரனை நீ ஸ்ரீ க்ருஷ்ணனாக அவதரித்தது அடியோங்களை குற்றேவல்களை கொள்வதற்காகவே என்றும் உனக்கும் அடியோங்களுக்கும் உள்ள ஸம்பந்தம் இப்பொழுது வந்ததல்ல, நித்யமாக இருப்பதால் தாஸ்யத்தை சாச்வதமாகக் கொடுத்தருள வேண்டுமென்றும் விண்ணப்பம் செய்து முடிக்கிறார்கள்.

(30) முற்காலத்தில் கோபிகைகள் நோன்பின் வியாஜமாக தங்கள் இஷ்டத்தை அடைந்தாப்போல் தானும் அடைய விரும்பி தன் அபிப்பிராயத்தை இந்த 30 பாசுரங்களின் மூலமாக வெளியிட்டதனால் இந்தத் திருப்பாவை என்ற நூலைச் சிந்திப்பவர்கள் இந்த லோகத்திலும் மேல் லோகத்திலும் ஸ்ரீய:பதியினுடைய அருளைப் பெற்றுப் ப்ருஹ்மானந்தானுபவத்தைப் பெறுவார்கள் என்று ஸ்ரீ ஆண்டாள் இந்த நூலின் பலத்தைச் சொல்லி முடிக்கிறாள்.

விடியற் காலத்தில் இந்த 30 பாசுரங்களையும் அனுஸந்திக்கவேணும். எல்லாம் முடியாவிட்டால் சிற்றஞ் சிறுகாலே என்ற பாசுரத்தையாவது அநுஸந்திக்கவேணும். அதுவும் முடியாவிட்டல் இதை அநுஸந்தித்து ஈடுபட்டு இருந்த எங்கள் இருப்பையாவது அநுஸந்தித்தால் ஸர்வாபீஷ்டமும் உண்டாகும் என்று பாராசரபட்டர் என்ற மஹான் பேசியிருக்கிறார்.

இந்த ப்ரபந்தத்துக்கு முக்யமான பலம் "பாரார்த்யம்" அதாவது ஸ்ரீ நாராயணனுக்கே தாஸனாக இருந்து யாவதாத்ம பாவியான கைங்கர்யங்களைச் செய்வதுவே.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.


சுபமஸ்து.

# திருப்பாவை முதல்பதிகக் கருத்துரை

R. சேஷாத்திரி அய்யங்கார்,
திருவழுந்தூர் தேவஸ்தானம், மாயூரம்.

ஸ்ரீயப்பதியான ஸர்வேச்வரன் வராஹாவதாரம் பண்ணி ப்ரளயார்ணவமக்னையான ஸ்ரீ பூமி பிராட்டியை உத்தரிப்பித்து ஆச்வாஸம் பண்ண பூமிபிராட்டி அப்பொழுது பெருமானைப் பார்த்து ஸம்ஸாரார்ணவ மக்னர்களான சேதநர்களுடைய துக்கத்தைக் கண்டு ஸஹிக்க மாட்டாமல் அவர்களுடைய நிஸ்தரணோபாயத்தை அருளிச் செய்ய வேணுமென்று ப்ரார்த்திக்க, பெருமானும் பலபடியான உபாயங்களை அருளிச் செய்து கொண்டு, கடைசியாக அந்த்ய ஜாதியிலே பிறந்தானாய் தன்னாலே நம்பாடுவான் என்று அபிமானிக்கப்பட்டு அதையே தனக்கு அன்வர்த்தநாமமாவாக உடைய ஒரு விஷ்ணு பக்தன் தன் பக்தியின் மிகுதியாலே அநந்ய ப்ரயோஜநமாக தினந்தோறும் தன் புகழைப் பாடிக்கொண்டு திருக்குறுங்குடி என்னும் திவ்ய தேசத்தில் வசித்து வந்து, ஒரு ஸமயம் கார்த்திகை மாதம் சுக்லபக்ஷ த்வாதசியன்று ப்ராம்ம முகூர்த்தத்தில் எழுந்து பகவானைப் பாட வீணை பாணியாய் கிளம்பி வருகையில் மத்யே மார்க்கத்தில் ஒரு ப்ரும்மராக்ஷஸனால் தகையப்பட்டு, தான் பகவத்ஸந்நிதியில் வழக்கம்போல் இன்று பாடவேண்டிய பாட்டுக்களைப் பாடிவிட்டு அவச்யம் உனக்கு ஆஹாரமாக வருகிறேனென்று அநேக ஸத்யங்களைப் பண்ணிக் கொடுத்து, அந்த ராக்ஷஸன் அனுமதி பெற்று, போய் பகவானை விசேஷமாகப் பாடி ஸந்தோஷிப்பித்து, ஸத்யம் தப்பாமல் மீண்டு

வர, ராக்ஷஸனும் இவனுடைய பக்தியையும் ப்ராணனில் விரக்தியையும் கண்டு, இவன் மஹானுபாவனென்று நினைத்து இவனைச் சாப்பிடுவதை விட்டு, இவன் இன்று பாடின பாட்டின் பலத்தைத் தந்து, தன்னை கோரமான இந்த ராக்ஷஸ ஜன்மாவிலிருந்து விடுவிக்க வேணுமென்று நினைத்து, பலமுறைப் பாட்டில் ஒன்றாகிய கைசிகமென்னும் ஸ்வரத்தின் (பண்ணின்) ப்ரபாவத்தால் ராக்ஷஸனை கோரமான ராக்ஷஸ ஜந்மத்திலிருந்து விடுவித்து காலக்ரமத்தில் 'ஏதத்ஸாமகாயந்நாஸ்தே' என்ற நம் பெரிய வீடாகிய மோக்ஷத்தையும் கொடுப்பதாக நாம் முன்பு விபீஷணனுக்கு அபயப்ரதானம் பண்ணினாப் போலே பண்ணினான் காண், என்று பகவான் சொல்லக் கேட்டு, பூமிபிராட்டியும் எல்லா உபாயங்களிலும் இந்த கானரூபமான உபாயமே சிறந்ததாக திருவுள்ளம் பற்றி, இதைத் தான் பூலோகத்திலே அவதரித்து அனுஷ்டித்துக் காட்டி எல்லாரும் உஜ்ஜீவிக்கும்படி செய்ய வேணுமென்று திருவுள்ளம் பற்றி, அதற்கு தகுந்த ஸமயத்தை ப்ரதீக்ஷித்துக் கொண்டிருக்க, பின்பு கலியுகத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் என்கிற திவ்ய க்ஷேத்திரத்தில் அவதரித்து, மற்றையாழ்வார்களுடைய பக்தியைக் காட்டிலும் விஞ்சியதாய் ப்ரேமரூபாபன்னமான பக்தியினால் ஸ்வரூப ஞானத்தை மறந்து ரக்ஷ்யரக்ஷக பாவத்தை மாறாடி மற்றையாழ்வார்களைப் போலே எம்பெருமானிடத்தில் பகவத்குணானுபவமாகிற தங்கள் ஸத்தாஸம்ருத்திகளை ப்ரார்த்திக்காமல் அவன் திவ்யவிக்ரஹ ஸௌந்தர்ய ஸௌகுமார்யங்களில் மிகுந்த ஆழங்கால்பட்டு அவனுக்கு என்ன வருகிறதோ வென்று அதிசங்கை கொண்டு பல்லாண்டு பல்லாண்டு என்று அவனுடைய ஸத்தாஸம்ருத்திகளையே ப்ரார்த்தித்து அத்தையே தனக்கு தாரகமாகக் கொண்ட, மிகுந்த பகவத்விஷய ஆர்வத்தினால் பெரியாழ்வாரென்று அன்வர்த்தப் பெயர் பெற்ற விஷ்ணு சித்தர் என்ற பக்தர் க்ருஷ்ணனிடத்தில் பரம பக்தி கொண்டு சூட்டு நன்மாலைகள் தூயனவேந்தி விண்ணோர்கள்




மலையின்மேல் உள்ள முதற் கோபுர வாசல். (திருப்பதி)

நன்னீராட்டியுந் தூபந்தரா நிற்கவே, அங்கு ஓர் மாலையினினால் ஈட்டிய வெண்ணெய் போந்த க்ருஷ்ணன், தான் கம்ஸவதார்த்தமாக மதுரைக்கு எழுந்தருளினபோது பழைய சூட்டுநன்மாலைகளின் வாஸனை பின்னாட்டி தான் மாலாகாரர் க்ருஹத்திலே யெழுந்தருளி, மாலையை யாசித்து, ப்ரஸாதபரமௌ நாதௌ மம கேஹ முபாகதௌ - தந்யோஹம் அர்ச்சயிஷ்யாமி இதி மால்யோபஜீவநஹ என்று மாலாகாரரால் பரமப்ரீதியோடு புஷ்பத்தினால் அலங்கரிக்கப்பட்ட படியை அநுஸந்தித்து தானும் அவ்வூரில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் வடபத்ரசாயிக்கு நந்தவனம் செய்து புஷ்பகைங்கர்யம் செய்து கொண்டு வருகையில் ஸ்ரீபூமிபிராட்டி அந்த நந்தவனத்தில் துளஸி பாத்தியில் குழந்தை வடிவாய் எழுந்தருளியிருக்க, அதைக் கண்டு பெரியாழ்வாரும் தனக்கு தைவால்லப்தமானதென்று ஸந்தோஷத்தோடு அந்தப் பெண்ணை க்ருஹத்துக்கு எடுத்துச் சென்று தம் தேவிகளிடம் கொடுத்து, **கோதை** என்று திருநாமம் சாத்தி வளர்த்துக் கொண்டு வருகையில், அந்தப் பெண்ணின் ஜன்மமேபிடித்து வளர்ந்து வரும் பகவத் பக்தியைக் கண்டு களித்து பகவதவதார கதைகளை யெல்லாம் சொல்ல, அதைக் கேட்ட கோதை பரமபாகவதரான பெரியாழ்வாரின் புத்திரியாகையாலும், தன் ஜன்ம வைபவத்தாலும் க்ருஷ்ணனிடத்தில் பெருவேட்கை கொண்டு, அவனை எப்படியாகிலும் தழுவி முழுகி பரிமாறவேணுமென்று ஆசை கொண்டு, அது காலாந்தரமாகையாலே கூடாமையால் அவனும் கோபிகைகளும் ஜலக்ரீடை பண்ணின யமுனா நதீ, ஸஞ்சரித்த ப்ருந்தாவனம், கோவர்த்தனம் முதலிய இடங்களையாவது கண்டு ஆச்வாஸத்தையடையலாமென்று பார்த்தவிடத்திலும், அது தேசாந்திரமாகையால் அவனையே நினைந்து உள்கரைந்துருகி துர்பலையான தனக்குப் போக கால் நடை தாராமையால் மிகவும் தளர்ந்து, கடைசியாக க்ருஷ்ணன் ராஸக்ரீடையில் பிரிந்த போது கோபஸ்த்ரீகள் 'துஷ்டகாளிய திஷ்ட அத்ர க்ருஷ்

ணோஹம் இதி ச அபரா'—என்று க்ருஷ்ணனின் அவதார சேஷ்டிதங்களை அநுகரித்து தரித்த படியை உணர்ந்து, ஒரு ஸமயம் க்ருஷ்ணன் தன் அழகாலும் குணத்தாலும் திருவாய்ப்பாடியிலுள்ள பஞ்சலக்ஷங்குடியில் பெண்களை யும் பரவசப்படுத்திக் கொண்டிருக்கிற படியைக் கண்டு, கோபவ்ருத்தர்கள் க்ருஷ்ணன் மேல் அதிசங்கை கொண்டு பெண்கள் க்ருஷ்ணன் முகத்தில் விழிக்கக் கூடாதென்று, பெண்களை நிலவரைகளிலேயடைக்க, பெண்கள் பாக்கியத் துக்கு அடியனான க்ருஷ்ணஸங்கல்பத்தால் மழை யின்றிக்கேயொழிய, கோபவ்ருத்தர்கள் ஒன்று கூடி, பெண்கள் வர்ஷார்த்தமாக நோன்பு நோற்க கடவர்கள். இந்நோன்புக்கு க்ருஷ்ணன் ஸஹகரிக்கக்கடவன் என்று நிச்சயித்து க்ருஷ்ணனையும் பெண்களையும் அழைத்து நியமிக்க, க்ருஷ்ணனும் உடனே ஸம்மதித்தால் கோபவ்ருத் தர்களுக்கு அதிசங்கை அதிகரிக்கும் என்று ஈற்று மறுத்து, மருட்டியவர்கள் நிர்பந்திக்க ஒருவாறு ஸம்மதித்து, கோபர்கள் போனதும், க்ருஷ்ணன், பெண்களுக்கும் தனக்கும் ஸமாகமம் நேர்ந்ததை பெண்களுடன் ச்லா கித்து, பெண்காள் ஈ நாமிந்த இரவில் அதிசங்கை உண்டாகும்படி அதிக நாழிகை யிருக்கக் கடவோம் அல்லோம். ஆகையால் நீங்கள் உங்கள் க்ரஹம் போய் விடியற்காலம் எல்லாரும் எழுந்து நோன்புக்குக் குளிக்க நம்மை எழுப்ப வாருங்கள் என்று நியமித்து, தானும் பெண்கள் விச்லேஷம் பொறுக்க மாட்டாமே நப்பின்னை பிராட்டி திருமாளிகையிலே புக்கான். பெண்களும் பரஸ்பர ஸஹாயத்தால் அவரவர்கள் மாளிகையிலேபுக்கு, கண் உறங்காமையால் விழித்துக் கொண்டவர்கள் க்ருஷ்ண குணசேஷ்டிதங்களை நினைந்துகொண்டு கிடக்கிறவர்களை உணர்த்தி எல்லாரும் கூடி நந்தகோபர் திருமாளிகையிலே சென்று திருமாளிகைக்காப்பான், திருவாசல்காப்பான், நந்தகோபர், யசோதை, நப்பின்னை பிராட்டி, பலராமன் முதலியவர்களை எழுப்பி அவர்கள் புருஷகாரமாக க்ருஷ்ணனை எழுப்பி, நோன்பு என்னும் வ்யாஜத்தால்

ஸர்வஸ்வாமியான உனக்கு ஸ்வத்தான இந்த ஆத்மவஸ்து வானது தன் ஸ்வரூபத்துக்குச் சேர்ந்த உன் அடிமையையே பாவதாத்ம பாவி புருஷார்த்தமாக அடையும்படி செய்யவேணுமென்று பிரார்த்தித்து பெற்றார்கள் என்று பெரியோர்கள் சொல்லக்கேட்டு ஆண்டாளும் அத்தையே அனுகரிக்க மனோரதங் கொண்டு ஸ்ரீவில்லிபுத்தூரையே திருவாய்ப்பாடியாகவும் வடபத்ரசாயியையே கண்ணனாகவும், அவ்வூரில் பெண்களையே பஞ்சலக்ஷம் கோபிகைகளாகவும் தானும் அவர்களில் ஒருத்தியாகவும் பாவித்து அனுகரித்து தரிக்கப் பார்க்கிறாள்.

இப்பிரபந்தத்துக்குத் திருப்பாவை என்று பெயர். பாவை யென்றால் நோன்பாய் நோன்பின் ப்ரகாரங்களை அருளிச்செய்கையால் இந்த ப்ரபந்தத்துக்கு பாவை யென்று கார்யவாகுபெயர். திரு மேன்மை வாசகமாய் மேன்மை பொருந்திய பாவை என்கிறது. அதுவா, இந்நூலின் முப்பது பாட்டிலும் முடிவில் எம்பாவாய் என்று வருவதால் திருப்பாவை யென்று பெயர் பெற்றதாகவும் கொள்ளலாம். இந்த ப்ரபந்தத்துக்கு ஆமூலாக்ரமாக ஸமுதிதமான அர்த்தம் (பொருள்) முதல் ஐந்து பாட்டுக்களினால் நோன்பென்கிற வ்யாஜத்தால் குறிக்கப் பட்டுள்ள க்ருஷ்ணனுபவமாகிற மஹாபுருஷார்த்தத்துக்கு தங்களுக்கு வேண்டும் உபகரணங்களை ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டு, மேல் பத்துப் பாட்டுக்களால் பகவதனுபவத்துக்கு வேண்டிய ஞானபக்திகளின் பர்வபேதங்களமைந்த அதிகாரி விசேஷங்களை எழுப்பி, மேலில் பாட்டுகளால் அவ்வேர்ப அதிகாரிகளுடன் கூட்டி நந்தகோபர் துடக்கமானவர்களை யெழுப்பி நப்பின்னைபிராட்டி புருஷகாரமாக ஸ்ரீக்ருஷ்ணனை எழுப்ப, ஸ்ரீக்ருஷ்ணனும் திருப்பள்ளி யுணர்ந்து, வந்த கார்யத்தை விசாரித்து அருள, பெண்களும் நோன்புக்கு வேண்டும் உபகரணங்களை வெளிப்படையாக வேண்டி தங்களுக்கு உள்ளுரையான நித்யமான க்ருஷ்ண கைங்கர்யத்தை முடிவாகப்

ப்ரார்த்தித்து இப்ப்ரபந்தம் கற்றார்க்கு பலம் சொல்லித் தலைக்காட்டுகிறது.

## (முதல் பாட்டு)

இதில் முமுக்ஷுக்களாய் சரணாகதர்களாய் இருப்பவர்களுக்கு பகவதனுபவமே புருஷார்த்தமென்றிருக்கையும், எம்பெருமானே இதற்கு உபாயமென்று இருக்கையும், இந்த உபாயத்திற்கு அதிகாரிகளாகைக்கு இச்சையே போதும் என்பதையும் சொல்லி, கிருஷ்ணானுபவத்துக்கு நேர்ந்த கால விசேஷத்தையும் கொண்டாடுகிறார்கள். முதல் அடியால் காலத்தைக் கொண்டாடுகிறார்கள்.

**மார்கழித் திங்கள்:** மாஸானாம் மார்க்க சீர்ஷோஹம் என்று பகவத் அபிமானம்பெற்ற வைஷ்ணவமாஸம். அன்றிக்கே, நாளுக்கு ப்ராம முகூர்த்தம்போலே தேவதைகளுக்கு நாளாகிய வருஷத்துக்கு ப்ராம முகூர்த்த ஸ்தானமாகிய ஸத்வோத்தரமான காலம். அன்றிக்கே, ஸர்வவஸ்துக்களும் அங்குரிக்கும் காலமாகையாலே தங்களுடைய பகவதனுபவமாகிற மனீஷிதமும், பலோன்முகமாகக் கூடிய காலம் என்று மாதத்தைக் கொண்டாடுகிறார்கள். அதற்குமேல் **மதிநிறைந்த** சுபகாரியம் செய்வதற்கு விஹிதமான சுக்லபக்ஷமும் யாத்ருச்சிகமாக நேர்ந்ததே என்று பக்ஷத்தைக் கொண்டாடுகிறார்கள். அதற்குமேல் **நன்னாளால்** அனாதிகாலம் சப்தாதி விஷயங்களையே நோக்கிகொண்டிருந்தவர்களுக்கு பகவதனுபவருசி பிறந்த நாளிறே, நன் நாளாகிறது என்று அக்ரூரன், அத்யமே ஸபலம் ஜன்ம சுப்ரபாதாச மேநிசா என்று பகவத் த்வேஷியான கம்ஸன்சோறுண்டு வளர்ந்த எனக்கு கிருஷ்ணனோடு சமாகமம் பண்ண நல்விடிவு உண்டாவதேயென்று கொண்டாடினாப்போலே, இவர்களும் நாளைக்கொண்டாடுகிறார்கள். அதவா, க்ருஷ்ணனுடன் நம்மை சேரவொட்டாத கோபவ்ருத்தர்கள் தாங்களே க்ருஷ்ணனோடு சேருகைக்கு ப்ரமாணம் பண்ணிக்கொடுத்த நாளிதே யென்கிறார்கள். சக்ரவர்த்தி பெருமாள் பட்டாபிஷேகத்தை மந்திரிகளுடன்

ஆலோசனை பண்ணி, உடனே அந்த ஸமயம் நேர்பட்ட காலத்தை ஒரு ஸம்ருத்தியைப்பற்றி ஸந்தோஷத்தினால் சைத்ர ஸ்ரீமாநயம் மாஸஹ புண்யபுஷ்பித காநநஹ என்று கொண்டாடினாப்போலே இவர்களும் க்ருஷ்ணா னுபவமநோரத ஸமயத்தில் நேர்ந்த மாஸம் பக்ஷம் நாள்களை ஸந்தோஷத்தினால் கொண்டாடுகிறார்கள். **நீராடப்போதுவீர்.** ஏஷப்ரும்ம ப்ரவிஷ்டோஸ்மி க்ரீஷ்மே சீதே இவ ஹ்ரதே என்று பகவதனுபவத்தை நீராட்டமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறபடியால் நீராடப்போதுவீரென்று பகவதனுபவத்துக்கு இச்சையே அமையுமென்கிறார்கள். **போதுமினோ** என்று பகவதனுபவ நிஷ்டர்கள் கமனத்தைப் பார்க்க ஆசைப்பட்டு ப்ரார்த்திக்கிறார்கள். **நேரிழையீர்** இவர்கள் போதுமினோ என்று அழைத்தபின்பு அவர்கள் வடிவிலே பிறந்த விலக்ஷண சோபையை சொல்லுகிறது. அதவா, வஸதி ஹ்ருதிஸநாதனேச தஸ்மின் பவதிபுமான் ஜகதோஸ்ய ஸௌம்யரூபஹ- என்றாப்போலே, முன்புள்ள க்ருஷ்ணானுபவத்தால் உண்டான சோபை நித்யமாகப்ர காசிக்கிறதென்றும், சொல்லுகிறார்கள். **சீர் மல்கும்** க்ருஷ்ணன் ஸௌலப்ய குணம் பரமபதத்திலும் போய் அலையெறியும்படி பொங்கி வழிகை அஸங்குசித ஞானர்கள் வஸிக்கிற பரம பதத்திலே ஸௌலப்ய குணமானது பகல் விளக்குப்பட்டு இங்கு அந்தகார தீபம்போல் ப்ரகாசிக்கையாலே சொல்லுகிறார்கள். **ஆய்ப்பாடி,** பரமபதம்போலே அப்ராக்ருத தேஹ பரிக்ரஹம் பண்ணிக் கொண்டு போக வேண்டாதேயும் அயோத்யைபோல் ஞானாதிகர்களான வஸிஷ்டாதிகள் வஸிக்கிற ஊராய் இல்லாமலும் இடக்கையும் வலக்கையு மறியாத இடைச்சிகளும் இந்த ப்ராக்ருத சரீரத்தோடு க்ருஷ்ணானுபவம் பண்ணும் ஊர். **செல்வச் சிறுமீர்காள்** க்ருஷ்ண ஸமக்ஷயமாகிற நிலைநின்ற ஐச்வர்யத்தை உடைய லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பன்னஹ - அந்தரிக்ஷகதஸ்ரீமான், என்று ராஜ்யத்தை விட்டுப் பெருமாள் பின் சென்ற லக்ஷ்மணனையும் லங்காராஜ்யத்தை விட்டு ஆகாசத்திலே

நின்ற ஸ்ரீவிபீஷணனையும் ஸ்ரீமானென்கிறார் வால்மீகி. ஆகையால் பகவத் ஸம்பந்தமே இவ்வாத்மாவுக்கு நிலை நின்ற ஸம்பத்து. சிறுமீர்காள், க்ருஷ்ணனோடு ஒத்த பருவமானவர்களே என்று இவ்வளவாக பகவதனுபவாதிகாரிகளை பாக்யவதிகளென்று கொண்டாடுகிறார்கள்.

**கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்** என்று தொடங்கி உபாயபூதனான க்ருஷ்ண குணங்களை அனுஸந்தித்து ஹ்ருஷ்டராகிறார்கள். க்ருஷ்ணன் பிறப்பதற்கு முன்பு ஜீவஹிம்ஸையில் பயந்து பசும்புல்லைக்கூட மிதியாத நந்தகோபர் க்ருஷ்ணன் பிறந்தபின்பு வேலைக் கூராகக் கடைந்து கையில் வைத்துக் கொண்டு ஒரு சிறு எறும்பு குழந்தைமேல் ஊர்ந்தாலும் பெரிய ஸிம்மத்தின் மேல் பாய்வதுபோல் கொடுந் தொழிலைச் செய்யும்படியான ப்ரேமத்தை உடையவரும் பிள்ளையைப் பார்த்துக் களிப்பவருமாகிய ஸ்ரீ நந்தகோபரிடத்தில் வரும்போது அவர் ஹிதபரராகையால் அவரிடம் குமரனென்று விநயம் தோற்றவிருக்கும் இருப்பைச் சொல்லி அனுபவிக்கிறார்கள். அதாவது திருவாய்பாடியில் எல்லோரும் வந்து இவரிடம் க்ருஷ்ணனின் தீம்புகளைச் சொன்னால் க்ருஷ்ணனை தகுந்த சிக்ஷை செய்ய வேண்டுமென்று கோபங்கொண்டு க்ருஷ்ணனின் விநயத்தைக் கண்டு புகார் சொன்னவர்களையே பொடியும்படியாய் தோற்றுவனென்கிறது.

**ஏரார்ந்தகண்ணி யசோதை யிளஞ்சிங்கம்** அழுகையும் அஞ்சிநோக்கும் அந்நோக்கும் அணிகொள் செஞ்சிறுவாய் நெளிப்பதும் தொழுகையுமாகிய க்ருஷ்ணனுடைய பால்ய சேஷ்டிதங்களைப் பூர்ணமாயனுபவித்தல் ஆகிய அழகு பொருந்திய கண்ணையுடைய ப்ரியபரையான யசோதையின் கண்வட்டத்திலே ஸிம்மக்குட்டிபோல் செருக்கும் மேனாணிப்பும் தோற்றவிருக்கும் காம்பீர்யத்தை அனுபவிக்கிறார்கள். அதாவது, யசோதையிடம் வந்து எல்லோரும் க்ருஷ்ணன் தீம்புகளைச் சொன்னால் தான்ப்ரியபரையாகையால் அஞ்சவுரப்பாள் அசோதை யாணாடவிட்டிட்டிருக்கும் மென்கிறபடியே இவன் தீம்பில் தறுகண்

பேரும்படியே சொல்லுவனென்கை, படிறுபல செய்து இப்பாடி யெங்கும் திரியாமே கொடியேன் என் பிள்ளையைப் போக்கினேன் யெல்லே பாவமேயென்று க்ருஷ்ணன் பல அட்டூழியம் பண்ணிக் கொண்டு இவ்வாய்ப்பாடியிலே திரியாமல் ஆனிரை மேய்க்கப் போக்கினேனே யென்று தவிப்பளாம். **கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான்** ஆச்ரிதர்கள் தாபமெல்லாம் தீரும்படியான மேகம் போன்ற திருமேனியையும் வாத்ஸல்யத்தால் சிவந்த திருக்கண்களையும் ஸூரியன் போல் உஜ்வலமாயும் சந்திரன்போல் குளிர்ந்ததாயும் உள்ள திருமுகத்தையுமுடையவன் என்கிறார்கள். இந்நிர்தேசமானது தங்களை தன் திருமேனியால் ஆலிங்கித்து திருக்கண்களினால் கடாக்ஷித்து சத்ருக்களுக்கு அணுக வொண்ணாதபடி ப்ரதாபமுள்ளதும் அநுகூலர்களுக்குக் கிட்டி அநுபவிக்கத் தகுந்த குளிர்ச்சியை யுடையதுமாகிய திருமுகமண்டலத்தை அனுபவிக்க வேணுமென்றும் கருத்துக் கொண்டது. ஆக இதுகாறும், உபாய பூதனின் போக்யதையை அநுஸந்தித்துக் களித்தார்கள். இனி உபாயபோக்ய குணங்களைப் பேசுகிறார்கள். **நாராயணனே நமக்கே பறை தருவான்** ஸர்வஸ்மாத்பரனாய் ஸர்வரக்ஷகனாய் ஸர்வஸ்வாமியான நாராயணனே நமக்கே அவனாலேயே பேறு என்று உபாயாந்தரங்களைக் காற்கடை கொண்ட நமக்கே பறையென்று தங்கள் உள்ளுரையான பகவத் கைங்கர்யத்தைக் கோருகிறார்கள். **தருவான்** அவனையே உபாயமாகப் பற்றின நமக்குத் தர கடமைப் பட்டவன் நாராயணனே என்கிற ஏகாரத்தினால் ஸஹாயாந்தர நிரபேக்ஷனாய்ச் செய்வனென்கை.

பாரோர் புகழ க்ருஷ்ணனையும் நம்மையும் சேர வொட்டாதவர்கள் தாங்களே க்ருஷ்ண ஸஹாயத்தால் பெண்கள் நோன்பு நூற்றார்கள். நாட்டங்க அனுவ்ருஷ்டி தீர்ந்தது. ஸம்ருத்தமாயிற்று என்று கொண்டாடும்படி படிந்து இந்த நோன்பிலே முழுகி நீராடப் போதுவீர் போதுமினோ என்று அந்வயம். "ஏல் ஓர்" இரண்டும்

பாதபூரணம். **எம்பாவாய்** எங்கள் நோன்பு என்னுதல். **அல்லது எங்கள்** சந்தம் யென்னுதல்.

## (இரண்டாம் பாட்டு)

இப்பாட்டில் முமுக்ஷுவாய் சரணாகதனை அதிகாரிக்கு கர்த்தவ்யங்களையும் த்யாஜ்யங்களையும் சொல்லுகிறார்.

முதலில் வையத்து வாழ்வீர்காள் என்று வையம் என்கிற சப்தத்தால் உபய விபூதியையும் சொல்லி க்ருஷ்ண ஸௌலப்ய ஸௌசில்யாதிகள் பரமபதத்தில் யிருக்கும் நித்ய ஸூரிகளுக்கும் துர்லபமாகையால் இவர்கள் உபய விபூதிக்குள்ளும் பாக்யசாலிகளென்று கொண்டாடுகிறார்கள். பரமபதத்தில் நின்றும் ஜகத் ரக்ஷணார்த்தமாக திருப்பாற்கடலிலே எழுந்தருளி யோக நித்திரை யென்கிற வ்யாஜத்தால் ஜகத்ரக்ஷண சிந்தையைப் பண்ணிக் கொண்டு அத்தால் விலக்ஷண தேஜஸ்ஸையுடைய ஸர்வாதிகனை எம்பெருமானை ஸ்வயம் ப்ரயோஜனமாகப் பாடி. சாஸ்த்ரவிஹித ப்ராதஸ்நாநாதி நித்ய நைமித்தக கர்மங்களை யதாவத்தாக அனுஷ்டித்து பகவத் விஷயத்துக்குப் புறம்பான யோக்யாந்தரங்களையும் சாஸ்த்ர நிஷித்த விஷயங்களையும் விட்டுவிடவேணும். சிஷ்டாசாரமில்லாதவற்றைச் செய்யக்கூடாது, பொய்யையும் பிறர்க்கு அனர்த்தாவஹமான வார்த்தைகளையும் சொல்லக்கூடாது. ப்ரும்மசாரிகளுக்கும் சந்யாஸிகளுக்கும் கொடுக்க வேண்டிய ஸௌல்பமான பிச்சையையும் யோக்யர்களான பெரியோர்களுக்குக் கொடுக்கக்கூடிய யதேஷ்டதானங்களையும் பூர்ணமாக யதாசக்தி கொடுக்கவேணும் - என்று இந்த உஜ்ஜீவன ப்ரகாரங்களை நினைத்து ஸந்தோஷித்து நாம் நம் பாவைக்கு செய்யவேண்டும் காரியங்களை கேளீரோ யென்கிறார்கள். இதற்கு உள்ளுறை செய்யாதன செய்யோமென்று எம்பெருமான் 'வாத்ஸல்யாதி குணவிசிஷ்டனானாலும் ததியரை முன்னிட்டல்லது பற்றக் கடவோ

மல்லோம் என்றும் நிக்குறளைச் சென்றோமோ மென்றும் நாம் ஒருவர்க்கொருவர் குற்றங்களை க்ருஷ்ணன் ஸந்நிதியில் தெரிவிக்கக் கடவோம் அல்லோம் என்றும் ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி என்று விஸ்தாரமான பகவத்ஸ்வரூப ரூபகுண விபூதிகளையும் அனுஸ்வரூபர்களான பாகவதர்கள் குண விசேஷங்களையும் நம்மால் முடிந்தவரை உபதேசித்து இத்தனையும் செய்தும் ஒன்றும் செய்யப் பெற்றிலோமென்றிருக்க வேணுமென்கிறது. ஆகவே இப்பாட்டில் இவ்வதிகாரிகளுக்கு ஸம்பாவிதமான க்ருத்யா க்ருத்யங்களைச் சொல்லுகிறது.

## (மூன்றும் பாட்டு)

இப்படி எம்பெருமானே உபாயம் உபேயம் என்றிருக்கும் அதிகாரிகள் தங்களுக்கு பகவதனுபவத்துக்கு ஸஹகரித்தவர்கள் பக்கல் உபகாரஸ்ம்ருதியாலே அவர்களுக்கு வேண்டிய ஸம்ருத்தியை ப்ரார்த்திக்கக் கடவர்கள் என்கிறது.

த்ரிவிக்ரமனாய் ஓங்கி லோகங்களுக்கெல்லாம் தன் அரிய திருவடியைத் தூளிதானம் செய்த வள்ளலான க்ருஷ்ணனுடைய பேரை ப்ரீதிக்கு போக்கு வீடாகப் பாடி நாம் நம் நோன்பை அனுஷ்டித்தால் நாடெல்லாம் வெள்ளக்கோடும் வரக்கோடும் இல்லாமல் மாதம் மும்மாரி பெய்து வயலில் நெல் முதலிய தாந்ய ஸம்ருத்தியும் நாட்டில் நெய் பால் தயிர் நிறைந்த கோ ஸம்ருத்தியுமாகிய நீங்காத செல்வம் நிறையும் என்று தங்களுக்கு க்ருஷ்ணானுபவத்திற்கு உபகரித்த கோப வ்ருத்தர்களுக்கு வேண்டிய ஸம்ருத்தியைப் ப்ரார்த்திக்கிறார்கள்.

## (நாலாம் பாட்டு)

இப்படி பகவதனுபவ நிஷ்டர்கள் விஷயத்தில் பகவானுடைய ஆதிகாரிக புருஷர்களான பர்ஜன்யாதி தேவதை

கள் பகவத் பக்தர்கள் என்று ப்ரீதியினாலும் பீஷாஸ்மாத் வாதப்லவதே, பீஷோதேதி ஸூர்யஹ—என்றும் பயத்தினாலும் இவர்களும் க்ருஷ்ணனுமான ஸந்நிதியில் கிஞ்சித் காலம் பெறவேணுமென்று ப்ரார்த்திப்பார்கள் என்னுமிடத்தைத் தெரிவிக்கிறார்கள். ஏனெனில் த்ரவந்தி தைத்யாஹ ப்ரணமந்திதேவதாஹ என்றிரே ப்ரமாணம். பர்ஜந்ய தேவதை நான் செய்யக்கூடிய கைங்கர்யத்தை நியமிக்க வேணுமென்று ப்ரார்த்திக்க இவர்கள் ஆக்ஞையிடுகிறார்கள். ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களாகிய தொழிலை ப்ரும்மருத்திரர்கள் தலையிலே போட்டு பரிபாலனத் தொழிலை தானே நடத்திப்போகும் யெம்பெருமானைப் போல் நீயும் மழை பெய்தலாகிற பாலன விதியை கைக்கொண்ட ஆழி மழைக் கண்ணா என்று ஸம்போதித்து, உன்னுடைய ஔதார்யத்தில் ஒன்றும் குறையாமல் ஸமுத்திர மத்தியில் புகுந்து ஜலத்தைப் பூர்ணமாகமொண்டு கொண்டு ஆகாசமெங்கும் வ்யாபித்து பஹூஸ்யாமென்று ஜகத்தை ஸ்ருஷ்டிப்பதாக ஸங்கல்பித்துக்கொண்ட ஸர்வேச்வரன் திருமேனிபோல கருத்து விஸ்தாரமான தோளுடைய எம்பெருமானுடைய அழகிய திருக்கையில் திருச் சக்கரம்போல் மின்னி ஸ்ரீ பாஞ்சஜன்யம்போல் கம்பீரமாக கர்ஜித்து மூலபல யுத்தத்தில் பாணவர்ஷம் வர்ஷித்த ஸ்ரீ சார்ங்கம்போல் நாடு வாழும்படி மழையை வர்ஷிக்கவேணும். நாங்களும் நாம் நியமித்தபடி பர்ஜந்யன் தவர்ஷித்தானென்று மகிழ்ந்து மார்கழி நீராடுவோமென்கிறார்கள்.

## (ஐந்தாம் பாட்டு)

நாம் பரம மங்களமான பகவதனுபவத்தைக் காணக்கப் பாரித்துக்கொண்டு போனால் ச்ரேயாம்ஸி பஹூவிக்நாநி என்று விக்னம் காத்துக் கொண்டிருக்குமே. ஸர்வக்ஞரான வஸிஷ்டர் நிர்ணயம் பண்ணிய பெருமாள் பட்டாபிஷேகத்துக்குமன்றோ விக்னம் வந்தது. முதலில் ஏதாவது விக்ன

பரிஹாரம் பண்ணவேண்டாவோ வென்று சங்கைவர, நாம் நமக்கு அடைந்த பகவதநுபவத்தைப் பண்ண அந்த பகவதநுபவமே, பித்தரோகம் கொண்டவனுக்கு சேர் பாலும் கண்ட சர்க்கரையும் பருகினால் அது போக ரூபமாயும் வ்யாதி ஹரமாயும் ஆகுமாப்போலே போக்ய மாயும் விக்னஹரமாயுமாகும் என்று விக்ன பரிஹாரம் ஒன்று தேட வேண்டா வென்கிறார்கள். ஸர்வாதிகனான தான் தன் ஸௌலப்ய ஸௌசீல்ய குணங்களினால் பெண்களுக்குத் தோற்று நிற்கும் ஆச்சர்ய சேஷ்டிதங்களை யுடையவனும், வாமனாவதாரத்தில் வஸித்தாச்ரமமாயும் ராமாவதாரத்தில் லவணாஸுரனை ஸம்ஹாரம் பண்ணி சத்ருக்னன் வஸித்ததாயும், இந்த க்ருஷ்ணாவதாரத்திலுமாக பகவத் ஸம்மந்தம் மாறாத வடமதுரை என்னும் நகரத்தில் பெண்களுக்கு ஒத்த பருவமாய் யுவாவாய் விளங்குபவனும், பெண்களும் க்ருஷ்ணனும் மாறி மாறிக் கொப்பளிக்கையால் வந்த பரிசுத்தியையுடைய யமுனையின் கரையிலே பெண்களுடன் க்ரீடித்தவனும் ஆயர் குலத்திலே அவதரித்ததனால் தன் ஸௌலப்ய குணத்தினால் விளங்குபவனும், தாமோதரனென்று தன் வயிற்றில் யசோதை கட்டிய தழும்பினால் இப்படி ஸர்வோத்க்ருஷ்டவஸ்து இவளுக்குக் கட்டவும் அடிக்கவும் ஸுலபமாவதே இவள் வயிற்றின் பாக்யமென் என்று உலகத்தாரால் தாயின் குடலுக்கு மேன்மையை யுண்டுபண்ணியவனுமாகிய க்ருஷ்ணனை அனந்ய ப்ரயோஜனர்களாகிய நாம் பரிசுத்தமான புஷ்பங்களை ஸமர்ப்பித்து அவன் திருநாமங்களை வாய்படைத்த ப்ரயோஜனம் பெறும்படி பாடி மனஸினால் அவன் குணங்களை அநுஸந்தித்தால் நம் பகவதநுபவ விரோதிகளான பூர்வோத்தர பாபங்கள் தத்யதா இஷீகா தூலமக்நௌ ப்ரோதம் ப்ரதூயேத-ஏவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மான ஹ ப்ரதூயந்தே-என்கிறபடியே நெருப்பிலிட்ட பஞ்சுக் குவியல்போல உருமாய்ந்துபோகும் என்கிறார்கள்.

## (ஆறும் பாட்டு)

ஐந்து பாட்டுக்களால் பகவதனுபவத்துக்கு வேண்டிய உபகரகணங்களைச் சொல்லி, மேல் பத்துப் பாட்டுக்களால் முற்பட உணர்ந்தவர்கள், உறங்குகிறவர்களை எழுப்பு கிறார்கள். க்ருஷ்ணனிடத்தில் ப்ரேமையும் ஸம்பந்தமும் எல்லோருக்கும் துல்யமாயிருக்க தனித்தனியே போய் அனுபவிக்காமல் எல்லோரையும் அழைத்துக் கொண்டு போவது எதற்கெனில் பகவத்விஷயம் க்ஷுத்ர விஷயங் களைப்போலன்றிக்கே, அபரிச்சின்னமாய் அஸங்குசித ஞானர்களான நித்யஸூரிகளுக்கும் இமையோர் தமக்கும் செவ்வே நெஞ்சால் நினைப்பரிதால் வெண்ணை யூணென்று மீனச் சொல்லலேயென்கிறபடியே அனுபவிக்க நிலமல்லாத ஸௌலப்யம் இடக்கையும் வலக்கையு மறியாத கோபஸ்த்ரீகளுக்கு, துணை தேட்டமாகச் சொல்ல வேணுமோ. ஆகையாலே துணை தேடுகிறார்கள். அல்லாமலும் ஏகஸ்வாது நபுஞ்சீத என்று நிரதிசயமான போக்ய விஷயத்தை தனியே யனுபவிக்ககூடாதென்றும் நினைக்கிறார்கள். அல்லது, நல்ல வஸ்துவை ருசி உடைய வர்கள் இழக்க வேண்டி வருமே என்கிற ஆர்த்ரு சம்ஸ்யத் தாலும் எழுப்பத் தட்டில்லை. அன்றிக்கே செய்யாதன செய்யோம் என்று ததியரை முன்னிட்டல்லது க்ருஷ்ணனை அனுபவிக்கை ஸ்வரூப விருத்தமென்றும் நினைத்து ததியரை எழுப்புகிறார்கள். க்ருஷ்ணனிடத்தில் ப்ரேமை எல்லோ ருக்கும் துர்லபமாயிருக்க சிலர் உறங்கவும் சிலர் எழுப்பவும் காரணம், க்ருஷ்ண குணங்கள் சிலரை நஞ்சுண்டாரைப் போலே மயங்கப் பண்ணியும் சிலரை இருந்தவிடத்திலிருக்க வொட்டாமல் துடிக்கப் பண்ணியும் போடுகிறபடியால் சிலரை சிலர் எழுப்புகிறார்கள். இப்பாட்டில் பிள்ளா யெழுந்திராய் என்கையாலே பகவத் விஷயத்தில் புதிதாக இறங்கி அதன் முடிந்த நிலமான பாகவதானுபவத்தின் போக்யதையறியாத ஒரு அதிகாரி விசேஷத்தை எழுப்புகிறார்கள்.

விடிந்தமைக்கு அடையாளமாக பக்ஷிகளுணர்ந்து இரை தேடக் கூவிக்கொண்டுக் கிளம்பினதைச் சொல்ல அவை உங்கள் ஆரவாரம்கேட்டு எழுந்தனவென்று அந்யதா சங்கை பண்ண பக்ஷிராஜனுக்கு நிர்வாஹகனான பகவா னுடைய திருக்கோயிலில் ஆராதனத்திற்கு ஆஹ்வானம் பண்ணுகிற சங்கத்வநி கேட்கவில்லையோ வென்ன, அது யாமம் தோறும் ஊதப்படுகிற சங்கு விடிந்தமைக்கடை யாளமாமோ வென்ன, இந்த ஊரில் பகவதாராதன பரர்க ளான யோகிகளும் குணானுபவநிஷ்டர்களான முனிவர் களும் தாய் வடிவம் கொண்டு வந்த பூதனையின் நஞ்சு தோய்ந்த கொங்கை வழியே உயிரை உண்டு ஸம்ஹரித்து ஸ்தந்யார்த்தியாய் காலே உதைத்த வ்யாஜத்தாலே அநாயா ஸேந சகடாஸுரனை சிதிலமாக்கி பாற்கடலில் அனந்த சயனத்தின் மேல் ஜகத்ரக்ஷண சிந்தையிலமர்ந்து மத்ஸ்ய கூர்மாத்யவதாரங்களுக்கு நாற்றங்காலாயிருக்கும் ஸமுத்திர சாயியை தங்கள் ஹ்ருதய கமலத்தில் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு அந்த யோக நித்திரைக்குப் பங்கம் வராமல் கர்ப்பிணிகளைப் போல் மெள்ள வெழுந்து ஹரி யென்ற அவனுடைய ஆச்ரித விரோதி நிரஸந ஸ்வ பாவத்தை கீர்த்தனம் பண்ணும் பேரொலி எங்கள் நெஞ்சிலே புகுந்து ஆனந்திப்பித்தது. பாகவத போக்யதை யறியாத பிள்ளா யெழுந்திரா யென்கிறார்கள்.

## (ஏழாம் பாட்டு)

இப்பாட்டில் பாகவத விஷயத்தின் பெருமையை யறிந்திருந்தும் அதை மறந்து பகவத்குணானுபவமே பண்ணிக்கொண்டிருக்கும் அதிகாரி விசேஷத்தை பேய்ப் பெண்ணேயென்று சொல்லி இவளுடைய பாகவதப்ராவண் யத்தை நினைவு படுத்தி எழுப்புகிறார்கள். வலியன் பக்ஷிகள் உணர்ந்து கீசுகீசென்று அனக்ஷசரஸமாக தன்பேடைகளுடனே கலந்து தாங்கள் பிரியப் போவதை நினைத்து பேசினபேச்சின் பேரொலி ஸர்வ திக்குக்களிலும்

கேட்கவில்லையோ வென்ன, நீங்களிருந்தவூரில் பக்ஷிகளுக்கு உறக்கமுண்டோ வென்ன, இவ்வூரில் ஆயர் மாதர்கள் தங்களாபரணங்க ளொலிக்கும்படி கைகளைத் தயிரின் மிகுதியாலே ச்ரமப்பட்டு பேர்த்து ஸௌகுமார்யத்தாலே ஆயாஸத்தை யடைந்து மயிர் முடி நெகிழ்ந்து பரிமளம் வீசும்படி மத்தினாலே தயிர் கடைகின்ற உத்காயதிநாம ரவிந்தலோசனம் வ்ரஜாங்கனாநாம் திவமஸ்ப்ருச்த்வநிஹி தத்நச்ச நிர்மந்தன சப்தமிச்ரிதோ நிரஸ்யதே யேநதிசாம மங்களம்— என்று அமங்களஹரமான பேராவமும் கேட்டிலையோ வென்ன, இவ்வூரில் முப்போதும் கடைந் தீட்டிய வெண்ணெயன்றோ, இது விடிந்தமைக்கு அடையாளமோ, பகவந் நாமங்களைச் சொல்லுங்கோளென்ன, எங்களுக்கு ஸ்வாமிநியானவளே, நம்மை வாத்ஸல்யத்தாலே முகந்தோற்றாமே நின்று நமக்கு அந்தர்யாமியாய் ரக்ஷிக்கும் நாராயணனாய் அவ்வளவன்றிக்கே தன் ஸௌசீல்யத்தாலே நம் கண்ணுக்கு விஷயமாம்படி க்ருஷ்ணனாய்ப் பிறந்து நமக்கு க்ருஷ்ணானுபவ விரோதியான கேசியை நிரஸித்தவனைப் பாடவும் நீ கேட்டுக்கொண்டே விஜயத்தை யனுஸந்தித்துக் கொண்டே கிடக்கிறாயோ. நீ யெழுந்து பகவத்விஜயாநுஸந்தானத்தா லுண்டான தேஜஸாலே எங்களை உஜ்வலிக்கச் செய்ய வேணுமென்கிறார்கள்.

## (எட்டாவது பாட்டு)

ஞானீ த்வாத்மைவ மே மதம் என்று ஞானபக்தி வைராக்யங்களின் மிகுதியாலே க்ருஷ்ணனுக்கு மிகவும் அபிமதையாய் க்ருஷ்ண வால்லப்யம் பெற்ற அதிகாரி விசேஷத்தை எழுப்புகிறார்கள். கிழக்குதிக்கில் ஆகாசம் வெளுத்து விட்டது என்று விடிந்தமைக்கு அடையாளம் சொல்ல க்ருஷ்ண விரஹத்தால் வெளுத்த உங்கள் முகத்தின் ஒளி வானத்தில் ப்ரதிபலிக்கிறதே தவிர விடியவில்லை என்று அபலபிக்க எருமைகள் பனிப்புல் மேய விடப்பட்டு மேய்கின்றன. விடிந்ததென்ன உங்கள்

முகத்திலொளிபட்டு இருள் சிதறிப்போகின்றன, இது விடிந்தமைக்கடையாளமில்லை. எல்லாரும் வந்து விட்டார்களோவென்ன, உன்னை யொழிந்த சிறு பெண்களெல்லாம் பகவதனுபவத்துக்குப் போகையே ஸ்வயம் ப்ரயோஜனமாகப் போனார்கள். அவர்களைப் போகாமல் தடுத்து உன்னை எழுப்புவதே ப்ரயோஜனமாக உன் வாசலிலே வந்து நின்றோம். நமக்கு க்ருஷ்ணனுபவத்துக்கு இடைச்சுவராய் வந்த கேசியைக் கிழித்து நமக்கு உபகரித்தவனும் மல்லர்களை நிரஸித்து க்ருஷ்ணனுக்கு என் வருகிறதோவென்று வயிறுபிடித்த மதுரை ஸ்திரீகளைக் களிக்கச் செய்தவனும் ஜாதோஸி தேவதேவேச என்றும் ஆயர் புத்திரனல்லன் அருந்தெய்வமென்றும் பிறக்கும் போதே தேவாதிபத்வம் ப்ரகாசிக்கும்படி யிருந்தவனுமாகிய க்ருஷ்ணனை நாம் ப்ரீதிக்குப் போக்கு வீடாகப் பாடி நோன்பை மேற்கொண்டு அவனிருந்தவிடத்தே சென்று ஸேவித்தால் உபஸ்தேயைருப ஸ்திதஹ பத்யாம் அபிகமாச்சைவ ஸ்நேஹ ஸந்தர்சநேநச என்கிறபடியே நாம் ஆச்ரிதர்களிருந்தவிடத்தே போய் அவர்கள் கார்யத்தைத் தலைகட்ட வேண்டியிருக்க அவர்கள் ஆற்றாமையாலே நாமிருந்த விடத்தே வந்துவிட்டார்களே யென்று இரக்கப்படும் பணிதிவம் போனாலும் ஆந்ருசம்ஸ்யம் பரோதர்மஹ என்கிறவனுக்கு ஆந்ருசம்ஸ்யம் தவறுமோ? அவச்யம் க்ருபை பண்ணுவன்; ஆகையால் எங்களுக்கு கடைகயான நீ எழுந்திராய் என்கிறார்கள்.

## (ஒன்பதாம் பாட்டு)

இப்பாட்டில் அவனுடைய ரக்ஷகத்வத்தை உணர்ந்து நம்முடைய ரணபரம் அவனுக்கேயுள்ளது, நாம் பதற வேண்டா, அவன் திருவுள்ளம் போல் நடக்கவேண்டுமென்று சரைஸ்து ஸங்குலாங்க்ருத்வா லங்காம் பரபலார்தனஹ—மாம் நயேத்யதி காகுஸ்தஸ்தஸ்ய ஸத்ருசம் பவேத்—என்று பிராட்டியைப் போலே உபாயாத்யவஸாய

நிஷ்டையாயிருப்பா ளொருத்தியை எழுப்புகிறார்கள், பரிசுத்த மணிகளாகிய மாளிகையில் க்ருஷ்ணன் வந்தால் அனுபவயோக்யமாய் சுற்றிலும் மங்கள தீபங்கள் யெரிய தூபங்கள் பரிமளிக்க தூக்கத்தை உண்டு பண்ணும் படுக்கை மேல் நித்திரை செய்கின்ற மாமான் மகளே! மணிகளாகிய கதவின் தாப்பாளைத் திறக்க வேணு மென்கிறார்கள். இதனைக் கேட்டு மிவள் பேசாதே கிடக்கக் கண்டு இவள் தாயார் இத்தனை பேர்கள் அழைக்க நீ பேசாதே கிடப்பதென் என்று வினவ உடனே இவர்கள் மாமீர் அவளை எழுப்ப வேணுமென்று சொல்லி உன் மகள் வாகிந்திரியம் இல்லாதவளோ அல்லது ஊமையோ ஊமைக்கும் கேட்டு வந்து திறக்கலாம், அல்லது செவிடோ காதில் துளையில்லையோ, அல்லது அசதியோ அல்லது எழுந்திருக்ககூடாதென்று காவலிடப் பட்டாளோ; அதவா, பெருந்தூக்கம் கொள்ளும்படி மந்திரவாதம் செய்யப் பட்டாளோ என்று பலவாறாகச் சங்கிக்க அவள் தாயார், அப்படி யொன்றுமில்லை; இவள் உடனே எழுந்திருக்க நீங்கள் பகவன் நாமங்களைச் சொல்லுங்கள் என்று சொல்ல, உடனே இவர்களும் அபலைகளான தங்களை, தன் குண சேஷ்டிதங்களாலே வசப்படுத்திக்கொண்ட ஸௌலப்யகுணத்துக்கும் இந்த ஸௌலப்ய குணத்துக்கு அப்யாஸ ஸ்தானமான ஸ்ரீயப்பதித்வமாகிற மேன்மைக்குத் தகுதியான வாஸஸ்தானமாகிய வைகுண்டாதிபத்யத் துக்கும் வாசகங்களான திருநாமங்கள் ஆயிரக்கணக்காகச் சொல்லியாய் விட்டது. ஆகையால் எழுந்திருக்கச் சொல்லவேணுமென்று சொல்லி ஈச்வரனுடைய ரக்ஷணைத் தில் துணிவுகொண்ட அதிகாரி விசேஷத்தை எழுப்பு கிறார்கள்,

## (பத்தாம் பாட்டு)

இப்பாட்டில் நோற்றுச் சுவர்க்கம் புகுகின்றவம்மனாய் என்பதால் க்ருஷ்ணன் திருமாளிகைக்குப் பக்கத்துத்

திருமாளிகையாட் இவர்களைப்போலே ஸமயம் பார்க்க வேண்டாதே, க்ருஷ்ணானுபவமாகிற ஸுகத்தை இடைவிடாமல் இடைஞ்சலில்லாமல் அனுபவிக்கிற அதிகாரி விசேஷத்தை எழுப்புகிறார்கள். நோன்பு நோற்று பிறகு அடையக்கூடிய க்ருஷ்ணானுபவமாகிற சுகத்தை இடைவிடாதேயனுபவித்துக் கொண்டிருக்கிற பாக்யவதியே யென்றும் எங்களை விட்டு நீ தனியே க்ருஷ்ணானுபவத்தைப் பண்ணுவது தர்மமோ வென்றும் சொல்லுகிறார்கள். அவளும் இவர்கள் பேச்சிலினிமையாலே பரவசப்பட்டுப் பேசாதே கிடக்க, கதவைத் திறக்காவிடினும் உள்ளிருந்தபடியே வார்த்தையாவது சொல்லக்கூடாதோ வென்றும், உன் உடம்பை க்ருஷ்ணனுக்குக் கொடுத்தால் வார்த்தையாவது எங்களுக்குக் கொடுக்கக்கூடாதோ வென்றும் இன்னாப்புத்தோற்றச் சொல்ல, அவளும் க்ருஷ்ணனிங்கு உண்டோ வென்ன நாற்றத்துழாயென்று இவர்களும் அவனுடைய பரிமளம் மிகுந்த திருமுடித் திருத்துழாய் வாஸனையையும் உன்னால் ஒளிக்கப் போமோ வென்ன, அவளும், கட்டுங்காவலுமாகிய இந்த ஊரிலே இங்கே க்ருஷ்ணனுக்கு ப்ரஸக்தியேதென்ன, இவர்களும் எங்களைப் போலே அவனுக்குக் கதவு திறந்துகொண்டு வரவேணுமோ, நாராயணனன்றோ, அவன் நினைத்த விடத்தில் தோன்றுவனன்றோ, வ்யாப்திக்கு ப்ரயோஜனம் என்ன, அவளும் மறுமாற்றம் சொல்ல வழியில்லாமல் படுக்கையில் படுத்துக் கொண்டு தூங்குபவள்போல் குறட்டைவிட, அதுகேட்டு இவர்கள் ராமோ விக்ரஹவாந்தர்மஹ என்று நம்முடைய அபேக்ஷிதங்களெல்லாம் தரும் தர்ம ஸ்வரூபியான சக்ரவர்த்தித் திருமகனால் முன்பு ஒருநாள் பெருமாளையும் பிராட்டியையும் பிரித்து யுத்தத்தில் பெருமாள் அம்புக்குத் தோற்று ப்ராணனைக் கொடுத்த கும்பகர்ணன் தூக்கத்தில் உனக்குத் தோற்று தூக்கத்தையும் உனக்கே தந்து போனானோ. பிராட்டி யொருத்தியையே பிரித்தது கும்பகர்ணன் துயில். இந்த ஊர் முற்றிலும் பிரித்தது உன் பெருந்துயில் என்று சொல்ல, உடன், இவர்களின்

கொடுமைப் பேச்சுகளைக் கேட்டு எழுந்திருப்போமென்று சோம்பல் முறித்தாள். இதனையறிந்த இவர்கள் ஆற்ற வனந்தலுடையாய் என்று அவளுடைய மிகுந்த அசதியையும், அப்போதைய தேஹகாந்தியையும் ஜன்னல் வழியே கண்டு அருங்கலமேயென்று ஸம்போதித்து நாயக ரத்தினமில்லாத ஹாரம் போலே இருள் மூடிக்கிடக்கிற இப்பெண்கள் திரளை நீ வந்து புகுந்து ப்ரகாசப் படுத்த வேணுமென்று ஆவலுடன் அழைக்க, உடனே அவளும் இருந்தபடியே துணுக்கென வரப்புறப்பட்ட இவர்களும் தேற்றமாய் வந்து திறவென்கிறார்கள். அதாவது தடுமாறாதே தெளிந்து வந்து திறவென்கிறது. அதவா, ஸாப்ரஸகலந்தி என்கிறபடி யில்லாமல் ஊராகத் திரண்டு கிடக்கிறது. ஸதஸ்யயாய் வந்து திறவென்றுமாம். ஆக இதுவரை ஐந்து பாட்டுக்களால் ஐந்து அதிகாரி விசேஷங்களை எழுப்புகிறார்கள்.

# ஸ்ரீ ஆண்டாள் சிறப்பு

சொற்பொழிவாளர்:
எஸ். டி. ஸ்ரீனிவாஸாசாரியார்,
உபதலைவர், அரசர்கல்லூரி திருவையாறு

மனிதனுடைய கல்பனைக்கும் எட்டாத காலந் தொடங்கி சேதனர்களுக்குத் தத்வஹித புருஷார்த்தங்களை உபதேசித்து வந்த மஹாத்மாக்களின் பூஜிக்கத் தக்க வரிசையில், சிற்சில நாரீமணிகளும் விளங்கி வந்தனர் என்பது ச்ருதிப்ரஸித்தம். அப்படிப்பட்ட மஹிளா மணிகளின் ஸந்ததியிலே வைத்து மனிதவர்க்கம் என்றும் மறவாமல் போற்றத்தக்கவள் ஸ்ரீ ஆண்டாளாகும். இவ்வாண்டாளது சிறப்பு யாது? இவர் சேதனவர்க்கத்திற்குச் செய்த உபகாரம் யாது?

சேய் நோய்க்குத் தாய் மருந்து அருந்துமாப்போல, பவரோகத்தால் பீடிக்கப்பட்ட கோடாநு கோடி ஜீவராசிகளின் துயரத்தைக் கண்டு அதைத் தீர்ப்பான்வேண்டி இப்பெருமாட்டி "ஹ்ரீஸ்சதே லக்ஷ்மீஸ்சபத்ந்யௌ" என்றபடி ஸர்வேச்வரனுடைய திவ்யமஹிஷியாயிருந்தும் க்ஷமை என்னும் குணத்திற்கு ஏகநிதானமாயிருந்தும், உபய விபூதியின் அனுபவத்தில் நிலைபெற்றவளாயினும், இந்த நிலையில் மாத்திரம் த்ருப்தி பெறாமல், சேற்றில் விழுந்த குழந்தையை எடுக்கும் தாய் தானும் சேற்றில் இறங்குவது போல், இம் மண்ணுலகில் வந்து பிறந்தார். நித்ய விபூதியின் ஆனந்தமயமான போகங்களைவிட்டுக் காமக்ரோதங்களுக்கு ராஜதானியும் துக்கமயமானதுமான இந்த லோகத்தில் அவர் வந்து பிறந்த ஒரு தன்மையை வர்ணிக்க யாரால் முடியும்?

ச்ருதிப்ரோக்தமான வர்ணாச்ரம அனுஷ்டானத்துடன் இயைந்த பக்தி மார்க்கம் ஸர்வஸாதாரணமல்லவென்றறிந்து மஹாபலத்தை எளிதில் யாவரும் பெறவேண்டுமென்னும் தயையினால் தூண்டப்பட்ட மஹாசயத்துடன் இவர் ஸர்வேச்வரனை அடைவதற்குத் தம் வாழ்வினாலும் அதைப்போலவே இனிய உபதேசத்தினாலும் உபாயத்தைக் காட்டி அருளினார். மனிதன் உணர்ந்து கொள்ளவேண்டிய பொருள்கள் ஐந்து என்பர் பெரியோர். (1) ஸர்வசக்தனாய், ஸர்வத்ர ஸன்னிஹிதனாய், ஸர்வசேஷியாய் ஒரு ஜகன்னியந்தா உண்டு, (2) அவனுக்குச் சேஷபூதமாய் ஞானஸ்வரூபனாய் நித்ய நிர்மலனாய் ஆத்மா என்றொரு வஸ்து உண்டு, (3) இந்த ஆத்மாவாகிற சேதனன் ஸர்வேச்வரனுடைய கோபத்தை மாற்றி அவனுடைய ஸௌகைக பலமான திவ்ய கைங்கர்யங்களில் ஈடுபட்டு, (4) அதற்கு இடையூறான காமாரிஷட்வர்க்கங்களின் ஆதிராஜ்யத்தை ஒழித்து, (5) நித்யமாய் ஆனந்தமயமாய், அபுனராவ்ருத்தியுதமான திவ்யலோக விசேஷத்தில், ஸர்வேச்வரனுடன் "பரமம் ஸாம்யமுபைதி" என்ற ச்ருதி மஹிதமான பதம் பெற்று ததந்த்ர: சாமகாயந்தே' என்று ததைகபரனாய் ஸர்வேச்வரனுடைய அகுண்டிதமான திவ்யாநுபவ பரம்பரையில் முழுகிக்களிப்பது. இதை அர்த்தபஞ்சகம் என்பார்கள். ஸ்வஸ்வரூபம் பரஸ்வரூபம், உபாயஸ்வரூபம், பலஸ்வரூபம், விரோதிஸ்வரூபம். இதைத் தம்முடைய ஆச்சர்யமான வாழ்க்கையாலும் அதைப்போலவே ஆச்சர்யமான ஸூக்த ரத்னங்களாலும் காட்டி அருளின சிறப்பே இம்மாதரசியைச் சாரும். தம்மை ஸர்வேச்வரனுக்கு உரித்தாகிய ஒரு திவ்யஹவிஸ்ஸாகவும், இவ்வத்யத்புதமான பொருளைக் காமக்ரோதாதிகளில் ஈடுபடுத்தல் மிகவும் இழிவென்றும், அவனையே திருமணம் புரியும் நோன்பில் ஈடுபட்டு வெற்றியும் பெற்றார். மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன் என்னும் இவருடைய ஒரு சிறு வாக்கியத்தில் உலகத்தில் கொந்தளிக்கின்ற துக்கத்ரயத்

திற்கும் அத்யாச்சர்யமான திவ்யௌஷதம் தாண்டவ மாடுகிறது. மனிதன் தெளிய வேண்டியது தத்வ, ஹித, புருஷார்த்தமாகிற மூன்று தானே. இம்மாதாசி நாரா யணனே நமக்கே பறைதருவான் என்று தத்வத்தையும், "நீராடப்போதுவீர் பங்கயக்கண்ணனைப் பாடேலோ ரெம்பாவாய்" என்று ஹிதத்தையும், "தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து" "என்றுந் திருவருள் பெற்றின்புறுவரெம்பாவாய்" என்று ஐஹிக ஆமுஷ்மீக இன்பங்களான புருஷார்த்தத்தையும் எடுத்துக் காட்டினார். வாழ்க்கையை இவர் ஒரு போககலாபமாகக் காட்டவில்லை. எது வேண்டுமானாலும் செய்யலாம், நாமஸங்கீர்த்தனம், போதும், என்று சொல்லவில்லை. வாழ்க்கையில் சிறந்த தியாகங்கள் செய்து, வர்ணாச்ரமானுகுண அனுஷ்டானங்களை விடாது கைப்பற்றித் தத்வத்ரயம் தெளிய வேணும் என்கிறார்.

"நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமாறெண்ணி உகந்தேலோரெம்பாவாய்."

"பனித்தலை வீழநின் வாசல் கடைபற்றி" "குள்ளக் குளிரக்குடைந்து நீராடாதே பள்ளிக்கிடத்தியோ" எனும் இவைகளால் ஸதாசார ப்ராப்தமான அனுஷ்டானங்கள் ஸர்வேச்வரனுடைய முகோல்லாஸந் தருவன எனப் புகழப்பெறுகின்றன. மார்கழி நோன்பான ஸர்வேச்வர பஜனத்தின் பலமாக இவர்காட்டுவன உன் பொற்றா மரையடியே போற்றுவோம்; எற்றைக்கு மேழேழ்பிறவிக் கும் உந்தன்னோடுற்றோமேயாவோம். உமக்கே நாம் ஆட் செய்வோம். மற்றை நம் காமங்கள் மாற்றேலோ ரெம் பாவாய். மாறி மாறிப் பிறக்கும் சேதனனுக்கு இந்த மாதாவைப்போல் ஞானப் பயனளித்து உயிரூட்டும் சிறப்பு யாருக்கு உண்டு?

ஸ்ரீ ஆண்டாளுடைய தனியனிலிருந்து இவர் சேதனனுடைய பாரதந்த்ரியத்தை எடுத்துரைக்கவே திவ்யாவதாரம் செய்தது. ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தமானது உத்கோஷிக்கின்ற அந்தப்புரந்யாயம், அதாவது, பதிவ்ரதையான ஸ்த்ரீ தன் பர்த்தாவுக்குக் கீழ்ப்படிந்து தன் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளை அவன் ஆதீனமாக்குவது போலச் சேதனனும் ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் தனக்கென ஓர் விருப்பு வெறுப்பு இல்லாதனாகி, ப்ராணகாந்தனான ஸ்ரீய: பதியின் திவ்ய ஸங்கல்பத்திற்கு ஆதீனனாகவே இருந்து மகிழ்வது. இதனால் ஸ்ரீ வைஷ்ணவமே சுத்தாந்த ஸித்தாந்தமெனப் பெயர் பெற்றது. இந்தத் தத்வத்தை ஸ்ரீ ஆண்டாள் இரண்டு விதமாக விளக்கி அருளினார்.

(1) தம் அழகிய வாழ்க்கையினால்—பெண்பாலாகப் பிறந்தருளிய தம்மை

பதிஸம்யோகஸுலபம் வயோ வீக்ஷ்ய சமே பிதா |
சிந்தார்ணவகத: பாரம் நாஸஸாதாப்லவோயதா ||

என்கிறபடி தந்தை மனங்கலங்க எட்டுப் பிராயமுள்ள இக்குழந்தை ஸ்ரீ அழகியமணவாளனே தமக்கு உற்ற மணவாளனென்று சொல்லி, செத்துப் பிறந்து பாப பண்டாரங்களான இந்த ஸம்ஸார சேதனர்களிடத்தில் கணவன் என்ற கருத்தைச் செய்யாமல், அழகிய நம்பிக்கையுடன் ஸ்ரீ அச்சுதனையே மணம் புரிந்தாளென்பதை அகமகிழ்ச்சியுடன் காண்கிறோம். இதையே (2) தம் இனிய திருப்பாவை வாயிலாகவும் திருமொழி வாயிலாகவும் விளக்குகிறார்.

உந்தன் னோடுறவேல் நமக்கு
இங்கு ஒழிக்க ஒழியாது
உந்தன்னோடுற்றோமே ஆவோம்,
உமக்கே நாம் ஆட்செய்வோம்,

**மற்றை நம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்**

என்றும்

"வானிடை வாழும் அவ்வானவர்க்கு
மறையவர் வேள்வியில் வகுத்த அவி
கானிடைத் திரிவதோர் நரிபுகுந்து
கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப
மானிடவர்க்கென்று பேச்சுப்படில்
வாழகில்லேன் கண்டாய் மன்மதனே."

என்றும் கூறுகிறார். சேதனன் ஸர்வேச்வரனுக்கு என்றே பிறந்த கல்யாணப் பெண் என்றும் அவனைக் காமக்ரோதத்திற்கு உரிமையாக்குவது, ஸம்ஸார வாழ்வில் ஈடுபடுத்துவது என்பன, தெய்வத்திற்கு என வகுக்கப்பட்ட யக்ஞ ஹவிஸ்ஸை நரி முகர்ந்து பார்ப்பதுபோல என்கிறார். இதே கருத்தினை ஜானகியார் "த்வம் நீச சசவத் ஸ்ம்ருத: என்று ராவணனைச் சொல்வதால் விளக்குகிறார். ஸ்ரீ ருக்மிணிப் பிராட்டியும் சைத்யன் தம்மை மணந்து கொள்ளக் கூடாது என்பதை "மாவீரபாகமபிமாசது சைத்ய ஆராத் கோமாயுவத் மிருகபதேர் பலிம் அம்புஜாக்ஷ" என்கிறார். க்ஷத்திரிய குடும்பத்திலே திவ்யாவதாரம் செய்த ருக்மிணிக்கு அந்த உபமானம் பொருந்தும். கல்பசூத்ரவ்யாக்யாதாவாய், பஞ்சகாலபராயணராய் பரம்பரையாய் யக்ஞநிஷ்டர்களான விப்ரோத்தம குலத்தில் ஜனித்த ஸ்ரீ ஆண்டாளுக்கு இந்த உபமானம் பொருந்தும்.

ஸர்வேச்வரனிடத்தில் ஸ்ரீ ஆண்டாளுடைய ஸ்வயம் ப்ரயோஜனமான காதலோ வர்ணிக்கத் தக்கதல்ல. "ப்ரம்ஹந் க்ருஷ்ணகதா: புண்யா" என்றும் "மதுராதிபதேர் நிகிலம் மதுரம்" என்றும் ப்ரம்மத்தை ஸ்ரீ க்ருஷ்ணனைக் கண்டு அடையத் துணிந்தார். கண்ணனை அடைய எந்தச் செயலும் புரிந்து யார் காலிலும் விழத் துணிகிறார். காமனையும் சோமனையும் புகழ்ந்து யோற்று

கிறார். குயிலைக் கெஞ்சுகிறார். மேகத்தைத் துதிக்கிறார், தாம் வாழும் ஊரே ப்ருந்தாவனமாகவும் கோகுலமாகவும் கண்டார். கண்ணன் குழலோசை எழுப்பித் தம் துயரையெல்லாம் தணிப்பதைக் கேட்டார். இவ்வுலகப் பற்றை விட்டார். தந்தையையுந் தாயையும் நீத்தார். "என் கண்ணன் எங்கே உளன்? இங்கே போதக் கண்டீரோ?" என்று கேட்டுக் கொண்டே ஓடினார். இவ்வுலக மக்களுக்குக் கிடைத்தற்கரிய பெரும் பேற்றை இங்கேயே கண்டார். ப்ருந்தாவனத்தையும் கண்ணபிரானையும் நேரில் கண்டார். வாழ்வின் வெற்றியைப் பெற்றார். அவனுடன் கலந்து இன்புற்றார். கடவுளைக் குறித்து ஆத்மவஸ்து படவேண்டிய தாகமும், அவ்வேட்கையால் பிறக்கும் ருசியும் அதனால் வரும் அந்வேஷணமும் இம் மாபெருங்காதலால் ஈச்வரனது தயையும், அதனால் அவனை அடைவதான மஹாலாபமும் இப்பெருமாட்டியின் களங்கமற்ற இனிய வாழ்விலிருந்து வெளியாகின்றன. இவருக்கு ஸர்வேச்வரன் அருளியதானது தன்னை நினைப்பார்க்குத் தன்னையே தந்தருளும் கற்பகம் எனும் சிறந்த தத்வத்தையே விசதமாக்குகிறது. சாஸ்த்ரைகசாணர்களாய் தைவபீருக்களான எளிய ப்ராம்மண குடும்பத்தில் அவதரித்துத் தம் காதலால் கண்ணனை உருக்கி அவனது பட்டமஹிஷியாய் விளங்கின இச்சிறு குழந்தையின் நிகரில்லாத அன்பை எப்படி எடுத்துக் காட்டுவது? இவரது அன்பிற்கு இவ்வானமும் வையகமும் கடலும் நிகராவன அல்ல. மற்ற ஆழ்வார்களைவிட இவரது பெருமையை ஸ்வாமி நிகமாந்த தேசிகன் கோதாஸ்துதியில் "போக்தும் தவ ப்ரியதமம்" என்கிற ச்லோகத்தாலும், ஸ்ரீபெரியவாச்சான் பிள்ளை திருப்பாவை அவதாரிகையிலும் அருளிச் செய்தனர். இந்தப் பெருமாட்டியின் திவ்யாவதாரத்தால் தண்தமிழும் தையலரும் தமிழ்நாடும் ஒருபடி உயரக் கண்டோம்.



ஸந்நிதி மண்டபம் - வெளித்தோற்றம் (திருப்பதி)

# இடைப்பத்தின் சிறப்பு

இவ்விடைப்பத்தினால் ஸ்ரீ ஆண்டாள் தம்முடனொத்த தோழிப் பெண்களைத் திருப்பள்ளி உணர்த்தித் தாம் தொடங்கிய மார்கழி நோன்பிற் கலந்து மாதவனை ஆராதிக்குமாறு வேண்டுகிறாள். பனித்தலை வீழ நாட்காலை எழுந்து ஒவ்வொரு பெண்ணின் வீட்டு வாயிலில் நின்று மார்கழி மாதத்தின் குளிரில் நின்றும் வெருண்டு மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறிப் படுத்திருக்கும் பெண்களை எழுப்ப என்ன அன்பு என்ன உறுதி என்ன சொற்றிறம் வேண்டுமென்பதை யோசித்துப் பாருங்கள்! இந்நோன்பு என்கிற வ்யாஜமாக ஸ்ரீ ஆண்டாள் உலகத்திலுள்ள சேதனர்களையே எழுப்புகிறாள். அவித்யையாகிற இருள் பரந்து கிடக்கிறது. காமக்ரோதாதிகளாகிற சூழ்நிலையில் ஸ்வஸ்தமாக உறங்கி மயங்கிக் கிடக்கிறது சேதன வர்க்கம். காலஸர்ப்பத்தின் மண்டலத்தில் தலை வைத்துக் கிடப்பதுபோலும், பரவிய நெருப்புப் பற்றிக் கிடக்கும் வீட்டில் படுத்தது போலும் கிடக்கும் சேதனனை அவன் இருக்கும் சூழ்நிலையில் வந்து, கருணையே வீசுந் தன் திருமுக வொளியைக் காட்டி, தன் இனிய குரலின் அமுத வெள்ளத்தைப் பரப்பி "மக்களே எழுங்கள்! ஸர்வேச்வரன் ஒருவன் உண்டு. நம்முடைய உடலில் அனேகமாய் நித்யமாய் ஞானமயமான ஆத்ம வஸ்து ஒன்று உண்டு. இவ்வஸ்துவை அவனிடம் ஒப்புவித்து எல்லையற்ற இன்பம் பெறலாம்" என்று வீணையிலும் இனிய தன் குரலிற் கூவுகிறாள். இருளில் ஒளி, சோகத்தில் ஆறுதல், பயத்தில் தைரியம் இவற்றைக் கண்கூடாக இப்பாடல்களில் காண்கிறோம். இப்பாடல்களில் வெளியிற் குளிரும் உள்ளே வெம்மையும் வெளியே வாட்டமும் உள்ளே சுகமும் காட்டப் பெறுவது வாழ்க்கையில் ஸர்வேச்வரனை அடைவார் ஆபாத ரமணீயமான விஷய ஸுகங்களை விட்டுச் சில தியாகங்கள் மூலமாகவே நித்ய ஸுகாவஹமான அவனது திவ்ய கைங்கர்யங்களில் ஈடுபடவேண்டும்

என்பதைக் காட்டுகிறது. வர்ணாச்ரமானுகுணமான அனுஷ்டானங்கள் ஸுகமாயிருக்குமா? என்பை உருக்கும் பனியுங் குளிரும்போல் அவை. பஞ்சு மெத்தையில் படுப்பது மனம் போனபடியே செய்து மகிழ்ந்திருத்தல். அதை நீக்கி நோன்பில் ஈடுபடுவது ஸ்வரூப ஞானம் பிறந்து ஸர்வஸ்வாமியின் தொண்டாகிற ப்ராப்தமான க்ரியையில் ஈடுபடுதல். இப்பாடல்கள் மூலமாக தசேந்த்ரியங்கள் ஸம்போதிக்கப் படுகின்றன என்பாருமுண்டு. இன்றும் பத்து ஆழ்வார்கள் முறையே ஸம்போதிக்கப் படுகின்றனர் என்றும் பெரியோர் சொல்லுவர். இவ்வுரைகளை ஆராயச் சிற்றறிவுடைய அடியேன் ஆற்றலுடையேனல்லேன். ஸம்ஸாரமாகிற இருளில் கிடந்து மயங்கும் சேதன வர்க்கத்தை க்ருபாமயனான ஆசார்யன் ச்ருதி விஹிதமான தத்வங்கள் பொதிந்து கிடக்கும் அரிய வார்த்தைகளால் உணர்த்தி ஸ்வரூபஞானம் பெறச் செய்வதே என்னும் கருத்து யாவருக்கும் எளிதில் போதமாகும்.

ஸமய தத்வங்களைத் திரட்டிமாத்திரம் கூறுவதாயிருந்தால் ஓர் இலக்கியம் பரிமளிக்க முடியாது. அது வெறும் அட்டவணையாகத்தான் ஆகும். அப்படிக்கல்லாமல் அத்தத்வங்களை இனிய சொற்களால் மூடி, அற்புதமான இசைக்கு உள்ளாக்கி, ரஸ ஆவிர்ப் பாவங்கள் கொந்தளிக்கும்படி செய்வது எவ்வளவு அழகு! கோதுமைத் தானியத்தைத் தின்பதை விட, அதைப் பாலில் பக்குவம் செய்து தேன் கூட்டிக் குழைத்துத் திராக்ஷை சர்க்கரை முதலிய உபபதார்த்தங்களைச் சேர்த்துக் கிளறிக் கொடுத்தால் அது எப்படியிருக்கும்! அதுவே நம் ஆண்டாளின் திருப்பாவைப் பாசுரங்கள். ஸ்ரீ வால்மீகியின் வாக்குப் போல ஸுலபமும் அர்த்த கற்பிதமும் ஆயது. ஸ்ரீ ஆண்டாளின் நகைச் சுவையைப் பாருங்கள். ஒரு பெண் காடநித்திரையில் ஆழ்ந்து, பேசவே இல்லை. அசையவும் இல்லை. இவள் தன் தூக்கத்தைக் கும்பகர்ணனிடமிருந்து

பரம்பராப்ராப்தமான ஸ்த்ரீதனமாகப் பெற்றவளாம். கும்பகர்ணனும் தன் அரிய சொத்தான நித்ரையைத் தன் மரணத்திற்குப் பிறகு நன்கு பரிபாலிக்க இப்பெண்ணிடம் வைத்துப் போனானும்! என்ன வன்மை! என்ன நயம்!

'நம்மால் போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டு ஒரு நாள் கூற்றத்தின் வாய் வீழ்ந்த கும்பகர்ணனும் **தோற்றும் உனக்கே பெருந்துயில் தான் தந்தானோ**'

இங்கு 'அனந்தல்' எனும் சொல் வெகு அழகு!

எருமை தன் கன்றை நினைத்து இரங்கி முலைவழியே பாலைப் பெருக விடுகிறதாம்! வீடெல்லாம் இப்பாலால் சேறாகிறதாம். என்ன அழகு! க்ருபாளுக்களான ஆசார்யர்கள் ப்ரயோஜன நிரபேக்ஷர்களாய் ரக்ஷணை தீக்ஷிதர்களாய் ஞானப்பாலைப் பெருகவிட்டு ஸ்வரூப சோதனம் செய்து உலகத்தை ஞானானுஷ்டான ஸ்னிக்த மாக்குவதை இது உணர்த்தவில்லையா!

சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற என்ற அடிகள் ஸர்வசக்தனின் கும்பிடமான வீர்யத்தைச் சொல்லுகிறது. ஸ்ரீ ராகவன் போர் செய்யாமல் கேவலம் சினத்தினால் ஸங்கல்பமாத்ரத்தினால் இலங்கையை அழித்தானென்பது ஸ்ரீ வால்மீகி பகவானின் "அங்குல்ய க்ரேண தான் ஹன்ம்யாம் இச்சன் ஹரிகணேச்வர" என்னும் கருத்துக் கிசைந்ததல்லவா! செங்கல் பொடிக் கூறை வெண்பல் தவத்தவர் என்ற சொற்றொடரால் ஸ்ரீ ஆண்டாளது உதாரமான ஹ்ருதயம் வெளிப்படுகிறது. பல்வேறு சமயத்தினர் தங்கள் தங்கள் இஷ்டதெய்வங்களுக்கு மார்கழி பூஜை செய்வதற்காகச் சங்கூதும் வழக்கத்தை எடுத்து இவர் ஓதுவது இவரது தாராளப் பான்மையை குறிக்கும். எல்லே இளங்கிளியே எனும் பாசுரத்தில் அழகிய உக்திப்ரத்யுக்திகள் அடங்கிய நாடகக் காட்சி வியக்கத் தக்கது. குளிரில் படுத்திருப்பவளின் சுக உணர்ச்சியும், எழுந்திருக்க மனமின்மையும், அதற்காகக் கற்பித்துக் கூறும் சாக்குகளும், தவிர்க்க முடியாமற்

போகும் பொழுது செய்யும் தாமதச் செய்கைகளும் இவ் வாழ்க்கையில் அலஸனுடைய தூர்வாதங்களையும் ஈச்வர பஜனத்தில் அவன் வைமுக்யத்தையும், நன்கு காட்டுகிற தல்லவா? நப்பின்னையைப் பாடியதிலிருந்து உபாஸ்யன் ஸ்ரீ விசிஷ்டனான நாராயணன் என்பதே அல்லவா.

8 முதல் 9-30 மணி வரையில் காரைக்கால் வைஷ்ணவ மத போதகர் திரு. ஸ்ரீகாந்த ராமானுஜ நாயுடு அவர்கள் நம்மாழ்வார், மதுரகவி ஆழ்வார் இவர்களின் சிறப்பைப் பற்றி ஒரு உபந்நியாஸம் செய்தார். இத்துடன் நான்காவது நாள் நிகழ்ச்சிகள் முடிவடைந்தன.

## ஐந்தாம் நாள் : மார்கழி மாதம் 14உ (29-12-50) வெள்ளிக்கிழமை.

இன்று காலை 8 மணிக்கு வழக்கம் போல் தெய்வ வணக்கத்துடன் ஸ்ரீ சச்சிதானந்த ஸ்வாமிகள் தலைமையில் மகாநாடு கூடிற்று. 8 முதல் 8-30 மணி வரையில் திருப்பாவை இடைப்பத்தின் கருத்துரை கும்பகோணம் ஸ்ரீ உ. வே. ஸ்ரீநிவாஸகோபாலாசாரியார் அவர்களால் சொல்லப்பட்டது. 8-30 முதல் 9 மணி வரை தேரிழந்தூர் ஸ்ரீ உ. வே. ஸ்ரீநிவாஸாசாரியார் அவர்களால் திருப்பாவை இடைப்பத்து பாராயணம் செய்யப்பட்டது. 9 முதல் 10 மணி வரையில் திருப்பாவை இசையுடன் போட்டிப் பரீக்ஷை நடந்தது. இத்துடன் காலை நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

மறுபடியும் மாலை 3-30 மணிக்கு மகாநாடு கூடியது. 3-30 முதல் 4-30 மணி வரையில் கும்பகோணம் தென்பேரை ஸ்ரீ உ. வே. வெங்கடவரதாசாரியார் திருப்பாவை இடைப்பத்தின் சிறப்பைப் பற்றி பேசினார். 4-30 முதல் 5 மணி வரையில் திருப்பாவை இடைப்பத்து தேரிழந்தூர் ஸ்ரீ உ. வே. ஸ்ரீநிவாஸாசாரியாரால் இசையுடன் பாராயணம் செய்யப்பட்டது.

5 முதல் 6 மணி வரையில் திருவாவடுதுறை ஆதீனம் பிரதிநிதி குலசேகரப்பட்டிணம் திரு. வீர. சிவ சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் ஒரு சொற்பொழிவு நடத்தினர். அவர் பேசியதாவது:

நாயன்மார்களும், ஆழ்வார்களும் ஒரே கருத்துடன் கூடிய பாசுரங்களைப் பாடியிருக்கிறார்கள் என்றும், உயர்ந்த வேதங்களின் தத்துவங்களும் சாரங்களும் அவைகளில் காணப்படுகின்றன வென்றும், எல்லாத் தமிழ் அன்பர் களும் சுலபமாகப் பாடுவதற்கும் வாசிப்பதற்கும் எளிய நடையில் அமைக்கப் பெற்றிருக்கின்றனவென்றும் வெகு அழகாகப் பேசினர். மேலும், ஆஸ்திகம் குன்றிவரும் இக்காலத்தில் இப்பெரிய மகாநாட்டைக் கூட்டி அதில் சிவநேசச் செல்வர்களும் வைஷ்ணவப் பெரியார்களும் ஒன்றுகூடி எல்லோர் கவனத்தையும் கருத்தையும் ஆக ரிஷித்து ஆண்டவன்பால் நம் நினைவு பிரார்த்தனை எல்லாம் செல்லவேண்டிய அவசியத்தை நாம் அறியும்படி செய்த இப்பெரும் காரியம் நமது ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியார் ஸ்வாமிகளின் அனுக்கிரகத்தால்தான் நடக்கக்கூடும் என்றும் அவர் கூறினர்.

இத்துடன் மாலை நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

மறுபடியும் இரவு 7 மணிக்கு மகாநாடு கூடியது. 7 முதல் 8-15 மணி வரையில் மாயூரம் ஸ்ரீ உ. வே. நரசிம்மாசாரியார் அவர்கள் பெரியாழ்வாரின் வைபவத் தைப் பற்றி ஒரு உபந்நியாஸம் செய்தார்.

8-15 முதல் 9-30 மணி வரையில் திருப்பனந் தாள் செந்தமிழ்க் கல்லூரி விரிவுரையாளர் ஸ்ரீ கோபால அய்யர் அவர்கள் திருமங்கை ஆழ்வாரின் சிறப்பைப் பற்றிப் பேசினர்.

# திருமங்கைமன்னன் சிறப்பு

சொற்பொழிவாளர்:

ஸ்ரீ வே. கோபாலன்,

விரிவுரையாளர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

எங்கும் உளன் கண்ணன் என்ற மகனைக் காய்ந்து இங்கில்லையாலென்று இரணியன் தூண் புடைப்ப அங்கு அப்பொழுதே அவன் வீயத்தோன்றித் தான் ஸர்வ வியாபி என்பதையும் ஸர்வ சக்தியுக்தன் என்பதையும் ஆச்ரிதரக்ஷகன் என்பதையும் வெளிப்படுத் தருளிய ஸர்வேச்வரன் இவ்வுலகிலுள்ள சேஷபூதனாகிய ஒவ்வொரு ஆன்மாவும் சேஷியான தன்னையே வந்தடைய வேண்டும் என்று கருதிய நிர்ஹேதுக கிருபையினாலே ஆழ்வாராதிகள் பதின்மரையும் அவதாரம் செய்வித்து அத்திவ்ய சூரிகள் மூலம் தமிழ்ப் பனுவல் நாலாயிரமும் அருளிச் செய்தான். ஆழ்வார்கள் அருளிச் செய்யவும் இறைவன் அருளிச் செய்தான் என்பது என்னையெனின், ஆம், 'முதல் வன் இவனென்று தன்தேற்றி என்னை, நாமுதல் வந்து புகுந்து நல்லின் கவி, தூமுதல் பத்தர்க்குத் தன்னைத்தான் சொன்ன என்வாய் முதல் அப்பனை என்றும் மறப்பேனோ' என்ற சடகோபன் திருவாக்கினாலும், 'பாட்டினால் உன்னை என் நெஞ்சத்திருந்தமை காட்டினாய் கண்ணபுரத்துறை அம்மானே' என்ற மங்கைமன்னன் திருவாக்கினாலும், அதற்கு "நாம் பாடிய கவியின் மதிப்பு இருந்தபடியால் இது நம்மால் வந்ததாகக் கூடாது. உள்ளே இருந்து பாடுவிக்கின்றான் ஒருத்தன் உண்டு என்றறிந்து இது கொண்டே நீ என் ஹிருதயத்திலே இருக்கிற இருப்பை நிச்சயிக்கலாம்படி பண்ணினாய்" என்று அருளப்பட்டுள்ள

உரையாலும் இறைவனே இப்பனுவல்களை அருளிச் செய்தமை தேற்றம்.

இனி "வேத சதுஷ்டயங்கோபாங்கங்கள் பதினாலும் போல இந்நாலுக்கும் இருந்தமிழ் நூற்புலவர் பனுவலாறும் மற்றை எண்மர் நன்மாலைகளும்" என்று ஆசார்ய ஹிருதயம் 43-ஆம் சூத்திரம் கூறுவதாலும், 'மாறன் பணித்த தமிழ்மறைக்கு மங்கையர்கோன் ஆறங்கம் கூற அவதரித்த' என்ற தொடராலும், சடகோபன் அருளிச் செய்த 'திருவிருத்தம், பெரிய திருவந்தாதி, திருவாசிரியம், திருவாய்மொழி' என்ற நான்கும் நான்கு வேதங்கள் போலவும், திருமங்கை மன்னன் அருளிச் செய்த 'பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந் தாண்டகம், சிறிய திருமடல், பெரிய திருமடல், திருவெழுகூற்றிருக்கை' என்ற ஆறு பிரபந்தங்களும் அங்கங்கள் போலவும், மற்ற எண்மர் செய்த பனுவல்கள் உபாங்கங்கள் போலவும் தமிழில் கொள்ளப்பட்டமை தேற்றம். இக்கருத்து "மாமறையுள் அயிர்த்தார் அயிர்த்த பொருளெல்லாம் வெளியாம் எங்கள் அந்தணர்க்கே" என்ற சடகோபரந் தாதியடியாலும் "செய்யதமிழ் மாலைகள் நாம் தெளிய ஓதி தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே" என்ற வேதாந்த தேசிகர் திருவாக்காலும் வலியுறும்.

இனி வேதாங்கங்கள் போன்றுள்ள மங்கை மன்னனது திருப் பாடல்களின் சிறப்பைக் காண்போம். இப்பிரபந்தங் களுக்கு வியாக்யானம் அருளிய பரம காருணிகரான பெரிய வாச்சான் பிள்ளை "இப்பிரபந்தத்துக்கு ஏற்றம் நீர்மை யுடைய பெரிய பெருமாள் சரண்யராகையும், ஆழ்வார் அநுஷ்டாதாவாகையும், ஸர்வாதிகாரமான திராவிட பாஷையாலே அருளிச் செய்கையும், த்ருப்தப்ரபந்நரான நமக்கு இவ்வார்த்தி இல்லையேயாகிலும், இவர் பாசுரத்தைச் சொல்லவே இவரளவிலே இரங்குகின்றாப்போலே பெரிய பெருமாள் இரங்குவார் என்கிறதும், என்று

அருளிச் செய்வது கொண்டும், இப்பிரபந்தத்தை ஆண்டவன் பணிக்க வாய்மலர்ந்தருளிய ஆழ்வாரே, "வெண்சங்கம் ஒன்றேந்திய கண்ணா, நினக்கும் குறிப்பாகில் கற்கலாம் கவியின் பொருள்தானே" என்றருளிச் செய்வதாலும், தம்மை இருந்தமிழ் நூற் புலவன் என்றும், புலமை ஆர்ந்த அம்மொழி வாய்க்கலிகன்றி என்றும் திருக் கடைக் காப்புக்களில் கூறியருளும் ஆழ்வாரே தாம் வாய் மலர்ந்தருளிய திருப்பாடல்கள் தம் தகுதியினும் ஏற்ற முடையவை என்ற கருத்தால் இறைவனை "பாட்டினால் உன்னை என் நெஞ்சத்திருந்தமை காட்டினாய் கண்ணபுரத் துறை அம்மானே" என்று திருவாய் மலர்ந்தருளுவதாலும், அவரே உலகத்தாரை நோக்கி "பேராளன் பேர் ஆயிரமும் ஓதுமின்கள் அன்றி இவையே பிதற்றுமினே" என்று தம் பாடல்கள் யாவும் ஆண்டவனது திருநாமங்களே என்று கூறியருளுவதாலும், வானிட்ட கீர்த்தி வளர்கூரத்தாழ்வார் இவர் திருப் பாடல்களை "தமிழ் நன்னூற்றுறை அஞ்சுக் இலக்கியம், ஆரணசாரம்" என்று மொழிந்தருளுவதாலும் இவர் திருப் பாடல்களின் ஏற்றம் போதரும்.

இனி, இவ்வாழ்வாரது ஏற்றத்தை நோக்குவோம். "பொய்ம்மொழி ஒன்றில்லாத மெய்ம்மையாளன் புல மங்கைக் குலவேந்தன் புலமை ஆர்ந்த அம் மொழிவாய்க் கலிகன்றி" என்றும், "அங்கமலத் தடவயல் சூழ் ஆலிநாடன் அருள்மாரி அரட்டமுக்கி அடையார் சீயம் கொங்கு மலர்க் குழலியர் வேள் மங்கை வேந்தன் கொற்றவேற் பரகாலன் கலியன்" என்றும், "இருந்தமிழ் நூற்புலவன் செங்கை யாளன்" என்றும், "கடமாருங்களிறு வல்லான் வெல் போர்க்கன்றி" என்றும், "வடிகொள் நெடு வேல்வலவன் கலிகன்றி" என்றும், "உலகுக்கு அருளே புரியும் காரார் புயற்கைக் கலிகன்றி" என்றும், "கற்றார் பாவும் மங்கை யர்கோன் காரார் புயற்கைக் கலிகன்றி" என்றும் இவர் திருவாய் மலர்ந்தருளுவதுகொண்டு இவரது பண்பும் திறலும் அழகும் கொடையும் போதரும்.

'மாயோனை வாள்வலியால் மந்திரங்கொள் மங்கையர் கோன்' என்று சுவாமி எம்பெருமானாரும், 'மாலைத் தனியே வழி பறிக்கவேணுமென்று கோலிப் பதிவிருந்த கொற்றவனே' என்று எம்பாரும் அருளிச் செய்வன-வடிவழகிய நம்பிதாசர் அருளிய குரு பரம்பரையிலுள்ள இவர் சரிதத்தை நினைப்பூட்டுகின்றன.

இனி இவ்வாழ்வாரின் ஆரம்ப நிலையை நோக்குவோம்: "எந்தை தந்தை தம்மான் என்று எமர் ஏழளவும் வந்து நின்ற தொண்டரோம்" என்ற இவர் வாய்மொழியால் இவர் வைணவக் குடியினர் என்பது தேற்றம்.

"கள்வனேன் ஆனேன் படிறு செய்திருப்பேன், கண்டவா திரி தந்தேன்" என்றும், "பெருநிலத்தார் உயிர்க்கெலாம் செற்றமே வேண்டித் திரிதருவேன்" என்றும், "இடும்பையால் அடர்ப்புண்டு இடீமினோதுற்று என்றும் இரந்தவர்க்கு இல்லையே என்று நெடுஞ் சொலால் மறுத்த நீசனேன்" என்றும், "கொன்றேன் பல்லுயிரைக் குறிக்கோளொன்று இல்லாமையினால் என்றேனும் இரந்தார்க்கு இனிதாக உரைத்தறியேன்" என்றும், "குலந்தான் எத்தனையும் பிறந்திளைத்து எய்த்தொழிந்தேன் நல்ல தோரறஞ் செய்துமிலேன்" என்றும், "மறந்தேன் உன்னை முன்னம் மறந்த மதியின் மனத்தால் இறந்தேன் எத்தனையும் அதனால் இடும்பைக் குழியில் பிறந்தே எய்த்தொழிந்தேன் பெருமான் திருமார்பா" என்றும், "வம்புலாங் கூந்தல் மனைவியைத் துறந்து பிறர் பொருள் தாரம் என்றிவற்றை நம்பினார் இறந்தால் நமன்தமர் பற்றி எற்றி வைத் தெரியெழுகின்ற செம்பினால் இயன்ற பாவையைப் பாவீ தழுவென மொழிவதற்கஞ்சி நம்பனேன் வந்துன் அடியடைந்தேன்" என்றும் ஆழ்வார் அருளிச் செய்வனவற்றைக் கொண்டே, 'நலந்தரும் நாமமாகிய நாராயணா' என்பதை ஆழ்வார் ஆண்டவன் திருவருளால் கண்டுகொள்வதற்கு முன்னிலையில் ஆத்மாவை பகவத் விஷயத்தில் ஈடுபடுத்தாமல் இதர

விஷயப் ப்ரவணராய் அதுவே யாத்திரையாய்ப் போய் ஆத்மாவை வெய்யிலிலே வைத்து உடம்பை நிழலிலே வைத்தவர் என்று பெரியவாச்சான் பிள்ளையினுடைய திரு வாக்காலே இவர் ஆரம்ப நிலையைக் கூறிவிடலாம்.

"இனி குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுந் துயராயின எல்லாம் நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும் அருளொடு பெருநிலம் அளிக்கும் வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்ற தாயினும் ஆயின செய்யும் நலந் தரும்" நாமமாகிய நாராயணா என்பதன் மகிமையை அறிந்த பிறகு ஆழ்வார் இருந்த நிலையை நோக்குவோம்.

தெள்ளியேன் ஆனேன் செல்கதிக்கு அமைந்தேன் சிக்கெனத் திருவருள் பெற்றேன் உள்ளெலாம் உருகிக் குரல்தழுத்தொழிந்தேன் உடம்பெலாம் கண்ணனீர் சோர நள்ளிருளளவும் பகலும் 'நாராயணா' என்று அழைப்பேன் என்பாராயினர். "எம்மானும் எம்மனையும் என்னைப் பெற் றொழிந்ததற் பின் அம்மானும் அம்மனையும் அடியேனுக் காகி நின்ற நன்மான ஒண்சுடரே நறையூர் நின்ற நம்பீ மைம்மான வண்ணமல்லால் மகிழ்ந்துரைக்க மாட் டேனே" என்று பகவத் விஷயத்தில் ஈடுபட்டார். மின்னின் மன்னும் நுடங்கிடை மடவார் தம் சிந்தை மறந்து வந்து நின் மன்னு சேவடிக்கே மறவாமை வைத்தாயால் என்றும், பெற்றாரும் சுற்றமும் என்றிவை பேணேன் நான், மற்றாரும் பற்றிலேன் ஆதலால் நின்னடைந்தேன் உற்றான் என்று உள்ளத்து வைத்து அருள்செய் கண்டாய்" என்றும், "தேசம் அறிய உமக்கே ஆளாய்த் திரிகின்றோமுக்குக் காசின் ஒளியின் திகழும் வண்ணம் காட்டீர்" என்றும், தாம் இதர விஷய ப்ரவணராயிருந்ததைத் தவிர்ந்த நிலையை ஆண்டவன்முன் முறையிட்டார்.

பகவத் கைங்கர்யமாவது பாகவத சேஷத்வ பர்யந்த மானது என்றறிந்து "தலசயனம் வணங்கு மனத்தார வரை வணங்கு எந்தன் மட நெஞ்சே" என்று நெஞ்சை

ஒருப்படுத்தி "எம்பெருமான் தாள் தொழுவார் எப்பொழுதும் என் மனத்தே இருக்கின்றாரே" என்றும், "பேராளன் பேரோதும் பெரியோரை ஒரு நாளும் பிரிகிலேனே" என்றும் தாம் அடியார்க்கு அடியனுந்தன்மையை வாயாரப் பாசுரமிட்டுப் பாடினார். "மற்றுமோர் தெய்வம் உளதென்று இருப்பாரோடு உற்றறியேன் உற்றதும் உன் அடியார்க்கு அடிமை மற்றெலாம் பேசினும் நின் திருவெட்டெழுத்துக் கற்று நான் கண்ணபுரத்துறை அம்மானே" என்று தாம் இருக்கும் நிலையை கண்ணபுரத்தானிடம் விக்ஞாபித்தார்.

இனி அயர்வறும் அமரர்கள் அதிபதியான உயர்வற உயர் நலமுடையவன்—ஒரு சாராரே அனுபவிக்கத்தக்கனவாயுள்ள பர வியூக விபவங்கள் போலன்றிகே—அவதாரங்களின் பிற்பாடராநூரும் வந்து கண்களாரக்கண்டு களித்து அனுபவிக்கும்படியாக, கர்ஷகனானவன் பயிர்த்தலையிலே குடில்கட்டி நோக்குமாபோலே ஆர்ச்சாவதாரமாக எழுந்தருளியுள்ள திவ்ய தேசங்களிலே "முசுவண்டு முரலுங் கண்ணி முடியீர் உம்மைக்காணும் ஆசையென்னும் கடலில் வீழ்ந்து இங்கயர்ந்தோம்" என்ற நிலையை எய்திய ஆழ்வார்—,ஒதி ஆயிரநாமங்கள் உணர்ந்தவர்க்கு உறுதுயரடையாமல் ஏதமின்றி நின்றருளும் நம் நெடுந்தகையிருந்த நல்லிமயத்துப் பிரிதி என்ற திருப்பதி முதலாகத் தென்மொழி வடமொழி ஸ்வரூபமாக ஆண்டவன் எழுந்தருளியுள்ள திருப்புல்லாணியை ஈறாக உடைய பல திருப்பதிகளையும் கண்களாரக்கண்டு களிக்கப் புறப்பட்டார்.

பிரிதி என்ற திவ்யத்திருப்பதியில் ஆண்டவனது திவ்ய மங்களஸ்வரூபத்தோடு, "தாது மல்கிய பிண்டி விண்டலர்கின்ற தழல் புரை எழில் நோக்கிப் பேதை வண்டுகள் எரி எனவெருவரும்" காட்சியைக் கண்டார். பிரஜையின் ரக்ஷணத்துக்கு உறுப்பாகத் தாய் குடிநீர் குடிக்கின்ற ஓபாதி ஆத்மாக்களை வழிப்படுத்துவதற்காக தபஸ் பண்ணி ஹிதகாமனாக ஸர்வேச்வரன் வீற்றிருக்கும்

ஸ்வரூபத்தைப் பதரிகாச்ரமத்தில் கண்டு களித்தார். "ஓய்ந்த மாவும் உடைந்த குன்றும் அன்றியும் ஒள்ளழலால் தேய்ந்தவேயும் அல்லது இல்லாச் சிங்கவேழ்" குன்றிலும் ஆண்டவன் உகந்தருளியிருப்பது கண்டு இறும்பூ தெய்தினார். "சந்து ஆர் பொழில் சூழ் சாளக் கிராமத்தில் வெந்தார் என்பும் சுடுநீறும் மெய்யிற் பூசிக்கையகத்து ஓர் சந்தார் தலைக்கொண்டு உலகேழும் திரியும் பெரியோன் தான் சென்று, எந்தாய் என் சாபம் தீர் என்ன, இலங்கமுது நீர் திருமார்பில் தந்து" அரனது சாபம் போக்கிய நிலையை நினைந்து வியந்தார். கடல் மல்லைத் தல சயனத்தில் "பிணங்களிடு காடதனில் நடமாடும் பிஞ்ஞகனோடு இணங்கு திருச் சக்கரத்து எம்பெருமானார்" திருவுருவைக் கண்களாரக்கண்டு களித்தார். அங்குத் திறைமுகத்தில் "புலங்கொள் நிதிக்குவையோடு புழைக்கை மாகளிற்றினமும் நலங்கொள் நவமணிக்குவையும் சுமந்து எங்கும் நான்று ஒசிந்து கலங்கள், "இயங்கும்" நிலைக் கவிபாடினார். திருக்கோவலூரில் "எழுந்த மலர்கருநீலம் இருந்தில் காட்ட இரும்புன்னை முத்தரும்பிச் செம்பொன் காட்ட செழுந்தட நீர்க்கமலம் தீவிகை போற்காட்டும்" —கொல்லனது பணிக்களரியின் தன்மையை—இயற்கை எழிலிற் கண்டார். "பிறை தங்கு சடையானை வலத்தே வைத்துப் பிரமனைத் தன் உந்தியிலே தோற்றுவித்துக் கறைதங்கு வேற்றடங்கண் திருவை மார்பில் கலந்தவனு"ஆய திருமாலைச் சிறுபுலியூர் சலசயனத்தில், "வானார் மதி பொதியுஞ்சடை மழுவாளி யொடொருபால் தானாகிய தலைவன்" என்று பாடினார். திருவயிந்திபுரத்தில், "அன்ன மாமலர் அரவிந்தத் தமளியில் பெடையொடும் இனித மரச் செந்நெலார் கவரிக் குலை வீசும்" அழகை அனுபவித்தார். கூத்தன் ஆடும் தில்லைத் திருச் சித்திரகூடத்தில் "கானுடை மஞ்ஞைக் கணமாட, மாடே கயலாடுபழனம் புடைபோய்த் தேனாட, மாடக்கொடியாட" இங்ஙனம் எல்லாமே ஆடுவதாகக் கண்டார். "வாசவார் குழலாள் தன் பங்கனைப் பங்கினில் வைத்துயர்ந்தான் தன்னை"த் திருக்

கண்ணமங்கையில் அனுபவித்தார். மைடணைந்த குவளைகள் தங்கண்களென்றும் மலர்க்குமுதர்வாய் என்றும் கடைசிமார்கள் செய்யடைந்து களை களையாது ஏறுதல் கண்டு இறும்பூதுற்றார். அருகு கைதை மலரக் கெண்டை குருகு என்று அஞ்சுவதைக் கூடலூரிலும் பெடையோடன்னம் பெய்வளையார்தம் பின் சென்று நடையோடி கலி நாணி ஒளித்தலை நறையூரிலும் கண் களிக்கக் கண்டார். செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவர் திசைமுகனே அனைய அந்தணரோடு திருவழுந்தூரில் உரையாடினார். அக்குற்புலியின் அதனும் உடையார் அவர் ஒருவர் பக்கம் நிற்க நிறை பண்பரைத் திருக்குறுங்குடியிலே வணங்கினார். கச்சி பரமேசுர விண்ணகரத்தைக் கண்ட அளவிலேயே 'பலராய்ப் பல வேந்தர் வணங்கு கழற் பல்லவன்' என்றாற் போலப் பலபடியாக அக்கோயிலைக் கட்டிய மன்னனைப் பாமாலைகளால் தோத்திரித்தார். திருநறையூர்க் கோயிலைக் கண்ட அளவிலே சோழன் செங்கணனிடம் பக்தி அதிகரிக்கவே, "இருக்கிலங்கு திருமொழிவாய் எண்டோளீசற்கு, எழில் மாடம் எழுபது செய்துலகம் ஆண்ட திருக்குலத்து வளச்சோழன் செங்கணான்" என்று பலவாறாக அவனைப் புகழ்ந்தார்.

ஆழ்வார், ஆண்டவன் அவதாரங்கள் செய்த சேஷ்டிதங்களிலே ஆழங்காற்பட்டு அவற்றிற்குத் தனியே 11ஆம் பத்தில் நான்காவது பதிகத்தில் பாசுரமிட்டு அனுபவிப்பதோடல்லாமல் உகந்தருளின நிலங்களில் ஆண்டவனைத் தரிசிக்கும்போதும் அவதாரங்களின் நீர்மையை அர்ச்சாவதாரத்திலும் கண்டு உள் உருகிப் பாசுரமிட்டு அனுபவித்தார்.

'சிற்றவை பணியால் முடி துறந்தானைத் திருவல்லிக்கேணி கண்டேனே' என்றும், 'பள்ளியில் ஓதி வந்ததன் சிறுவன் வாயில் ஓர் ஆயிர நாமம் ஒள்ளியவாகிப் போத ஆங்கதனுக்கு ஒன்றுமோர் பொறுப்பிலனாகிப்

பிள்ளையைச் சீறி வெகுண்டு தூண் புடைப்பப் பிறை யெயிற்று அனல்விழிப் பேழ்வாய்த் தெள்ளிய சிங்கமாகிய தேவைத் திருவல்லிக்கேணி கண்டேனே’ என்றும், ‘மீனமர் பொய்கை நாண் மலர் கொய்வான் வேட்கையினோடு சென்றிழிந்த கானமர் வேழம் கையெடுத்தலறக் கராம் அதன் காலினைக் கதுவ ஆனையின் துயரம் தீரப் புள்ளூர்ந்து சென்று நின்று ஆழிதொட்டானைத் திருவல்லிக்கேணி கண்டேனே’ என்றும், ‘பாழியால் மிக்க பார்த்தனுக்கருளிப் பகலவன் ஒளிகெடப் பகலே ஆழியாலன்றங்காழியை மறைத்தான் அரங்கமா நகரத்தானே’ என்றும், ‘பந்தார் விரலாள் பாஞ்சாலி கூந்தல் முடிக்கப் பாரதத்துக் கந்தார் களிற்றுக் கழல் மன்னர் கலங்கச் சங்கம் வாய் வைத்தான் ...நறையூர் நின்ற நம்பியே’ என்றும், ‘அந்தகன் சிறுவன் அரசர்தம் அரசற்கு இளையவன் அணியிழையைச் சென்று எந்தமக்கு உரிமைசெய்யெனத் தரியாது எம்பெருமான் அருளென்ன.....முன் நின்றானைத் திருவல்லிக்கேணி கண்டேனே’ என்றும், அலைநீர் தசக்ரீவற்கு இளையோற்கு அரசருளிமுன், ‘கலைமாச்சிலையால் எய்தான் ஊர் கண்ணபுரம் நாம்தொழுதுமே’ என்றும், ஆழ்வார் வாய் மலர்ந்தருளியுள்ள பாசுரங்கள் மேற்கருத்தை வலியுறுத்தும். ஆழ்வார் இராமாவதாரத்தில் ஸர்வேச்வரன் குகனுடனும் அநுமனுடனும் நட்புச் செய்த செய்கையே தன் உள்ளத்தை உருக்கித் தம்மை ஆண்டவன் அடியில் சேர்த்தது என்று உள்ளுருகிப் பாசுரமிடுகிறார். ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது இரங்கி மற்றவற்கின்னருள் சுரந்து மாழைமான்மட நோக்கி உன் தோழி உம்பி எம்பி என்று உகந்திலை, உகந்து தோழன் நீ எனக்கு இங்கு ஒழி என்ற சொற்கள் வந்து அடியேன் மனத்து இருந்திட ஆழிவண்ண நின் அடியிணை அடைந்தேன், அணிபொழில் திருவரங்கத்து அம்மானே, வாதமாமகன் மற்கடம் விலங்கு மற்றோர் சாதி என்று ஒழிந்திலை உகந்து காதல் ஆதரம் கடலினும் பெருகச்செய்தகவினுக்கு இல்லை கைம்மாறு— என்பன.

இவர் உகந்தருளிய நிலங்களிலே தரிசித்த ஆண்டவனைத் தம் ஆத்மாவின் தரிப்புத் தீர அநுபவிக்கக் கோரி அது கிடையாமையாலே வந்த வருத்தத்தாலே ஒரு பிராட்டி தசையைப் ப்ராப்தராய் திருவாய் மலர்ந்தருளியுள்ள பாசுரங்களையும், அப்பிராட்டி நிலையிலும் தம் நிலையை வாய்விட்டுச் சொல்லமாட்டாதே, ஸ்திதிகமன சயனாதிகளிலே ஒரு நியதி இன்றிக்கே ஆதியாகப் படுகின்றபாடுதான் திருத்தாயர்க்கு ஆகர்ஷகமாக ஸர்வ விதத்திலும் இவனாலேயே பரிஹரிக்கக் கடவதொரு குடியாகையாலே சர்வேச்வரன் திருவடிகளிலே போட்டு, 'இவள் இடையாட்டத்தில் நீர் செய்ய இருக்கிறது என்' என்ற திருத்தாயர் கூற்றாக அருளியுள்ள பாசுரங்களையும் சிறிது நோக்குவாம்.

தலைவி தலைவனது உருவெளியை நோக்கிக் கூறியன— 'எழுது எழில்தாமரையன்னகண்ணும் ஏந்தெழில் ஆகமும் தோளும் வாயும் அழகிதாம் இவர் ஆர்கொல் என்ன அட்டபுய கரத்தேம் என்றாரே' என்பதும், 'நஞ்சம் இவர்க்கு என்வளையும் நில்லா நெஞ்சமும் தம்மதே, சிந்தித்தேற்கு வஞ்சி மருங்குல் நெருங்கநோக்கி வாய் திறந்து ஒன்று பணித்ததும் உண்டு' என்பதும் போல்வன.

தலைவி தலைவனிடத்தில் வண்டினையும் நாரையையும் தூதுவிடும் பகுதிகள், 'தாவிரிய மலருழக்கித் துணையோடும் பிரியாதே, பூவிரிய மது நுகரும் பொறிவரிய சிறவண்டே, தீவிரிய மறைவளர்க்கும் புகழாளர் திருவாலி, ஏவரிவெஞ் சிலையானுக்கு என் நிலைமை உரையாயே' என்பதும், 'செங்கால்மட நாராய் இன்றே சென்று திருக்கண்ணபுரம்புக்கு என் செங்கண்மாலுக்கு—என் காதல் என் துணைவற்கு உரைத்தாயாகில் இதுவொப்ப எமக்கின்பமில்லை நாளும், பைங்கானம் ஈதெல்லாம் உனதேயாகப் பழனமீன் கவர்ந்துண்ணத் தருவன், தந்தால் இங்கே வந்து இனிதிருந்து உன் பெடையும் நீயும் இருநிலத்தி லினி தின்பம் எய்தலாமே' என்றாற் போல்வன.

முன்னங் குறளுருவாய் மூவடிமண் கொண்டளந்த மன்னன் சரிதைக்கே மாலாகிப் பொன் பயந்த தலைவி தன்னிடம் பறந்து வந்த வண்டை நோக்கிக் கூறவன, 'விண்டமலரெல்லாம் ஊதி நீ என்பெறுதி, அண்டமுதல்வன் அமரர்கள் எல்லாரும், கண்டு வணங்கும் கண்ணபுரத்தெம் பெருமான் வண்டு நறுந்துழாய் வந்தூதாய் கோத்தும்பீ' —போல்வனவாம்.

இனி தலைவனைப் பிரிந்த தலைவி கனவொடு மயங்குதல் போல 'வஞ்சிமருங்குல் இடைநோவ மணந்து நின்ற கனவகத்தென் நெஞ்சம் நிறைக் கைகூப்பி நின்றார் ஊர் போலும் அழுந்தூரே' என்னும் பாசுரமிடுகிறார்.

இனிப் பெண்படும் துயரைத் திருத்தாயர் கூறும் கூற்றாகக் கூறும் - 'வண்டமரும் வனமாலை மணிமுடிமேல் மணநாறும் என்கின்றாளால், உண்டிவர்பா லன்பெனக்கு ஒருகாலும் பிரிகிலேன் என்கின்றாளால், பண்டிவரைக் கண்டறிவதெவ்வூரில் யாமென்றே பயில்கின்றாளால், கண்டவர்தம் மனம் வழங்கும் கண்ணபுரத் தம்மானைக் கண்டாள் கொல்லோ' என்பது போன்றனவும், 'ஓதிலும் உன்பேரன்றி மற்றோதாள் உருகும் நின் திருவுரு நினைந்து காதன்மை பெரிது கையறவுடையள் கயல்நெடுங்கண் துயில் மறந்தாள் பேதையேன் பேதை பிள்ளைமை பெரிது தெள்ளியள் வள்ளிநுண் மருங்குல் ஏதலர்முன்னா என் நினைந்திருந்தாய் இடவெந்தை எந்தை பிரானே' என்பது போன்றனவும் சிறந்த அகப்பொரு ளிலக்கியமாம்.

தலைவி தலைவன் வருவதற்காகக் காக்கையைக் கரையும் படி வேண்டுவதும், பல்லியை நற்சொல் சொல்ல வேண்டுவதும் இவர் திருப்பாசுரங்களில் சாற்றப் பட்டுள்ளன. 'கரையாய் காக்கைப்பிள்ளாய், கருமாமுகில் போல் நிறத்தன், உரையார் தொல்புகழ் உத்தமனை வரக் கரையாய் காக்கைப்பிள்ளாய்; கொட்டாய் பல்லிக்

சூட்டி, குடமாடியுலகளந்த, மட்டார் பூங்குழல் மாதவனை வர, கொட்டாய் பல்லிக்குட்டீ'—என்பன.

இனித் தலைவி தலைவனது பிரிவினால் ஆற்றாமை விஞ்சித் தோழியை நோக்கி அவர் ஊருக்கே நேரே செல்லுவோம் என்ற கருத்திலும் திருப்பாசுரங்கள் உள. 'கொங்குண் வண்டேகரியாக வந்தான் கொடியேற்கு முன், நங்கள் ஈசன் நமக்கே பணித்தமொழி செய்திலன், மங்கை நல்லாய் தொழுதும் எழு அவன் மன்னும் ஊர்க்கே என்றும், உணரின் உள்ளம்சுடுமால் வினையேன் தொழுதும் எழு என்றும், நல்லவர்திறம் நாம் அறியோம் நாண்மடமச்சம் நமக்கிங்கில்லை......மாமணி வண்ணனை நாமறவோம் குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின்' என்று கூறியதோடமையாமல், இறைவனை அடைவதற்காகப் பெரிய திருமடல் சிறிய திருமடல் வாய்மலர்ந்தருளி, மடலேறவும் துணிய, அடியார்க்கு எளியவனாகிய ஆண்டவன் நீர்வேண்டியபடியெல்லாம் நம்மைத் திருவரங்கத்தில் அனுபவியும் என்று அருள, சிந்தாமணியே திருவேங்கடம் மேய எந்தாய், இனியான் உன்னை என்றும் விடேனே என்றும், வந்தாய் என் மனத்தே, வந்து நீ புகுந்தபின்னை எந்தாய் போயறியாய் இதுவே அமையாதோ...மைந்தா உனை என்றும் மறவாமை பெற்றேனே என்றும் பாடி உலகத்தாருக்கும் 'என்றும் தேனும் பாலும் அமுதுமாகிய திருமால் திருநாமம் நானும் சொன்னேன் நமரும் உரைமின் நமோநாராயணமே' என்று உபதேசித்து, ஐம்பொறிகளையும் ஆண்டவன் திறத்திலேயே பயன் படுத்துங்கள் என்று ஒரு பதிகத்தால் விளக்கி உபதேசித்து பொங்கத் தம் பொங்கம், குழமணிதூரம் முதலிய கூத்து வகைகளையும் திருவாய்ப் பாடிப் பெண்கள் யசோதை இவர் அனுபவித்ததையும் அவர்கள் வாசகத்தால் வாய்மலர்ந்து, சௌலப்யத்தோடு கூடிய பரத்துவத்தைத் திருச்சாழல் பதிகத்தின் மூலம் விளக்கி, அத்தா அரியே என்றழைக்க உன்னைப் பித்தா என்றே பேசுகின்றார்கள் பிறர் என்னை என்ற உலகியல்

தொடர்பால் காற்றிடைப்பட்ட கலம் போலவும், ஆற்றங்கரை வாழ் மரம் போலவும், பாம்போடு ஒரு கூறையில் வாழ்வார்போலவும், இருபாடு எரிகொள்ளியின் உள் எறும்பு போலவும் வருந்தி—உலகியல் தொடர்பை அறவே விடுக்கக் கருதி ஆண்டவனைவேண்ட, அவன் திருவருளால், பிறப்பொடு மூப்பொன்றில்லவன் தன்னைப் பேதியா இன்பவெள்ளத்தை, இறப்பு எதிர்காலக்கழிவு மானனை, ஏழிசையின் சுவைதன்னை, சிறப்புடைய மறையோர் நான்கை, மறைப்பொருளை, வானவர் கோனைக் கண்டு நான் வாழ்ந்தொழிந்தேனே என்றபடி நித்யசூரி களுள் ஒருவராயினர்.

கலந்த திருக் கார்த்திகையில் கார்த்திகை வந்தோன் வாழியே
காசினியிற் குறையலூர்க் காவலோன் வாழியே
நலந்திகழாயிரத் தெண்பத்து நாலுரைத்தான் வாழியே
நாலைந்தும் ஆறைந்தும் நமக்குரைத்தான் வாழியே
இலங்கெழு கூற்றிருக்கை இருமடலீந்தான் வாழியே
இம்மூன்றிலிருநூற்றிருபத்தே ழீந்தான் வாழியே
வலந்திகழும் குமுதவல்லி மணவாளன் வாழியே
வாட்கலியன் பரகாலன் மங்கையர்கோன் வாழியே.

இன்று மகாராட்டிற்கு விஜயமாயிருந்த ஸ்ரீ ஆசார்யாள் ஓர் அரிய உபதேசம் செய்தார்கள். அவர்கள் குறிப் பிட்டதாவது:

நம் நாட்டு மத சம்பந்தமான பாட்டுக்கள், கும்மிகள், நாட்டுப்புற பாட்டுக்கள் இவைகள் ஆஸ்திக புத்தியை பல்லாயிரக்கணக்கான வருஷங்களாய் வளர்த்து வந்திருக் கின்றன. ஆனால், சமீப காலத்தில் இவைகளில் சிரத்தை சற்று குறைந்து வருவதையும் பார்க்கலாம். பலருக்கும் பாட்டுகள் மறந்துகூட போயிருக்கலாம். பரீக்ஷைக்கு பாட புத்தகமாக வைத்ததின் காரணமாய் நம் சிறுவர் சிறுமிகள் அயல் நாட்டுச் சரித்திரம் இலக்கியம் அவர்கள் கிராமாந்தரப் பாட்டுகள் முதலியவைகளை எளிதில் கற்று விடுகிறார்கள். ஆனால் அவர்களுக்குத் தாய் நாட்டுப்

பாட்டுக்களின் பெருமையை தெரிந்துகொள்ள முடிய வில்லை. முந்நாட்களில் திருப்பள்ளி எழுச்சி சூரியோதய காலத்தில் யாவராலும் பரமனைத் துதிசெய்து பாடுவது வழக்கமாயிருந்து வந்தது. வருஷம் முழுவதும் ஒவ்வொரு நாளும் பாடப்பட்டு வந்தது. ஒவ்வொரு குழந்தையும் இதைக் கற்றுக்கொண்டு வந்தது. வயது முதிர்ந்த பின் தெய்வ ஒளி பரிணமிக்கும் இப்பாட்டுகள் அவர்களின் வாழ்க்கையை செப்பனிட்டு நல் வழிப்படுத்த பேருபகாரமாயிருந்து வந்தது. தாய்ப் பாலுடன் அருட் பாலையும் குழந்தைகள் பருகி ஸந்மார்க்கசீலர்களாய் விளங்க வகையிருந்து வந்தது. இவைகளெல்லாம் முற்றும் மறவாமல் (மறையாமல்) காப்பது நம் கடமையாகும். ஆகவே குழந்தைகளுக்கு இவைகளில் ஆர்வம் ஏற்படச் செய்ய இம்முறை பெரிதும் பயன்படும் என நம்புகிறேன்.

விதை முதலாக சிலர் இவ்வழியில் பண்பட்டு நடந்தால்கூட போதுமானது. அவர்கள் மூலம் பின்னால் வாழையடி வாழையாக மற்றவர்கள் தோன்றுவார்கள் என்பது திண்ணம். ஆகவே இம்மகாநாடு சிறந்த தொண்டாற்றும் என்பதில் சந்தேகமில்லை. ஈசன் அருள்புரிவாராக.

இந்த உபதேசத்துடன் ஐந்தாவது நாள் நிகழ்ச்சிகள் முடிந்தன.

## ஆறுவது நாள்: மார்கழி மாதம் 15உ (30—12—50) சனிக்கிழமை.

இன்று காலை 8 மணிக்கு வழக்கப்படி தெய்வ வணக்கத்துடன் ஸ்ரீ சச்சிதானந்த ஸ்வாமிகள் தலைமையில் மகாநாடு கூடியது. 8 முதல் 8-30 மணி வரையில் திருப்பாவையின் கடைப்பத்தின் கருத்துரை கும்பகோணம் ஸ்ரீ உ. வெ. ஸ்ரீநிவாஸகோபாலாசாரியார் அவர்களால் சொல்லப்பட்டது. 8-30 முதல் 9 மணி வரையில் திருப்பாவை கடைப்பத்து திருவையாறு அரசர் கல்லூரி உப தலைவர் ஸ்ரீ S. T. ஸ்ரீநிவாஸாசாரியார் அவர்களால் பாராயணமும் கருத்துரையும் செய்யப்பட்டது.

# மார்கழித் திங்கள்

சொற்பொழிவாளர்:

ஸ்ரீ S. T. ஸ்ரீநிவாஸாச்சாரியார்,


உபதலைவர், அரசர் கல்லூரி, திருவையாறு.

அடுக்கடுக்காய் மலைகள் செறிந்த அணிபாண்டிய நாட்டில், இத்தாரணியுந், தமிழ் நாடும் செய்த தவப் பயனாகப் புதுவை மா நகரில், பெரியாழ்வாரது திரு நந்தவனத்தில், ஓர் பெண்மணி அயோநிஜையாய் அவதரித்தாள். பிறந்தது முதல், "பீதக வாடைப் பிரானார்" மீது பெருங் காதல் கொண்டு ஸ்ரீ ஹரி பக்தியின் உருவே போல் உலகில் நடையாடினாள், இவ்வுத்தமி. ஆழ்வார்களெல்லாம் அச்சுதன்பால் மீறிய காதலால், தம் பால் ஏறிட்டுக் கொண்ட நாயகிபாவத்தின் அனுபவங்களை ஸாக்ஷாத்தாகி, இம் மாதர்மணி அனுபவித்தாள்.

இவ்வனிதாமணியின் வாழ்க்கையையும் ஸ்ரீகாந்தன் பால் இவள் கொண்ட "கடலன்ன காதலை"யும் எழுத இது இடமுமல்ல; மானுடரால் இயல்வது மல்ல!

நிகரற்ற தன் தந்தையிடமிருந்து, பண்டு, ஸ்ரீபங்க ஜாக்ஷனைப் பெறுவதற்குத் திருவாய்ப்பாடியில் ஆயர் சிறுமிகள் அனுஷ்டித்த நோன்பைக் கேள்வியுற்றுத் தானும் அதுபோல் விரதம் பூண்டு அவனை அடையலாமென்று துணிந்தாள்.

களங்கமற்ற இக்கன்னியின் உள்ளத்தில் ஸ்ரீபுதுவை நகரமே ஆயர்பாடியாகவும், அவண் திருக்கோயில் கொண்ட தேவாதிதேவனே நந்தகுமாரனாகவும், தன்னொத்த




நாமக்கல். மலைக்கோட்டையின் தோற்றமும், ஸ்ரீரங்கநாதர் கோயிலும்,
அதற்குச் செல்லும் படிக்கட்டுகளும், சந்நிதித்தெருக் காட்சியும்.

சிறுமிகளே கோப கன்னியராகவும், தானும் நந்தகோகுலத்தில் பிறப்புற்றுக் கண்ணன்பாற் காதலுற்ற ஓர் கோபிகா ரத்னமாகவும் ஓர் அரிய பாவனை உண்டாயிற்று.

“கீழ்வானம் வெள்ளெ”ன்றுகு முன்னர், பனித்தலை வீழ்த்துயில் நீத்தெழுந்து, நாட்காலே நீராடி மார்கழி முப்பது நாளும் “சுனை நீராடல்” என்று தமிழர் போற்றும் இவ்வரிய விரதத்தைக் கைக்கொண்டாள்.

இவ்வபலாமணி பூண்ட இந்நோன்பின் பயனாய், உலகிருள் ஒழிக்கும் ஒண்கதிர்ச் செல்வன் போல், மக்கள் மதிமயக்கத்தை ஓட்டி அவருக்கு ஸகல புருஷார்த்தங்களையும் அளித்தருளும் ஓர் **ப்ரபந்த மணி** உதித்தது. அதுவே திருப்பாவை. திருவாய் மலர்ந்தருளிய **திருப்பாவை** யாகும்!

பத்துப் பன்னிரண்டு பிராயத்தவளான இவ்வன்பிற் கரசியின் அரிய நூலின் அழகை யாரே அமைய எடுத்துரைக்க வல்லார்? கடலையுங் கையிட்டுக் காட்டுவது போல் ஏதோ சிறிது பேசிக் களிக்கலாம். திருப்பாற் கடலின் திவலையை எறும்பு சுவைத்தது போல் இப்பிரபந்தத்தை நாமும் சிறிது அனுபவிக்கலாம். கடுகைத் துளைத்து ஏழு கடலை அதனுள் அடக்கினாராம் ஓர் தொல்லாசிரியர். “பால் மணம் மாறாத” இப்பச்சைப் பசுங் குழவி கடலினும் எத்துணையோ பெரிய மோக்ஷப் பேருலகை இச்சிறிய, முப்பது பாடலாலியன்ற, சொற்றொகுதியில், அடக்கி அருமருந்தாக இவ்வவனியெல்லாம் உய்யுமாறு அருளினள்! ஸ்ரீய:பதியே ஸர்வஸ்மாத் பரனென்றும், அவனே உபாயோபேய மென்றும், உலகில் ஜீவன் அவன் சரணாரவிந்தத்தை அடைவதற்கன்றி வேறு எச்செயலுக்கு முயன்றாலும் துக்கமே அடைவனென்றும், சிறிது நினைப்பினும் அப்பேரருளாளன் தன் எல்லையில் இன்பவெள்ளந் தருமென்றும், எளிய, சுவை நிறைந்த, செவிக்கினிய செந்

தமிழில் எடுத்துக் காட்டினாள். அபௌருஷேயமான ஸ்ரீ வேதங்களும் வேதாந்தங்களும் இதையே பன்னிப் பன்னிப் பரவசமாய்ப் பேசின. இவ்வரிய புருஷார்த்தங்களை எடுத்துப் பேசியபடியால் இக்கிரந்தரத்னம் உபநிஷத்து எனப்படும்.

ஸர்வேச்வரனது மனத்துக்கினிய மோஹன வடிவை,

"ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர் மதியம் போல் முகத்தான்"

என்றும், "ஆயர் குலத்தில் தோன்றும் மணி விளக்கு" என்றும் பேசுவாள். உபாஸகருக்கு அவ்வுபாஸனா தசையிலேயே பரம போக்யனான இம் "மனத்துக் கினியான்" பெயரை நாம் பாடினால் "போய பிழையும், புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்" என இருவினைகளும் கழியும். அவனுடைய சேஷ்டிதங்களோ, ஸர்வமனோஹரமானவை. "தாயைக் குடல் விளக்கம் செய்த இத்தாமோதரன்", "கள்ளச் சகடம் கலக் கழியக்கா லோச்சினான்" என்று சகடா ஸுர பஞ்ஜனத்தையும், "கஞ்சன் வயிற்றில் நெருப்பென்ன நின்ற நெடுமாலே" எனக் கப்ஸாரித்வத்தையும், "யசோதை யிளஞ் சிங்கம், கூர்வேற் கொடுந் தொழிலன் நந்தகோபன் குமரன்" என்று அவனது திவ்யாவதாரத்தையும், "சென்றங்குத் தென்னிலங்கை செற்றாயே" என்று ராவண வதத்தையும் இன்னும் ஏனைய அழகிய லீலைகளையும் எடுத்துப் பேசுவாள்.

அவனுடைய விபவமோ பரமபதத்தையும் பாற் கடலையும் விஞ்சியது. "வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்து" வந்து அவதரித்த இடம் "சீர்மல்கு மாய்ப் பாடி" யாகும்!

அவன் வளரும் திருமனையோ "கனைத்திளங்கற் றெருமை கன்றுக்கிரங்கி நினைத்து முலைவழியே நின்று பால் சோர நனைத்தில்லம் சேறாகுவது!" அவன் தந்தையோ,

"உந்துமத களிற்றன், ஓடாத தோள் வலியன், யார்க்கும் காயகனாய் நின்றவன், அம்பரமே தண்ணீரே சோறே யறஞ் செய்பவன்."

அவன் காதற் கிழத்தியோ நப்பின்னை நங்கை இவளது கொத்தலர் பூங்குழலழகே போதும்! மைத்தடங் கண்ணைப் பேசவேண்டுமோ? குத்து விளக் கெரியக் கோட்டுக் காற் கட்டில் மேல் மெத்தென்ற பஞ்ச சயனத்தில் நப்பின்னைப் பிராட்டியின் திரு முலைத்தடங் களில் வைத்துக் கிடந்த மலர் மார்பனை அவனது கிடக்கை ஸ்ரீ பரமபதத்தில் காட்டிலும் இவ்வேந்திழைக்கு, மனோஹரமா யிருந்தது. பச்சைப் பசுங்கிளி பாடுவது போல் இவளது தமிழின் எழிலைக் காண வாருங்கள்.

காலையில், புள்ளும் சிலம்பின, புள்ளரையன் கோயிலில் சங்கம் இனிது ஒலிக்கிறது. அறவோரும் அந்தணரும் ஸர்வ பாபஹரமான "ஹரி, ஹரி" என்ற நாமாம்ருதத்தை, கேட்பார் செவியில் அள்ளித் தெளித்த வண்ணம் நீராடச் செல்கின்றனர். ஆயர் பெண் பிள்ளைகள் தங்கள் கை வளைகளும் கழுத்தில் பொன்னாபரணங்களும் கலகல வென ஒலிக்கக் கண்ணன் பெயர் பாடித் தயிர் கடைகின்றனர். எருமைகள் மெதுவாய் மேயச் செல் கின்றன. குளத்தில் செங்கழுநீர் மலர்ந்து நிற்கிறது, ஆம்பல் குவிந்தது.

மாதவிப் பந்தல் மேல் பல் கால் குயிலினங் கூவு கின்றன. துறவிகள் ஸ்ரீ ஹரிஸேவார்த்தம் விரைகின்றனர். காலை வேளையின் இவ்வழகு தான் என்னே!

ஸ்ரீ கண்ணபிரானின் மணங்கவர்ந்த நப்பின்னைப் பெருமாட்டியின் புருஷகாரத்திற்கு இக்குழந்தை துடிக் கிறது. "நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்!" ஸ்ரீபிராட்டியார் கடைக் கண்ணன்றோ முதலில் ஸர்வ பலப்ரதம்! இவர் வடிவழகு "செப்பென்ன மென்முலைச்

செவ்வாய் சிறு மருங்குல்" என எத்துணை உண்மையுடன் பேசப்படுகிறது!

"தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரியத்
தூபங்கமழத் துயிலணை மேற்கண் வளரும்
மாமான் மகளே! மணிக் கதவம் தாள் திறவாய்"

கவிதா ரஸம் ததும்பியோடும் இப்பாட்டு ஸ்ரீகண்ண பிரான் சயன க்ருஹத்தைப் பேசுந்தகவோ!!

இவ்வழகிய நோன்பை ஜீவ ஸாமான்யம் அனுஷ்டிக்க வேண்டும். ஏன்? இஜ்ஜன்மம் கடைத்தேற அனுஷ்டிப்பதற்கு ஸாமக்ரி பெறுவது கடினமோ! இல்லை—


"ஞாலத்தை யெல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்து உன்பாஞ்ச ஜன்யமே
போல்வன சங்கங்கள் போய் பாடுடையன
சாலப் பெரும்பறையே! பல்லாண்டி சைப்பாரே
கோல விளக்கே! கொடியே விதானமே"

— இவ்வளவுதான் இவ்வுத்தமி ஸர்வேச்வரனை வேண்டுவதெல்லாம்.

"நீ, குற்றேவலெங்களைக் கொள்ளாமற் போகாது
எற்றைக்குமேழ் ஏழ் பிறவிக்கும் உந்தன்னோடு
உற்றோமேயாவோம் உமக்கே நாம் ஆட் செய்வோம்
மற்றை நம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்!"

"அர்த்த பஞ்சகத்தை"ச் சுருக்கி அழகிய தமிழில் பேசியருளுவதைப் பாருங்கள்!!

இச்சோலைக் கிளியான ஆண்டாள் சில சமயம் நகைச் சுவையையும் கைக்கொண்டு பேசும். ஓர் பெண் மணி மயங்கி மயங்கி எழுந்திருக்க முடியாது நித்ரா ரஸிகையாய்த் திளைத்தாள். அவளைப் பார்த்து முன் இறந்த "கும்பகர்ணனும் தோற்று முனக்கே பெருந்துயில் தான் தந்தானோ" என வினவும். இன்னொரு பெண்




கோவிலின் அருகே உள்ள புஷ்கரணி தீர்த்தம் (திருப்பதி)

இவளது பாட்டு காதில் விழாமலோ, விழுந்து விழாதது போல் பாவித்தோ கிடந்தாள். அவளை,

''மாமான் மகளே! மணிக்கதவந்தாள் திறவாய்!
மாமீர் அவளை எழுப்பீரோ? உன் மகள் தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?—''

என்னும்,

தன், வினை சாதிக்க வேண்டிப் பார்ப்பார் நெஞ்சுருக இரங்கிப் பேசும் ஸ்ரீ நந்தனது திருக்கோயிற் காவலரை,

''வாயினால் முன்ன முன்ன மாற்றாதே யம்மா நீ
நேய நிலைக் கதவம் நீக்கேலோ ரெம்பாவாய்''

என்னும்,

இவ்வேண்டுகோட்குக் கல்லும் கரையாதோ?

எம்பெருமானின் புகரமைந்த வடிவைப் பேசுங்கால் இக்குழந்தையின் இளம் வாக்கு எத்துணை ஒளிபெற்று மிளிர்கிறது பாருங்கள். குகையில் கிடந்த வீரம் செறிந்த சிங்கம், துயில் நீங்கும்பொழுது, கண்களில் நெருப்பைக் கக்கியது போல் நோக்கங் கொண்டு, தன்பிடரி அசைய உடம்பையும் சிலிர்த்து, காடெலாம் அதிர முழங்கி கர்ஜிக்கும். இம்மிருகத்தின் இயல்பை இப்பச்சைப் பசுங்குழந்தை பேசியது போல், ஸ்ரீய: பதியும் தன் முன் வரவேண்டுகிறாள்.

மாரிமலை முழைஞ்சில் மன்னிக்கிடந் துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரிமயிர்ப் பொங்க எப்பாடும் போந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப் போதருமாப் போலே.

ஸ்ரீ கண்ணபிரான் தன் கோயினின்றும் இவளெதிரே போதரவேணுமாம். சீரிய சிங்காதனத்திலிருந்து இவளை 'வந்த காரியம் யாது?'' என வினவ வேண்டுமாம்!

வாசகர்காள்! இப்பாவை பாடிய தன்னைப் "பைங் கமலத் தண்டெரியல் பட்டர்பிரான் கோதை" யென்று ஸ்ரீ பெரியாழ்வார் திருவடி ஸம்பந்தத்தை யிட்டே பேசிக் கொள்ளும் ஆசார்ய பக்திதான் என்னே!

இவ்வனிதா ரத்னத்திடம் ஸர்வேச்வரன் காட்டிய காதல் பேசப் புகின் ஓர் ப்ரபந்தமாய் முடியும். இவளது மார்கழி நோன்புக்கு மகிழ்ந்த மாதவன், இவளது பாட்டினால், யாமொலியிற் கட்டுண்ட மதகளிறுபோல் அலமலந்து ஆ! ஆ! என்றருள விரைந்து பங்குனி யுத்தரத் திருநாளில் பாணிக்ரஹணமும் மண்ணும் விண்ணும் மகிழச் செய்து கொண்டான்.

இந்நோன்பு ஸ்ரீ வைணவராலயந் தோறும் திருப் பாவை ஸேவாக்ரமமாகச் சிறப்பித்து நடத்தப் பெறும். இத்திருப்பாவை அவதரித்த ஸ்ரீ வில்லிப் புதுவை நகரத் தில் மார்கழி மாதம் முழுவதும் ஆண்டாள் விபவத்தில் போலவே அர்ச்சையிலும் அனுஷ்டித்ததாகவும் பின் எம்பெருமானார் ஸ்ரீ வடபெருங்கோயிலானின் திருவத்ய யனோத்ஸவம் இம்மாதமே வருவதால் அது நில்லாது நிகழுமாறு, இந்நீராட்ட விழாவை மார்கழி இறுதி எட்டு நாட்கள் என வரையறுத்தாராம். இப்புதுவையர் செல்வி நீராட்ட விழாக்கண்டருளுவதையும் இத்திருப்பாவை கடலொலிபோல் முழங்குவதையும் நேரிற் கண்டு களியுங்கள்!!!

9 மணி முதல் 10 மணி வரையில் மாயவரம் கூறை நாடு முனிசிபல் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் ஸ்ரீ உ. வே. வரதராஜ அய்யங்கார் அவர்களால் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசைப்பிரான் இவர் களின் சிறப்பைப்பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தப் பட்டது.

---

# முதலாழ்வார்கள் வைபவம்

திருவிந்தளூர்
கம்பராமாயணப் பிரசங்க பூஷண
வித்வான் - S. வரதராஜய்யங்கார்

## 1. பொய்கையாழ்வார்.

துலாயாம் ச்ரவணே ஜாதம் காஞ்ச்யாம் காஞ்சநவாரிஜாத்।
த்வாபரே பாஞ்சஜந்யாம்சம் ஸரோயோகிநமாச்ரயே ॥

## 2. பூதத்தாழ்வார்.

துலாதநிஷ்டாஸம்பூதம் பூதம்கல்லோலமாலிநம்।
தீரே புல்லோத்பலே மல்லாபுர்யாமீடே கதாம்சகம் ॥

## 3. பேயாழ்வார்.

துலாசதபிஷக் ஜாதம் மயூரபுரிகைரவாத்।
மஹாந்தம் மஹதாக்யாதம் வந்தே ஸ்ரீ நந்தகாம்சகம் ॥

## முதல் திருவந்தாதி

வையந் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக—செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே என்று.

## இரண்டாந் திருவந்தாதி

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா—நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்.

## மூன்றாந் திருவந்தாதி

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன்—செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கங்கைக் கண்டேன்
என்னாழி வண்ணன் பால் இன்று.

பரமபாகவதோத்தமர்களது இருதயமாகிய தாமரை மலர்களில் எழுந்தருளிய ஸ்ரீய:பதியாகிய ஸ்ரீமந் நாராயணன் அநாதிகர்ம வச்யர்களாகிய ஜீவாத்மாக்கள் ஜநந மரண துக்கங்களைவிட்டு நீங்கி உஜ்ஜீவிக்கும் நிமித்தம் தமது தேவீ பர்யங்க பூஷணாயுத பரிஜனங்கள் பூலோகத்தில் அவதரிக்கும்படி திருவுள்ளங்கொண்டருள, அத்திருவுள்ளத்தின்படியே, ஆதியில் பாஞ்சஜந்யாம்சம் துவாபர யுகாந்தத்தில் ஓர் ஐப்பசி மீ சுக்லபக்ஷ அஷ்டமி திதி செவ்வாய்க்கிழமை கூடின திருவோண நக்ஷத்திரத்தில் அத்திகிரி என்னும் மஹத்தான திவ்ய தேசத்தை உடைய ஸ்ரீ காஞ்சி க்ஷேத்திரத்தில் புண்ணிய தீர்த்தமாகிய பொய்கை புஷ்கரணியில் விகஸித்த பொற்றாமரைப் பூவிடமாகத் திருவவதாரஞ் செய்து, ஒப்பில்லாத பகவத் பக்தியுள்ளவராய், பொய்கையாழ்வார் என்னும் திருநாமம் பெற்று எழுந்தருளியிருந்தார்.

பின்பு, ஸ்ரீ கதாம்சம் பொய்கையாழ்வார் அவதரித்த தினத்திற்கு மறு தினம் நவமி திதி கூடின அவிட்ட நக்ஷத்திரத்தில், திருக்கடன் மல்லை (மாவலிபுரம்) என்னும் திருப்பதியில் குருக்கத்தி மலரிடமாக அவதரித்து, ஸ்ரீமந் நாராயணனது திருவடிகளில் அந்தரங்க பக்தியுள்ளவராய்ப் பூதத்தாழ்வார் என்னும் திருநாமம் பெற்று எழுந்தருளியிருந்தார்.

அதன் பின்பு ஸ்ரீ நந்தகாம்சம், பூதத்தாழ்வார் அவதரித்த தினத்திற்கு மறு தினம் தசமி திதி கூடின சதய நக்ஷத்திரத்தில் திருமயிலை என்னும் திருப்பதியில் ஆதிகேசவப் பெருமாள் ஸந்நிதிக்கடுத்த திருக்கிணற்றில்

மலர்ந்த செவ்வல்லிப்பூவினிடமாக உதயஞ் செய்து, ஜகத் ரக்ஷகனான எம்பெருமான் திருவடிகளில் பிரியா அன்புள்ளவராய்ப் பேயாழ்வார் என்னும் திருநாமம் பெற்று எழுந்தருளியிருந்தார்.

"ஜநந மரண துக்கங்களை நீக்கிப் பரமபதத்தை அடைவிப்பதற்கு ஸ்ரீமந்நாராயணனுடைய சரணாரவிந்தங்களும், பாகவத ஸேவைகளுந்தவிர வேறு கத்யந்தரமில்லை" என்னும் யதார்த்த ஞான முடையவர்களாய், அந்தந்த துக்கங்களுக்கு ஹேதுவாகிய கிருத்தியங்களைச் செய்து உழல்கின்ற ஆத்மாக்கள் அதையொழித்து ஸ்ரீமந் நாராயணனது திருவடிகளில் பக்தி வைத்துப் பரம பதத்தையடையத் தக்க முயற்சி செய்யவேண்டும் என்று திருவுள்ளங்கொண்டு தங்கள் தங்கள் அவதார ஸ்தலங்களிலேயே எழுந்தருளியிருந்த இந்த முதலாழ்வார்கள் மூவரும் பாகவதர்களையும், திவ்ய தேசங்கள் தோறும் அர்ச்சாவதாரம் கொண்டு எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானையும் ஸேவிக்க வேண்டும் என்னும் திருவுள்ள முள்ளவர்களாய்த் தங்கள் தங்கள் அவதார ஸ்தலங்களை விட்டுத் தனித்தனியாகப் புறப்பட்டு, திவ்ய தேசங்கள் தோறும் எழுந்தருளி பகவத் ஸேவை செய்து பாகவதர்களைத் தேடிக்கொண்டு எழுந்தருளிவரும்போது, இந்த முதலாழ்வார் மூவரும் பெண்ணை நதியின் தென்கரையில் ஸ்ரீய:பதியான ஆயனார் எழுந்தருளிய திருக்கோவலூருக்கு ஒருவரை யொருவர் அறியாதவர்களாக வந்து சேர்ந்து, எம்பெருமான் ஸந்நிதிக்கு எழுந்தருளி, மங்களாசாஸனம் செய்து, வெகு விதமாக ஸ்தோத்திரங்கள் செய்து, ஆநந்த பரவசர்களாய்த் திருமந்திரங்களை ஜபித்துக்கொண்டு, தனித் தனியாக வேறு வேறிடங்களில் எழுந்தருளி யிருந்தார்கள்.

ஒருவர் படுக்கவும், இருவர் இருக்கவும், மூவர் நிற்கவும் இடம்பெற்ற இடைகழி ஒன்றில மூவரும் தெய்வ

யோகத்தால் ஒருநாள் இரவில் ஒவ்வொருவராய் வந்து கூடி ஸ்ரீமந்நாராயணன் லக்ஷ்மீ ஸமேதராய் ஸேவை ஸாதித்தருளக் கண்டு, தேவாம்ருதம் போன்ற மதுரமான சொற்பொருள்களினால் ஸ்ரீமந் நாராயணனது திவ்ய குணானுபவங்களை அமைத்து மெய்யன்பினால், முறையே "வையந்தகளி", "அன்பேதகளி", "திருக்கண்டேன்", என்று முதலெடுத்து மூன்று திருவந்தாதிப் பிரபந்தங்களைச் செய்து அருளினர்.

இந்தப் பிரகாரம் முதலாழ்வார்களான இந்த மூன்று திருநாமங்களும், ருக்வேத, யஜுர்வேத, ஸாமவேதார்த் தங்களைத் தமிழினால் பிரகாசமாகச் செய்து, அநேக காலம் மகிமையுடன் எழுந்தருளியிருந்து உலகை வாழ்வித்தருளி னார்கள்.

**முதலாழ்வார்கள் திருவடிகளே சரணம்.**

**10** மணிக்குக் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிந்து, மகாநாடு கலைந்தது.

மறுபடியும் மாலை **3-30** மணிக்கு மகாநாடு கூடியது. **3-30** மணி முதல் **4-30** வரையில் ஸ்ரீரங்கம் குண்டலம் ஸ்ரீ ரெங்காச்சாரியார் அவர்களால் **திருப்பாவைக் கடைப்** பத்தின் சிறப்பு எடுத்துக் காட்டப்பட்டது.

---

# ஸ்ரீ ஆண்டாளும், திருப்பாவையும்.

## சொற்பொழிவாளர்:

## சூண்டலம், ஸ்ரீ ரெங்காச்சாரியார்.

*கர்கடே பூர்வபல்குந்யாம் துளஸீகாநநோத்பவாம்*
*பாண்ட்யே விச்வம்பராம் கோதாம் வந்தே ஸ்ரீரங்கநாயகீம்.*

முன்பு ஜனகராஜன் யாகசாலை யமைத்தற்பொருட்டு கலப்பை கொண்டு பூமியை உழுகையில் அந்த உழுபடைச் சாலில், ஸ்ரீ தேவியின் அம்சமான ஒரு மகள் தோன்ற அவளை அவ்வரசன் தன் புத்திரியாகப் பாவித்து சீதை என்று பெயரிட்டு வளர்த்து வந்தான்.

அதுபோலவே கலி-98 ஆவதான நள ஷூ ஆடிமீ பூர்வபல்குனீ நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் ஸ்ரீ வில்லி புத்தூரில் பரமபக்தரான பெரியாழ்வார் என்பவர் திருத் துழாய்ப் பாத்தியமைத்தற்பொருட்டு களைக்கொட்டு கொண்டு திருநந்தவனத்தைக் கொத்துகையில் அந்த நிலத்தில் ஸ்ரீதேவி பூதேவிகளின் அம்சமான ஒரு மகள் தோன்ற ஆழ்வாரும் அவளைத் தமது மகளாகப் பாவித்துக் கோதை என்று நாமகரணம் செய்து வளர்த்து வந்தார்.

தரித்திரன் பெருநிதியைக் கண்டாற்போல் அப் பெண்ணருங்கலத்தைக் கண்டளவில் பெருங்களிப்பு கொண்டு மிக அருமையாகச் சீராட்டிப் பாராட்டித் தாலாட்டிப் பாலூட்டிப் பாலித்து வந்து பட்டர்பிரான் அவளுக்குப் பஞ்சஸம்ஸ்காரங்களைச் செய்து பரம ஞானத்தைப் போதித்தனர்.

கோதையும் காண்போர் வியக்கும்படி, இளமை தொடங்கி, எம்பெருமான் பக்கலிலே பக்திப் பெரு வேட்கை கொண்டு அவனையே தான் மணஞ் செய்து கொள்ளக் கருதி அப் பிரானது மகிமைகளையே எப்பொழுதும் சிந்தித்தல் துதித்தல் செய்து கொண்டிருந்தாள்.

பெரியாழ்வார் தினமும் ஸுகந்த குஸுமங்கள் கொண்டு திருமாலை தொடுத்து வடபெருங்கோயிலுடையானுக்கு ஸமர்ப்பித்து வந்தார். இவ்விதமிருந்துவரும் நாளில் ஆழ்வாருக்குத் தெரியாமல் கோதாதேவியும் மாலையைத் தன் குழலில் அணிந்து கண்ணாடியிலே அவ் வொப்பனை அழகைக் கண்டு களித்துத் தந்தையார் வரு முன் மலர்மாலையைக் களைந்து முன்போலவே செண்டாகச் சுற்றி வைத்து வந்தாள்.

ஆழ்வாரும் இது தெரியாமல் தினமும் மாலையைச் சுவாமிக்குச் சாத்திவரப் பெருமானும் ப்ரீதியுடன் ஏற்றருளினன்.

இங்ஙனம் பல நாள் கழிந்தபின் ஒரு நாள் இச் சம்பவத்தைக் கண்ணுற்ற ஆழ்வார் தன் மகளைக் கடிந்து மஹத்தான அபசாரம் நடந்ததை எண்ணி மனம்வெதும்பி அன்று வடபத்திரசாயிக்குப் புஷ்பம் சாத்தாமல் கலங்கி இருந்தார்.

அற்றைநாளிரவில் ஆலிலையில் துயில்வோன் ஆழ்வாரது கனவில் தோன்றி "இன்று நீ நமக்கு மாலை கொண்டு வாராதது ஏன்?" என்று வினவியதற்கு அவர் தம் திருமகளது பொருந்தாச் செய்கையை விண்ணப்பம் செய்ய அதுகேட்டு அப்பெருமான் "அவள் சூடிக் கொடுத்த மாலையே காண் நறுமணம் மிக்கு நமது உள்ளத்துக்கு நனி உகப்பாவது. ஆதலின் இனி அத்தன்மைத் தான தொடையலையே நமக்குக் கொண்டு வருவாய்" என்று அருளிச் செய்தனன்.

உடனே கண்விழித்த விஷ்ணுசித்தர் அம்மங்கையை மலர்மங்கை என்றே எண்ணி அவள் திறத்து அளவிலன்பு கொண்டு அனைத்துலகத்திற்கும் அன்னையாய் அவற்றை ஆண்டுவருகின்ற இலக்குமியின் அவதார விசேஷமென்ற காரணத்தால் அவளுக்கு **ஆண்டாள்** என்றும், மாதவனுக்கு உரிய மலர்மாலையைத் தான் சூடிக்கொண்டு பார்த்துப் பின்பு கொடுத்தது காரணமாக **சூடிக் கொடுத்த நாச்சியார்** என்றும் திருப்பெயரிட்டு அழைத்து வந்தார்.

அந்நாச்சியார் தனது பருவம் வளரும் தோறும் ஞானபக்திகளும் உடன் வளர்ந்து வரப்பெற்று, தனக்கு ஏற்ற காதலனாகக் கருதிய கடல்வண்ணன் விஷயமான வேட்கை விஞ்சியவளாகி, இனி அவனை ஒரு கணப் பொழுதும் கூடாதிருக்கப் பொறுமல், கண்ணனது பிரிவையாற்றாத கோபஸ்திரீகள் போலத் தானும் நோன்பு நோற்று உயிர்தரிப்பவளாய், அவ்வபிப்ராயத்தை, ‘திருப்பாவை’, ‘நாச்சியார் திருமொழி’ என்ற திவ்ய ப்ரபந்தங்கள் மூலமாக பகவத்ஸன்னிதியிலே விண்ணப்பம் செய்து வாழ்ந்திருந்தாள்.

இவ்விதமிருக்கத் திருவரங்கச் செல்வன் ஆழ்வாருடைய சொப்பனத்திலே யெழுந்தருளி உமது திருமகளைக் கோயிலுக்கு அழைத்துக் கொண்டு வாரும்; அவளை யாம் அங்கீகரிப்போம் என்று அருளிச் செய்ய ஆழ்வாரும் ஸந்துஷ்டனாக இருந்தார்.

ஸ்ரீரங்கநாதன் கோயிற் பரிசனங்களது கனவிலே தோன்றி நீங்கள் ஸகல வரிசைகளுடன் நவரத்தினப் பல்லக்கையும் உடன்கொண்டு ஸ்ரீ வில்லிபுத்தூர் சென்று ஆண்டாளைப் பல்லக்கில் அழைத்து வாருங்கள் என்று கட்டளை யிட்டான்.

அவர்களும் ஸ்ரீவில்லிபுத்தூரே சென்று நம் பெருமானது அருளப்பாட்டை விஷ்ணு சித்தரிடம் விண்ணப்பம் செய்ய, கர்ணாம்ருதமான அவ்வார்த்தையைச் செவியாரக் கேட்டு ஸந்தோஷித்து கோதைதாதை வட

பெருங்கோயிலுடையான் ஸந்நிதியிலே விண்ணப்பம் செய்து அனுமதி பெற்றுப் பிரயாணமானர்.

இதைக் கேள்வியுற்ற ஸ்ரீ வல்லபதேவனென்னும் அரசனும், ஸ்ரீவில்லிபுத்தூர், ஸ்ரீரங்கம் இவற்றை அலங்கரிப்பித்து சதுரங்க பலத்துடன் ஆழ்வார் பக்கல் வந்து சேர்ந்தான்.

அப்பால் பட்டர்பிரான் ஆண்டாளை மணிச்சிவிகையில் எழுந்தருளப் பண்ணி மங்கள வாத்யகோஷத்துடன், ஆண்டாள் வந்தாள், சூடிக்கொடுத்த சுடர்க்கொடி வந்தாள், சுரும்பார் குழற் கோதை வந்தாள், திருப்பாவை பாடிய செல்வி வந்தாள், பட்டர்பிரான் புதல்வி வந்தாள், வேயர் குலவிளக்கு வந்தாள் என்று பல பல சின்னங்கள் பணிமாற அழைத்துவந்து திருவரங்கம் பெரியகோயிலை யடைந்து முன்மண்டபத்திலே ஆண்டாளை நிறுத்திப் பெருமாள் ஸேவை பண்ணுவிக்கையில் இரும்பைக் காந்தம் இழுக்கின்றவிதமாக அத்திருமாலின் திவ்ய சௌந்தரியத்தினால் கவரப்பெற்ற கோதையும், சிலம்பார்க்கச் சீரார்வளை யொலிப்பக் கொடியேரிடை யாடக் காதளவும் ஓடிக் கயல்போல் மிளிரும் கடைக்கண் பிறழ அன்னமென்னடை கொண்டு அருகிற் சென்று ஆனந்தக் கடலிலாழ்ந்து திருவரங்கன் திருவடி வருடக் கருதி நாகபர்யங்கத்தை மிதித்தேறி நம்பெருமானது திருமேனியில் அந்தர்பவித்து அவனை என்றும் பிரியாது இருப்பவளாயினள்.

(உய்யக் கொண்டார் அருளிச் செய்தது)

மூலம் :—

அன்ன வயல் புதுவை யாண்டா ளரங்கற்குப்
பன்னு திருப்பாவைப் பல் பதியம்—
இன்னிசையால் பாடிக் கொடுத்தாணற் பாமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல். [—பூமாலை

பதம் : உரை

அன்னம் — ஹம்ஸங்கள் ஸஞ்சரிக்கிற.
வயல் — வயலையுடைய.
புதுவை — ஸ்ரீவில்லிபுத்தூரில் திருவவதரித்தருளின.
ஆண்டாள் — ஆண்டாள்.
அரங்கர்க்கு — பெரிய பெருமாள் விஷயமாக.
பன்னு — ஆராய்ந்தருளிச் செய்த.
திருப்பாவை — திருப்பாவையாகிற.
பல்பதியம் — பலபாட்டுக்களை.
இன் — செவிக்கினிய.
இசையால் — இசையாலே.
நல் — லக்ஷணமான.
பாமாலை — பாட்டுகளாகிற மாலையாக.
பாடிக் கொடுத்தாள் — பாடிக் கொடுத்தவளாய்.
பூமாலை — செண்பகம், மல்லிகை, செங்கழுநீர், இருவாட்ச்சி முதலான பூக்களால் இடையிடுத் தொடுத்த திருத்துழாய் மாலையை.
சூடி — தன் திருக்குழலிற் சூடி.
கொடுத்தாளை — ஸமர்ப்பித்தவளை.
சொல் — அநுஸந்தி.
மூலம் :—

**சூடிக்கொடுத்த சுடர்க் கொடியே! தொல் பாவை**
**பாடியருளவல்ல பல்வளையாய்!—நாடி நீ**
**வேங்கடவற்கென்னை விதியென்ற விம்மாற்றம்**
**நாங்கடவா வண்ணமே நல்கு.**

சூடி — பூமாலையைத் திருக்குழலிற் சூடி.
கொடுத்த — பெரிய பெருமாளுக்கு ஸமர்ப்பித்தருளின.
சுடர்க்கொடியே — பொற் கொடி போன்ற வடிவழகையுடையவளே.
தொல் — பழையதான.
பாவை — நோன்பை.

பதம் : உரை

பாடி — திருப்பாவை யென்னும் திவ்யப்ரபந்தத்தால்பாடி.
அருளவல்ல — உபகரிக்கவல்லளாய்.
பல் — பலவகைப்பட்ட,
வளையாய் — வளையல்களையணிந்தவளே.
நீ — மன்மதனை நீ.
நாடி — ஆராய்ந்து.
வேங்கடவற்கு—திருமலையிலெழுந்தருளி யிருக்கிறவனுக்கு.
என்னை — (கையும் திருவாழியுமான சேர்த்தியழகைக் காணவேணுமென்று ஆசைப்படுகிற) என்னை.
விதி — அந்தரங்க கைங்கரியம் பண்ணும்படி விதிக்க வேண்டும்.
என்ற — என்றருளிச்செய்த.
இம்மாற்றம் — இப்பாசுரத்தை.
நாம் — உனக்கடிமையாயிருக்கிற நாங்கள்.
கடவாவண்ணம் — அதிக்கிரமியாதபடி.
நல்கு — உபகரிக்கவேண்டும்.

திருப்பாவை என்பது மார்கழித் திங்கள் என்பது முதலாக வங்கக் கடல்கடைந்த என்பதுடன் முப்பது பாட்டாக உள்ளது; உபநிஷத்தின் ஸாரம் கொண்டதாகிறது.

---

4-30 மணி முதல் 5 மணி வரை திருவையாறு அரசர் கல்லூரி ஸ்ரீ உ. வே ஸ்ரீநிவாஸாசாரியார் அவர்களால் திருப்பாவை கடைப்பத்து இசையுடன் பாராயணம் செய்யப்பட்டது.

அச்சமயம் ஸ்ரீ ஆசார்யாள் ஆக்ஞைப்படி அவர் மாணிக்க வாசகர் அருளிய திருவெம்பாவையிலிருந்தும் ஸ்ரீ ஆண்டாள் அருளிய திருப்பாவையிலிருந்தும், சொற்றொடரிலும் தனிப்பட்டச் சொற்களிலும் உயர்ந்த

கருத்துக்களிலும் அழகிய ஒற்றுமை வாய்ந்த பாடல்களைப் பாடி விளக்கி அவ்விடம் அமர்ந்திருந்தோர் அனைவரையும் பேரானந்தத்தில் ஆழ்த்தினர்.

அச்சமயம் அவர் கூறியதாவது:—

காலத்தினாலும் தேசத்தினாலும் மாறுபட்ட மாணிக்க வாசக சுவாமிகளுக்கும் ஆண்டாளுக்கும் சில ஆச்சர்ய மான கருத்து ஒற்றுமைகள் இருக்கின்றன. பலவிடங் களில் சொல்லும், சொற்றொடரும் பொருளும் தமிழ் நாட்டின்கண் பாவை போன்ற இவ்விரண்டு பாவைகளிலும் ஆச்சர்யமான முறையில் ஒன்றுபட்டிருக்கின்றன. முக்கிய மாக, "முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையா

.. .. .. ..

யென்னப் பொழியாய மழையேலோ ரெம்பாவாய்" என் னும் திருவெம்பாவை 16-வது பாட்டும், "ஆழிமழைக் கண்ணாவொன்றுநீ கைகரவேல்

.. .. .. ..

வாழ உலகினிற் பெய்திடாய் ... .. எம்பாவாய்" என்னும் திருப்பாவை 4-வது பாட்டும் கன்னிப் பெண்கள் மழை பெய்வதற்காக இறைவனை வணக்கம் செய்வதைக் காட்டுகின்றன. இவ்விருபாடல்களும் சொல்லிலும் சொல் லடுக்கிலும் உவமையிலும் கருத்திலும் சால ஒன்றுபட்டு நிற்கின்றன. இதைப்போல ஒற்றுமையை யுணர்த்தும் சில பாடல்கள் உள.

5 மணி முதல் 6 மணி வரையில் 'தொண்டன்' ஆசிரியர் திரு. ஆறுமுகநாவலர் ஒரு சொற்பொழிவு இயற்றினர். இத்துடன் மாலை நிகழ்ச்சிகள் முடிந்தன.

மறுபடியும் இரவு 7 மணிக்கு மகாநாடு ஆரம்ப மாயிற்று. 7 மணி முதல் 8-15 வரையில் கள்ளக்குறிச்சி ஸ்ரீ உ.வே. தாதாசாரியார் அவர்களால் குலசேகராழ்வார், திருப்பாணாழ்வார் தொண்டரடிப்பொடியாழ்வார் இவர் களின் சிறப்பைக் குறித்து ஒரு சொற்பொழிவு நிகழ்த்தப் பட்டது.

# குலசேகராழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார் முதலியவர்களின் சிறப்பு.

சொற்பொழிவாளர்:
திரு. T. A. தாதாசாரியார், வக்கீல், கள்ளக்குறிச்சி.

ஸ்ரீ குருப்யோ நம:

லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்தியமாம் ।
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தேகுரு பரம்பராம் ॥

ஸ்ரீமத் ஆச்சாரியாள் பரமானுக்ரஹத்தைச் சென்னிமேல் கொண்டும், ஆச்சாரியர்கள் திருவடியிணைகளே துணையாகக் கொண்டும், இம் மகாநாட்டில் சீலமிலா இச்சிறியனை அடியேனும் மஹான்கள் அன்புடன் அளித்தருளிய திருத்தொண்டை அறிந்தவரை ஆற்றி உய்யத் துணிவு கொண்டேன். திருவுள்ளம் உவந்து பொறுத்துத் திருத்திப் பணிகொள்ள வேண்டி இம் மகாநாட்டுத் தலைவரையும், மகாநாட்டையும் வணங்கி வேண்டுகிறேன்.

## மகாநாட்டின் சிறப்பு.

இம்மகா நாட்டைத் தோற்றுவித்தவர்கள் அவதார புருஷர்களேயாவர். திருப்பாவையையும், திருவெம்பாவையையும் "நம்பாவை"யாக சாற்றி நீராடினால் தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து ஓங்கு பெருஞ் செந்நெல்லுடனும், தேங்காதே புக்கிருந்து சீர்த்தமுலை பற்றி வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்களுடனும், நீங்காத செல்வம் நிறைந்து நம் நாடு உய்யும்

என்கிற மகோபதேசத்தை இம்மகாநாடு செய்ய முன் வந்திருக்கிறது. ஆழ்வார்கள் அருமறைகளும், நாயன்மார்கள் திருமுறைகளும், நம் நாட்டுத் திருமறைகளாகும். மறையாய் விரிந்த மாமணியைக்கண்டு களிப்புற இருமறைகளான திருமறைக்கண்கள் இன்றியமையாதவையே. இது கொண்டே இம்மகாநாடு நிறுவப்பட்டது போலும். ஆழ்வார்கள் பிரபந்தங்களும் நாயன்மார்கள் திருமுறைகளும் தேனும் பாலுமாய்க் கலந்து இசையுடன் தாளம் வழங்கிப் பாடப்பருகப் பெறுவது நம் நாட்டுச் சரித்திரத்திலே இதுவே முதல் நிகழ்ச்சியாகும்.

"தொண்டக்குலத்திலுள்ளீர் வந்தடி தொழுதாயிர நாமம் சொல்லி பண்டைக் குலத்தைத் தவிர்த்து பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே" என்ற பெரியாழ்வாரின் அழைப்பும்,

"பொலிக பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச் சாபம், நலியும் நரகமும் நைந்த நமனுக்கிங்கியாதொன்றுமில்லை, கலியும் கெடும் கண்டு கொள்மின்" எனும் நம்மாழ்வாரின் ஆசியும் இம்மகா நாட்டில் இடம் பெற்று விளங்குகின்றன.

## நடுநாடும் திருமறைகளும்

நடு நாடு, கோவல், இடைகழியில்தான் முதலாழ்வார்கள் மூவரும் முதன்முதல் அந்தமிழால் அந்தாதி பாடினார்கள். இவ்வந்தாதிகளே தமிழ்ப் பிரபந்தங்களுக்கு முதன்மையானவை.

இந்நடு நாட்டிலேதான் அப்பரும் சுந்தரரும் அவதரித்து அருளினர். மற்றைய பல பெருந்தமிழரும் நடு நாட்டிலே தோன்றியுள்ளார். ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் இரு பெரியார்கள் ஒரே சமயத்தில் காட்டுமன்னார் கோயிலுக்கருகில் உள்ள வீரநாராயணபுரத்திலும், திருநாறையூரிலும் தோன்றினர். ஒருவர் நாதயோகிகள்

அல்லது நாதமுனிகள் எனக் கொண்டாடப்படும் வைணவ அந்தணர். மற்றொருவர் நம்பியாண்டார் நம்பியென அறியாப் புகழுடைய சிவநேசச் செல்வர். இவ்விருவரும் இலலையேல் ஆழ்வார்களுடைய பிரபந்தங்களும் நாயன் மார்களின் அருள்மொழிகளும் மெலிந்தே போயிருக்கும். இசையும் தாளமும் வழங்கி இவ்விரு திருமறைகளுக்கும் புத்துயிர் அளித்தவர்கள் இப்பெரியாரிருவருமேயாகும். இவ்விருவர்களும் அருகிலே தோன்றியிருந்தும் கூடிக் களித்தார்களில்லை போலும்.

## திருவரங்கத்தில் பிரபந்த மகாநாடு.

அக்காலத்தில் நாதமுனிகளால் மார்கழித் திங்களில் திருவரங்கப் பெருநகராகிய ஸ்ரீரங்கம் கோயிலில் அரங்க நகரப்பன் திருமுன்பே நிகழ்ந்தது ஒரு பெருந்திருவோ லக்கம். இருபது நாள் தொடர்ந்து இசையுடன் தாளம் வழங்கி ஆழ்வார்களின் பாசுரங்களை அரையர்கள் அனுப வித்துப் பாடிப் பேரின்பம் பெற்றது இம்மகாநாடு. இது தான் பெரிய திருவத்யயனோத்சவம்.

## திருமறைகளின் தற்போதைய நிலை.

பெரிய திருவத்யயனோத்சவம் நாளடைவிலே மலிந்து போக ஸ்ரீ இராமானுஜர் புத்துயிரளித்து எல்லா வைணவத் திருப்பதிகளிலும் இவ்வுத்சவத்தைப் பிரபந்தங்களின் முன் னேற்றத்துக்காகவே நியமித்தருளினார். இருந்தும் வைணவ ஆஸ்திகர்களும்கூட கோயில்களிலும் கோஷ்டிகளிலும் மனமுவந்து கலந்து அருளிச் செயல்களை அனுபவிக்கும் பேறு இழந்திருப்பது வருந்தத் தக்கதே. நாயன்மார்கள் அருள் மொழிகளோ மெய்த்தொண்டர் சிலரால் போற்றிப் பாடப்பட்டும், சைவ ஆதீனங்களால் பரிபாலிக்கப்பட்டும் வந்தாலும் பொதுமக்களின் ஆர்வமும் தொடர்பும் மிகவும் மெலிந்திருக்கிறதென்பதைச் சொல்லாமலிருப்ப தற்கில்லை.

## நம் ஆச்சார்யாள் அளித்த புத்துயிர்.

அறநெறி மங்கும் காலத்தில் தானே தோன்றி அறத்தை நிறுத்துவது தன்னியல்பு என்று அகர முதல்வன் அருளிச் செய்வன். மக்களை ஒன்றுபடுத்தி நன்னெறியில் வாழச்செய்வதே அறநெறியாகும். இறைவன் அவதார புருஷர்களைத் தோற்றுவித்தும் இவ்வற நெறியைக் காத்து, தன் திருவுள்ளத்தைத் தலைக்கட்டு கிறான். ஆரா அமுதன் நடுநாட்டு நாதமுனிகளைக் கொண்டு அக்காலத்தில் பிரபந்தங்களைக் காத்தருளினான். சர்வேச்வரனான ஆரா அமுதமே நம் ஆச்சார்யாளுக்குத் தமிழ்க் கலைகளிலுள்ள ஆர்வத்தைத் திருவுள்ளமுவந்து இம்மகாநாட்டை அருளினான் போலும். நமது ஆச்சார்யாளும் நடு நாட்டில் அவதரித்த மகாபுருஷர். தலைமை தாங்கும் பெரியாரும் நம் நடுநாட்டில் தோன்றியவர். இவ்விரு பெரியார்களும் இம்மகாநாட்டை அலங்கரித்து அருள்வது மிகப் பொருத்தமுடையது.

ஸ்ரீமத் ஆச்சார்யாள் ஸன்னிதி கொண்டு இம்மகா நாட்டின் நிகழ்ச்சிகளனைத்தையும் திருச்செவி சாய்த் தருள்வதுமல்லாமல் அவ்வப்பொழுது பாலும், தேனும், கன்னலும் என இனிய தமிழ்மொழிகளால் அரிய பெரிய சொற்பொழிவுகள் செய்தருள்வதும் மெய்யடியார்களின் கலைகளுக்கு ஒரு நவயுகம் பிறப்பித்திருக்கிறதென்றே கொள்ளல் வேண்டும்.

## இறைவனும் அருள்மொழிகளும்.

தேவனே வேதமாகி வேதமும் நான்காகி அங்கங்கள் ஆறுமாகி அவற்றுளே தங்கினான் தனி முதல்வன். அவனை தவப்பயனினாலும் யோக மகிமையாலும் வேத வேதாங் கங்கள் ஓதுவதாலும் கண்டு அறிந்தார்கள் மகரிஷிகள். வேதங்கள் அறைந்த நீதித் திறந் தெரிந்து, உலகம் பூண்வும், தீயோர் இடர் கடிந்து தக்கோரைக் காத்தருள

வும், உலகினில் பல உருவங்களில் தோன்றினன் பரமன். அவன் திருப்புகழ்கள் தான் இதிகாஸ புராணங்கள். பயிர்த் தலைகளில் குடிசைகள் அமைத்து பயிரைக் காக்கும் வேளாளனைப்போல், தான் உகந்தருளிய நற்பதிகளிலே, தமருகந்த மூர்த்தங்களிலே, என்றைக்கும் நின்றும் இருந்தும் கிடந்தும் தன்னை அண்டினவர்கள் யாவரையும் முகங்கொடுத்து காத்தருளவே, கருணைக் கடலான சர்வேச்வரன் திருக்கோயில்கள் கொண்டு எழுந்தருளியுள்ளான். இவ்வாறமைந்த தலங்களையும் தீர்த்தங்களையும் மூர்த்தங்களையும் தெய்வ நிலைகளையும் கண்ணாரக் கண்டு களித்து உள்ளடங்கா அன்பும் ஆர்வமும் மேலிட்டு, பொங்கியெழுந்த அருள்மொழிகளே ஆழ்வார்கள், நாயன்மார்கள் பாடல்கள் என்பர் ஆன்றோர். ஆகவே வேதமுதல்வனுக்கும், வேதங்களுக்கும், வேதாங்கங்களுக்கும், மெய்யடியார்கள் மறைகளுக்கும், ஆலயங்களுக்கும், ஆங்காங்கே நிலைகொண்ட திவ்ய மூர்த்தங்களுக்கும் உள்ள அழகிய தொடர்பை மக்கள் நன்கறிந்து மனம் கசிந்து தூய முறையிலே இறைவனை வழிபடப் புகுவார்களேயாயின் நாட்டில் நலியும் பஞ்சமும் பிணியும் அகன்று, தெய்வீக வாழ்க்கை நிலவி இராமராஜ்யம் கைகூடுவதில் ஐயப்பாட்டுக்கு இடமுண்டோ! ஒருமிடறாக இறைவன் திருநாமங்களை நாத்தழும்ப நவின்று மெய்த்தழும்ப அவன் தொண்டர்களைத் தொழுவதே மக்கள் பெறும் பேறு என்று மெய்யடியார்கள் பகர்வர். பழந்தமிழான பூதத்தார் "ஓத்தின் பொருள் முடிவுமித்தனையே, உத்தமன் பேர் ஏத்தும் திறமறிமினேழைகாள், ஓத்ததனை வல்லீரேல் நன்றதனை மாட்டீரேல், மாதவன் பேர் சொல்லுவதே யோத்தின் சுருக்கு" என்பர்.

## ஆழ்வார்கள் நாயன்மார்கள் காலமும் இடமும்.

ஆழ்வார்கள் **பன்னிருவர்.** நாயன்மார்கள் **அறுபத்து மூவர்.** இவர்களே தெய்வத் தமிழ்க் கலைகளுக்கு உயிரும் மெய்யும் போலும். இவர்கள் தோன்றிய காலம் யாதாயி

னும் இவர்கள் முன்னர் பின்னர் எவ்வகையிருப்பினும், சக்கரவர்த்தித் திருமகனான இராமபிரான் கானகம் காலால் கடந்தேகிய காலத்தில் அவன் திருவடிச் சுவடு களும் அவன் தொண்டுக்கே கோலம் பூண்ட இளைய கோவின் திருவடிச் சுவடுகளும் தோய்ந்த இடங்களே இவர்கள் தோன்றின இடங்கள் ஆகும். வைதிக மதத் திரயங்களையும் ஸ்தாபித்தருளின நம் ஆச்சார்யர்களும் அவதரித்தது இந்நிலப் பரப்பிலேயே. பிரதமாச்சார்யாள் அவதரித்தது "காலடியே". ஆழ்வார்களும் நாயன்மார் களும் ஆச்சாரியர்களும் இறைவன் மெய்யடியார்கள் ஆவர். இவ்வடியார்கள் நம் சென்னிக்குரிய அணிகலன்கள். இவர்களே நம் தலைவர்கள்.

## ஆழ்வார்களுள் தலைவர் நம்மாழ்வார்.

நான்காம் வருணத்தவர். ஏழ்படிகாலும் அவ்வாறே.

யேப்யோவர்ணச் சதுர்த்தசசரமத உதபூத் ஆதிசர்கே [ப்ரஜாநாம்
ஸாஹ ஸ்ரீசாபி சங்க்யா பிரகடமபிஹிதா ஸர்வவேதேஷு [ஏஷா

என்று பகவத்பாதாள் விஷ்ணு பாதாதி கேச ஸ்தோத் திரத்தில் அருளிச் செய்துள்ளார். இறைவன் திருவடி களிலிருந்து உதித்த நான்காம் வருணத்தவராதலால் இவ்வாழ்வாரைக் கொண்டே இறைவன் ஆயிரம் இன்றமிழ் பாட வைத்தருளினன். இதுதான் திருவாய்மொழி. இதனைச் "சந்தோக ஸாரமாக" புகழ்வர். நம்மாழ்வாரின் மற்றை மூன்று பிரபந்தங்களும் திருவிருத்தம், திருவாசி ரியம், பெரிய திருவந்தாதி. இவை, ரிக், யஜுர், அதர் வண சாரமாகக் கொள்வர். இத்திருமறைகளுக்கு ஆறங்கங்கூற வந்தவர் திருமங்கையாழ்வார். ஆண்டாள் ஆழ்வார்களைக் காட்டிலும் விஞ்சியவள். ஆண்டவனையே ஆண்டவள் ஆண்டாள். ஆழ்வார்கள் ஆண்டவன் அடி பணிந்து உய்ந்தவர். "தேவு மற்றறியேன்" என்பது மதுரகவிகள் துணிபு. மற்றை எண்மரும் மலைமகளின்

உபாங்கங்கள் அருளிச் செய்தவர்கள். இவ்வாழ்வார்களில் பெரியாழ்வாருக்குத் தனித்ததொரு சிறப்புண்டு. மற்றைய ஆழ்வார்களைப் போலல்லாமல் இறைவனுக்கே வாழ்த்துக் கூறி மங்களா சாஸனம் செய்தருளினார். இவருக்கு "மகரிஷி வால்மீகி" மார்கதர்சீ போலும். 'மாநிஷாத' ச்லோகத்தை ஒக்கும் இவர் திருப்பல்லாண்டு. இத்திருப் பல்லாண்டே வேதத்துக்கு "ஓம்" என்னுமதுபோல் எல்லா பிரபந்தங்களுக்கும் மங்களமான காப்பும் சாத்தும் ஆகும். திருநாவுக்கரசு நாயனாரும் திருப்பல்லாண்டு பாடியுள்ளார்.

## பிரபந்தங்களும் இராமாயணமும்.

வால்மீகி இராமாயணத்துக்கும் பிரபந்தங்களுக்கும் ஒற்றுமை நயங்கள் பல உண்டு. இராமாயணம் இருபத்தி நாலாயிரம் கிரந்தங்கள். பிரபந்தங்களும் இருபத்தி நான்கு. இரண்டும் மங்களா சாஸனபரம், திருப்பல் லாண்டு, திருப்பள்ளியெழுச்சி, மார்கழி நீராட்டம், கனவின் மெய்ம்மை, பட்டாபிஷேகம், திருமஞ்சனங்கள் முதலியவைகள் இரண்டிலுமுள்ளவை. இராமாயணமும் பிரபந்தங்களும் இசையுடனே பாடப்பட வேண்டியவை. இரண்டும் இகபர ஸாதனமானவை. இரண்டும் உபதேச கிரந்தங்கள். இரண்டையும் நம் ஆச்சார்யர்கள் கலந்து அநுபவித்தார்கள். ஆச்சார்யார் பெரியவாச்சான் பிள்ளை பிரபந்தப்படி ராமாயணம் என்று ஆழ்வார்கள் பிரபந்தங் களால் அருளிய இனிய மொழித் தொடர்களைக் கொண்டே தொகுத்துள்ளார். இராமாயணத்தையே ஒரு பதிகமாகப் பாடியவர் நம் குலசேகரர். இவர் இராமாயண பக்தி அளவு கடந்தது. இனி இவர் வைபவத்தில் புகுவாம். இவருடன் தொண்டரடிப்பொடியாழ்வாரை யும், பாணரையும் சேர்த்து அநுபவிப்பதில் ஒரு ரஸமுண்டு. மூவரும் அரங்கனையே பற்றியவர். திருவரங் கத்திலேயே நிலைத்தவர். மெய்யடியார்களின் தொண்டர் களாவதையே விரும்பியவர். நாமஸங்கீர்த்தனம் சிறந்த

உபாயம் என்று ஒருமிடறாகப் போற்றியவர். இவர்கள் மூவரும் முறையே, இறைவன் திருமார்பில் திருவுடன் திகழும் "கௌஸ்துபம்", "வைஜயந்தீ வநமாலை", "திருமறுவு அல்லது ஸ்ரீவத்ஸம்" என்று கொண்டாடப் படுவர். இவர்கள் வைபவங்களைச் சொல்ல ஆச்சார்யாள் அடியேனை அநுமதித்தது அடியேனுக்கு நல்லதொரு ஸ்வரூப சிக்ஷை போலும்.

## 1. ஸ்ரீ குலசேகராழ்வார் வைபவம்:

சேர நாட்டில் திருவஞ்சைக்களம் என்னும் நற்பதியில் க்ஷத்திரிய குலத்தில் மாசி புனர்பூசத்தில் த்ருடவ்ரதன் என்னும் அரசனின் தவப்புதல்வனாக அவதரித்தவர் இவர். தம் குலத்திற்கேற்ப வேதாகம புராண இதிகாசங்களையும் தனுர் வேதம் முதலிய உபவேதங்களையும் நன்கு கற்றுணர்ந்து பிறகு இல்லறம் புகுந்து அரசு எய்தி தன் தோள் வலியால் சோழ, பாண்டிய நாடுகளையும் தன் குடைக் கீழ் அமர்த்தி "கோழிக்கோன் குலசேகரன் கூடல் நாயகன் கொல்லி காவலன்" என்கிற சிறப்புப் பெயர்கள் பெற்று இராம ராஜ்யம் என பாரெல்லாம் புகழ சிறியதை பெரியது நலியா வண்ணம் நாட்டை நன்கு பரிபாலித்து வந்தார். இவர் காலட்சேபம் (பொழுது போக்கு) வால்மீகி இராமாயணமும் இராமோத்சவங்களுமாம். இராம பக்தர்களைத் தெய்வங்களாகக் கொண்டவர். அவர் தொண்டர்களில் தானும் ஓர் தொண்டனாக இருத்தல் வேண்டும் எனப் பேரவாக் கொண்டவர். இவர் இராமாயண காலட்சேபங்களில் சில நிகழ்ச்சிகள் ஆன்றோர் சொல்வதுண்டு. ஒரு சமயம் பௌராணிகர், தன் கதையில் வில்லும், வாளும் ஏந்திப் பதினாலாயிரம் கொடிய அரக்கர்களுடன் கரதூஷணாதியர்கள் எதிர்த்து வந்ததை இராமபிரான் தன்னந் தனியாக நின்று போர் புரிந்தான் என்று சொல்லவே அரசன் மெய்மறந்து அப்போது யுத்தம் நடப்பதாகவே கொண்டு உடைவாளும் வில்லும் ஏந்தி தான்

முன்போவதாகவும், தானைகளையும் சேனைகளையும் திரட்டி அனுப்பும்படி மந்திரிகளுக்கு உத்திரவு அளித்தான். அடுத்த க்ஷணத்திலேயே கதை சொல்பவர் அரக்கர் அனைவர்களையும் அழித்து வெற்றித் திருக்கோலத்துடன் திரும்பி வந்த தன் பிராணநாதனை வெற்றிச் செல்வியாகிய பிராட்டி இறுகத் தழுவி மகிழ்ச்சி எய்தினள் என, சொன்னதைக் கேட்டதும், தன் போர்க் கோலத்தை உதறி எறிந்து கதையை மேற்கொண்டு கேட்கலானார் என்பர். மற்றொரு சமயம் பௌராணிகர் புத்திரர் கதை சொல்ல நேர்ந்தது. அவர் தேவியை அரக்கன் அசோக வனத்து ஏற இலங்கைக்கு கொண்டு போனான் எனச் சொல்லவும் திடுக்கிட்டு அரண்மனையை விட்டு ஆழ்கடலில் குதித்து இலங்கைக்கு நீந்திச் செல்ல இவர் துணிந்ததைக் கண்ட மந்திரிகளும் மற்றவரும் வியப்பும் அச்சமும் கொள்ள, கடலுள் போனவர் களிப்புடன் திரும்பியதைக் கண்டனர். திரும்புகையில் தேவியையும், தேவி மணாளனையும், இலக்குமணனையும் தான் கண்ட காட்சியை அகமகிழ்ந்து பாடியாடி அரண்மனை சேர்ந்ததைக் கண்டு மகிழ்ந்தனர். இவரைப் பேயரெனக் கொண்டார் மந்திரிகளும் மற்றையோரும். இவர் திருமொழியில் இவரே பாடுகிறார்: "பேயரே யெனக்கி யாவரும், யானுமோர் பேயனே யெவர்க்கும் இது பேசியென், ஆயனே அரங்கா என்றழைக்கின்றேன் பேயனா யொழிந்தே னெம் பிரானுக்கே" என்று. இவர் செல்வ மனைத்தையும் இராமபிரானுக்கே உரிமையாக்கி விலையுயர்ந்த அணிகலன் களையும் ஆபரணங்களையும் அவனுக்குத் தேடி வைத்து அநவரதம் அவன் உற்சவங்களைக் கொண்டாடி அவன் தொண்டர் குழாங்களையும் தொழுது வந்தார். ராஜ தந்திரிகளான மந்திரிகள் அரசரைத் தொண்டர்களிட மிருந்து மீட்க ஒரு சூழ்ச்சி செய்தனர். இராமபிரானுக்கு ஒரு மகோற்சவத்தில் திருமஞ்சனம் கண்டருள்விக்கும் காலத்தில் கழற்றின விலையுயர்ந்த ஆபரணங்களை மறைத்து வைத்து விட்டு, தொண்டர்கள்தான் அவற்றை அகற்றிப்

போய் விட்டார்களெனப் பொய்க் குற்றச் சாட்டை சுமத்தினர். அரசரும் நடு நடுங்கி அடியார்கள் மெய்ம்மையை மெய்ப்பிப்பான் வேண்டி,

"ஆரம்கெடப் பரனன்பர் கொள்ளாரென்று, அவர்களுக்கே, வாரங்கொடு குடப்பாம்பில் கையிட்டருளினான்."

இதைக்கண்டு மந்திரிகளும் மற்றையோரும் வெட்கித் தலைகுனிந்து தங்கள் சூழ்ச்சிகளைத் தெரிவித்து மன்னிப்பு நாடி இவர்களும் தொண்டர்களுக்கே அடியாரானார்கள். நகரமுழுவதும் இராம பக்தி மேலிட்டு இராமன் வழிபட்ட அரங்கநகரப்பனைத் தாங்களும் வழிபடும் காலம் எந்நாள் கொலோ என்று மன்னவனும் மக்களும் பாரிக்க நாடு நகரெங்கும் "அரங்க" சப்தமே கோஷிக்கப் பெற்றது. மன்னரும் "மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளும் இவ்வையந்தன்னிலும் இனி கூடுவதில்லை" யெனவும், "ஊனேறு செல்வத்துடன் பிறவியான் வேண்டேன்" எனவும், "வானாளும் செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன்" எனவும், "திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர் பொன்னி திரைக்கையால் அடிவருடப் பள்ளிகொள்ளும் கருமணியை, கோமளத்தை கண்டு கொண்டு தன் கண்ணிணைகள் என்றுகொலோ களிக்கும்நாள்" — எனப் பலபடியாக பாரித்து வந்தார். பின்னர் மன்னவன் தன் புதல்வருக்கு இளவரசு சூட்டி, திருவரங்கப் பெருநகரில் நிலைத்து நிற்க எழுந்தருளினார். அரவணைமேல் பள்ளிகொண்ட "அந்தமிழ் இன்பப் பாவினையும்", "அவ்வடமொழியை"யும் கண்ணாரக் கண்டு அவனருளால் மயர் வற மதிநலம் பெற்று பதிகங்கள் பாடப் புகுந்தார். இவர் பாடிய பிரபந்தத்துக்கு "பெருமாள் திருமொழி" என்று பெயர். வைணவ மரபில் பெருமாள் என்றால் இராமபிரான். பிராட்டி என்றால் சீதாதேவி. பெரிய பெருமாள் என்றால் பெருமாளாகிய இராமபிரான் அயோத்தியில் குலதெய்வமாக வழிபட்டு விபீடணனுக்கு அன்று ஈந்தருளிய அரங்க

நாதன். பெரியபிராட்டி என்றால் அரங்கநாயகி. குலசேகரன் திருவரங்கத்திடத்திலும் பெருமானிடத்திலும் பெரிய பெருமாளிடத்திலும் ஆராத காதலுடன் பிரபந்தங்கள் இட்டருளினதால் அவருடைய ப்ரபந்தங் களைப் பெருமாள் திருமொழி என்பர் சிலர். இவருக்கே பெருமாள் என்கிற பெயரும் உண்டு என்பர் பலர். சிவநேசச் செல்வரான சேரப்பெருமாள் நாயனாரும் இவ்வரசர் குலத்தில் சேரநாட்டில் பிறந்த ஒரு மெய்யடியார், இவர் சரித்திரக் குறிப்பும் தாழ்மையும் தன்மையும் பாராது அடியார்களுடன் தோழமைகொண்ட குல சேகரன் வரலாற்றை ஒக்கும்.

இவர் பாடிய பதிகங்கள் பத்து. நூற்றைந்து பாட்டுகள் உடையன. இவரால் பாடல்பெற்ற தலங்கள் ஐந்தாகும். திருவரங்கம், திருவேங்கடம், திருவித்துவக் கோடு, திருக்கண்ணபுரம், திருசித்திரக்கூடம் ஆவன. இவ்வாழ்வார் விபவாவதாரங்களில் இராமனிடத்தும் கண்ண னிடத்தும் அமோக பக்தியுடையவர். இவர் திருமொழியில் இராமனைப் பற்றிய பதிகங்களும் பாட்டுக்களும் மிகுதி. வட மொழியில் இவ்வாழ்வார் கண்ணனை வழிபட்டு முகுந்த மாலை என்கிற தோத்திர பிரபந்தம் அருளிச் செய்திருக் கின்றார். இவ்வாழ்வார் ஒருவரே வட மொழியிலும், தென் மொழியிலும் பாடியவர். இவர் திருமொழி முதல் பதிகத்தில் "என்று கொலோ" என்கிற பாரிப்புடன் திருவரங்கத்தரவணையானை கண்டு களிக்க பேரவா கொண்டதை விவரிக்கிறார். இரண்டாம் பாட்டில் "மாயோனை மணத்தூணேபற்றி நின்று என் வாயார என்று கொலோ வாழ்த்து நாளே" என்று பாடுகிறார். அரங்கன் ஸன்னிதியில் இப்போதும் இரண்டு பொன் தூண்கள் பொலியக் காண்கிறோம். இவ்விரண்டு தூண்களும் அரங்க நகரப்பன் கண்ணோட்டமாகிற ஆனந்தப் பெருக்கில் தள்ளாடும் மெய்யன்பர்களுக்குக் கைப்பிடிகள் போலும் என்பர் ஆன்றோர். இவைகளைத் தமிழில் திருமணத்

தூண்கள் என்றும் வடமொழியில் ஆமோத ஸ்தம்பம் என்றும் சொல்வர். இரண்டாம் பதிகத்தில் இறைவனிடத்தில் வைக்கும் அன்பைக் காட்டிலும் இறைவன் அடியார்களிடத்தில் செய்யும் அன்பும் தொண்டும் இருவகைப் பயனையும் தரும் எனவும் அடியார்கள் திருவடிகளுக்கு வாழ்த்துக் கூறுவதே நா படைத்த பெரும் பேறு எனவும் பேசுகிறார். இப் பதிகத்தில் இரண்டாம் பாட்டில் "ஆடிப்பாடி அரங்கவோ என்றழைக்கும் தொண்டரடிப் பொடி ஆடநாம் பெறில்" என்று குறிப்பிட்டுள்ளார். இவர் திருக் குறிப்பைக் கொண்டே விப்ரநாராயணரும் தொண்டரடிப்பொடியாழ்வார் போலும். மூன்றும் பதிகத்தில் தொண்டர்கள் உறவைப் புகழ்ந்தும் அல்லாதவர்கள் உறவை இகழ்ந்தும் தன்னை ஒரு பேயனாகவும் கருதுகிறார். இறைவன் பித்தனென்றால் அடியார்கள் பேயர்களாவது பொருத்தமே. பேயாழ்வாரையும் காரைக்கால் அம்மையாரையும் நினைத்தற்குரியது. இம் மூன்று பதிகங்களும் திருவரங்க விஷயம். நாலாம் பதிகத்தில் திருவேங்கடத்தைப் பற்றிப் பேசுகிறார். மூவேந்தர் நாட்டிலும் தனி அரசு செலுத்தின இவ்வாழ்வார் திருவேங்கடத்தில் தாவர சங்கம திரியக்கு பிறப்புகளை இப் பதிகத்தில் ஆசைப் படுகிறார். "கோனேரி வாழும் குருகாக"வோ, "திருவேங்கடச் சுனையில் மீனாக"வோ, "வேங்கடத்தில் ஒரு சண்பகமாய் நிற்கும் திருவுடைமை"யோ, "திருமலை மேல் எங்கேனும் தம்பகமாய் நிற்கும் தவமுடைமையோ", "வேங்கடத்துள் ஓர் பொற்குவடு ஆம் அருந்தவமோ", "கானாறு பாயும் கருத்துடைமையோ", "நெறியாய் கிடக்கும் நிலையோ", "படியாய் கிடந்து அவன் பவள வாய்க் காணும் பேற்றையோ அல்லது இறைவன் கருத்திற்கிணங்கி யாதானும் ஒரு பொருளாக திருவேங்கட பொன்மலை மேல் ஆவேனே" யெனவும் பல்வகையாகத் தன் கருத்துக் களை உருவகப் படுத்துகிறார். ஐந்தாம் பதிகத்தில் சேரநாட்டில் திகழும் திருவித்துவக் கோட்டம்மானைப் பாடுகிறார். வித்துவான்களைக் கூட்டி இறைவன் புகழ்களை இவர் கேட்

டருளின தலம் இதுவாதலால் திருவித்துவக்கோடு எனப் பெயர் பெற்றது போலும். ஆச்சார்யாள் பரமானுக்ரகத் தால் கோழிக் கோட்டையும் வித்துவக் கோட்டையும் வணங்கி, இப்பெருமான் வைபவம் பேசும் பாக்யம் பெற்றேன். இப்பதிகத்தில் அழகிய உவமைச் சுவைகள் பல காணக் கிடைக்கின்றன. ஆழ்வார் தன்னை "அரி சினத்தாலீன்ற தாய் அகற்றிடினும் மற்றவர் தன் அருள் நினைந்தே அழுங்குழவி போலும்", "கொண்டானையல் லால் அறியாக் குலமகள் போலவும்", "தார்வேந்தன் கோல் நோக்கி வாழும் குடியைப் போலவும்", "வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால் மாளாத காதல் நோயாளன் போலவும்", "எங்கும் போய் கரைகாணாது எறிகடல் வாய் மீண்டேயும் வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போலும்", "வெங்கதிரோனுக்கல்லால் ஆகா செங்கமலம் போலவும்", "மாமுகிலே பார்த் திருக்கும் பைங்கூழ்கள் போலவும்", "கடலே புக்கின்றி புறம் நிற்ப மாட்டா ஆறுகள் போலவும்" பலவித உவமைப் படுத்தி இறைவனையே அடைக்கலமாகக் கொண்டு அவன் தாளையே பற்றுகிறார் இப்பதிகத்தில். ஆறும் பதிகத்தில் கண்ணனுக்கும் ஆய்ச்சியர்களுக்கும் நடந்த ஊடல் உவகைகளைப் பேசுகிறார். ஏழாம் பதிகத்தில் கண்ணனைப் பெற்ற தேவகியார் பெறாத பேறுகளை யசோதை பெற்று மகிழ்ந்ததை அழகுபடப் பேசுகிறார். எட்டாம் பதிகம் திருக்கண்ணபுரத்து எம்பெருமான் விஷயம். கோசலை, தன்மணிவயிறு வாய்த்தவனை, தாலாட்டி சீராட்டி மகிழ்ச்சி பெற்ற பெரும் பேற்றைப் பேசுகிறார். "கௌஸல்ய ஸுப்ரஜா:" என்று மகரிஷி விஸ்வாமித் திரர் இராமனைக் கொண்டாடியதை ஆழ்வார் இங்கு விவரித்தார் போலும். ஒன்பதாம் பதிகத்தில் கையில் கிடைத்த நிதியை கைகேயி சொல் கேட்டு, காடேறப் போகவிட்ட தயரதன் புலம்பலை விவரிக்கிறார். பத்தாம் பதிகமான திருமுடிப் பதிகத்தில் இராமாயணம் முழு வதையும் அடைவே தொகுத்தருளி இப்பதிகத்தைத்

திருச்சித்திர கூடத்தில் திறல் விளங்கும் மாருதியோடு அமர்ந்தான் அடியிணையில் அர்ப்பணம் செய்து தன் திருமொழியை முடித்தருள்கிறார். ஏனைய திருப்பதிகளில் மாருதி கோயில்களுக்கு எதிரில் கைகூப்பி நிற்க, திருச் சித்திரகூடத்தில் கோவிந்தன் திருவடிவாரத்தில் கர்ப்ப கிரகத்தை அடுத்தாற்போல் எழுந்தருளி யிருப்பது குறிக்கத் தக்கது. இந்த பத்தாம் பதிகத்தை பக்தியுடன் பாராயணம் செய்வதால் இராமாயணம் முழுவதும் படித்த பேறு மக்கள் பெறுவர் என ஆன்றோர் கூறுவர். இவ் வாழ்வார் தன் திருமொழியை இராமாயணத்தால் முடித்தது மிகப்பொருத்தமே.

இவ்வாழ்வாரும் இராமனும் அவதரித்தது புனர் பூசம். இராமனையே தெய்வமாகக் கொண்டவர் இவ் வாழ்வார். ராமபுஜங்க ஸ்தோத்திரத்தில் பகவத் பாதாள் ஒரு தடவைக்கு மூன்று தடவையாக, "அலம் தை வதை: நம:" என்று இராமனையே பரதேவதையாக உபதேசித்தருளி யிருக்கிறார்.

இனி இவ்வாழ்வார் திருமொழியிலே, தான் கண்ட திருவுள்ளம், "அடிப்பாடி அரங்கவோ என்றழைக்கும் தொண்டரடிப்பொடி" உருவம் கொண்டது போல் தோன்றிய தொண்டரடிப்பொடி ஆழ்வார் சிறப்பின் அனுபவத்தில் புகுவாம்.

## 2 ஸ்ரீ தொண்டரடிப்பொடியாழ்வார் வைபவம்:

"ஈரிருபதாம் சோழம்" என்கிற சோழ நாட்டிலுள்ள நாற்பது வைணவதலங்களில் சிறந்ததாகிய "திருப்புள்ளம் பூதங்குடி" என்கிற திருப்பதிக்கு அருகிலுள்ள திரு மண்டங்குடி என்னும் நற்பதி, இவ்வாழ்வார் அவதரித்த தலமாகும்.

" மாஸாநாம் மார்க்க சீர்ஷோகம் " என்று கண்ணன் உகந்தருளிய மார்கழித் திங்களிலே கேட்டை

நக்ஷத்திரத்திலே வேதம் வல்லாரான முன்குடுமிப் பிராமணர் குலத்தில் இவ்வாழ்வார் அவதரித்தார். இவருக்கு முறைப்படி "விப்ரநாராயணன்" என்று திருநாமம் சாற்றினர். குலத்திற்கேற்ற முறையில் கல்வி பயின்று பிரமசரியம் பூண்டு வேதங்கள் ஓதி திருமணம் இன்றி வாழ்ந்து வந்தார். இவர் ஒரு சமயம் திருவரங்கம் பெரிய கோயில் சென்று,

"குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி வடதிசை பின்பு காட்டித் தென்திசையிலங்கை நோக்கி, கடல் நிறக் கடவுளான அரவணைமேல் பள்ளி கொண்டானை"க் கண்ணாரக் கண்டு வழிபடும்பேறு பெற்றார். அவனை விட்டுப் பிரியமாட்டாமல் அவனுக்கே தொண்டு பூண்டு, ஆண்டாள் தம் அப்பனாரான பெரியாழ்வாரைப் பின்பற்றித் திருநந்தவனத் தொண்டு எய்தி நன்மாலைகள் புனைந்து அரங்கனுக்களித்து மகிழ்ந்து இனிது வாழ்ந்து வந்தார். ஒரு சமயம் இரு கணிகைகள் உறையூர் அரசன் அவையில் பாடியாடிப் பரிசுபெற்றுத் திரும்புகையில் இப்பெரியாரையும் திருநந்தன வனத்தையும் கண்டு அதன் அழகையும் நறுமணத்தையும் விரும்பி நிழலிலே இளைப் பாறலானார்கள். இப்பெரியார் அவர்களைக் கண்ணெடுத்துப் பாராமல் தன் தொண்டிலேயே நோக்காய் இருந்தார். இவ்விரு கணிகைகளும் சகோதரிகள். இளையவள் பெயர் தேவதேவி. மூத்தவள் இளையவளைப் பார்த்து இவரை நீ வசமாக்குவாயாகில் நான உனக்கு ஆறுமாதம் குற்றேவல் செய்வேன் என, அவளை உற்சாகப்படுத்த தன் அழகில் இறுமாப்பு கொண்ட இளையவள் தன் அழகால் ஆகாதது ஒன்றுமில்லை எனத் துணிந்து தன் அணிகலன்களை யெல்லாம் கழற்றி தமக்கையிடம் கொடுத்து ஆறு மாதத்தில் இவரை அடிமைப்படுத்தி நான் திருக்காம்பனூர் மீளுவேன் எனச் சபதமிட்டு, அக்காளைத் தன்னூருக்கு அனுப்பி விட்டாள். தேவதேவி நந்தவனத்துக்குரிய தொண்டுகளை அமைதியுடன் ஆற்றி, இவர் உண்ட மிகுதி

யைத் தான் உண்டு, எளிமை வாழ்க்கை எய்தி வந்தாள். ஒரு நாள் அடைமழை பெய்தது. ஆடைகள் நனைந்து குளிரால் நடுங்கி நின்ற தேவதேவியை அவள் உட்கருத்து அறியாத இப்பெரியார் தம் பர்ணசாலையில் தங்குமிடம் கொடுத்து தம் ஆடைகளையும் அணிய உதவினர். இராமாயணத்தில், வேசியர்கள்பால் மையல் கொண்டு தன் நெறியை இழந்த ஏகச்சோட்டு மாமுனிவர் போல் இவரும் வேசி வலையில் சிக்குண்டார். தேவதேவி இவர் மனதை அடிமையாக்கிச் சிற்றின்பத்தில் இவரை மூழ்க வைத்து இவர் நந்தவனத்தையும் தன் உடைமையாக்கிக் கொண்டு திருக்கரம்பனூர் திரும்பி அக்காளிடம் தன் வெற்றியைத் தெரிவித்து இறுமாப்பு அடைந்து வந்தாள். விப்ரநாராயணரும், "குளித்து மூன்றனலை ஓம்பும் குறிகொளந் தண்மை தன்னை" இழந்து அரங்கனையும் மறந்து இவள் இல்லம் தேடி இவள் கலவியே கருதி மோகிக்கலானார்.

அன்யத்ர பீஷ்மாத் காங்கேயாத் அன்யத்ர ச ஹநூமத:
ஹரிணீ க்ரூமாத்ரேண சர்மணா மோஹிதம் ஜகத்

என்கிற முதியோர் மொழிக்கு இவர் இலக்காகாம லிருக்கவில்லை. அவதார புருஷர்களே நைஷ்டிக ப்ரம்மசர் யத்தை காப்பாற்றக்கூடியவர்கள். அவ்வவதார புருஷர்களை நம் முன்னார் கண்டு கை கூப்பி அடிதொழுது நலம் பெறும் பாக்கியம் பெற்றிருக்கிறோம். விப்ரநாராயணர் வேசியின் வாசலில் துவண்டு கிடப்பதைப் பார்த்து ஸகிக்காத ஜகன் மாதாவான பிராட்டி திருமாலிடம் இவரிடம் இரக்கம் கொண்டு இவரைத் திருத்தி மீளவும் தொண்டில் அமைத் தருளவேண்டும் என்று விண்ணப்பித்தவாறே திருமாலும் இவரைத் தடுத்தாட் கொள்ளலானார். அரங்கன் அடிபணிந்து தொண்டு ஆற்ற விருந்தும் இவர் வேசியின் வலையில் சிக்கினது இவரது பிராரப்த கர்ம பலன்.

ப்ராரப்தம் பரிபுஞ்ஜ்ய கர்மம் அகிலம்
ப்ரக்ஷீண கர்மாந்தர:

என்று இவர் ப்ராரப்தம் கழிந்தே இவரை அங்கீகரிக்க இசைந்தார் போலும். விப்ரநாராயணன் ஏவலாள் போல் வேடங்கொண்டு தனது திருக்கோயில் பொன் வட்டிலை தேவதேவியிடம் சேர்ப்பித்தான். பிராயச்சித்தம் இல்லாமல் பாபம் கழியாதன்றோ! வட்டில் கோயிலில் காணமற் போகவே அரசன் சேவகர்கள் வட்டிலைத் தேடி தேவதேவியிடம் காண, அவள் தகவலின்பேரில் விப்ரநாராயணனைக் கைதுகொண்டு தேவதேவியிடம் வட்டிலைப் பறிமுதல் செய்து திருடனுக்குத் தக்க தண்டனை விதிக்க நடவடிக்கைகள் எடுத்து வந்தார்கள். அரங்கனும் இனியும் விப்ரநாராயணன் துயர்படுவது தாங்காமல் அரசன் கனவில் தோன்றி நடந்த நிகழ்ச்சிகளை அரசனிடம் தெரிவித்ததின் பயனாய் அரசனும் விப்ரநாராயணரைச் சிறையினின்று விடுவித்தான்.

விப்ரநாராயணர் மனம் மாறி, தன் தவறுதலை உணர்ந்து தன் உடலுக்கும் உள்ளத்துக்கும் தூய்மை தேடி "மெய்யடியார்கள் ஸ்ரீபாத தீர்த்தங்கொண்டு தொண்டரடிப்பொடியென விலக்ஷப் பேரும் கொண்டு தன்னை மீட்டருளின அரங்கனுக்கே தொண்டு பூண்டு, சூட்டு நன் மாலைகளுடன் பாமாலைகளான திருமாலையையும் திருப்பள்ளியெழுச்சியையும் அரங்கன் திருவடிகளிலே சமர்ப்பித்துப் பின்னோரையும் வாழ்வித்தருளினார்.

இவர் திருமாலைபிரபந்தம் நாற்பத்திஐந்து பாட்டுகள் கொண்டன. திருமாலை அறியாதார் திருமாலை அறியார் என்பர். நஞ்சே உருவங்கொண்ட நெஞ்சையும் பண்படுத்தி இறைவனுக்கு அடிமையாக்கும் இவ்வழகிய பிரபந்தம் ஆழ்வார் தன் அனுபவங்களையும், அரங்கன் அருளையும், அவ்வருளுக்கு உபாயம் அவன் திருநாம ஸங்கீர்த்தனமென்றும் "இழி குலத்தவராயினும் எம் அடியார்களாகில் தொழுமினீர் கொடுமின் கொள்மினென்று நின்னோடுமொக்க வழிபட வருளினாய்போல்" என்று அரங்கனைப் பாடியுள்ளார். இவர் திருவுள்ளம் திருப்பாணாழ்வார் அவதாரத்திற்கு மூலம் போலும்.

இவர் திருவாய்மலர்ந்தருளிய மற்றொரு பிரபந்தந் தான் திருப்பள்ளியெழுச்சி. திருப்பள்ளி எழுச்சியும் திருப்பாவையும் தொடர்ந்து ஸேவிக்கப்படுவது. திருப் பள்ளி எழுச்சி அரங்கத்தம்மானைப் பள்ளி உணர்த்தும் முறையில் பாடப்பெற்றது. விசுவாமித்திர மகரிஷி அன்று ஸரயூ நதி தீரத்தில் அரவணையே அபராவதாரமான லக்ஷ்மணனுடன் சேர்த்தியிலிருந்த இராமபிரானைப் பள்ளி உணர்த்தியதை ஒக்கும். நான்காம் பாட்டில் ஒரு குறிப்பு முண்டு. "மாமுனி வேள்வியும் காத்து அவபிரதம் ஆட்டிய வடுதிறலயோத்தியெம்மரசு" என்கிறார். வைகறை யில் எழுந்ததும் பெண்டிரும் திருப்பள்ளி எழுச்சி திருப்பாவை ஸேவித்து நித்ய திருவாராதனங்களிலும் இவ்விரு பிரபந்தங்களையும் வைணவர்கள் ஸேவிப்பது வழக்கம்.

மாணிக்கவாசகர் திருஎம்பாவையுடன் திருப்பள்ளி யெழுச்சியும் அருளியுள்ளார்கள். சைவ வைணவர்கள் அனைவரும் திருப்பள்ளி யெழுச்சியால் ஆண்டவனை உணர்த்தி திருஎம்பாவை திருப்பாவையால் அவனைத் துதிப்பது முறையாகும். ஆச்சார்யாள் பரமானுக்ரஹத் தால் தமிழ் நாட்டில் ஒவ்வொரு க்ரஹத்திலும் கிராமப் பொது மக்களிடையும் இவவழகிய அருளிச் செயல்கள் தினந்தோறும் பாடப் பெறுமாக.

## 3. ஸ்ரீ திருப்பாணாழ்வார் வைபவம்:

இவ்வாழ்வார் அவதரித்த இடம் திருவரங்கப் பெரு நகருக்குத் தெற்கே காவிரிக்கு அக்கரையிலுள்ள உறை யூராகும். அக்காலத்திய சோழ நாட்டுத் தலைநகர் என்பர் இதனை. கார்த்திகைத் திங்களில் இறைவன் உகந்த உரோகிணி நட்சத்திரத்தில் குலந்நான்கு சாதிகளில் ஒன்றிலுமில்லாத பஞ்சமர் குலத்தில் பாணர் நற்குடியில் தோன்றியவர் இவர். இளம்பருவமுதல் தம் குலத்திற் கேற்ப யாழும் கையுமாக பரமனைப் பாடி மகிழ்ந்தவர்.

"கங்கையில் புனிதமாய" காவிரியைக் கடப்பதும், காவிரியின் நடுவுபாட்டுள்ள அரங்க நகரில் புகுவதும் தனக்கு நேர்மையல்ல என்று கொண்டு இக்கரையிலேயே இருந்து நின்று மதிளரங்கம் கோபுரங்களையே நோக்கி அவன் அருள் என்று கொலோ என அழுதும் தொழுதும் ஆடியும் பாடியும் அவனருளையே தேடிவந்தார். தன் மனக் கண்ணால் நீலக்கடல் அவன் திருமேனி யென்றும், அந்தி வானம் அவன் அரைச்சிவந்த ஆடையென்றும், அவ்வப்போது அலரும் செந்தாமரை மலர்கள் அவன் திருவடிகளும், திருக்கரங்களும், திரு உந்தியும், திருக் கண்களும் என்றும், காணும் கருமுகில்களெல்லாம் அவன் கருணைக் கடல்களென்றும், இயற்கையிலேயே அவன் உருவத்தை பாரித்து மனமுருகி அரவினணையானைக் கண்ணால் காணும் பேற்றை வேண்டியிருந்தார்.

தாம் தாம் அறிந்தவாறு தமது நெறி தவறாது தொழு தொழுகும் அனைவரையும் காத்தளிப்பது திருவரங்கத்தம்மான் திருவிடல்லன்றோ! அந்நாளில் அரங்க நகரப்பனுக்கு திருமஞ்சனத் தொண்டு புரிந்து வந்தவர் "பழுதிலா ஒழுகலாற்று பல சதுப்பேதிமார் களில்" ஒருவரான லோகஸாரங்கன் என்னும் அந்தணர். பொழுது புலர்வதன் முன்னம் காவிரியில் குடைந்து நீராடி சந்திசெய்து பொற்குடத்தில் பொன்னி நீர் மடுத்து அரங்கனைத் திருப்பள்ளியுணர்த்தித் திருமஞ்சனம் கண் டருளச் செய்வதே தன் வாழ்க்கைப் பயனாகக் கொண்ட வர். இவரைக் கொண்டு காவிரிக்கு அக்கரையில் பாடி வரும் பாணரைத் தாமரையாள் சொல்கேட்டு உய்விப் பான் வேண்டி, ஒரு நாள் இம் முனிவன் கனவில் தோன்றி னார் அரங்கநகரப்பன். இவர் தோளிலே காவிரியைக் கடக்கக் கூசும் பாணனை எழுந்தருளிவித்துத் தன் திரு முன்பே கொண்டுவா நியமித்தருளினார். லோகஸாரங்க மாமுனிவர் பாணனையணுகி கனவை விண்ணப்பிக்க, பாணன் தனக்குத் தகாதென மறுக்க, இறைவன்

ஆணையென முனிவன கூற, பாணரும் மறுக்க முடியாமல் இசைந்து "முனியேறி" மதிள் திருவரங்கத்துள் தனிப்புகுந்தார். முனிவன் இறைவன் திருக்கமலபாதங் காட்டவே, பாணன் கண்டு உள்ளடங்கா அன்பும் அருளும் பெற்று செந்தமிழால் "அமலனாதிபிரான்" எனத் தொடங்கிப் பாடியருளினார். இறைவனின் கமலப் பாதம் கண்ணினுள்ளே சென்று பாணன் உள்ளத்தைக் கவர்ந்து சிந்தனையை எழுப்பித் திருக்கமல பாதங்களையும், மேல் தோய்ந்து விளங்கும் அரைச்சிவந்த ஆடையையும், அதன் மேல் விளங்கும் முடிவில்லதோரெழில அயனைப் படைத்த உந்தியையும், அதன்மேல் திருவுதரபந்தனத்தையும் அதன்மேல் திருவாரமார்பதனையும், அதன் மேல் அண்டங்கள் முற்றும் உண்ட கண்டத்தையும், செய்ய வாயையும், கையினால் சுரிசங்கனலாழியையும், நீண் முடியையும் கரியவாகிப் புடை பரந்து மிளிர்ந்து செவ்வரியோடு நீண்டவப் பெரியவாய கண்களையும் பாணரைக் கண்டு அநுபவிக்கச் செய்தன.

பாணர் இவ்வளவும் தனக்குக் காட்டி தன் உள்ளம் கவர்ந்தவன் வெண்ணெயுண்ட கோவலன் என்றும் அவ்வமுதினைக் கண்ட கண்கள், "மற்றொன்றினைக் காணாவே" எனவும் தன் பதிகத்தையும் முடித்தருளினார். பெரிய பெருமாளுடன் கலந்து உய்ந்ததால் இவரைப் பாண் பெருமாள் என உரைப்பர். எம்பெருமான் திருமார்பினில் திகழும் திருமறுவும் அல்லது ஸ்ரீ வத்ஸத்தின் அம்சம் இவர் என்பர்.

இவ்வாழ்வாரின் சரித்திரம் திருநாளைப்போவார் என்ற நந்தனாரின் சரித்திரத்தை நினைவூட்டும். இவ்வாழ்வார் அருளிய அமலனாதிபிரானை வேதாந்த விழுப் பொருளை உணர்த்தியதாகப் புகழ்வர் ஆன்றோர். இப்பதிகத்தின் முதல் மூன்று பாக்களின் முதல் எழுத்துக்கள் அகரமும் உகரமும் மகரமுமாகும். வேதாந்த தேசிகன் இப்பதிகத்திற்கு "முனிவாகன போகம்" என்னும் தனிச்சிறப்புரை வழங்கியுள்ளார். அவர் அருளிய முப்பத்திரண்டு ரகசியங்களில் இச்சிறப்புரை யொன்று. பகவத்பாதர்களும் தன் விஷ்ணு பாதாதிகேச ஸ்தோத்திரத்தில கடைசி ச்லோகத்தில் பரமனைப் பாதாதிகேசமாக அநுப

விப்பார் பெறும் பேற்றை அழகுபட அருளிச்செய் துள்ளார்.

ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல்கள் வாழி
தாழ்வாது மில் குரவர் தாம் வாழி - ஏழ்பாரும்
உய்ய அவர்க ளுரைத்தவைகள் தாம் வாழி
செய்ய மறை தன்னுடனே சேர்ந்து.

இதுவரை அடியேன் புன்மொழிகளைச் செவிகொடுத் துக் கேட்டருளியதற்குத் தலைவருக்கும் மகாநாட்டினர்க்கும் அடியேன் நன்றியை வணக்கத்துடன் தெரிவித்தும், ஆச்சாரியாள் அனுக்ரஹத்தைப் பிரார்த்தித்தும் ப்ரணாமத் துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

ஸ்ரீ

# பெரியாழ்வார், மதுரகவியாழ்வார், நம்மாழ்வார் இவர்களுடைய பாடல்களின் சிறப்பு

ஸ்ரீநிவாசையர்,

திருவாவடுதுறை.

பெரியாழ்வார் பகவான் மீது புத்திர வாத்ஸல்யம் மீதூர கவிகளைப் பாடி இருக்கிறார். தந்தை ஸ்தானத்தி லிருந்து ஆண்டாளை வளர்த்துப் பாதுகாத்து வந்ததனால் பகவானுக்கு மாமனார் ஸ்தானத்தையும் அடைந்தார். இவர் பகவதாக்ஞையை மேற்கொண்டு பாண்டியன் கட்டி வைத்திருந்த பொற்கிழியை அறுத்தெடுத்துக்கொண்டு, அப்பொருளை பகவத் கைங்கர்யங்களில் ஈடுபடுத்தலானார். கிருஷ்ணாவதாரத்தில் மிகவும் ஈடுபாடுடையவர்.

## திருப்பல்லாண்டு

இறைவனுடைய சௌந்தர்யத்தைக் கண்டு இதற்கு எத்தகைய திருஷ்டி தோஷமும் ஏற்படாமல் இருக்க வேண்டும் என்ற அன்பு மீதூரப் பகவானுக்கு நீடுழி வாழ வேண்டும் என்று வாழ்த்துக் கூறுகிறார்.

அடியோமோடும் நின்னொடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு
வடிவாய்நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதி வலத்துறையுஞ்சுடர் ஆழியும் பல்லாண்டு
படைபோர்புக்கு முழங்கும் அப்பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே.

பகவானுக்கு ஆட்பட்டு வாழ விருப்பமிருந்தால் வந்து சிறப்படையுங்கள். கூழுக்கு ஆசைப்பட்டு நின்றிருப்ப வர்களை எங்கள் கூட்டத்தில் சேர்க்கமாட்டோம் என்று முழக்கம் செய்கிறார்.

வாழாட் பட்டுநின்றீர் உள்ளிரேல் வந்துமண்ணும் மணமும்
[கொண்மின்
கூழாட்பட்டு நின்றீர்களை எங்கள் குழுவினில் புகுத
[லொட்டோம். (பல்லாண்டு)

கண்ணன் பிறப்பைப் பற்றிப் பாடுகிறார். ஆயர்பாடியி லுள்ளோர் கண்ணன் பிறப்பை ஆடிப் பாடிக் கொண்டாடு கிறார்களாம்.

ஓடுவார் விழுவார் உகந்து ஆலிப்பார்
நாடுவார் நம்பிரான் எங்குற்றா னென்பார்
பாடுவார்களும் பல்பறை கொட்ட நின்று
ஆடுவார்களும் ஆயிற்று ஆய்ப்பாடியே. (பத்து 1. பாட்டு 2)

கண்ணபிரான் திருமுகத்தின் மீது சுட்டி என்னும் ஆபரணம் தொங்கத் தொங்க தெருவில் புழுதியளையுங் காட்சியை ஏ சந்திரனே! பார்த்துவிட்டுப் போ என்று பாடுகிறார்.

தன்முகத்துச் சுட்டி தூங்கத் தூங்கத் தவழ்ந்துபோய்
பொன்முகக் கிண்கிணி ஆர்ப்பப் புழுதி அளைகின்றான்
என் மகன் கோவிந்தன் கூத்தினை இளமாமதி
நின்முகம் கண்ணுள வாகில் நீயிங்கே நோக்கிப்போ.
(பத்து 1ல் 4)

கண்ணபிரானின் துஷ்டச் செயலைப் பற்றி கோபிகைகள் யசோதையிடம் கூறுவதாகப் பாடுகிறார்.

பாலைக் கறந்து அடுப்பில் வைத்துவிட்டு அடுத்த வீட்டில் நெருப்பு வாங்கிவரச் சென்றாளாம். பெண்கள் வழக்கப்படி கொஞ்சம் பேசிக்கொண்டும் இருந்து விட்டாள். அந்தச் சமயத்தில் கண்ணபிரான் அவள் வீட்டி னுள்ளே சென்று பாலைக் குடித்துவிட்டாராம். இத்தகைய உன் குழந்தையை ஏ யசோதையே! ஏ யசோதையே! கூப்பிட்டுக் கொள்வாயாக என்பது கோபிகை செய்த புகார்.

பாலைக்கறந்து அடுப்பேற வைத்துப் பல்வளையாள் என்மகளிருப்ப
மேலையகத்தே நெருப்புவேண்டிச் சென்று இறைப்பொழுது
[அங்கே பேசிநின்றேன்
சாளக் கிராமமுடைய நம்பிசாய்த்துப் பருகிட்டுப் போந்துநின்றான்
ஆலைக்கரும்பின் மொழியனைய அசோதை நங்காய் உன் மகனைக்
[கூவாய்.




கோபுரவாசலும், எதிரே உள்ள நாலுகால் மண்டபமும். (திருப்பதி)

இவள் சென்றதும் வேறொரு கோபிகை வருகிறாள். கண்ணபிரானின் குறும்புத்தனத்தை அவள் கூறிப் புகார் செய்கிறாள். உன் பிள்ளை என் வீடு புகுந்து என் மகளைக் கூவியழைத்து அவள் கை வளையைப் பறித்துக்கொண்டு ஓடினான். நான் பின்னால் ஓட நாவற்பழம் விற்பவளிடம் கொடுத்துவிட்டு நான் கேட்டதற்கு நான் செய்யவில்லை என்று சொல்லுகிறான்.

..........உன் பிள்ளை தானே
இல்லம்புகுந்து என்மகளைக் கூவிக்கையில் வளையைக் கழற்றிக் [கொண்டு
கொல்லையில் நின்றும் கொணர்ந்துவிற்ற அங்கொருத்திக்கு [அவ்வளைகொடுத்து
நல்லன நாவற்பழங்கள் கொண்டு நானல்லேனென்று [சிரிக்கின்றனே.

வேறொரு கோபிகை கண்ணபிரான் பின்னை மரத்தின் மீது கோபிகைகளின் புடைவைகளைக் கவர்ந்து சென்று அமர்ந்திருந்ததை வந்து கூறுகிறாள்.

குண்டலம்தாழ குழல்தாழ நாண்தாழ
எண்திசையோரும் இறைஞ்சித் தொழுதேத்த
வண்டமர் பூங்குழலார் துகில்கைக்கொண்டு
விண்தோய் மரத்தானால் இன்றுமுற்றும்
வேண்டவும் தாரானால் இன்றுமுற்றும்.

நம்மாழ்வார் இவரது வினையைக் களைந்தருளினாராம் இந்தப் பொருளை எட்டுத்திக்கும் அறியச் சொல்லுகிறாராம்.

கண்டுகொண்டு என்னைக் காரிமாறப் பிரான்
பண்டை வல்வினை பாற்றி யருளினான்
எண் திசையும் அறிய இயம்புகேன்
ஒண் தமிழ்ச் சடகோபன் அருளையே.

குருவினுடைய பிரபாவத்தையும் அவரது வாய்மொழிகளையும் கொண்டாடுவது உத்தமசிஷ்ய லக்ஷணமான படியால், அடியார்கள் வியக்க அருமறை ஸாரமான ஆயிரம் பாடலைப் பாடியருளிய பேரருள்திறம் இவ்வுலகினில் மிகவும் பெரியது என்று பாடிக் களைந்தருகிறார்.

அருள் கொண்டாடும் அடியவர் இன்புற
அருளினால் அவ் அருமறையின் பொருள்
அருள் கண்டாயிரம் அருந்தமிழ் பாடினான்
அருள் கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே.

## நம்மாழ்வார்

நம்மாழ்வார் பாடியருளிய பாடல்களுக்குத் திருவாய் மொழி என்ற சிறப்புப் பெயர் அளித்திருப்பதனால் அதன் பெருமையை ஒருவாறு தெரிந்து கொள்ளலாம். இவரது பாடல்களில் விஷ்ணுவை, சிவனாகவும், பிர்மாவாகவும் பாடியருளிய சமரஸ பாவம் மிகச் சிறந்தது.

தம்தம் அறிவுக்கேற்ப ஒரு தெய்வத்தை ஒவ்வொரு வரும் இஷ்டதெய்வமாக ஏற்றுக் கொள்வார்கள். அப்படி அவர்கள் ஏற்றுக்கொள்ளும் தெய்வங்களும் மிகச்சிறந்த வையே. தம் விதி வழிப்படி தமக்கனுகுணமான தெய் வத்தை ஏற்றுக்கொள்ளுகிறார்கள் என்று பாடுகிறார்.

அவரவர் தமதமது அறிவறி வகைவகை
அவரவர் இறையவர் எனஅடி அடைவர்கள்
அவரவர் இறையவர் குறைவிலர் இறையவர்
அவரவர் விதிவழி அடைய நின்றனரே.

மகாவிஷ்ணு உலகத்தை சிவஸ்வரூபத்தால் அழித்து பிர்மஸ்வரூபத்தால் ஆக்குவதாகப் பாடுகிறார்.

அரன் அயனென உலகழித்து அமைத்துளனே.

மும்மூர்த்திகளையும் மனதில் பதியவைத்து உங்கள் இருவினைகளையும் தீர்த்துக் கொள்ளுங்கள் என்கிறார்.

நாரணன் நான்முகன் அரன் என்னும் இவரை
ஒன்றநும் மனத்துவைத்து உள்ளி நும் இருபசை அறுத்து.

விஷ்ணு சிவனாகவும் பிர்மாவாகவும் இருப்பதாகக் கூறு கிறார்.

சிவனாய் அயனாய்
பிரம பரம்பரன் சிவப்பிரான் அவனே
முக்கட்பிரான் பிரமபெருமானவன் நீ.

மும்மூர்த்திகளையும் சேர்த்துப் பாடுகிறார்.

பூத்ததண் துழாய் முடியாய், புனை கொன்றையஞ் [செஞ்சடையாய்
வாய்த்த என் நான் முகனே.
மாயோனை, முக்கண் அம்மானை, நான்முகனை அமர்ந்தேனே.

தலைவி விரகதாபத்தில் தலைவி பிதற்றுவதாக உள்ள விஷ்ணுவை நோக்கித் தலைவியானவள்

"கடிகமழ் கொன்றைச் சடையனே யென்னும்"

என்று பிதற்றுவதாகக் கூறுகிறார்.

விஷ்ணுவையே சிவனாகப் பாவித்து, என் மலை மகள் கூறன் தன்னை என்றழைக்கிறார். இவ்வளவுக்கும் சிகரமாக, மிக்க ஆதரவோடு சிவனை "முக்கண் அப்பா" என்று அழைக்கின்றார். இந்த 'அப்பா' என்று அழைத்ததற்கான காரணத்தை சில வியாக்கியான காரர்கள் அழகாகக் கூறுகிறார்கள்.

மனிதர்களை பிர்மா சிருஷ்டி செய்து விடுகிறார். அவர்கள் கர்மகதியை அனுசரித்து விஷ்ணு காப்பாற்றி விடுகிறார். ஆனால், ஜீவர்களுடைய இறப்பு, பிறப்பு, என்ற சக்கரச் சுழல்மட்டும் ஓய்வில்லை. அதனால் உண்டாகும் இளைப்பை சிவபிரான் பிரளயகாலத்தில் சம்ஸார கிருத்தியஞ் செய்யுங்காலத்து ஒழித்து நிலையான நன்மையைச் செய்கிறார். சிவஞான சித்தியாரிலும் பஞ்சகிருத்தியங்களில் அழிவைப் பற்றிக் கூறும்போது "அழித்தல் இளைப்பாற்றல்" என்று வருகிறது. திருமூலரும் சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் மூன்றையும் குறிப்பிடுகையில் "அழிப்பை, பயில் இளைப்பாற்றுந் துடைப்பும்" என்று கூறுகிறார். சிவபிரானின் பிரளயகால ஸம்ஸார கிருத்தியத்தில் ஜீவர்களுக்கு இத்தகைய நிலையான சிரம பரிகாரம் கிடைப்பதினாலே உண்டான ஆதரவைக்கொண்டு நம்மாழ்வார் முக்கண் அப்பா! என்று விளித்தழைத்ததாக சில வியாக்கியான காரர்கள் கூறுகிறார்கள்.

நம்மாழ்வாரின் இதர சிறப்புக்களைத் திருவாய் மொழியில் கண்டுகொள்க.

பின்னர் 8-15 மணி முதல் 9-30 வரை சங்கீத வித்வான் சாத்தூர் திரு. சுப்ரமண்யம் இசைக் கருவிகளுடன் திருப்பாவை, திருவெம்பாவை நால்வேத ஆறங்கங்களைச் சிறப்பிக்கும் தேவாரம் முதலியவைகளை கர்ணாமிருதமாக கானம் செய்தார். இன்று மகா நாட்டுக்கு விஜயம் செய்த ஸ்ரீ ஆசாரியாள் தெய்வ வழிபாட்டைக் குறித்து ஓர் உபந்நியாஸம் செய்தார்கள்.

## ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள் உபந்நியாஸம்

இந்த மகாநாடு ஆரம்பமானது முதல் இதில் காணப்படும் உத்ஸாகத்தைப் பாராட்டுவதாகக் கூறி மேலும் சங்கரர், ராமானுஜர், மத்வர், நாயன் மார்கள், ஆழ்வார்கள், தாயுமானவர், பட்டினத்தார், ராமலிங்க சுவாமிகள் முதலிய மகான்கள் அவதரித்த தென் நாட்டில் சிறிது காலமாக தலை தூக்கியுள்ள நாஸ்திக மனப்பான்மைக்கு எதிராக அமைக்கப்பட்டுள்ள இந்த ஐக்கிய முன்னணி பாராட்டத்தக்கது. என்றும் நம் மகான்கள் விட்டுச் சென்றுள்ள விலை மதிப்பற்ற பொக்கிஷங்களான பக்திப் பாடல்களை பக்தியுடன் போற்றுவது ஒவ்வொருவருடைய கடமையாகும். என்றும் அவர்களுடைய உபதேசங்கள் மறையாமல் பார்த்துக் கொள்ள நம்மால் இயன்றதையெல்லாம் செய்ய வேண்டும் என்றும் கூறினார்கள்.

இத்துடன் ஆறுவதுநாள் நிகழ்ச்சிகள் முடிவடைந்தன.

### ஏழாவது நாள்: மார்கழி மாதம் 19உ *(31—12—50)* ஞாயிற்றுக்கிழமை.

இன்று மாலை 7-30 மணிக்கு வழக்கம்போல் தெய்வப் பிரார்த்தனையுடன் ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் தலைமையில் மகாநாடு கூடியது. 7-30 மணி முதல் 8-30 மணி வரையில் மன்னார்குடி வேதபாடசாலை கனபாடி ஸ்ரீ உ. வே. நரஸிம்மாசாரியார் அவர்கள் வேதத்தின் ஆறு அங்கங்களில் முதல் அங்கமான 'சிக்ஷை' (அக்ஷரஸ்வரூப லக்ஷணம்) என்பதைப்பற்றி ஓர் உபந்யாஸம் செய்தார்.

உ

# வேதம்

"வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே
சிவமாக போதத்தால் வழிபட்டான்."

—ஞானசம்பந்தர்.

—திருப்புள்ளிருக்கு வேளூர் 5

## சுயம்புலிங்கம்

நித்தமாய் மறைகட்கெல்லாம்
நிதானமாம் பொருளாயுண்மைச்
சுத்தவத் துவிதமான
சுயம்பிர காசமாகும்.

ஆகையால் மறையுமொன்றே
அருமறைப் பொருளுமொன்றே
சாகையா லனந்தமாகித்
தழைத்ததச் சாகை யெல்லாம்
ஓகையா லிவனை யேத்து
மூலகுத யாதிக் கீந்த
ஏகனாணையினான் மூன்று
மூர்த்தியாயிருந்தான் என்றே.

மறைவழி மதங்கட்கெல்லாம்
மறைபிரமாணம் பின்சென்
றறைதரு மிருதி யெல்லா
மவைக்கனு குணமா மின்ன
முறையினான் மார்த்த மென்று
மொழிவதம் மார்த்தஞ் சேர்ந்த
துறைகள்வை திகமா மேலாச்
சொல்வதிச் சுத்தமார்க்கம்.

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல்புராணம் — மதுரைக் காண்டம் — வேதத் துக்குப் பொருளருளிச் செய்த படலம்— 28,30,41.

நான்கு வேதங்களும் ஈசனது திருவாக்கென்பதே நாயன்மார்கள் ஆழ்வார்கள் உள்ளிட்ட நமது வைதிக சமயத்தைச் சார்ந்த எல்லாப் பெரியோர்களின் முடிவும். இவ்வுலகம் ஈசனால் சிருஷ்டிக்கப்பட்டு அநேக காலமிருந்து பிறகு பிரளயத்தையடைகிறது. எத்தனை காலம் உலகம் வாழ்ந்திருந்ததோ அத்தனை காலம் அவ்விதமான பிரளய நிலையில் இருக்கிறது. அப்பிரளய காலத்திற்குப்பின் திரும்பவும் சிருஷ்டி ஏற்படுகிறது. இவவிதமே பகலும் இரவும்போல் சிருஷ்டியும் பிரளயமும் மாறி மாறி வந்துகொண்டே யிருக்கின்றன. ஒவ்வொரு பிரளய காலத்திலும் வேதமும் ஈசனிடம் ஒடுங்கி நிற்கிறது. பின்னர் ஒவ்வொரு சிருஷ்டி காலத்திலும் அவரது அருளால் பிரம்மாவிற்கும் இந்திரியங்களை அடக்கி யோகமார்க்கத்தால் தவம் செய்யும் முனிவர்கட்கும் உள்ளத்தே அவ்வேதம் பிரகாசிக்கின்றது. அநாதியான வேதமந்திரங்கள் ஆகாசத்தில் சப்த ரூபமாக எப்போதும் இருக்கின்றன. அவைகளை ரிஷிகள் தங்களுடைய யோக மார்க்கத்தால் அறிந்து கொள்ளுகிறார்கள். அவர்களுக்கு அந்த மந்திரங்களைக் கிரகிக்கும் திவ்ய ச்ரோத்திரம் உண்டு. யோக சாஸ்த்ரத்தில் வெளியிலுள்ள பெரிய மகதாகாசமும் சுரோத்திரத்திலுள்ள ஆகாசமும் ஒன்றாகி விட்டால் பெரிய ஆகாசத்திலுள்ள சப்தங்களை யெல்லாம் கிரகிக்கும் சக்தி யோகியினுடைய சுரோத்திரத்திற்கு (செவிக்கு) ஏற்படுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. "சுரோத்ர ஆகாசயோர் சம்பந்த சம்யமாத் திவ்யம் சுரோத்ரம்" என்கிறது யோக சூத்ரம். எங்கும் நிறைந்து அபேதமான நிலையை யடைந்தவர்களுக்கு அந்தச் சப்தங்கள் தெரியும். அப்படி ரிஷிகளால் கிரகிக்கப்பட்ட சப்தங்கள்தாம் வேத மந்திரங்கள்.

*வேதம் ஈசுவரனின் வாக்கு.*

*வேதம் யோக சக்தியினால் ரிஷிகளால் அறியப்படுகிறது.*

அநாதி நிதனா —நித்யா—வாக்-உத்ஸ்ருஷ்டா—
ஸ்வயம்புவா |
ஆதௌ-வேதமயீ-திவ்யா-யதோ-ஸர்வா:—
ப்ரவ்ருத்தய:] ||
— மநுவசனம்.

யுகாந்தே-அந்தர் ஹிதான்-வேதான்
ஸேதிஹாஸான்-மகர்ஷய: |
லேபிரே-தபஸா-பூர்வம்-அனுக்ஞாதா:—
ஸ்வயம்புவா ||

**— ஸ்ரீ சங்கரபாஷ்யம் முதல் அத்தியாயம், வ்யாஸர் வசனம்**

தேநே-ப்ரஹ்ம-ஹ்ருதா-ய-ஆதிகவயே-
—ஸ்ரீமத் பாவதம் |

சித்தத்தின்-உள்ளே-சிறக்கின்ற-நூல்களில்
உத்தமமாகவே-ஓதிய-வேதத்தில்.
—திருமூலர் திருமந்திரம்.

அவ்விதம் பிரகாசிக்கிற வேதத்தை முனிவர்கள் மனப்பாடம் செய்து வ்ரதங்களுடனும் நியமங்களுடனும் புத்ரர்களுக்கும் சிஷ்யர்களுக்கும் வாக்கினாலேயே உபதேசித்து மனப்பாடம் செய்வித்து வந்தார்கள். அதற்கேற்பட்ட வ்ரதங்களுடனும் நியமங்களுடனும் வேதத்தை ரக்ஷித்துக் கொண்டாலேயே மந்த்ரசித்தி ஏற்பட்டு அவ்வேதம் தன்னை ஓதுவோனுக்கும் அவன் மூலம் மற்ற உலகத்திற்கும் நற்பயனைத் தரும். வேதம் அனாதி காலந்தொட்டு எழுதப்படாமல் வாக்கினாலேயே குரு சிஷ்ய பரம்பரையாய் உபதேசிக்கப்பட்டு வந்திருக்கிறது. தமிழ் நிகண்டுகளிலும் இலக்கியங்களிலும் வேதத்திற்கு "மறை", "ஓத்து" என்ற பெயர்களுடன் "எழுதாக்கிளவி" என்ற ஒரு பெயரும் ஏற்பட்டிருக்கின்றது. திருவள்ளுவர் மாலையில் வெள்ளிவீதியார் **"செய்யா மொழிக்கும்** திருவள்ளுவர் மொழிந்த பொய்யா மொழிக்கும் பொருளொன்றே" என்கிறார். "செய்யா மொழி" வேதம். வேதத்தின் ஆறங்கங்களில் முதலங்கமான "சிக்ஷா" எனும் அங்கத்தில் வேதத்தை எழுதிப்படித்தல் ஆகாது என்ற விதியையும் காண்கிறோம்.

ஒரு மனிதன் உயிர் வாழும் வரை தன்னுடைய பிரயத்தினமில்லாமல் எப்படி மூச்சுக் காற்று ஓடிக்கொண்டிருக்கின்றதோ அவ்விதமே நித்யமாய் ஈசனுடைய முகத்தில் வேதம் ஒலித்துக் கொண்டேயிருக்கின்றது என்பதே நமது சமயத்தினுடைய சித்தாந்தம்.
**யஸ்ய நிச்வஸிதம்: வேதா:** **(வேதபாஷ்யம்.)**

ஊழிதொறு ழூழிதொறு முயர்ந்த செல்வத்
தோங்கிய நான்மறையனைத்துந் தாங்கு நாவர்.

(திருமங்கையாழ்வார்)

மறைகலந்த வொலி பாடலோராடலர்

(ஞானசம்பந்தர்—சீர்காழி)

மந்திர வேதங்கள் ஓதுநாவர்

(ஷை மருகல் செங்காட்டங்குடி)

வேதமெல்லா முறையால் விரித்தோத நின்ற
ஒருவனார் (பராய்த்துறை)

வேதநூல் பயில்கின்றது வாயிலே (திருவாலவாய்)

சொல்லுன சொல்லு நால்வேதம் பாடினார்
போலும் (பந்தணைநல்லூர்)

வேதமோதும் விரிசடையண்ணலார்

(அப்பர்—திருவிடைமருதூர்)

நான்மறையி னொலி தோன்றும் (ஷை பூவணம்)

மறையோதீ மங்கை பங்கா

(சுந்தரர்—வெண்ணெய்நல்லூர்)

வேத நான்கும் விரித்தோதியோர் நம்பி

(நம்பி என்ற பதிகம்)

பாடிய நான்மறையான் (நன்னிலம்)

பேசுவதும் திருவாயான் மறை போலும்

(மாணிக்கவாசகர்—திருவாசகம்—திருச்சாழல்)

வேதமொழியார் ,,

மறை பயின்ற வாசகன் ,,

முடிவில்லா வோத்தானே ,,

ஆறங்கமாய வரு மாமறை யோதியை

(திருமூலர் — திருமந்திரம்)

நான்கும் நின் வாய்மொழி (நக்கீரர்)

வேதநான்காறங்கம் வேறுரைத்தமேனி
விரிசடையன் (ஷை)

மறைகளீசன் சொல் (சிவஞான சித்தியார்)

திவாகரம், பிங்களம், சூடாமணி இம்மூன்று தமிழ் நிகண்டுகளிலும் "வேதமுதல்வன்", "மறைமுதல்" என்னும் பெயர்கள் ஈசனுக்குக் காணப்படுகின்றன.

பதினான்கு உலகங்களும் ஒரு ராஜ்யம். இந்த ராஜ்யத்திற்கு ஒரு சக்ரவர்த்தி. அந்தச் சக்ரவர்த்திக்கு எல்லா ஜீவராசிகளும் பிரஜைகள். சக்ரவர்த்தியும் அனாதி. ப்ரஜைகளும் அனாதி. ஆனால் ராஜ்யமும், சக்ரவர்த்தியும், பிரஜைகளும் இருந்தால் அதற்கு ஒரு சட்டம் வேண்டும். இவர்கள் அனாதியானால், சட்டமும் அனாதி. அந்த அனாதிச் சட்டமே

**வேதம் அனாதி.** வேதம்* உலகம் உற்பத்தி ஆகிறது, வளர்கிறது, பிரளயம் அடைகிறது. திரும்பவும் உற்பத்தி ஆகிறது, ப்ரளயம் அடைகிறது.

---

* **குறிப்பு**:—வேதம் அனாதி:—

சில நவீன ஆராய்ச்சிக்காரர்கள் ஜோதிடர்கள் நஷ்ட ஜாதகம் கணிப்பதைப்போல் வேதத்திற்குக் காலவரையைக் காண முயலுகிறார்கள். ஆனால் இவர்களுடைய அபிப்பிராயங்கள் ஒன்றுக்கொன்று முரணாக இருப்பதால் ஒருவிதமான முடிவையும் தரக்கூடியவைகளாயில்லை.

டாக்டர் ஜாகோபி என்னும் மேனாட்டு ஆராய்ச்சியாளரும் நம் நாட்டு லோகமான்ய பாலகங்காதர திலகரும் வேத மந்த்ரங்கள் இன்றைக்கு 6000 வருஷங்களுக்கு முன் அமைக்கப் பெற்றிருக்கலாமென்று தங்கள் ஆராய்ச்சி நூல்களில் எழுதியிருக்கிறார்கள். வங்காளத்து அபினாஸ்சந்த்ரதாஸ், (Rig Vedic India) திரேந்த்ரநாத் உபாத்தியாயர் முதலியவர்கள் 25000 வருஷங்களுக்கு முன் வேத மந்த்ரங்கள அமைக்கப்பட்டிருக்க வேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார்கள். மாக்ஸ்முல்லர், விண்டர்நிட்ஸ் முதலியவர்கள் இன்றைக்கு 3000 வருஷங்களுக்கு முன் முதல் 2000 வருஷங்களுக்கு முன் வரையில் வேதம் தொகுக்கப்பட்டிருக்க வேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார்கள். நம் நாட்டு ஆராய்ச்சிக்காரரான கிழார் என்பவர் ராமாயண காலமே இன்றைக்கு 9000 வருஷங்களுக்கு முன்னதாகவுள்ளதாக அபிப்பிராயப்படுகிறார்கள். இவர்கள் என்ன காரணத்தால் காலமுடிவுகள் செய்திருக்கிறார்கள்

இப்படியே சுற்றிச் சுற்றிக்கொண்டிருக்கிறது. சக்ரவர்த்தியும் சட்டமும் மாத்திரம் ஸ்திரம். ஜீவன்கள் ஸ்திரமாயினும் ஜன்மமெடுத்து சுற்றுகிறார்கள். ஒவ்வொரு ஸ்ருஷ்டியின் ஆரம்பத்திலும் அந்தச் சக்ரவர்த்தி அதிகார

---

என்பது எல்லா ஜனங்களுக்கும் புரியும் வகையில் வெளிவரவில்லை. இன்றைக்கு 2000 வருஷங்களுக்கு முன்னெழுந்த வேதத்திற்குப் புறம்பான மதத்தினரான பௌத்தர்கள், ஜைனர்கள்கூட வேதத்திற்குக் காலம் கூறவில்லை, செய்தவர் இன்னாரென்று சொல்லவில்லை. ஜைனர்கள் தங்களுடைய சில நூல்களில் வேதங்கள் அநாதியான வைதீக நூல்களென்பதையும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். [See Trishashti Sthalaka Purusha charitra I—VI—244, 248, 256]. வேதத்திற்குக் காலம் கூறுபவர்கள் பொதுவாக நோக்கில் ஒவ்வொருவர் ஒவ்வொருவிதமான காரணத்தைக்கொண்டு வெவ்வேறு கால முடிவுக்கு வருகின்றனர்.

திலகரும் ஜாகோபியும் வேதத்தில் வரும் வானசாஸ்திர குறிப்புகளை ஆதாரமாகக் கொள்ளுகின்றனர். திலகர் இவ்விஷயமாக இரண்டு நூல்கள் எழுதியிருக்கிறார். தனது ஒரு நூலில் (Orion) வான சாஸ்த்ர (Astronomical) குறிப்புகளையும், மற்றொரு நூலில் (Arctic Home of the Vedas) பூமி தத்வ அமைப்புக் குறிப்புகளையும் (Geology) தம் முடிவுகளுக்கு ஆதாரமாகக் கொண்டுள்ளார். அவினாச் சந்த்ரரும், திரோத்ர நாதரும் பூமி தத்வ அமைப்பின் குறிப்புகளையே ஆதாரமாகக் கொண்டுள்ளார்கள். மாக்ஸ்முல்லரைப் போன்றவர்கள் வேதத்திலுள்ள பாஷையின் நடையை ஆதாரமாகக் கொண்டு காலம் கணக்கிடுகிறார்கள். ஆங்கிலம், ப்ரஞ்சு முதலிய பாஷைகள் நூற்றாண்டுக்கு நூற்றாண்டு எப்படி உருமாறிக் கொண்டே வருகின்றனவோ அவ்விதமே வேத நடையும் தற்கால சம்ஸ்க்ருத நடையாக மாறிமாறி வந்திருக்க வேண்டுமென்று தீர்மானித்து ஐரோப்பிய பாஷைகளின் மாறுதல் காலத்தைக் கணக்காகக் கொண்டு கைதிட்டமாகவே (arbitrarily) வேத மந்த்ரங்கள் இவ்வளவு வருஷங்களுக்கு முந்தியதாக யிருக்கலாம் என்று கால நிர்ணயம் செய்கிறார்கள். இவர்களபிப்பிராயம்: வேதத்தைச் செய்துகொண்டே ஏதோ வெளி நாடுகளிலிருந்து வேத ரிஷிகள் இந்த தேசத்தில் புகுந்தார்கள் என்பதே. இவர்களுடைய கை திட்ட கால வரையையே ஆதாரமாகக் கொண்டு சிந்து நாட்டில் புதிதாகக் கண்டெடுக்கப்பட்டன

புருஷர்களைச் சிருஷ்டி செய்கிறான். அந்த அதிகாரிகளுக்கு வேண்டிய யோகசக்தியைக் கொடுக்கிறான். அந்த யோக மார்க்கத்தில் தன் ச்ரோத்திரத்திற்கும் வெளி ஆகாசத்திற்கும் அபேதமான ஒரு ஸம்யமமும் அடங்கி

---

யையும் இன்றைக்கு 5000 வருஷங்களுக்கு முந்தியவைகளாக ஊகிக்கப்பட்டவையுமான ஹரப்பா, மொஹஞ்ஜதாரோ முதலிய பண்டைய சிந்து நாட்டு நகர சின்னங்கள் வேதத்திற்கு முந்பட்டவை என்று சிலர் கூறுகின்றனர். வேத இலக்கிய நடைக்குக் கைதிட்டமாகக் காலம் போடுவதே, அவர்களுடைய முடிவு தீர்மானமானதல்ல என்பதை ரூபிக்கிறது. நித்தியம் கண்டபடி பழகப்படும் ஒரு பாத்திரம் தேய்ந்து ஓட்டையாகும் காலத்தைக் கொண்டு வருஷத்திற் கொருமுறை பழகப்படும் ஒரு பாத்திரம் தேய்ந்துபோகும் காலத்தைக் கணக்கிடுவது போலிருக்கிறது இவர்கள் போடும் கை திட்டகாலம். கண்டபடியெல்லாம் கோடிக் கணக்கான அநேகதரமான ஜனங்களால் பேசப்பட்டும், எழுதப் பட்டும், ப்ரசங்கிக்கப்பட்டும் இன்னும் அநேக முறைகளில் கையாளப்பட்டும் வருவன தற்கால மேனாட்டு பாஷைகள். வேத மந்த்ராக்ஷரங்களோ உபநயனம் செய்யப்பட்டு குருவின் மூலம் 12 வருஷம் கிரகிக்கப்பட்டு, அசுத்தமான காலத்தில் சொல்லப் படாமல் சுத்தமான காலத்திலேயே வெகு ஜாக்ரதையாய் வெகு சிலரான வேதியர்களால் ரக்ஷிக்கப்பட்டு வந்திருக்கிறது. வேத மந்த்ரத்தை உச்சரிக்கும் முறைகூட சிக்ஷை, வ்யாகரணம், சந்தம் முதலிய 3 அங்கங்களால் விசேஷமாக வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஒரு தாய்ப் புலி தன் குட்டியைப் பற்களால் கவ்வி எடுத்துக்கொண்டு போகும்போது அதற்குக் காயம் ஏற்படாமலும் கீழேயும் விழாமலும் இருக்கும்படி எவ்வளவு ஜாக்ரதையாய்க் கொண்டு போகுமோ அவ்வளவு ஜாக்ரதையாய் வேத மந்திரங்களை உச்சரிக்க வேண்டுமென்று வேதாங்கம் கூறுகிறது.

யதா-வ்யாக்ரீ-ஹரேத்-புத்ரான்-தம்ஷ்ட்ராபிர்-ந-ச-பீடயேத் I
பீதா-பதன-பேதாப்யாம்-தத்வத்-வர்ணான்-ப்ரயோஜயேத் II
ஏவம்-வர்ணா:- ப்ரயோக்தவ்யா:- நாவ்யக்தா-ந-ச-பீடிதா:I
நாரதீய சிக்ஷை, 2-வது ப்ரபாடகம்-8வது கண்டிகை-30-31
[சுலோகங்கள்.

வேத லக்ஷண நூல்களில் வர்ணக்ரமம் என்ற ஒரு முறை உபதேசிக்கப்பட்டிருக்கிறது. அதில் வேதங்களில் ஒவ்வொரு

யிருக்கிறது. ஆதலால் திவ்ய ச்ரோத்திரம் கிடைக்கிறதாம். அந்தத் திவ்ய ச்ரோத்திரத்தைக் கொண்டு வெளி ஆகாசத்தில் ஸ்திரமாய்க் கிடக்கும் அநாதி சப்த அலைகளை ஈசனுடைய அருள்சகாயத்தால் அந்த அதிகார

---

எழுத்திற்கும் 8 அம்சங்கள் உபதேசம் செய்யப்பட்டிருக்கின்றன. அவையாவன:—1. த்வனி, 2. ஸ்தானம், 3. கரணம், 4. ப்ரயத்னம், 5. மாத்திரை, 6. ஸ்வரம், 7. தேவதை, 8. ஜாதி.

*த்வனி: ஸ்தானஞ்ச-கரணம்-ப்ரயத்ந:-காலதா-ஸ்வர:।*

*தேவதா-ஜாதி:- ஏதைஸ்ச- வர்ண:- ஜ்ஞேயா:- விசக்ஷணை:॥*

—வ்யாசசிக்ஷா.

எழுத்தின் மாத்திரை கணக்கு, ஒவ்வொரு எழுத்தின் உத்பத்தி ஸ்தானம், அந்த ஸ்தானங்களில் ப்ரதான ஸ்தான பேதம் உதவி ஸ்தானபேதம் என்னும் விவரங்கள், ஒவ்வொரு வர்ணோத்பத்திக்கும் ஏற்படும் ப்ரயத்னம் என்னும் அனேக முயற்சி வகைகள், அவைகளின் அனேகவிதமான ஸ்வரங்கள், ஒவ்வொரு ஸ்வரத்திற்கும் ஆதாரமான காற்றைவிடும் வகைகள், சங்கீத சாஸ்த்ரத்திலுள்ள சப்த ஸ்வரங்களுக்கும் வேதத்திலுள்ள ஸ்வரங்களுக்குமுள்ள ஒற்றுமை, இந்த ஸ்வரங்களுக்கும் இயற்கையிலுள்ள மயில், ரிஷபம், காந்தார தேசத்து ஆடு, க்ரௌஞ்ச பக்ஷி, குயில், குதிரை, யானை இவைகள் செய்யும் நாதங்களுக்குமுள்ள ஒற்றுமை, முதலிய அனேக விஷயங்கள் இந்த முறையில் உபதேசிக்கப்பட்டிருக்கின்றன. மந்த்ரங்களில் ஒரு எழுத்தோ ஒரு ஸ்வரமோ மாறிவிட்டால் உத்தேச பலம் மாறிவிடுகிறது என்ற விதியும் ஏற்பட்டிருக்கிறது.

*மந்த்ரோ-ஹீன:-ஸ்வரதோ-வர்ணதோவா*

*மித்யா-ப்ரயுக்தோ-ந-தமர்தமாஹ।*

*ச-வாக்-வஜ்ரோ-யஜமானம்-ஹிநஸ்தி*

*யதே-ந்த்ரசத்ரு:-ஸ்வரதோ-பராதாத்॥*

சிருஷ்டி முதல் பிரளய காலம் வரையில் சனாதனமாக ஒரே நிலையில் மாறாமலிருக்க வேண்டுமென்றே இவ்வளவு பாதுகாடுகளுடைய வரையறையுடன் வேத மொழி ரக்ஷிக்கப்பட்டு வந்திருக்கிறது. உலக வழக்கில் அதிகமாக உபயோகிக்கப்பட்டு

"Conservative thinkers believe that the Vedas as waves of sound can always remain in the ether around us. And we know to-day that sound waves, once produced, do not die or merge with one another at all. With our perceptions more acutely tuned by austerities, we may perhaps be in a position to listen to those sounds distinctly. Some of the great seers of old became aware of this phenomenon only through the acquisition of such super-powers and postulated the theory of the origin of sound alone before anything else in creation."

P. E. N. Books-Indian Liberatures–No. XII, Sanskrit Literature by Sri K. Chandrasekaran and Sri V. H. Subramanya Sastri, Page 19.

புருஷர்கள் அடைகிறார்கள். அவர்களே முதல் முதலில் வேதத்தை அறிந்தவர்களாகிறார்கள். அவர்களே மந்த்ரத்திற்கு மகரிஷிகள். வேதாத்யயனம் ஒரு மந்த்ரயோகம். ஒவ்வொரு நாடி அசைவதனால் சித்தத்திற்கு ஒவ்வொரு விதமான விகாரங்கள் ஏற்படுகின்றன. சில நாடிகளால் காம விகாரங்களும், சில நாடிகளால் சோம்பல் விகாரங்

---

தேய்ந்து போகாமல் ஒரு மொழியாவது இருந்தால்தான் ஆதி யுகங்களான சத்த சத்வ யுகங்களில் மகான்கள் மனமுருகி இறைவனைப் பாடிய முறையும், அவனையும் அவனுக்குட்பட்ட தேவர்களையும் யக்ஞங்களால் வழிபடுமுறையும், தாங்களனுபவித்த தத்வானுபவங்களை அவர்கள் வெளியிட்ட முறையும் உலகத்திற்கு நஷ்டமாகாமலிருக்கும். இவ்வளவு இலக்கணங்களுடன் தேயாமல் ரக்ஷிக்கப்பட்டு வரும் வேதமொழிக்கு நாளுக்கு நாள் தேய்ந்து கொண்டிருக்கும் மொழிகளின் முறையில் கை இட்டமாகக் காலம் போட்டு வேத காலத்தை நிர்ணயிப்பதும் அந்தக் காலநிர்ணயத்தை ஆதாரமாகக் கொண்டு ஒவ்வொரு தேசத்தினுடையவும் நாகரீகத்தினுடையவும் காலங்களை நிர்ணயிப்பதும் நகைக்கத்தக்க விஷயமாகிறது. உதாரணமாக, ஹரப்பாவில் கண்டெடுக்கப்பட்ட ஒரு பழைய சிலையில் ஒரு வெட்டப்பட்ட அரசங்கிளையும், ஒருவர் கையில் ஆட்டைப் பிடித்துக் கொண்டு நிற்பதும், அரசமரத்தின் கிளைப்பக்கத்தில் ஒரு பெண் நிற்பதும், வரிசையாக அனேகர் நிற்பதும் காணப்படுகிறது. (Plate VI (g) in Prehistoric Civilization of the Indus valley, Sir William Meyer Lectures, 1925, University of Madras). வேதத்தில் விதிக்கப்பட்ட யாகங்களில் உபயோகமொன்றிற்கே அரசமரத்தை வெட்டுவது நமது நாட்டின் தொன்றுதொட்டு வழக்கம். வேறு சந்தர்ப்பங்களில் அரசமரத்தை வெட்டுவதைப் பாவமென்றே கருதி வருகிறோம். இந்தச் சிலையில் சித்தரிக்கப்பட்ட சந்தர்ப்பம் எஜமானனும், அவனது பத்னியும், யாக ருத்விக்குகளும், யாகத்தின் அஜமும், யாகத்தில் ஹோமத்திற்காக அரசமரத் துண்டும் கொண்ட யாகசாலையின் பூர்வாங்கமே. வேதத்திற்குக் கைஇட்டமாக ஒரு காலவரையை ஏற்படுத்திக் கொண்டு, ஹரப்பா நாகரீகம் அதற்கு முந்தியது என்று ஊகித்துக்கொண்டதால் இந்தச் சிலையை சரியாகத் தெளிவுபடுத்த முடியாமல் ஹரப்பாவைத் தோண்டுவதில் கூட ஈடுபட்ட புராதன சில்ப சின்ன இலாகா சர்வாதிகாரி (Director-General of Archeology) பின்வருமாறு சொல்லுகிறார்.

களும், சில நாடிகளால் சோக விகாரங்களும் உண்டாகின்றன. இதை மாற்றிச் சொல்லின், காம விகாரம் ஏற்படும்போது சில நாடிகளில் அசைவும், போக விகாரத்தினால் சில நாடிகளில் அசைவும் அனுபவத்தில் காணப்படுகின்றன. சாந்தம் ஏற்படும்போது முகத்தில் ஒரு களை உண்டாகிறது. அந்தக் களை சில நாடிகள் குளிர்ந்ததின் பயன். இவ்விதம் மனோவிகாரங்களால்

---

This deity is represented in an interesting seal from Harappa in which a tree is shown as issuing out of her womb. It is reasonable to suppose the representation of a Goddess, which is found in more than one tablet, as standing on a bifurcated branch of a Pipal tree is identical with the same mother Goddess. The worshipper in the latter case appears to bring a goat probably with a view to sacrifice, while a number of people in a row are standing in the lower register as if taking part in the sacrifice (Plate VI g). The sanctity of the Pipal tree has descended to the present day, but its association with the Mother Goddess has not continued to the same extent. (Vide Page 33 of the Prehistoric Civilisation of the Indus valley referred to above).

இந்தச் சிலா சின்னத்தை யாகசந்தர்ப்பமாகக் கொள்ளாது, கிராம தேவதைக்கு ஆட்டுபலி கொடுப்பதாகக் கொண்டதனால், அரசமரத்தை வெட்டின துண்டு அங்கு கிடப்பதைத் தெளிவு படுத்த முடியாமல் போயிற்று.

கோரக்பூரில் "கல்யாண்" என்னும் பெயருடன் ஒரு மாச சஞ்சிகை வெளியாகிறது. ஒவ்வொரு வருஷத்திலும் அதில் ஒரு விசேஷ ஆண்டு மலர் ப்ரசுரிக்கிறார்கள். 1950ஷு வெளியான அவ்விசேஷ மலரில் சுமார் 800 பக்கங்கொண்ட 100000 ப்ரதிகள் அச்சிடப்பட்டிருக்கின்றன. இந்த விசேஷ மலர் முழுவதும் இந்தியாவின் பண்டைய நாகரீகத்தைப் பற்றின வ்யாசங்களையே உடையது. அதில் 137-வது பக்கத்தில் மொஹென்ஜதாரோவில் வெட்டியெடுக்கப்பட்ட புதைபொருள்களில் ஒரு சிலை கீழ்க்கண்ட ரூபமாயிருப்பதாக எழுதப்பட்டிருக்கிறது. ஒரு மரமும், அதில் இரண்டு பக்ஷிகளும், ஒரு பக்ஷியின் மூக்கில் ஒரு பழமும், மற்றொரு பக்ஷியின் மூக்கில் ஒன்றுமில்லாமலும் அந்த ரூபம் காணப்படுகிறது. அதர்வணவேத (முண்டக) உபனிஷத்தில் "ஒரு மரத்தில் இரண்டு பக்ஷிகள் தோழமை பூண்டு வசிக்கின்றன. அவைகளில் ஒன்று பிப்பலம் என்னும் பழத்தை

நாடிகளில் சில விகாரங்கள் ஏற்பட்டால், மனோ விகாரத்தின் சாந்தத்தால் குளிர்ச்சி ஏற்பட்டால், அந்த நாடிகளை வசப்படுத்தி விட்டால், காமக் குரோதங்களையோ, சாந்தத்தையோ நமது இஷ்டப்படி வரவழைத்துக்

---

சாப்பிட்டுக் கொண்டிருக்கிறது. மற்றொன்று ஒன்றும் சாப்பிடாமல் ஞானப்ரகாசத்துடன் விளங்கிக்கொண்டிருக்கிறது" என்னும் கருத்துள்ள ஒரு மந்த்ரம் காணப்படுகிறது. அந்த மந்த்ரத்தின் கருத்தே இந்த புதைச் சிலையில் சித்திரிக்கப்பட்டிருக்கலாம் என்ற ஒரு சிற்ப ஆராய்ச்சிக்காரரின் அபிப்பிராயத்தை அந்த வ்யாசத்தை எழுதினவர் எடுத்துரைத்திருக்கிறார். கிறிஸ்தவர்களின் பைபிளில் பழய ஏற்பாட்டின்படி (Old Testament) ஆரம்பத்தில் உலக சிருஷ்டியைப்பற்றிச் சொல்லியிருக்கும் விவரங்களைப்பார்க்கும் போது இந்த உபநிஷத் வாக்கியத்தில் காணப்படும் விவரங்களையே பூர்ணமாகப் பொருள் தெரிந்து கொள்ளாது சிதைந்த ரூபத்தில் அமைந்திருப்பதாகக் கொள்ள இடமிருக்கிறது. ஆதியில் "ஆதம்", "ஈவ்" என்று பெயருள்ள ஆணும் பெண்ணுமாக சிருஷ்டிக்கப்பட்ட இருவர் ஒரு மரத்தடியில் இருந்ததாகவும், அம்மரத்தின் பழத்தைச் சாப்பிடக் கூடாதென்று அவர்களுக்கு உத்தரவு ஏற்பட்டிருந்ததாகவும் அம்மரத்திற்கு ஞானவிருக்ஷம் (Tree of Knowledge) என்று பெயர் என்றும், அந்தப் பழத்தைச் சாப்பிட வேண்டும் என்ற சபலம் முதலில் "ஈவ்" என்னும் பெண்ணுக்கேற்பட்டதாயும் சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய உபநிஷத்திலோ, ஒரு மரத்திலிருந்த இரண்டு பக்ஷிகளை ஆத்மாவாகவும் ஜீவனாகவும், அவற்றில் ஜீவன் கர்மபலம் என்னும் பழத்தை அனுபவித்துக் கொண்டு வருபவனாகவும், மற்றொருவனை ஆத்மா கர்ம பலமென்னும் பழத்தை புசிக்காமலிருந்தும் ஸ்வயம்ப்ரகாசமாய் விளங்கிக் கொண்டிருப்பதாயும் கூறப்பட்டிருக்கிறது. பைபிளிலுள்ள ஆதம் என்னும் பதம் உபனிஷத்தில் வரும் ஆத்மா என்னும் பதத்தோடு உருவத்திலும் பொருளிலும் ஒத்திருக்கிறது. ஈவ் என்னும் பதமும் உபனிஷத்திலுள்ள ஜீவ என்ற பதத்தோடு உருவத்திலும் பொருளிலும் ஒத்திருக்கிறது. ஈவ் என்னும் பதத்திற்கு பைபிளின் மூலபாஷையில் "ஜீவித்திருக்கும் (Living)" என்னும் பொருள் காணப்படுகிறது. அம்மரத்திற்கு பிப்பலம் என்ற பெயர் உபனிஷத்தில் காணப்படுகிறது. பிப்பலம் என்னும் மரத்திற்கு சம்ஸ்க்ருத நிகண்டுவில் போதித்ருமம் என்று மற்றொரு பெயரும் இருக்கிறது. போதித்ருமம் என்றால் ஞானத்தைக் கொடுக்கும் மரம் என்று பொருள்.

கொள்ளலாம். அதற்கு வெளிப் பொருள்கள் தேவை இல்லை. இப்படி நாடிகளை ஸ்வாதீனப்படுத்த ப்ராணாயாமத்தை முக்கியமாகக் கொண்ட ஹடயோகம் ஒரு மார்க்கம். அதே விதமாய் மந்த்ர யோகமும் ஒரு மார்க்கம். ஒரு எழுத்தை நாம் உச்சரிக்கும்போது நமது

---

இதுவே அசுவத்தமரம் அல்லது அரசமரமெனப்படுவது. புத்தர் இந்த மரத்தினடியில்தான் போதத்தை யடைந்ததாக பௌத்த மதஸ்தர் கூறுவர். போதி த்ருமஸ் — சலதள: — பிப்பல:— குஞ்சராசன: அசுவத்த: என்கிறது அமரகோசம். இம்மரத்தின் பழத்தை சாப்பிடக் கூடாதென்று நமது தர்ம சாஸ்த்ரத்தில் விளக்கப்பட்டிருக்கிறது.

> ததா,
> வடவ்ருக்ஷாசுவத்த ததித்தமாதுலுங்கபலானிச
> வர்ஜயேத், இதிவசனாத் |
> விக்ஞானேசுவரீயம்.

வைத்யநாததீக்ஷிதீயம் ஸ்மிருதி முக்தாபலம்-ஆன்ஹிக காண்டம்.

லோகமான்ய திலகர் தான் கூறும் காலவரைக்குச் சொல்லும் வர்ண சாஸ்த்ர சம்பந்தமான காரணமாவது:—பகலும் இரவும் சமமாக வசந்த காலத்தில் வரும் நாள் இக்காலத்தில் சூரியன் உத்திரட்டாதி நக்ஷத்திரத்தில் இருக்கும்போது ஏற்படுகிறது. இதற்கு விஷு தினமென்று பெயர். (Vernal Equinox) இந்த விஷு தினம் மாறிக்கொண்டே வருகிறது. ஒரு நக்ஷத்திரத்திலிருந்து மற்றொரு நக்ஷத்திரத்திற்கு சூரியன் வர சுமார் 852 வருஷங்களாகின்றன. இந்த விஷு புண்ய காலம் சூரியன் மிருகசீர்ஷ நக்ஷத்திரத்தில் இருக்கும்போது ஏற்பட்டதாக வேதத்தில் குறிப்புத் தெரிகிறது. அந்தக் காலம் இன்றைக்கு சுமார் 6500 வருஷங்கள் முந்திய காலமாக இருந்திருக்க வேண்டுமென்பது கணித சாஸ்த்ரத்தினால் தெளிவாகிறது. இது தெளிவான குறிப்பு, புனர்வசுவில் சூரியன் இருக்கும்போது விஷு ஏற்பட்டதற்கும் சில சாமான்ய குறிப்புகளிருப்பதாகவும் திலகர்சொல்லுகிறார். (See Arctic Home of the Vedas P. 420) அக்காலம் இன்றைக்குச் சுமார் 6000 வருஷங்களுக்கு முன்னிருந்த காலம் (See Arctic Home in the Vedas).

ஆனால் இந்தக் கால வரையும் சரியானதல்ல. இவ்விஷு மாறுதல்கள் ஒரு தரம்தான் சம்பவித்தது என்று சொல்ல முடியாது. ஏனெனில் காலம் அநாதியாகையாலும் நம்

**வேத அத்யயனம் ஒரு மந்த்ர யோகம்**

நாக்கு, உதடு, மேல்வாய், கீழ்வாய் கண்டம் முதலியவைகளில் இடைவெளி வழியாக ப்ராணவாயு வெளிப்படுகிறது. அப்பொழுதுதான் அக்ஷரத்வனி உண்டாகிறது. அந்த அக்ஷரத்வனிக்குக் காரணமாக எந்தெந்த உறுப்புகளில் ப்ராணவாயு ஸஞ்சரிக்கிறதோ அந்தந்த இடம் ஸம்பந்தப்படும் நாடிகளில் சலனம் ஏற்படுகிறது. எந்தெந்த நாடிகளின் சலனத்தினால் மனதின் எவ்வெவ்

---

சாஸ்த்ரப்படி இந்தச் சிருஷ்டி ஏற்பட்டு நூற்றுத்தொண்ணூற்றைந்து கோடியே ஐம்பத்தெட்டு லட்சத்து எண்பத்தையாயிரம் வருஷங்களுக்கு மேலாகிறதனாலும், இதற்குள் எவ்வளவோ தடவை நக்ஷத்திரங்களில் விஷு மாறியிருக்கலாம். மேனாட்டார் மதப் புஸ்தகங்களில் உலகம் ஏற்பட்டு 6000 வருஷங்களே ஆகின்றன என்று சொல்லப்பட்டிருந்த போதிலும், பூகோளத்து ஆராய்ச்சியாளர்கள் இந்தப் பூமி சிருஷ்டியானதைப் பற்றி ஊகிக்குங்காலம் நம்முடைய சாஸ்திரம் சொல்லும் காலத்தை அநேகமாய் அனுசரிக்கிறது. அக்னி குழம்பாயிருந்த இந்தப் பூமியானது, மனிதர்கள் வசிக்கக் கூடிய அளவுக்குக் குளிர்ச்சி அடைந்து இன்றுவரை எவ்வளவு காலம் ஆயிற்றென்று பௌதிக சாஸ்த்ர ஆராய்ச்சிக்காரர்களும் (Physicicists) பூமிதத்வ ஆராய்ச்சிக்காரர்களும் (Geologists) சொல்லுகிறார்களோ அந்தக்காலமும் நம் சாஸ்திரத்தில் ச்ருஷ்டி முதல் இன்றுவரை கடந்ததாக சொல்லப்படும் காலமும் ஒத்து வருகிறது என்பதே ஆராய்ச்சியாளர்களின் அபிப்பிராயம்.

ஆனால் இக்குறிப்புகளைக் கொண்டு வேதம் ஆரம்பமான காலத்தைக் கணிப்பது சரியான முறையல்ல. விஷு புண்யகாலமானது ஒரு நக்ஷத்திரத்திலிருந்து மற்ற எல்லா நக்ஷத்திரங்களையும் கடந்து திரும்பியும் அதே நக்ஷத்திரத்துக்குவர 25695 வருஷங்கள் ஆகிறதாக, கணித சாஸ்த்ரம் கூறுவதால் வேதத்தில் காணப்படும் நக்ஷத்திரக் குறிப்புகள் எத்தனையாவது தடவை விஷு அந்த நக்ஷத்திரத்தில் வந்ததைக் குறிக்கின்றன என்று நிர்ணயிக்க முடியாது.

திலகர் பூகோள தத்வ ஆராய்ச்சி முறையில் ஓர் கால வரையை முடிவு கட்டுகிறார். வேதத்தில் சூர்யோதயம், சந்த்ரோதயம், விடியற்காலங்களில் காணும் அருணோதயம் இவை

விதமான விருத்திகள் ஏற்பட்டு இகலோக க்ஷேமமும், பரலோக க்ஷேமமாகிய மோக்ஷம் முதலிய புண்யமும், சாசுவதமான பலனும் ஏற்படவேண்டுமோ அதற்கு அனுகுணமான உச்சாரணங்களை மாத்திரம் வைத்துக் கொண்டு வேறு விதமான உச்சாரணங்களை விலக்கி அமைந்தனவே வேத மந்த்ரங்கள்.

அவைகளைத் திரும்பத் திரும்ப ஜபமும் பாராயணமும் செய்வதால் எங்கெந்த நாடிகளில் திருப்பித் திருப்பிச் சலனம் ஏற்பட்டு ஆத்ம க்ஷேமம் கிட்டுமோ அந்த

---

களைப்பற்றிக் காணப்படும் வர்ணனைகள் வடக்குத்ருவத்தில் சம்பவிக்கக் கூடியதாகவே இருக்கின்றன. ஆகையால் வேத மேற்பட்ட காலத்தில் ரிஷிகள் வடக்குத்ருவத்திலேயே வசித்து கொண்டிருந்திருக்க வேண்டும். வடக்குத்ருவம் இக்காலத்தில் வசிக்க முடியாமல் பனிக் கட்டிகளால் மூடப் பட்டிருக்கிறது. பூகோள சாஸ்த்ர ஆராய்ச்சிப்படி சுமார் 8000 வருஷங்களுக்கு முந்திதான் அப்பிரதேசங்களில் பிராணிகள் வசிக்கக்கூடாத பனிநிலை வந்ததென்று தெரிகிறது. ஆகையால் அந்தக் காலம் தான் வேதகாலமாயிருந்திருக்க வேண்டுமென்பதே அவர் முடிவு.

வங்காளத்து நிரேந்த்ரநாத் உபாத்தியாயர், அவினாஸ்சந்திர தாஸ் இவர்கள் ஹிமாலய ப்ராந்தங்களையும் அதன் தென் ப்ராந்தங்களையும் வேதத்தில் விவரித்திருப்பதைப் பார்த்தால் இப்போது காடாகவிருக்குமிடம் அப்போது சமுத்திரமாகவும் அப்போது சமுத்திரமாகயிருந்த இடம் இப்போது மலைகளாகவும் மாறியிருப்பதாகத் தெரிகிறதென்கிறார்கள். பூகோள சாஸ்த்ர தத்வ ஆராய்ச்சிப்படி அவ்வித காலம் இன்றைக்கு 25000 வருஷங்களுக்கு முந்தி இருந்திருக்க வேண்டுமென்று நிரூபிக்கிறார்கள்.

சப்தத்வீபங்களடங்கிய பூலோகம் முழுவதுமே பூர்வயுகங்களில் வேதங்களும் வேதானுஷ்டானங்களும் நிறைந்திருந்தன. உலகம் முழுவதற்குமே வேதம் ப்ரமாணநூல் என்ற நம்முடைய சாஸ்த்ரக் கொள்கைப்படி பூலோகத்தில் த்ருவஸ்தானமான வடக்கு த்ருவத்தில் நித்தியம் நடக்கும் வானசம்பவங்களை வேதம் குறிப்பதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. நிலம் கடல் இவைகளின்

க்ஷேமத்தைத் தாங்களும் அடைந்து, தங்கள் மந்த்ர சக்தியால் உலகத்தோரும் க்ஷேமம் அடையச் செய்வதே வேதியர்களின் கடமை. இதுவே அவர்களின் பிறவிக் கடமையுங்கூட. ஒவ்வொருவருக்கும் ஒரு பிறவிக் கடமை இருக்கிறது. ஒவ்வொருவரும் தம் பிறவிக் கடமையைத் தவறாமல் செலுத்தி, அதன் பயனைமாத்திரம் எல்லோரும் அடையும்படிச் செய்வதே சாஸ்திர முறை.

"ஐம்பதெழுத்தே அனைத்து வேதங்களும்" என்னும் திருமூலர் வாக்குப்படி மந்த்ராக்ஷரங்களான அகரம் முதல் க்ஷகரம் வரையில் அமைந்துள்ள ஐம்பது அக்ஷரங்கள் வேதமந்த்ரங்களில் அமைந்திருக்கின்றன. இவ்வேதத்திற்கு அளவேயில்லை. வேதங்கள் அனந்தமென யஜுர் வேதம் கூறுகிறது. பரத்வாஜர் என்னும் முனிவர் ஒரு மனிதனுக் கேற்பட்ட பூர்ண ஆயுட் காலத்தைப் போல் மூன்று பங்கு ஆயுட் காலத்தில் வேதங்களைக் கற்றார். உடல் மிகவும் மெலிந்து விட்டது. சக்தியற்று கிடந்திருந்தார். அப்போது அவரெதிரில் இந்த்ரன் ஆவிர்பவித்தார். எதிரே மூன்று மலைகளைத் தோற்றுவித்தார். அம்மலைகளினின்று ஒவ்வொரு பிடியாக மூன்று பிடியை எடுத்தார். "பரத்வாஜ, நீ இது வரையில் கற்றதெல்லாம் இப்பிடிகளுக் கொப்பானது. இன்னும் வேதத்தில் கற்கவேண்டியது இம்மலைகளுக் கொப்பானது" என்றார். "வேதங்கள் அனந்தம்" என்றார். (யஜுர் வேதம், காடகம், 3-ம் ப்ரச்நம்). "கற்றது கைம்மண்ணளவு கல்லாதது மலையளவு" என்னும் பழமொழி இவ்வேதக் கதையினின்றே உண்டானது. நான்கு வேதங்களில் ஒவ்வொரு வேதமும் அனேக சாகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

**வேதம் அனந்தம்.**

ருக்வேதம் 21 சாகைகள், யஜுர்வேதம் 101 சாகைகள், சாமவேதம் 1000 சாகைகள், அதர்வண வேதம் 9

---

மாறுதல்களும் ஓர் நிலத்தின் சீதோஷ்ண நிலை மாறுதல்களும் பூமி தன்னைச் சுற்றுவதில் ஏற்படும் மாறுதலால் அடிக்கடி மாறி மாறி ஏற்படக் கூடுமென்பதால், இந்தப் பூகோள தத்துவ ஆராய்ச்சி முறை வேதத்தின் காலவரையை யறுக்கத் தீர்மானமான சாதனமாகாது.

சாகைகள். "சாகையாயிர முடையார், சாமமோதுவ துடையார்." (திருஞான சம்பந்தர்—வாழ்கொளிபுத்தூர்)

இன்னவை யிரண்டு மிவனருள் வலியா
லீன்றநான் மறையை ....
பின்னிவனருளா லளவிலவான
**பிரணவமா** மாதிமந்திரமும்.

நீட்டிசை முகத்தொன் றடுத்தகா லைந்திற்
கிளைத்த தாலிருக்கது தென்பால்,
ஈட்டிய விரண்டாம் வேதநூ றுருவோ
டெழுந்தது வடதிசை முகத்தில்,
நீட்டிய சாம மாயிர முகத்தா
னிமிர்ந்தது குடதிசை முகத்தில்,
நாட்டிய வொன்ப தருவொடு கிளைத்து
நடந்தது நான்கதா மதற்கே.

பரஞ்ஜோதி முனிவர் திருவிளையாடற் புராணம், மதுரைக் காண்டம், வேதம் பொருளருளிச் செய்த படலம்—35.

**வேத சாகைகளும். அவைகள் வழங்கும் நாடுகளும் உச்சரண வேற்றுமைகளும்**

இவைகளில் ருக்வேதத்தில் இப்போது ஒரு சாகையே ஓதப்பட்டு வருகிறது. இதற்கு ஐதரேய மென்று பெயர். இதையே மலையாள நம்பூதிரிகள் "பௌழியம்" என்று வழங்குகிறார்கள். இதையே நச்சினார்க்கினியார் பௌடிகம் என்று தமது உரையில் எழுதியிருக்கிறார். யஜுர் வேதத்தில் தைத்திரீயம், காண்வம், மாத்தியந்தினம், என்று 3 சாகைகளே ஓதப்பட்டு வருகின்றன. சாமவேதத்தில் சந்தோகம், தலவகாரம் என்னும் இரண்டு சாகைகளே இக்காலத்தில் ஓதப்பட்டு வருகின்றன. "சந்தோக சாமமோதும் வாயானை திருவீழி மலையானை" என்கிறார் அப்பர் (திருவிழிமலை). அதர்வணவேதத்தில் வடநாட்டில் ஒரு சாகையே ஓதப்பட்டு வருகிறது. "சந்தோகா, பௌழியா, தைத்திரியா, சாமவேதியனே, நெடுமாலே" என்கிறார் திருமங்கை

யாழ்வார். தலவகாரம் என்னும் சாகை இக்காலத்தில் மிகவும் சுருங்கி யிருக்கிறது. மலையாளத்தில் சில குடும்பங்களிலும் தஞ்சையிலும் திருநெல்வேலியிலும் சில குடும்பங்களிலும் இச்சாகையை ஓதி வருகிறார்கள். 63 நாயன்மார்களில் ஒருவரான சோமாசிமாற நாயனார் இத்தலவகார சாகையைச் சேர்ந்தவரே. இவர் சோழ நாட்டில் அம்பர் திருமாகாளத்திற்கடுத்த இடையாத்தங் குடியைச் சேர்ந்தவர். அவவூரிலும் சுற்றிலும் இத்தலவ கார சாகையாளர் இன்றும் வசித்துக் கொண்டு அந் நாயனாரை வழிபட்டு வருகின்றனர். இத்தலவகார சாகையில் ஒரு விசேஷமுண்டு. ருக்வேதத்தில் "ள" கரம் வருமிடமெல்லாம் யஜுர்வேதத்தில் ட கரம் (ட வர்க்கத்தில் 3-வது எழுத்து) வருகிறது. யஜுர் வேதத்திலும் சந்தோக சாமத்திலும் ஒலிக்கும் ட கரமெல்லாம் தலவகார சாகையில் "ழ" கரமாக ஒலிக் கிறது. தலவகார ஓலைச் சுவடிகளிலும் இக்காலத்தில் அச்சிடப்பட்டிருக்கும் புஸ்தகங்களிலும் "ழ" கரமே காணப்படுகிறது. தமிழ் எழுத்துக்களில் காணப்படும் ழகரம் ஒரு வேதசாகையில் ஆறுதி ஒலியாக இடம்பெற் றிருக்கிறது. வியாகரண சாஸ்த்ரத்தில் ஜிஹ்வா மூலீயம் என்றும் உபத்மானீயம் என்றும் இரு அக்ஷரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. தமிழில் காணப்படும் ஆய்தம் (ஃ) என்னும் ஒலி வேதத்தின் ஆறங்கங்களைச் சார்ந்த சிக்ஷை, வ்யாகரணம் என்னும் இரண்டு அங்கங்களில் ஜிஹ்வா மூலீயம் (நாவின் அடியினின்று வெளிப் படுவது) என்னும் பெயருடன் ககரத்திற்கு முன் வரும் விசர்கமாக (:) கணக்கிடப் பட்டிருக்கிறது. அரபி பாஷைகளிலும் ஐரோப்பிய பாஷைகளிலும் வழங்கும் F (ஃப்) என்னும் ஒலி உபத்மானீயம் (ஊதல்) என்ற பெயருடன் பகரத்தின் (ப-வர்க்கத்தின் இரண் டாவது எழுத்து) முன் வரும் விசர்கமாக (:ப) கணக் கெடுக்கப்பட்டதாகக் கொள்ளலாம். எல்லா வேதங் களுக்கும் பொதுவான இலக்கண நூல்களாகிய அனேக சிக்ஷா நூல்கள் வயாகரண நூல்களிருக்கின்றன. (அவை களில் ஐந்த்ர வ்யாகரண நூலை அனுசரித்து எழுந்ததே தொல்காப்பிய மென்பது மரபு). இவ்வித பொது இலக்கண நூல்களைத் தவிர ஒவ்வொரு தனித்தனி

சாகைக்கும், அதாவது ப்ரதி சாகைக்கும், சிறப்பான விஷயங்களைப் போதிக்கத் தனித்தனியாக ஒவ்வொரு இலக்கண நூல் இருக்கிறது. அவ்வித நூல்களுக்கு ப்ராதி சாகையின் விசேஷத்தைச் சொல்லுவதால் ப்ராதி சாக்யம் என்று பெயர். ஒவ்வொரு சாகையிலும் எழுத்துக்கள் மாறுபடுவதையும் இப்பிராதிசாக்யங்கள் அறிவிக்கின்றன. பண்டைய காலத்தில் ஒவ்வொரு நாட்டிலும் வேதத்தில் வழங்கும் முறை அந்நாட்டு மொழிகளிலும் பரவியுள்ளதெனலாம். உதாரணமாக வங்காளம் முதலிய வடநாட்டு ப்ரதேசங்களில் வங்காளம் என்பதற்கு பங்காளம் என்றும், யமுனை என்பதற்கு ஜமுனை என்றும் க்ஷேமம் என்பதற்கு கேமம் என்றும் வழங்குகிறார்கள். இதற்குக் காரணம் அந்நாடுகளில் வழங்கும் வேதசாகைதான் எனலாம். யஜுர் வேதத்திலுள்ள தைத்திரீய சாகையும் காண்வ சாகையும் அந்நாடுகளில் இல்லை. *யஜுர் வேதத்தைச் சேர்ந்த மாத்யந்தின சாகையொன்றே அந்நாடுகளில் வழங்கி வருகிறது. மாத்யந்தினப்ராதிசாக்யத்தை அனுசரித்த வேதோச்சாரணத்தில் வகரத்திற்கு பகாரமும் ப (பவர்க்கத்தில் 3-வது எழுத்து) யகரத்திற்கு ஜகாரமும், ஷகாரத்திற்குக் ககாரமும் க (க வர்க்கத்தின் இரண்டாவது எழுத்தும்) வழங்கி வருகின்றன. யூதர்கள் என்பதற்கு Jews என்றும் யூசுப் என்பதற்கு Joseph என்றும் மேனாடுகளில் சில இடங்களில் யகரம் ஜகரமாக மாறி வழங்கும் வழக்கங்கூட அந்நாடு களிலும் ஆதிகாலத்தில் மாத்யந்தின சாகையிருந்திருக்க லாமோ என்று ஊகிப்பதற்கு இடந்தருகிறது. வேதத்தில் சொல்லப்பட்ட மித்ராவருணர்களைப் பிரமாணமாகக் கூறிய ஓர் உடன்படிக்கை கிறிஸ்து பிறப்பதற்கு 1500 வருஷங்களுக்கு முன் கல்லில் வெட்டப்பட்டது ஈஜிப்ட் தேசத்தில் கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. (Treaty of Ramses II with the Hittites. See H. R. Hall, Ancient History of the Near East, Page 364)

ழகாரம்வழங்கும் தலவகார சாகையும் சோழநாட்டிலும், பாண்டிநாட்டிலும், மலையாளமாம் சேரநாட்டிலும், சோழியர் என்ற சிறப்புப்பெயரால் வழங்கப்படும் வேதியர்களிடத்தும் நம்பூதிரிகளிடத்திலுமே காணப்படுவதால் இச்சாகை தென்னாட்டில் ஆதிகாலத்தில்

அதிகமாய் இருந்திருக்க வேண்டுமெனத் தோன்று கிறது. தெலுங்கு நாட்டில் சாமவேதமில்லை. ஆதலால் தலவகாரமுமில்லை. அங்கு ழகாரம் வழங்கப்படவு மில்லை. தெலுங்கு தேசத்தில் 100 க்கு 99 பேர் தைத்திரீய யஜுர்வேதிகளாகவே இருக்கிறார்கள். ருக் வேதத்தில் ளகாரம் வருமிடமும் தலவகாரத்தில் ழகாரம் வருமிடமும் தைத்திரீயத்தில் 𑌳காரமாகவே ஒலிக்கிறது. இவ்வேத வழக்கைக் கொண்டே நாட்டு வழக்கிலும் ஆந்த்ர தேசத்தில் 𑌳கரம் அதிகமாக ஒலிக்கிறது போலும். மேற்குக் கடற்கரை யோரமுள்ள கன்னட மகாராஷ்ட்ர தேசங்களில் 100 க்கு 80 வேதியர் கள் ருக்வேதிகளாக இருக்கிறார்கள். ருக்வேதத்தில் ளகாரம் சிறப்பாக ஒலிப்பதற்கேற்ப அந்நாடுகளிலும் அந்நாடுகளின் மொழி வழக்கத்திலும் ளகாரமே அதிக மாக ஒலிக்கிறது.

| தெலுங்கு | தமிழ் | கன்னடம் |
|---|---|---|
| பொகடு | புகழ்தல் | ஹொகளுவது |
| பகடாலு | பவழம் | ஹவள |
| பாடு | பாழ் | ஹாளு |
| கூடு | கூழ் | கூளு |

சம்ஸ்க்ருத பாஷையில் உச்சரிக்கப்படாத சில ஒலி கள் கூட வேதத்தில் ஒலிக்கப்படுகின்றன. யஜுர் வேதத் தில் வரும் 𑌳கரம் ருக்வேதத்தில் ளகாரமாக ஒலிக்கின் றது. அதேபோல் யஜுர் வேதத்தில் வரும் 𑌳கரம் (டவர்க்கத்தின் 4-வது எழுத்து) ருக்வேதத்தில் சம்ஸ்க்ருத பாஷையிலில்லாத ஒரு அபூர்வ ஒலியாக ஒலிக்கின்றது. சந்தோக சாமத்தில் உள்ள 𑌳கரம் தலவகார சாமத்தில் ழகாரமாய் மாறுவதற்கு உலக வழக்கத்திலும் ஒரு உதாரணத்தைக் காண்கிறோம். மிருகசீரிட நக்ஷத் திரத்தில் பூர்ணிமை வரும்போது அப்பூர்ணிமையை மார்கசிர்ஷீ என சாஸ்த்ரங்கள் வழங்குகின்றன. அதையே மார்கழித் திங்கள் என்று ஆண்டாள் வழங்கு கிறாள். புஷ்டியைத் தருவது என்னும் பொருளைத் தரும் பௌஷ்டிகம், பௌடிகம், பௌழியம் என்றது போன்ற இம்மாறுதல்களும் வேத வழக்கத்தை ஒட்டியே யிருக்

கின்றன எனலாம். உச்சாரணம் செய்வதினால் மக்களுக்கு க்ஷேமத்தைத் தரும் ஒலிகளெல்லாம் உசிதமான மந்த்ராக்ஷர ஒலிகளாக வேதத்தில் அமைந்திருக்கின்றன. "வேதத்தின் மந்த்ரத்தால் வெண்மணலேசிவமாகபோதத்தால் வழிபட்டான்" என்கிறார் ஞானசம்பந்தர்.

**வேதத்திலுள்ள கர்ம, ஞான காண்டங்களும் தமிழ் நூல்களும்.**

ஒவ்வொரு சாகையிலும் கர்மகாண்டம் ஞான காண்டம் என இரு பாகுபாடுகளுண்டு. கர்மகாண்டத்தில் ஆசாரங்களையும் க்ரியானுஷ்டானங்களையும் கடைப்பிடித்து அக்கர்மானுஷ்டானங்களை மனதால் ஈசுவரார்ப்பணம் செய்து அவன் கருணை வெள்ளத்தால் சித்தத்தின் மலத்தை அலசி, சுத்தமாக்க வேண்டிய முறை உபதேசிக்கப் பட்டிருக்கிறது. இவ்விதம் சுத்தமான மனதை ஒரு நிலைப்படுத்தி ஈசனிடம் அன்பைப் பெருக்கி, நினைவு அவனை விட்டகலாமல் அவனது உருவத்தை த்யானித்து வழிபட்டு அவனது அளவிலா வடிவாகிய அகண்ட ஞானானந்த உண்மையை அறிந்து உய்யும் உபதேசத்தைச் செய்வது ஞான காண்டம்.

அருமறை நால்வேறுகையால்
வருணமாச் சிரமங்களு நான்காந்
தருமம் யாகாதி கருமமு மறையின்
றலைமையிற் றோன்றின மறையும்
*கருமநூன் ஞானநூலென விரண்டாம்
கருமநூலிவன ருச்சனைக்கு
வரும் வினை யுயர்த்த ஞானநூலிவன்றன்
வடிவிலா வடிவினை யுணர்த்தும்.

[பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம், மதுரைக் காண்டம், வேதத்திற்குப் பொருளருளிச் செய்த படலம்—36.]

---

* இங்கு கர்மநூல், அதாவது, கர்மகாண்டமென்று எது சொல்லப்படுகிறதோ அது மனதை உருக்கும் ஈசுவரனிடம் பேரன்பைப் பெருக்கும் நூல் என்பதே ஆசிரியர் பரஞ்ஜோதி

**வேதத்தைவிட்ட அறம் இல்லை வேதத்தின்**
ஓதத்தகும் அறம் எல்லாம் உளதர்க்க
வாதத்தைவிட்டு மதிஞர் வளமுற்ற
**வேதத்தை ஓதியே வீடுபெற்றார்களே.**

(திருமூலர் திருமந்திரம்)

---

முனிவருடைய கருத்தாகக் கொள்ளவேண்டும். ஆகையினாலேயே அடுத்த அடியில், "கர்மநால் இவனருச்சனைக்கு வரும்" என்று தெளிவாய்க் கூறுகிறார். ஸ்ரீ ஆதிசங்கராசார்ய சுவாமிகள் இவ்வுலகில் தான் அவதரித்ததற்கான காரியத்தைப் பூர்த்தி செய்து விட்டு திரும்பி கைலை எழுந்தருளும் தருவாயில், "இதுவரையில் தங்களால் செய்யப்பட்ட எல்லா உபதேசங்களையும் சுருக்கியுரைத் தருளவேண்டும்" என்று எல்லா சிஷ்யர்களும் வேண்ட ஸ்ரீ ஆசார்யரால் சாதன பஞ்சகம் என்னும் ஐந்து சுலோகங்கள் அருளப் பட்டன. அவைகளில் முதல் சுலோகத்தின் ஆரம்பத்தில் "வேத:- நித்யம்-அதீயதாம்-ததுதிதம் - கர்ம-ஸ்வனுஷ்டீயதாம்-தேன-ஈசஸ்ய விதீயதாம் அபசிதி:" என்று உபதேசிக்கப்பட்டிருக்கிறது.

[ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்.] — ஔவை.

கற்று-ஆங்கு-எரி-ஓம்பி-கலியை-வாராமே
செற்றார்-வாழ்-தில்லை-சிற்றம்-பல மேய
முற்றா-வெண்திங்கள்-முதல்வன்-பாதமே
பற்றா-நின்றாரை-பற்றா-பாவமே.

— சம்பந்தர், தில்லை.

இங்கு வேதத்தில் சொல்லப்பட்ட சகல கர்மானுஷ்டானங்களும் பரமேசுவரனுடைய பூஜையாகவேயாகும் என்று தெளிவாய் உபதேசிக்கப்படுகிறது. தவிரவும் எல்லா கர்மானுஷ்டானங்களும், "பரமேசுவர ப்ரீத்யர்த்தம்", "ஜனார்தன: ப்ரீயதாம்" "ப்ரம்மார்பணமஸ்து" என்று ஈசுவரார்ப்பணமாகவே செய்யப்படுகின்றன. ஈசுவரார்ப்பணமாக சாஸ்திரங்களில் சொல்லியிருக்கும் கர்மாக்களையெல்லாம் எவன் அனுஷ்டிக்கிறானோ அவனே ஈசுவர பக்தர்களுக்குள் உயர்ந்தவன் ஆவான். ஒரு பிரபுவிற்கு இரண்டு வேலைக்காரர்களிருக்கிறார்கள். அவர்களுக்குள் ஒருவன் எப்போதும் அவரெதிரிலேயே நின்றுகொண்டு அவனை ஸ்தோத்திரம் செய்துகொண்டேயிருக்கிறான். மற்றவனோ பிரபு என்ன காரியம் செய்யவேண்டுமென்று உத்திரவிடுகிறாரோ அந்தக் காரியத்தையும் அவர் எது செய்யவேண்டுமென்று

மாணிக்கவாசக சுவாமிகள் திருவெம்பாவையில் வேதமுணர்த்தும் பரம்பொருளையே, "விண்ணுக்கொரு மருந்தை - வேதவிழுப் பொருளை" என்று பாடுகிறார். "வேதப் பொருள் பாடி, அப்பொருளாமா பாடி, சோதி திறம் பாடி" என்றும் பாடுகிறார். வேதம் பசுவென்றும் இறைவனிடத்தில் ஆன்மாக்களுக்கேற்படும் பக்தி ஞானங்களைப் பாலென்றும் சைவம் முதலிய சித்தாந்த சாஸ்த்ரங்கள் கூறும். எல்லா உபநிடதங்களும் பசுக்களென்றும் பகவத் கீதை பாலென்றும் பகவத் கீதையின் த்யான சுலோகம் கூறுகிறது. மாணிடக் குழவிகளாக நம்மை என்றும் இளைக்காத வண்ணம், என்றும் சலிக்காத வண்ணம் சாசுவதமாக வளர்க்க ஊட்டப்பட வேண்டிய ஞானப் பாலைக் குன்றாது தரும் வேதங்கள் எனும் பசுக்கள் ஆறங்கங்களுடன் நிறைவாழ்வு வாழும் பணி செய்வோமாக.

---

மனதினால் நினைக்கிறாரோ அதை இங்கிதத்தினால் தெரிந்து கொண்டு அந்தக் காரியத்தையும் சிரத்தையுடன் செய்து முடிக்கிறான். இவர்களிருவருக்குள் எவன் பிரபுவினுடைய கார்யத்தை சிரத்தையுடன் செய்கிறானோ அவனே பிரபுவினுடைய உண்மையான பக்தன் என்பது தெளிவாகும். இந்தத் திருஷ்டாந்தத்திலிருந்து கர்ம காண்டம் உண்மையில் பக்தி காண்டமே என்பது தெளிவாகும்.

தவிரவும் யஜுர் வேதத்திலுள்ள ஸ்ரீ ருத்ரம் பரமேசுவரனை "நமோநம: நமோநம:" என்று மூன்னூறு தடவை நமஸ்காரம் செய்கிறது. 63 சிவ பக்தர்களில் ஒருவரான ஸ்ரீ ருத்ரபசுபதி நாயனாரும் இதை அனுசரித்தே உள்ளம் உருகி உருகி சிவசாயுஜ்யத்தை யடைந்தார். இந்த வேதமே சைவ ப்ரபந்தங்களாயும் வைஷ்ணவ ப்ரபந்தங்களாயும் தமிழில் தோன்றியிருக்கிறது என்று அந்த ப்ரபந்தங்களிலேயே அடிக்கடி பறையறையப்பட்டிருக்கிறது. சைவ ப்ரபந்தங்களும் வைஷ்ணவ ப்ரபந்தங்களும் உள்ளத்தை உருக்கும் பக்தியையே முக்கியமாகக் கொண்டவை. அவைகள் எந்த வேதத்தினுடைய உருவமோ அந்த வேதம் முழுமையும் பேரன்பு நூலே.

ஆழ்வார்களும் நாயன்மார்களும் இறைவனை நாயகனாகவும், ஜீவாத்மாவை நாயகியாகவும், பக்தியனுபவத்தை அகப் பொருளாகவும் அளவு கடந்து பாடியிருக்கிறார்கள். இவ்விதமான

வேதத்தை ஆதாரமாகக் கொண்ட நமது வைதிக சமயம் உலகம் முழுவதும் இருந்ததாக பாகவதம் முதலிய பெருநூல்களிலிருந்து அறியக் கிடைக்கிறது. ஆதியுகங்களில் பூகோளம் வடக்குத்ருவத்திலிருந்து தெற்குத்ருவம், வரையில் த்வீபங்களெனப்படும் ஏழு தீவுகளாகவும் அவைகளினிடையே ஏழு கடல்களாகவும் பிரிந்திருந்தன என அப்பெருநூல்கள் கூறுகின்றன. ஒவ்வொரு தீவும் ஒவ்வொரு கடலும் ஒரு மோதிரத்தைப் போல் பூகோளத்தைச் சுற்றி வடக்கிலிருந்து தெற்குவரை வரிசையாக அடுத்திருந்தன. ஒவ்வொரு தீவிலும் வைதிக கர்மானுஷ்டானங்களும் வைதிக தெய்வ வழிபாடுகளும் நடந்து வந்தன. பூமி ஒவ்வொரு நாளும் தன்னைச் சுற்றிக் கொள்ளுகிறது. ஒரு வருஷத்தில் சூரியனையும் சுற்றுகிறது. தன்னைச் சுற்றும் திசைக் கோடும், (Earth's orbit round itself) சூரியனைச் சுற்றும் திசைக் கோடும் (Earth's orbit round the sun) ஒரு காலத்தில் ஒன்றாயிருந்தது. அப்பொழுது பூமியினுடைய உத்திரத்ருவம் த்ருவ நக்ஷத்திரத்திற்கு நேராகயிருந்து இப்போது சற்று மாறியிருக்கிறது. பூமி தன்னைச் சுற்றும் திசை நோக்கும் (திசைக்கோடும்) சூரியனைச் சுற்றும் திசைநோக்கும் (திசைக்கோடும்) இதனாலேயே சற்று மாறியிருக்கின்றன. இக்காலத்தில் ஒவ்வொரு மாதத்திலும் மாதப் பிறப்பிற்கும் அந்தந்த மாத அயனம் என்று பஞ்சாங்கத்தில் போடப்படும் தினத்திற்கும் வித்தியாசமேற்படுவதற்கு இதுவே கார

வைதிக சமயம் உலக முழுவதும் இருந்து நாளடைவில் ஒடுங்கிக் கொண்டு வந்து அடுத்த யுகத்திற்கு விதை முதலாக இந்த தேசத்தில் மிஞ்சியிருக்கிறது.

---

உருவகத்திற்கு மூலமாக பிரகதாரண்யக உபனிஷத்தில் பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கும் உள்ளும் புறமும் ஒருவித வேற்றுமை அறிவுமின்றி ஏகமாய் அனுபவிக்கப்படும் நாயகி நாயகத் தன்மையாலேற்படும் ஆனந்தம் விளக்கப்பட்டிருக்கிறது. கைவல்ய உபனிடதம் சிரத்தை யெனும் ஆர்வம், பக்தி எனும் அளவு, த்யானம் எனும் இடையறு நினைவு இவைகளில் அன்பை, பக்தி என்னும் சொல்லாலேயே குறித்து நடு நாயகமாய் அமைத்திருக்கிறது.

ணம். சித்திரைமாதம் முதல் தேதியும் ஐப்பசிமாதம் முதல் தேதியும் விஷு தினமென்று ஜோதிட சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. விஷு என்பதற்கு இலக்கணம் கூறுமிடத்து இரவும் பகலும் சமமாக 30 நாழிகையாயிருப்பதே என நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. (சம ராத்ரம் திவே காலே விஷுவத்விஷுவம் ச தத். அமர கோச நிகண்டு). இக்காலத்தில் சித்திரை மாதப் பிறப்பு நாளும் துலா மாதப் பிறப்பு நாளும் இரவும் பகலும் சமமாக இல்லை. அம்மாதப்பிறப்பு தினங்களுக்கு 22 நாட்களுக்கு முந்தியநாள்தான் பகலிரவு சமநாழிகைகளுள்ள நாளாக யிருக்கின்றது. அங்ஙனமே தக்ஷிணாயன உத்தராயணங்களுக்குரிய இலக்கணங்களைக் கொண்ட நாட்கள் தற்போது நாம் அனுஷ்டிக்கும் நாட்களுக்கு 22 நாட்கள் முன்னதாகவே இருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் காரணம் பூமி தன்னைச் சுற்றும் சுற்றும், சூரியனைச் சுற்றும் சுற்றும் ஒரே மட்ட நோக்கின்று சற்று மாறுபட்டிருப்பதே.

ஒரு பம்பரத்தை வெகு வேகமாகச் சுற்றுகிறோம். அது சுற்றுகிறது. அரை நிமிஷம் நேராகச் சுற்றுகிறது. பின்பு சுற்றிக் கொண்டே ஒரு பக்கமாகச் சாய்கிறது. திரும்பவும் நேராக வருகிறது. பின்பு மற்றொரு பக்கம் சாய்கிறது. திரும்பவும் தன்னிலைக்கு வருகிறது. இவ்விதம் நாம் கண்டிருக்கிறோம். இப்பூகோளமென்னும் பம்பரமும் ஒருகாலம் நேராகச் சுற்றிக்கொண்டிருந்தது. அன்று வருஷப்பிறப்பும் விஷுவும் ஒன்றாக இருந்தது. அன்று வடதுருவமிருந்து தென்துருவம் வரையில் ஏழுத்வீபங்களும் ஏழு சமுத்ரங்களும் (ஒன்றுக்கொன்று ருசியும் வர்ணமும் வேறுபட்டவை) ஒரு மோதிரம் கோர்த்தாற்போல் வரிசையாகயிருந்தன. அவைகளில் ஒன்றே நாவலந்தீவு அல்லது ஜம்புத்வீபம் என்று சொல்லப்படும் நாம் வசிக்கும் தீவு. அதன் உட்பிரிவுகளே பாரத வருஷம் பாரத கண்டம் முதலியன. இவ்விவரங்களை நாம் சமுத்ரஸ்நானம் செய்யும்போது சொல்லும் மகாசங்கல்பத்தில் காண்கிறோம்.

பூகோள பம்பரம் சுற்றுவதில் வானசாஸ்திரப்படியும் பூததத்துவ சாஸ்திரப்படியும் ஏற்படும் மாறுதல்களால் பம்பரத்தின் சுற்றுகளில் நேர்மை மாறும்

பொழுது கடல்கோள்களுண்டாகி தீவுகளுடைய உருவங்களெல்லாம் சிதறுண்டு மாறிக் கடல்களும் ஒன்றுக்கொன்று கலந்து பொது அமைப்பில் வேறுபாடுகள் ஏற்படுகின்றன. தர்மயுகங்களான க்ருத, த்ரேதா யுகங்களில் வைதிக வழிபாடுகளும் வைதிக கர்மானுஷ்டானங்களும் உலகத்திலுள்ள எல்லா தீவுகளிலும் நடந்துவந்து, துவாபர, கலியுகங்களில் குன்றி அடுத்த தர்மயுகத்திற்கு விரைமுதலாகச் சில இடங்களில் மாத்திரம் ஒடுங்கி நிற்கின்றன. வேதத்தில் சொல்லப்பட்ட மித்ரா வருணர்களைப் பிரமாணமாகக் கூறிய ஒரு உடன்படிக்கை 3500 வருஷங்களுக்குமுன் கல்லில் வெட்டப்பட்டது ஈஜிப்டில் கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. (Treaty of Rameses II with the Hittites. See H. R. Hall Ancient History of the Near East, Page 364.) மித்ரன் என்னும் தேவதை இரான் என்று இப்போது சொல்லப்படும் பர்ஷியா தேசத்திலும், லிடியா தேசத்திலும் ரோம் சாம்ராஜ்யத்திலும் ஒரு காலம் பரவியிருந்ததாகத் தெரிகிறது. அபினாஸ் சந்த்ரதாஸ் என்னும் ஆராய்ச்சிக்காரர் அவர் எழுதிய ருக்வேதிக் இந்தியா என்னும் ஆங்கில புஸ்தகத்தில் பின்வருமாறு எழுதுகிறார். "The God Mitra of the Vedic Aryans was the same as Mithra of the Iranians and the Medeus of the Lydians. The worship of Mitra prevailed down to the 4th century in the Roman Empire. Professor A. A. Macdonell says that from Zoroastrianisn was developed the worship of the Sungod Mithras in Western Europe. This, introduced into Rome in the 1st century B. C., began to spread very widely throughout the Roman Empire, before the end of the First Christian century, by the army, slave population, and traders as the worship of the Sun god, the unconquered Mitra. Thus by the end of the 3rd century A. D., it bade fair to become a world religion. At the beginning of the 4th century several Roman Emperors were votaries of Mithraism but after the adoption of Christianity by Constantine who became Emperor in 326 and

made Christianity, the official religion of the state, Mithraism declined and disappeared from Rome by the end of the 4th century — Vide Rigvedic India P. 94.

ஆஸ்திரேலியாவில் வேஷம் போட்டுக்கொண்டு ஆடிக் கொண்டிருந்த பழைய ஜாதியின் படம் ஒன்று இருந்தது. அதன் கீழ் சிவ டான்ஸ் (Siva Dance) என்று எழுதியிருந்தது. வேஷம் போட்டுக் கொண்டு இருந்த ஒவ்வொருவனுடைய நெற்றியிலும் மூன்றாவது கண் இருந்தது. (ClF Figures 128 and 129 Page 621 of the Nature Tribes of Central Australia by Spenser and Gillen-Macmillan 1899) இப்பொழுதும் இவ்விடத்திலிருந்து 2000 மைல் கிழக்கிலிருக்கும் பலி (Bali) என்னும் தீவில் வேதமந்திரங்கள் ஓதப்படுகின்றன. சிவாலயங்களில் சிவ வழிபாடு நடந்து கொண்டிருக்கிறது. இவ்விறைமுதலைக் காக்கும் வகையில் நம்மவர்க்கும் பிறநாட்டவர்களுக்கும் இவ்வுண்மையை எடுத்து விளக்க வேண்டியது நம் கடமை.

உலகத்தில் எந்த உயர்ந்த நூலும் வேதத்தின் பொருளைச் சொல்லுவதாகவே பெரியோர்கள் தொன்று தொட்டு கூறி வந்திருக்கிறார்கள். எல்லா க்ஷேத்திரங்களையும் காசிக்கு உவமித்தும் எல்லா தீர்த்தங்களையும் கங்கைக்குவமித்தும் கூறுவதைப்போல் எல்லா உயரிய கருத்துள்ள நூல்களையும் வேதத்திற்குவமித்தும் உருவகமாக்கியும் புகழ்ந்து வந்திருக்கிறார்கள். வேதமே வால்மீகியினிடத்தில் ராமாயணமாக உதித்தது என்பது பழமொழி. "வேத:ப்ராசேதஸாத்-ஆஸீத்-சாக்ஷாத்-ராமாயணாத்மநா." பாரதம் ஐந்தாவது வேதம் என்று சொல்லப்படுகிறது "பாரத: பஞ்சமோவேத:". நம்மாழ்வார் வேதத்தையே தமிழ் செய்தார். "வேதம் தமிழ் செய்தான் மாறன் சடகோபன்." வேதத்தின் மெய்ப்பொருள் திருக்குறள் என்று,

"நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகன்
தான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த."

என்ற இடத்தில் திருவள்ளுவ மாலையில் உக்கிரப் பெருவழுதியார் கூறுகிறார்.

வெள்ளிவீதியார் என்பவர் திருவள்ளுவர் மாலையில் **"செய்யா மொழிக்குந்** திருவள்ளுவர் மொழிந்த **பொய்யா மொழிக்கும்** பொருளொன்றே" என்கிறார். செய்யா மொழி=வேதம். "வேதப் பொருளை விரகால் விரித்துலகோ ரோதத் தமிழால் உரை செய்தார்" என்கிறார் திருவள்ளுவ மாலையில் செயலூர் கொடுஞ் செங்கண்ணனார். பிற சமய நூலாகிய சிலப்பதிகாரத்தில் கூட, "ஓதிய வேதத் தொளியுறினல்லது போதார் பிறவிப் பொதியறையோர்" எனச் சொல்லப்பட்டிருக்கிறது. நம் நாட்டிற்குப் புதிதாக வந்தவர்களான மகமதியர், கிறிஸ்தவர்கள்கூட தங்கள் தங்கள் மத நூல்களை வேதமென்று கூறத் தொடங்கி விட்டார்கள். இதிலிருந்து நமக்கு வெளியாவதென்ன வென்றால் உத்தம தத்வங்களாம் ரத்னங்களுக்கெல்லாம் வேதமே வற்றாத சுரங்கமாக நிற்கிறது என்பதே.

**வேதம் உத்தம தத்வங்களடங்கிய ஓர் வற்றாத சுரங்கம்**

"சித்தத்தின் உள்ளே சிறக்கின்ற நூல்களில்
உத்தம மாகவே ஓதிய **வேதத்தின்"**

என்கிறார் திருமூலர்.

* கிறிஸ்தவர்களின் பைபிளில் "Tree of Knowledge-Forbidden fruit" எனக் காணப்படும் விவரங்கள் நமது சாஸ்த்ரத்தை ஒட்டியிருக்கின்றன. ஈஜிப்ட் தேசத்தில் வெகுகாலத்திற்கு முன்னர் மித்ரா வருணர் களைச் சாக்ஷியாகக் கொண்ட கல்வெட்டைக் கொண்டும் மேனாடுகளில் மித்ரனுடைய வழிபாடு நடந்து வந்த குறிப்புகளையும் பார்த்தால் சமீப நாடாகிய யூதர்களுடைய பாலஸ்தீன நாட்டிலும் வேதங்கள் வழங்கி வந்து சிதைந்து போயிருக்கலாம்; அவைகள் சிதைந்த உருவில் தோன்றுவதே பைபிளில் காணும் குறிப்பு எனக் கொள்ளலாம்.

---

* பைபிளில் சொல்லப்பட்டிருக்கும் பெண்ணின் சிருஷ்டி க்ரமமும் ஐதரேய உபனிஷத்திலும் ப்ருகதாரண்யக உபனிஷத்திலும் ஸ்த்ரீயின் சிருஷ்டியைப்பற்றிச் சொல்லியிருப்பதின் சிதைந்த குறிப்பாய்க் கொள்ளலாம்.

உலக மக்களைக் காக்கேஷியர் அல்லது ஆரியர் என்றும், ஸெமிடிக் என்றும், மங்கோலியர் என்றும், நீக்ரோவர் என்றும், சிவப்பிந்தியர் என்றும் அவரவர்களுடைய உடலமைப்பை யனுசரித்துப் பிரித்து, வேதம் அவர்களில் காக்கேஷியர் என்ற பிராந்தியருக்கே உரித்தது என்று சொல்வது நம்முடைய சாஸ்த்ரங்களுடைய முறையல்ல. உலகிலுள்ள சப்தத்வீபங்களிலுமே நம்முடைய வேதங்கள் நிறைந்திருந்தன. மேலும் மங்கோலியர் எனப்படும் சீனர்கள், **திராவிடர்கள்**, டார்டர்கள், பாரசீகர்கள், இவர்கள் எல்லோருமே க்ஷத்திரிய குலத்தவர்கள் என்று தர்ம சாஸ்த்ரம் கூறுகின்றது.

சனைகஸ்து க்ரியாலோபாதிமா: க்ஷத்ரியஜாதய: |.
வ்ருஷளத்வம் கதாலோகே ப்ராஹ்மணாதர்சனேன ச ||
பௌண்ட்ரகா: ஔட்ரத்ரவிடா: காம்போஜாயவனா: சகா: |
பாரதாபஹ்லவ: சீனா: கிராதாதரதா: கசா: ||

வ்ருஷளத்வம் என்பதற்கு வேளாளத்தன்மை என்று பொருள் கூறலாம். வ்ருஷ என்னும் சொல் அறத்தையும் கடவுளையும் குறிக்கின்றது. வேள் என்ற சொல்லும் இவைகளைக் குறிக்கிறது.

ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு சஞ்சரித்துக் கொண்டே வேதத்தை நம் இந்திய நாட்டில் ரிஷிகள் புகுத்தினார்கள் என்று மேனாட்டு ஆராய்ச்சியாளர்களும் மிஷனரி பாதிரிமார்களும் தன்னலத்தை வளர்ப்பதற்காக நம் நாட்டிலும் நமது மதத்திலும் பிளவுண்டுபண்ணி பரப்பியிருக்கும் கொள்கையை நமது மதத்திற்காக உலக முழுவதும் அழியாத தொண்டு செய்த **விவேகானந்த சுவாமிகள்** பின்வருமாறு திட்டமாய்க் கண்டிருக்கிறார்.

"And what your European Pandits say about the Aryans swooping down from some foreign land, snatching away the lands of the aborigines and settling in India by exterminating them, are all pure nonsense, foolish talk! Strange, that our Indian Scholars too, say Amen to them; and all these monstrous lies are being taught to our boys!

புதுப்புதுப் போலி ஆராய்ச்சிகளில் மனம் சிதறுண்டு நெறி தப்பிப்போகாமல் பிளவைத் தரும் எவ்வித ஆராய்ச்சியையும் பொறுமையாக ஒருபுறத்திட்டு, நம் நெறி வழியே சென்று, நேர்மையுள் ஒன்றியிருப்பின், உரிய காலத்தில் உதயமாகும் குறியறிவினால் அப்பிளவை ஆராய்ச்சிகள் சிதறுண்டு ஒற்றுமை ஏற்படும்.

நெறிவழியே சென்று நேர்மையுள் ஒன்றித்
தறியிருந் தாற்போல் தம்மையுருத்திச்
சொறியினுந் தாக்கினுந் துண்ணென் [றுணராக்
குறியறி வாளர்க்குக் கூடலு மாமே.

திருமூலர்-திருமந்திரம்.

“வேதமோ டாகமம் மெய்யாம்
இறைவனூல்” (திருமூலர்-திருமந்திரம்)

என்பதே எல்லாப் பெரியோர்களின் துணிவு.

‘ஊழி தொறும் ஊழி தொறும் உயர்ந்த செல்வத் தோங்கிய நான்மறை அனைத்தும் தாங்கு நாவர்’—என திருமங்கை ஆழ்வாரும், ‘வேதமெல்லாம் முறையால் விரித்தோத நின்ற ஒருவனார்’’ என்று திருஞான சம்பந்த ஸ்வாமிகளும் திருவாய் மலர்ந்தருளியபடி அனாதியான வேதத்தை ஈசன் ஒவ்வொரு கல்பத்திலும் வெளிப்படுத்தி வருகின்றான் என்பதே எல்லாப் பெரியோர்களின் கருத்து.

மூதிதான *வேதமுறை முறையால் அமர்ந்
தநிகாதி வேதாந்த சித்தாந்தமாகவே
—திருமூலர்-திருமந்திரம் 2365

* வேதமானது ஜம் பூத்வீபம் அல்லது நாவலன் தீவு முதலிய ஏழு தீவுகள் அடங்கிய இப்பூவுலக முழுதும் பரந்திருந்து

இக்காலத்தில் பரதகண்டத்தில் மாத்திரம் வரப்போகும் நல்யுகங்களுக்கு விரை முதலாக நின்றிருக்கிறது என்பது ஆஸ்திக ஆராய்ச்சிக்காரர்களின் முடிவு. நம் பரதகண்டம் முழுவதும் அநேக வேதசாகைகள் இருப்பினும் நம் தமிழ் நாட்டில் உள்ள அளவு வேத சாகைகள் மற்றெந்நாட்டிலும் காணப்படவில்லை. சிவாலயங்களும் சைவ சாஸ்திரங்களும் அங்ஙனமே திருமாலின் வழிபாட்டிற்கு மூலஸ்தானமும் நம் தமிழ்நாடு. "அரனை மறவேல், திருமாலுக்கடிமை செய்" என்று இவ்விரண்டும் ஒன்றே என்று தமிழ்த் தெய்வமாம் ஒளவையார் திருவாய் மலர்ந்தருளி இருக்கிறாள். "பவிஷ்யந்தி நாராயண பராயணா: க்வசித்க்வசித் மஹார் ராஜ த்ரவிடேஷு ச பூரிச:II (சில சில இடங்களில் நாராயணனிடம் பக்தி உள்ளவர்கள், தோன்றுகிறார்கள்; திராவிட தேசத்தில் அதிகமாகத் தோன்றுகிறார்கள்.) என்று கோஷிக்கிறது- ஸ்ரீ பாகவதம் 11-5-38, 39- இவ்விதமே சிவ தத்வமும், விஷ்ணு தத்வமும் இவ்விரண்டும் ஒன்றிய பரமாத்ம தத்வத்திற்கும் மூலாதாரமாய் துலங்கும் வேதமும் நம் தமிழ் நாட்டிலேயே நிறைந்து நிற்கிறது. சிவ க்ஷேத்திரங்களையும் விஷ்ணு க்ஷேத்திரங்களையும் போல வேதத்திற்கும் க்ஷேத்திரமாக அடைந்தது ப்ரும்ஹவாஸ்து (ப்ரும்மம் என்றும் சொல்லுக்கு வேதம் என்ற பொருளும் உண்டு.)

நம் நாட்டில் இயற்றமிழ்க்குப் புத்துயிர் அளித்த கிறிஸ்தவமதத்தினராயினும் ஸமரச ஆத்மஞானியான வேத நாயகம்பிள்ளை அவர்கள் சென்ற நூற்றாண்டில் நம் தமிழ் நாட்டின் சிறப்பைப் பின்வருமாறு கூறுகிறார்:

"எண்ணிறந்த தேவாலயங்களும் பிரும்மாலயங்களும் அன்ன சத்திரங்களும் நீர் வளமும் நில வளமும் நாகரீகமும் ஆசார நியமங்களும் நிறைந்த இந்தத் தமிழ் நாடு மற்றைய நாடுகளிலும் விசேஷமென்றும் அப்படியே தமிழ் பாஷையும் ஸர்வோத்கிருஷ்டமான பாஷை என்றும் ஸகலரும் அங்கீகரிக்கிறார்கள். அகஸ்தியர் நாவிலே பிறந்து ஆரியத்தின் மடியிலே வளர்ந்து ஆந்திரம் முதலிய பாஷைகளின் தோழமை பெற்று சங்கப் புலவர்களுடைய நாவிலே சஞ்சரித்து வித்வான்களுடைய வாக்கிலே விளையாடி திராவிட தேசம் முழுதும் ஏகசக்ராதிபத்யம் செலுத்திவந்த தமிழரசியை இப்பொழுது இகழலாமா?

நம்மைப் பெற்றதும் தமிழ்; வளர்த்ததும் தமிழ்; நம்மை தாலாட்டித் தாலாட்டித் தூங்க வைத்ததும் தமிழ்; நம்முடைய மழலைச் சொல்லால் நமது தாய் தந்தையரை சந்தோஷிப்பிப்பதும் தமிழ்; நாம் குழந்தைப் பருவத்தில் பேச ஆரம்பித்தபோது முந்தி உச்சரித்ததும் தமிழ்; நம்முடைய அன்னையும் தந்தையும் நமக்குப் பாலோடு புகட்டினதும் தமிழ்.

இக்கருத்தைக் கொண்டதே நமது ஆசாரமுறையில் பழகாமலிருந்தும் தேசிய கவிகளின் முன்னணியில் நின்று தமிழ் அன்னையைத் துதிக்கும் அமரகவியான பாரதியாரின் இவ்வாக்கும்:—

## 'வேதம் நிறைந்த தமிழ்நாடு'

பௌழியம், தலவகாரம், சந்தோகம் தைத்தரீயம், காண்வம் எனப்படும் இவ்வளவு வேதசாகைகளும் நம் பரத கண்டத்தில் மற்றெந்நாட்டையும்விட நம் தமிழ் நாட்டிலேயே நிறைந்திருக்கின்றன.

ஸ்ரீ

# சிக்ஷா

[வடுவூர்-வீரவல்லி கனபாடி-தர்மக்ஞ நரசிம்மாசாரியார்.]

நமது வைதிக மதத்திற்கு ஆதாரமான வேதமானது அங்கீ. அங்கீ என்றால் ஒன்று அல்லது பல உறுப்புக்களையுடையது என்று பொருள். ஆத்மாவிற்கு தேஹீ (சரீரமுடையவன்) என்று பெயர் உண்டு. அது போல வேதமும். சரீரம் ஒழுங்காக அமையப் பெறாத மனிதன் தன் காரியங்களைச் செய்ய முடிவதில்லை. தவிர அதைக் கொண்டு அவனுக்கு அஸாதாரணமாக ஏதேனும் ஒரு பெயர் ஏற்பட்டுவிடுகிறது. ஒருவனுக்கு கண் அடியோடு தெரியாவிட்டால் பொட்டை என்றும், காது கேட்காவிட்டால் செவிடு என்றும், மூக்கு ஒழுங்காக இல்லாவிட்டால் மூக்கறையன் என்றும், அதே மூக்கு லக்ஷணமாக இல்லாவிட்டால் சப்பை மூக்கன் என்றும் குறிப்பிடுகிறார்கள். வேத புருஷனுக்கும் தனித்தனியாக ஆறு உறுப்புக்களிருக்கின்றன. அவையாவன—சிக்ஷா (1) வ்யாகரணம் (2) சந்தஸ் (3) நிருக்தம் (4) ஜ்யோதிஷம் (5) கல்பம் (6) என்பவை. வேதாங்கங்களைக் குறிக்கும் எல்லா க்ரந்தங்களும் "சிக்ஷாக்யாகரணம் சந்த:, சிக்ஷா கல்போ வ்யாகரணம்," என்று முதலில் சிக்ஷையை ப்ரதானமாகக் குறிப்பிடுகின்றன. அதற்குக் காரணம் தகுந்தபடி இருக்கவே இருக்கிறது. வேதத்தை பும்லிங்கத்தில் குறிப்பிட்டால் (வேத: = ஆம்நாய: என்று) வேத புருஷன் என்று சொல்லுவார்கள். அதே வேதத்தை (ச்ருதி: = த்ரயீ = என்று) ஸ்த்ரீலிங்கத்தில் குறிப்பிட்டால், வேதமாதா (மறைத்தாய்) என்று சொல்லுவார்கள். பகவதீ ச்ருதி: என்பதுபோன்ற மஹான்களின் ப்ரயோகங்களே இதற்கு உதாஹரணம். கீழே குறிப்பிட்டபடி, கண் முதலியது இல்லாவிட்டால் மனிதனுக்கு

எவ்வித குறை ஏற்படுகிறதோ அதே குறை வேதத்திற்கும் இவ்வங்கங்கள் இல்லாவிட்டால் உண்டு என்று கூடச் சொல்லும்படித் தோன்றுகிறது. ஒருபுமானை அல்லது ஸ்த்ரீயைப்பற்றிக் குறிப்பிடும் பொழுது "மூக்கும் முழியு மாக நன்றாக யிருக்கிறான்" என்று ஸாதாரண ஜனங்கள் கூடச் சொல்வதுண்டு. இதிலிருந்து மூக்கு சரியாக இல்லா விட்டால் அது ஓர் குறை என்பது தெளிவு. சாஸ்திரங்கள் சிக்ஷையை வேதத்திற்கு மூக்கு என்று கூறுகின்றன. சிக்ஷாக்ராணம் து வேதஸ்ய முகம் வ்யாகரணம் ஸ்ம்ருதம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் அங்கங்களில் முதன் முதலாக சிக்ஷையைக் குறிப்பிட்டதற்குக் காரணம் எடுத்த எடுப்பிலேயே வேதத்தின் அழகை நிர்ணயிப்ப தற்கு சிக்ஷ (மூக்கு) யைக் கொண்டு தான் செய்தார்கள் என்று சொல்லப்பட்டதாயிற்று. சிலருக்கு மூக்கு மேற் பார்வைக்கு மட்டில் அழகாயிருந்து உள்ளுக்குள் **பிப்பேர்** ஆக இருக்கும். அவர்கள் பேச்சு நொண நொண என்று கேட்கப்படுவதிலிருந்து இதை அறியலாம். இதே போல வேதத்திற்கு மூக்கு ஆக அமைந்த சிக்ஷைக்கு வெளி அமைப்பு உள் அமைப்பு ஆகிய இரண்டும் குறைவின் றிருக்கவேண்டும். சிக்ஷா சாஸ்திரம் முகஸ்தமாக எங்கு இருக்கிறதோ அங்கு வேத புருஷனுடைய மூக்கின் வெளி யழகு தென்படுகிறது. அதே யிடத்தில் சாஸ்திரத் துக்குச் சரியான அர்த்தமும் கூடியிருந்தால் வுடி மூக்கின் உள் அமைப்பும் பரிசுத்தமாக இருக்கிறதென்பதை அறியலாம். ஆக இவ்வளவில் சிக்ஷாப்ராதான்யம் நிரூபிக்கப்பட்டது. இவ்விஷயத்தில் வேத புருஷனுக்கே முக்யமான பங்கு உண்டென்று சொல்லலாம். வேதத்தி லேயே வ்யாகரணம் முதலியவற்றைப் பற்றிச் சொல்லி யிருக்கிறது. சிக்ஷையைப் பற்றியோவெனில் ஸர்வப்ர தானதமமான உபநிஷத்தில் சாந்தி பாடத்திற்கு அடுத்த படியாக ஆரம்பத்திலேயே "சிக்ஷாம் வ்யாக்யாஸ்யாம: வர்ணஸ்வர: மாத்ரா பலம் ஸாம ஸந்தாந:" என்று வேத புருஷன் தம்முடைய அங்கத்தைத் தாமே நிர்தேசிப்பதி லிருந்தும் சிக்ஷாப்ராதான்யம் தெளிவாகிறது. சிக்ஷை என்றால் தோஷமில்லாமல் விஷயத்தைப் பழக்கிவைத்தல் என்று உலகில் சொல்வதுண்டு. ஸங்கீத வித்வானின் **கானம்** பரிசுத்தமாக இருந்தால், நல்ல இடத்தில் சிக்ஷை என்று சொல்லுகிறோம். ஒருவனுடைய பழக்க

வழக்கங்கள் சரியாக இல்லாவிட்டால் அவனைப்பற்றி இவன் குருகுலத்தில் நன்கு சிக்ஷிக்கப்படவில்லைபோலும் என்றும் கூறுகிறோம். இதிலிருந்து உச்சாரணம், ஒழுக்கம் இவை யிரண்டையும் கற்பிப்பது சிக்ஷை என்பது புலனாகிறது. சிக்ஷா சாஸ்திரம் நமக்கு அவ்விதமே தான் உபகாரம் செய்கிறது. சிற்சில சிக்ஷைகள் உச்சாரண சிக்ஷணத்துடன் நின்றுவிட்டன. சில சிக்ஷைகள் ஒழுக்கத்தையும் சிக்ஷிக்கின்றன. இதை மேலே நிரூபிப்போம். சிக்ஷா சாஸ்திரமானது 18 சிக்ஷைகள் கொண்டது. அவற்றில் ப்ரதான சிக்ஷைகள். 9 உபசிக்ஷைகள் 9. வ்யாஸ சிக்ஷா (1) லக்ஷ்மீசிக்ஷா (2) பாரத்வாஜசிக்ஷா (3) ஆரண்ய சிக்ஷா (4) சம்புசிக்ஷா (5) ஆபிசலி சிக்ஷா (6) பாணினி சிக்ஷா (7) கௌஹளீயசிக்ஷா (8) வாஸிஷ்ட சிக்ஷா (9) என்கிற சிக்ஷைகள் ப்ரதான சிக்ஷைகள். யாக்ஞவல்க்யசிக்ஷா (1) ஆத்ரேயசிக்ஷா (2) நாரதீயசிக்ஷா (3) கௌதமசிக்ஷா (4) லோமச சிக்ஷா (5) கௌண்டின்யசிக்ஷா (6) ப்லாக்ஷாயணசிக்ஷா (7) அகஸ்திய சிக்ஷா (8) வ்யாளி சிக்ஷா (9) ஆக 9 உப சிக்ஷைகள். ப்ரதான சிக்ஷைகளுள் முதலாவது வ்யாஸசிக்ஷை. இது பெரும்பாலும் பதக்ரம ஜடா லக்ஷணங்களையும் ஸ்வரத்தைப்பற்றியும் எழுத்துக்களுக்கு ஸ்தானம், கரணம், ப்ரயத்னம், த்வனி, தேவதை, ஜாதி, அங்கபாவம், கணம், கிராமங்கள் இவைகளையும் கூறுகிறது. இது ப்ரதானமாக தைத்திரீய சாகையைப் பற்றியே அதிகம் நிரூபித்தாலும் த்வனி முதலிய விஷயங்கள் பொதுவானவை. இவ்விதமே மற்ற 8 சிக்ஷைகளும் ப்ரதானமாக ஒரு வேத பாகத்தைத் தழுவியும் பொதுவாகவும் சிக்ஷிக்கின்றன. உபசிக்ஷைகளில் முதலாவதான யாக்ஞவல்க்ய சிக்ஷையானது பெரும்பாலும் சுக்லயஜுர் வேதத்தை யுத்தேசித்து அவதரித்தது. இருந்தாலும் அதிலும் பொதுவான சிக்ஷைகள் பல அருமையானவை. இந்த சிக்ஷைக்குத் தனிச் சிறப்பு என்னவென்றால் இது அத்யேதாக்களுக்கு ஒழுக்கத்தையும் நன்கு சிக்ஷிப்பதுதான். இவ்விதமே நாரதசிக்ஷை ஸாம வேதத்திற்காக அவதரித்ததென்றாலும் பொதுப்படையான சிக்ஷணங்களும் பல அதில் உள. பொதுவாக சிக்ஷைகளின் நோக்கம் வேதத்தைக் காப்பாற்றுவதே, நினைத்தபடி ஒருஸ்வரத்தையோ எழுத்தையோ மாற்றவோ சேர்க்கவோ முடியாதபடி வேதத்திற்கு பலம் கட்டி

அமைந்துள்ளன. தவறாக உச்சரித்து ஏற்படும் அனர்த்தத்தைப்போக்கி சரியான உச்சாரணத்தின் மூலம் ஸர்வாபீஷ்டஸித்தியையும் நாம் அடையும்படியாக சிக்ஷணத்தைப்போதிக்கும் சிக்ஷைகள் நம் வைதிக மதத்திற்கு ஓர் பொக்கிஷமென்பது ஸாரம்.

காலை 8-30 மணி முதல் 9-30 மணி வரை அண்ணாமலை யூனிவர்சிடி ஆசிரியர் ஸ்ரீ K. A. சிவராம கிருஷ்ண சாஸ்திரிகள் அவர்களால் வேதத்தின் இரண்டாவது அங்கமான வ்யாகரணத்தை (சொல் இலக்கணத்தை)ப்பற்றி ஒரு உபந்நியாஸம் செய்யப்பட்டது.

ஸ்ரீ

# வ்யாகரணம்

K. A. சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள்
அண்ணாமலை சர்வகலாசாலை

ஸுகம் வாஞ்சந்தி ஸர்வேபி தச்ச தர்மஸமுத்பவம்।
தஸ்மாத் தர்ம: ஸதா கார்ய: ஸர்வ வர்ணை: ப்ரயத்நத:॥

எல்லோரும் சுகத்தை விரும்புகிறார்கள் என்பது வெளிப்படை. அந்த சுகம் தர்மம் காரணமாக உண்டாவதால் எல்லாவருணத்தாரும் பெருமுயற்சியோடு தர்மத்தை எப்பொழுதும் செய்யவேண்டும்.

தர்மத்தைச் செய்யவேண்டும் என்றால் எது தர்மம், எது அதர்மம் என்று நன்கு அறிந்த பிறகே அதைச் செய்ய முடியும். அதை அறிவது எப்படி? பிரத்யக்ஷம் என்ற நம்புலன்களால் அறிய முடியுமா? அல்லது அநுமானம் என்ற முறையாலாகுமா?

இதற்கு நமது சாஸ்திரங்களில் முடிவாகக் கூறப்படும் விடை 'முடியாது' என்பதே. ஆகவே நாம் கண்கூடாகவோ அல்லது வேறு ஏதாவது பொருளை ஆதாரமாகக் கொண்டோ இது தர்மம் என்று உணரமுடியாது. பின் எவ்வாறு அறிந்துகொள்வது?

மீமாம்ஸா ஸூத்திரங்களைச் செய்த பகவான் ஜைமினிமஹரிஷி சொல்வதாவது, வேதத்தால் எதைச் செய்யவேண்டும் என்று அறிகிறோமோ அதுதான் தர்மம் என்பதே. இதனால் தர்மம் என்பது வேதம் ஆகிய சப்தப்பிரமாணத்தாலல்லது, வேறு எந்த வகையிலும்

அறிய முடியாதது என்பது நமது சாஸ்திரங்களின் ஒரு மனதான கொள்கை. மனு, யாக்ஞவல்கியர் முதலிய மஹரிஷிகளால் இயற்றப்பட்ட தர்ம சாஸ்திரங்கள் வாயிலாக தர்மத்தை அறியலாம்; ஆயினும், அவைகள் ஒரு குறிப்பிட்ட அல்லது தனிப்பட்ட மனிதரால் அல்லது அபூர்வ மனிதரால் எழுதப்பட்டனவாதலாலும் அவைகளை எழுதுவதற்கு முன்பே அவர்கள் தர்மத்தை வேறு வகையில் அறிந்தே எழுதியிருக்க வேண்டியது அவசியமாதலாலும் அவைகளுக்கு ஆதாரம் ஒன்று தேடவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆகவே எல்லா தர்மசாஸ்திரங்களுக்கும் அடிப்படையானதும், இயற்றியவர்களுடைய குணதோஷங்களுக்கு இலக்காகாததுமான ஒரு மூலப் பிரமாணம் தர்மத்திற்கு ஏதுவாகலாம் என்று ஆராய்ந்தோமானால் இன்று வரை எல்லா ஹிந்து மதத்தினராலும் வேற்றுமையின்றி பிரமாணமாக ஒப்புக் கொள்ளப்பட்டு வந்ததும் ஹிந்து மத நூல்கள் எல்லாவற்றிலும் மூலாதாரமாகக் குறிக்கப்பட்டதும், எவ்வளவு முயன்றும் இன்ன காலத்தில் இன்ன ஒரு இனத்தாரால் அல்லது தனிப்பட்ட ஒருவரால் செய்யப்பட்டது என்று நிச்சயமாகக் கூற இயலாமலிருப்பதும் நமது வேதமேயாகும்.

இவ்வாறு மானிடப் பிறவியில் வேறுபாடின்றி எல்லா வகுப்பினரும் அவரவர் விருப்பப்படி சிற்றின்பமோ அல்லது பேரின்பமோ அடைய வேண்டி அவரவர்களுக்குரிய தர்மங்களைப் போதிக்கும் வேதம் உலகப் படைப்பை மேற்கொண்ட கடவுளாலேயே இயற்றப்பட்டது உலகம் படைக்கப்படும் முன்னமேயே என்ற சிலரும், உலகம் ஆக்கப்பட்டாலும் அழிக்கப்பட்டாலும், தான் ஆகாமலும் அழியாமலும், கடவுள்போன்று எப்பொழுதுமே அழியாப் பொருளாக இருப்பது வேதம் என்று மற்றவரும் கொண்டனர்.

இவ்வாறு மிகப் பெருமையும் பழமையும் கொண்டதாயிருத்தல்பற்றியே நம்முன்னோர்கள் இயற்றிய சாஸ்திரங்கள் புராணங்கள் முதலிய எல்லா நூல்களும் வேதத்தைத் தழுவியே நிற்கின்றன. வேதக் கொள்கைக்குப் புறம்பானதான எந்தச் சமயமும் நமது பாரதபூமியில் நிலை பெறவில்லை என்பதும் எல்லோரும் உணர்ந்த உண்மை.

எந்த நூலும் இயற்றிய சிறிது காலத்திலேயே பல் வேறு திருத்தங்களுக்கும், கூடுதல் குறைவுகளுக்கும், இலக்காவதை நாம் அறிவோம். ராமாயணம், பாரதம் முதலிய மிகப் பழைய நூல்களிலுள்ள பலதரப்பட்ட பாடங்கள் இதை உறுதி செய்கின்றன. இவ்வாறே வேதங்களில், திருத்தம், கூடுதல், குறைதல் தோன்றக் கூடுமல்லவா? அவ்வாறாயின் தர்மம் என்பது எப் பொழுதும் ஒரே விதமாக இராமல் மாறுபாடு அடையக் கூடும். வேதத்தின் முக்கியக் கருத்தாகிய தர்மம் உருச்சிதைந்தால் அதைக் கையாண்டு சுகம் பெறுவது எங்ஙனம்? மேலும், செய்கை மட்டும் தர்மம் என்றில்லாது வேதத்தின் சொற்களும் கூடச் செய்கைகளோடு தர்மங் களாக இயங்குகின்றனவாதலால் மந்திரங்கள் என்ற சொற்களும் யாகம், ஹோமம் முதலிய செய்கைகளும் மாறுபாடின்றி ஆதிகாலம் முதல் அல்லது காலவரை யரையின்றி ஒரே உருவத்தில் நமக்கும் நம் பிற்காலத்தி னருக்கும் கிட்டவேண்டுமே என்ற கருத்துக்கொண்டு, அரசர்களுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும் மெய்க் காவலர்கள் போன்று, வேதம் என்ற அரசுக்கு மெய்காப் பினர்களாக ஆறு அங்கங்கள் அல்லது உதவிகள் அமைந் துள்ளன. அவைவருமாறு—

(1) சிக்ஷை. (2) வ்யாகரணம் (3) சந்தஸ் (4) நிருக்தம். (5) ஜ்யோதிஷம். (6) கல்பம்.

இவைகளை நன்கு பயின்று வேதத்தின் உண்மையான அமைப்பையும் அதன் பொருளையும் அறியவேண்டும், இதில் யாதேனும் ஒன்றை யறியாவிட்டாலும் வேதத்தின் உண்மையை அறிவது இயலாது என்பது நம் முன்னோர்கள் துணிவு.

இனி இந்த ஆறு அங்கங்களும் எந்த எந்த முறையில் வேதங்களைப் பாதுகாக்கின்றன என்பதை ஆராய்வோம்.

ஏனைய நூல்களைப்போல் கருத்தை முக்கியமாகக் கொண்டு சொற்களை அதற்கேற்ப மாற்றியமைப்பது பொதுவாக வேதம் என்று அவரவர்கள் கொண்டாடும் 'பைபிள், குரான்' முதலிய வேறு சமய நூல்களிலே அனுமதிக்கப் படுவதில்லை. காரணம் கருத்து மட்டும்

முக்கியமாகக் கருதப்படாமல் சொல்லுக்கும் பெருமை கொடுத்தலே. அவ்வாறிருக்க நமது வேதங்களில் சொற்களுக்கு ஏற்பட்டிருக்கும் பெருமை எவ்வாறு குறையும்? எனவே வேதங்களில் சொல்லும் பொருளும் அல்லது கருத்தும் ஒருங்கே முக்கியமாகின்றன. நாம் முற்கூறிய 6 அங்கங்களில் முதல் மூன்றும் சொற்குற்றத்தைத் தவிர்க்கவே அமைந்தன.

முதலாவது சிக்ஷை என்பது, சொல்லின் ஆதாரமான எழுத்துக்களின், பிறப்பு (உத்பத்தி), அதற்கு நமது முகத்தின் எந்தெந்த பாகங்கள் எவ்வாறு இயங்கி அவைகளை ஒலிக்கச் செய்கின்றன, ஒவ்வொரு எழுத்தை ஒலிக்கச் செய்யும் கால அளவு, அதற்கு உரிய உதாத்தம், அனுதாத்தம், சுவரிதம் ஆகிய மூன்று ஸ்வரங்கள், மற்றும் அவைகளைச் சொல்லவேண்டிய முறைகள் ஆவன போன்ற பல விஷயங்களை விளக்கும் நூல்.

இதன் குறிப்புகள் சுருக்கமாக வேதத்திலேயே காணப்படுகின்றன. தைத்திரீயோபநிஷத் சிக்ஷாவல்லீ என்ற பாகத்தில் முதலாவது அனுவாகம் 'சிக்ஷையை விளக்குவோம். வர்ணம், ஸ்வரம், மாத்திரை, பலம், ஸாமம் அதாவது சமமான உச்சரிப்பு, ஸந்தானம் தொடர்பு, இவைகள் சிக்ஷை எனப்படும்' என்று கூறப்பட்டுள்ளது.

மேற்கூறிய வர்ணம் முதலியவைகளை விரிவாக எடுத்துக்கூறும் சிக்ஷை என்ற நூல் பல மஹரிஷிகளால் இயற்றப்பட்டுள்ளன. 1. பாணிநீய சிக்ஷை, 2 வ்யாஸ சிக்ஷை 3 நாரத சிக்ஷை போன்றன.

இவைகளில் 'பாணிநீய சிக்ஷை' என்பது குறிப்பிட்ட ஒரு வேதத்திற்காகவோ அல்லது ஒரு சாகைக்கோ உரியதாக இல்லாமல் எல்லாவற்றிற்கும் பொதுவாக அமைந்தது. 'வ்யாஸ சிக்ஷை' 'நாரத சிக்ஷை' போன்றவைகள் யஜுர் வேதம், ஸாம வேதம் முதலியவைகளையே பிரதானமாகக்கொண்டு அமைந்துள்ளன.

பாணிநீய சிக்ஷையில் கூறப்பட்ட விஷயங்கள் வருமாறு.

1. எழுத்துக்களின் எண்ணிக்கை (63 அல்லது 64) அதன் விபரம்.

2. பொதுவாக எழுத்துக்கள் உண்டாவதன் வகை.

3. ஒவ்வொரு எழுத்தும் ஐந்து பிரிவுகொண்டது 1 'ஸ்வரம், 2 காலம், 3 ஸ்தானம் 4 ப்ரயத்னம் 5 அனுப்ரதானம். அவைகளின் விரிவுரை.

4. "பெண் புலி எவ்வாறு தன் குட்டிகளைப் பல்லால் கடிபடாமலும், கீழே விழாமலுமிருக்கும்படி தூக்கிச் செல்லுமோ அவ்வாறு அதிகம் அழுத்தாமலும், எழுத்துக்கள் தெளிவாகத் தெரியும் முறையிலும் உசசரிக்கவேண்டும்" என்பன போன்ற உச்சாரண விதிகள்.

5. உச்சாரணத்தில் குறைபாடுகள், மேம்பாடுகள்.

6. எந்த எந்த வேளையில் எந்த முறையில் அதாவது மெதுவாக அல்லது இரைந்து உச்சரிக்கவேண்டும் என்பது.

7. ஆறு அங்கங்களில் 'சந்தஸ்' என்பது வேதத்தின் கால் ஆகும். கல்பம், கை; ஜ்யோதிஷம் கண்கள்; நிருக்தம் என்பது காது. சிக்ஷை, மூக்கு. வ்யாகரணம், முகம். ஆகவே முழு உருவத்துடன் வேதத்தை அறியவிரும்பும் ஒருவன் இவ்வாறு அங்கங்களையும் படிக்கவேண்டும். (இலலாவிடில் குருடர்கள் யானையைக் கண்டதுபோல் ஆகும்)

8. கைவிரல்களில் எந்த ரேகைகளில் உதாத்தம் முதலிய சுவரங்களைக் குறித்துக் காட்டவேண்டும் என்ற விபரம்.

9. நல்ல முறையில் நல்லாசிரியனிடமிருந்து பயில வேண்டும். கெட்டவழியில் குறைபாடுள்ளவர்களிடமிருந்து பயிலக்கூடாது என்பன போன்ற விஷயங்கள்.

10. பாணினியின் அறிவுச் சிறப்பு முதலியன.

மற்ற சிக்ஷைகளும் இவ்வாறே தனிச்சிறப்புடன் எழுதப்பட்டுள்ளன.

எழுத்தைப் பற்றின முறைகளை யறிந்தோம். இனி பல எழுத்துக்களாலானது 'பதம்' அல்லது தனிச்சொல். இதைப்பற்றிக் கூறும் "வ்யாகரணம்" இரண்டாவது அங்கம் இரண்டாவது இடம் பெற்றது பொருத்தமே யாகும். 'வ்யாகரணம்' என்பது ஒரு பதத்தில் உள்ள 'பகுதி' 'விகுதி' அல்லது 'பிரகிருதி' 'பிரத்யயம்' என்ற பிரிவுகளை முக்கியமாக விளக்கும் நூல். இதனாலேயே இதற்கு 'பதசாஸ்திரம்' என்ற மற்றொரு பெயர் வந்தது,

வ்யாகரணத்தைப் பற்றிய குறிப்பு யஜுர் வேதம் (தைத்திரீயம்) 6-வது காண்டம் 4-வது பிரச்னம் 7-வது அனுவாகத்தில் காணப்படுகிறது.

"தேவர்கள் இந்திரனை 'வ்யாகரணம்' இயற்ற வேண்டினர். அதன்படி இந்திரன் வ்யாகரணம் செய்தார்" என்பது.

இந்த வ்யாகரணம் என்ற அங்கத்தை இயற்றிய வர்கள் ஆதியில் எண்மர் என

இந்ர சந்ர : காசக்ருத்ஸ்நாபிசலீசாகடாயந :।
பாணிந்யமர ஜைநேந்ரா ஜயந்த்யஷ்டா திசாப்திகா :॥
(வோபதேவ :—முக்தபோதே)

என்னும் சுலோகத்தால் அறிகிறோம்.

மேலும் 'வோபதேவ வ்யாகரணம், ஸாரஸ்வதவ்யா கரணம், ஜௌமாரவ்யா கரணம். காதந்த்ர வ்யாகரணம், ஸௌபத்ம வ்யாகரணம், என்பனபோன்ற பலவ்யாகர ணங்கள் இப்பொழுதும் வழக்கில் இருக்கின்றன.

ஆயினும் அவைகளில் பல, வேத சம்பந்தமான மொழிகளுக்கு வேண்டிய முறைகளை விலக்கி 'பாஷை' களுக்காகவே யமைந்தபடியால் வேதாங்கமெனக் கருதப்பட வில்லை. ஆகவே அவைகள் நம் கவனத்திற் குரியனவாகா,

'பாணினீய வ்யாகரணம்' என்பது வேதவாக்கியங்கள், பாஷை இரண்டிற்கும் இலக்கணமாக அமைந்திருப்பதால் இதுவே வேதாங்கமாகக் கருதப்பட்டு நம் நாட்டில் தொன்றுதொட்டுப் பயின்று வரப்படுகிறது. இதை

இயற்றியவர் பாணினி மஹரிஷி. இவர் ஈசனருள் பெற்று இதை இயற்றியுள்ளார். இந்நூல் 8 அத்யாயங்கள் கொண்டிருப்பதால் 'அஷ்டாத்யாயீ' எனப்பெயர் பெற்றது.

இதன் உரையாக' 'வார்த்திகம்' என காத்யாயன மஹரிஷியாலும் 'மஹாபாஷ்யம்' என பதஞ்சலி முனிவராலும் சிறந்த இருநூல்கள் இயற்றப்பட்டுள்ளன.

அவைகளில் 'மஹா பாஷ்யம்' என்பதுதான் எல்லா இலக்கணநூல்களுக்கும் ஆதாரமாக விளங்குவது.

அம்மஹா பாஷ்யத்தில் பதஞ்சலி முனிவர் வ்யாகரணம் பயில்வதன் பயன்கள் யாவை என்று கூறுகிறார்:—

1. ரக்ஷா (வேதங்களின் பாதுகாப்பு) 2 ஊஹம் 3 ஆகமம் 4 லகு 5 சந்தேகமின்மை, இவ்வைந்தும் வ்யாகரணத்தின் (பயிற்சியின்) பயன் எனக் கருத்து.

இவைகள் மட்டுமின்றி மற்றும் பயன்கள் உண்டெனவும் விளக்கியுள்ளார்.

(1) வழக்கில் உள்ள ஒரு சொல் வேதத்தில் வேறு விதமாகக் காணப்படுகிறது. அதை வ்யாகரணம் அறியாத ஒருவன் தவறு என்று கருதித்திருத்த முயலுவான். வ்யாகரணம் அறிந்தவனோ வெனில் தனிப்பட்ட விதிப்படி அது சரியான சொல்லென்றே தெரிந்து வேதத்தை அறிவிலிகளின் திருத்தத்திலிருந்து காப்பாற்றுகிறான்.

(2) ஒரு மந்த்ரம் குறிப்பிட்ட ஒரு தெய்வத்தைக் குறிப்பதாக வேதத்தில் காண்கிறோம். ஆனால் அதே மந்த்ரத்தை மற்றொரு தெய்வத்தை வழிபடுவதில் உபயோகிக்கும்படி வேதமே கட்டளை யிடுகிறது. அப்பொழுது சில அவசியமான மாறுதலை அந்தச் சந்தர்ப்பத்தில் மட்டும் செய்ய வேண்டியதாகிறது. அம்மாறுதலை முறை தவறிச் செய்தலால் நாம் செய்யும் முழு யாகமும் பயனற்றதாகிவிடும். ஆதலால் முறையோடு அவ்வப்பொழுது சந்தர்ப்பத்திற்கேற்ப அமைத்துக் கொள்ளும் வேற்றுமைகளை நன்குணர வ்யாகரணத்தின் உதவி இன்றியமையாதது. (இதுவே ஊஹம்.)

**3.** எளிதில் சரியான சொற்களை அறிந்து கொள்ள வ்யாகரணம் இன்றியமையாதது. அதற்காக வ்யாகரணம் பயில்வது வேண்டும்.

**4.** 'வ்யாகரணம் பயிலவேண்டும், எதற்காக வென்று பயனைக் கருதவே கூடாது, இது கடமை' என்று வேதம் கூறுவதாலும் வ்யாகரணம் பயிலவேண்டும்.

**5.** ஒரு சொல் இரண்டு பொருளைக் குறிக்கும் தன்மையுள்ளது. இரண்டில் ஒன்றை உறுதி செய்து கொள்ளாது செயலளவில் நாம் அதைக் கொண்டுவர முடியாது. அப்பொழுது இதுதான் பொருள் என்று உறுதிகொள்வது வ்யாகரணத்தின் உதவியால். இலக்கணப் பயிற்சி இல்லாதவன் இதில் வகையறியாது திகைக்க வேண்டும். ஆதலால்வ்யாகரணப்பயிற்சி செய்யவேண்டும்.

இவ்வாறு பயன்கள் பல கூறப்பட்டிருப்பினும் முதன்மையாகக் கூறப்பட்டது ரக்ஷை—காப்பு. ஆகவே வ்யாகரணம் வேதத்தின் மெய்காப்பாளன் என்பது தெளிவு.

இதன் பிறகு மூன்றுவது 'சந்தஸ்'. அதாவது 'சந்தம் அல்லது விருத்தம்' இதைப்பற்றி விரிவுரை கூறும் நூல்.

'பதம்' என்ற சொற்கள் பல சேர்ந்து ஒரு சந்தம் அல்லது வ்ருத்தம் ஆவதால் பதநூலாகிய வ்யாகரணத் திற்குப் பிறகு இது இடம் பெற்றது. ஒரு சந்தஸ்ஸில் இவ்வளவு எழுத்துக்கள் இன்ன முறையில் அமைய வேண்டும் என்ற விதியிருப்பது, அந்த விருத்தமுள்ள வாக்கியத்தை எளிதில் மாற்ற இயலாமல் ஓரளவு தடை யாவது உண்மை. மேலும், சொல்லின் சிறப்பு வேதத்தின் தனிப்பட்ட பெருமையென்று முன்னமேயே கூறி யுள்ளோம். ஆகவே ஒரு மந்திரத்தை அதன் முழு விபரங்களையும், அதாவது எழுத்து, பதம், சந்தஸ், முதலிய பல நுட்பங்களையுமறிந்தே உபயோகிக்கவேண்டும் என்பது

மந்த்ராணாம் ப்ராம்மணார்ஷேய சந்தோதைவத வித்யா
ஜநாத்யாபநாப்யாம் ச்ரேயோதிகச்சதி।
ஏதாப்யாமே வாநேவம் விதோயாதயாமாநி
சந்தாம்ஸி பவந்தி।
ஸ்தாணும் வர்சதி கர்தே வா பாத்யதே ப்ரமீயதேவா
பாபீயாந் பவதீதி விக்ஞாயதே।
— (காத்யாந: ஸர்வாநுக்ரமணி)

என்ற மேற்குறித்த வாக்யத்தால் விளங்கும். அப்படி யறியாது உபயோகிப்பவன் பலதீங்குகளை யெய்துவான் என்பதும் இங்கு குறிக்கப்பட்டது.

மேலும் 'சந்தஸ்' என்பதன் பொருள் மறைப்பது என்று.

தேவர்கள் சந்தஸ்களால் மறைக்கப்பட்டதால் யமன் இறப்பிலிருந்து மீண்டனர். இவ்வாறே இக்காலத்திலும் சந்தஸ்ஸின் உண்மை யறிந்து அதனால் மூடப்பட்டவன் இறப்பை விலக்கிவிடுகிறான்.

யஸ்மாச்ச சாதிதாதேவா சந்தோபிர் ம்ருத்யு பீரவ:।
சந்தஸாம்தேந சந்தஸ்த்வம் க்யாயதே வேதவாதிபி:॥

தைத்ரீய ஸம்ஹிதை 5வது காண்டம் 6வது பிரச்னம் 6-வது அநுவாகத்தில் இந்தக் கருத்து காணப்படுகிறது.

இவ்வாறு 'சந்தஸ்' என்பதன் பிரிவுகளையும், அதன் இலக்கணங்களையும் விரிவாகக் கூறும் நூல்களை 'சந்தஸ் சாஸ்திரம்' என்பர்.

இந்த நூலை முதலாவதாக இயற்றியவர் 'பிங்கள நாகர்' என்பர். இது மிகச் சிறியநூலே. இதில் வேதங்களில் வழங்கப்படும் சந்தஸ்களின் இலக்கணங்களோடு மட்டுமின்றி ஏனைய காவ்யங்களில் உள்ள பலவகைப் பெயர்கள் அமைந்த விருத்தங்களுக்கும் சுருக்கமான சூத்திர முறையிலான இலக்கணங்கள் கூறப்பட்டுள்ளன. இதைப் பின்பற்றியே, 'உபநிதான சூத்ரம்' என்றும் ஒரு நூல் இயற்றப்பட்டுள்ளது. ஆசிரியர் யார் என்பது விளங்க வில்லை. இது சாமவேத சம்பந்தமான விபரங்களையும்

விளக்குவதால் இது சாம வேதத்திற் குரியது என்று கருதுகின்றனர். காத்யாயன மஹரிஷியால் செய்யப்பட்ட 'ஸர்வாநு க்ரமணீ', என்ற கிரந்தத்திலும் 'சந்தஸ்' என்ற பகுதி இருக்கிறது. இவைகள் எல்லாம் பொதுவாகவே சந்தஸ்ஸை விளக்குவதால் பொது நூல்களாகவே கொள்ளலாம்.

'சந்தஸ்' என்பது முறையே 1. காயத்ரீ 2. உஷ்ணிக் 3. அனுஷ்டுப் 4. பிருகதீ 5. பங்க்தி 6. த்ருஷ்டுப் 7. ஜகதீ 8. அதிஜகதீ 9. சக்வரீ 10. அதிசக்வரீ 11. அஷ்டி 12. அத்யஷ்டி 13. த்ருதி 14. அதித்ருதி என 14 வகைகொண்டது.

இவைகள் 24 முதல் நான்கு நான்கு எழுத்துக்கள் கூட்டியதால் உள்ள வேற்றுமை கொண்டவை. உதாஹரணமாக காயத்ரீ 24, உஷ்ணிக் 28, அனுஷ்டுப் 32, பிருஹதீ 36 இவ்வாறு 76 எழுத்துக்கள் வரை முறையே அதித்ருதி வரையுள்ள சந்தஸ்கள்.

இவைகளில் எழுத்துக்கள் குறைந்தால் 'நிச்ருத்' என்றும், அதிகமானுல் 'புரிக்' என்றும் வழங்கப்படும்.

ஒரு எழுத்து முதல் ஒவ்வொரு எழுத்தாக அதிகப் படுத்தி 26 வகைகள் 'சந்தஸ்' என்றும் சிலர் கருது கின்றனர்.

ஆரப்யேகாக்ஷராத் பாதாதேகைகாக்ஷரவர்திதை:।
பதைருக்தாதி ஸம்ஞம் ஸ்யாச் சந்த: ஷட்விம்சதிம்கதம்॥
(சந்தோமஞ்சரீ)

இவ்வாறு சிக்ஷா, வ்யாகரணம், சந்தஸ், ஆகிய மூன்று அங்கங்கள் வேதத்தின் சப்தரூபமாகிய ஒரு பகுதியைப் பாதுகாக்கின்றன. இனி பின் மூன்றும் அர்த்த ரூபமாகிய மற்றொரு பாகத்தைக் காத்து நிற்கின்றன என்பது வேறு சொற்பொழிவுகளால் விளங்கும்.

ருஷிசந்தோதைவதாதி ப்ராம்மணார்த்தம் ஸ்வராத்யபி।
அவிதித்வாப்ரயுஞ்ஜாநோ மந்த்ர கண்டக உச்யதே॥

காலை 9-30 மணி முதல் 10-30 வரையில் மன்னார்குடி ஸ்ரீ ராமநாத தீக்ஷிதர் வேதத்தின் மூன்றாவது அங்கமான சந்தஸ் (மந்திரங்களின் எழுத்துக்கணக்கு) என்பதைக் குறித்து ஒரு உபந்யாசம் நிகழ்த்தினார்.

ஸ்ரீ

# சந்தஸ்

## மன்னார்குடி ஸ்ரீராமநாத தீக்ஷிதர்

*சந்த்ர சேகர யோகீந்திரம் நமஸ்க்ருத்ய ததாஜ்யா*
*சந்தஸாம் ராசி மதுனா விப்ரஜ்ஞேமி யதாமதி*

நமது ஸநாதனமதத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் அவரவர்களுக்குத் தக்கவாறு தர்மத்தை போதித்து ஸம்ஸார துக்கத்திலிருந்து மோக்ஷமாகிய ஆனந்தத்தை யடைவதற்கு உபாயத்தைக் கூறுவது வேதம். அந்த வேதம் அனாதியாயுள்ளது. ப்ரளய காலத்தில் பகவானிடம் ஸூக்ஷ்ம ரூபமாக இருந்து ஸ்ருஷ்டிகாலத்தில் மூச்சுக் காற்றுப்போல் கொஞ்சமும் முயற்சியின்றி வெளியாகிறது.

உலகத்தைப் படைக்க விரும்பிய பகவான் முதலில் ப்ரும்ம தேவனைப் படைத்து அவருக்கு வேதம் முழுவதும் நன்கு ப்ரகாசிக்கும்படி அனுக்ரஹித்தார். பிரும்ம தேவனும் ஒரு சில்பியானவன் விக்ரஹத்தை வார்ப்பதற்கு முன் அதைப்பற்றிய விவரங்களை சில்ப சாஸ்திரமூல மறிவதுபோல் வேத மூலமாகவே டலக்ஷிதமாகப் பிரிந்துள்ள இவ்வுலகை நன்கறிந்து படைத்தார். அந்த வேதமானது எக்காலத்திலும் எந்த இடத்திலும் ஒரே ரூபமாகவே விளங்குகிறது. நம் அனுபவத்திலும் இராமாயணம் முதலிய சில க்ரந்தங்களில் ப்ரக்ஷிப்தம் (சேர்க்கப்பட்டது) என்று சில பாகங்களைச் சொல்வதுபோல் வேதத்தில் சொல்வதில்லை.

ஆராய்ச்சிக்காரர்களும் எதற்கும் ஒரு காலத்தைச் சொல்லவேண்டுமென்று முயன்றதால் வேதத்திற்கும் அவ்விதம் சொன்னபோதிலும் உண்டான கொஞ்ச

நாட்களுக்குப் பிறகு சில பாகம் சேர்க்கப் பட்டனவென்று சொல்லவில்லை. ஒரு காலத்தில் தர்மத்தை போதித்தது மற்றொரு காலத்தில் அதர்மத்தை போதிக்கின்றதென்றும் சொல்லவில்லை. ஆகையினால் ஒரே ரூபமாக எப்பொழுதும் இருக்கிறதென்று எல்லோரும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். அந்த வேதத்தை ச்ருதி என்றும் சொல்வதுண்டு. நாம் குருவினிடமிருந்து கேட்டறிவது போல் அவரும் தன் குருவிடமிருந்தும் இம்மாதிரி பிரும்மதேவனும் பகவானிடமிருந்து கேட்டபடியால் அதற்கு அப்பெயர் வழங்கப் பட்டது. தற்காலத்திலுள்ள கனம், வர்ணக்ரமம் முதலியவற்றை நன்கு அப்யஸித்த கனபாடிகளில் சிலர் கையெழுத்துப் போடத் தெரியாமல் கீரல் போடுகிறவர்களு முண்டு. இதனாலும் பரம்பரையாக எந்த தேசத்திலும் வேதத்தை ஒரே விதமாகச் சொல்லுகிறார்களென்று தெரிகிறது. அந்த வேதத்தை அக்ஷரஸ்வரமாத்திரைகளில் கொஞ்சமும் மாறுதலின்றி பாராயணம் முதலியது செய்தால் ச்ரேயஸ் ஏற்படுகிறது. கொஞ்சமும் மாறுதலேற்பட்டால் விபரீதமான பயனை யளிக்கின்றது. யாகங்களில் அவ்விதம் ஏற்பட்டால் யாகம் செய்பவனுடைய ஆயுள், ஸந்ததி, பசு, முதலியவற்றை அழிக்கின்றது. ஆகையினால் அவ்விதம் ஏற்படாமலிருக்க, சிக்ஷை, வ்யாகரணம் சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம். கல்பம் என்று ஆறு அங்கங்கள் ஏற்பட்டுள்ளன.

வேதத்தை 'வேத புருஷன், என்று சொல்வதுண்டு. புருஷனென்றால் கை கால் மூக்கு, கண், காது வாய் முதலிய அங்கங்கள் இருக்க வேண்டுமல்லவா? அவைகள் தான் முன் கூறிய சிக்ஷை முதலிய அங்கங்கள். அங்கங்கள் அங்கியான புருஷனுக்கு உபகாரம் செய்து அவனைக் காப்பதுபோல் இவைகள் வேத புருஷனை எவ்விதம் காப்பாற்றுகிறதென்றால் அதைப்பற்றி விவரிப்போம். வேத புருஷனுக்கு 1 சந்தஸ். கால்; இது மந்திரங்களின் அக்ஷரபரிமாணத்தை நிர்ணயத்துக் கொடுக்கிறது. 2. கல்பம். கைகள்; இது ஒவ்வொரு மந்திரங்களுக்கும் யாகத்தில் உபயோகத்தைச் சொல்லுகிறது. 3. ஜ்யோதிஷம். கண்; இது வேதத்தில் கூறப்பட்ட கர்மாக்களுக்கு காலத்தையும் அதை அனுஷ்டிப்பவனுடைய ஆயுள் முதலிய பலன்களையும் கூறுகிறது.

4. நிருக்தம். காது. அபூர்வமான பதங்களின் அர்த்தத்தைக் கூறுகிறது. 5. சிக்ஷா மூக்கு, உச்சரிக்க வேண்டிய முறையை நன்கு கூறுகின்றது. 6, வ்யாகரணம் வாய். அக்ஷரம் ஸ்வரம் இவைகளைப் பற்றி விவரிக்கின்றது. இவ்விதம் ஒவ்வொரு உபகாரத்தைச் செய்து எப்பொழுதும் அழியாமலும் மாறுமலுமிருக்கும்படி காப்பாற்றுகின்றன.

இவ்விதமுள்ள வேதாங்கங்களை நன்முகத் தெரிந்துகொண்டு மூலாத்யயனம் செய்தால் வேத புருஷன் பூர்ண ரூபியாக அனுக்ரஹித்து உலகத்தைச் செழிக்கச் செய்வார். கருணைமூர்த்தியான ஸ்ரீமதாசார்யாளின் உள்ளத்தில் இவ்விதம் தோன்றி அங்கங்களை நாம் நன்கு அறிய முடிய ஸந்தர்ப்பம் கிடைத்ததே உலகக்ஷேமத்திற்கு அறிகுறி.

இனி நாம் எடுத்துக்கொண்ட சந்தஸ் என்பதைப் பற்றி விவரிப்போம் அங்கங்களில் சந்தஸ் என்பது கர்மானுஷ்டானம் செய்யும் எவரானாலும் அவச்யம் அறிய வேண்டியது. நாம் செய்யும் ஸந்தியாவந்தனம் முதலிய கர்மாக்களில் உள்ள ஒவ்வொரு மந்திரங்களுக்கும் ரிஷி சந்தஸ் தேவதையைத் தெரிந்துகொண்டு தான் உபயோகிக்கவேண்டும். அவ்விதம் தெரியாமல் போனுல் உபயோகமில்லை. நரகத்தையுமடைகிறுன் என்று வேதம் சொல்லுகிறது. சிலர் தற்காலத்திலும். ஆபோஹிஷ்டா அக்னிச்ச, முதலிய மந்திரங்களுக்கு ரிஷி சந்தஸ் தேவதை. சொல்லுகிறுர்கள். எல்லோருமே 'காயத்ரீ, உஷ்ணிக் அனுஷ்டுப் ப்ருஹதீ பங்தீ ஜகத்ய சந்தாம்ஸி ப்ரணதவஸ்ய. தேவீகாயத்ரீ சந்த: ஸாவித்ரியா நிருக்தாத்ரீ சந்த என்று சொல்லுகின்றோம் இவைகளுக்கு அர்த்தமென்ன என்று நமது வாழ் நாளில் தெரிந்து கொள்ள வேண்டியதில்லையா? அதை அடியில் வருமாறு அறிவோம். சந்தஸ் என்பது அக்ஷரங்களின் எண்ணிக்கையால் குறிப்பிடப்பட்ட மந்திரங்களுக்குப் பெயர். அவைகள் ருக், ஸாமவேதங்களில் அதிகமாயுள்ளன. யஜுர் வேதத்தில் மிகக் குறைவு. அவைகளில் 24. எழுத்துள்ள மந்திரம் முதல் 104. எழுத்துள்ள மந்திரம் வரை இருக்கின்றன. அவைகள் மொத்தம் 21. சந்தஸ்கள் இருக்கின்றன •7. சந்தஸ்கள்

அதிகமாக உபயோகப்படுகின்றன. அவை நாம் காயத்ரீ முதலியன.

1. காயத்ரீ. இது இருபத்திநான்கு அக்ஷரங்கள் உள்ளது. மூன்று பாதங்கள் உள்ளது. பாதங்கள் என்பது பாகங்கள். ஒவ்வொரு பாதங்களுக்கும் 8. அக்ஷரங்கள். 6. அக்ஷரங்கள் உள்ள 4 பாதங்களாகவும் இருக்கிறது. ஆக காயத்ரீ இரண்டுவிதம்.

2. உஷ்ணிக். இது 28. அக்ஷரங்கள் 3 பாதங்கள் உள்ளது. முதல் இரண்டுபாதங்கள் 8ம் மூன்றுவது பாதம் 12ம் அக்ஷரங்கள். நடுவில், 12 அக்ஷரங்களும் முதல் மூன்றுவது பாதங்களில் 8. அக்ஷரங்கள் இருந்தால் அதற்கு ககுப் சந்தஸ் என்று பெயர். முதல் 12 பின்தி இரண்டும். 8.8 அக்ஷரங்கள் இருந்தால் புரஉஷ்ணிக், என்று பெயர். 7. அக்ஷரங்கள் உள்ள 4. பாதங்களும் உண்டு. ஆக உஷ்ணிக். 4. விதம்.

| அக்ஷர. | பாதம் | பெயர். |
|---|---|---|
| 1. 8-8-12 | 3 | உஷ்ணிக். |
| 2. 8-12-8 | 3 | ககுப். |
| 3. 12-8-8 | 3 | புரஉஷ்ணிக் |
| 4. 7-7-7-7 | 4 | உஷ்ணிக். |

இனிமேல் வரும் சந்தஸ்களை இவ்விதம் ஸுலபமாக அறியலாம்.

3. அனுஷ்டுப். 32. அக்ஷரங்கள். 4. பாதங்கள் உள்ளது. இது. 4. விதம்.

| அக்ஷ. | பாதம். | பெயர். |
|---|---|---|
| 1. 8-8-8-8. | 4 | அனுஷ்டுப் |
| 2. 12-8-12. | 3 | பிபீலிகமத்யா நுஷ்டுப். |

பிபீலிகம் என்றால் எறும்பு. அதுபோல் நடுவில் சிறியது 8. அக்ஷர பாதம் என்று அர்த்தம்.

இது ஸாமவேதத்தில், ருக்வேதத்தில் 8. அக்ஷர பாதம் நடுவில் இருந்தால் அதற்கு மத்யேஜ்யோதிஸ் என்று பெயர். ஆகையினால் 8. அக்ஷரபாதம் எங்கிருக்கின்றதோ அதைய நுஸரித்து ஜ்யோதிஸ் என்பதுமாகும். 8. அக்ஷரபாதத்திற்கு ஜ்யோதிஸ் என்று பெயர்.

| அக்ஷரம். | பாதம். | பெயர். |
|---|---|---|
| 1. 8-12-12. | 3 | புரஸ்தாத்ஜ்யோதிஸ் அனுஷ்டுப் |
| 2. 12-8-12. | 3 | மத்யேஜ்யோதிஸ். |
| 3. 12-12-8. | 3 | உபரிஷ்டாஜ்யோதிஸ். |

ஆக. 4 பாதங்கள் உள்ளது. ஒன்று 3. பாதங்கள் உள்ளது. 3. மொத்தம். 4. விதம்.

4. ப்ருஹதீ. 36. அக்ஷரங்கள். 4. பாதங்கள். 6. விதங்கள் உள்ளது.

| அக்ஷரங்கள். | பாதங்கள். | பெயர். |
|---|---|---|
| 1. 8-8-12-8. | 4 | பத்யாப்ருஹதீ. |
| 2. 12-8- 8-8. | 4 | புரஸ்தாத்ப்ருஹதீ. |
| 3. 8-12-8-8. | 4 | உரோப்ருஹதீ. |
| 4. 8-8-8-12. | 4 | உபரிஷ்டாத்ப்ருஹதீ. |
| 5. 9-9-9- 9. | 4 | ....ப்ருஹதீ. |
| 6. 12-12- 12. | 3 | ஸதோப்ருஹதீ. |

5. பங்க்தி: 40. அக்ஷரங்கள் 5. பாதங்கள் 8. விதங்கள் உள்ளது.

| அக்ஷ - | பா | பெயர். |
|---|---|---|
| 1. 8-8-8-88. | 5 | பங்க்தி. |
| 2. 12-8-12-8. | 4 | ஸித்தாவிஷ்டாரபங்க்தி; |
| 3. 8-8-12-12. | 4 | ஆஸ்தாரபங்க்தி; |
| 4. 12-12-8-8. | 4 | ப்ரஸ்தாரப்ங்க்தி; |
| 5. 12- 8-8-12. | 4 | ஸம்ஸ்தாரபங்க்தி; |
| 6. 8-12-12-8. | 4 | விஷ்டாரபங்க்தி. |
| 7. 5- 5- 5 5. | 4 | அக்ஷரபங்க்தி. |
| 8. 5-5-5-5-5. | 5 | பதபங்க்தி. |

20. அக்ஷரங்கள் இம்மாதிரி 4. பாதங்களாக அமைந்திருப்பது அக்ஷரபங்க்தி என்று பெயர். இதற்கு 25. அக்ஷரங்கள். இதை யனுஸரித்துத்தான் பஞ்சாக்ஷரம் ஜபம் செய்யும் பொழுது பங்க்திசந்த: என்று சொல்லுகின்றோம்.

6. த்ரிஷ்டுப். 44. அக்ஷரங்கள் 4. பாதங்கள் 3. விதங்கள்.

| | அக்ஷ | பா | பெயர். |
|---|---|---|---|
| 1. | 11-11-11-11. | 4 | த்ரிஷ்டுப். |
| 2. | 12-12-12-8. | 4 | ஜ்யோதிஷ்மதீத்ரிஷ்டுப். |
| 3. | 8-8-8-8-12. | 5 | த்ரிஷ்டுப். |

**7. ஜகதீ. 48.** அக்ஷரங்கள். 4. பாதங்கள் **3** விதங்கள்.

| | அக்ஷ. | பா. | பெயர். |
|---|---|---|---|
| 1. | 12-12-12-12. | 4 | ஜகதீ. |
| 2. | 8-8-8-12-12. | 5 | ஜகதீ. |
| 3. | 8-8-8-8-8-8. | 6 | ஜகதீ. |

**விராட்.** ஒரு பாதத்திற்கு **10.** அக்ஷரங்கள்.
**10.** அக்ஷரங்கள். ஏகபதாவிராட் **30.** த்ரிபதாவிராட்
**20.** த்விபதாவிராட். **40.** சதுஷ்பதாவிராட்.
**11-11-11. 3.** பாதங்கள் விராட்.

இதற்குமேல் அதிச் சந்தஸ்கள் என்று பெயர். அவைகள் **14.** இரண்டு வர்க்கங்கள். **52** எழுத்துக்கள் முதல் **104.** எழுத்துகள் வரை உள்ளன. கீழ்வருமாறு:

| 1. வர்க்கம் | | 2. வர்க்கம் | |
|---|---|---|---|
| அக்ஷ | பெயர்: | அக்ஷ. | பெயர். |
| 52. | வித்ருதி: | 80. | ஸிந்து: |
| 56. | சக்வரீ: | 84. | ஸலிலம்: |
| 60. | அஷ்டி: | 88. | அம்ப: |
| 64. | அத்யஷ்டி: | 92. | ககரும்: |
| 68. | மங்ஹ: | 96. | அர்ணவ; |
| 72. | ஸரித் | | |
| 76. | ஸம்பா. | 100. | ஆப: |
| | | 104. | ஸமுத்ர: |

காயத்ரீ சந்தஸ்ஸிற்கு கீழேயும் சில சந்தஸ்கள் உண்டு. அவைகள் பின்வருமாறு. **4.** அக்ஷரங்கள் க்ருதி சந்தஸ், **8.** அக்ஷரங்கள் ப்ருக்ருதி சந்தஸ். **12.** அக்ஷரங்கள் ஸங்க்ருதி சந்தஸ். **16.** அக்ஷரங்கள் அபிக்ருதி, சந்தஸ். **22.** அக்ஷரங்கள் முதல் **21.** சந்தஸ்கள் அவைகள் **3.** வர்க்கங்கள் கடைசியில் **102.** அக்ஷரங்கள்,

இவ்விதம் 24. எழுத்துக்களிலிருந்து 4. எழுத்துக்கள் அதிகம் அதிகமாக 104. எழுத்துக்கள் வரையில் 21. சந்தஸ்கள் இருக்கின்றன. இவைகளுக்கு பொதுவாக க்ருத சந்தஸ் என்று பெயர். சொக்கட்டான்காயில் ஒரு பக்கத்தில் 4. புள்ளி இருக்கும் அதற்கு க்ருதம் என்று பெயர். அது ப்ரஸித்தமானதால் அதை வைத்துப் பெயர் வந்தது. இவைகளுக்கு உதாஹரணம் சொன்னால் விரிவாகும். அத்யயனம் செய்யாதவர்களுக்குப் புரியாததால் அவகாசமுள்ள ஸமயம் தெரிவிப்போம். 24. எழுத்துக்கள் முதல் 4. அதிகமாக 3. வர்கம். கடைசி 104. எழுத்துகள். 22. எழுத்துக்கள் முதல் 4. அதிகமாக 3. வர்க்கம் கடைசி 102. எழுத்துகள்.
ஆகவே. 24. முதல் 21. சந்தஸ்கள்.

22. முதல் 21. சந்தஸ்கள்.
4. முதல் 4. சந்திரஸ்கள்.
2. முதல் 5. சந்தஸ்கள்.
10. அக்ஷரம். 1. விராட். சந்தஸ்
52. சந்தஸ்கள்.

மொத்தம் 52. சந்தஸ்கள் இருக்கின்றன. நாம் அதிகமாக உபயோகிக்கக்கூடிய சந்தஸ். 7.

இவ்வாறு சொல்லப்பட்ட சந்தஸ்களில் அதற்கேற்பட்ட எழுத்துக்களில் ஒரு எழுத்துக் குறைந்தால் அதற்கு நிச்ருத் என்றும் ஒரு எழுத்து அதிகமானால் புரிக் என்றும் பெயர். உதாஹரணமாக நாம் ஜபம் செய்துவரும் காயத்ரீ. 23 எழுத்துக்களாக இருப்பதால் நிச்ருத்காயத்ரீ என்று சொல்லுகின்றோம்.

பிறகு தேவ அஸுர ப்ராஜாபத்ரிஷி சந்தஸ் என்று. மூன்று இருக்கின்றன. 1 எழுத்து முதல் ஒன்றொன்றாக மேலே போவது தேவ சந்தஸ். 15 அக்ஷரத்திலிருந்து கீழே வருவது அஸுர சந்தஸ். 8. எழுத்துக்கள் முதல் மேலே போவது 4. எழுத்துக்களாக ப்ராஜாபதி சந்தஸ். மூன்றையும் ஒன்று சேர்த்தால் ரிஷி சந்தஸ்.

1. அக்ஷரம். தேவகாயத்ரீ. இது தான் ப்ரணவத்திற்கு சந்தஸ்.

15. ,, அக்ஷரகாயத்ரீ.
8. ,, ப்ரஜாபதிகாயத்ரீ.
24. ,, ரிஷிகாயத்ரீ.
7. அக்ஷரம். தேவஜகதீ.
9. அக்ஷரம். அஸுரஜகதீ.
32. அக்ஷரம் ப்ரஜாபதி ஜகதீ.
48. அக்ஷரம். ரிஷி ஜகதீ.

நாம் உபயோகிப்பது ரிஷி சந்தஸ்கள் இவ்விதம் மகரிஷிகள் வேதத்தில் ஒரு எழுத்துக்கூட சேர்க்கவோ குறைக்கவோ கூடாதென்று சந்தஸ் லக்ஷணங்களையும் அதற்கு லக்ஷ்யங்களைக் காண்பித்திருக்கிறார்கள். இந்த சந்தஸ்களின் ஸ்வரூபங்களை நன்கு அறிந்தவர்கள் சந்தஸ்களின் ஸாலோக்ய மடைந்து. மோக்ஷமடைகிறார்கள் என்று கடைசி ஸூத்ரம் முடிந்திருக்கிறது. ஸாம வேதத்தில் 10. ஸூத்ரங்களில் நிதானம் என்ற ஸூத்ரத்தின் கடைசி 2. அத்யாயங்கள், 7. கண்டங்கள் இவைகளை விசதமாகக் கூறுகின்றன. இதன் விஸ்தாரத்தை அங்கு நன்கு பார்க்கலாம். இதை பரமஹம்ஸ பரிவ்ராஜகர்களான ஸ்ரீமதாசார்யாளின் பாதங்களின் ஸமர்ப்பிக்கிறேன்.

காலை $10\frac{1}{2}$ மணி முதல் கல் வைத்த வாரம், அதாவது, வேத போட்டி பரீக்ஷை, நடந்தது. (வேதங்களில்—முக்கியமாய் யஜுர் வேதத்தில் ஒரு விதமான குற்றம், குறைவு, தடங்கல்கள் இன்றி நூறு பதங்கள் சொல்வதில் நடத்தப்படும் பரீக்ஷைக்கு கல் வைத்த வாரம் என்று பெயர்) இது முடிந்ததும் 11 மணிக்கு மகாநாடு கலைந்தது.

மறுபடியும் மாலை 3 மணிக்கு மகாநாடு கூடியது. 3 மணி முதல் 4 மணி வரையில் அண்ணாமலை யூனிவர்ஸிடி ஆசிரியர் ஸ்ரீ K. A. சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள் அவர்களால் வேதத்தின் நான்காவது அங்கமாகிய 'நிருக்தம்' (வேத நிகண்டு) என்பதுபற்றி ஒரு உபந்நியாஸம் செய்யப்பட்டது.

ஸ்ரீ

# நிருக்தம்

ஸ்ரீ K. A. சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள்,
ஆசிரியர்,
அண்ணாமலை யூனிவர்ஸிடி, சிதம்பரம்.

"நிருக்தம்" என்ற பதம் "விளக்கிச் சொல்லுதல்" என்ற அர்த்தத்தில் வந்துள்ளது. இதனால் வேதங்களின் பதவாக்கியங்களின் அர்த்தங்களை விளக்க இந்த அங்கம் எற்பட்டதென்று எற்படுகிறது. வேதமே பல இடங்களில் பதங்களின் அர்த்தங்களைத் தானே விளக்கிக் காட்டுகிறது. உதாஹரணமாக "நவநீதம்" என்ற பதத்தை விளக்கும்பொழுது வேதம் "புதிதான தன்மையை அடைந்தது" என்று விளக்கிக் காட்டுகிறது. இவ்விதம் அந்தந்தப் பதங்களின் அர்த்தங்களை விளங்கத் தெரிந்துகொண்டால்தான் பதங்களின் உண்மையான பாவம் வெளியாகும். இந்த நோக்கத்தோடு வேதத்தில் உள்ள தாத்பர்யங்களை விளக்கிக் காட்டவே நிருக்தம் என்ற அங்கம் உதவுகிறது. மேலும், வேதங்களில் உள்ள மந்திரபாகம் செய்யுள் நடையில் அமைந்திருப்பதால் அவைகளின் தாத்பர்யத்தை நாம் எளிதில் புரிந்துகொள்ள முடியாது. வேத மந்திரங்களில் உலகத்தில் காணப்படாத பதங்கள் இருக்கின்றன. ஜர்ப்பரீ, துர்ப்பரீ போன்ற பல பதங்கள் வேதங்களில் இருக்கின்றன. இவைகளின் அர்த்தங்களை நிர்ணயம் செய்வதே கஷ்டம். அது மட்டுமில்லாமல் உலகில் காணப்படும் பதங்கள் வேதங்களில் காணப்படும்பொழுது புதிதான அதிகப்படி எழுத்துக்களோடு காணப்படுகின்றன. 'சுசந்த்ர" என்ற லோகபதம் "சுஶ்சந்த்ர" என்று வேதத்தில் காணப்படுகிறது. "ம்ருதாதரோண" என்ற உலக நடையில் உள்ள பதம் "ருதாதரொண" என்று "மகாரம்" இல்லாமல் காணப்

படுகிறது. "வர்ணாகமம்", "வர்ணவிபர்யயம்", "வர்ணவிகாரம்", "வர்ணலோபம்"-இவை போன்ற பலவித மாறுதல்கள் காணப் படுவதால் நிருக்தத்தின் உதவியைக் கொண்டே பதங்களின் அர்த்தத்தை நிர்ணயம் பண்ணமுடியும். மேலும் கௌ: என்ற பதம் அநேக இடங்களில் வந்துள்ளது. இங்கெல்லாம் இதன் அர்த்தம் ஒரே வகையானதுதானா? அர்த்த பேதம் உண்டா? இவைகளை நிர்ணயம் செய்யவேண்டும். ஒரே அர்த்தமுள்ள அநேக பதங்களும், அநேகார்த்தமுள்ள ஒரே பதமும் பல இடங்களில் இருப்பதால் அர்த்த நிர்ணயம் கடுமையானதாகிவிடுகிறது. மந்திரங்களின் தாத்பர்யத்தை நிர்ணயம் செய்துகொண்டால்தான் அதற்கு அநுகுணமாக பதார்த்தங்களை நிர்ணயம்செய்து வேதார்த் தத்தை விளக்கமாகவும் தெளிவாகவும் தெரிந்து கொள்ளலாம். இங்கெல்லாம் உதவிசெய்யவே நிருக்தம் என்ற அங்கம் ஏற்பட்டது. வேதப் பொருளை ஸாக்ஷாத்தாகவே காண பாக்கியம் பெற்ற மஹர்ஷிகள் தாங்கள் தபஸ்மூலம் அவைகளை நன்ருக அறிந்து, அவர்களுக்குப் பின்வந்துள்ள ரிஷிகள் அல்லாத நம்போன்றவர்கள் மீது உள்ள கருணை காரணமாக தாம் கண்டுள்ள தத்வங்களை கிரந்தம் மூலம் உபதேசம் செய்து நாம் எளிதில் வேதார்த்தங்களை அறிய உதவுகிருர்கள் என்று "நிருக்தி" என்ற வேதாங்கத்தை உலகிற்கு உதவி புரிந்த யாஸ்கரே வெளியிடுகிருர். ஆகவே வேதங்களில் உள்ள பதங்களின் வகை, பதங்களின் அர்த்தம் இவைகளை நிர்ணயம் செய்து எந்தெந்த இடங்களில் அர்த்த நிர்ணயம் ஸுலபமாக இல்லையோ அங்கெல்லாம் அர்த்த நிர்ணயம் செய்து கொடுத்து வேதமந்திரங்களுக்கு வியாக்யானம் செய்து கொள்ளும் வகையைக் காட்டவே ஏற்பட்டுள்ளது நிருக்தம் என்ற கிரந்தம்.

இந்த நிருக்தகிரந்தங்கள் என்ற அங்கம் பல மஹரிஷிகளால் செய்யப்பட்டிருக்கின்றன. "யாஸ்கர்", "காலவர்", கார்பியர்", "சாகபூணி" "தைகிடி"-முதலிய பல மஹர்ஷிகள் நிருக்தம் என்ற கிரந்தம் எழுதியுள்ளார்கள். வேதார்த்த நிர்ணய விஷயத்தில் ஈடுபட்டுள்ள இவர்களுள் அஸாதாரணமான பல ஸங்கேதங்கள் இருந்து வந்ததால் "நைருக்த ஸமயம்" என்று இவர்களுடைய சமயத்திற்குப் பெயர் இருந்து வந்திருக்கிறதென்று தெரிகிறது. அநேக மந்திரங்களுக்கு இவர்கள் வியாக்யானம் செய்யும் காலத்தில் தங்களுடைய சமயக்கொள்கைகளுக்கு அநுகுணமாக வியாக்யானம்

பண்ணுகிறார்கள். இப்பொழுது யாஸ்கநிருக்தமொன்றுதான் உரையுடன் இருந்துவருகிறது.

இனி "யாஸ்க நிருக்தம்" அமைந்துள்ள நிலையை விளக்கு வோம். யாஸ்கநிருக்தத்தில் "நைகண்டுகம்", "நைகமம்", "தைவதம்" என மூன்று காண்டங்கள் இருந்து வருகின்றன. நைகண்டுக காண்டத்தில் பல விதங்களில் அர்த்தம் சொல்லப்படு கிறது. நைகமிக காண்டத்தில் அர்த்தம் புரிந்து கொள்ள முடியாததாக உள்ள பல வேதபதங்கள் எடுக்கப்பட்டு அவைகளின் அர்த்தங்கள் சொல்லப்படுகின்றன. தேவதா காண்டத்தில் தேவதைகளின் பெயர்கள் சொல்லப்படுகின்றன. மூன்று காண்டங்கள் கொண்ட நிருக்தி மூலத்திற்கு யாஸ்கரே விஸ்தார மாக வ்யாக்யானம் செய்கிறார். இங்கும் "நைகண்டுக காண்டம்", "நைகமிக காண்டம்", "தேவதா காண்டம்" என்ற மூன்று காண்டங்கள் இருக்கின்றன. மூலஸூத்ரத்தில் அந்தந்த காண் டங்களில் எடுக்கப்படும் சில பதங்களை எடுத்துக் கொண்டு விஸ்தார மாக இங்கு வேதமந்திரங்களை உதாஹரித்து வியாக்யாகம் செய் யப்படுகிறது. "அதிஸ்துதி" என்று தனியாக "பரிசிஷ்ட ப்ர கரணம்" உள்ளது. அங்கும் வேதமந்திர வியாக்யானமே செய்யப் படுகிறது. மூலஸூத்ரத்தில் உள்ள 3 காண்டங்கள் ஐந்து அத் யாயங்களாக அமைந்துள்ளன. வியாக்யான ரூபமாக உள்ள பாகத் தில் உள்ள 3 காண்டங்களும் பன்னிரண்டு அத்யாயங்களில் அமைந் துள்ளன. "அதிஸ்துதி" என்ற பிரகரணம் ஒரே அத்யாயம்.

இனி மூலஸூத்ரத்தில் உள்ள காண்டங்களில் உள்ளதை சுருக்கமாக நிரூபிப்போம். மூல நைகண்டுக காண்டத்தில் "ப்ருதிவீ" "ஹிரண்யம" "அந்தரிக்ஷம்" "ஸாதாரணம்" "ரச்மீ" "திக்" "ராத்ரி" "உஷஸ்" "அஹஸ்" "மேகம்" "வாக்" "உத் கம்" "நதீ" "அச்வம்" "ஆதிஷ்டோபயஜனம்" (மற்றொரு பதத்துடன் சேர்ந்ததே அர்த்தம் உள்ளது)—இவைகளைக் குறிப் பிடும் பதங்களும், "ஜ்வலதி" என்ற அர்த்தத்தில் வரும் "தாதுக் களும்", "ஜ்வாலா" "கர்ம" "அபத்யம்" "மனுஷ்யன்" "பாஹு" "அங்குலீ"—இவைகளைக் குறிப்பிடும் பதஙகளும், "காந்தி" கர்மதாதுகளும், "அத்திகர்மதாதுக்களும்", "அந்நம்" "பலம்" "கோ" "க்ரோதம்"-இவைகளைச் சொல்லும் பதங்களும் "கதிகர்ம தாதுக்கள்" "க்ஷிப்ரம்" "அந்திகம்" "ஸங்கிராமம்"- இவைகளைக் குறிப்பிடும் பதங்களும், "வ்யாப்தி" "வதம்" "ஐச்

வர்யம்" - இந்த அர்த்தமுள்ள தாதுக்களும், "பஹு" "ஹ்ரஸ்வம்" "மஹத்" "க்ருஹய"—இந்த அர்த்தங்களைக் குறிப்பிடும் பதங்களும், "பரிசரதிகர்ம தாதுக்களும்", "ஸுகம்" "ரூபம்" "ப்ரசஸ்யம்" "ஸத்யம்"—இவைகளைக் குறிப்பிடும் பதங்களும், "பச்யதி கர்ம தாதுக்களும்", "ஸர்வபத ஸமாம் நாயம்" "உபமா" என்ற அர்த்தத்தில் வரும் பதங்களும், "அர்சதிகர்மதாதுக்களும்", "மேதாவீ" "ஸ்தோதா" "யக்ஞம்" "ரித்விக்" இவர்களைக் குறிப்பிடும் பதங்களும், "யாச்ஞை" "தானம்" "அத்யேஷணம்" "ஸ்வபிதி"—இந்த அர்த்தத்தில் வரும் தாதுக்களும், "கூபம்" "ஸ்தேநன்" "தூரம்" "புராணம்" "நவீநம்" "த்யாவாப்ரதிவீ"-இவைகளைக் குறிப்பிடும் பதங்களும் எடுக்கப்பட்டுள்ளன. இதுவரை நைகண்டுக காண்டம். அடுத்துள்ள நைகமிக காண்டத்தில் பல வேதபதங்கள் வியாக்யானம் செய்வதற்காகப் பொறுக்கப்பட்டுள்ளன. தைவத காண்டத்தில் "அக்நி" முதல் "தேவபத்நீ" வரையில் உள்ள தேவதைகளைக் குறிப்பிடும் பதங்கள் பொறுக்கப்பட்டுள்ளன. மேலுள்ள 12 அத்யாயங்களும் இங்கு எடுக்கப்பட்டுள்ள பதங்களின் அர்த்தத்தை சர்ச்சை செய்து இவை வரும் வேதமந்திரங்களை உதாஹரித்து அவைகளுக்கும் வியாக்யானம் செய்கின்றன. நைகண்டுக நைகமிக தைவத காண்டங்களில் எடுக்கப்பட்டுள்ள சில பதங்களுக்கே இங்கு வியாக்யானமும், உதாஹரணமும் காட்டப்படுகிறது. இதுவே விஸ்தாரமான கிரந்தமாக ஆகிவிடுகிறது. வேதபதங்களுக்கு விஸ்தாரமாக வியாக்யானம் செய்ய ஆரம்பிக்கும் முன் வேதங்களில் உள்ள பதங்களை "நாம" "ஆக்யாத" (வினைச்சொல்) "உபஸாக" "நிபாதம்" என்று நான்கு வகையாக வகுத்துக்கொண்டு நாமம் முதலியவைகளின் தாத்பர்யத்தை விஸ்தாரமாகச் சர்ச்சை செய்து நிரூபிக்கிறார். "நிருக்தம்" என்ற அங்கம் இல்லாவிடில் வேதார்த்தத்தை நன்கு நிர்ணயிக்க முடியாது என்பதையும் விளக்குகிறார். இவ்வளவு விஸ்தாரமாக "நிருக்தி" என்ற க்ரந்தம் அமைந்திருந்தாலும், இது பல்லாயிரக்கணக்கில் மந்திரங்களைக் கொண்ட வேதங்களுக்கு முழு வியாக்யானமாகாதென்றும் மார்கதர்சனமாக மட்டும் இது நிற்கிறதென்றும் இதை அடிப்படையாக வைத்துக் கொண்டு மற்ற மந்திரங்களின் தாத்பர்யங்களை நாமே ஊஹித்துக் கொள்ளவேண்டுமென்றும் யாஸ்கர் கூறுகிறார்.

மறுபடியும் மாலை 3-மணிக்கு மகாநாடு கூடியது. 3-மணி முதல் 4-மணி வரையில் ஸ்ரீ ராமசாமி சர்மா அவர்களால் வேதலக்ஷணம் என்பது பற்றி ஒரு உபந்நியாஸம் செய்யப்பட்டது.

ஸ்ரீ

# வேதலக்ஷணம்

**ஸ்ரீ ராமசாமி சர்மா**

ஆக்ஞா கணேச சரணம் ப்ராக்ஞாபிநுதம்
சுரேந்த்ர சம்சேவ்யம்॥
ப்ராக்ஞாநபிதம் நித்யம் ராஜ்ஞாத்யேயம் சுபப்ரதம்
வந்தே॥
ஜ்யோதிர் வ்யாகரணம் சந்த; கல்ப சிக்ஷாநிருக்தய:
நேத்ராஸ்ய பாதஹஸ்தாதி காணம்யஸ்ய தம்பஜே॥

ஸகல ஜீவராசிகளுக்கும் இம்மை, மறுமைப்பயனை நிச்சயமாக அளிக்கவல்லமையுள்ள வேதம், அநாதிகாலந் தொட்டு எவ்வித மாறுபாடுமின்றி படிக்கப்பட்டு, எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. ப்ரத்யக்ஷம் முதலியவைகளால் அறிந்து கொள்ள முடியாததும், நிச்சயமாக பலனைக் கொடுக்கவல்லதுமான தர்மங்களை, அறிவிப்பதாலேயே அதற்கு வேதம் என்ற பெயர் பொருத்தமானது. அதிலுள்ள தர்மங்களை நாம் நன்கு தெரிந்து கொண்டு செய்வதால் நாம் கோரியபலனை அடையலாம். அவ்விதம் ஸர்வ சுகங்களுக்கும் காரணமான வேதத்தை விரோதிகளிடமிருந்து ரக்ஷித்து, என்றும் மாறுபாடில்லாமலும் அதன் பொருள், தர்மம் முதலியவைகளைச் சரியானபடி தெரிந்து கொள்ளும்படி செய்தலுமே சிக்ஷை முதலிய ஆறு அங்கங்களின் கடமை. எவ்விதம் ஒரு மனிதனை விரோதிகளிடமிருந்து காப்பாற்றுவதற்கு கை, கால் முதலியவைகளும், ஸ்வரூபத்தைக் காப்பதற்கு, கண், மூக்கு முதலியவைகளும் இருக்கின்றனவோ அதேபோல் வேதம் என்ற அங்கியைக்காப்பதற்கு, சந்தஸ், கல்பம் என்ற கால்,

கை முதலிய அங்கங்களும், ஸ்வரூபத்தை அறிந்து கொள்ளுமாறு சிக்ஷை, ஜோதிடம் முதலிய, மூக்கு கண் என்ற அங்கங்களும், வ்யாகரணம், நிருக்தம் என்ற முகம், காது என்றதுமான ஆறு அங்கங்களும் உள. அவைகளில், முதன்மையானதும் முக்கியமானதுமான அங்கம் சிக்ஷை. இது வேதத்துக்கு மூச்சுக் காற்றைப் போன்றது. இது இரண்டுவிதமாகவும் வேதத்தை ரக்ஷிப்பதில் மிக கவன முள்ளது. வியாகரணம் முதலியது, உலகத்தில் வழங்கி வரும் மற்ற சப்தங்களையும் ரக்ஷிக்கும் நோக்கமாகக் கொண்டு வேதத்தில் சில விசேஷ உரிமைகளைக் கொடுத்து ரக்ஷித்து வருகிறது. சிக்ஷையோவெனில் பிராணன் (மூச்சுக் காற்று) எவ்விதம் வேறு பிரயோசனமின்றி மனிதனைக் காக்கிறதோ அதேபோல் வேத சம்பந்தம் மாத்திரமே கொண்டு மிக முக்கியமாக இருந்து காப்பாற்றி வருகிறது. வேதத்தை, ஸ்வரம், அக்ஷரம், சேர்க்கை வேதம் படிப்பவனின் மனம், கண், கை இவை இருக்க வேண்டிய விதி, இவைகளை மாற்றி வேதத்தை உச்சரிப்பதே வேதத்தின் விரோதி. அஃதெங்ஙனமெனில் விரோதியி ஞல் எவ்விதம் விபரீத பலன் உண்டாகுமோ, அவ்விதம், ஸ்வரம் வர்ணம் இவைகளின் மாறுபாட்டால் விபரீத பலன் உண்டாகிறது. உதாஹரணமாக, த்வஷ்டா, என்பவர் இந்திரனிடத்தில் கோபத்திஞல், கடுமையான தபசு செய்து இந்தானுக்கு விரோதியான புத்ரனைத் தனக்கு விரும்பிக் கேட்க, அவர் கேட்ட வாக்யத்தின் ஸ்வரத்தின் வித்யாசத்தி ஞல், இந்திரஞல் கொல்லப்படத்தக்க புத்ரனையே அடைந்தார். இவ்விதம் மாறுபாடான விரோதிகளிட மிருந்து வேதத்தைக் காக்கிறது சிக்ஷை. பிராணபலம் நன்கு உள்ளவனுக்கு சுகம் எவ்விதம் அதிகமோ அவ்விதமே வேதத்தை நன்கு அறிந்தவனுக்கு பலன் விசேஷமாக ஏற்படுகிறது. நன்கு அறியப்படவில்லையேல், ரத்னத்தின் மதிப்புத் தெரியாதவன்போல் ஸ்வல்பமாகவே பலன் அனுபவிக்க முடிகிறது. உதாஹரணமாக நிருமேதர், பருச் சேபர் என்ற வேதம் கற்றுணர்ந்த இரு ரிஷிகள் ஒரு சமயம் போட்டியின் காரணமாக தங்களில் யார் நன்கு வேதமறிந்தவர் என்பதற்காக, இரண்டு நனைந்த கட்டை களில் நெருப்பு உண்டுபண்ண ஆரம்பித்தார்கள். அவர் களில் முதல்வருக்குப் புகையே உண்டானது. இரண்டாம வருக்கு ஜ்வாலையோடு கூடிய நெருப்பு உண்டானது. நன்கு

தெரிந்து கொள்வதால் அதிக பலன் ஏற்படுகிறது. இவ்விதம் நாம் முடியாதென்று நினைக்கும் காரியத்தையும் முடித்து வைக்கும் தன்மையே வேதத்தின் தனிப் பெருமை. அதற்கு வேண்டிய சாதனங்களேயும், உண்மைகளையும் உரைப்பதே சிக்ஷையின் கடமை. அவ்விதம் சிக்ஷையில் சொல்லுபவைகளை நன்கு பயின்று முறைப்படி அனுஷ்டிக்கவேணும் தவறாமல் அனுஷ்டித்து வருவோமானுல் ஸகல இஷ்டமும் சித்திக்கும். அவ்விதமே நம் முன்னோர்களின் அனுஷ்டானத்தின் பலனை நாம் இன்றுவரை அனுபவிக்கிறோம். நாமும் அதைத் தெரிந்து கொண்டு அனுஷ்டித்தால் நமக்கும் நம்மைச்சேர்ந்த ஸகல பிராணிகளுக்கும் விசேஷ சௌக்கியம் உண்டாகும். கான சாஸ்திரத்தின் நுட்பத்தை அறிந்து சுருதிலயத்தோடு பாடும் கானமே எல்லோருக்கும் இன்பமளிப்பதாக இருக்கிறது; இல்லையோ வெனில் வெறுப்பையே கொடுப்பது போல், அந்த கானசாஸ்திரத்தின் முக்கிய ஸ்வரங்களுக்குக் காரணமாய் உள்ள வேதத்தை உண்மையாக அறிந்தவன் சொல்வதைக் கேட்டாலே உண்மையான, ஆனந்தமும் மனோநிம்மதியும் ஏற்படுவதை என்றும் இன்றும் அனுபவிப்பது உண்மை. இவ்விதம் நாம் வேதத்தின் பூர்ணமான உபயோகங்களை அடையக் காரணமான அங்கங்களில் முதலங்கமாம் சிக்ஷை அநேகம். அவைகளில் 35 வரை நன்கு காணப்படுகிறது. பெயரினுலே மட்டும் இன்னும் சில தெரிகின்றன. அவைகளில் சில எல்லா வேதங்களுக்கும் பொதுவானதாகவும், சில தனிப்பட்ட வேதங்களுக்கும் உள்ளது. உதாஹரணமாக வ்யாளிசிக்ஷை, ருக்வேதத்துக்கும், வ்யாசசிக்ஷை யஜுர் வேதத்துக்கும் யாக்ஞவல்கிய சிக்ஷை சுக்லயஜுர் வேதத்துக்கும், நாரதசிக்ஷை ஸாமவேதத்துக்கும் உள்ளது. பாணினீசிக்ஷை, பாராசரீ சிக்ஷை, அமோகாநந்தினீசிக்ஷை முதலியவைகள் பொதுவாக உள்ளது. இவைகளுக்கு வேதத்தின் லக்ஷணங்கள் என்று பெயர். இனி இவைகளில் வேதத்தைப்பற்றி என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்பதைச் சுருக்கமாகக் கொஞ்சம் கூறுவோம்.

(1) வேதம் எவ்விதம் கற்றுக்கொள்ள வேண்டியது என்பது பற்றி, அதாவது. நமக்கோ எழுத்தைப் பார்த்து நன்கு வாசிக்க முடியும். அநேகம் பிரஸ்களில் கிரந்தத்திலும்

நாகரத்திலும் வேதத்தை புஸ்தகமாக வெளியிட்டிருக்கிறார்கள். ஆனாலும் குருவில்லாமல் நாமாகப் புஸ்தகத்தைப் பார்த்து படித்துத் தெரிந்துகொள்வது மிகத் தவறு. வேத அத்யயனம் என்ற சொல்லிற்கே குருவின் முகமாகத் தெரிந்துகொள்ளுதல் என்ற அர்த்தமே. ஆகையால், குருமுகமாகத்தான் வேதத்தைத் தெரிந்து கொள்ளல் வேண்டும். அப்பொழுதுதான் சுருதி (காதின் வழியாக வந்தது) என்பதும் பொருந்தும். அதன் பிறகு நாம் மனப்பாடம் செய்துகொள்ளல் வேண்டும். இவ்விதம் கற்பிக்கும் குரு, நல்ல ஆசாரமுள்ளவராயும் வேதலக்ஷணம் அர்த்தம், இவைகள் நன்கு அறிந்தவராயும், வியக்தமாய் (நன்கு புரியும்படி) சொல்பவராயும், திருப்தியும், வேதத்தில் பக்தியும் உள்ளவராயும் இருக்கவேண்டும். சிஷ்யனும், ஆசாரமுள்ளவனும் சோம்பலின்றியும், வேதத்தினிடமும், குருவினிடமும் மிகுந்த பக்தியும் உள்ளவனாக இருங்கள் அவசியம். இது வேதம் கற்பதில் சில முக்கிய நியமம்.

(2) வேதம் சொல்வதில் கால நியமம். காலையில் புலி உறுமுவதுபோல் ஹிருதயத்தில் உள்ளதாயும், மத்தியான்னகாலத்தில் சக்ரவாக பறவைபோல் கண்டத்தில் உள்ளதாயும், சாயங்காலத்தில் மயில் குயில் போல் சிரோகதமாயும் சொல்லவேண்டியது. நாம் அப்யாசம் செய்யும்பொழுது கொஞ்சம் துரிதமாயும், ஏதாவது கர்மாக்களில் சொல்லும்போது மத்திமமாயும், சிஷ்யர்களுக்கு உபதேசிக்கும்போது நிறுத்தி மெதுவாகவும் வேதத்தைச் சொல்லவேண்டும். இது மாறினால் பலன் மாறுதலை அடையும். அதாவது கர்மகாலத்தில் வேகமாகச் சொன்னால் தனக்கு தாரணம் செய்து கொண்டதாக ஆகுமே தவிர, கர்மாவின் பூர்ண பலனுக்கு உபயோகமாகாதென்பது. இதே போல மற்றதும்.

(3) வர்ணங்களையும் (அக்ஷரங்களையும்) ஸ்வரங்களையும் உச்சரிக்க வேண்டிய நியமம். கீதத்தோடு கூடியும், வெகுதுரிதமாயும், தலையை மிகவும் ஆட்டிக்கொண்டும், சந்தேகத்துடனும், மிக பயத்துடனும், காகஸ்வரத்துடனும் மூக்காலும், அக்ஷரங்கள் ஸ்பஷ்டமில்லாமலும், பல்லால் கடிப்பதுபோல் அதிஸ்பஷ்டமாயும், கையில் ரேகைகளில் உதாத்தம் முதலிய ஸ்வரம் காட்டாமலும் வேறு காரியத்

தில் மனதுடனும் சொல்லக்கூடாது. மதுரமாயும், பிறருக்கும் நமக்கும் இனிமையாக இருக்கும்படியும், வ்யக்தமான அக்ஷரங்களுள்ளதாயும், பதம் நன்கு பிரித்தும், நல்ல ஸ்வரங்களுடனும் தைரியமாயும், அதிலேயே மனதின் கவனத்துடனும், அந்தந்த ஸ்வரங்களுக்குச் சொல்லப்பட்ட கைசேஷ்கைகளைக் காட்டிக் கொண்டும் சொல்ல வேண்டும். உதாஹரணமாக, ஸ்வாமியின் அபிஷேகத்துக்காக பால் எடுத்துச் செல்டவன் அபிஷேக காலமும் தவறாமல் பாலுக்கும் கெடுதல் வராமல் எவ்விதம் ஜாக்ரதையுடன் செல்வானோ, பெண்புலியானது தன் குட்டியை பல்லில் கவ்விச் செல்லும்பொழுது, அது விழுந்து விடாமலும், பல்லினால் குட்டிக்கும் காயம் ஏற்படாமலும், பயத்துடனும், பிரியத்துடனும் எவ்விதம் எடுத்துச் செல்லுமோ அவ்விதம், பயபக்தியுடன் சொல்லப் பட்ட வேதம் பூர்ணமான பலனைக் கொடுக்கும்.

(4) வேதத்தில் அ முதல் க்ஷ முடிய உள்ள எழுத்துக்கள், பொதுவாக சிக்ஷாபேதங்களால். 63, 64, 66, என்பதாக இருக்கின்றது.

(5) வேதாக்ஷரங்களின் உற்பத்தி விவரம். புருஷன் புத்தி பூர்வமாய் ஏதாவதொன்றைச் சொல்ல விரும்பும் பொழுது, முதலில் மனதை ஏவுகிறான். மனது சரீரத்தில் உள்ள ஜாடராக்னியைப் பலமாகத் தாக்குகிறது. அந்த அக்னி நாபியிலிருந்து காற்றைத் தூண்டி விடுகிறது. அந்தக் காற்று ஹிருதயத்தில் வரும்பொழுது மந்த்ரம் என்ற த்வனியை உண்டு பண்ணி, அங்கிருந்து மூர்த்தா (தலை) வரைபோய் திரும்பி, நாக்கு, உதடு, கன்னத்தின் உட்பக்கம் இவைகளின் சம்பந்தத்தினாலும், பல்லினுடைய அடிப்பாகம் நுனிப்பாகம், மேலுதடு, வாயின் மேல்பாகம் இவைகளில், அ முதல் க்ஷ வரையுள்ளதான அக்ஷரங்களை உண்டு பண்ணுகிறது.

(6) இவ்விதம் உண்டாகும் அக்ஷரங்கட்குள்ள தர்மங்கள் எட்டு. அவையாவன, த்வனி, ஸ்தானம், காணம் ப்ரயத்னம், காலம், ஸ்வரம், தேவதை, ஜாதி என்பன.

(7) இவைகளில், த்வனி என்பது மூன்று விதம், நாதம், சுவாஸம், ஹகாரம் என்பது அவைகளின் பெயர்கள்.

கண்டம் (கழுத்து) சிறுத்து ஸ்வல்பமான வெளிப்ரயத்னத்துடன் கூடியது நாதத்வனி, (கழுத்து) கண்டம் விசாலமாயும் அதிகமான பாஹ்ய பிரயத்னத்துடன் கூடியது சுவாசத்வனி. மத்யமமான கண்டத்தில் மத்யமமான பிரயத்னத்துடன் கூடியது ஹகாரத்வனி. இம்மூன்று த்வனிகளிலிருந்தே எல்லா வர்ணங்களும் உண்டாகின்றன.

(8) இரண்டாவது. ஸ்தானம் என்பது. இது கண்டம், (கழுத்து), தாலு, மூர்த்தா. பற்களின் அடிப்பாகம், பற்களின் நுனிபாகம், மேலுதடு முதலானதுகள். இவைகள் அசையாமலிருந்துகொண்டு, அக்ஷரங்களை உண்டுபண்ணுவதற்குக் காரணங்களாகின்றன.

(9) மூன்றுவது தர்மமாகிற கரணமென்பது கீழுதடு, நாக்கின் நுனி, அடிப்பாகம், நடுப்பாகம் இவைகள் கரணங்களாகின்ற ஸ்தானம்போலல்லாமல் தானும் அசைந்து அக்ஷரங்களுக்குக் காரணமாகின்றன. இந்த ஸ்தானகரணங்களை, ப்ரதித்வனிஸ்தானம் என்றும் சொல்லப்படுகிறது.

(10) நான்காவது தர்மமாகிறது பிரயத்னம்; இது. ஆப்யந்தரபிரயத்னம்; அதாவது உள்ளே செய்யும் முயற்சி. அவைகளாவன :ஸ்ப்ருஷ்டம் ஈஷத்ஸ்ப்ருஷ்டம், ஸம்வாரம், விவாரம் என்பன.

(11) ஐந்தாவது காலம். காலம் என்பது மாத்ரா காலம், ஒவ்வொரு வர்ணங்களுக்கும் உச்சரிக்கும் காலம். (குறில்) ஹ்ருஸ்வம் ஒரு மாத்ராகாலம், தீர்க்கம் (நெடில்) இரண்டுமாத்ராகாலம், மெய்யெழுத்துக்கள் அரைமாத்ரா காலம், இரண்டு மூன்று என்று ஒன்றிற்கு மேற்பட்ட மெய்யெழுத்துக்கள் சேருமிடத்தில் கடைசி எழுத்தைத் தவிர முன்னுல் உள்ள மீதி மெய்யெழுத்துக்களுக்குக் கால் மாத்திரை என்பது நிச்சயிக்கப் பெற்றது. ப்லுதம் என்பதற்கு மூன்று மாத்ரையும், ரங்கப்லுதம் என்பது நான்குமாத்திரையும், சில இடங்களில் மெய்யெழுத்துக்களே இரண்டு மாத்திரைவரையும் அடைகின்றன. இது விசேஷ விதி. இவைகளில் ஒரு மாத்திரைக்கு உதாஹரணம், கைசுடக்குவது, கண் சிமிட்டுவது, காட்டுக்

காக்கை கத்துவது, இவைகளையும், இரண்டு மாத்திரைக்கு நாட்டுக் காக்கையையும், மூன்று மாத்திரைக்கு மயிலையும் அரைமாத்திரைக்கு கீரிப்பிள்ளையும், கத்துவதில் உதாஹரணமாகச் சொல்கிறது.

(12) ஆறுவது தர்மமாக உள்ளது ஸ்வரம். யஜுர் வேதத்தில் முக்கியமான ஸ்வரம் நான்கு. அவைகள், உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம், ப்ரசயம் என்பது. இவைகளில் ஸ்வரிதத்தில் எழுவிதம். மற்றவை ஒரே விதம். இவை எல்லா ஸ்வரமும், உயிரெழுத்தாகிய அச்சுக்களுக்கே ஏற்பட்டன. அந்த அச்சுக்களின் சம்பந்தத்தினால்தான் மெய் எழுத்துக்களுக்கு ஸ்வரங்கள். நேரிடையாகக் கிடையாது. இவ்விதமான உதாத்தம் முதலிய ஸ்வரங்களுக்குச் சில விசேஷங்கள் சொல்லப் பட்டுள்ளன. அவை பின் வருமாறு.

உதாத்தம் ஸத்வகுணமுள்ளது, ஆள்காட்டி விரலின் நடுரேகையைக் கட்டை விரலால் தொட்டுக் காட்டவேண்டும், சரீரம் விசாலமாக வேண்டும். கண்டத்தின் துவாரம் மிருதுவாக இருக்கவேண்டும், கடினமான துவனியுடன் கூடியது. ஆடு கத்துவதுபோன்றது. சங்கீத சாஸ்திரத்தில் உள்ள காந்தாரஸ்வரத்துக்குக் காரணமானது. மூர்த்தாவிலிருந்து உண்டாவது. பூமியைத் தேவதையாகக் கொண்டது. பிராம்மண ஜாதியைச் சேர்ந்தது.

அனுதாத்தமானது ஹ்ருஸ்வம், தீர்க்கம் என்னும் பேதத்தினால் இரண்டு விதமானது. அதில் ஹ்ருஸ்வ அனுதாத்தத்திற்கு தமோ குணம். சுண்டு விரலின் அடிரேகையில் காட்டவேண்டும். சரீரம் குறுகவேண்டும். கண்டம் கெட்டியாக இருக்கவேண்டும். மிருதுவான த்வனி. காளை மாட்டின் சப்தம்போன்றது. சங்கீதத்திலுள்ள ரிஷப ஸ்வரத்துக்கு காரணமானது. ஹ்ருதயத்திலிருந்து உண்டாவது. அக்னியை தேவதையாகக் கொண்டது. க்ஷத்ரிய ஜாதியைச் சேர்ந்தது. தீர்க்க அனுதாத்தத்திற்கு மயிலின் சப்தம் போன்ற த்வனியும், சங்கீதத்தில் உள்ள ஷட்ஜஸ்வரத்துக்கு காரணமானதும் என்பது விசேஷம். மற்றவை, ஹ்ருஸ்வானுதாத்தத்தைப் போலவே. பிரசயத்துக்கு தமோகுணம், நடுவிரலின் நடுரேகையில் காட்ட

வேண்டும், சரீரம் முதலியது உதாத்தத்தைப் போன்றது. சிறிது மாறுதலுள்ளது. க்ரௌஞ்சம் என்ற பறவையின் சப்தத்தைப் போன்றது. சங்கீதத்திலுள்ள மத்ய மஸ்வரத்துக்குக் காரணமானது. ஸூர்யன் தேவதை. சூத்ர ஜாதியைச் சேர்ந்தது. ஸ்வரிதங்கள் மொத்தம் ஏழுவிதம். அதாவது. நித்யம், க்ஷைப்ரம், அபிநிஹிதம், ப்ராதிஹதம், ப்ரச்லிஷ்டம், தைரோவ்யஞ்ஜனம், பாதவிருத்தம் என்பன.

அவைகளில், நித்யம், க்ஷைப்ரம், அபிநிஹிதம் என்பவைகளுக்கு, ரஜோ குணம், மோதிரவிரலின் நுனி ரேகையில் காட்டப் படவேண்டும், உதாத்தானுதாத்தங் களின் சேர்க்கையினால் ஏற்படுவது. யானையின் பிளிரல் போன்ற சப்தம் உள்ளது, சங்கீத சாஸ்திரத்தில் உள்ள நிஷாதம் என்ற ஸ்வரத்துக்குக் காரணமானது. காதுகளின் மூலத்திலிருந்து ஏற்படுவது, திருடதரமான பிரயத்னத் தோடு கூடியது, சந்திரன் தேவதை, வைசிய ஜாதி என்பது.

ப்ரச்லிஷ்டம், பிராதிஹதம் என்ற இரண்டுக்கும், கோகிலத்தின் (குயிலின்) சப்தம் போன்றதும், சங்கீதத் தில் உள்ள பஞ்சமஸ்வரத்துக்கு காரணமானதும், மிருது தரப்ரயத்னமும் என்பது விசேஷம். மீதி முன் ஸ்வரிதங் களைப்போலவே. பாத விருத்தம், தைரோவ்யஞ்சனம், என்பவைகளுக்கு, குதிரையின் கனைப்பைப்போன்றதும் சங்கீத சாஸ்திரத்தில் உள்ள தைவத ஸ்வரத்துக்குக் காரணமானதும், அல்பதரபிரயத்னமும் என்பது விசேஷம், மற்றவை,முன்ஸ்வரிதங்கள் போல். இவ்விதமான ஸ்வரங்களோடு கூடினதும் த்வனி முதலிய தர்மங்களோடும் கூடிய வர்ணங்களுக்கு, தேவதையும் ஜாதியும் தனித்தனி யாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது. அ, ஆ, எ, க, ச, ட, த, ப, ய, ச, இவைகளுக்கு வாயுதேவதை.
இ, ஈ, ஐ, க$^{2}$, ச$^{2}$, ட$^{2}$, த$^{2}$, ப$^{2}$, ர, ஷ, ,, அக்னி தேவதை.
உ, ஊ, ஓ, க$^{3}$, ஜ$^{3}$, ட$^{3}$, த$^{3}$, ப$^{3}$, ல, ஸ, ,, பூமி தேவதை.
ரு, ரூ, ஔ, க$^{4}$, ச$^{4}$, ட$^{4}$, த$^{4}$, ப$^{4}$, வ, ஹ, ,, சந்திரன் தேவதை.
ஞ, ங, ஞ, ண, ந, ம, ள, க்ஷ, மற்றுமுள்ள எல்லாம், சூரியன் தேவதை. அ முதல் ஔ வரையுள்ள ஸ்வராங்

களும். க, ச, ட, த, ப, க$^{2}$, ச$^{2}$, ட$^{2}$, த$^{2}$, ப$^{2}$, இவைகளும் பிராம்மண ஜாதிகள்.

க$^{3}$, ச$^{3}$, ட$^{3}$, த$^{3}$, ப$^{3}$, க$^{4}$, ச$^{4}$, ட$^{4}$, த$^{4}$, ப$^{4}$ என்ற பத்தும் க்ஷத்ரியஜாதி, ங, ஞ, ண, ந, ம, ய, ர, ல, வ, இவைகள், வைசிய ஜாதிகள், மற்றவை எல்லாம் சூத்ர ஜாதிகள் என்றும் பிரிக்கப்பட்டன. இன்னும், ஸ்வரங்கள் உயிரெழுத்துக்கள் இவைகளுடைய சேர்க்கையிலுள்ள மாறுதல் முதலிய விசேஷங்களும், மெய்யெழுத்து ஒன்றுக் கொன்று சேரும் பொழுது முன் எழுத்துக்கு இரட்டிப்பைச் சொல்வதும், க$^{3}$, ச$^{3}$, முதலிய இரண்டாவது எழுத்துக்கும் க$^{4}$, ச$^{4}$, முதலிய நான்காவது வர்ணங்களுக்கும் மேலே ஒரு மெய் எழுத்து வரும்போது, பூர்வாஙமம் என்ற எழுத்தின் அதிகத்தையும் அக்னி முதலிய ஸ்தலங்களில், யமம் என்ற எழுத்தின் உத்பத்தியையும் க்ருஷ்ண; இது போன்ற இடங்களில் அபிநிதானம் என்றவர்ணத்தையும் அதிகமாகச் சொல்லுகிறது. அவ்விடங்களில் நன்கு அறிந்து அதன்படி உச்சரிக்க வேண்டும். இன்னும் இது போன்ற, ஸ்வர பக்தி, அநுஸ்வாரம் முதலியவையும், மெய்யெழுத்துக்கள் முன் பின்னை எந்த எழுத்தைச் சேர்ந்ததென்பதைப் போதிக்கும் அங்கவிதியும், ஸ, ஷ, வாக ஆவது ந, ண வாக ஆவது முதலிய விசேஷங்களும், ப்ரக்ரஹம் தீர்க்கம் ஹ்ருஸ்வம் ப்லுதம் முதலியவைகளும் விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளை இங்கு விவரிப்பது அசாத்யமென்பதால் விவரிக்கவில்லை. கடைசியாக, உச்சாரணபலம் என்னும் பிரகரணத்தில் மூன்று, மூன்று எழுத்துக்களுக்கு ஒவ்வொரு கணம் என்பதாகக் கல்பிக்கப்பட்டு ஒவ்வொரு கணத்துக்கும் தனித்தனியான பலனைச் சொல்லி, அவைகளில் எது நல்ல பலனைக் கொடுப்பவையோ அந்த கணத்தை ஆரம்பத்தில் இருக்கும்படி செய்யவேண்டியதையும், சுபமான இடத்தில முடிக்கவேண்டுமென்பதையும், ஸ்ரீருத்ரம் முதலிய பிரகரணங்களில் நடுவில் நிறுத்தலாகாது என்பது முதலிய இன்னும் எண்ணற்ற தர்மங்களை உபதேசித்தும், வேதத்தையும் ரக்ஷித்து, வேதம் சொல்லும் நமக்கும் பூர்ணமான பலன் கிடைக்கும்படி செய்தும் அநேக விதத்தில் நமக்கு சிக்ஷைசெய்து வைத்து அறிவைப் பெருக்கும் சிக்ஷை முதல் அங்கம் வேதத்திற்கு.

பிராணனின் ஸ்தானத்திலுள்ளது என்பது. கடைசியாக வேதம் சொல்ல ஆரம்பிக்கும்போதும், முடிக்கும்போதும், ஹரி: என்ற பதத்தோடு சேர்த்து பிரணவத்தை உச்சரிப்பது அவசியம். வேத ஆரம்பத்தில் சொல்லாவிட்டால் நம்மிடமிருந்து வேதம் நழுவிவிடும். முடிவில் சொல்லாது போனால் அழிந்து விடும், (மறந்துவிடும்) அதனால் வேதத்தை ரக்ஷிப்பதற்காக கட்டணம் சொல்லவேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஜடை, கனம், பதம், கிரமம், முதலியவை எவ்விதம் சொல்ல வேண்டுமென்பதும் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதம் சரியான ஜாதிகளை சரிவர உச்சரிப்பதால் அந்தந்த ஜாதிகளை ரக்ஷித்த புண்யம் ஏற்படுகிறது. யஜுர் வேதத்தின் ஸ்வரூபம், சிவந்த கண்ணும், மெலிந்த இடையும், பெரிய கழுத்தும், பெரிய கன்னங்களும், கறுப்பான பாதங்களும், தாமிரவர்ணமும் உள்ளதென்றும் காசியப கோத்ரத்தைச் சேர்ந்ததென்றும் சொல்லப்படுகிறது. இவ்விதம் லக்ஷணத்தை அறிந்தவன் அழிவற்ற பிர்மானந்தத்தை அடைகிறான் என்றும் பூலோகத்தில் இந்திரன் போன்று ஸகல சௌபாக்யங்களையும் அடைகிறான்.

மாலை 4 மணி முதல் 5 மணி வரை ஸ்ரீரங்கம் ஸ்ரீகுண்டலம் ரெங்காசாரியார் அவர்களால் வேதத்தின் ஐந்தாவது அங்கமாகிய 'ஜ்யோதிஷம்' (கணித சாஸ்திரத்துடன் கூடிய வானசாஸ்திரம்) என்பது குறித்து ஓர் உபந்நியாஸம் செய்யப்பட்டது.

ஸ்ரீ

# ஜ்யோதிஷ சாஸ்திரம்

(குண்டலம் - வி. ரங்காசாரியார்)

ஜை. ஸூ. ஓம் உபதேசம் வ்யாக்யாஸ்யாம:

இது ஸ்ரீ ஜைமினி மகரிஷியால் ஜோதிஷ சாஸ்திர ஸம்பந்தமாக வெளியிடப்பட்டதான **ஜைமினீய ஸூத்ரம்** என்று சொல்லப்படுகிறதான கிரந்தத்தின் முதல அத்தியாயம், 1-வது பாதத்தில் முதலாவது ஸூத்திரம். இது கிரந்தாரம்பத்தில் மங்கள வாசகமாக அமைந்திருக்கிறது. இதன் விவரணம் வருமாறு:—

1. உபதே=ஹேபார்வதியே, உலக க்ஷேமத்திற்கு முக்ய சாஸ்திரமான ஜ்யோதிஷத்தை வ்யாக்யாஸ்யாம= விஸ்தரித்து உரைப்போமாக.

2. உபதே=சங்கருடைய சரணத்தில் சம்=லோக க்ஷேமங்கரமான ஜ்யோதிஷ சாஸ்திரத்தை. வ்யாக்யாஸ்யாம்=விக்ஞாபித்துக்கொள்வோமாக.

3. உபதிச்யதே இத்யுபதே:—முன் ஜன்மத்தின் சுப அசுபபலன்கள் எந்த சாஸ்திரத்தினால் உபதேசிக்கப்படுகிறதோ அப்படிக்கொத்த தான ஹோரா சாஸ்திரத்தை. வ்யாக்யாஸ்யாம: — விஸ்தரித்து உரைப்போமாக.

இன்னமும் இந்த ஜ்யோதிஷ சாஸ்திரத்தை உலகிற்கு விசதீகரணம் செய்தவர்களான மகரிஷிகளில் நாரத மகரிஷியானவர் தன்னால் வெளியிடப்பட்டிருக்கிற நாரத ஸம்ஹிதையில் வெளியிட்டிருக்கிறதாவது:—

ப்ரும்மா ஆசார்யோ வஸிஷ்டோ அத்திரி:
மனு: பௌலஸ்த்ய ரோமசௌ
மரீசிரங் கிராவ்யாஸ: நாரதச்சௌநகோப்ருகு:
ச்யவநோயவநோ கர்க: கச்யபஞ்ச பராசர:
அஷ்டாதசை தேகம்பீரா:
ஜ்யோதிச் சாஸ்திர ப்ரவர்த்தகா:॥

நான்முகன், ஸூர்யன், வஸிஷ்டர், அத்திரி, மநு, பௌலஸ்தியர், ரோமசர், மரீசி, அங்கிரஸ், வியாஸர், நாரதர், சௌனகர், பிருகு, ச்யவனர், யவனர், கர்கர், கசியபர், பாராசரர், இந்த பதினெட்டு மகரிஷிகள் ஜ்யோதிஷ சாஸ்திரப் பிரவர்த்தகர்களாகிறார்கள்.

மேலும், வராஹமிஹிரர், கல்யாணவர்மா, மந்திரேசுவரர், காளிதாஸர், இவர்கள் போன்ற மகா கவிகள், மகரிஷிகள் வெளியிட்டிருக்கிற ஸம்ஹிதைகளின் கருத்தைக் கொண்டதான, பிருஹஜ்ஜாதகம், ஸாராவளி, பலதீபிகை, ஜ்யோதிர் விதாபரணம், என்கிற மேலான பல கிரந்தங்களை வெளியிட்டிருக்கின்றனர்.

## ஜ்யோதிஷம் வேதாங்கம்:

சிக்ஷா, வியாகரணம், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பம், சந்தஸ், என இந்த ஆறு சாஸ்திரங்களும் வேதத்தின் பிரதானமான அங்கங்கள் ஆகின்றன. இவைகளில், வேதங்களுடைய முகமாக வியாகரணமும், காதுகளாக நிருக்தமும், கரங்களாக கல்பமும், நாசியாக சிக்ஷையும், பாதபத்மங்களாக சந்தஸும் நேத்திரங்களாக ஜ்யோதிஷமும் இருக்கின்றனவென்று சாஸ்திரங்களில் சொல்லப் பட்டிருக்கின்றன. ஆக இந்த ஜ்யோதிஷ சாஸ்திரம் வேதங்களுக்கு நேத்ரரூபமாகிறது இந்த சாஸ்திரம், கணிதஸ்கந்தம் என்றும், ஹோராஸ்கந்தமென்றும் இரண்டு பிரிவுள்ளது. முதலாவதாகிற கணிதஸ்கந்தத்தினால் வருடம் அயனங்கள், ருதுக்கள், மாதங்கள், பக்ஷம், நக்ஷத்திரங்கள் திதி, வாரம், உபராகமென்னும் கிரஹணம் இன்னும் இதுபோன்றதான ஸகலவிதமான கால தத்வங்கள் அறிவிக்கப்படுகிறதால் அந்தந்த காலங்களில் செய்யக்கூடியதான நித்ய கர்மாநுஷ்டானம் வஸந்தாதிருதுக்களில் செய்யக்கூடிய யக்ஞாதிகள்,

கிருஷிகள் (பயிர்த்தொழில்) தினந்தோறும் செய்கிறதான கிருஹகிருத்யங்கள், இன்னமும் உபநயனம் விவாஹம் முதலான சுப கார்யங்களும் செய்யப்படுகின்றன.

இரண்டாவதாகிற ஹோராஸ்கந்தத்தினால் ஜாதகங்களின் மூலம், மனிதர்கள் முதல் உலகில் உள்ளதான ஸ்தாவரங்களான, மரம், செடி, கொடி, தடாகம், போன்றவைகள் ஜங்கமங்களாகிற பசு முதலான பிராணி க்ஷேத்ராதி வர்க்கங்கள், ஆகியவற்றின் ஆயுஸ், ஸுகம் துக்கம், கிருஹங்களைத் தரக்கூடிய பிரபல யோகங்கள் (கீழ் நடந்தவை, தற்காலம் நடப்பவை, இனி ஏற்படக் கூடியவை) அறியப்படுகின்றன.

மேலும் ஸ்கந்தத்வ ரூபமான இந்த ஜ்யோதிஷ சாஸ்திரத்தில் சொல்லியிருப்பதை கவனித்தே நாம் அனைவரும் பிரதிவருஷமும் செய்து வருகிறதான கிருஷி என்கிற பயிரிடுவதற்கு நல் ஏர் கட்டுவது, கதிர் அறுப்பது தான்யஸங்கிரஹணம் செய்வது. போன்ற எல்லா விதமான கார்யங்களும் செய்து வருவதென்பது ஸகலரும் நன்கறிந்ததே.

உலகில் உள்ள இந்தியர்கள், மகம்மதியர்கள் இன்னமும் ஐரோப்பியர்கள் முதலானவர்களும் ஜ்யோதிஷ சாஸ்திரத்தை முக்யமாகக் கையாண்டு வருகின்றனர். மேலும் பல இடங்களில் ஏராளமான திரவியச் செலவில் நக்ஷத்திர ஆபீஸ்கள் நிர்மாணம் செய்து அதன் உதவி கொண்டே உலகின் கால நிலைகளை முன் கூட்டி பத்ரிகை வாயிலாகவும் ரேடியோ வாயிலாகவும் அறிவித்து வருகின்றனர்.

ஸூர்யன், சந்திரன், அங்காரகன், புதன், பிருஹஸ்பதி சுக்கிரன், சனி, ராஹு, கேது என்கிற நவக்கிரஹங்களே இந்த சாஸ்திரத்தினால் அறியக்கூடியவர்களாகிறார்கள். மேலும் இந்த நவக்கிரகங்களே இந்த சாஸ்திரத்தின்படி அனைவர்களுக்கும் பலப்பிரதாக்களாகிறார்கள். இவர்கள் ஆகாயத்தில் இருப்பவர்கள். நம் கண்களால் காணக்கூடியவர்கள். ஆகாயத்தில் உயரமான பாகங்களில் இருந்து கொண்டு அந்த ஸூர்யன் முதலானவர்கள் ஸகல உலகையும் ஸதா பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குள் ஸூர்யனே தலைவர்.

ஸூர்ய ஆத்மா ஜகதஸ் தஸ்துஷச்ச

ஜகத:—ஜங்கமம் என்கிற அசையும் பொருள் தஸ்துஷ: தாவரங்களாகிர மரம் செடி, கொடிகள் இவைகள் எல்லாவற்றிற்கும், ஸூர்ய:—ஆத்மா. ஸூர்ய பகவானே ஆத்மாவாகிறான் அதாவது யஸ்யோதயே ஜகதிதம் ப்ரதிபோதமேதி எவருடைய ஸூர்யனுடைய) உதிப்பதால் இந்த உலகம் அறிவு பெறுகிறதோ. இவ்வாறு நம் கண்கொண்டும் காணும்படியாக அறிவிக்கிற சாஸ்திரம் ஜ்யோதிஷம் என்னத் தட்டில்லை.

வேதத்தில் காடகம் முதலாவது பிரபாடகத்தில் சுக்கிலபக்ஷம் பிரதமை முதல்கொண்டு பௌர்ணமீ முடியவும், இவ்விதமே கிருஷ்ணபக்ஷ திதிகளையும், இவ்விதமே ஒரு தினத்தில்உள்ள காலங்கள் (முஹூர்த்தங்கள்) அவற்றின் குணங்கள் இவைகளை விரிவாகக் காணலாம். இவ்விதமே முதலாவது அஷ்டகத்தில் 5-வது ப்ரபாடகத்தில் அசுவதீ முதலான நக்ஷத்திரங்கள், பிராத: கால, ஸங்கவகாலம் முதலான காலங்கள், மேஷம் முதலிய ராசிகள் ஸூர்யன் ஸஞ்சாரம், இவைகள் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. மேலும் ஸூர்ய பகவான் இவ்வுலகவாழ்க்கைக்கும், மோக்ஷ மார்க்கத்திர்க்கும். முக்ய காரணமாகிறார். சாந்தோக்யம் முதலான உபநிஷத்துக்களிலும் இது விஷயம் விரிவாகக் காணப்படுகிறது. ஆக ஜ்யோதிஷ சாஸ்திரமானது ஸகல விதத்திலும் எல்லார்க்கும் அத்யந்த உபகாரகமாகிறது என்பது ப்ரஸித்தமானதே.

தஸ்மாத் த்விஜைரத்யய நீயவேதத் புண்யம் ரஹஸ்யம்
பரமம் சதத்வம்
யோ ஜ்யௌதிஷம் வேத்தி நரஸ்ஸ ப்யத் தர்மார்த்த
மோக்ஷரஸ லபதே யசச்ச.

ஆகையால் இந்த சாஸ்திரத்தை, பிராம்மணர் க்ஷத்ரியர் வைசியர், சூத்ரர்கள், முதலான அனைவரும் நல்ல குருமுகமாகவே கற்றறிந்து கொள்ளவேண்டியது.

புண்ணியத்தைத் தருவதும், பரமதத்வமானதும் பரம ரஹஸ்யமுமான இந்த ஜ்யோதிஷத்தை முறைப்படி தெரிந்துகொள்ளுகிறவன் தர்மம், அர்த்தம், காமம் கீர்த்தி

இவைகளுடன் நீடூழி வாழ்ந்து இறுதியில் மோக்ஷத்தை அடைகிறான்.

இத்துடன் மாலைக் கூட்டம் கலைந்தது.

மறுபடியும் இரவு 7 மணிக்கு மகாநாடு கூடியது. 7 மணி முதல் 8-15 மணி வரையில் சென்னை 'கலைமகள்' ஆசிரியர் ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் அவர்கள், தேவாரம், திருவாசகம முதலிய பதினேரு திருமுறைகளிலுமுள்ள நால்வேத ஆறங்கங்களின் சிறப்புக்களைக் குறித்து ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர். 8-15 மணி முதல் 9-30 மணி வரை கும்பகோணம் இளையவல்லி ஸ்ரீ உ. வே ஸ்ரீநிவாஸாசாரியார் நாலாயிர திவ்ய ப்ரபந்தங்களிலுள்ள நால் வேத ஆறங்கங்களைக் குறித்து ஒரு பிரசங்கம் செய்தார்.

---

ஸ்ரீ

# நாலாயிரத்தில் நால்வேத ஆறங்கக் குறிப்புகள்

இளையவல்லி - ஸ்ரீநிவாஸாசாரியார்.

## சுலோகம்

பூதம் ஸரஸ்ச மஹதாஹ்வய பட்டநாத
ஸ்ரீபக்திஸார குலசேகர யோகிவாஹாந்।
பக்தாங்க்ரிரேணு பரகால யதீந்த்ர மிச்ராந்
ஸ்ரீமத் பராங்குசமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம்॥

நாலாயிரம் என்பது தமிழ் வேதமென வழங்கப் படும். விசேஷித்துச் சொல்லுமிடத்து உபநிஷத்தென்றே உத்கோஷிக்கப்படும்.

இதன் பெருமையை மறைமுடித்தேசிகனும், "ஸர்வ வர்ணார்ஹவேத" என்றும், "ச்ராவ்ய வேதாத்" என்றும், "வேதாநாகஸ்த்ய பாஷா வபுஷ உததரத் ச்ரேயஸே தேஹிநாம்ய:" என்றும், "ஆம்நாயாநாம் ப்ரக்ருதி மப ரசம் ஸம்ஹிதாம் த்ருஷ்ட வந்தம்" என்றும், "தத்தாத் ருக்தாம்ரபர்ணீ தடகத சடிஜித் த்ருஷ்ட ஸர்வீய சாகா" என்றும், "ஸர்வோசிதாயாமுபநிஷதி" என்றும், "அகதய தகில த்ராமிட ப்ரஹ்மதர்சீ" என்றும், பேசி, இத்தனை பெருமை மட்டில் கொண்டதல்ல இது; சடஜிதுபநிஷத் துக்தவிந்து" என்றும் கொண்டாடிப் பேசினார்.

இப்படியுள்ள இவர் திருவாக்கெல்லாம், "மிக்க வேதியர் வேதத்தினுட் பொருள் நிற்கப்பாடி, என்றும் "நமாம்யஹம் த்ராவிட வேத ஸாகரம்" என்றும், "வேதார்த்த ரத்நநிதி:" என்றும், "ஸஹஸ்ராசாகாம் யோத்ராக்ஷீத் த்ராவிடீம் ப்ரஹ்ம ஸம்ஹிதாம்" என்றும்

அருளிச் செய்துள்ள பூர்வாசார்யர்களின் திருவுள்ளக் கருத்தின்படியேயாகும்.

பின்னும், நாலாயிர திவ்ய ப்ரபந்தத்தை வெளியிட்டருளின ஆழ்வார்கள் பதின்மரையும், எம்பெருமானின் அபிநவதசாவதாரபூதர்கள் என்றும், இவர்கள், திவ்ய ஸூக்திகளை வெளியிட்டருளினபடியை, மேகங்கள் ஸமுத்திர ஜலத்தை வாங்கி ஸர்வோப ஜீவ்யமான தண்ணீராக உமிழுமாப்போலே வேதாந்தங்களில் வேண்டும் ஸாராம்சத்தை ஸர்வருக்கு மதிகரிக்கலான பாஷையாலே ஸங்க்ரஹித்துக் காட்டியும் என்றும் அருளிப் போந்தார்.

கல்பஸூத்ர வ்யாக்யாதாவான பெரியாழ்வார் "நால் வேதக் கடலமுதை, வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்த விளக்கை" என்று, பேசுகிற எம்பெருமானை உள்ளபடியே விளக்கிக் காட்டும் தமிழ் வேதக் கடலில் நம்போலியர், தடஸ்தார், என்றும், பின்னும், பரம் தடஸ்தா:, என்றும் பேசி நிற்கலாம் தொழிய, அவ்வநுபவக் கடலுள் ஆழ்ந்தும், அநுபவபரர்களை ஆழச் செய்தும், ஆழ்வார்களாய் விளங்கும், அவர்கள் கண்டு அருளிய, அருமறைகளின் ஆராய்ச்சியினருமையை ஆரே அறிந்து ஆராயவல்லார்!: ஆகிலும், அதனில் ஒரு சிறு திவலையை யாவது அநுபவித்து அகமகிழ்ந்தோம்.

இவ்வாழ்வார்களெல்லாரும், வடமொழி வேதத்தில் "யத்வைகிஞ்ச மநுரவதத் தத்பேஷஜம்" என்கிறபடிகளில், பலவாறு மநுநீதி முதலான பல கலைகளை விசேஷமாக விளம்பியிருக்குமாப்போலே "முந்தையாயிரம்" என்றும், பொய்யில் பாடல்" என்றும் தாங்கள் கண்டு வெளியிட்ட இத்தமிழ் மறைதன்னிலும் பலவிடத்து, "சுடர்மிகு சுருதி" என, வடமொழி வேதத்தையும், "வடமொழி மறைவாணர்" என, மேலை வானவரில் மிக்க வேதியர்களையும், விசேஷித்து வெளியிடுமிடங்கள் தன்னில், "நல்ல வெந்தழல் மூன்று நால்வேதம் ஐவேள்வியோடாறங்கம் வல்ல வந்தணர்மல்கிய நாங்கூர்" என்று, அவர்கள் அநுஷ்டிக்கும் வைதிக கர்மங்களையும், அதற்குத் தகுதியாக வஸிக்கத் தக்க இடமாக அவர்கள் பரிக்ரஹித்தது, "திருநாங்கூர், போன்ற திவ்ய தேசங்களனைத்தும் என்றும், மேலும், தங்களுடைய அனைத்து வைதிக மந்திரத்

நாலும் ஆராத்யனாய் விளங்குமவனும், "துல்யசீல, என்றபடியே. மறைநான்கு முன்னோதிய பட்டனை, எம்பெருமான் என்றும், இப்படியாக. வேதத்தையும், வேதியர்களையும், வேள்விகளையும், வேதவேத்யனையும், அவன் வாழுமிடங்களையும் தனித்தும் சேர்த்தும், சொன்னதையே திரும்ப ஆதாரதிசயத்தால், ஒருகால் சொன்னதை, ஒன்பதின்கால் பேசி அநுபவிப்பார்கள்.

இதனால், எம்பெருமானின் மெய்யடியார் எவரும் இரு கண்கள், எனக் கொண்டாடிப் போற்றிவரும் இரு மொழி வேதங்களையும் இனிது ஓதி உணர்ந்து உள்ளங் களித்து விளங்குவது சாலச்சிறந்தது, என்று அநுபவ ரஸிகர்களின் அழகிய வார்த்தை, அனைவருக்கும் உபாதேய மென்பதில் ஓர் ஐயமில்லை.

ஆழ்வார்கள் அருளிய நாலாயிர ப்ரபந்தத்தில் ஆழ்ந்தும், அன்றிக்கே, மேற்பார்வையாக ஆராய்ந்தாலுமே, ஆழ்வார்களனைவருக்கும், வேதங்களிடத்தும், அதன் ஆறங்கங்களினிடத்தும் உள்ள ஆராத காதல் அவதி கடந்து நிற்குமென்பது ஆர்க்கும் அறியலாகும்.

அவ்வனைத்தையும் அறிந்து வெளியிடுதல் "அநந்த பாரம்" என்கிற சுலோகத்தின்படியே இயலாத கார்யம் ஆனதால், "ஸ்தாலீபுலாக ரீத்யா" ஓர் பாத்திரத்திலுள்ள ப்ரஸாதத்தில்" "ஓரவிஷ" பதம்பார்ப்பது, என்கிற முறையில் ஆராய்வதே இங்கும் முறையாகும்,

நாலாயிரத்தில், வேதங்களைப் பேசுமிடங்கள் வேள்வியைப் பேசுமிடங்கள், வேதாங்கங்களைப் பேசுமிடங்கள். வேதம் வல்லார்களைப் பேசுமிடங்கள். வேதவேத்யனைப் பேசுமிடங்கள், வேதம் வல்லார்களையும், வேதவேத்யனையும் சேர்த்துப் பேசுமிடங்கள், வேதம் பயின்று வாழும் திவ்யஸ்தலங்கள், வடமொழி உபநிஷத்துக்கு ஒற்றுமையாக, தென்மொழி உபநிடதத்தில் பேசப்படுமிடங்கள் இவைகளில், முடிந்தவளவு, வியாஸத்தின் அதிக வளர்த்தலுக்கு இடமிராதபடி சில வாக்கியங்களில் அர்த்தம், சில வாக்கியங்களில் தாத்பர்யம், சிலவாக்கியம் யாதொருபடியுமின்றி, வெறும் வாக்கியசைலியுடனும், இங்கு விவரிக்கப்படுகிறது.

தலையங்கத்தில் "நாலாயிரத்தில் நான்கு வேத ஆறங்கங்களின் குறிப்புகள், எவைக் காணப் பட்டாலும், முன் கண்டபடி விவரணம் செய்தால் உசிதமாகு மென இவ்வண்ணம் கையாளப்படுகிறது.

எவ்விஷயத்தை ஆராயப் புகுந்தாலும் பூர்வர்கள் போந்த வழியைப் பின்பற்றிச் செல்வதே சாலச்சிறந்த தாதலால், "சந்தமிகு தமிழ் மறையோன் தூப்புற் தோன்றும் வேதாந்த குருவின், அநுபவ பரீவாஹமாயக் கிளர்ந்த "பொய்கை முனி" என்றாரம்பிக்கிற பாட்டின்படி அநுபவம் கொள்ளப்படுகிறது.

பொய்கை முனி, பூதத்தார், பேயாழ்வார் தண்பொரு நல் வருங் குருகேசன் விட்டுசித்தன் துய்ய குலசேகரன் நம்பாண நாதன் தொண்டரடிப்பொடி, மழிசை வந்தசோதி வையமெலாமறை விளங்க வாள்வேலேந்தும் 'மங்கையர் கோனென்றிவர்கள் மகிழ்ந்து பாடும் செய்ய தமிழ்மாலைகள் நாம் தெளியவோதித் தெளியாத மறை நிலங்கள் தெளி கின்றோமே"

"இப்பாட்டில், 'நாம்" தெளிகின்றோம் என்கிறார். அதாவது, "வையத்துள்ளே, வேதாந்த வாரியன் என்று இயம்ப நின்றோம், என்று, தமக்கு ஸ்ரீரங்கநாதன் அருளின வேதாந்தா சார்யபதம் ஸார்த்தமாக அமைந்து அனைவரும் தன் பிருதத்தை ஆரவாரித்திருக்கச் செய்தேயும், இத்தனை பெருமை தனக்குக் கைகூட, க்காரணம், ஆழ்வார்கள் அருளிச்செயலை ஓதி, தெளியாத மறை நிலங்கள், தெளிந்தபடி யன்றோ, என்று கொண்டு, நாம், என்கிற அழகு எவ்வளவு ரஸம்.

ஆழ்வார்கள் வரிசையில் ப்ரபந்த சாரத்தில் காட்டிய படியே இங்கும் கொண்டு, மங்கையர்கோன் என்பதற்கு முன்னே "மழிசை வந்த சோதி," என்று இப்பாசுரத்தில் பேசப்பட்டாலும், அவதாரக்கிரமமான, பொய்கை, பூதம், பேயாழ்வார், மழிசையர்கோன், மகிழ்மாறன், என்று வரிசையிட்டு அவரவர்கள் அநுபவம் விளக்கப்படுகிறது. நம்மாழ்வாருக்கு மேல், இப்பாட்டின்படியே வரிசையிடப் படுகிறது.

## 1, பொய்கையாழ்வார்.

இவரருளிய ப்ரபந்தம் இயற்பாவில் முதல் திருவந்தாதி.

இதனில் 33ல்

நகாமருள் புரிந்து நான் முகற்குப் பூமேல் பகா மறை பயந்த பண்பன், என்று, பிரமனுக்கு இடங் கொடுத்து, வேதத்தையும் உபதேசித்த பெருமையையும்,

37ல்

வகையறு நுண் கேள்வி வாய்வார்கள், நாளும் புகை விளக்கும், பூம்புனலுமேந்தி, திசை திசையின் வேதியர்கள் சென்றிறைஞ்சும் வேங்கடம், என்று வேதோந்த ஸூக்ஷ்ம விஷயச்ரவணங்கள் பண்ணினவர்கள். வேதவிதிப்படி, திருவேங்கட மாலுக்கு அர்க்கியாதி தூபதீப உபசாரங்கள் செய்வதையும்,

60ல்

சரணமறை படைந்த தாமரையான், என்று எல்லாருக்கும் ஹிதத்தைச் சொல்லுமதான வேதத்தை, தான் ஸர்வேச்வரனிடம் ஓதி, அப்பிரமன் அதனை, அனைவருக்கும் வெளியிடுகிற பெருமையையும்,

68ல்

நால் வேதப் பண்ணகத்தாய், என்று எம்பெருமான், ஸ்வரப்ரதானமான நான்கு வேதங்களாலும் அறியப்படு மவன் என்பதையும், அருளுகிறார்.

## 2, பூதத்தாழ்வார்.

இவர் அருளிய ப்ரபந்தம் இயற்பாவில் இரண்டாந் திருவந்தாதி.

39ல்

"ஓத்தின் பொருள் முடிவு இத்தனையே; மாதவன் பேர் சொல்லுவதே ஓத்தின் சுருக்கு" என்று "வேதாக்ஷ ராணி யாவந்தி படிதாநித்விஜாதிபி:தாவந் திஹரிநாமாநி

கீர்த்திதாரி நஸம்சய: என்கிற சுலோகத்திற்கு ஒத்தபடி பகவன் நாம ஸங்கீர்த்தனத்தின் பெருமையையும். அனவரிய வேதத்தான், வேங்கடத்தான், என்று, அநந்தமான வேதங்களினால் ப்ரதிபாதிக்கப் படுமவன் அவன்; நமக்காக அவன் ஸுலபனாய் வந்து வேங்கட மாமலையில் விளங்குகிறான், என்பதையும்;

48ல்

உணர்ந்தாய் மறைநான்கும், என்று ஒவ்வொரு கல்பத்திலும் வேறு படாதே, முன்போல் ஒரு படியே ஸ்ருஷ்டி காலந்தோறும் பிரமனுக்கு உபதேசிக்க, அபௌருஷேயமான வேதங்கள் நான்கையும், உள்ளபடியே உணர்ந்திருந்து, எம்பெருமான் வெளியிடும் பெருமையையும்,

83ல்

மறை ஆங்கென உரைத்த மாலை, என்று, வேதங்களும் ப்ரத்யக்ஷமாகக் கண்டு சொல்லமாட்டாதவன் எம்பெருமான், என்று, அவ்வெம்பெருமான் பெருமையையும்,

96ல்

மூர்த்தி, மறையாவான், என்று, வேதப்ரதிபாத்யனும், வேதங்கொண்டு வளர்க்கவேண்டும் த்ரேதாக் நிகளினால் ஆராத்யனும், எம்பெருமான் என்பதையும் அருளுகிறார்.

3, பேயாழ்வார்

இவர் அருளிய ப்ரபந்தம் இயற்பாவில் மூன்றாந் திருவந்தாதி.

11ல்

நன்கோதும் நால் வேதத்துள்ளான், என்று, நன்றாக ஓதப்படும் நான்கு வேதங்களினாலும் எம்பெருமான் ப்ரதிபாதிக்கப்படுமவன் என்பதையும்,

12ல்

மறையென்னும் நான்கோதி நன்குணர்வார் காண்பரே, நாடோறும் பைங்கோத வண்ணன்படி, என்று வேதத்தை

நன்றாக ஓதி அவற்றின் பொருளுணர்ந்தவர்களே, எம்பெருமானைக் காணப்பெறுவர் என்பதையும்,

14ல்

நாற்பால வேதத்தான் வேங்கடத்தான் என்று, 11ஆம் பாட்டில் பேசின பெருமையையே மறுபடியும், ஆதராதிசயத்தால் தாம் அநுபவிக்கும்படி திருமலையான் விளங்குகிற பெருமையையும்,

30ல்

வாய்ந்தமறை, என்று, எம்பெருமான் எழுந்தருளி நித்யவாஸம் பண்ணும் ராஜதானிகளைப் பெயர் குறிப்பிட்டுப் பேசுமிடத்து, நன்கமைந்த வேதமும், அவனுக்கு முக்கியமான ஓர், இருப்பிடமென்பதையும்.

31ல்

செவி தெரியா நாகத்தான், நால்வேதத்துள்ளான், என்று, தளித்துக் காது தெரியாத பாம்பினணையான் நால்வேதத்துக்குள் பொருளாய் விளங்குமவன் என்பதையும்,

39ல்

மறையாய் மறைப்பொருளாய், என்று, **வேதமும்,** வேத ப்ரவர்த்தகனும், வேதத்திற்குப் பொருளாய் நிற்பவனும், அவனே என்பதையும்,

77ல்

ஆய்ந்த அருமறையோன் நான்முகத்தோன், என்று, ஆராய்ந்து அதிகரிக்கப்பட்ட வேதங்களையுடையவன் பிரமன் என்று பேசி, எவரும் வேதங்களை ஆராய்ந்து அறிதல் ஆவச்யகமென்பதையும்,

84ல்

உளளுய நான்மறையினுட்பொருளை, என்று 39ல், பொருளாய், என்று பேசினது போராடுமே ஸகல வேதங்களுக்கு உட்பொருளாய் நிற்பவனும் அவனே என்பதையும் அருளுகிறார்.

## 4. திருமழிசை ஆழ்வார்

இவர் அருளின ப்ரபந்தங்கள். இயற்பாவில் நான்முகன் திருவந்தாதி என்பதும், முதலாயிரத்தில் திருச்சந்த விருத்தம் என்பதும்,

### நான்முகன் திருவந்தாதி

13ல்

வீடாக்கும் மெய்ப்பொருள்தான், வேதமுதற் பொருள்தான், என்று, வேதமுழுவதற்கும் முதற்பொருளாய் விளங்குமவனே, மோக்ஷமளிக்கும் மெய்ப்பொருளாய் நிற்குமவன் என்பதையும்,

69ல்

செவிக்கின்பமாவதுவும் செங்கண்மால் நாமம், பார்க்கில் மறைப்பொருளுமத்தனையேதான், என்று பகவன் நாம ஸங்கீர்த்தனப் பெருமையை, பூதத்தாழ்வாரின், இரண்டாந் திருவந்தாதி 39ஆவது பாசுரப்படி அருளிச் செய்து,

### திருச்சந்த விருத்தம்

13ல்

சாமவேத கீதனாய சக்ரபாணியல்லையே, என்று, திருச்சக்கரத்தைக் கையிற் கொண்டவன், ஸாமவேத ப்ரதிபாத்யன், என்பதையும்,

14ல்

அங்கமாறும், வேதநான்குமாகி நின்றவற்றுளே தங்குகின்ற தன்மையாய்.........சார்ங்கபாணியல்லையே, என்று,

ஹே சார்ங்கபாணியே, முன் உன்னை சக்ரபாணியே என்று பேசின பாட்டில் வெளியிட்டபடி, சாமவேதகீதனே, என்று சாமவேதகீதனாய் மட்டில் உள்ளவனாக நான் உணர்ந்து பேசினேன், என்று திருவுள்ளங் கொள்ளாதே, சிக்ஷாதி, ஆறங்கங்களும், நான்கு வேதங்களுமாகி, அவைகளில் ப்ரதிபாதிக்கப்பட்டு ஸ்திரமாக விளங்கும் எல்லாப் பெருமைகளையும் உடையவன் நீ, என்பதையும்,

19ல்

புள்ளதாகி வேதநான்கு மோதினாய், என்று, அன்னமாகி அறுமறைகளை அன்று அயனுக்கு அருளின பெருமையையும்,

23ல்

நால்விறத்த வேத நாவலர் நல்ல யோகினால் வணங்கு, என்று, உதாத்தம், அநுதாத்தம், ஸ்வரிதம், ப்ரசயம், என்கிற நான்கு வகை ஸ்வர பேதங்களைக் கொண்ட வேதங்களை உச்சரிக்குமவர்கள் நல்ல உபாயங் கொண்டு பொழுது நிற்கிற பெருமையையும்,

34ல்

வேதமாகி வேள்வியாகி, என்று, வேதமும், அது கொண்டு செய்யப்படும் யாகமும், அதனால் ஆராத்யனும் எம்பெருமான் என்பதையும்,

56ல்

விலங்கு நூலர் வேதநாவர் நீதியான கேள்வியார் என்று அஷ்டவர்ஷம் ப்ராஹ்மணம் உபநயீத தம் அத்யாபயீத, என்கிற விதியை நினைப்பூட்டியும் உபநயனம் செய்யப்பட்ட பிறகே, வேதாத்யயநத்தி யோக்யதை என்பதையும், ஆசார்யர்களிடத்தில் ச்ரவணம் பண்ணவேண்டிய முறை தவறாதே கேட்க வேணு மென்பதையும், விலங்கு நூலர்க்கே, யஜ்ஞோபவீததாரணம் பண்ணுமவர்க்கே, வேதநாவராய் விளங்கும் பெருமை உள்ளது என்பதையும்,

90ல்

நலங்கொள்ளாய நற்கலைகள் நாவிலும், என்று, வேதங்களின் நன்மைகளையும்,

103ல்

இருக்க வந்த வேத நீதியாகி நின்ற நின்மலா, என்று பல ருக்குகள் சேர்ந்த வேத ப்ரதிபாத்யனான் பரிசுத்தன் என்பதையும்,

109ல்

இருக்குவாய் முனிக் கணங்களேத்த நானுமேத்தினேன். என்று, மஹர்ஷிகள் வேதமோதும் வாக்கையே கொண்டவர்கள் என்பதையும்,

117ல்

நச்சு நாகணைக் கிடந்த நாதன் வேதகீதனை, என்று, எம்பெருமான் படுக்கை வாய்ப்பிலும் வேறு ஒன்றையும் பொருட்படுத்தாதே வேதகீதந் தன்னையே கேட்டுக் கொண்டு உல்லாஸமாக விளங்குமவன் என்பதையும் அருளிச்செய்து போந்தார்.

## 5. நம்மாழ்வார்

இவர், திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி, என நான்கு ப்ரபந்தங்கள் அருளினர்.

### திருவிருத்தம்

64ல்

இருக்கார் மொழியால் நெறியிழுக்காமை, உலகளந்த திருத்தாளிணை நிலத்தேவர் வணங்குவர், என்று, மூவுலகளந்த சேவடியை பூமி தேவர்களான பிராமணர்கள், வேத மந்திர வழி தவறாமல், வணங்குவர், என்பதையும்,

79ல்

வேதனை வெண்புரி நூலனை, விண்ணோர் பரவுகின்ற நாதனை, ஞாலம் விழுங்குமநாதனை, ஞாலம் தத்தும் பாதனை, என்று, எம்பெருமான், வேதம் வல்லவன், சுத்தமான யஜ்ஞோபவீதமுடையவன், நித்ய ஸூரிகளால் ஸ்தோத்திரம் பண்ணப்படுமவன், ப்ரளய காலத்தில் உலகை வயிற்றில் வைத்துத்தான் நோக்கி, தன்னை நோக்குவார், ஒரு மேவார், இன்றி விளங்குமவன், ஆச்ரிதர்க்காக தன்னைச் சிறுகச் செய்துகொண்டும், வளர்த்திக்கொண்டும் காடுமேடு பாராதே தன் பாதத்தால் பூமியை அளக்குமவன் என்றிப்படியெல்லாம் பின்னும் பேசி, இவ்வளவு

பெருமை படைத்தவனைத் தொழுவார் எவர், அவர் விண்ணுளாரிலும் சீரியர் என்பதையும்,

பெரிய திருவந்தாதி
61ல்

மண்ணளந்த வந்நாள் மறைமுறையால் வானாடர்கூடி திருவிருத்தத்தில் குறிப்பிட்ட பாசுர அநுபவமான என்று உலகளந்த சேவடிதத்திலேயே, உம்பர்களும், உவந்து புஷ்பங்கள் தெளித்தாற்போல் வெளியிடுகிற அநுபவத்தி லும், அவ்வானாடரும், மறைமுறை கொண்டே மந்திர புஷ்பங்களிட்டார்கள் என்றருளி, நிலத்தேவரோ, மேலாத் தேவரோ, எவரும், எம்பெருமானை மறைமுறைகொண்டே தொழுது நிற்பதால், இருக்கெசுச் சாமவேத நான்மலர், கொண்டு ஏத்துவதே ஏற்ற செயல் என்பதையும் அருளிச் செய்து,

திருவாய்மொழியில் பல விடங்களிலும், வேதங்கள் முதலானதின் பெருமை பேசி, தாம், ஸ்ரீமத் வேதமார்க்க, ப்ரதிஷ்டாபனாசார்யர்களில் அக்ரகண்ணியர் என்பதனை விளக்குகிறார்.

அப்படி ஆழ்வார் பல விடங்களில் பரக்கப் பேசுவதால் இவ்வியாஸம் மிகவிரியாமைக்காக, பின்னர், பெரியோர் களின் நியமனங்கிடைக்குங்கால் பொருளுடன் புலப்படுத்த லாமென்றெண்ணி, இனி, பாசுரங்களின், வடிவம், எண்ணிக்கை முதலான சில குறிப்பு, ஏதாவது ஆங்காங்கு காட்டக்கூடிய விஷயங்களுண்டாகில், அவை, இவ்வாறு எழுதப்படுகிறது.

ஒரு நான்கு ஆழ்வார்கள் அநுபவத்தில் சிறிது விவரணம் செய்ததை அடியொத்தியே, விவேகிகளான ரஸிகர்கள், மேலும் பொருள் கொள்வார்கள் என்கிற அபிப்ராயத்தாலும், பொருளுடன் வரையாது வெறும் பாசுரங்களே காட்டப்படுகிறது. தவிர இவ்வாழ்வார், பகவாநுபவ பரிவாஹமான திவ்யஸூக்தி "எங்ஙனே சொல்லினும் இன்பம் பயக்குமே" என்றும் திருவாய் மொழி 7-9-11ல் அருளிச் செய்த அழகும் அப்படியே ஒருவாறு அநுபவங்கொள்ளவும் தூண்டுகிறது.

## திருவாய்மொழி

முதற்பத்து, முதல் திருவாய்மொழி, ஏழாம் பாட்டு.

| | | | |
|---|---|---|---|
| சுடர் மிகு சுருதியுளிவையுண்ட சுரன் | 1 | 1 | 7 |
| ஓதம்போல் கிளர் வேதநீரன் | 1 | 8 | 10 |
| முழுவேழுலகுக்கும் நாதன் வேதமயன் | 2 | 7 | 2 |
| மிக்கார் வேத விமலர் விழுங்கும் என் அக்காரக் கனி | 2 | 9 | 8 |
| வேதமுன் விரித்தான் விரும்பிய கோயில் | 2 | 10 | 10 |
| ஓதுவாரோத்தெல்லா மெவ்வுலகத் தெவ் வெவையும் சாதுவாய் நின் புகழின்தகை யல்லால் பிறிதில்லை | 3 | 1 | 6 |
| மறையாய நால்வேதத்துள் நின்ற மலர்ச்சுடர் | 3 | 1 | 10 |
| வேதியர் முழு வேதத்தமுதம் | 3 | 3 | 5 |
| வேதமுதல்வனைப்பாடி | 3 | 5 | 5 |
| பாவியல் வேத நன்மாலை பலகொண்டு தேவர்கள் மாமுனிவரிறைஞ்ச நின்றவன் | 4 | 2 | 3 |
| வேதம்வல்லார்களைக் கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து | 4 | 6 | 8 |
| மிக்க ஞான மூர்த்தியாய வேத விளக்கு | 4 | 7 | 10 |
| வேதப் புனித இருக்கை நாவில் கொண்டச் சுதன் தன்னை ஞானவிதி பிழையாமே பூவில் புகையும் விளக்கும் சாந்தமும் நீரும்மலிந்து மேவித்தொழு மடியாரும் பகவரும் மிக்கதுலகு | 5 | 2 | 9 |

பகவதாராதனம் முழுவதும் வைதிக மந்திரங் கொண்டே என்பதை இதனில் வெளியிட்டார்.

தெருள்கொள் நான்மறை வல்லவர் பலர்
வாழுசிரீவரமங்கல நகர் 5 7 3

தேறு ஞானத்தர் வேத வேள்வியருச் சிரீவர
மங்கல நகர் 5 7 4

செந்தொழிலவர் மேத வேள்வியருச் சிரீவரமங்
கல நகர் 5 7 7

தெள்ளியார் திருநான் மறைகள் வல்லார் மலி
தண்சிரீவரமங்கை 5 7 9

பாடு நல்வேதவொலி பரவைத் திரைபோல்
முழங்க, மாடுயர்ந்தோமப் புகைகமழும்
தண் திருவல்லவாழ் 5 9 3

நல்ல வந்தணர் வேள்விப் புகை, மைந் நலங்
கொண்டுயர் விண்மறைக்கும் தண் திரு
வல்லவாழ் 5 9 5

இங்கு நல்ல அந்தணர், என்பது வேறு ப்ரயோஜனத்தைக் கருதாது பகவானின் முக மலர்ச்சியையே எதிர் நோக்கி எந்த வைதிக கர்மாக்களையும் செய்பவரைச் சொல்லுகிறது.

விடலில் வேதவொலி முழங்கும் தண் திருவண்
வண்டூர் 6 1 4

பண்புடை வேதம் பயந்த பரன் 6 6 5

எங்குமெழுந்த நல் வேதத்தொலிநின்றோங்கு
தென்திருப்பேரை 7 3 4

நான்மறையாளரும் வேள்வியோவா, திருப்
பேரை 7 3 6

தொல்லை நன்னூலில் சொன்ன உருவும்
அருவும் நீ 7 8 10

| | | | |
|---|---|---|---|
| பாடும் பெரும் புகழ் நான் மறை வேள்வி ஐந்து ஆறங்கம் பன்னினர் வாழ் நீடுபொழில் திருவாறன் விளை | 7 | 10 | 3 |
| சரணமாகிய நான்மறை நூல்கள் | 8 | 3 | 2 |
| நல்ல நான் மறையோர் வேள்வியுள் மடுத்த நறும் புகை விசும் பொளிமறைக்கும்... திருச் செங்குன்றூர் | 8 | 4 | 5 |
| அமர்ந்த சீர் மூவாயிரவர் வேதியர்கள் தம்பதி திருச்செங்குன்றூர் | 8 | 4 | 10 |

இங்கு இதற்கு முதல் வ்யாக்யானமாக வமைந்த திரு ஆறாயிரப்படியில், "வேத வித்க்ரேஸர பரம புருஷ சரணார விந்த யுகளாநுராக மஹிமாவதாத ஹ்ருதயாரவிந்த த்ரிதச சத திவ்யபூஸுரஜநங்கள் வாழ்வமர்ந்த" என்கிற அதி கம்பீரமான, பகவத் விஷய வாக்யம் ரஸிகர்களின் ரஸநாஸ் வாதத்திற்கு அதிரஸ்யமாக விளங்குமது, அநுபவிக்கத் தக்கது.

| | | | |
|---|---|---|---|
| வடமொழி மறைவாணர் வேள்வியுள் நெய் யழல் வான்புகைபோய் திடவிசும்பிலமரர் நாட்டை மறைக்கும் தண் திருப்புலியூர் | 8 | 9 | 8 |
| விரவாரிசை மறை வேதியரொலி வேலையில் நின்றொலிக்கும் தண் திருப்புலியூர் | 8 | 9 | 9 |
| அறிந்தன வேத அரும்பொருள் நூல்கள் | 9 | 3 | 3 |
| வேதநாவர் விரும்பும் திருக்கண்ணபுரம் | 9 | 10 | 9 |
| நலங்கொள் நான்மறை வாணர்கள் வாழ்திரு மோகூர் | 10 | 1 | 2 |
| மறை வாணர்கள் வாழ்திருப்பேர் | 10 | 8 | 10 |
| வேத நல்வாயவர் வேள்வி. | 10 | 9 | 6 |

இப்படியாக நம்மாழ்வார் அருளிச் செயல்.

---

### 6. மதுரகவியாழ்வார்.

இவர் நம்மாழ்வாரின் சிஷ்யரானதால் நம்மாழ்வார் அநுபவத்தைப் பின்பற்றி இவரது விளக்கப்படுகிறது.

இவர் அருளிச் செய்தது, நம்மாழ்வார் விஷயமாக, "கண்ணிநுண் சிறுத்தாம்பு" என்கிற ப்ரபந்தம் எம்பெருமானைவிட்டு ஆசார்யனையே, பாடிய பெருமையால் இவருக்கு மதுரகவிகள் எனப் பெயர் வழங்கலாயிற்று. இப் பிரபந்தமும் நாலாயிரத்தில் சேர்ந்ததேயானதால் இதனிலுள்ள ப்ரயோகங்கள் காட்டப்படுகிறது.

| | |
|---|---|
| நன்மையால் மிக்க நான்மறையாளர்கள் "கண்ணிநுண் சிறுத்தாம்பு" | 4 |
| அருளினன் அவ் வருமறையின் பொருள். ஷை | 8 |
| மிக்க வேதியர் வேதத்தினுட் பொருள் நிற்கப்பாடி என்னெஞ்சுள் நிறுத்தினன். ஷை | 9 |

### 7. பெரியாழ்வார் திருப்பல்லாண்டென்று தடங்கி .

பெரியாழ்வார் திருமொழி இவரருளிய ப்ரபந்தம்.

பெரியாழ்வார் திருமொழி

| | | | |
|---|---|---|---|
| செஞ்சொல் மறையவர் சேர் புதுவை | 1 | 4 | 10 |
| நம்முடை நாயகனே நான்மறையின் பொருளே | 1 | 6 | 3 |
| மன்னிய நான்மறை | 1 | 9 | 10 |
| வாய்த்த மறையோர் வணங்க | 1 | 10 | 8 |
| இருக்கொடு நீர் சங்கில் கொண்டிட்டு எழில் மறையோர் வந்து நின்றார். | 2 | 8 | 9 |
| வேதப்பயன் கொள்ளவல்ல விட்டு சித்தன் | 2 | 8 | 10 |
| திருவிற் பொலிமறைவாணர் புத்தூர் | 3 | 5 | 4 |
| திருவிற் பொலிமறைவாணன் பட்டர்பிரான் | 4 | 1 | 10 |

| | | | |
|---|---|---|---|
| நால் வேதக் கடலமுது வேதாந்த விழுப் பொருளின் மேலிருந்த விளக்கம் | 4 | 3 | 11 |
| வேதம் பயின்று வாழ்திருக் கோட்டியூர் | 4 | 4 | 2 |
| தூய் மறையோர்........புனலரங்கம் | 4 | 8 | 1 |
| மறைப் பெருந்தீ வளர்த்திருப்பார்......சிறப்புடைய மறையவர் வாழ் திருவரங்கம் | 4 | 8 | 2 |
| நான்மறையாய் வேள்வியாய் தக்கணையாய்த் தானுமானான்...........புனலரங்கம் | 4 | 9 | 5 |
| மறையாளன் | 4 | 9 | 10 |
| செஞ்சொல் மறைப் பொருளாகி நின்ற அரங்கத் தரவணைப் பள்ளியான் | 4 | 10 | 7 |
| இருக்கெசுச் சாமவேத நான் மலர் கொண்டுன பாதம் நண்ணுநாள்......பட்டினிநாள் | 5 | 1 | 6 |

வேதங்களைச் சொல்லி எம்பெருமானுக்கு மந்திர புஷ்பம் ஸமர்ப்பிக்க முடியாமல் இடையூறு என்றேனும் ஏற்பட்டால், அன்றுதான் பட்டினி நாள் என்று தம்முடைய அனுஷ்டான முகத்தால் உலகினருக்கு, வேத மந்திரங் கொண்டே தவறாமல் அனுதினம் பகவதாராதனம் செய்ய வேணுமென்பதை சிக்ஷித்தருளுகிற அழகு இப் பாட்டில் அறியத்தக்கது.

| | | | |
|---|---|---|---|
| வேதப்பிரானார் | 5 | 2 | 1 |

இவ்வாறு பெரியாழ்வார் அனுபவம்.

---

இதன் மேல் 8. இவர் திருமகளாரான ஸ்ரீ ஆண்டாள்.

இவள் திருவாக்கினால் வெளிவந்தது.

திருப்பாவை, நாச்சியார் திருமொழி இரு ப்ரபந்தங்கள்.

நாச்சியார் திருமொழி.

| | | | |
|---|---|---|---|
| மறையவர் வேள்வியில் வகுத்த வவி நா, திரு. | 1 | 1 | 5 |

| | | | |
|---|---|---|---|
| வேதவாய்த் தொழிலார்கள் வாழ்வில்லிபுத்தூர் | 1 | 2 | 10 |
| பழகு நான்மறையின் பொருளாய் | 1 | 4 | 10 |
| பண்ணுறு நான்மறையோர் புதுவை | 1 | 5 | 11 |
| வாய் நல்லார் நல்லமறை யோதி | 1 | 6 | 7 |
| நான்மறையின் சொற் பொருளாய் நின்றார். | 1 | 11 | 6 |

இங்ஙனம் இவள் ஸூக்தி.

### 9, குலசேகராழ்வார்

இவரருளினப்ரபந்தம், பெருமாள் திருமொழி.

| | | | |
|---|---|---|---|
| துணையில்லாத் தொன்மறைநூல் | 0 | 1 | 5 |
| பொன்பெற்றாரெழில் வேதப் புதல்வன் | 0 | 9 | 8 |
| மந்திரங்கொள் மறை முனிவன் வேள்வி | 0 | 10 | 2 |

இவரநுபவமிதுவே.

### 10. திருப்பாணாழ்வார்

இவர் அருளியது அமலனாதிப் பிரான் என்கிறப்ரபந்தம்.

இதனில் 1, 2, 3, இப்பாட்டுக்களில், முதற்பாட்டில் அ, என்று ஒரு அக்ஷரத்தையும், இரண்டாவது பாட்டில், உ, என்கிற ஒரு அக்ஷரத்தையும் மூன்றாம் பாட்டில், ம, என்கிற ஒரு அக்ஷரத்தையும், கொண்டு பாட்டுக்களை வெளியிட்டு, தமக்கு வேத, வேதாந்தங்களில் உள்ள ஓரன்மை உள்ளபடியே காட்டிப் போந்தார்.

இம்மஹாநுபாவரை, ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் அம்ருதாஸ்வாதி நீ, என்கிற ப்ரபந்தத்தில், "ஆதி மறையென வோங்குமரங்கத்துள்ளே அருளாரும் கடலைக் கண்ட எம்பாணன், என்றும் இவரருளின ப்ரபந்தத்தை, "பாண் பெருமாளருள் செய்த பாடல் பத்தும் பழமறையின் பொருளென்று பரவுகின்றோம், என்று தலை துலுக்கிக் கொண்டாடும் பெருமை வாசாமகோசரம். இவர் அநுபவம் இப்படியாக,

**11, தொண்டரடிப்பொடி ஆழ்வார் அநுபவத்திலிழிவோம்.**

இவர் அருளியது, திருமாலை, திருப்பள்ளி யெழுச்சி, என்கிற இரு பிரபந்தங்கள்.

திருமாலை

வேத நூற்பிராயம் நூறு 3

வேதத்தில் சதாயு: புருஷ:, என்பதையே பேசுகிறார்.
அமரவோரங்கமாறும் வேதமோர் நான்கும் ஓதி, என்று.

அங்காத்யயனத்துடன் அங்கியான வேதத்தை அத்யயனம் செய்வதே, தமர்களில் தலைவராய சாதி அந்தணர்களின் செயல் என்பதை வற்புறுத்தி, வித்தாந்தம் நம்மது இன்னதென்பதை இனிது உரைத்தருளுகிறார். இதுவரை, பதினொருவரின் அநுபவம் ஆராயப்பட்டது. இதன் பிறகு பன்னிரண்டாவது அநுபவமாக பரகாலனின் பரந்த திவ்யஸூக்திகளை அநுபவிக்கப்பாரிப்போம்.

**12, திருமங்கையாழ்வார்.**

இவர் அருளியவை, பெரிய திருமொழி, திருக்குறுந் தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல், என ஆறுப்ரபந்தங்கள்

பெரியதிருமொழி

| | | | |
|---|---|---|---|
| வேதம் விரித்துரைத்த புனிதன் | 2 | 2 | 8 |
| வேதத்தை வேதத்தின் சுவைப்பயனை | 2 | 3 | 2 |
| பண்டாய வேதங்கள் நான்கும் ஐந்து வேள்வி களும் கேள்வியோடங்க மாறுங்கண்டான் | 2 | 5 | 9 |

ருக்கு, யஜுஸ், ஸாமம், அதர்வணம், என்பன நான்கு வேதங்களாம்; இவை வேதவ்யாஸரால் பிரிக்கப்பட்ட பிரிவின் பெயராதலால், அதற்கு முன்னிருந்த தைத்திரியம், பௌடியம், தலவகாரம், சாமம், என்ற நான்கும் என்னவுமாம்.

பிரமயஞ்ஜம், என்கிற, வேதத்தில் நித்யம் ஒருப்ரச்நமோதுதல், அக்நிஹோத்திரம் செய்வ

தான, தேவயஜ்ஞும், ப்ராணிகளுக்கு பலியிடுகை யாகிற, பூதயஜ்ஞும், தர்ப்பணம் பண்ணுகிறதான, பித்ருயஜ்ஞும், அதிதிஸத்காரமான மநுஷ்யயஜ்ஞும், ஆக, ஐந்து யஜ்ஞும். மநுஸ்ம்ருதி, பரா சரஸ்ம்ருதி முதலானவை. சிக்ஷா, வ்யாகரணம், சந்தஸ், நிருக்தம் ஜ்யோதிஷம், கல்பம், என்கிற ஆறு அங்கம். இவை களை ப்ரவர்த்தித்தவன் எம்பெருமான்.

| | | | |
|---|---|---|---|
| கலைகளும் வேதமும் நீதி நூலும் கற்பமும் சொற்பொருள் தானும் | 2 | 8 | 5 |
| ஆறங்கம் ஐந்து வளர் வேள்வி நான்மறைகள் மூன்று தீயும் | 2 | 10 | 2 |
| மறை வளரப்புகழ் வளரமாடந்தோறும் | 21 | 0 | 5 |
| சீரேறு மறையாளர் நிறைந்த செல்வத் திருக் கோவலூர் | 2 | 10 | 8 |
| சீரணங்கு மறையாளர் நிறைந்த செல்வத் திருக் கோவலூர் | 2 | 10 | 10 |

இவ்வூரில் வேதத்தைக் கைக்கொண்டவர்கள் பெருமையைப் பேசுகிறபடி பாரீர்.

| | | | |
|---|---|---|---|
| மேலெங்கும் இப்படியே பேசிப்போவர் பன்னு நான் மறைப் பல்பொருளாகிய பரனிடம் | 3 | 1 | 2 |
| வாயோது வேதம் மலிகின்ற தொல் சீர் மறை யாளர் நாளும் முறையால் வளர்த்த தீயோங்க வோங்கப் புகழோங்குதில்லை. | 3 | 2 | 2 |
| அவ்வாயின மங்கையர் பேசவுந்தாரு மாமறை அந்தணர் சிந்தை புக செவ்வாட்க்கிளி நான் மறை பாடுதில்லை. | 3 | 2 | 6 |

அவ்வூரில் மூவாயிர வரும் வேதமே ஓதி நிற்க, அவர்கள் சொல்வதை கேட்டிருக்கும் இளம் பெண் களும், சாஸ்திர மரியாதை யறியாமே, தாம் கேட்ட வேத வாக்கியங்களை ஒருவர்க் கொருவர் விளையாட் டாகப் பேசி நிற்க, அவர்களிடம் வளரும் கிளிகளும்

நான் மறைகளைப் பாடுகின்றனவாம், அவ்வந்தணர்கள் சிந்தை களிக்க, தில்லையில்.

மூவாயிர நான்மறையாளர் நாளும் முறையால்
வணங்க அணங்காய சோதி தேவாதி
தேவன் திகழ்கின்றதில்லை 3 2 8

தக்க கீர்த்தி யருமறையின் திரள் நான்கும்
வேள்வி ஐந்தும் அங்கங்களவை யாறும்
இசைகளேழும் தெருவில் மலிவிழா
வளமும் சிறக்கும் காழிச் சீராமவிண்ணகர் 3 4 1

சந்தி வேள்வி சடங்கு நான் மறையோதி
ஓதுவித்தாதியாய் வரும் அந்தணாளரு
அணியாலி 3 5 6

நீதியாகிய வேதமா முனியாளர் தோற்ற
முறைத்து மற்றவர்க்காதியாயிருந்த
அணியாலியம்மான் 3 5 9

தீவிரிய மறைவளர்க்கும் புகழாளர் திருவாலி 3 6 1

முறையால் வளர்க்கின்ற முத்தீயர் நால் வேதர்
ஐவேள்வி ஆறங்கர் ஏழினிசையோர்
மறையோர் வணங்கப் புகழெய்துநாங்கூர் 3 8 4

எண்ணில் மிகு பெருஞ்செல்வத் தெழில்
விளங்கு மறையும் ஏழிசையும் கேள்வி
களுமியன்ற பெருங் குணத்தோர்,
மண்ணில் மிகு மறையவர்கள் மலிவெய்து
நாங்கூர்.

உண்மை மிகு மறையொடு நற்கலைகள் நிறை
பொறைகள் உதவுகொடை என்றிவற்றின்
ஒழிவில்லாப் பெரிய வண்மை மிகு மறை
யவர்கள் மலிவெய்து நாங்கூர் 3 9 6

என்று மிகு பெருஞ் செல்வத் தெழில் விளங்கு
மறையோர், ஏழிசையுங் கேள்விகளு

| | | | |
|---|---|---|---|
| மியன்ற பெருங் குணத்தோர்............ .........நாங்கூர் | 3 | 10 | 0 |
| நாமனத்தால் மந்திரங்கள் நால் வேதம் ஐந்து வேள்வி யோடாறங்கம் நவின்று கலை பயின்று அங்கமனைத்து மறையவர்கள் பயிலுமணி நாங்கூர் | 3 | 10 | .7 |
| நல்லவெந்தழல் மூன்று நால்வேத மைவேள்வி யோடாறங்கம் வல்ல வந்தணர் மல்கிய நாங்கூர் | 4 | 2 | 2 |
| சிறப்புடை மறையோர் நாங்கை நன்னடுவுள் செம்பொன் செய்கோயி லி னு ள் ளே மறைப்பெரும் பொருள் | 4 | 3 | 2 |
| செல்வ நான்மறையோர் நாங்கை | 4 | 3 | 0 |
| செஞ்சொல் நான் மறையோர் நாங்கை | 4 | 3 | 7 |
| தெளிந்த நான் மறையோர் நாங்கை | 4 | 3 | 9 |
| இலங்கிய நான் மறையனைத்து மங்கமாறும் ஏழிசையும் கேள்விகளும் எண்டிக் கெங்கும் சிலம்பிய நற்பெரும் செல்வம் திகழுமணி நாங்கூர் | 4 | 4 | 8 |
| ஓங்கிய நான்மறையனைத்தும் தாங்கு நாவர் | 4 | 4 | 9 |
| நாத்தொழில் மறைவல்லார்கள் நயந்தறம் பயந்த வண்கைத் தீத்தொழில் பயிலு நாங்கூர் | 4 | 5 | 3 |
| நாலாகிய வேதியர் மன்னிய நாங்கூர் | 4 | 7 | 7 |
| நான் மறைகள் தேடியோடும் செல்வன் | 4 | 8 | 3 |
| நான்மறைகள் தேடியென்றும் காணமாட்டாச் செல்வன் | 4 | 8 | 7 |

மறையால் மூத்தீயவை வளர்க்கும் மன்னு
புகழால் வண்மையால் பொறையால் மிக்க
அந்தணர் வாழ் புள்ளம் பூதங்குடி 5 1 8

வசையில் நான்மறை கெடுத்தவம் மலாயற்
கருளி முன் பரிமுகமாய், இசை கொள்
வேதநூலென்றிவை பயந்தவன் 5 3 2

அன்னமாகியன்றருமறை பயந்தவன் 5 3 8

மாமறையோர் செஞ்சொல் வேள்விப்புகையும்
கமழுந் தென்னரங்கம் 5 4 7

சந்தோகன் பௌழியன் ஐந்தழலோம்பு தைத்
திரியன் சாமவேதி 5 5 9

சந்தோகன், சாந்தோக்ய உபநிஷத்ப்ரதி பாத்யன்
பௌழியன், கௌஷீதகீ ப்ராஹ்மணத்தினுல் ப்ரதி
பாத்யன், மேல், தைத்திரியன், சாமவேதி ஸ்பஷ்டம்.

மறையுரைத்த திருமால் 5 6 1

பண்டை நான் மறையும் வேள்வியும் கேள்விப்
பதங்களும் பதங்களின் பொருளும்......
அரங்கமாநகரமர்ந்தான் 5 7 1

தொல்லை நான் மறைகளும் மறைய அன்னமா
யன்று அங்கருமறை பயந்தான் அரங்கமா
நகர மர்ந்தான் 5 7 3

மன்னு நான் மறை மாமுனி பெற்ற மைந்தன் 5 8 6

ஓது வாய்மையும் உவனியப் பிறப்பும் உனக்கு
முன் தந்த அந்தணன் ஒருவன் 5 8 7

வேதவாய் மொழி அந்தணன் ஒருவன் 5 8 8

நலங்கொள் நான் மறை வல்லார்கள் ஓத்தொலி 5 9 6

| | | | |
|---|---|---|---|
| நால் வகை வேதம் ஐந்து வேள்வி ஆறங்கம் வல்லார், மேலை வானவரில் மிக்க வேதியர் | 5 | 9 | 9 |
| இருக்குறு மந்தணர் சந்தியின் வாய்ப் பெருக்க மொட மரர்களமர நல்கு மிருக்கினி லின்னிசையானவன் | 6 | 1 | 7 |
| ஓதல் செய் நான் மறையாகி உம்பராதல் செய் மூவுரு வானவன் | 6 | 1 | 9 |
| என் மனத்திருந்த வேதா | 6 | 2 | 9 |
| வேதமும் வேள்வியு மாயினான் நண்ணு நறையூர் | 6 | 4 | 0 |
| சொல்லார் மறை நான் கோதி உலகினிலாயவர் நல்லார் நறையூர் | 6 | 4 | 9 |
| மூந்து நூலும் முப்புரி நூலும் முன்னீந்த வந்தணன் | 6 | 5 | 7 |
| இருக்கிலங்கு திருமொழிவா யெண்டோளீசர் | 6 | 6 | 8 |
| செம்மொழிவாய் நால் வேத வாணர் வாழும் திருநறையூர் | 6 | 6 | 10 |
| சொல்லார் சுருதி மறையோதி சோமுச் செய்யும் தொழிலினோர், நல்லார் மறையோர் பலர் வாழும் நறையூர் | 6 | 7 | 5 |
| வேத நான் கைந்து வேள்வியங்க மாறிசையேழ் நடையாவல்ல வந்தணர் வாழ் நறையூர் | 6 | 7 | 7 |
| மறையாரும் பெரு வேள்விக் கொழும் புகை போய் வளர்ந்து எங்கும் நிறையார வான் மூடும் நீள் செல்வத் திருநறையூர் | 6 | 9 | 9 |
| காதலால் மறை நான்கு முன்னோதிய பட்டான் | 7 | 3 | 6 |
| மூவாவுருவில் மறையாளர், அந்தி மூன்று மனலோம்பு மணியார் வீதியழுந்தூர் | 7 | 5 | 1 |

| | | | |
|---|---|---|---|
| முழு நான் மறை வீதி தொறும் அலையாளும் கடல் போல் முழங்கும் தென்னழுந்தை | 7 | 4 | 8 |
| சந்தோகா பௌழியா தைத்திரியா சாம வேதியனே | 7 | 7 | 2 |
| எங்குமலி நிறைபுகழ் நால்வேதம் ஐந்துவேள்வி | 7 | 8 | 1 |
| பண்ணுகலை நால் வேதப் பொருளை யெல்லாம் பரிமுகமாயருளிய எம்பரமன் | 7 | 8 | 2 |
| ஆனதொல் சீர் மறையாளர் பயிலும் செல்வத் திருவழுந்தூர் | 7 | 8 | 6 |
| தீயோம்பு கை மறையோர் சிறுபுலியூர் | 7 | 9 | 7 |
| கற்ற நூல் மறையாளர் கண்ணபுரம் | 8 | 1 | 9 |
| வாயெடுத்த மந்திரத்தால் அந்தணர் தம் செய் தொழில்கள் தீயெடுத்து மறைவளர்க்கும் திருக்கண்ணபுரம் | 8 | 3 | 5 |
| சுருதியொடருமறை முறை சொலு மடியவர் கருதிய கண்ணபுரம் | 8 | 7 | 9 |
| கற்ற மறையோர் கண்ணபுரம் | 8 | 8 | 5 |
| மிக்கானை மறையாய் விரிந்த விளக்கை | 8 | 9 | 4 |
| நால் வேதங் கண்டான் கண்ணபுரத் துறையம்மான் | 8 | 10 | 1 |
| அங்கமாறைந்து வேள்வி நால் வேத மருங்கலை பயின்று எரிமூன்றும் செங்கையால் வளர்க்கும் துளக்கமில் மனத்தோர் திருக்கண்ணங்குடி | 9 | 1 | 1 |
| இவர் வாயில் நல் வேத மோதும் வேதியர் | 9 | 2 | 1 |

| | | | |
|---|---|---|---|
| வேதமும் வேள்வியும் விண்ணு மிருசுடரும் ஆதியுமானான் புல்லாணி | 9 | 4 | 9 |
| திருவினார் வேத நான்கு ஐந்து தீ வேள்வியோடு அங்கமாறும் மருவினார் வல்லவாழ் | 9 | 7 | 6 |
| மறைவலார் குறைவிலாருறையு மூர்வல்லவாழ் | 9 | 7 | 10 |
| புலம்புரி நூலவனைப் பொழில் வேங்கட வேதியனை | 9 | 9 | 9 |
| மேவு நான் மறைவாணர் ஐவகை வேள்வி ஆறங்கம் வல்லவர் தொழும் தேவ தேவ பிரான் திருக் கோட்டியூரான் | 9 | 10 | 9 |
| எழில் வேத மின்றி மறைய அன்னமதாயிருந் தங்கற நூலுரைத்த அது நம்மையாளும் அரசு | 11 | 4 | 8 |
| தூயனை தூய மறையானை | 11 | 7 | 9 |
| சந்தோகா தலைவனே தாமரைக்கண்ணா | 11 | 8 | 9 |

திருநெடுந்தாண்டகம்

| | | | |
|---|---|---|---|
| வேத நான்காய் | 1 | 0 | 0 |
| அன்னமாய்......அருமறையை வெளிப்படுத்த அம்மான் | 30 | 0 | 0 |

திருவெழுகூற்றிருக்கை

முத்தி நான்மறை ஐவகை வேள்வி.

பெரிய திருமடல்

மன்னுமறையோர் திருநறையூர் 73

ஸ்ரீ

ஆக இவ்வளவால் பன்னிருவரும், பன்னுநான் மறைகளைப் பாசுரங்களில், தனித்தும், மற்றும் சிலதுடன் சேர்த்

தும் பகர்ந்தவிடங்கள் ஒருவாறு முடிந்தவளவு ஆராயப் பட்டது. பின்னும் முழுவதும் திவ்ய ஸூக்திகளை நன்றாகப் பரிசீலனை செய்தால், இது போன்ற பல விடங்கள் புலப்படக்கூடும். அப்படி விரிவாக உள்ள வியாஸம் வேண்டும்போது வரையப்படும். இதன் தொடர்ச்சியாக, வடமொழி தென்மொழி இருமொழி வேதங்களும் ஒரே அர்த்தத்தை உணர்த்தி யிருக்கிறதென்பதற்குச் சான்றாக, சிற் சில வடமொழி, தென்மொழி உபநிடதவாக்யங்கள் எடுத்துக் காட்டப் படுகின்றன.

1. ஸர்வேவேதா: என்று ஆரம்பித்து ஓமித்யேதத், என்று ப்ரணவத்தின் பெருமையைப் பேசுகிற வடமொழி உபநிடதத்துக்கு, அ, கார, உ, கார, ம, காரங்களை சில காரணங்களுக்காக, நேரே காட்டாமல், சிறிது மாறு படுத்தி, உயர்வற, மயர்வற, அயர்வறும், என்று, நம்மாழ் வாரும், அமலன், உவந்த, மந்திபாய், என்று, அடுத்தடுத்த மூன்று பாசுராரம்பமாகத் திருப்பாணாழ்வாரும், மூன்றெழுத்ததனை மூன்றெழுத்ததனால் மூன்றெழுத் தாக்கி, மூன்றெழுத்தை என்று கொண்டிருப்பார்க் கிரக்கம் நன்குடைய எம்புருடோத்தமன், என்று பெரியாழ் வாரும் தென்மொழியில் தெளிவாகக் காட்டியுள்ளார்கள்.

2. அம்பஸ்பாரே, என்றும், பஞ்சதா, என்றும் அதற்கேற்ப, விண்மீதிருப்பாய், மலைமேல் நிற்பாய், கடல் சேர்ப்பாய், மண்மீதுழல்வாய், இவற்றுள் எங்கும் மறைந்து உறைவாய் என்றும்,

3. நஸந்த்ரு சேதிஷ்டதி, என்னு மதுக்கு, கட்கிலி, என்றும்,

4. யஸ்ய ப்ருதிவீ சரீரம் முதலான வாக்கியங்களுக்கு திடவிசும் பெரிவளி நீர் நிலமிவை மிசை, படர் பொருள் முழுவதுமாய், அவையவை தொறும் உடன் மிசையுயி ரெனக்கரந்தெங்கும் பரந்துளன், என்றும்.

5. நதத்ஸம:ச, அப்யதிக:சத்ருச்யதே என்னு மதற்கு, ஒத்தார் மிக்காரையிலையாய மாமாயா, என்றும்,

6. ஹ்ரீ:சதேலக்ஷ்மீ:ச பத்ந்யௌ, என்னு மதற்கு தேவிமாராவார் திருமகள் பூமி, என்றும்,

7. பதிம் விச்வஸ்ய, என்னுமதற்கு, முழுவேழுல குக்கும் நாதன், என்றும்,

8. ஆத்மேச்வரம், என்பதற்கு (ஞாலம் விழுங்கும்) அநாதன், என்றும்,

9. ஸஹஸ்ரசீர்ஷா:, என்றிவை முதலானதற்கு தோள்களாயிரத்தாய் முடிகளாயிரத்தாய் துணை மலர்க் கண்களாயிரத்தாய், தாள்களாயிரத்தாய், என்றும்,

10. தத்விப்ராஸ: விபந்யவ:, என்னுமதுக்கு விண்ணோர் பரவு சிறை நாதன், என்றும், இப்படியாகத் தென்மொழி யுபநிடதம் உத்கோஷிக்கின்றது.

இப்பொழுது, ஒரு பத்து விஷயங்களைப் பற்றாகக் கொண்டு நிற்பது பாங்கான செயல் என்று தேறி, ஆழ்வாராசார்யர்களின் சரணாரவிந்தங்களில் அநந்த கோடி ப்ரணாமங்களைப்பண்ணி மங்களமாக இந்த ஆராய்ச்சி நூல் இத்துடன் நிறுத்திக்கொள்ளப் படுகின்றது.


அநுபவ ரஸிகர்களான அறிஞர்கள் முன்னிலையில் அறிவிலியின் அன்பார்ந்த விண்ணப்பம்.

இந்த வியாஸம் எழுதும்படி என்னைத் தூண்டியது, ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஸ்வாமி களின் ஆக்ஞையேயாகும்.

இவ்வண்ணம், பொருளில்லாத என்னைப் பொருட் படுத்தி நாலாயிரத்தை, ஒரு தடவை, முழுவதும் பராமர் சிக்கும்படி செய்தது எனது பாக்கியமே,

இப்படி எனக்குப் பேருதவிபுரிந்த பெரியவாளிடம் பெரிதும் நன்றி பாராட்ட என்றும் கடமைப் பட்டுள்ளேன்.

இதன் பிறகு அன்று மகாநாட்டில் விஜயம் செய்திருந்த ஸ்ரீ ஆசார்யாள் ஓர் உபந்யாஸம் செய்தார்கள்.



திருவிடைமருதூர், ஸ்ரீ புஷ்ய மகோத்ஸவ மகா ரதம்.

ஸ்ரீ

# ஸ்ரீ ஜகத்குரு ஆசார்யாள் உபந்யாஸ ஸாரம்

நாம் ஒவ்வொருவரும் ஒரு கோபுரம் கட்டவேண்டும். அலையும் மனதை அடக்கவேண்டும். ஆனால் அதைவிட கடினமான காரியம் வேறொன்றும் உலகிலில்லை. ஆதலால் அதற்குப் பழக்கிக்கொள்ள வேண்டும். வெளியுலகில் வெகு கடினமான கார்யங்களில் பழகிய சித்தத்திற்கே அதைவிட கடினமான தன்னை அடக்கிக்கொள்ளும் பெரும் பணியில் புகுவதற்கு திறன் ஏற்படும், அதிகாரம் ஏற்படும். அதற்காக நாம் பழக்கிக் கொள்ளும் கடினமான பெரும் பணி உலக மக்களுக்கெல்லாம் உண்மையில் பயன் படும் பணியாகவும் இருக்கவேண்டும்.

தற்கால அரசாங்கத்தார்கள் பழங்கோவில் கட்டிடங்களின் சிற்ப முறையையும், காலவரையையுமே ஆராய்ச்சி செய்து நாட்டுப் புகழைப் பெருக்க வேண்டுமென்று முயலுகிறார்கள். கட்டியவர்களின் மனம் எவ்வித முருகிக் கசிந்திருந்தால் இவ்விதம் அழியாச் சின்னங்கள் ஆகாயத்தை அளாவி எழுந்திருக்கும் என்னும் தத்துவத்தை அடியோடு மறந்துவிடுகிறார்கள். அவ்விதம் உருகியதனால் அம்மனம் எவ்வளவு உயர் நிலையடைந்திருக்கும்? அவ்வுயர் நிலையே பிற்கால மக்களான நமக்கு வழிகோலா யிருக்கவேண்டும். கனிவுடனும் தன்னடக்கத்துடனும் கட்டப்பட்ட வானளாவிய திருக் கோபுரங்களல்லவோ ஆழ்வார்களுடையவும் நாயன்மார்களுடையவும்

ஹிருதயத்திலிருந்து அழியாத அருள் பாடல்களை பொங்கச் செய்தன. ஆதலால் நாம் ஒவ்வொருவரும் இறைவனது பணிகளில் ஒரு பெரும் பணியை யெடுத்து முடிப்பதே நம்பிறவிப்பயனை அடைவதற்கும் உலக மக்களுக்கு நீடுழி சேவை புரிவதற்கும் இன்றியமையாத வழியாகும்.

*இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவடைந்தன.*

## எட்டாவது (கடைசி) நாள் மார்கழி மாதம் 17உ (1-1-1951) திங்கள் கிழமை

இன்று காலை 7-30 மணிக்கு வழக்கம்போல் கடவுள் வணக்கத்துடன் ஸ்ரீ சச்சிதானந்த ஸ்வாமிகள் தலைமையில் மகாநாடு ஆரம்பமாயிற்று. கடைசி தினமாகையால் இன்று வெகு ஜனங்கள் வந்து, மகாநாட்டில் கலந்து கொண்டார்கள். 7-70 மணி முதல் 9 மணி வரையில் சிதம்பரம் திரு. ரத்னவேலுப் புலவரால் நக்கீரரின் திருமுருகாற்றுப்படை பாராயணம் நடத்தப்பட்டு, அதிலுள்ள நான்மறை விளக்கமும் கூறப்பட்டது.

உ

சிவமயம்

# திருமுருகாற்றுப்படை விளக்கம்

திரு. ரத்னவேலுப் புலவர், சிதம்பரம்.

## (நக்கீர தேவர்)

[திரு+முருகு+ஆற்று+படை எனப் பிரித்து ஆன்றோர் பொருள் உரைப்பர்.]

இது திருமுருகாற்றுப்படை எனவும் புலவராற்றுப் படை எனவும் வழங்கும்.

முருகக் கடவுளுடைய திருவருள் பெற்ற ஒரு புலவன் மற்றொரு புலவனுக்கு, அக்கடவுள் எழுந்தருளியிருக்கும் இடங்கள், இயல்பு, புகழ் முதலியவற்றை விளக்கி, அவரை எவ்வாறு அடைந்து வழிபடின் திருவருளைப் பெறலாமென்று கூறி, அவனை அவர்பால் செலுத்தியதாக, மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரதேவ நாயனாரால் இது பாடப்பெற்றது.

### நூல் வரலாறு

ஒரு மலைச் சாரலில், ஒரு தடாகக் கரையில், ஓர் ஆலமரத்தின் கீழ் நக்கீரர் சிவபூஜை செய்துகொண்டிருக்கும் பொழுது, மரத்திலிருந்த ஒரு பழுத்த இலையின் ஒருபாதி தண்ணீரிலும் மற்றொரு பாதி,—கரையிலுமாக விழுந்தன. உடனே நீரில் விழுந்த ஒருபாதி, மீன் வடிவமும், புறத்தே விழுந்த மற்றொரு பாதி, பறவை வடிவமும் பெற்று, பறவை மீனை இழுத்துக்கொண்டிருக்க, நக்கீரர் இக்காட்சி

யில் கருத்தைச் செலுத்தினதால் சிவபூஜைக்குப் பங்கம் உண்டாயிற்று.

அதற்கு முன்பு இவ்வாறு சிவபூஜையில் வழுவிய 999 பேரை ஒரு குகையில் அடைத்து இன்னும் ஒருவர் வேண்டுமெனக் —காத்திருந்த ஒரு பூதம், நக்கீரரையும் கொண்டுபோய் அடைத்து, தனது நியமப்படி இவ்வாயிரம் பேரையும் உண்ணுவதற்கு முன் நீராடப் போயிற்று.

அப்போது அதுவரை அப்பூதத்தால் உணவுபெற்று பிழைத்திருந்த 999 பேரும் நக்கீரர் வருகையால் தாங்கள் இறக்க வேண்டி நேரிட்டதை அவருக்குத் தெரிவித்து அழுதார்கள்.—அவ்வழுகையைக் கேட்ட நக்கீரர், அவர்கள் நிலைக்கு இரங்கித் திருமுருகாற்றுப்படை என்னும் இப் பாட்டைப் பாடினர். உடனே முருகக் கடவுள் அவர்கள் எதிரில் தோன்றி எல்லோரையுங் குகையிலிருந்து வெளிப் படுத்திக் காப்பாற்றினர்.

## நூல்

உலக உயிரினங்கள் மகிழுமாறு எழுந்து மேருவை வலம் வரும் கதிரவனைப்போல் ஒளியினையும், தன்னை வணங்கும் அடியவர் பிறவி நோயை நீக்கிக் காக்கும் அடியினையும், பகைவரை யழித்த பெருமை பொருந்திய கரத்தினையும் உடைய. குற்றமற்ற கற்பும், ஒள்ளிய நெற்றியும் உடைய தெய்வயானையின் கணவன்: கடம்பினது குளிர்ந்த மாலை புரளும் மார்பினன்;

ஒருவர் கையினாலும் சிறப்பித்து அலங்கரிக்கப் பெறாத அழகினைத் தமக்கியல்பாகப் பெறுகின்ற அழகினையும், சாம்பூநதம் என்னும் பொன்னினாலியன்ற விளங்கும் பூணினையும், குற்றந் தீர்ந்த உடல் நிறத்தினையும் பொருந்திய தெய்வமகளிர்; வானளாவிய வரையிடத்தில், பகைவரை வஞ்சியாது எதிர் நின்று கொல்லும் வலிமையுடைய கோழி வடிவம் பொருந்திய கொடி நீடூழிவாழ்க என வாழ்த்தி சிறப்பு மிகுந்த மலையிடத்து எல்லாம் எதிரொலி செய்யப் பாடியாடும் சோலையையுடைய மலையிடத்து நின்ற செங்காந்தள் மலரின் குளிர்ந்த தலை மாலையை அணிந்த திருமுடியை உடையவன்;

கண்டார்க்கு அச்சம் உண்டாகும்படி வரும் பெண் பேய் ஆனவள், அசுரர் அஞ்சும்படி எதிர் நின்று கொல்லும் வெற்றி மிகுந்த போர்க்களத்தினைப்பாடிக் கொழுப்பை உண்ணும் வாயுடையவளாய்த் துணங்கைக் கூத்தாடப் புவியைச் சூழ்ந்த கடல் கலங்கும்படி உட்புகுந்து சூரபன்மாவாகிய அசுரத் தலைவனைக் கொன்ற வேற்படையினையும், அசுரரின் சிறந்த வெற்றி கெடும்படி மாமரத்தை வெட்டிய வெற்றியினையும், மிக்க புகழினையுமுடைய சிவந்த வேற்படையும் உடையவன் சுப்பிரமணியன்.

அன்பர், தம் மனத்தை ஐம்புலன்களினின்றும் பிரித்து மெய்ஞ்ஞான உணர்வுகொண்டு தங்குஞ் சிவந்த திருவடிகளை அடைவதற்கு ஏதுவான புண்ணியங்களைப் பல பிறப்புக்களிலும் விரும்பிச் செய்த கோட்பாடினால் பெருமை பெற்ற உள்ளத்துடன் செல்லும்—போக்கினை நீ விரும்பினையாயின், நீ முற்பிறப்பிற் கருதிச் செய்த புண்ணியத்தால் வீடு பெறுவார்க்குறுதியெனக் கூறிய நற்குணங்கள் பலவும் ஒருசேரப்பெற்ற நல்ல மனத்துள் எழும்பிய இனிய வீடு பேற்றினைத் தவறாமல் இப்பொழுதே பெறுவாய்;

அது பெறுதற்கு அவன் யாண்டுறையும் எண்ணில், போரை—விரும்பிக் கட்டிய கொடியருகே புனையப்பெற்ற பந்தும் பாவையும் அறுப்பாரின்றித் தூங்கியே இருக்கும்படி போர் செய்வாரை அழித்தலினால் என்றும் போர்த் தொழிலையே காணமாட்டாத வாயிலினையும், திருமகள் வீற்றிருந்த கடை வீதிகளையும், மாடங்கள் மிகுந்த—ஏனைய வீதிகளையுமுடைய மதுரைக்கு மேற்கே, அழகிய வண்டினங்கள் ஆவல் பொருந்திய சுனைமலர்களிற் பொருந்தி ஆரவாரிக்கும் திருப்பரங்குன்றில் திருவுளம் மகிழ்ந்து எழுந்தருளியிருத்தலும் உரியன், அதுவன்றி—

உயர்ந்த சிறப்புப் பொருந்திய புகழினையுடைய திருச்சீரலைவாய் என்னும் திருப்பதியின்கண் எழுந்தருளுதலும் அவனுக்கு நிலைபெற்ற தன்மையதாம். அதுவன்றி—அருட் கற்பினையுடைய தெய்வயானையாருடனே—ஆவி

னன்குடி என்னுந் திருப்பதியின்கண் தங்கியிருத்தலையும்— உரியன்,—அதுவன்றி—

ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் எனும் ஆறுநலம் பொருந்திய இலக்கணத்தின் வழுவாது தாய் வழியிலும் தந்தை வழியிலும் நன்கு மதிக்கப் பெற்ற பல்வேறு வகையான பழைய குடிகளில் பிறந்தவரும், நாற்பத்தெட்டு வருடம் வேதங்களில் கூறிய வாறு நல்ல இளமையைப் பிரம்மசரியங்—காத்தவரும், தருமத்தை எப்பொழுதும் இயம்புகின்ற கோட்பாட்டினையும் சதுரம், முக்கோணம், வில்வடிவம் என மூன்று வகையாகச் சொல்லப்பட்ட ஆகவனீயம், தக்கிணாக்கினி, காருகபத்தியம் என்னும் மூன்று தீயினால் உண்டாகும் செல்வத்தினையும்—உடையவரும், ஒன்பது நூலுடைய முப்புரியாகிய பூணூலை உடையவரும் ஆகிய அந்தணர்கள் தொழுதற்கு உரிய நேரம் உணர்ந்து தோத்திரங்களைக் கூறத் தோய்த்த துணியை உடம்பிலே கிடந்து உலருமாறு உடுத்து, உச்சியிலே குவிந்த இருகரங்களையும்— உடையவராய்த் தன்னை (முருகக் கடவுளைப்) புகழ்ந்து ஆறெழுத்துக்களைக் கொண்ட (நமோ குமாராய, நமஸ் ஸிவதராயச) அரிய—வேதமந்திர மொழியை நாக்கு மட்டும் புடை பெயரும் அளவில்...நன்றாகப் பயில உச்சரித்து, வாசனை மிகுந்த நல்ல மலர்களை—ஏந்தி நிற்கப் பெரிதும் மகிழ்ந்து திருவேரகத்தின்கண்ணே—எழுந்தருளியிருத்தலையும் உரியன், அதுவன்றி—

சிவந்த மேனியனாய்ச் சிவந்த ஆடையுடையவனாய்ச் சிவந்த அரையினையுடைய அசோகமரத்தின் குளிர்ந்த தளிர்கள் அசைகின்ற செவிகளையுடையவனாய்க் கச்சை கட்டிக் கழலணிந்து,—வெட்சி மாலைசூடிக் குழலூதிக் கொம்பு குறித்துச் சிறிய பல—வாச்சியங்கள் முழக்கி சேவற்கொடியை யுயர்த்தி, பிணைமான்போலும் மங்கையர்கள் குரவைக் கூத்தாடி அசைய தனது கையினால் அவர்கள் கையினைத் தழுவி ஏந்திக்கொண்டு முதற்கை கொடுத்து ஒவ்வொரு மலையிலும் போய் வேலனாக நின்று விளையாடுதலும் எப்போதும் தனக்கு நிலைபெற்ற குணமாம், அதுவன்றி—

விழவு, நிலை, களன், காடு, கா, துருத்தி, யாறு, குளன், வேறுபல் வைப்பு, சதுக்கம், சந்தி, கடம்பு, மன்றம், பொதியில், கந்துடைநிலை, வியனகர் முதலிய இடங்களில் ஆண்டாண்டுறைதலும் உரியன்; இதையானறிந்தவாறே கூறினேன்; முந்தி நீ கண்டுழி ஏத்திப் பரவி வணங்கி பலயானறி அளவையினேத்தி உனது பெருமையை அளந்தறிதல் உயிர்கட்கு அரிதான காரியம். ஆகவே என்றால் உனது—புகழை முழுவதும் கூறுதல் இயலாது. உன் திருவடியை நினைந்து—இங்குவந்தேன். ஒப்பற்ற புலமையுடையோனே!'' என்று உனது விண்ணப்பத்தைத் தெரிவித்துக்கொள்.

உனது விண்ணப்பத்தைச் சொல்லி முடித்தவுடனே, பல்வேறு வடிவால் கொண்ட சிறு பூதங்கள் பல, திருவிழா நிகழும் அவ்விடத்தே தோன்றி "இவன் தேவரீர் கிருபைக்குப் பாத்திரமானவன், அறிவு முதிர்ந்த சொல்வளமுடைய புலவன், தேவரீரது செழும் புகழை நாடி இங்கே வந்திருக்கின்றான். பெருமானே!'' என்று இனிய நல்ல சொற்களால் பலவாறாக ஏத்தும் அப்போது தெய்வத் தன்மை நிரம்பியதாயும், வலிமை மிக்கதாயும், ஆகாயத்தை யளாவுகின்றதாயுமுள்ள—உயர்ந்த வடிவோடு முருகன் தோன்றுவான். தோன்றி, அச்சம் தரவல்ல தனது பெருநிலையை உள்ளடக்கி, மணங் கமழும் தெய்வத்தன்மையுடைய, பழமையான தனது இளமை நலங்காட்டி, "உனது வரவை நான் அறிவேன், பயத்தை விட்டுவிடு'' என்று அன்புள்ள நல்ல மொழிகளைப் பலகாலும் அருள்வான்.—கெடாத நீலநிறமுடைய கடல் சூழ்ந்த உலகத்தில் உனக்கொப்பாக ஒருவருமில்லையென்று கூறும்படி, பெறுதற்கரிய—சிறந்த பரிசிலையும் அறிவுகள் பலவுடன் பழமுதிர்சோலை மலைகிழவோனாகிய அவன் கொடுத்தருள்வான்.

இவ்வண்ணம் நக்கீரதேவ நாயனார் தாமறிந்த உண்மையை தலைமயடுத்த ஓர் புலவனுக்கு விளங்கக்கூறி அவனை அவர்பால் செலுத்தினார் என்க,

*நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற் றுப்படையைத்*
*தற்கோல நாடோறும் சாற்றினால் — முற்கோல*
*மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளி*
*தான் நினைத்த எல்லாம் தரும்.*

காலை 9 மணி முதல் 10 மணி வரையில் வேதத்தின் ஆறாவது அங்கமாகிய 'கல்பம்' (வேள்வி முதலிய கர்மானுஷ்டானங்கள் நடத்தும் முறை) என்பதைக் குறித்து கும்பகோணம் 'ஆர்யதர்மம்' ஆசிரியர் ஸ்ரீ உ. வே. அக்னிஹோத்ரம் கோபாலதேசிக தாதாசாரியரர் அவர்கள் உபந்நியாஸம் செய்வதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், கடைசி சமயத்தில் தேக அசௌக்யத்தின் காரணமாக அவருக்கு வர முடியாமல் போகவே அவரால் எழுதியனுப்பப்பட்ட வியாஸத்தை அவருக்காக கணபதி அக்ரஹாரம் ஸ்ரீராமஸ்வாமி சர்மா அவர்கள் மகாநாட்டில் படித்தார்கள்.

---

ஸ்ரீ

# கல்பம்

உ. வே. கோபால தேசிக தாதாசாரியார்
ஆர்யதர்மம் ஆசிரியர், கும்பகோணம்.

வைதிக மதத்தின் உத்தம பிரமாணமாக விளங்கும் வேதமானது ஆறு அங்கங்களுடன் கூடியதென்பது பிரஸித்தமான விஷயம். வேதங்களும், ஸூத்ரங்களும், மனு முதலிய ஸ்மிருதிகாரர்களும் இதைப் பல விடங்களில் ப்ரஸ்தாபித்துள்ளார்கள். ஆபஸ்தம்ப மஹரிஷியும் தமது தர்ம ஸூத்ரத்தில் இதை விவரித்துள்ளார்.

ஷடங்கோ வேத:॥ சந்த: கல்போ வ்யாகரணம்
ஜ்யோதிஷம் நிருக்தம் சிக்ஷா சந்தோ விசிதி॥ 2-4-॥

கல்பம், வ்யாகரணம், ஜ்யோதிஷம், நிருக்தம், சிக்ஷை சந்தோவிசிதி என்று ஆறு அங்கங்களைச் சொன்னார். ஆபஸ்தம்பர் இதில் ஆறு அங்கங்களின் கிரமத்தை ஒரு மாதிரியாக வரிசைப் படுத்திச் சொன்னார். வேறு சிலர் சிக்ஷா வ்யாகரணம் சந்த: நிருக்தம் ஜ்யோதிஷம ததா கல்போ(ச்)சேதி ஷடங்காநி என்று வேறு ஒரு கிரமத்தில் சொல்லுகிறார்கள். ஆகையால் இவைகளில கிரமம் அவிவக்ஷிதம். கல்பம் என்பதையே ஆபஸ்தம்பர் "சந்த: கல்பம்" என்று குறிப்பிடுகிறார். கல்பமென்ற அங்கமானது ஸகலாங்க கலாப ஸஹிதமான பிரயோகத்தைச் சொல்லுகிறது. வ்யாகரணம் என்பது, பத பதார்த்த விவரணம் செய்து வேதத்திற்கு உபகரிக்கிறது. ஸூர்யாதிகளான ஜ்யோதிஸ்களை ஆச்ரயித்து உண்டான சாஸ்திரம் ஜ்யோதிஷம். இது வைதிக கர்மானுஷ்டானத்திற்கு அங்கமான காலங்களைச் சொல்லி உபகரிக்கிறது. நிருக்தமென்பதும் வேத பதார்த்த விவரணம். சிக்ஷையானது

அக்ஷரங்களின் ஸ்தான ப்ரயத்ந ஸ்வராதிகளையும் மந்த்ரங்களை உச்சரிக்க வேண்டிய முறையையும் சிக்ஷித்துக் கொடுப்பதாகும். காயத்ரி த்ருஷ்டுப் முதலிய சந்தஸ்களை விவரித்து அறிவிப்பது சந்தோ விசிதி அல்லது சந்தஸ் எனப்படுகிறது.

மேற்கண்ட ஆறு அங்கங்களும் வேத புருஷனுடைய ஒவ்வொரு அவயவமாகவும் ஸ்துதிக்கப் படுகிறது. ஸ்ரீ ஹரதத்தாசாரியார் இவ்விஷயமாக கீழ்க்கண்ட சுலோகத்தை உதாஹரித்துள்ளார்.

முகம் வ்யாகரணம் தஸ்ய ஜ்யோதிஷம் நேத்ர முச்யதே।
நிருக்தம் ச்ரோத்ர முத்திஷ்டம் சந்தஸாம் விசிதி:பதே॥
சிக்ஷா க்ராணம்து வேதஸ்ய ஹஸ்தோ கல்பாந் ப்ரசக்ஷதே॥

வேத புருஷனுக்கு வ்யாகரணம் முகமாகவும், ஜ்யோதிஷம் கண்களாகவும், நிருக்தம் காதுகளாகவும், சந்தஸ் பாதங்களாகவும், சிக்ஷை நாஸிகையாயும், கல்பங்கள் ஹஸ்தங்களாகவும் சொல்லப்படுகின்றன.

கல்பம் முதலிய வேதாங்கங்களை "ப்ரம்ஹவித்யா" என்ற பெயராலும் சந்தோக சுருதி சிறப்பித்துக் கூறுகிறது.

ருக்வேதம் பகவோ அத்யேமி என்ற சாந்தோக்ய சுருதி வாக்யத்தில் ப்ரம்ம வித்யாம் என்கிறதற்கு ஸ்ரீ பகவத் பாதா சாரியாள் விவரணம் செய்கையில்:—

ப்ரம்மண:—ருக்யஜுஸ்ஸாமாக்யஸ்ய
வித்யாம்—ப்ரம்ம வித்யாம்।
சிக்ஷா கல்ப சந்தச்சிதயஸ்தா:॥

என்பதால் சிக்ஷை, கல்பம், சந்தஸ் ஆகியவைகளை ருக்-யஜுர் ஸாம வேதங்களான ப்ரம்ஹத்தின் வித்யைகள் என்று கூறுவதிலிருந்து கல்பத்தின் மஹிமை வெளியாகிறது.

## கல்ப சப்தார்த்தம்

கல்பம் என்றால் பிரயோகம் என்று அர்த்தம். அதாவது வேதங்களில் கூறப்பட்ட யக்ஞாதிகர்மங்களை அனுஷ்டிக்க வேண்டிய முறை. இந்த அர்த்தத்துடன் வேதத்திலேயே கல்ப சப்தம் பல இடங்களில் பிரயோகிக்கப்படுகிறது. ஆருணகேதுக சயந ப்ரகரணத்தில் வைச்ரவண யக்ஞாங்கமாக நான்கு மந்த்ரங்களை சுருதி படித்துவிட்டு அதன் பிறகு கல்போ அத ஊர்த்வம் என்ற வாக்யத்தினால் "இனிப்ரயோகம் சொல்லப்படுகிறது" என்று கல்பபதம் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. பிர்ம்ஹ யக்ஞ ப்ரகரணத்திலும் "இதிஹாஸான் புராணாநி கல்பான்" என்ற வாக்யதில் கல்பபதம் காணப்படுகிறது. பட்ட பாஸ்கரர் கல்ப:-ப்ரயோக: என்று அர்த்தம் கூறினார். ஸாயந பாஷ்யத்திலும் "அநுஷ்டான விதாயக ப்ராம்மணரூப:" என்பதால் கல்பபதத்திற்கு ப்ரயோகம் என்ற அர்த்தமென்பதைச் சொன்னார்.

ஆபஸ்தம்பரும் தஸ்ய பார்வணேந கல்போ வ்யாக்யாத: என்றவிடத்திலும் பிரயோகம் என்ற அர்த்தத்தைக் காட்டியுள்ளார். மீமாம்ஸையில் கல்பஸூத்ராதிகரணத்திலும் ஜைமினி ப்ரயோக சாஸ்த்ரம் என்று கல்ப ஸூத்ரங்களைக் குறிப்பிடுகிறார்.

## கல்ப ஸூத்ரங்கள்.

வேதங்களில், நித்யம், நைமித்திகம், காம்யம் என்று மூன்று வகையான யக்ஞங்களே பெரும்பாலும் ப்ரதிபாதிக்கப்பட்டுள்ளன. அவைகளுக்கு வேண்டிய மந்த்ரங்கள் படிக்கப்பட்டுள்ளன. அந்த மந்த்ரங்களை விநியோகித்து ஒவ்வொரு கர்மாவுக்கும் பிரயோக வரிசையை வேதமே சொல்லியிருக்கிறது. இம்மாதிரி தர்ச பூர்ணமாஸாதி ஸகல கர்மாக்களுக்கும் வேதத்திலேயே கல்பம் இருக்கிறது. அந்த கல்பங்களையே ஸௌகர்யார்த்தமாகவும் ஸுக போதார்த்தமாகவும், ஆபஸ்தம்பாதிகள் கல்ப ஸூத்ரங்களாகச் செய்தார்கள். வேதத்தில் பற்பல விடங்களில் ப்ரகீர்ணமாயுள்ள ப்ரயோகங்களை ஒன்று சேர்த்து

வரிசைப்படுத்தியும், இன்னும் அபேக்ஷிதாம்சங்களைச் சேர்த்தும் கல்பஸூத்ரங்கள் நிர்மாண மாக்கப்பட்டன. இந்த கல்ப ஸூத்ரங்கள்தான் வேதாங்கமென்று சொல்லப் படுகிற "கல்பம்" என்பதில் சேர்ந்தவை.

## கல்பஸூத்ரங்கள் பலவகைப்பட்டவை

இந்த கல்பஸூத்ரங்கள் பலவகைப்பட்டவை. யாகங் களில் "அத்வர்யு" என்ற பிரதான ரித்விக் செய்ய வேண் டிய பிரயோகங்களையும் மந்த்ரங்களையும் யஜுர்வேதம் சொல்லுகிறது. இதனால் அதற்கு "அத்வர்யு சாகை" என்ற பெயரும் உண்டு. இந்த யஜுர் வேதத்திற்கு ஆபஸ்தம்பர், போதாயனர், காத்யாயனர், ஸத்யாஷாடர், வைகானஸர், பாரத்வாஜர் முதலியவர்கள் கல்பஸூத்ரங் களைச் செய்து இருக்கிறார்கள். இன்றும் அவை பிரசாரத் திலிருக்கின்றன. யஜுர்வேதமொன்றுக்கே பல ரிஷிகள் கல்பஸூத்ரம் எழுதியிருப்பது அந்த வேதத்தின் சாகா பேதங்களை ஆச்ரயித்து ஸ்வல்பமான மந்திர-பிரயோக பேதங்களைக் காட்டுவதற்கே. இது போல் யாகங்களில் ஹோதா என்கிற ரித்விக் செய்ய வேண்டிய மந்த்ர பிர யோகங்களை விதிக்கவே ருக்வேதம் ஏற்பட்டுள்ளது. இதனால் இதற்கு "ஹோத்ருசாகை" என்ற பெயரும் உண்டு. இந்த ரிக் வேதத்திற்கு ஆச்வலாயன மஹர்ஷி கல்பஸூத்ரம் செய்துள்ளார். யாகங்களில் உத்காதா செய்யும் மந்திர பிரயோகாதிகளை விதிக்க ஸாமவேதம் பிர வர்த்தித்தது. இதற்கு "உத்காத்ரு" சாகை என்ற வ்யவ ஹாரமிருக்கிறது. இந்த வேதத்திற்கு த்ராஹ்யாயணர் லாட்யாயணர் முதலியவர்கள் கல்பஸூத்ரம் எழுதியிருக் கிறார்கள். யாகப்ரயோகங்களில் மூன்று வேதங்களும் பிரிக்க முடியாமல் பிணைக்கப்பட்டிருக்கின்றன. மூன்றும் சேர்ந்துதான் யாகம் பூர்த்தியாகும். தனித் தனியாக அவைகளுக்கு பிரவிர்த்தியில்லை. ஆதலால்தான் மூன்றும் சேர்ந்து "த்ரயி" என்ற பெயர் பெற்றது.

## அதர்வசாகை நிலை

அதர்வ வேதம் த்ரயீயில் ஸம்பந்த முள்ளதல்ல. அதில் யாக பிரயோகம் இல்லை. சாந்திகம், பௌஷ்டிகம், அபிசாரம் போன்ற வேறு பற்பல விஷயங்களை அதர்வ

வேதம் சொல்லுகிறது. அதற்கும் கௌசிகர் முதலிய ரிஷிகள் கல்பம் எழுதியுள்ளார்கள். ஆனால் யாகரித்விக்கு கள் நான்கு பேர்களில் ஒருவரான ப்ரம்ஹா என்பவரின் மந்த்ரப்ரயோகம் அதர்வசாகையில் சிறிது சொல்லப்பட்டு அதற்காக கல்பஸூத்ரமும் கௌசிகர் எழுதியுள்ளாராயி னும் ப்ரம்ஹத்வமென்பது த்ரயி வேதத்தில் சொல்லப் பட்டதையே அந்தந்த சாகா சிஷ்டர்கள் கிரஹிக்க வேண்டும். அதர்வசாகை ப்ரயோகம் கிராஹ்யமல்ல. "யத்ருசைவ ஹௌத்ரம் க்ரியதே யஜுஷாத்வர்யவம் ஸாம்நோத்கீதம் அதகேந ப்ரும்மத்வம் க்ரியதே? த்ரய்யா வித்யயேதி ப்ரூயாத்" என்ற சுருதி இதை நிர்ணயித்தது.

## ச்ரௌதகல்பமும், க்ருஹ்யகல்பமும்

இப்போது பட்யமான ப்ரத்யக்ஷ வேதங்களில் சொல்லப்படுகிற யாகாதி கர்மங்களுக்கு ஆபஸ்தம்பாதிகள் எழுதிய சிரௌத கல்ப ஸூத்ரங்களைப்போல் க்ருஹ்ய கல்ப ஸூத்ரங்களையும் எழுதியிருக்கிறார்கள். கர்ப்பா தானாதி ஸம்ஸ்காரங்களும், உபநயன விவாஹாதி ஸம்ஸ் காரங்களும், ஔபாஸநாதி நித்ய கர்மங்களும், வேறு பல வர்ணாஸ்ரம தர்மங்களும் க்ருஹ்யங்களில் சொல்லப்பட் டிருக்கின்றன. இந்த கர்மாக்களுக்கு ப்ரத்யக்ஷ சுருதிகளில் விதி காணப்படவில்லை. மநு முதலிய சிஷ்டர்கள் இவை களை அநுஷ்டித்தும், மற்றவர்கள் அநுஷ்டிக்கும்படி விதிப்பதாலும் இந்த கர்மாக்களும் வேத மூலங்க ளென்றே நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. மந்வாதிகளான சிஷ்டர்களின் ஆசாரத்தைக்கொண்டு மூல சுருதியை அநு மானம் செய்யப்படுகிறது. ஆதலால் அநுமித சுருதி மூலமாக க்ருஹ்யகர்மங்களுக்கும் பிராமாண்யம் அங்கீ கரிக்கப்பட்டிருக்கிறது.

அதகர்மாணி ஆசாராத்யாதி க்ரஹ்யந்தே

என்று ஆபஸ்தம்பரே சொல்லுகிறார்: மேலும்,

தேஷா முத்ஸந்நா: பாடா: ப்ரயோகாதநுமீயந்தே

என்பதால் ஆபஸ்தம்பர், சில மூல சுருதிகள் விச்சின்னங் களாகி விட்டதையும், அவைகளைப் பிரயோகத்தால் அநு

மானம் செய்து அங்கீகரிக்க வேணுமென்றும் தெளிவாகக் கூறுகிறார்.

ஆதலால் க்ருஹ்ய கல்பங்களுக்கு ப்ரத்யக்ஷ வேதத்தில் மூலம் காணாவிடினும் அநுமித சுருதி மூலமிருப்பதால் அவைகளும் வேத மூலங்கள் என்பது வைதிக மத ஸித்தாந்தம். ஆதலால்தான் ஆபஸ்தம்பாதிகள் ச்ரௌத கல்பஸூத்ரங்களிலேயே கிருஹ்ய கல்பஸூத்ரங்களையும் சேர்த்து ஸூத்ரம் செய்துள்ளார்கள்.

ஆனால் ச்ரௌத கல்பஸூத்ரங்களுக்கும், க்ருஹ்ய கல்பங்களுக்கும் எங்காவது விரோதம் ஏற்பட்டால் சிரௌதம்தான் பிரபலமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது

விப்ரதிஷேதே ச்ருதி லக்ஷணம் பலீய:

என்பதால் ப்ரத்யக்ஷ சுருதிமூலமான ச்ரௌதத்திற்கு பிராபல்யம் ஒப்பப்பட்டுள்ளது. ஸ்மிருத்யதிகரணமும் இதற்கு பிரமாணம். ச்ரௌதமும், கிருஹ்யமும் பரஸ்பரம் ஸாபேக்ஷமானது. யாகம் செய்கிறவன் உபநயந விவாஹாதி ஸம்ஸ்காரம் பெற்றவனாயிருக்கவேண்டும். மேலும், சௌச, ஆசமநாதி பலவித தர்மங்களும் சிரௌதத்திற்கு அபேக்ஷிதங்கள். இவைகளெல்லாம் கிருஹ்யங்களின் மூலமே கிடைக்கவேணும். ஆகையால் கிருஹ்யங்கள் ச்ரௌத சேஷங்களாயிருந்து உபகரிக்கின்றன.

## ஆகமாதி கல்பங்கள்.

ச்ரௌத ஸ்மார்த்த கல்பங்கள்போல் ஆகம கல்பங்கள், மந்த்ர கல்பங்கள், சாந்தி கல்பங்கள் போன்ற இன்னும் பலவித கல்பங்கள் வைதிக மதத்தில் உபாதேயங்களாயிருக்கின்றன. ஆகமங்கள் கிருஹார்ச்சை, தேவாலயார்ச்சைகளின் பிரதிஷ்டா அர்ச்சனாதி கல்பங்களை விரிவாகக் கூறுகின்றன. பற்பல சாந்தி கல்பங்களும் மந்த்ர ஸாதன கல்பங்களும், ரிஷிகளாலும் ரிஷி துல்யர்களான சிஷ்டர்களாலும் செய்யப்பட்டு வைதிகமதஸ்தர்களால் பிரமாணமாக ஒப்பப்பட்டிருக்கின்றன. இவைகளெல்லாம் ஸாக்ஷாத்தாக வேதாங்க கல்பத்தில் சேராதவையா

யிருந்தாலும் இவைகளுக்கு வைதிக மதத்தில் பிரமாண்ய முண்டு.

ப்ரஸித்தார்தாநுவாதம் யத் ஸங்கதார்த்தம் விலக்ஷணம்।
அபிசேத் பௌருஷம் வாக்யம் க்ராஹ்யம் தத் முநிவாக்யவத்॥

என்பது வைதிகமத மரியாதை.

## கல்பஸூத்ர ப்ராமாண்யம்.

மீமாம்ஸையில் கல்பஸூத்ராதிகரணம் ஒன்று இருக்கிறது. கல்பஸூத்ரங்களின் பிராமாண்யம் அதில் விசாரிக்கப்பட்டுள்ளது. கல்பஸூத்ரங்கள் பெரும்பாலும் சுருதி வாக்யங்களையே கொண்டவையாயிருப்பதால் சுருதியைப்போல் கல்பஸூத்ரங்களும் ஸ்வதந்த்ர பிரமாணங்களென்று ஒரு பக்ஷம். ஆனால் கல்பஸூத்ரங்களில் சில வாக்யங்கள் ரிஷிகளால் செய்யப்பட்டு கலந்திருப்பதால் அநுமித சுருதிமூலகமான ப்ராமாண்யமுண்டென்று மற்றொரு பக்ஷம்.

## கல்பஸூத்ரம் பிரபலம்.

மீமாம்ஸையில் ஜைமினி, ஆபஸ்தம்பாதி கல்பஸூத்ரங்களை உதாஹரிக்கிறார். கல்பஸூத்ரத்திற்கும் மீமாம்ஸைக்கும் அபிப்பிராய பேதமுள்ள விடங்களில் கல்பஸூத்ரமே பிரபலமென்று சிலர் நிர்ணயித்தார்கள். சுருதிக்கும் கல்பஸூத்ரங்களுக்கும் விரோதமுள்ள விஷயங்களில் துல்யபல நியாயத்தால் விகல்பமென்று சிலர் சொல்லுகிறார்கள். குதூஹல வ்ருத்தியில் இது ஸ்பஷ்டம்.

## அர்த்தஞானம் கர்மாங்கமில்லை.

வேதார்த்த க்ஞான விஷயத்தில் மீமாம்ஸைக்கும் கல்பஸூத்ரங்களுக்கும் அபிப்பிராய பேதம் உண்டு. மந்த்ரார்த்த ஞானமுள்ளவன்தான் கர்மாதிகாரி என்று மீமாம்ஸா மதம். கல்பஸூத்ரகார்கள் இதை அங்கீகரிக்கவில்லை. அவித்வானுக்கும் கர்மாதிகார முண்டென்று யாக்ஞிக கல்பஸூத்ரகார நிர்ணயம். வைதிகமத ஸ்தாபகர் பலரும் மீமாம்ஸையின் அபிப்பிராயத்தை அங்கீகரிக்காமல் கல்பஸூத்ர மதத்தையே அங்கீகரித்துள்ளார்கள்.

ஸ்ரீபகவத் பாதாசார்யாள் சாந்தோக்ய உபநிஷத் பாஷ்யத்தில்,

நச அவிதுஷ: கர்மணி அநதிகார:, ஔஷஸ்த்யே காண்டே அவிதுஷாமபி ஆர்த்விஜ்ய தர்சநாத், இத்யாதி வாக்யத்தாலும், தஸ்மாத் அவிதுஷோ அபி கர்மணி அதிகார:

என்ற ஆனந்தகிரி வாக்யத்தாலும் ஸ்பஷ்டமாக்கப்பட்டுள்ளது. ஔஷஸ்த்ய உபாக்யான பாஷ்யத்திலும் விவரிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். அர்த்த க்ஞானம் கர்மாங்கமென்ற மீமாம்ஸகமதம் வைதிக மதத்தில் அங்கீகரிக்கப்படவில்லை.

## கல்பஸூத்ர அத்யயனம்

'நிஷ்காரணேன ஷடங்கோவேதோ அத்யேயோ ஞேயச்ச' இத்யாதி சுருதியால் கல்பஸூத்ராத்யயனம் நியதமாக விதிக்கப்பட்டிருக்கிறது. சுக்லபக்ஷத்தில் வேதமும், கிருஷ்ண பக்ஷத்தில் வேதாங்கங்களும் அத்யயனம்செய்யும்படி விதிக்கப்பட்டிருக்கிறது.

கல்பஸூத்ரங்கள் வெறும் வைதிக பிரயோகங்களை மட்டும் போதிப்பவையல்ல. லோக ந்யாயங்களும், ஜன ஸமூஹ வாழ்க்கை ஆசார சிக்ஷணாதிகளும் அவைகள் மூலமாக ஏற்படுகின்றன. நான்கு வர்ணங்களின் ஐஹிக ஆமுஷ்மிக தர்மங்களும், ராஜநீதி ஸமூஹ தர்மம், ஸ்திரீ தர்மம், ஸங்கர ஜாதி தர்மம் போன்ற ஸகல தர்மங்களும் அவைகள் மூலம் வெளிப்பட்டுள்ளன. வைதிக ஸமூஹத்தின் அதாவது பாரத தேச ஜனங்களின் நாகரிகாதி ஸகலச் சிறப்புகளுக்கும் இந்த கல்பஸூத்ர விதிகள் மூலமாயிருப்பதால் இத்தேசத்தின் பொக்கிஷங்களாக அவை இருக்கின்றன. ஆகையால் கல்பஸூத்ரங்கள் நம் தேசத்தில் மிகுந்த பிரசாரமும் ப்ராபல்யமும் அடைவது ஆவச்யகமாகும்.

அந்த ஸூத்ரங்களை அப்யஸிக்க வேண்டியதுடன் அந்தக் கிரந்தங்களை அச்சிட்டு பிரசுரிக்கவேண்டியதும் ஆவச்யகம். நமது வேதங்களையும் வேதசாகைகளையும் விமர்சித்தும் அச்சிட்டும் உபகரித்தவர் அந்நியர்களான வெள்ளைக்காரர்களே. வேதமார்க்க ப்ரதிஷ்டானார்த்த மான நம் தேசத்தில் நூற்றுக்கணக்கான மதஸ்தாபனங் களும், தர்மஸ்தாபனங்களும் இருந்தும் அவைகள் மேற் கண்ட வைதிக மத கைங்கர்யத்தில் சிரத்தை கொள்ள வில்லை. இனியாவது இந்தக் களங்கம் நிவர்த்திக்கப்பட வேண்டுமென்று ஸர்வேச்வரனை பிரார்த்திப்போம்.

இத்துடன் காலை நிகழ்ச்சிகள் முடிந்தன. இதற்குப் பிறகு அக்னிஹோத்ரம், ராமானுஜ தாதாசாரியார் ஆறங்கங்களைப்பற்றியும் ஒரு உபந்யாசம் செய்தார்.

மறுபடியும் மாலை 3 மணிக்கு மகாநாடு கூடிற்று. 3 மணி முதல் 4 மணி வரையில் மாயூரம் கூறைநாடு முனிசிபல் உயர்நிலைப்பள்ளி தமிழாசிரியர் திரு. ராமலிங்கம் பிள்ளை அவர்கள் பன்னிரண்டாவது திருமுறையான பெரிய புராணத்திலுள்ள நால்வேத ஆறங்கங்களைக் குறித்து ஒரு சொற்பொழிவு நடத்தினார். இதன் பின்னர் மகா நாட்டின் தலைவர் ஸ்ரீ சச்சிதானந்த ஸ்வாமிகள் முடிவுரை கூறுகையில் இத்தகைய ஒற்றுமை மகாநாடுகள் ஒவ்வொரு நகரத்திலும் கிராமத்திலும் நடைபெற வேண்டுமென்றும், இத்தகைய மகாநாடுகளுக்கு ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகளின் பூரண ஆதரவு இருப்பதாகவும், அன்பின் மூலம் மஹத்தான காரியங்களைச் சாதிக்க முடியு மென்றும், கடவுளிடம் பக்தி இருந்தால்தான் அன்பு பிறக்கும் என்றும் கூறினார். பிறகு வரவேற்புக் குழுவின் சார்பாக திரு. பிச்சையா தேசிகர் மகா நாட்டில் கலந்து கொண்ட யாவருக்கும் வந்தனமளித்தார். இத்துடன் மாலை நிகழ்ச்சிகள் முடிந்தன.

மறுபடியும், இரவு 7 மணிக்கு மகா நாட்டின் கடைசிக் கூட்டம் கூடியது. அச்சமயம் ஸ்ரீமத் ஆசார்யாளும் விஜயம் செய்திருந்தார்கள். 7 மணிமுதல் சங்கீத வித்வான் ஸ்ரீமான் அரியக்குடி ராமானுஜ அய்யங்கார் அவர்கள் இசைக் கருவிகளுடன் தேவாரம் திருப்பாவை முதலிய பாடல் களைப் பாடி மகாநாட்டுக்கு வந்திருந்தவர்களை சந்தோஷிப் பித்தார்.

இதற்குப்பிறகு அங்கு விஜயம் செய்திருந்த ஸ்ரீமத் ஆசார்யாள் அப்போது ஓர் அரிய உபந்நியாஸம் செய்தார்கள்.

ஸ்ரீ

# ஜகத்குரு ஆசார்ய ஸ்வாமிகள் உபந்யாஸம்.

புனிதமான கங்கை நதி கிழக்கு நோக்கி ஓடுகிறது. நர்மதை மேற்கே செல்கிறது. மகாநதி தெற்கிலிருந்து வடக்கே செல்கிறது. பல நதிகள் பல திசைகளில் ஓடுகின்றன. எல்லாம் முடிவில் கடலில் கலக்கின்றன. சேரும் இடம் ஒன்றே என்ற எண்ணம் நதிகளுக்கு இல்லை. அவை எங்கு போனாலும் கடல் அவைகளைச் சூழ்கிறது. அதைப்போல் நாம் பல வழிகளில் இறைவனை வழிபடுகிறோம். பாதைகளில் வேற்றுமை உள. ஆட்கொள்ளும் வஸ்து ஒன்றே. பல வழிகளில் இறைவனை அடைய நாம் முயற்சிக்கலாம். ஆனால் வேற்று வழிகளில் செல்கையில் ஒற்றுமையை மறந்து கடவுளின் ஏகத்வத்தைக் கைவிடக்கூடாது. வேற்றுமையை நினைத்தால் ஆனந்தம் இல்லை.

இம்மகாநாட்டில் நம் வைதிக மதத்தைச் சேர்ந்த எல்லா வழிபாடுள்ளவர்களும் கலந்து கொண்டது மிக சந்தோஷத்தைக் கொடுக்கிறது. இது போன்ற மகாநாடுகள் எங்கும் நடக்கவேண்டும். எல்லோரும் ஒருங்குகூடி, இறைவனை நினைத்து நம் துக்கத்தையும் கஷ்டத்தையும் சற்று மறந்து இருப்போம். தெய்வீக ஒளி வீசட்டும்.

பண்டை நாட்களில் நம் நாட்டில் லஞ்சம், பொய் என்பது ஜனங்களுக்குத் தெரியாது. தற்சமயம் அவை

எங்கும் காணப்படுகிறது. இங்கிலே மாற இதைப் போன்ற மகாநாடுகள் உதவவேண்டும்.

ஆலய வழிபாடு நம் நாட்டில் தொன்றுதொட்டு இருக்கிறது. எல்லாம் கடவுளின் ஸ்வரூபம் என்ற பக்குவநிலை ஞானிகளுக்குத்தான் கிட்டும். ஸாமானிய ஜனங்களுக்கு கடவுளை நினைக்க ஆலயவழிபாடு ஆவசியம். தத்துவம் அறிந்த ஞானிகள்கூட தங்களுக்கு ஞானநிலையை அடைவித்த மூர்த்தியினை வணங்குகிறார்கள்.

எல்லாவற்றையும் மறந்து பெரியோய் இல்லாமல் ஆனந்தமாக இருந்த நமது நாயன்மார்களையும் ஆழ்வார்களையும் ஸ்மரிப்போம். அவர்கள் வார்த்தைகள் தெய்வீக வார்த்தைகள். முற்றிலும் உண்மையானவை. ஆகவே அவைகள் இன்றும் அழியாமல் இருக்கின்றன.

நல் வழியில் ஈடுபட்ட அப்பெரியார்களின் ஆநந்த வாழ்க்கையை அனுபவிப்போம். கடல் ஒன்றே. ஆனால் அதற்குப் பல இடத்தில் பல பெயர்கள் உண்டு. அதே போல் எல்லாம் வல்ல கடவுள் ஒருவரே. நாமரூபங்கள் பல உள. சில நாட்களாவது நாம் இக்கடவுள் ஒற்றுமையைக் காண்போம். இவ்வொற்றுமையை உணர்த்தும் மகான்களை வணங்குவோம். அவர்கள் அன்பு ததும்பும் பாடல்களைப் பாடுவோம். ஆழமானதும் மலைபோலக் கனமானதுமான ஞானம் படைத்த அவர்கள் திருவாக்கை அனுபவிப்போம். உண்மை ஆனந்தம் நமக்குக் கிட்டும்.

திருமுறைகளிலும் திவ்ய பிரபந்தங்களிலும் வேதங்களைப் பற்றியும், வேத ஆறங்கங்களைப் பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. நான்மறைகள், ஆறங்கங்கள், நான்கு உபாங்கங்கள், நான்கு உபவேதங்கள் ஆக பதினெட்டு வித்தைகள் நம்முன்னோர் அப்பியசித்தவைகள். தனுர் வேதம் (ராணுவ சாஸ்திரம்), அர்த்த சாஸ்திரம் (அரசியல்), ஆயுர்வேதம், காந்தர்வம் (கலைகள்) இவைகள் உப

வேதங்கள். இவ்வித்தைகளைக் கற்றுணர்ந்தவர்கள், இவைகள் ஆண்டவன் அருள் என்ற உணர்ச்சியை அடைய வேண்டும்.

எல்லா சக்திகளுக்கும் காரணமாயிருப்பது பராசக்தி. மேகத்திற்குச் சமுத்திரம் காரணமாயிருப்பதுபோல பராசக்தி எல்லா சக்திகளுக்கும் காரணமானவள். மகா பெரும் சக்தி என்று நாம் நினைப்பவைகூட பராசக்தியின் ஒரு அணுவே. கடவுள் இல்லை என்று சொல்லுவோர் நுனிக்கிளையிலிருந்து அடிமரத்தை வெட்டுபவர்களேயாவார்கள். நம் நாட்டில் பக்தி வளரவேண்டும். ஞானம் கமழவேண்டும், ஆஸ்திகம் தழைத்தோங்க வேண்டும்.

## தில்லை ஈசன்.

தில்லையில் ஒரு மூர்த்தி விளங்குகிறார். மெய்மறந்து ஆனந்த நடனம் புரிகிறார். நடனவேகத்தில் விரிந்த சடைகளோடு ஆனந்தமூர்த்தியாகக் காட்சி அளிக்கிறார். அணுக்கள் எல்லாம் ஏககாலத்தில் ஆடிக்கொண்டிருக்கின்றன. அணுக்கள் இயங்க அண்டங்கள் இயங்குகின்றன. அண்டங்கள் இயங்க ஆண்டவன் அவ்வேகத்தில் நடனமாடுகிறார். நடனம் ஆடுவதால் ஆனந்த ஸ்வரூபியாக இருக்கிறார் என்பது விளங்குகிறது. அவரது வலது கையில் உள்ள உடுக்கையிலிருந்து வரும் ஒலியால் பதினான்கு சப்தங்கள் தோன்றின. பாணினி அவைகளை ஆதாரமாகக் கொண்டு வியாகரண சூத்ரங்களை வெளியிட்டார். ஊன்றிய வலக் காலின் கீழ் காணும் அரக்கன் அஞ்ஞானத்தை ஈசன் அடக்கியிருப்பதைக் காண்பிக்கிறது.

## ஆட்டமும் மௌனமும்

பேரானந்தம் அடைந்தவர்கள் ஆனந்த நடனம் செய்வார்கள் அல்லது சாந்தமே உருவாகிக் காட்சி அளிப்பார்கள். அஞ்ஞான அரக்கனை காலால் அமுக்கி

கொண்டு நடராஜப் பெருமான்போல் தென் திசை நோக்கிக் காட்சி அளிக்கும் மற்றொரு மூர்த்தி, பேரானந்தத்தில் சாந்தஸ்வரூபமாக இருப்பவர், தக்ஷிணா மூர்த்தி.

இவ்விரு ஆனந்தமூர்த்திகளை வணங்குவோருக்கு யம பயம் இல்லை. பேரானந்தமும் கிட்டும். இதேபோல் திருமாலும் யோக நித்திரையில் காட்சி அளிக்கிறார். சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் உருவங்கள் வேறு, நிறம் வேறு, வாகனங்கள் வேறு, ஆயுதங்கள் வேறு, பெயர் வேறு, ஆனால் உண்மை உணர்வோருக்கு வஸ்து ஒன்றே. இந்த உண்மையை சங்கரநாராயணரிடம் காணலாம்.

நம் மதங்களில் காணப்படும் வேற்றுமைகளிலும் ஒற்றுமை உணர்ச்சி ஊடுருவிச் செல்கிறது. அதை உணர்ந்து அனுபவிப்போம்.

பல வழிகள் இருப்பினும் எல்லாவற்றின் முடிவும் ஒன்றே. நதிகள் பல திசைகளிலும் ஓடவேண்டும். அப்பொழுது தான் எல்லோருக்கும் க்ஷேமம். ஆனால் முடிவில் எல்லாம் கலந்தாக வேண்டும்.

## ஹிந்து மதம்.

சனாதனமாகிய ஹிந்துமதம் பல்வேறு தத்துவங்களைப் போதித்து அவரவருக்குகந்த நிலையில் யாவரும் ஒரே லக்ஷியத்தையடைய வகை செய்திருக்கின்றது.

அவரவர்கள் தங்கள் தங்கள் ஆசாரியர்கள் உபதேசித்த அனுஷ்டானங்களைப் பின்பற்ற வேண்டும். அவ்வனுஷ்டானங்கள் ஒன்றாக யிருக்கவேண்டுமென்பது அவசியமல்ல. ஆனால் பெரியோர்கள் கடவுளை அடைய எந்த ஆதாரத்தை முக்கியமாக வாழ்க்கையில் கடைப்பிடித்தார்களென்பதில் ஒற்றுமையைக் காணலாம்.

## ஒரே பொருளின் இரு தத்துவங்கள்.

நடனத்தின் மூலமாக அசைவைக் குறிப்பிடும் பகவான் நடராஜரும் சயனத்தில் அசைவற்றுக் காணப்படும் பகவான் விஷ்ணுவும் ஒரே பரப்ரம்மத்தின் இரு தத்துவங்களைக் காண்பிப்பதேயாகும். இருவரும் ஆனந்தமயமாய் விளங்குகின்றனர்.

மதத்தினால் சண்டை உண்டாகுமென்று சொல்லப்படுவது தவறாகும். உண்மையான மதம் எப்பொழுதும் சச்சரவை யுண்டுபண்ணாது. மதத்தின் அடிப்படையில்லாவிட்டால் அரசியல், பொருளாதாரச் சச்சரவுகள் அதிகரித்து ஆபத்தை விளைவிக்கும். ஆதலால் இறைவன் வழிபாடு மனிதனுக்கு மிகவும் அவசியமாகும். அவ்வழிபாட்டிற்கு, எம்பாவைகளின் உதவி அளவிற் கடங்காது.

ஸ்ரீமத் ஆசார்யாள் உபந்யாஸம் முடிந்ததும் மேளவாத்ய கோஷங்களுடன் அலங்கரிக்கப்பட்ட யானையின் மீது திருவெம்பாவை திருப்பாவை நால்வேத ஆறங்கங்கள் இவைகளின் திரு ஏடுகளின் ஊர்வலம் நடைபெற்றது. மகா நாடும் இத்துடன் இனிது முடிவுற்றது.

அரன் நாரணன் நாமம் ஆன்விடைபுள்ளூர்தி,
உரைநூல் மறை யுறையும் கோயில்—வரை நீர்
கரும மழிப்பளிப்புக் கையது வேல்நேமி
உருவமெரிகார் மேனி யொன்று.

**பொய்கையாழ்வார்.**

ஒன்றெனப்பலவென அறிவரும் வடிவினுள் நின்ற
நன்றெழில் நாரணன் நான்முகன் அரனென்னு மிவரை
ஒன்றநும் மனத்து வைத்துள்ளி நும் இருபசையறுத்து
நன்றென நலஞ்செய்வ தவனிடை நம்முடை நாளே.

**நம்மாழ்வார்.**


வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

திருஞானசம்பந்தர்.

மறுநாள் காலை, மார்கழி 18உ (2-1-1951) ரங்கநாத புரம் திராவிடக்கவிமணி, வே. முத்துசாமி அய்யர் அவர் களின் ஏற்பாட்டின்படி ஸ்ரீ மாணிக்கவாசகர் திருப்பள்ளி எழுச்சியிலும் போட்டிப் பரீக்ஷை நடந்து பரிசளிக்கப் பட்டது.

இம்மகாநாடு சம்பந்தமாய் ஸ்ரீ காமகோடி கோசஸ் தானத்தாரால் திருவெம்பாவை, திருப்பாவை, திருப் பள்ளி எழுச்சி, ஆறங்கம், நால்வர், பதின்மர், ஆழ்வார்கள் இவர்கள் சரித்திரம் அச்சிடப்பட்டது. இம்மகா நாட்டில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றிய வித்வான்களுக்கு ஸ்ரீ மடத்தில் சம்மானம் வழங்கப்பட்டது. போட்டிப் பரீக்ஷையில் கலந்து கொண்டவர்களுக்குப் பரிசுகள் வழங் கப்பட்டன.

— —



ஸ்ரீ வரதராஜபெருமாள் கோயிலின் முன் தோற்றமும்,
இடது பக்கத்தில் உள்ள நூற்றுக்கால் மண்டபமும். (காஞ்சிபுரம்)

உ

திருச்சிற்றம்பலம்

# மாணிக்கவாசகர் வரலாறும் எட்டாம் திருமுறை சிறப்பு.

ஸ்ரீநிவாசய்யர், திருவாவடுதுறை.

ஸ்ரீ மாணிக்கவாசக ஸ்வாமிகள் பாண்டி நாட்டில் திருவாதவூரில் சம்புபாதாசிருதருக்கும் சிவஞானவதி என்பவருக்கும் புத்திரராக அவதரித்தார். இவர் பிறந்த குலம் மாமாத்தியப் பிராமணகுலம். வாதவூரர் என்பது பிள்ளைத் திருநாமம். பதினாறு வயதுக்குள் சகல கலைகளையுங் கற்று வல்லவரானார். இவரது புகழ் எங்கும் விரிந்தது.

பாண்டியன் தனது அவைக்களத்துக்கு வருபவர்கள் சிலரைப் பார்த்து நீங்கள் வரும்பொழுது நம் நாட்டிலோ அல்லது பிற நாட்டிலோ கண்ட அதிசயமான விஷயங்கள் இருந்தால் சொல்லவேண்டும் என்றான். அதற்கு அவர்கள் இந்த மா நகருக்கு அருகிலுள்ள வாதவூரில் ஒருவர் இருக்கிறார். வாதவூரர் என்பது அவரது பெயர். பதினாறு வயதுடையவர். அவரது மதி நுட்பத்தை அளக்க எவராலும் இயலாது. அவரை ஒருமுறை அரசரும் பார்ப்பது தக்க காரியமாகும் என்று சொல்லிவிட்டுப் போனார்கள். அரசன் தகுதியுள்ள சிலரை வாதவூரர்பால் அனுப்பினான். வாதவூரரும் பாண்டியன் முன்னர் வந்து சேர்ந்தார். மன்னன் வாதவூரரைப் பார்த்தமாத்திரத்திலேயே மகிழ்ச்சி கொண்டான். வாதவூரரின் அகப் பண்பு அவரது திருமேனியின் வெளியெங்கும் விகசித்து இருந்தது.

இளங்கதிர் உதயமென்று இசை திருமேனிப் பண்பும்
களங்கமில் மதியந் தோன்றிற்று எனுங்கவின் முகமும் காமர்
உளங்கெழு செய்யவாயும் ஒள்ளிய கருணைக் கண்ணும்
வளங்கெழு மார்புந் தோளும் மனங்களி பயப்பக் கண்டான்.

அரசன் வாதவூராருடன் உரையாடலானான். அந்த சமயத்தில்,

"மறைமுதற் கலைகள் எல்லாம் மாண்புற வினவுந்தோறும்
குறைதவிர் விடைகொடுக்கக் கொற்றவன் மகிழ்ச்சிபூத்து."

பிரமராயர் என்ற பட்டத்தை அளித்து தனக்கு முதல் மந்திரியாக்கிக் கொண்டான். வாதவூரர் அமைச்சுரிமை பூண்டு ராஜீய காரியங்களைக் கவனித்து வந்தாலும், ஞானாசிரியர் என்று வருவார், சந்தேகங்களையெல்லாம் அவரிடம் வினவித் தெரிந்து கொண்டு சிவானந்த நிலையில் திளைத்து இன்புறுவது எக்காலம் என்று எண்ணி ஏங்கி வந்தார்.

ஒரு நாள் பாண்டியன், அவையில் இருந்த பொழுது குதிரைகளைப் பாதுகாக்குந் தொழிலிலுள்ளோர் சிலர் அரசனை அடைந்து லாயத்திலுள்ள குதிரைகளின் தன்மைகளைக் கூறி, சிறந்தனவாக ஒரு குதிரையும் இல்லை என்றார்கள். இந்தச் சமயத்தில் கீழ் கடலில் பல தேசத்துக் குதிரைகள் வந்திறங்கியிருப்பதாகக் கேட்ட பாண்டியன், வாதவூரரை நோக்கி பண்டாரத்தில் வேண்டுவன கொண்டு சென்று பரிகள் பல வாங்கி வாருங்கள் என்றான். வாதவூரர் பெருங் கூட்டத்தோடு சென்று சில தினங்களில் திருப்பெருந்துறையை அடைந்தார். அந்த ஸ்தல எல்லையை அடைந்த காலத்து பஞ்சேந்திரியங்களுக்கும் இன்பம் விளைய, தோளும் கண்ணும் வலந்துடிக்க வாதவூரர் நன்னிமித்தமாக நினைத்து மகிழ்ச்சி கொண்டு ஆலயத்துக்குள் சென்றார். இறைவனை வணங்கிக் கொண்டு குருந்த விருக்ஷ சமீபமாகச் செல்லலானார். அப்பொழுது சிவபெருமான் விருக்ஷத்து அடியில் பல அந்தண சிரேஷ்டர்கள் சூழ, அவர்களுக்குத் தலைமை ஸ்தானத்தில் வீற்றிருந்தார். வாதவூரர் இவரே நம்மையாட்கொள்ள வல்லவர் என்று நினைத்து அவரது மலரடிக் கீழ் பணிந்தெழுந்தார். இறைவன் உபதேசஞ்செய்து வாதவூரரை ஆட்கொண்டார். வாதவூரர் மனங்கனிந்து இறைவனைத் துதிக்கலானார்.

தொழுபவர் ஒருபால் துதிப்பவர் ஒருபால்
துதித்து உளம் நெக்கு நெக்குருகி
அழுபவர் ஒருபால் இவரெலாம் நிற்க
அடியனேன் தனைப் பிடித்து ஆண்டாய்

பழுதில் நின்கருணைத் திறத்தை என்புகல்கோ
பாண்டி நாடியற்றிய தவத்தால்
கொழுமலர்ச் சோலைத் திருப் பெருந்துறையில்
குருந்தடி யிருந்தருள் பரனே.

சிவபெருமான் வாதவூருக்கு மாணிக்கவாசகர் என்ற பெயரையளித்துவிட்டு மறைந்தருளினார். மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையிலேயே தங்கி ஆலயத்தை விரிவுறத் திருப்பணி செய்ய ஆரம்பித்தார். பரிகள் வாங்குவதற்கான பாண்டியனின் பெருஞ் செல்வம் பரமனுக்கான திருப்பணியில் செலவழியத் தொடங்கிற்று. இதைச் சிலரால் அறிந்த பாண்டியன் சில தூதரை அனுப்ப வாதவூரர் இறைவனுக்கு மன்னன் கருத்தை அறிவித்தார்.

ஆவணிமூல நாளில் குதிரைகள் வரும் என்று பாண்டியனுக்குச் சொல்லும்படியாக வாதவூருக்கு இறைவன் கட்டளையிட்டார்.

வாதவூரர் மதுரையை அடைந்து பாண்டியனுக்கு ஆவணி மூலத்தன்று குதிரைகள் வரும் என்று அறிவித்தார். குதிரைகள் வருவதற்கான அறிகுறி ஏதும் இல்லாததனால், சில துர்ப்போதனையாளர்களின் வார்த்தைகளால் வாதவூரரைச் சிறையிலிட்டுப் பல கொடுமைகள் செய்தான். வாதவூரரை வெயிலில் நிறுத்தினார்கள். வாதவூரர் இறைவனை நோக்கி முறையிடலானார்.

அறத்தனிச் செல்விபாக அன்பிலேன் நின்பாலென்று
வெறுத்திடில் அடியேற்குஇங்கு வேறொரு துணையுமில்லை
செறுத்துயர் புரங்கள் எல்லாம் செற்றவன் அடியான்தன்னை
நிறுத்தினர் வெயிலில் என்றால் நின்புகழ்க்கு ஏற்றமாமோ.

வாதவூரரின் நிலையைக் கண்ட இறைவன் நரிகளைப் பரிகளாக்கிக் கொண்டு பல குதிரை வீரர்களுடன் அவர்களுக்குத் தலைவராய்ப் பாண்டியன் முன் வந்து குதிரைகளை ஒப்புவித்தார். மன்னன் வாதவூரரைச் சிறையினின்றும் விடுவித்தான். பரிகள் நரிகளாகவே பாண்டியன் மீண்டும் ஆறாக் கோபமடைந்து வாதவூரரைச் சிறையில் இட்டனன். சிவபெருமான் வையை நதியை பெருக்கெடுத் தோடச் செய்தார். உடைப்பைச் சீர்படுத்தும் வேலையில் பலர்

முனைந்தனர். சிவபெருமான் பிட்டுவிற்கும் வந்தி என்பவளின் ஆளாக வந்து வையைக் கரையில் விளையாடலைப் புரிந்து நின்றார். வேலையைச் சரிவரச் செய்யாததைக் கண்ட பாண்டியன் தனது கைப் பிரம்பினால் வாதவூரரை அடித்தான். அந்த அடி அனைவர் மீதும் பட்டது. வேலையாளாக வந்த சிவபெருமான் மறைந்தருளினார். மாணிக்கவாசகரைத் துன்பப்படுத்தியதனால் இந்த விளைவுகள் நிகழ்ந்தன என்று அசரீரியாகச் சொல்லியருளினார். பாண்டியன் மாணிக்கவாசகரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். பின்னர் மாணிக்கவாசகர் பல ஸ்தலங்களில் இறைவனை வணங்கிக்கொண்டு சிதம்பரத்தை அடைந்தார். சிவபெருமான் வேற்று உருவந் தாங்கிக்கொண்டு மாணிக்கவாசகரை அடைந்து, அவர் பாடியருளிய திருவாசகத்தை எல்லாம் எழுதிக்கொண்டு, திருக்கோவையாரைப் பாட இறைவன் அதனையும் எழுதி இறுதியில் அழகிய சிற்றம்பலம் உடையான் என்று கையெழுத்திட்டு பஞ்சாக்ஷரப் படியில் வைத்துவிட்டு மறைந்தருளினார்.

மறுநாட் காலை அதனைக் கண்ட எல்லோரும் அதை மாணிக்கவாசகர் திருமுன்கொணர்ந்து அதற்குப் பொருள் சொல்ல வேண்டும் என்றார்கள். எல்லோருடனும் கனக சபையின் முன்னே மாணிக்கவாசகர் எழுந்தருளி, அவரே இதற்குப் பொருள் என்று இறைவனைச் சுட்டிக் காட்டி அனைவருங் காண அச் சபையில் மறைந்தருளினார்.

## திருவாசகச் சிறப்பு.

மாணிக்கவாசகர் இறைவனை வணங்குவதையும் அவனருளாலேயே வணங்குவதாகக் கூறுகிறார்.

அவனருளாலே அவன்தாள் வணங்கி (சிவபுராணம் —வரி. 18.)

இறைவன் தன்னை யாட்கொண்ட போதே உடல், பொருள், ஆவி மூன்றையும் அளித்து விட்டதினால், தனக்குத் தான் செய்யும் செயல்களில் எத்தகைய சம்பந்தமும் கிடையாது என்று கூறி, நல்லது கெட்டது எல்லாம் நின்செயலே. அதற்கு அதிகாரி நானல்ல என்று கூறுகிறார்.

அன்றே என்றன் ஆவியும் உடலும்
உடைமை யெல்லாமும்
குன்றே யனையாய்! என்னை யாட்கொண்ட
போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ
எண்தோள் முக்கண்எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ
இதற்கு நாயகமே.

(குழைத்தபத்து 7.)

என்னதோ இங்கு அதிகாரம் (ஷை பத்து. 8.)

யோக மார்க்கத்தில், சந்திர மண்டலம் வழியாக அமிர்தம் பிரவாகிக்க அதை உடல் முழுதும் பாயச் செய்து அதில் தேங்கி நிற்கும் நிலை ஒன்று இருக்கிறது. அதை இறைவன் தனக்குக் காட்டியருளியதாகக் கூறுகிறார்.

காயத்துள் அமுது ஊறஊற நீ கண்டுகொள் என்று காட்டிய
(சென்னிப் பத்து. 5.)

சிவதத்துவத்திலிருந்து சத்திதத்துவம் தோன்றிற்று என்றபோது சிவபெருமான் பார்வதிக்குத் தந்தை ஸ்தானத்திலும், சத்தி தத்துவத்திலிருந்து சதாசிவ தத்துவம் தோன்றிற்று என்றபோது பார்வதிக்குச் சிவபெருமான் புத்திர ஸ்தானத்திலும் இருப்பதாகச் சொல்லுவதை மாணிக்கவாசகரும் கையாண்டிருக்கிறார்.

"எம்பெருமான் இமவான் மகட்கு
தன்னுடை கேள்வன், மகன், தகப்பன்"
(திருப்பொற் சுண்ணப்பாட்டு 13.)

என்று கூறுகிறார்.

இதே கருத்தை திருக்கோவையாரிலும் கூறுகிறார்.

"தவளத்த நீறணியுந் தடந்தோள் அண்ணல் தன் ஒரு பால்
அவள், அத்தனும், மகனுந் தில்லையான்"

(கோவையார் 112.)

மார்கழி மாதத்தில் விடியற்காலையில் நீராடி இறைவனை வணங்கும் முறையை திருவெம்பாவையில் பாடியிருக்கிறார். அதில் இறைவனின் திருவடிச் சிறப்பைப் பற்றி அழகாகக் கூறுகிறார். சிவபெருமான் திருவடிகளில் தேவர்கள் வணங்குகிறார்கள். சிவபெருமானின் திருவடிகளின் ஒளி முன்னர் தேவர்களின் மகுடங்களிலுள்ள மணிகளின் ஒளி மழுங்கிப் போகின்றனவாம். அதைப்போல சூர்யோதயமாகும் காலத்து அந்த ஒளிகளின் முன்னர் நக்ஷத்திர ஒளிகள் மங்கி மறைகின்றனவாம்.

அண்ணாமலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறுஅற்றார்போல்
கண்ணார் இரவி கதிர் வந்து கார் கரப்பத்
தண்ணார் ஒளி மழுங்கித் தாரகைகள் தாமகல.

(திருவெம்பாவை 18)

அடியார்களின் எண்ணம் பழுது படாமலும், சுயநலம் இல்லாமலும் தூய்மையாயும் இருக்குமாதலால் அத்தகைய இடங்களில் இறைவன் வீற்றிருப்பது கண் கூடாகையால், திருப்பள்ளியெழுச்சியில் "விரும்பு அடியார் எண்ணகத்தாய் (9) என்று பாடுகிறார். தனக்காக இறைவன் பிரம்படி பட்டுத் திருமேனியில் தழும்பேற்றிக் கொண்டதையும் பாடுகிறார்.

மண்சுமந்து கூலி கொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன் மேனி.

(திருஅம்மானை 8.)

இறைவன் வேதத்தை அருளியதாகக் கூறுகிறார்.

வேதமெய்நூல் சொன்னவனே. (நீத்தல்விண்ணப்பம் 43)

அன்று ஆலநிழற்கீழ் அருமறைகள் தானருளி. (திருப்பூவல்லி 13.)

திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார் என்பது பழமொழி. ஒரு செய்யுளில் திருவாசகத்தைத் தேனாகக் கூறியிருக்கிறது. தேன் இனிக்கும். அதைக் குடித்தால் இனிப்பதன் மூலம் ஆனந்தம் உண்டாகும். திருவாசகம் என்ற தேனும் ஒரு ஆனந்தத்தைத்

தருகிறதாம். நீண்டகாலமாக பிறவி என்றதனை நீக்கு வதன் மூலம், அப்பிறவி பற்றி வரும் துன்பத்தை நீக்கி முத்தியானந்தத்தைத் தருகிறதாம். பாட்டு வருமாறு:

தொல்லையிரும் பிறவிச் சூழுந்தளை நீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே— எல்லை
மருவா நெறிஅழிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னுந்தேன்.

திருவாசகத்தின் சிறப்பைப் பற்றி வடலூர் இராமலிங்க சுவாமிகள் பாராட்டிய பாடல்களில் இரு பாடல்கள் இங்கு கொடுக்கப் பட்டிருக்கிறது.

வான் கலந்த மாணிக்கவாசக நின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ்சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே.

வாட்டமிலா மாணிக்கவாசக நின்வாசகத்தைக்
கேட்ட பொழுது அங்கிருந்த கீழ்ப்பறவைச்சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான
நாட்டமுறும் என்னில் அங்கு நானடைதல் வியப்பன்றே.

திருவாசகத்தைக் கேட்ட பொழுது கொடிய விலங்கு களும் கொடுமை நிலை ஒழிந்து ஞானநிலை அடையுமென் றால், அந்த ஞான நிலையை நானடைவது ஒரு ஆச்சரிய மில்லை என்பது இரண்டாவது பாடலின் கருத்தாகும்.

---

௳

உ

திருச்சிற்றம்பலம்

# பதினோராந் திருமுறைச் சிறப்பு

## ஸ்ரீநிவாசையர், திருவாவடுதுறை.

பதினோராந் திருமுறையென்பது சங்கமிருந்து தமிழாராய்ந்த சிவபெருமானின் திருமுகப் பாசுரத்தைத் தலைப்பிற்கொண்டு, காரைக்காலம்மை, சேரமான் பெருமான், நக்கீரர், பட்டினத்தார், நம்பியாண்டார் நம்பி முதலியோர்களுடைய தெய்வ மணங்கமழும் பாடலைக் கொண்டதாகும். நக்கீரர், கபிலர், பரணர் முதலியோர் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளால் பொய்யடிமையில்லாப் புலவர்கள் என்று பாராட்டப் பெற்றவர்கள். நம்பியாண்டார் நம்பியோ திருநாரையூரில் உள்ள பொல்லாப் பிள்ளையாரால் சகல ஞானமும் கைவரப்பெற்றவர். காரைக்காலம்மையார், பட்டினத்தார் சரிதைகளை யாவரும் அறிவர். இந்தப் பதினோராந் திருமுறையில் பல புலவர்களின் வாக்கு நயத்தைக்கண்டு மகிழலாம். ஆகையால் இந்தத் திருமுறையைப் புலவர் பெருமக்கள் என்ற வண்டுக் கூட்டங்களால் சேர்க்கப்பட்ட தெய்விகத் தேன் நிரம்பியுள்ள ஒரு தேன் கூடாகச் சொல்லலாம்.

## திருவாலவாயுடையார் திருமுகப்பாசுரம்

சிவபிரான் பாணபத்திரருக்கு பொருள் தரும்படியாக சேரருக்கு ஆக்ஞாபித்தருளிய திருமுகம் திருமுகப்பாசுரம் என்று சொல்லப்படும். இந்தப் பாசுரத்தைப்பாடி பாணபத்திரர் கையில் தருவதற்கு முன்னரும், சிவபெருமான் பாணபத்திரருக்கு பாண்டியனின் பண்டாரத்தில் இடப்பட்டுள்ள மீனமுத்திரைக்கு எத்தகைய இடையூறும் நேராமல், அப்பண்டாரத்திலிருந்து பாணபத்திரருக்கு பொருள் அளித்து வந்தார். என்பதை திருவிளையாடற்

புராணத்தால் அறியலாம். இது மாதிரி செய்தால் பல ருக்கு இடையூறும் வீண் குழப்பங்களும் உண்டாகும் என்பதை பாணபத்திரருக்கு ஒருநாள் சிவபிரான் அறி வுறுத்த, சேரன் பக்கல் செல்லும்படியாக இத்திருமுகப் பாசுரத்தைப் பாடி அவரிடம் அளித்தார். பாணபத்திரர் திருமுகத்தை எடுத்துக்கொண்டு மலைநாடடைந்தார். சேரனிடத்தில் விஷயத்தைச் சொன்னார். சேரன் மகிழ்ச்சி யுடன் பெருநிதி அளித்து பாணபத்திரருக்கு விடை கொடுத்தான்.

இறைவனார் அளித்த பாசுரம் வருமாறு.

மதிமலிபுரிசை மாடக்கூடல்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிற(கு)
அன்னம்பயில் பொழில் ஆலவாயில்
மன்னியசிவன்யான் மொழிதரும்மாற்றம்
பருவக்கொண்மூ படியெனப் பாவலர்க்கு
உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமாமதிபுரை குலவிய குடைக்கீழ்
செருமாவுகைக்கும் சேரலன்காண்க
பண்பால் யாழ்பயில் பாணபத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வர விடுப்பதுவே.

## காரைக்காலம்மையார்

பிறந்து மொழி பயின்ற பின்னர் உன் திருவடியைப் பற்றுக்கோடாகக் கொண்ட என்றன் இடரைக் களைவது நாள் எந்நாள் என்று இறைவனை நோக்கிக் கேட்கிறார்.

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்—நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்பது இடர்.

சிவபிரான் தனது இடரைக் களையாவிட்டாலும் அவர் மாட்டு தாம் வைத்த அன்பு குறையாது என்கிறார்.

இடர்களை யாரேனும் எமக்கு இரங்காரேனும்
படருநெறிப் பணியாரேனும் — சுடருருவில்
என்பறாக் கோலத்து எரியாடும் எம்மனோர்க்கு
அன்பறாது என்நெஞ் சவர்க்கு.

இறைவனின் திருவுருவத்தைக் காலைச் சூரியனின் ஒளிக்கும், அவரது மேனியில் உள்ள திருநீற்றின் ஒளியை கடும்பகல் ஒளிக்கும் சிவந்த சடைக்காட்டை, மாலை தோன்றும் செக்கர் நிறத்திற்கும் கழுத்தை இருளுக்கும் உவமித்துக் கூறுகிறார்.

காலையே போன்றிலங்கும் மேனி கடும்பகலின்
வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு — மாலையின்
தாங்குருவே போலுஞ் சடைக்கற்றை மற்றவர்க்கு
வீங்கிருளே போலு மிடறு.

சிவபெருமானுக்கு சிறு ஆலோசனை ஒன்றைக் கூறுகிறார்.

"சிவபிரானே! நீர் அடிஎடுத்து வைத்தால் பாதாளம் பேரும். முடியசைக்கின் வானம் பேரும். கையை அசைத்திரோ திசைகள் பேரும். ஆனபடியால் சபை யானது உங்கள் ஆட்டத்தைத் தாங்காது."

அடிபேரில் பாதாளம் பேரும் அடிகள்
முடிபேரின் மாமுகடு பேரும்—கடகம்
மறிந்தாடு கைபேரின் வான்திசைகள் பேரும்
அறிந்தாடும் ஆற்றாது அரங்கு.

சிவனும் மகா விஷ்ணுவும் ஒன்று சேர்ந்து நின்றால் நீலமலையும் பொன்மலையும் சேர்ந்திருப்பவை போல் இருக்கும் என்கிறார்.

மின்போலுஞ் செஞ்சடையான் மாலோடு ஈண்டிசைந்தால்
என்போலும் காண்பார்கட்கு என்றிரேல்—தன்போலும்
பொற்குன்றும் நீலமணிக் குன்றுந் தாமுடனே
நிற்கின்ற போலும் நெடிது.

இறைவன் அடியார் இடரைக் களைந்தான வல்லவர் என்பதை திருவிரட்டை மணி மாலையில் கூறுகிறார்.

பிரானென்று தன்னைப் பன்னாள் பரவித்தொழுவார் [இடர்கண்டு
இரானென்ன நிற்கின்ற ஈசன்கண்டீர் (3)

.... தஞ்ச மென்று ஆட்பட்டார் ஆழாமே
வத்தணைந்து காத்தளிக்கும் வல்லாளன். (4)

## சேரமான் பெருமாள்

மாந்தர்கள் திருந்திய காலத்தில் இறைவன்தானே அருளுவான் என்று கூறுகிறார்.

வருந்திய வாழ்க்கை தவிர்த்திடு போகநெஞ்சே!
திருந்தியபோது அவன்தானே களையும் நந்தீவினையே.

(பொன்வண்ணத் தந்தாதி 17.)

சிவபெருமானுக்கு வேதம் முகம் என்று பாடுகிறார்.

வேதம் முகம் (19.)

இறைவனிடத்தில் தலைவி காதல் கொண்டாள். அவன் சீக்கிரம் வரவில்லை. மனத்தில் பசலை நிறம். உண்டாயிற்று. கண்ணில் நீர்ப்பெருக்கெடுத் தோடிற்று. உன்மத்த நிலையும் உண்டாயிற்று. இதைத் தாயோ தோழியோ பார்த்துவிட்டு, உனக்குத்தான் சிவபெருமான் அருள்செய்து விட்டாரே. கொன்றை (அதன் நிறமொத்த பசலை)யை அளித்துவிட்டார். கங்கைப் பெருக்கையும் (கண்ணீர்ப் பெருக்கையும்) உன்னிடத்தில் வைத்து விட்டார். சிரசில் சூடிய பூவாகிய உன்மத்தம் உன் சிரசுக்கு (உன்மத்த நிலையை) அளித்துவிட்டார். சிவ சாரூப்யத்தைப் பெற்றுவிட்ட நீ மேலும் எதனை வேண்டி ஆற்றி நிற்கின்றாய் என்று கேட்கிறாள்.

செப்பன கொங்கைக்குத் தேமலர்க்கொன்றை
நிறம் பணித்தான்
மைப்புரை கண்ணுக்கு வார்புனற் கங்கைவைத்தான்
மனத்துக்கு
ஒப்பன இல்லா ஒளிகிளர் உன்மத்தமும்
அமைத்தான்
அப்பனை, அம்மனை! நீஎன்பெறாது
நின்றார்க்கின்றதே. (49)

என்று சமரஸ பாவத்தில் பாடுகிறார்.

சிவன், விஷ்ணு, பிர்மா நாமதேயம், கயிலாயம், சமுத்திரம், தாமரைப் புஷ்பம் இவைகள் இருப்பிடங்கள். கொன்றை, துழாய், கமலம், மாலைகள், நிறமும் ஷை மாலைகளைப் போன்றதே. கொன்றையின் நிறம், சிவன் மேனி. துழாயின் நிறம் விஷ்ணுவின் மேனி. கமலத்தின் நிறம் பிர்மாவின் மேனி. ரிஷபம், கருடன், அன்னம் வாகனம்.—இப்படிக்கிருக்க எல்லாம் வெவ்வேறு என்று சொல்லுகிறார்கள். எங்கள் ஈசனின் தன்மையை எவராலும் அறியமுடியாது.

வீரன் அயன் அரி வெற்பு அலர்
நீர் எரிபொன் எழிலார்
காரொண் கடுக்கை கமலம் துழாய்
விடை தொல் பறவை
பேர் ஒண்பதி நிறம் தார் இவர்
ஊர்தி வெவ்வேறு என்பரால்
யாரும் அறியாவகை எங்கள்
ஈசர் பரிசுகளே. (95)

## நக்கீரர்.

வெகு காலமாகத் தொண்டுபட்ட என்னை ஆளத்தயவுண்டோ, இல்லையோ என்று கேட்கிறார்.

பண்டு தொடங்கியும் பாவித்து நின்கழற்கே
தொண்டு படுவான் தொடர்வேனை--கண்டுகொண்டு
ஆளத் தயவுண்டோ இல்லையோ சொல்லாயே
காளத்தியாய் உன்கருத்து.

(கயிலைபாதி காளத்திபாதி. அந்தாதி 14.)

நமக்கிசைந்தபடி ஏத்தி வழிபட்டால். அதற்குத் தாம் என்ன செய்யலாம் என்பதை இறைவர் தாமே அறிவார் என்று கூறுகிறார்.

நமக்கிசைந்தவா நாமும் ஏத்திஞல் நம்பர்
தமக்கழகு தாமே அறிவர் (22)

சிவபிரானின் திருவடி தன்னை அடைந்தவர்க்கு எவ்விடத்துங் காப்பாகியும், அன்பு செய்பவர்க்கு முத்தி

கொடுத்தும், தியானிப்போர் முன்வந்து நின்றும் அருள் செய்யும் என்று பாடுகிறார்.

சார்ந்தாரை எவ்விடத்துங் காப்பனவும் சார்ந்து அன்பு
கூர்ந்தார்க்கு முத்தி கொடுப்பனவும்—கூர்ந்துள்ளே
மூளத் தியானிப்பார் முன்வந்து நிற்பனவும்
காளத்தி யார்தம் கழல். (60)

இறைவர் நினைவார்க்கு அருள் செய்து அச்சந் தவிர்த்து ஆட் கொள்வார் என்று கூறுகிறார்.

நெஞ்சே அவர் கண்டாய் நேரே நினைவாரை
அஞ்சேல் என்று ஆட்கொண்டருள் செய்வார். (66)

## கபிலர்

விண்ணுலகம் கணபதியைத் தலைவனாக உடையது என்று பாடுகிறார்.

வேட்கை வினைமுடித்து மெய்யடியார்க்கு இன்பஞ் செய்து
ஆட்கொண்டருளும அரன் சேயை—வாட்கதிர்கொள்
காந்தார மார்பிற் கமழ்தார்க் கணபதியை
வேந்தா உடைத்து அமரர் விண்.

(மூத்தநாயனார் இரட்டைமணி மாலை. 15.)

மாலை ஒரு பாகத்து மகிழ்ந்தவனும், செக்கர் மேனிய னும், நஞ்சுண்ண ஒளியாதவனுமான சிவனை உளமே ஏத்து என்று உள்ளத்திற்கு அறிவுறுத்துகிறார்.

மாலை ஒரு பால் மகிழ்ந்தானை வண் கொன்றை
மாலை ஒரு பால் முடியானை—மாலை
ஒளியானை உத்தமனை உண்ணு நஞ்சு உண்டற்கு
ஒளியானை ஏத்தி உளம்.

(சிவபெருமான் அந்தாதி. 2.)

## பரணர்

சிவன் மாலயன் வடிவாய் இருப்பதாக பாடுகிறார்.

தான் அயன் மாலாகி நின்றான் தனித்தலவில்
தான் அயன் மாலாய தன்மையான்.

(சிவபெருமான் அந்தாதி. 23)

வேதம் ஆறங்கம் சிவபிரானால் வெளியிடப் பெற்றவை என்று கூறுகிறார்.

வேதம் நான்கு ஆறங்கம் வேறுரைத்த
மேனி விரிசடையான். (31)

## பட்டினத்தார்

அரச செல்வத்தை ஏற்பதினும் சிவனடியார்க்குத் தொண்டு செய்துகொண்டு பிச்சை யேற்றுண்ணும் வாழ்க்கை சிறந்தது என்கிறார்.

குடைகொண்டு இவ்வையமெலாம் குளிர்வித்து
எரி பொற்கிரிப்
படைகொண்டு இகத்தெறும் பார்த்திவர்
ஆவதிற் பைம்பொற் கொன்றைத்
தொடைகொண்ட வார்சடை அம்பலத்தான்
தொண்டர்க்கு ஏவல்செய்து
கடைகொண்ட பிச்சைகொண்டு உண்டு
இங்குவாழ்தல் களிப்புடைத்தே.

(கோயில்நான்மணி மாலை 2.)

தில்லையம்பலத்தே சகல இடர்களும் நீங்குகின்றன என்கிறார்.

பெறுகின்ற எண்ணிலி தாயரும் பேறும்
யானும் என்னை
உறுகின்ற துன்பங்கள் ஆயிரம்
கோடியும் ஒய்வொடுஞ்சென்று
இறுகின்ற நாள்களும் ஆகிக்கிடந்த
இடுக்கண் எல்லாம்
அறுகின்றன தில்லை ஆளுடையான்
செம்பொன் அம்பலத்தே. (30)

சிவபிரான் திருவடியைச் சார, பச்சிலையும் நீரும் இருக்கின்றது. அதுவும் இல்லையென்றால் நினைக்க நெஞ்சு இருக்கின்றது. நினைந்துய்யலாமே என்று பாடுகிறார்.

போதும் பெறாவிடிற் பச்சிலையுண்டு புனல்
உண்டு அங்கு
ஏதும் பெறாவிடில் நெஞ்சுஉண்டு அன்றே

(கழுமல மும்மணிக்கோவை 12)

இறைவன் நாமத்தைக் கூற சகல பாக்கியங்களும் உண்டாகும் என்கிறார்.

பொருளுங் குலனும் புகழுந் திறனும்
அருளும் அறிவும் அனைத்தும்—ஒருவர்
கருதா என்பு ஆர்க்கும் தொல்லை
மருதா என்பார்க்கு வரும்.

(திருவிடைமருதூர் மும்மணிக்கோவை 2)

உழைப்பினால் வாராதது ஒன்றில்லை என்கிறார்.

உழைப்பில் வாரா உறுதிகள் உளவோ. (10)

பலசாலியாயுள்ளவன் முயன்று எறிந்தாலும், பல மற்றவன் ஆற்றமாட்டாமல் எறிந்தாலும், மேலே சென்ற கல் கீழே வந்து சேருவதைப்போல, உனது நாமத்தை விரும்பிச் சொன்னாலும், அல்லது வேறொருவரை அழைக்குமுகமாக சங்கரா என்று அகஸ்மாத்தாகச் சொன்னாலும் சரி, நலத்தினின்றும் அவர்கள் நீங்கமாட்டார்கள் என்று உறுதியுடன் கூறுகிறார்.

வல்லான் ஒருவன் கைமுயன்று எறியினும்
மாட்டாஒருதன் வாளா எறியினும்
நிலத்தில் வழாஅக் கல்லேபோல்
நலத்தின் வழார்நின் நாமம் நவின்றோரே, (19)

நினைவார்க்கு சிவன் அருளுவான் என்று கூறுகிறார்.

நினைவார்க்கு அருளும் பிரான்.

(திரு ஏகம்பர் அந்தாதி 61)

அடியார் முன்னர் யமன்வந்தால் நீ இங்கு வரத் தகாதவன் என்று அதட்டி ஓட்டுவதாகக் கூறுகிறார்,

........கூற்றம் வந்தால்

அலாய் என்று அடியார்க்கு அருள்புரி ஏகம்பர். (64)

அலாய்—நீ இங்கு வரத் தகாதவன். அதட்டல் சப்தமாகவும் கொள்ளலாம்.

சமரஸ பாவத்திலும் பாடுகிறார்,

மாலோய் போற்றி மறையோய் போற்றி.

(திருவொற்றியூர் ஒருபா ஒருபது 10)

## நம்பியாண்டார் நம்பி

விநாயகரை துதிக்க நினைந்தால் வாட்ட வரும் மும்மலங்கள் தீயை அருந்த எண்ணுகின்ற எறும்பைப்போல மாய்ந்தொழியும் என்று பாடுகிறார்.

மருப்பையொரு கைக்கொண்டு நாரையூர் மன்னும்
பொருப்பை யடிபோற்றத் துணிந்தால்—நெருப்பை
அருந்த எண்ணுகின்ற எறும்பன்றே அவரை
வருந்த எண்ணுகின்ற மலம்.

(விநாயகர் இரட்டைமணி மாலை 7)

நல்லோர்களின் பகைநன்று. இழிந்தோர் நட்பு தீது. இந்த வார்த்தையைச் சாக்கியர்க்கு சிவபிரான் அருளியிருப்பதன் மூலம் அறிந்து கொண்டேன் என்று பாடுகிறார்.

நல்வழிநின்றார் பகைநன்று நொய்யர் உறவிலென்னும்
சொல்வழிகண்டனம் . . . . சாக்கியனார்
கல்வழி நேர்நின்று அளித்தனன் காண்க சிவகதியே.

(கோயில் திருப்பண்ணியர் விருத்தம் 32)

இதையே சிவப்பிரகாசரும்,

மாசற்ற நெஞ்சுடையார் வன்சொல் இனிது ஏனையவர்
பேசுற்ற இன்சொல் பிறிதென்க—ஈசற்கு
நல்லோன் எறிசிலையோ . . . . கருப்பு
வில்லோன் மலரோ விருப்பு.

என்று பாடுகிறார். நல்லோன்-சாக்கிய நாயனார், சிலை. கல். குமரகுருபரரும்,

இனியவர் என்சொலினும் இன்சொல்லே இன்னார்
கனியு மொழியுங் கடுவே—அனல் கொளுந்தும்
வெங்காரம் வெய்தெனினும் நோய்தீர்க்கும
சிங்கி குளிர்ந்துங் கொலும்.

(சிங்கி-விஷம், வெக்காரப்-மருந்துப்பொருள்)

என்றிருக்கிறார்.

தீவினைகள் என்னை வருத்துகின்றனவே. உன் பக்தனைபடியால் பிறர்கண்டால் சிரியாரோ. பழி யாருக்கு என்று கூறுகிறார்.

கறுத்தகண்டா அண்டவாணா
வருபுனற் கங்கைசடை
செறுத்த சிந்தாமணியே இல்லையாய்
என்னைத் தீவினைகள்
ஒறுத்தல் கண்டால் சிரியாரோ
பிறர் என் உறுதுயரை
அறுத்தல் செய்யாவிடின் ஆர்க்கோ
அருஞ்சொல் அருட்பழியே. (39)

சித்தகக் கோயிலில் நிறுத்தும் உணர்வுடையார்க்கன்றி புத்தகப் பேய்களுக்கு இறைவனின் திருவடி எங்கே இருக்கிறது என்று கூறுகிறார்.

சித்தகக் கோயில் இருத்துக் திறத்து ஆகமர்க்கல்லால்
புத்தகப் பேய்களுக்கு எங்குற்றதோ அரன் பொன்னடியே.

காழி அந்தணர்களை அக்கினி காரியம் செய்பவர்களாகவும், வேதம், வியாகரணம் முதலிய நூற்பொருளை ஓதுபவர்களாகவும் கூறுகிறார்.

மறைபயில்வார் மன்னுவியாகரணக் கேள்வித்
துறைபயில்வார் தொன்னூல் பயில்வார்—முறைமையால்
ஆகமங்கள் கேட்பார்.....
கருங்கலி நீங்கக் கனல்வகுப்பார்.

(ஆளுடைபிள்ளையார் உலாவரி, 39—40)

# திருமுறை-பிரபந்தங்களில் வேத வேள்விப் பகுதிகள்

ஸ்ரீநிவாசையர், திருவாவடுதுறை.

வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆதமில்லி அமணொடு தேரரை
வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே
பாதி மாதுடனாய பரமனே.

ஞாலம் நின்புகழே மிகவேண்டுந் தென்
ஆலவாயில் உறையும் எம்ஆதியே.

## வேதத்தை வெளியிட்ட சிவபெருமான்

தூமறை பாடும் வாயார்.
(தடுத்தாட்கொண்ட புராணம் —பாட்டு 70)

மறையளித்த திருவாக்கால்.
(ஷை புராணம் —பாட்டு 199)

வேதங்கள் மொழிந்தபிரான்.
(காரைக்காலம்மையார் புராணம் —பாட்டு 18)

வேதகாரணரை.
(திருநீலநக்கநாயனார் —பாட்டு 6.)

## நால்வேதம் ஆறங்கம்

வருமுறை எரிமூன்றோம்பி மன்னுயிர் அருளால்மல்க
தருமமே பொருளாக்கொண்டு தத்துவ நெறியிற்செல்லும்
அருமறை நான்கினோடு ஆறங்கம் பயின்றுவல்லார்
திருநடம் புரிவார்க் காளாம் திருவினாற் சிறந்தநீரார்.

திருமுறைகளில் வேத வேள்விகளைப்பற்றிப் பல இடங்களில் கூறப்படுகிறது. நால்வேத ஆறங்கங்களில் அவர்கள் வல்லவர்கள் என்றும் முத்தீ வளர்த்து ஐந்து யக்ஞங்களையும் செய்பவர்கள் என்றும் கூறப்பட்டிருக்கிறது. இங்கு சில எடுத்துக் காட்டப்படும்.

## சம்பந்தர்

வேதமும் வேள்வியும் ஓவா வேட்கள நன்னகர்.

திருவேட்களம். அந்தமும் ஆதி 3.

ஓமென்று மறை பயில்வார்.

திருப்பிரமபுரம்.

வேதத் தொலியாற் கிளிசொற் பயிலும் வெண்காடே

திருவெண்காடு, உண்டாய் 2.

சாலநல்லார் பயிலும் மறைகேட்டுப் பதங்களை
சோலைமேவும் கிளிதான் சொற்பயிலும் புகலியே.

சீர்காழி.

நல்லார் தீமேவும் தொழிலார் நால்வேதம் சொல்லார்
கேண்மையார்.

நான்மறையும் அங்கம் ஓராறும் வேள்வியும்வேட்டவர்.

கற்றநால் வேதம் அங்கமோர் ஆறும் கருத்தினார்.

திரு ஓமாம்புலியூர்.

ஆறங்கம் ஐவேள்வி இணைந்த நால்வேதம்
மூன்றெரி இரண்டு பிறப்பென ஒருமையால்
உணரும் குணங்களும் அவற்றின் கொள்பொருள்
குற்றமற்றவை உற்றதும் எல்லாம் உணர்ந்தவர்.

நான்மறை ஆறங்கமொடு ஐவேள்வித் தியடைந்த
செங்கையாளர்.

திருச்சேய்ஞலூர். நூலடைந்த 5.

நாலுமறை அங்கமுதல் ஆறும் எரி மூன்றுதீயும் ஓம்பும் சீலமுடையார்கள்.

திருநல்லூர். வண்டிரிய 9.

பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும் பயின்றோதும் ஓசைகேட்டு

திருவீழிமிழலை. ஏரிசையும் 1.

வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள் பொருட் சொல்லும் மிழலையாமே.

அங்கமும் வேதமும் ஓதுநாவர்.

திருமருகல். அங்கமும் I.

## திருநாவுக்கரசர்

தங்கை நால்வேதம் ஓர்ந்தோதிப் பயில்வார் வாழ்தரு ஓமாம்புலியூர்.

திருஓமாம்புலியூர் ஆராருமூவிலை.

மறையின் ஓசையும் வைகும் அயலெலாம்.

திருவிடைமருதூர். மறையின் ஓசை 1.

## ஸ்ரீ சுந்தரர்

சொற்பால பொருட்பால சுருதியொரு நான்கும்
தோத்திரமும் பல சொல்லித் துதித்து இறைதன் திறந்தே
கற்பாருங் கேட்பாருமாய் எங்கும்
நன்கார் கலைபயில் அந்தணர்.

திருக்கலயநல்லூர். குரும்பைமுலை. பாட்டு 5.

வட்டக் குண்டத்து எரியோம்பி மறை பயில்வார்

மூப்பதுமில்லை பாட்டு 2.

கையினால் எரியோம்பி மறை வளர்க்கும் அந்தணர்.

திருக்கருப்பறியலூர். சிம்மாந்து 6.

அங்கம் நான்மறையால் நிறைகின்ற அந்தணாளர்.

திருநள்ளாறு. செம்பொன்மேனி 5.

அங்கம் ஓர் ஆறவையும் அருமாமறை வேள்விகளும்.
எங்கும் இருந்து அந்தணர் எரிமூன்று அவைஓம்பும்

திருநனிபள்ளி. ஆதியன் 7.

பெருவள முத்தீ நான் மறைத் தொழிலால்
எழில்மிகு பெரும் பற்றப்புலியூர்.

திருமாளிகைத்தேவர். கோயில். உயர்கொடி 2

சாந்தை மெய்ச் சுருதி விதிவழி யோர்தொழும் ஆதி
அமரர் புராணனும்.

சேந்தனார். திருவாவடுதுறை. பொய்யாத 2.

நாத்திரள் மறை யோர்ந்து ஓமகுண்டத்து
நறுநெயால் மறையவர் வளர்த்த
தீத்திரள் அரும்பு பெரும் பற்றப் புலியூர்.

கருவூர்த் தேவர். கோயில் கணம்விரி 7.

ஓவாமுத்தீ அஞ்சுவேள்வி ஆறங்க நான் மறையோர்
ஆவேபடுப்பார் அந்தணாளர் ஆகுதிவேட்டு உயர்வார்.

கண்டராதித்தர். மின்னுருவ. பாட்டு 2.

மறைபயில் வார்மன்னு வியாகரணக்கேள்வித்
துறைபயில்வார் தொன்னூல் பயில்வார்—முறை
[மையால்
ஆகமங்கள் கேட்பார் அருங்கலை நூல் ஆதரித்துப்
போகம் ஒடுங்காப் பொருள்துய்ப் பார்

பதினோராந் திருமுறை. ஆளுடையபிள்ளையார் திருஉலாமாலை
வரி 39.

வருமுறை எரி மூன்றோம்பி மன்னுயிர் அருளால் மல்க
தருமமே பொருளாக்கொண்டு தத்துவ நெறியிற்
[செல்லும்
அருமறை நான்கினோடு ஆறங்கமும் பயின்று வல்லார்
திருநடம் புரிவார்க்காளாம் திருவினாற் சிறந்த சீரார்.

பன்னிரண்டாந் திருமுறை. தில்லைவாழந்தணர் புராணம்.
பாட்டு 5.

# திவ்வியப் பிரபந்தத்தில் வேதவேள்விகளைப் பற்றிக் கூறும் பகுதி,

நா அகாரியம் சொல்லிலாதவர் நாடொறும் விருந் தோம்புவார்.
தேவகாரியஞ்செய்து வேதம் பயின்று வாழ்திருக் கோட்டியூர்.

பெரியாழ்வார். திருக்கோட்டியூர். நா அகாரியம் 1.

மறைப் பெருந்தீ வளர்த்திருப்பார்.

திருவரங்கம். மாதவத்தோன். 2.

வேதவாய்த்தொழிலாளர்கள்.

ஆண்டாள், காமமாயிரம் 10.

வாய் நல்லார் நல்லமறை யோதி

வாரணமாயிரம் 7.

வேதநாவர் நீதியான கேள்வியார்.

திருமழிசை ஆழ்வார். திருச்சந்த விருத்தம். 56.

அருமறையின் திரள்நான்கும் வேள்விஐந்தும்
அங்கங்கள் அவையாறும் தெருவில்......சிறக்கும்.
இதனுல்

திருமங்கை ஆழ்வார். காழிச் சீராம விண்ணகரம். ஒரு குறளாய் 1

முறையால் வளர்க்கின்ற முத்தீயர் நால்வேதர்ஐவேள்வி ஆறங்கர்......
மறையோர் வணங்கப் புகழெய்து நாங்கூர்.

திருநாங்கூர். நந்தா விளக்கே பாட்டு 4.

நால்வேதம் ஐந்து வேள்வியோடு ஆறங்கம் நவின்று கலைபயின்று...மறையவர்கள் பயிலும் மணி நாங்கூர்.

திரு அரிமேய விண்ணகரம். திருமடந்தை மண்மடந்தை. 7.

நல்லவெந்தழல் மூன்று நால்வேதம் ஐவேள்வியோடு
ஆறங்கம் வல்ல அந்தணர்.

திருவண்புருடோத்தமம், கம்பமா கடல் 2.

நால்வகை வேதம் ஐந்து வேள்வி ஆறங்கம் வல்லார்.

திருப்பேர் நகர், கையிலங்காழி பாட்டு 9.

வேதம் நான்கு ஐந்து வேள்வி
அங்கம் ஆறு வல்ல அந்தணர்.

திருநறையூர். அரும்பணியும் பாட்டு 7.

அங்கம் ஆறு ஐந்து வேள்வி நால்வேதம் அருங்கலை
பயின்று எரி மூன்றும்
செங்கையால் வளர்க்கும் துளக்க மில் மனத்தோர்.

திருக்கண்ணங்குடி. வங்கமா முந்நீர். 1.

நால்வேதம் ஐந்துவேள்விகளும் கேள்விகளும்
இயன்ற தன்மை.
அங்கமலத்து அயன் அனையார் பயிலும்.

திருஅழுந்தூர் செங்கமலத் திருமகளும்.

நான்மறை வாணர் ஐவகை வேள்வி
ஆறங்கம் வல்லவர் தொழும்.

திருக்கோட்டியூர். எங்கள் எம்மிறை 9.

பிரபந்தத்தில் நால் வேத ஆறங்கப் பகுதி முற்றும்.

## Extracts from "Messages".

**Sri P. V. Rajamannar.** நீதிபதி, சென்னை. 23—12—50.

I have your kind letter and I very much appreciate the honour you have done me in inviting me to inaugurate the Thiruppavai, etc., conference.

**Sri C. Rajagopalachari.** *New Delhi, 23-12-50.*

Not views and speeches but the combined voices of good men and women singing the old songs glorifying the Lord will help us onward to walk in joy and unconcern towards death.

**SRI R. RAMANATHAN CHETTIAR.** *Madras, 13—12—50.*

I quite agree with such a unification of the various ideals and the necessity of holding conferences of the type you propose to convene.

**SRI M. ANANTHASAYANAM IYENGAR.** *Chittoor, 28—1—51.*

Many more such conferences are needed.

**Sri C. P. Ramaswamy Aiyer.** *Madras, 23—12—50.*

A Conference designed to bring about a synthesis of the several-messages delivered to the world by the great Saints and Seers of South India.

**Sri V. V. Srinivasa Aiyengar**, B.A., B.L., *Madras, 23—12—50.*

Pleased at heart to notice that this celebration appears to be non-sectarian.

**SRI T. M. NARAYANASWAMI PILLAI.** **Madras, 26—12—50.**

I am glad that the holding of the Thiruppavai Thiruvembavai Thirumarai Aranga Conference is going on. It will be a source of fresh inspiration to the faltering humanity and the whole of the Theistic world must be grateful to His Holiness for the lead which His Holiness has been pleased to give in this matter. I have no doubt that the Conference will be a great success and will be found invaluable to the people at this juncture by giving them the much needed light, peace, happiness and unity.

**ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார்.** திருக்குற்றாலம், தென்காசி, 13-12-50.

மகாநாடு சகல விதத்திலும் வெற்றியுடன் நடைபெற்று பக்தர்களுக்கு நம்முடைய பூர்வமான பண்பாட்டை அறிவுறுத்தும் என்று எண்ணுகிறேன்.

எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிப்பாராக.

***Sri D. Ramaswamy Ayyangar,*** **Madras, 5—12—50.**

I am praying to God and Goda that They may be pleased to bless this very notable and lofty-idealled Conference with complete success. May the Conference achieve the great object, for which His Holiness has been working, of bringing together all classes of Asthikas, and in giving a new orientation to the religious life of South India by making people see points of agreement, and ignore points of difference, between the schools of vedic thought.

Sri A. VEDARATNAM M. L. A. **Vedaraniam, 24—12—50**

அன்புடன் அனுப்பிய திருவெம்பாவை-திருப்பாவை திருமறை ஆறங்க மகாநாடு அழைப்பிதழ் கிடைத்தது. நாஸ்திகம் பரவி வரும் இந்நாளில் தாங்கள் மேற்கொண்டு இருக்கும் இப்பெரும் பணி மிகவும் போற்றற்குரியது. மகாநாடு இனிது நடைபெறப் பிரார்த்திக்கிறேன். கலந்து கொள்ள இயலாமைக்கு வருந்துகிறேன்.

**SRI KANDASAMI,** மேட்டுப்பாளையம்,
29—12—50.

தமிழ் நாட்டின் பெருமையையும், பண்டைப் புலவர்கள் இயற்றியிருக்கும் தெய்வீக காவியங்களையும் மறந்துறங்கும் மக்கள் உணர்வதற்கு இதுபோன்ற மகாநாடுகள் அடிக்கடி தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு முக்கிய நகரங்களிலும் உள்ள பெரியார்கள் நடத்த முன் வருவார்களாக. எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் "கந்த மூலமே அருந்திலும் கடமையை மறவான் தமிழன்" என்ற பழமொழிக்கிணங்க இம்மகாநாட்டின் கருத்துக்களை ஒவ்வொரு தமிழனும் இதய பூர்வமாய் ஏற்றுக்கொள்வான் என்ற நன்னம்பிக்கை கொண்டு, மகாநாடு சிறப்புற நடக்க அருள் புரியுமாறு எல்லாம் வல்ல முழுமுதற் பரம்பொருளின் மெய்யடிகளை மனமொழி மெய்களால் எண்ணி வாழ்த்தி இறைஞ்சுகின்றேன்.

**எஸ். ஏ. சுந்தரேசன்,** Anathandavapuram,
23—12—50.

......ப்ரஜைகள் ப்ரவ்ருத்தி மார்க்கத்தில் உழன்று கொண்டும், நம் ப்ராசீன புஸ்தகங்கள் எவைகளைப் புகட்டுகின்றனவென்று அறிந்துகொள்ள ஆசக்தியில்லாமலும் அதனால் அவைகளில் ச்ரத்தையில்லாமலும், காலம் தள்ளும் காலத்தில், இத்தகைய மகாநாடு நடப்பது ரொம்பவும் உசிதமான கார்யத்தோடு, பாரத தேசத்திற்கு இன்னும் நல்ல காலமிருப்பதாகத் தெரிகிறது. இந்த மகாநாட்டின் நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து, இதன் மொழியிலிருக்கும், திருமுறை ப்ரபந்தங்களில், வேதவேதாங்கங்களும் அடங்கியிருக்கிற விவரம் ஸ்பஷ்டமாக எடுத்துக் காட்டப்படப் போகிறது தமிழ் மொழி க்ரந்தங்களுக்கே ஒரு சிறப்பு.

**ஸ்ரீ அழகிரிசாமி அய்யங்கார்,** Salem, 17—12—50,

தற்போது இருக்கும் காலரீதியில் ஹிந்து மதம் சீர்கேடடையாமல் ஒற்றுமையுடன் மக்கள் பண்பட்டு வாழ்க்கை நடத்த ஷை மகாநாடு மிகவும் அவச்யம் என்பதை யாவரும் உணர்கிறோம். ஷை மகாநாட்டில் சிறந்த பண்டிதர்களைக் கொண்டு தக்க முறையில் சைவ

வைஷ்ணவ வேறுபாடுகளை அகற்றி ஹிந்து சநாதன தர்மங்களுக்கு இரண்டு மதங்களும் ஒரே மண்டபத்தில் ஸ்தம்பங்கள் இருபுறம் தாங்குவது போலாகும் என்பதை மக்கள் உணரவும், வேதம், சைவநூல், திவ்ய பிரபந்தம், யாவையும் பகவத் கிருபையால் ரிஷிகள், நாயன்மார்கள், ஆழ்வார்கள் மூலமாக மக்களுக்குக் கிடைத்த பொக்கிஷங்கள் என்று வலியுறுத்தி ஆசார்ய ஸ்வாமியின் கிருபா கடாக்ஷம் பெறவேண்டுமென்பதே அடியேன் ஆசை.

## ஸ்ரீ சக்திவேல் பிள்ளை, 5-12-50

திருமுறைகள் என்பன பசுத்தன்மை வாய்ந்த- அடியார்கள் பதித்தன்மை வாய்ந்த - இறைவனது அருட்டன்மையை வியந்து புகழ்ந்து கூறப்பட்டனவாகும். இவ்வாறு கூறப்பட்ட திருமுறைகள் பன்னிரண்டு உள்ளன. திருக்கழுமலப்பதியில் தோன்றிய திருஞான சம்பந்தரால் அருளிச்செய்யப்பட்ட திருமுறைகள்—3. திருவாமூரில் தோன்றிய திருநாவுக்கரசர் அருளிச் செய்த திருமுறைகள்—3. திருநாவலூரில் தோன்றிய சுந்தரரால் அருளிச்செய்யப்பட்ட திருமுறை—1. ஆகிய இத்திருமுறைகள் ஏழும் தேவாரம் என்னும் அபிதானத்தைப் பெற்றுள்ளன. திருவாதவூரில் தோன்றிய மாணிக்க வாசகர் அருளிச் செய்த திருவாசகம், திருக்கோவையார் 8-வது திருமுறை. திருமாளிகைத்தேவர் முதலிய ஒன்பது தனி அடியார்கள் அருளிச்செய்த திருவிசைப்பா, திருப்பல்லாண்டு 9-வது திருமுறை, அறுபத்துமூன்று நாயன்மாருள் ஒருவரான திருமூலர் அருளிச்செய்த திருமந்திரம் 10-வது திருமுறை. திருவாலவாயுடையார், காரைக்காலம்மையார், ஐயடிகட் காடவர்கோனுயனார், சேரமான் பெருமானுயனார், நக்கீரதேவர், கல்லாடர், கபிலர், பரணர், இளம்பெருமானடிகள், அதிராவடிகள், பட்டினத்துப் பிள்ளையார், நம்பியாண்டார்நம்பி ஆகிய பன்னிருவர்கள் அருளிச்செய்த நாற்பது பிரபந்தங்கள் 11-வது திருமுறை. குன்றத்தூரில் தோன்றிய சேக்கிழார் அருளிச்செய்த திருத்தொண்டர் புராணம் 12-வது திருமுறை.

இப்பன்னிரண்டு திருமுறைகளும், பண்டை நற்றவத்தாற் றோன்றிப் பரமனைப் பத்திபண்ணும் விஞ்ஞானகலர், தேவலாவத்தையில் உழலும் சகலர், பிரளயாகலர்களுக்கு

பதியிலக்கணத்தைப் பாக்க விளக்கிக் காட்டி இதை வழிபட்டு முத்தியின்பத்தை அடைய வேண்டும் என்று அறிவுறுத்திய ஞான நூல்களேயாகும்.

எண்பத்துநான்கு நூறாயிரம் யோனி பேதங்களில் தலையாய மானுடப் பிறப்பை செயற்கைப் புண்ணியத்தால் வேதாதிகலைகள் விளங்கும் பாரதநாட்டிற் பெற்ற மாந்தர்கள் இத்திருமுறையே பயின்று முத்தியின்பத்தை அடையவேண்டியதைப் பெற்ற பிறப்பாலடையலாகும்.

கலிபுருடனின் ஆட்சி மெலிந்த இக்காலத்தில் நமது நாட்டு மாந்தர்கள் உண்மை மார்க்கத்தினின்றும் நழுவி வருகின்றார்கள். மக்கட்டொகுதியினருள் உயர்வையுடைய வித்வான்கள் இதுகாலை பலஇடங்களிலும் சென்று மக்களைத் திரட்டிவைத்துப் பிரசங்கவாயிலாக உண்மையை அவர்கள் உணரச் செய்தல் வேண்டும். புறப்பற்றற்று அகப்பற்றை இறைவனிடத்தே செலுத்தும் மடாதிபதிகள் வித்வான்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து இப்பணியை ஆற்றுவிக்க வேண்டும். இது காலை இப் பெரும்பணியாகிய அறப்பணியை, பல வித்துவான்களைக் கொண்டு செய்து வருபவர் ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு கும்பகோணம் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளாகும். இத்தகைய உத்தம மடாதிபதிகளாகிய ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் ஞானம்படைத்து எழுந்தருளியிருந்து மேலேகுறித்த அறப்பணியை மக்கள் உய்திபெற நீண்டகாலம் ஆற்றவேண்டுமென்று எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளை மனமொழி மெய்கள் ஒழுங்குறச் சிந்தித்து வாழ்த்தி வணங்குகின்றேன்.

<u>தினமணி தலையங்கம்</u>

## நல்ல உதாரணம்

திருவிடைமருதூரில் நடைபெற்ற திருப்பாவை—திருவெம்பாவை மகாநாடு பல வகைகளிலும் குறிப்பிடத் தக்கது. மத வழிபாடுகள் வேறுபட்டிருப்பினும், அவற்றிடையே ஒற்றுமை உணர்ச்சி ஊடுருவிச் செல்கிறது; அதை உணர்ந்து மக்கள் நல்வழிப்பட்டு இணக்கமாக

வாழ வேண்டும் என்ற அடிப்படைத் தத்துவத்தைப் புலப்படுத்துவதுதான் அந்த மகா நாட்டின் நோக்கம். இத்தகைய முயற்சிகள் பரவலாக நடப்பது எவ்வளவு அவசியம் என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஜாதி, மதம் ஆகியவற்றின் பெயராலும், அறியாமையின் காரணமாகவும், சுயநலத்துக்காகவும், வேற்றுமைகளைப் பெருக்கி, துவேஷங்களை வேண்டுமென்றே சிலர் பரப்பி வருவதைக் காண்கிறோம். சிலரின் பேராசையும், பலரின் வறுமைக் கொடுமையுமாகச் சேர்ந்து நியாயம், தர்மம் முதலியவற்றை மங்கவைத்துவிட்டன. பரவலாக தார்மிகச் சிதைவு ஏற்பட்டிருக்கிறது. மனோ நிலை தவறிக் கெட்டிருக்கும் இத் தருணத்தில், அடிப்படையுண்மைகளை எடுத்துரைத்து, தவறிய மக்கள் திருந்துவதற்கு வேண்டிய தார்மிக பலத்தைத் திரட்டுவதற்கு இத்தகைய மகா நாடுகள் பெரிதும் பயன்படும். ஹிந்து மதத்தின் எல்லாப் பிரிவினரும் வைதிகர்களும் லௌகிகர்களும் ஒன்று சேர்ந்து, இம்மகா நாட்டைச் செவ்வனே நடத்தி வைத்தது குறிப்பிடத்தக்கது. ஹிந்து தர்மம் சம்பந்தப்பட்டவரை மதம் என்பது வெறும் சடங்கு அல்ல; மனிதன் தர்ம நியாயத்துக்குக் கட்டுப்பட்டு உண்மையையும், அஹிம்சையையும் கடைப்பிடிப்பவனாக வாழவேண்டும் என்றுதான் எல்லா ஹிந்து மதப் பிரிவுகளும் கூறுகின்றன. வழிபாடுகள் மாறுபட்டிருந்தாலும், அடிப்படை நிலை ஒன்றே என்ற உண்மை நெடு நாட்களாகவே மங்கி மறைந்துவிட்டது. மீண்டும் அதைப் பிரகாசப் படுத்துவது தமது புனிதமான கடமை என்றுணர்ந்து இந்த மகாநாட்டுக்கு ஏற்பாடு செய்த ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளுக்குத் தமிழகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. மற்ற அறநிலையத் தலைவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, அறநெறியை நிலை நிறுத்துவதற்கு அவர் முன்வர வேண்டும். பிறரும் அவருடைய பெரு முயற்சிக்கு ஊக்கமளிக்க வேண்டும். திருவிடைமருதூர் மகாநாட்டில் முடிவுரையாக அவர் கூறிய பொன் மொழிகளை நேற்றைய இதழில் நமது வாசகர்கள் படித்திருப்பார்கள். அவர்கள் சொல்வதிலுள்ள பரந்த நியாயத்தை ஹிந்துக்கள் மட்டுமின்றி பிற மதத்தினரும் தபக்கமின்றி ஏற்றுக்கொள்வர். அவருடைய சீரிய உதாரணத்தைப் பிறமடாதிபதிகளும் மனமுவந்து பின் பற்றுவர் என்று எதிர்பார்க்கிறோம்.

# திருவெம்பாவை திருப்பாவை திருநான்மறை ஆறங்க மகாநாடு—மாயூரம்.

## 13-1-51

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சாரிய ஸ்வாமிகளின் ஆதரவில் மாயூரம் தாலூகா திருவெம்பாவை திருப்பாவை - திருமறை ஆறங்க முதலாவது மகாநாடு மாயூரம் முனிசிபல் ஹைஸ்கூல் மண்டபத்தில் 13ந்தேதியன்று தஞ்சை ஜில்லா போர்டு உபதலைவர் திரு. வி. மருதவாணம் பிள்ளை தலைமையில் கூடியது.

ஹிந்து மதத்தைச்சேர்ந்த சகலவிதமான மத சித்தாந்தங்களின் அடிப்படை ஒற்றுமையை எல்லா ஹிந்துக்களது கவனத்திற்குக் கொண்டு வரவும் ஸ்ரீ ஆண்டாள் ஸ்ரீ மாணிக்கவாசகர் இவர்களது செய்தியைப் பிரசாரப்படுத்துவதற்காகவும் இம்மகாநாடு கூட்டப்பட்டது.

மகாநாடு ஆரம்பமாகு முன்பு தர்மபுர ஆதீனத் திருஏடுகள் யானை மீது வைக்கப்பட்டு ஊர்வலமாக தனுர்மாத பஜனையுடனும் நாதசுர வாத்யத்துடனும் எடுத்துவரப்பட்டன.

மாயவரம் சப்ஜட்ஜ் ஸ்ரீ டி. என். வி. சீனிவாச வரதாச்சாரியார் மகா நாட்டைத் திறந்து வைத்துப் பேசினார்:—

## திரு சீனிவாச வரதாச்சாரியாரின் திறப்புரை

திருப்பாவையும் திருவெம்பாவையும் தூங்கிக் கொண்டிருக்கின்றவர்களை எழுப்பி சுத்தி செய்துகொண்டு எல்லாம் வல்ல இறைவனைப் புகழ்ந்து போற்றும்படி அழைக்கின்றன. அவை இதன் மூலம் இகபரலோக வாழ்க்கைக்கு வேண்டிய சகல பாக்கியங்களையும் பெறுமாறு கூறுகின்றன. பலவித சித்தாந்தங்களைப் பின்பற்றுகிறவர்களும் வேதங்களில் பொதுவாக ஒன்றுபட முடியும். ஆழ்வார்களும் நாயன்மார்களும் உபநிஷத்துகளிலிருந்து உத்வேகம் பெற்று உஜ்ஜீவித்திருக்கிறார்கள். நாம் எல்லோரும் இப்பெரியார்களது செய்திகளைக் கடைப்பிடித்து பிரசாரப்படுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம்.

## திரு மருதவாணம் பிள்ளையின் தலைமையுரை

தலைவர் ஸ்ரீ மருதவாணம் பிள்ளை தமது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:— பல மகான்களும், நாயன்மார்களும், ஆழ்வார்களும், ஆசார்ய புருஷர்களும், மதங்களும் தோன்றிய இந்த நாட்டில நாஸ்திக மனப்பான்மை தோன்ற இடமேற்பட்டிருப்பது வருந்தத் தக்கதாகும். நமது பொருளாதாரக் கேடுகளுக்கும் மனச் சோர்வுக்கும் நமது புராதன வாழ்க்கை முறையில் நமக்கு ஆத்மீகத் துறையில் வழி காட்டின அவர்களது உபதேசங்களில் நாம் நம்பிக்கையற்றவரா யிருப்பதே காரணங்களாகும். நாம் தமிழ் நாட்டில் தோன்றிய மகான்களின் செய்திகளை உணர்ந்து அவர்களைப்போன்ற பெரும் ஆத்மீக அனுபவங்களைப் பெறவேண்டுமானல், அவர்கள் மாதிரி தெய்வீக வாழ்க்கையை நடத்த வேண்டுமானல், நாம் ஒருங்கு சேர்ந்து ஸ்ரீ ஆண்டாள் ஸ்ரீ மாணிக்கவாசகர் இவர்களது தேனினுமினிய அழகு குன்றாத தெய்வீகப் பாடல்களைப் பாடவேண்டும். வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே ஹிந்துமதத்தின் பெருமையாகும். நாம் வேற்றுமைகளையே சதா வற்புறுத்திக் கொண்டிருந்தால் வாழ்க்கை இன்பத்தை இழந்தவர்களாவோம். இது மாதிரியான மகாநாடுகளை அடிக்கடி கூட்டி ஹிந்து மதத்தின் அடிப்படை ஒற்றுமைகளை உணர வேண்டுவது அவசியம். இத்தகைய மகாநாடுகளின் மூலம் ஏற்படும் படிப்பினைகளை நாம் பாதுகாத்து நமது வாழ்க்கையில் அனுஷ்டானத்திற்குக் கொண்டு வரவேண்டும். நமது உலக வாழ்க்கை சம்பந்தமான பிரச்னைகளைத் தீர்க்க மதத்தையும் பலனுற பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதன் பின் மகாநாட்டுக்கு ஸ்ரீ ஜகத்குரு ஆசார்யாள் அனுப்பிய ஆசிச் செய்தி வாசித்தளிக்கப்பட்டது.

# ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்
# ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள்
# ஆசிச் செய்தி

தெய்வத் தமிழைக் குடிசையிலும் மாளிகையிலும், சந்தையிலும் நாற்சந்தியிலும், ஒலிப்போமாக. ஒலிப்பிப்போமாக. "அரன் நாமமே சூழ்க" என்றார் சம்பந்தப் பெருமான். "பஜகோவிந்தம்" என்றார் ஆதி சங்கரப் பெருமான். இன்றும் கூட்டத்தை ஒருமுகப்படுத்த "ஹரஹர மகாதேவ" என்னும் அரன் நாமமும், 'கோவிந்தா கோவிந்தா' என்னும் கோவிந்த நாமமுமே நமக்குப் பற்றுக் கோடாயிருக்கின்றன.

காளத்தையும் யாழையுமே துணைக்கருவிகளாகக் கொண்ட தெய்வ மணம் கமழும் தீந்தமிழ் சாதித்திருப்பது கொஞ்ச நஞ்சமல்ல. "உண்டு, இல்லை; இருந்தாலும் இருக்கும், இல்லாமலும் இருக்கும்" என்று பலவிதமாக உள்ளத்திலெழும் சந்தேக மனப்பான்மையும், ஒன்றுமே இல்லையெனும் சூன்ய மனப்பான்மையும், ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பண்டைக் காலத்தில் மக்களை வாட்டிய பொழுது, அவையெல்லாம் தாமாகவே அடங்க, ஒன்றான பரம்பொருளிடம் எல்லா உயிர்களும் உருகிக் கசிந்து ஒன்று படும் பெருவாழ்வு வாழுமாறு செய்தது, இன்றும் வாழுமாறு செய்யவல்லது, நம் தெய்வ மணம் கமழும் தீந்தமிழே.

ஹிந்துமதமென இக்காலம் வழங்கும் வேத நெறியின் பல துறைகளே சைவ நெறி, வைணவ நெறி, தேவி நெறி முதலியன. "வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்க" என்கிறார் சேக்கிழார். பல துறைகளிலும் மக்கள் பருகும் காவிரி அமுதநீர் ஒன்றே. கிரேக்கம் அசிரியம், ரோமகம்-முதலிய மேல் நாட்டுப் பண்டைக்கால நாகரிகங்கள் எனப்படும் நயமான வாழ்க்கை முறைகளும் சமய முறைகளும் வெகு காலத்திற்கு முந்தியே மறைந்து போய்விட, வேதநெறியாம் ஹிந்து நாகரிகம் மாத்திரம்

எல்லை கடந்த நாட்களாய் இன்றும் விளங்கி வருவதன் உண்மை யாது? என்றும் தளராத உறுதிபெற்ற உயர்ந்த தத்துவங்களைக் கொண்ட சிறப்பான பெருநூல்களும், எம் மக்களிடமும் எச்சமயத்திலும் பொறுமை, வெகுளி இவைகளின்றி "எம்மதமும் சம்மதமாய்" "வையகம் துயர் தீர்கவே" என்று பொதுவாக வாழ்த்தி இறைவனை இறைஞ்சி எல்லா மக்களையும் எல்லாச் சமயத்துறைகளையும் ஆதரிக்கும் நம் பெரியோர்களின் அரவணைப்பு மனப்பான்மையுமே ஹிந்து நாகரிகம் மாத்திரம் இன்றும் விளங்குவதற்குக் காரணம்.

நம் தீந்தமிழும் பண்டைய காலந்தொட்டு இன்று வரை விளங்கிவருவதன் உண்மை என்ன? நம்நாட்டில் இன்று மக்கள் வழங்கிவரும் மொழிகளில் தமிழைத் தவிர ஏனையமொழிகள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நல்லிலக்கியங்கள் உடையனவாக இருந்தனவாகவோ, வழங்கி வந்தனவாகவோ, அறிகிலோம்.

அக்காலத்தில் வழங்கிய ப்ராக்ருதமாம் பாகதம், பாலி முதலிய நம் நாட்டு மொழிகளும் லத்தீன், கிரேக்கம் முதலிய பிறநாட்டு மொழிகளும் இன்று வழக்கத்தில் இல்லாமல் போக, அவைகளிலும் பழமையான நம் தமிழ் இன்றும் தெய்வமணம் கமழ மக்களிடம் வழங்கி வருவதன் காரணம் யாது? அதன் தெய்வத் தன்மையும் தாய்த் தன்மையுமே அதற்குக் காரணமாம்.

நம் தமிழைத் தெய்வத் தமிழ் என்கின்றோம். தமிழ்த் தாய் என்றும் சொல்லுகின்றோம். ஈன்றெடுப்பதைவிட அரவணைத்தலே தாயின் உயரிய அருள் தன்மையாகும். தெய்வத்தினிடத்தில் அர்ப்பணம் செய்யப்பட்ட நூல்கள் ஏனைய மொழிகளைக் காட்டிலும் தமிழ்மொழியிலேயே ஏராளமாக நிறைந்திருக்கின்றன என்பது நம் எல்லோருடைய அநுபவம். இன்றும் தமிழ் நாட்டிலேயே அண்டை நாட்டு மொழிகளாகிய ஆந்திரம், கன்னடம், ராஜபுத்திரர்கள் பேசும் ஹிந்தி, மராட்டி முதலிய பாஷைகள் பல நூற்றாண்டுகளாகவே அவ்வச்சாராரால் வழங்கப்பட்டு வருகின்றன. சில தம் நாட்டைவிட இங்கு அதிகமான இலக்கிய வளர்ச்சி பெற்றிருக்கின்றன. புதிதாக வந்த ஆங்கிலமும் பாத கண்டத்துள்ள பல நாடுகளுக்குள்

நம் தமிழ் நாட்டிலேயே உயரிய முறையில் வளர்க்கப்பட்டு வந்திருக்கிறது. ஆந்திர நாட்டில் கோதாவரிக் கரையிலும் அதற்கு வடக்கிலும் பல்லாயிரக் கணக்கான தமிழந் தணர்கள், 'திராவிடர்கள்' என்ற பெயருடன் பல நூற்றாண்டுகளாக வசித்து வருகிறார்கள். ஆனால் தமிழ்ப் பதம் ஒன்றைக்கூட அவர் அறியார். அவர் வழக்கெல்லாம் தெலுங்கே. மகாராஷ்டிர நாட்டிலும் "த்ரவிட்" என்னும் பட்டம் புனைந்த தமிழந்தணரும் "தெலங்க" என்று பட்டம் புனைந்த தெலுங்க அந்தணர்களும் பலர் பன்னூற்றாண்டு களாக வசிக்கிறார்கள். ஆனால் அவர்களில் எவரும் தத்தம் தாய் மொழியை அறியவே அறியார். தமிழ் நாடோ தன்னை அண்டிய எந்த நாட்டினருடைய மொழியையும் அழிக் காது அன்புடன் அரவணைத்து வருகிறது. அவ்வரவணைப் பின் பயன் வீண்போகவில்லை. தமிழர் எந்த நாடு சென்றா லும் அந்த நாட்டு மொழியை மிகவிரைவில் கற்றுக்கொள்ள முடிகிறது. வெளி நாட்டவர்கள் மொழியைக் கற்க முடிவதை விட நம் நாட்டவர்கள் அம்மொழிகளை எளிதில் கற்றுக் கொள்ள முடிகிறது. இத்தகைய ஆதரவுத் தன்மையும் ஆற்றலும் இருந்தும்கூட நம் மூதாதையர் அகம்பாவ மடையவில்லை. ஈசனைச் சேர்ந்த நம் தமிழ் நாட்டு அறுபத்து மூன்று நாயன்மார்களையும் நம் முன்னோர் கணக்கிடும் போது மற்ற மொழிகள் வழங்கும் நாடுகளிலும் பரம னுடைய அடியைச் சார்ந்தார் எல்லோரையும் எண்ணி "அப்பாலும் அடி சார்ந்தார்" என்ற பெயரால் தொகை யடியார்களாகச் சேர்த்து அவர்களின் "அடியார்க்கும் அடியேன்" என்று வழிபட்டிருக்கிறார்கள். தமிழ்த் தாயின் அவ்வரவணைப்புத் தன்மை இன்றையதல்ல, நேற்றைய தல்ல. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே 18 பாஷைகளையும் சிவசம்பந்தம் உள்ளவைகளாகப் போற்றியிருக்கிறார் நம் தமிழ்நாட்டில் பண்டையரிலும் பண்டையரும் சித்தபுருஷரும் நாயனாரும் தத்துவஞானியு மான திருமூலர். அவர் தம் திருமந்திரத்தில்,

"பண்டித ராவர் பதினெட்டுப் பாடையும்
கண்டவர் கூறும் கருத்தறி வார் என்க
பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையும்
அண்ட முதலா அரன் சொன்ன வாறே"

என்று பாடியுள்ளார். அக்காலத்தே நம் தமிழ் நாட்டில் அப்பதினெட்டுப் பாஷைகளும் வந்து தங்கியிருந்தது

மாத்திரமல்லாமல் வளர்க்கப்பட்டும் வந்தன. தமிழ்த் தாயின் உண்மையையும் பெருந்தகைமையையும் கீழ் வரும் பண்டைத் தமிழ்ப் பாடலில் காணலாம்.

"சிங்களம், சோனகம், சீனம், சாவகம்,
கொங்கணம், குடகம், கொல்லம், துளுவம்,
வங்கம், கடாரம், மகதம், கோசலம்,
கங்கம், காச்மீரம், கலிங்கம், நேபாளம்,
அங்கம், காந்தாரம், ஆகிய மொழிகள்
தங்கி வளரும் தமிழ்நாடென்ப"

இத்தகைமையினாலேயே தமிழ்த்தாய் தமிழ்த் தாயானாள். பரமனைப் பாடும் பெருமையும் நம் தமிழ்த் தாய்க்கே மிகுதியாக உரியது.

இப்பெருமையை மட்டும் சொல்லிக்கொண்டு நாம் வாளாவிருப்பது வீண்காலம் கழிப்பதேயாம். தாய் ஆரோக்யமும் புஷ்டியும் நிறைந்திருந்தால்தான் சிறு குழந்தைகளை அரவணைக்க முடியும். தெய்விகத் தன்மையில் நம் தமிழ் முன்னணியில் நின்றால்தான் என்றும் அதற்கு அழிவிராது. தெய்விகத் தமிழை வளர்ப்பதே தமிழின் தெய்விகத் தன்மையை வளர்ப்பதாகும். தெய்விகத் தமிழ்த் தாயின் இருகண்களே சைவத் திருமுறைகளும் திவ்யப்ரபந்தங்களுமாம். அக்கண்மணியின் இரு பாவைகளே இன்று கூடியிருக்கும் நம் மகா நாட்டில் முன்னணியில் இடம் பெறும் இருபாவைகளாம். இவ்விரு பாவைகளும் மங்காது, ஒவ்வொரு குடிசையிலிருக்கும் தமிழன் குரலிலும், உள்ளத்திலும் நிலைபெறப் பணியாற்றுவோம். பழ முறைகளையும் புது முறைகளையும், பழங்கருவிகளையும் புதுக் கருவிகளையும் இப்பணியில் உடன்படுத்திக் கொண்டு எங்கும் தெய்வத் தமிழ் மணம் வீசப் பாடுபடுவோம். தெய்வத் தமிழ் ஒலி ஒலிக்கப் பாடுபடுவோம். பாவை மங்காமலிருப்பதே கண்ணின் நல்லொளிக்கு அடையாளம். அருட் கண்ணோக்கத்தையுடைய தாயே நமது அருள்தாய்.

நான்மறை ஆறங்கங்கள் முதலியவைகளில் தேர்ந்தவர்கள் சம்பந்தப் பெருமான் மணிவாசகப் பெருமான் முதலிய பெருந்தகையாரைப் போல் நற்றமிழைக்

கற்றலல்லது தெய்வத்தமிழ்ப் பிரபந்தங்களில் போற்றப் படும் நான்மறையின் அங்கோபாங்கங்களில் அவர்களுக் குள்ள அறிவு மக்களுக்குப் பயன் படாமல் போகும். வேதவேதியர் முதல் பாணர் அடியர் வரை அன்பும் அருளும் கசிந்த இறைவனது ஆடல் பாடல்களின் சுவையில் ஈடுபட்டிருந்த அந்நாயன்மார்களின் நற்காலம் மீளுமாறு செய்வது நம் தமிழுக்கு அழியா நிலையைத் தருவது. நம் மக்களுக்குக் குன்றா மேன்மையையும் தருவது.

ஸ்ரீ த்ரிபுரசுந்தரீ சமேத ஸ்ரீ சந்த்ரமௌளீசுவரருடைய அருளை மூலதனமாகக் கொண்டு தொண்டாற்றி இந்நோக்கத்தைச் சபலமாக்குவோமாக.

## தருமபுரம் மகா சன்னிதானத்தின் செய்தி.

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரம் ஆதீனம் இருபத்தைந்தாவது மஹா சந்நிதானம் ஸ்ரீ ல ஸ்ரீ, சுப்ரமணிய தேசிகஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அனுப்பியிருந்த செய்தியில், நாட்டில் ஆஸ்திகத் தன்மையும், ஒற்றுமையும் வளர இத்தகைய மகாநாடுகள் ஆங்காங்கு நடைபெற வேண்டுமென்று தாம் பிரார்த்திப்பதாகக் குறிப்பிட்டிருந்தார்.

திருவையாறு அரசர் கல்லூரி உபதலைவர் ஸ்ரீ எஸ். டி. ஸ்ரீனிவாஸாசாரியார் ஆண்டாளின் சரித்திரத்தைப் பற்றிப் பிரசங்கித்தார். ஸ்ரீ ஆண்டாள் கடவுளுடன் ஐக்கியமாக ஆர்வங் கொண்டாளென்றும், ஆறுதலும் ஆதரவும் அளிக்க வல்ல கடவுளையே எல்லா ஜீவர்களும் நாயகனாகக் கொள்ள வேண்டுமென்றும், இதனால் கடவுள் ஒருவரையே புருஷராகக் கருதுவது மிக்க பொருத்தமுடையது என்றும் சொல்லி, திருப்பாவை பாடல்களில் சிலவற்றைப் பாடிக் காட்டினார். தர்மபுரம் வேலாயுத ஓதுவாரும் அவாது கோஷ்டியாரும் இன்னிசைக் கருவிகளுடன் திருவெம்பாவை பாராயணம் நடத்தினர்.

மாயவரம் ஸ்ரீ ராமலிங்கம் பிள்ளை திருவெம்பாவையின் கருத்துக்களை விளக்கிப் பேசினார். நாரணமங்கலம் ஸ்ரீ கோவிந்தசாமி பிள்ளை (மாயவரம் தாலூகா காங்கிரஸ் கமிட்டி உபதலைவர்) திருப்பாவையின் கருத்தை விளக்கிப்

பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:—1200 ஆண்டுகளுக்கு முன்பு ஸ்ரீ ராமானுஜர் கடவுளின் அருள்மொழிகளாக விளங்கும் ஆழ்வார்களது பாடல்களுக்கு முதன்மை ஸ்தானமளித்தார். அவர் இந்தத் தெய்வீகப் பாடல்களுக்கு தமது சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டார். இந்தத் தெய்வீகப் பாடல்கள் உபநிஷத்துகளுக்குச் சற்றும் குறைந்தவையல்ல. அவர் தமிழ் மகான்களையும் தத்வோபதேசிகளையும் தீர்க்க திருஷ்டியுடன் உணர்ந்து அவர்களைப் போற்றும் திறமும் அறிவாற்றலும் பெற்றிருந்தார். ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் இந்த இயக்கத்தை ஆரம்பித்து இதற்கு ஊக்கமளித்திருக்கிறார். இது ஸ்ரீ ராமானுஜர் செய்து வந்த மத ஒற்றுமை வேலையை ஞாபகமூட்டக் கூடியதாக இருக்கிறது.

பிற்பகல் 3 மணிக்கு மாயவரம் சங்கீத வித்வான் ராஜம் ஐயர் திருப்பாவை, திருவெம்பாவை பாடல்களை இனிமையாகப் பாடிக்காட்டினார். தருமபுரம் ஆதீன கீழ்த்திசைக் கல்லூரி உபதலைவர் ஸ்ரீ தண்டபாணி தேசிகர் திவ்யப்பிரபந்தம் திருமுறை இவற்றில் நால்வேத ஆறங்கங்களைப் பற்றிக் காணப்படும் குறிப்புகளை எடுத்து விளக்கிப் பேசினார்.

அண்ணாமலை சர்வகலாசாலை ரெஜிஸ்திரார் ஸ்ரீ சச்சிதானந்தம் பிள்ளை அடுத்தபடியாகப் பேசினார். அவர், "நாம் நமது குழந்தைகளுக்கு நமது மதக் கோட்பாடுகளைப் போதிக்க வேண்டுவதன் அவசியத்தையும் வாழ்க்கைக்கும் மதத்திற்கும் நெருங்கிய தொடர்பிருக்குமாறு செய்ய வேண்டிய அவசியத்தையும்" வற்புறுத்திப் பேசினார்.

'கலைமகள்' ஆசிரியர் ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் சைவத் திருமுறைகளுக்கும் திவ்யப்ரபந்தத்திற்குமுள்ள சமரஸத்தன்மைகளையும் அவற்றின் அடிப்படை ஒற்றுமைகளையும் பற்றிப் பேசினார்.

ஸ்ரீ ஆண்டாள் பற்றி திருவையாறு ஸ்ரீ எஸ். டி. ஸ்ரீனிவாஸாசாரியார் கதா காலக்ஷேபம் நடத்தினார். ஸ்ரீ எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி ஐயர் வந்தனோபசாரம் கூறினார்.

# திருவெம்பாவை, திருப்பாவை திருநான்மறை ஆறங்க மகாநாடு—குளித்தலை நிகழ்ச்சிகள்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளது உத்தரவு பிரகாரம், நேற்று குளித்தலையில் திருப்பாவை திருவெம்பாவை திருமறை ஆறங்க மகாநாடு ஸ்ரீ நீலமேகப் பெருமாள் சந்நிதியில் நடைபெற்றது. ஸ்ரீ ஏ. வி. கோபாலாசாரியார் தலைமை வகித்தார்.

காலையில் யானைமீது ஏட்டுச்சுவடிகளும் புஸ்தகங்களும் வைத்து ஊர்வலம் நடைபெற்றது. பிறகு குண்டலம் ஸ்ரீ ரங்காசாரியாரால் திருப்பாவை பாராயணமும் பாசுரங்களுக்கு விரிவுரையும் நடத்தப்பட்டன.

பிற்பகல் ஸ்ரீ ஏ. வி. கோபாலாசாரியார் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

மதுரை திருஞான சம்பந்த ஸ்வாமிகள் மடம் ஆதீன வித்வான் ஸ்ரீ எஸ். ஏ. ரத்னவேல் புலவர் திருமறை திவ்ய பிரபந்தங்களில் நான்குவேத ஆறங்கங்களுக்குக் குறிப்புகள் உள்ளவற்றைப் பாசுரங்களைக் கொண்டு எடுத்துரைத்துப் பிரசங்கம் செய்தார்.

இரண்டாவதாக கன்னியாகுடி வித்வான் ஸ்ரீ ராமசாமி பிள்ளை சைவத் திருமறைக்கும் வைஷ்ணவ திவ்ய பிரபந்தங்களுக்குமுள்ள சமரசத் தன்மையை எடுத்துக் கூறினார். திருவாய்மொழியிலிருந்தும் சைவத் திருமுறையிலிருந்தும் சில பாட்டுக்களைப்பாடி அவை ஒரே கருத்துள்ளவை என்பதை விளக்கினார். நம்மாழ்வாரது பாசுரங்கள் சிலவற்றையும் திருஞான சம்பந்தரது, பாட்டுக்களையும் எடுத்துப் பாடி ஒன்றுக்கொன்றுள்ள ஒற்றுமையை விளக்கி சைவரும் வைஷ்ணவரும் ஒன்றாக ஒற்றுமையாக வாழ வேண்டுவதன் அவசியத்தை வற்புறுத்தினார்.

ஸ்ரீரங்கம் குண்டலம் ரங்காச்சாரியார் திருப்பாவை திருவெம்பாவை இவைகளின் ஒற்றுமை என்பது பற்றிப் பேசினார். ஆழ்வார்களுடையவும் குறிப்பாக

பெரியாழ்வாருடையவும் பிரபாவங்களை அவர் எடுத்துரைத்து ஆண்டாளது பக்திப் பரவசத்தைத் திருப்பாவை வெகு அழகாக வெளிப்படுத்துகிறதென்றும் திருப்பாவை திருவெம்பாவை இரண்டும் கருத்தில் வேறுபாடில்லாத நூல்கள் என்றும் இவற்றை உஷக் காலத்தில் சேவித்தால் எங்கும் திருவருள் பெருகுமென்றும் கூறினார்.

ஸ்ரீ ஏ. வி. கோபாலாசாரியார் தமது முடிவுரையில் பகவான் என்ற சப்தமே ஓர் அழகு என்றும், அவரை எந்தத் திரு நாமத்துடன் அழைத்தாலும் அழகுதான் என்றும் ராக்ஷச குலத்தவர் பகவானுக்கு எதிரிகளாக நடந்து வந்தனரென்றும் நாஸ்திக பிரசாரம் செய்வது ராக்ஷஸ இயல்பையே காட்டுமென்றும் கூறினார்.

பகவந்நாமத்தைப் பலர் பலவிதமாக பல சொற்களில் வழங்கி இருக்கும் மேன்மையைப் பல மேற்கோள்களுடன் அவர் விஸ்தரித்தார். முடிவாக சைவர் வைஷ்ணவரென்ற இரு சாராரும் ஒற்றுமையுடன் பகவத் பக்தியுள்ளவர்களாக வாழ வேண்டியதவசியமென்றார்.

பிறகு திருப்பாவை திருவெம்பாவை முதலிய பிரபந்தங்களிலிருந்து பாசுரங்களை வித்வான் சாத்தூர் ஸ்ரீ சுப்ரமணிய அய்யர் பாடினார். மைசூர் டி. குருராஜப்பா பிடில், தின்னியம் கிருஷ்ணன் மிருதங்கம், ஆலங்குடி ராமசந்திரன் கடம். இவர்கள் பக்க வாத்தியங்களுடன் இன்னிசைக் கச்சேரி நடத்தப்பட்டது.

உளுந்தூர்ப்பேட்டை, திருப்புகலூர், நாகபட்டிணம், சீர்காழி முதலிய இடங்களிலும் முதன் முறையாக 1950-1951ல் திருப்பாவை திருவெம்பாவை திருமறை ஆறங்க மகாநாடுகள் சிறப்பாக நடைபெற்றன.

உ

# இந்தோசைனு பிராந்தியத்தில் தொன்றுதொட்டு நடக்கும், திருப்பாவை - திருவெம்பாவை அரசாங்க விழா.

திங்கட்கிழமை 8—12—52

## மாயூரத்தில் ஸ்ரீ வள்ளலார் கோயில் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சன்னதியில் ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் பிரசங்கம்

நாம் இதுகாறும் திருவெம்பாவை திருப்பாவை நம் தமிழ் நாட்டிலேயே ப்ரசாரம் அடைந்து வந்ததாக நினைத்திருந்தோம். சயாம் தேசத்துச் சரித்திர ஆராய்ச்சி நூல்களை நம் நாட்டுப் புலவர்கள் ஆராய்ந்து நம் தமிழ் நாட்டிற்கு அழியாப் புகழ்தரக் கூடிய சில அதிசயமான தகவல்களை தெரிவித்தார்கள். ஸயாம் தேசத்து உத்ஸவ விரதங்களைப் பற்றி விவரிக்கும் நூல்களில் வெகுகாலம்தொட்டு கவர்ன்மெண்டாரால் நடத்தப்பட்டு வருவதான ஓர் உத்ஸவத்திற்கு "த்ரியம்பாவை த்ரிபாவை" என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

நம் தமிழ் நாட்டிலிருந்து 2000 மைல்களுக்கு அப்பால் உள்ள ஓர் தேசத்தில் திருவெம்பாவை திருப்பாவை எனும் பெயர் ஓர் உத்ஸவத்திற்குக் கொடுக்கப் பட்டிருப்பது ஆச்சரியமானது. அந்நாட்டு மக்களுக்கு தற்சமயம் இப் பெயருக்கு அர்த்தமும் தெரியாது; அது தமிழ்மொழி என்பது கூட தெரியாமலிருக்கலாம். அத்தகைய தேசத்தில் இப்பெயர் வழங்கி வருவதில் மூன்று முக்கிய விஷயங்கள் வெளியாகின்றன. திருவெம்பாவை திருப்பாவை எனும் பெயரால் ஓர் உத்ஸவம் சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் ஒரே உத்ஸவமாக நடத்தப்படுகிறது. இது நமது நாட்டின் ஆருத்ரா தரிசனம் உத்ஸவ சமயத்திலேயே அங்கு நடக்கிறது. அவ்வுத்ஸவத்தில் இங்கு நடக்கும் ஊஞ்சல் உத்ஸவம் அங்கேயும் நடக்கிறது.

திருவெம்பாவை பாராயணமாக நடக்கும் நம் நாட்டில் இவ்வாருத்ரா தரிசன உத்ஸவத்திற்குத் திருவெம்பாவை திருப்பாவை என்ற பெயர் இல்லை. தமிழின் பெயரே தெரியாத நாட்டில் தொன்று தொட்டு நடந்து வரும் உத்ஸவத் திற்கு இப்பெயர் இருக்கிறது. இதுவும் கவனிக்கத் தக்கது. இந்துமத தெய்வ நூல்கள் இந்தோசைனு நாடு முழுவதும் பரவியிருந்தன என்பதற்கு அத்தாட்சியாக அங்கு நம் தேசத்தில் காணப்படுவதைவிட தூயதான ஸம்ஸ்க்ருத பாஷையிலுள்ள ஏராளமான கல்வெட்டுக்கள் அத்தாட்சி யாக இருக்கின்றன. இந்தோ சைனு நாட்டில் தைவிகத் தமிழ் நூல்களும் பழக்கத்தில் இருந்தன என்பதற்கு ஓர் உத்ஸவத் திற்கு இட்டிருக்கும் த்ரியம்பாவை த்ரிபாவை எனும் பெயரே அத்தாட்சியாக இருக்கிறது.

இவ்வுத்ஸவத்தில் சிவன் உருவத்தை நியமங்களோடு தாங்குபவர் ஈசான்ய திக்கிலிருந்து வரவேற்கப்படுகிறார். பிறகு ஊஞ்சலுக்கு வடபாகத்திலும் அழைத்துச் செல்லப்படுகிறார். சிவன் ஆனந்த மூர்த்தி என்பது அவர்கள் கொள்கை. நமது கோயில்களில் ஈசான்ய திக்கில் விளங்கும் ஆனந்தத் தாண்டவ நடராஜ மூர்த்தியை இவ்வழக்கம் குறிக்கிறது போலும். சிவன் வடிவம் தாங்குபவர் தமக்காகப் போடப்பட்டிருக்கும் ஆசனத் தில் உட்காரும்போது தமது வலது காலை நிலத்தில் ஊன்றியும் இடதுகாலை வலது துடைமேல் போட்டுக் கொண்டும் உட்காருகிறார் என்று அவ்வாராய்ச்சி நூல்கள் கூறுகின்றன. இது நம் நாட்டில் தக்ஷிணாமூர்த்தியின் உருவத்தை ஞாபகப் படுத்துகிறது. சிவபெருமானின் இவ்விரண்டு உருவங்களில் தக்ஷிணாமூர்த்தி ஞானத்தைக் கொடுக்கிறார், நடராஜர் ஆனந் தத்தைக் கொடுக்கிறார். இவ்விருவரும் யம பாதையைக் கண்டிக்கும் முறையில் நோக்கியிருப்பது தெற்கு முகமே. அக்ஞானம், சோகம் இவைகளுக்குக் காரணமான அபஸ்மா ரத்தை ஸ்ரீ நடராஜமூர்த்தியும், தக்ஷிணாமூர்த்தியும் காலால் மிதித்து இருத்தி நிற்பதை ஆலயங்களில் காணலாம்.

மாயூரத்தில் திருவெம்பாவை திருப்பாவை வளர்ச்சிக்கு தமது சான்னித்யத்தால் அருள் புரிவது ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி

ஸ்வரூபம். ஸயாம் நாட்டிலும் திருவெம்பாவை திருப்பாவை உத்ஸவத்திற்கு தொன்றுதொட்டு நடு நாயகமாக விளங்கு வதும் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியின் வடிவம். ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியின் வடிவத்தைப் பொய்கை ஆழ்வார், "அரன் நாரணன் நாமம் மேனி * * * *
பொன்று" எனும் பிரசித்தமான ஒற்றுமைப் பாசுரத்திற்கு முன் பாசுரமாயிருக்கும்,

> நெறிவாசல் தானேயாய் நின்றானை, ஐந்து
> பொறிவாசல் போர்க்கதவம் சாத்தி—அறிவானும்
> ஆலமர நீழலறம் நால்வர்க் கன்றுரைத்த
> ஆலமர் கண்டத்தான்

எனும் பாசுரத்தில் அழகாக நிரூபித்திருக்கிறார். ஸ்ரீ வேதாந்த தேசிகரும், தமது சங்கல்ப சூரியோதயம் எனும் நாடகத்தில் தாண்டவம் புரியும் நடராஜ மூர்த்தியே ஆலமரத்தடியில் தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபமாக உள்ளார் என்பதாக தக்ஷிணா மூர்த்தியும் நடராஜ மூர்த்தியும் ஒரே ஸ்வரூபமென்பதை நிரூபிக்கிறார்.

ஆனந்தத் தாண்டவ நடராஜ மூர்த்தியின் உத்ஸவ கால மான ஆருத்ரா தரிசன காலத்தில் ஸயாம் நாட்டில் நடக்கும், 'த்ரியம்பாவை த்ரிபாவை' உத்ஸவத்திற்கு ப்ரதானமாக விளங்குபவர் தக்ஷிணாமூர்த்தி யென்பதும், நம் நாட்டில் திருவெம்பாவை திருப்பாவை மகாநாடுகளுக்குப் பூர்வாங்கமாய் நாம் இன்று கூடியிருக்கும் ஸன்னிதியும் தக்ஷிணாமூர்த்தியின் ஸன்னிதியே என்ற விஷயமும் ஓர் ஒற்றுமையைத் தாங்கி யிருப்பதே, நம் திருவெம்பாவை திருப்பாவை இயக்கம் எங் நாட்களிலும் நம் நாட்டின் எல்லையைக் கடந்தும் எங்கும் மீண்டும் பரவ, திருவருளை ஈசன் பாலிக்கிறார் என்பதற்கு ஒரு தெய்வீக அத்தாட்சியாய் நிற்கின்றது என்று சொல்லி ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் உபன்யாஸத்தைப் பூர்த்தி செய் தார்கள்.

*

# TIRUVEMBAVAI TIRUPPAVAI INSTITUTION DISCOVERED IN SIAM.

## A DISCOURSE BY SRI SANKARACHARYA.

His Holiness Sri Sankaracharya of Kanchi Kamakotipeetam gave a discourse on the importance of Tiruvembavai and Tiruppavai on Monday 8—12—52 at the Dakshinamurthi Sannathi, Vallalarkoil, Mayavaram. In the course of the discourse His Holiness observed as follows:—

Books on the history of Siamese ceremonies reveal a startling fact that a national festival conducted by the state in its capital from ancient times till the present day has been designated "TRIYEMBAVAI TRIPAVAI". In a land which is more than 2000 miles away from our Tamil speaking country, our Tiruvembavai Tiruppavai has given its name to an institution which has survived through the ages to the present times. The festival commences on the 7th day of Suklapaksha (bright Half) in the commencing month of winter solstice. This month corresponds to our Margazhi. Sri T. P. Meenakshi Sundaram Pillai, a renowned Tamil Scholar of Madras has been doing research in this direction and is publishing a book on this subject.

The people of Siam to-day do not know what the meaning of the word "Triyembavai Tripavai" is, nor even that it is a Tamil name but from the evidence of orientalists it is gathered that they recite on this occasion the words "Loripavoy". The prevelence of this festival in that far off land with such a combined name and in the first month of winter solstice (Margazhi) for 10 days ending with the day after the full moon and 5 days afterwards suggests three important and useful points.

(1) Both the words Triyembavai and Tripavai unitedly connote one single festival observed by the same agency; the festival coinciding with the Ardra Darsana festival in which unjal tirunal or swinging festival is a part. While in India the Ardra Dharsanam festival where Tiruvembavai is actually recited, the festival is not called Tiruvembavai festival, a country which had not heard even the name of Tamil for centuries calls the festival "Triyembavai Triupavai". This is a proof that in ancient times devotional Tamil had a strong hold on the minds of the people far removed from its home. Moreover, that Hindu devotional culture flourished in the countries of Indo-China is attested by the extant chaste Sanskrit epigraphical records which surpass in extent and elegance the contemporary

ones all over the world, not excepting India. (2) The discovery of the name "Triyembavai Tripavai" brings to light the further fact that not only devotional Sanskrit literature but also kindred Tamil literature had an important place in those lands unifying Siva and Vishnu in one function. (3) In "Triyembavai Tripavai" festival in Siam, the swinging part of which is conducted as a national state festival, the powers of the person who plays the divine role on the festival occasion is for the time being unlimited even surpassing the powers of the monarch. That the festival is not only conducive to a spiritual surge in the land but also an occasion to further social, economical military and cultural development is revealed from the fact furnished by the western chroniclars of Siamese ceremonies.

The "Triyembavai Tripavai" festival is dedicated to Siva during the first 10 days and Vishnu during the next five. The festival closely follows our Arudhra Darsanam festival. Siva is described as a Jovial God, a description which fits his Ananda Nataraja aspect. The main features of the ceremony are as follows. A high state officer is made to impersonate Siva. He is carried in a palanquin to the arena where the swinging takes place. He is received with all honours in the North East Corner of the arena (Easanyadik) and conducted to the northern side. There he takes his seat sitting with his right leg touching the ground and the left crossed over the right knees. If both the feet touch the ground his property is confiscated. This represents the Dakshinamoorthy aspect of Siva. Both Nataraja and Dakshinamoorthy face south saving devotees from Yama and both trample under their foot Apasmara, the cause of the lapse of enlightenment. Dakshinamoorthy is Gnanamoorthy and Nataraja Anandamoorthy. Both symbolise our emancipation from ignorance and delusion and consequent perpetual suffering, through Gnana and Ananda. A coincidence is, His Holiness observed, that the august pose of Siva as Dakshinamoorthy which is the centre of attraction in the Siamese Triyembavai Tripavai is also the source of inspiration of the Tiruvembavai Tiruppavai movement here at Mayavaram. The Dakshinamoorthy pose which is beautifully described by Poygai Alwar in his Anthathi in the verse preceding the famous verse, in which he asserts the oneness of Hara and Narayana, is explained in the Sankalpa Suryodaya of Vedanta Desika as the calm pose in the spell of rest of Nataraja after his divine dance.

# Our Tiruvembavai Tiruppavai seen through Christian Lens.

## The Union Movement In Hinduism and Christianity.

Of the developments in Hinduism in South India, the starting of a Union movementaiming at bringing together Saivites and Vaishnavities by Sri Sankaracharya of Kamakotipeetam stands out prominently. The Saivites and Vaishnavites are like the Catholics and Protestants. Where they do not fight each other, they live apart, highly immune to each other's influence. The antagonism was the result of Veeravaishnava and Veera Saiva movements of the latter day. In Mahabharata, Siva and Vishnu are co-equal Gods, worshipped by all. From time to time, movements to unite them both were started but all of them seemingly petered out. Here and there, we have Hari-Hara temples, where the idol is half Siva and half Vishnu. ...................... The Telugu Bharata was dedicated to Hariharanatha. The Sectarian millieu differs in Christianity and Hinduism. All Christians have the same scriptures-the Bible and all of them worship the same Lord Jesus and one should have expected this to be solvent of all sects. History proves otherwise. Creeds and interpretations are the perennial sources of Christian sects......................... In Hinduism, Siva and Vishnu are for all practical purposes different Gods, the scriptures are different.*** There is no common ground for the

***The opinion of the Christian journal, "The Scripture (in Hinduism) are different. There is no common ground for the faiths" may be deemed more correct if it had added the phrase, "for all practical purposes" as it had done in the previous sentence "in Hinduism Siva and Vishnu are for all practical purposes different gods".

For, although the Sivagamas and Thevarams are completely ignored by Vaishnavites and Pancharathra and Divyaprabandams by the Saivites, both Nayanmars and Alwars are one in pointing to the Vedas and their Six Angas often and often as the perennial source of the truth of their religions. Both Sivagamas and Vaishnavagamas prescribe the same Vedicmantras in their respective worships. Had it not been for this foundation of their scriptural unity in Hinduism the various phases of the religion would have crumbled like a house of cards long ago. In the hymn addressed to Gnanasambanda, the author of Periyapurana begins with "Let the Vedic path flourish (*Veda neri thashaithonga*) and Saivam shine with splendour and glory (*Saivaththurai vilanga*)." *SEKKILAR—Periyapuranam.*

faiths. As in Christianity, so in Hinduism, sects petrify into communities.

The approach to Union naturally differs. Sri Sankaracharya is appealing to the spirit of unity, to a synthetic outlook of mind, which are congenital features of Hinduism. He is not attempting to unify worship or scriptures. He appeals to the spirit behind them. This is Indian genius.

In the Christian-unity movement, the first concern seems to be to produce a united organisation and a common creed. The unionists in Hinduism and in Western Christianity are each following their own national genius and are threading back along the line of historic evolution. In this connection we should not neglect what is taking place in secular politics. We want to transcend Communalism within the State and Nationalism in the World. The line of progress, may be studied in the exertions of the United Nations.

We think we ought to learn from each other and benefit from each other's success and be warned by each other's failures. The Hindu has to pay more attention to organisation. The Saivite and Vaishnavite must come together and worship. The spirit is too much shadowy without the body. The Christian has to learn to appeal to the unity in spirit in Christ. Both must learn from the State, which is endeavouring to struggle out of Communalism and Nationalism. We wish all the Union movements, God's blessing and pray that all of them should fructify. In Union lies our strength, whether in religion or in society.

[The Pilgrim, June 1952]

# பாவை நோன்பு

## ஸ்ரீ ஜகத் குரு ஆசார்யாள்

## ஸ்ரீமுகம்

'நான் இன்ன அறம் செய்வேன்
நான் இன்ன செயல் செய்யா தொழிவேன்'

—என மனத்தில் ஓர் உறுதி செய்துகொண்டு அதை வாக்கினாலும், உடலினாலும் எள்ளளவும் தவறாது நிறைவேற்றுவதே 'நோன்பு'. நோன்பையே பெரியோர் விரதமென்பர். மார்கழி மாதம் முழுவதும், சிறப்பாகத் திருவாதிரை நாளிலும், அதிகாலையிலே நீராடி தெய்வீகப் பாவையைக் குறித்து நோற்கப்பட்ட பாவை நோன்பே சேர சோழ பாண்டிய நாடுகளாம் மூவேந்த நாடுகளுள்ளிட்ட நம் தமிழ்நாடு முழுவதும் நோற்கப்பட்ட நோன்புகளில் முதன்மையாக விளங்கியது. இது இக்காலத்திலும் சேர நாடாம் மலையாள நாட்டில் ஒவ்வொரு கிராமத்திலும் சகல கன்னிகைகளாலும் அநுஷ்டிக்கப்பட்டு வருகிறது. அவர்கள் விடியற் காலத்திற்கு முன்பே புறப்பட்டு வீடுதோறும் நின்று அங்குள்ளவர்களையும் அழைத்துக்கொண்டு பாடிக் கொண்டே குளக்கரைக்குப் போய் நீரில் நின்றபடியே ஒருவிதமான தாளத்தைத் தண்ணீரில் செய்துகொண்டு பாடி ஸ்நானம் செய்து உதயத்திற்கு முன்பே வீடு திரும்புவார்கள். இவ்விரதமே ஆண்டாள், மாணிக்கவாசகர்—இவர்கள் காலத்தில் நமது சோழ பாண்டிய நாடுகளிலும் அநுஷ்டிக்கப்பட்டு வந்தது.

மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர்! போதுமினோ நேரிழையீர்

—திருப்பாவை - 1

வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம்பாவைக்கு
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத் துயின்ற பரமனடி பாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யாதென செய்யோம் தீக்குறளை சென்றோதோம்

ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்

—திருப்பாவை - 2.

என்றபடி மார்கழி மாதம் முழுவதும் அதிகாலையில் நீராடி நெய், பால் இவை ஒன்றுமில்லாமல் சிறிது மிளகு கலந்த அன்னத்தைப் பொங்கி நிவேதனம் செய்து மிதமாக உண்டு அதிகமாக அலங்காரங்கள் செய்து கொள்ளாமல் நோன்பு நோற்பார்கள். திருவாதிரை தினத்தன்று அவ்வித அன்னத்தையும் உண்ணாமல் நெய் பால் இல்லாமலே வெறும் களியைக் கிண்டி பலகாரம் செய்வார்கள். இவ்விரதம் பூர்த்தி யடைந்ததும்,

வான் பெயல் நனைத்த புறத்த நோன்பியர்
தையூண் இருக்கையின்

என நற்றிணை எனும் சங்க நூலில் கூறியபடி மகர மாதம் (சூர்யாயனப்படி) தைமாதம் முதல் இரண்டு தினங்களும் விசேஷ ஆடை ஆபரணங்களை அணிந்து, நெய், பால் இவை அதிகமாகச் சேர்த்த ஊணை உண்டு களித்தார்கள். இக் கருத்தையே ஆண்டாள்,

கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா! உன் தன்னைப்
பாடிப் பறை கொண்டு யாம் பெறு சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாக
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடையுடுப்போம் அதன் பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கைவழி வார
கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்

—திருப்பாவை-27.

எனும் பாட்டில் வெளியிட்டிருக்கிறாள் போலும்.

மாணிக்கவாசகரும் இதே மார்கழி நீராடலைத் தமது திருவெம்பாவையில்,

போற்றி யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றி யாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்

—திருவெம்பாவை - 20.

என்று சிறப்பித்துக் கூறியிருக்கிறார். அதிகாலையில் நீராடுவதற்காக முதலில் கண் விழித்த பெண்கள் மற்றைய பெண்களைத் துயிலினின்று எழுப்புவதே ஆண்டாள் திருப்பாவையிலும் மாணிக்கவாசகர் திருவெம்பாவையிலும் காணப்படும் ஒற்றுமையான அம்சம். 'எம்பாவை' வழிபாடு இரண்டிலும் உள்ளது. திருப்பாவை திருவெம்பாவை இவ்விரு நூல்களிலும் உள்ள பாட்டுக்கள் 'ஏல்! ஓர்! எம்பாவாய்!' என்றே முடிகின்றன.

மார்கழி நீராடல் ஆண்டாள் காலத்திலேயோ மாணிக்கவாசகர் காலத்திலேயோ ஏற்பட்டதல்ல. ஆண்டாளே "மார்கழி நீராடுவான் மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்" என்று சொல்லியிருப்பதால் பூர்விக பரம்பரையாக இந்நோன்பு அநுஷ்டிக்கப்பட்டு வந்திருப்பதை விளக்குகிறாள். பண்டைய உரையாசிரியரான பெரிய வாச்சான் பிள்ளை யென்பவர் இக்கருத்தையே வலியுறுத்தியிருக்கிறார். மாணிக்கவாசகர் பற்றிய திருவாதவூரர் புராணத்திலும்,

> அன்றவர் தென்னையாளு மணியண்ணு மலையாய் போற்றி
> என்றுதம் பரிவாலேற்றி இறைஞ்சியங் குறையுநாளில்

என்றபடி மாணிக்கவாசகர் திருவண்ணாமலையில் தங்கி ஸ்ரீ உண்ணாமுலை சமேத அண்ணாமலையாரைத் தரிசித்துக் கொண்டிருந்தபோது கன்னிகைகள் மார்கழி மாதத்தில் திருவாதிரை நாளுக்குப் பத்து நாள் முந்தியே தொடங்கி வீடுதோறும் சென்று அங்குள்ளவர்களை யழைத்துக் கொண்டு விடியற் காலத்தில் பாடிக்கொண்டு குளத்தில் நீராடி வந்தார்கள். அவர்களை மாணிக்கவாசகர் கண்டு அவர்கள் பாடுவது போலத் திருவெம்பாவை என்னும் திருவாசகம் பாடி அவர்களையும் பாடுவித்தார்.

> மாதர்கொண் மாதரெல்லாம் மார்கழித் திஙகள் தன்னில்
> ஆதிரை நாள்முன் ஈரைந் தாகிய தினஙகள் தம்மில்
> மேதகு மனைகள்தோறும் அழைத்திருள் விடிவதான
> போதிவர் தம்மிற்கூடிப் புனற்றடமாடல் செய்வார்.
> அன்னவர் இயல்புகண்டார் அங்கவர் புகன்றதாக
> மன்னிய திருவெம்பாவை வாசகம் பேசி —

—இச் செய்யுட் குறிப்பிலிருந்து மாணிக்கவாசகர் காலத்திற்கு முன்பே மார்கழி நீராடலும் பாவை நோன்பும் நம் நாட்டில் பழக்கத்திலிருந்து வந்ததாகத் தெரிகிறது.

பிங்கலந்தை யெனும் நூலிலும்,

"பனிநீர் தோயலும் பாவை யாடலும்"

என மார்கழி நீராட்டமும் பாவை நோன்பும் குறிக்கப் பட்டிருக்கின்றன. ஸ்ரீமத் பாகவதத்தில் இந்த நோன்பைப் பற்றி பின்வரும் செய்திகள் கூறப்படுகின்றன:- கோகுலத்துக் குமரிகள் ஏமந்த ருதுவின் (பனிக் காலத்தின்) முதல் மாதத்தில் அதாவது மார்கழி மாதத்தில் காத்யாயனி பூஜையெனும் விரதத்தைத் தொடங்கி நடத்தினார்கள். அவர்கள் அருணோதயத்தில் எழுந்து யமுனை நதியில் ஸ்நானம் செய்து ஈர மணலால் அம்பாவின் பாவையை அமைத்துப் பூசை நடத்தினர்.

'காத்யாயனி! மஹாமாயே! மஹாயோகினி! ஈச்வரீ!' என்று ஒவ்வொருவரும் பிரார்த்தித்தார்கள். இவ்வாறு ஒரு மாத காலம் விடாமல் அம்பாள் பூஜை செய்து வந்தார்கள். ஸ்ரீ கிருஷ்ண பகவான் அவர்களைப் பரிசோதித்து அவர்களுக்குப் பிரசன்னராகி அவர்களை அனுக்ரஹித்தார். மார்கழி நீராடலுக்கும் பாவை நோன்பிற்கும் ஸ்ரீமத் பாகவதத்தில் உள்ள மூலம் இது.

நம் தமிழ்ப் பாடல்களுள் சங்க நூல்களே மிகப் பண்டையனவாகும். அந்நூல்களில் பரிபாடல் என்பது ஒன்று. அந்நூலில் மதுரையிலுள்ள வைகை நதியை ஆசிரியர் நல்லந்துவனார் என்ற சங்கப் புலவர் வருணிக்கும் போது மார்கழி மாதத்தில் வரக்கூடிய பூர்ணிமையோடு சேர்ந்த திருவாதிரையைச் சிறப்பித்திருக்கிறார். இது "மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாள்" என்ற ஆண்டாள் வாக்கினோடு கருத்தமைந்திருக்கிறது. அதே பரி பாடல் பாடலில் அம்பாள் ஆடலைப் பற்றியும் சொல்லுகிறார்:-

கனைக்கு மதிர்குரல் கார் வானம் நீங்கப்
பனிப்படு பைதல் விதலைப் பருவத்து
ஞாயிறு காயா நளிமாரிப் பிற்குளத்து
மாயிருந் திங்கண் மறுநிறை யாதிரை
விரிநூ லந்தணர் விழவு தொடங்கப்
புரிநூ லந்தணர் பொலங்கல மேற்ப
வெம்பா தாக வியனில வரைப்பென
அம்பா வாடலி னாய்தொடிக் கன்னியர்
முனித்துறை முதல்வியர் முறைமை காட்டப்
பனிப்புலர் பாடிப் பருமணல் அருவியி
னூதை யூர்தர வுறைசிறை வேதியர்

நெறிநிமிர் நுடங்குகழல் பேணிய சிறப்பிற்
றையன் கேளிரீ ரணிபுலர்த் தர
வையை நினக்கு மடைவாய்த் தன்று
மையாட லாடன் மழபுலவர் மாறெழுந்து
பொய்யாட லாடும் புணர்ப்பி னவரவர்
தீயெரிப் பாலும் செறிதவ முன்பற்றியோ
தாயருகா நின்று தவத்தைந் நீராடுத
லீயுரைத்தி வையை நதி—[பரிபாடல்-11. 74-92]

இப்பாட்டின் கருத்து: முன் பனிக்காலம். மேகங்கள் இடிப்பதை நீக்கின - பனியால் எங்கும் குளிர் நடுங்கிற்று. சூரிய வெப்பம் தாக்காத மார்கழி மாதம்; பௌர்ணமியும் திருவாதிரையும் கூடிய நன்னாள்; கன்னிப் பெண்கள் வைகையாற்றின் கரையிலே அம்பா வாடலை செய்யத் தொடங்கினார்கள். அவர்கள் இப்பனிக் காலத்து அருணோதயத்திலே நீராடி வயது முதிர்ந்த பார்ப்பனிகள் காட்டிய வழியே அம்பா பூசை செய்வர்: அக்காலத்தில் அவர்களுடைய ஈரப் பாவாடைகள் காய்வதற்காக, அந்தணர்கள் செய்து விட்டுப் போன ஹோமத் தீக்களின் அருகிலே தங்கள் தாய்மார்களோடு நிற்பர். இத்தகைய தவம் பொருந்திய தைத் நீராடல் என்ற விரதத்தைச் செய்வதற்கு ஏற்ற இடமாக அமைந்தது வைகை நதி.

ஸ்ரீமத் பாகவதத்திலுள்ள காத்யாயனீ விரதமும் பிங்கலந்தையில் குறிப்பிட்ட பாவையாடலும் திருப்பாவையில் சொல்லப்பட்டுள்ள, "நம்பாவைக்குச் செய்யும் கிரிசைகளும்" மாணிக்கவாசகருடைய திருவெம்பாவை யென்ற சொற்றொடரால் குறிக்கப்படும் பாவையும். பண்டைக்காலம் தொட்டு நம் நாட்டு மக்கள் மார்கழியில் நீராடி நோற்கும் நோன்பு அம்பாளின் நோன்பேயாதல் வேண்டும். திருமாலை வழி படுபவரும் சிவபெருமானை வழிபடுபவரும், ஆக இரு திறத்தினரும் அம்பாவாடலாம், பாவையாடல் மூலமாகவே தம் தம் வழிபாட்டுக் கடவுளின் அருளைப் பெறுகின்றனர்.

"அரியலால் தேவியில்லை" என்ற சைவ முறையை யொட்டிய அப்பர் வாக்கின்படி தேவியே விஷ்ணு ஸ்வரூபமாக இருப்பதாலும் பரமசிவன் சரீரத்தின் பாதி பாகம் தேவியா யிருப்பதாலும் அரி அரன் இவர்களில்

எந்த மூர்த்தியை உபாசிப்பவர்களும் அம்பாள் வழிபாட்டின் மூலமே அந்தந்த மூர்த்தியின் அருளைப் பெற்றார்கள் போலும்.

திருவாதிரைப் பூர்ணமியைக்கொண்ட மார்கழியில் செய்யப்படும் நீராடல் "தைந் நீராடல்" என பரிபாடலிலும் அதையொட்டி நற்றிணை, கலித்தொகை போன்ற மற்றச் சங்க நூல்களிலும் "தைந் நீராடல்" எனும் சொல்லும் குறிக்கப்பட்டிருக்கிறது.

வையெயிற்றவர் நாப்பண்வகை யணிப்பொலிந்து
நீ தையில் நீராடிய தவந்தலைப் படுவாயோ

—கலித்தொகை - 59

இழையணி ஆயமொடுதகு நாண் தடை இத்
தைத்திங்கள் தண்கயம் போலப் பலர்படிந்து படியும்

—நற்றிணை - 80.

இதற்குக் காரணம் தனுர் மாதம் அமாவாசைக்கு அடுத்த தினம் சாந்த்ரமானப் பிரகாரம் தைஷ்யமாதம் வருவதால் இதை அநுசரித்துத் தைந் நீராடல் என்று சொல்லப்பட்டிருக்கவேண்டும். இவ் வருஷம் அமாவாசை மார்கழி மாதம் இரண்டாம் தேதி வருகிறது. அதற்கடுத்த தினத்தில் இருந்து தைஷ்யமாதம் சாந்த்ரமானப்படி பிறந்து விடுகிறது என்பதும் கவனிக்கத் தக்கது.

தேவர்களுக்கு உத்தராயணம் பகல், தக்ஷிணாயனம் இரவு. தேவர்களுக்கு தட்சிணாயனத்தின் கடைசி மாதமான மார்கழி மாதம் உஷக்காலமாகும். ஆகையால் அந்த மாதத்தில் உஷக்கால பூசை செய்யப்பட்டு வருகிறது.

வான்பெயல் நனைத்த புறத்த நோன்பியர்த்
தையூ ணிருக்கையிற் றோன்று நாடன்
வந்தனன் வாழிதோழி யுலகங்
கயங்கணற்ற பைதறு காலைப்
பீளொடு திரங்கிய நெல்லிற்கு
நள்ளென் யாமத்து மழை பொழிந்தாங்கே.

—நற்றிணை -22.

இந்த நந்தன தனுர் மாதம் நந்தகோபன் குமாரனையும் ஆனந்தக் கூத்தனையும் குழந்தைகள் முதல் எல்லோரும் தேனினுமினிய இந்தத் தமிழ்ப் பாடல்களுடன் தினந்

தோறும் அதிகாலையில் நீராடி ஆடிப்பாடி ஊர்வலம் வந்து வழிபட்டால் உலகமும் தாங்களும் நல்வாழ்வு வாழ வழி கோல்பவர் ஆகும்.

ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்துவளர
தரிக்கிலா னாகித் தான் தீங்கு நினைத்த
கருத்தைப் பிழைப்பித்து உன்னை
அருத்தித்துவந்தோம் பறை தருதி யாகில்
திருத்தக்க செல்வமும் சேதகமும் யாம்பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்

—திருப்பாவை - 25.

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்.
என்னத் திகழ்ந்தெம்மையாளுடை யாளிட்டிடையின்
மின்னிப்பொலிந் தெம்பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ்சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச்சிலைகுலவி நந்தம்மை யாளுடையாள்
தன்னிற் பிரிவிலாவெங் கோமானன்பர்க்கு
முன்னிய வணமக்குமுன் சுரக்கு மின்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்.

—திருவெம்பாவை - 16.

இரண்டாம் ஆண்டு
நிகழ்ந்த மகாநாட்டுச் சிறப்புரைகள்
பிற்பகுதி - வெளியீடாக
வருகின்றது.

5613.
XXVIII. B. IV (68).
118